அதேசமித்தான்

7 54

ஈL
ꟿ211,N30S
N54.
144244

...தேச மித்திரன்

...னப்பாது! பவுடர் பால்மாதிரி வாசனை அடிக்கிறதே?"

...ரில் நல்ல பால்தாங்க. இந்த குழாய்த்தண்ணீரில்தான் ஏகப்பட்ட பவுடரைக் கலந்துடறான்கள்!"

...ADESAMITRAN WEEKLY 7-3-54 4 AS.

சுதேசமித்திரன்

சந்தா விகிதங்கள்

★

தினப்பதிப்பு

	(இந்தியா, இலங்கை, தபால் மூலம்)		சென்னை		வெளிநாடு	
	ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.
1 வருடம் ...	26	0	24	0	32	0
6 மாதம் ...	13	8	12	8	16	0
3 மாதம் ...	7	0	6	8	8	0
1 மாதம் ...	2	8	2	4	—	

தனிப்பிரதி

ஞாயிறு மலர் ... விலை 2 அணா

இதர நாட்களில் ... விலை 1 அணா

வாரப்பதிப்பு

	ரூ.	அ.	ரூ.	அ.
1 வருடம் ...	13	0	16	0
6 மாதம் ...	7	0	8	0
3 மாதம் ...	3	12	—	

தனிப் பிரதி அணா 4.

சர்க்குலேஷன் மானேஜர்,

சுதேசமித்திரன்.



கழுத்துக்கு கயிறு!



அமெரிக்க-பாக். உடன்படிக்கைபற்றி ஐனுப் மஹமதலியின் அறிக்கை வெளியானதுடன், பாகிஸ்த மேற்கத்திய கோஷ்டியில் இணைக்கும் வேலை பூர்த்தியாகிவிட்டதென்று ஒரு செய்தி கூறுகிறது.

சுதேசமித்திரன்
வாழிய செந்தமிழ் வாரப்பதிப்பு வாழிய செந்தமிழ்

Vol XXV] விஜய௵ மாசிமீ 24௳ ★ 1954௵ மார்ச்மீ 7௳ [No 5

அபாயம்!

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ உதவி கிடைப்பதுபற்றி இந்தியா கலங்கவேண்டியதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி உறுதி கூறுகிறார். பாகிஸ்தான் அமெரிக்க ஆயுதங்களை துஷ்பிரயோகம் செய்யுமாயின், அதைத் தடுக்க உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ள அவர் தயாராம். அவர் உறுதிமொழியின் அந்தரங்கத்தைப்பற்றி நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அத்தகைய நடவடிக்கையின் விளைவுகளைப் பற்றிதான் பெரிதும் கவலைப்பட வேண்டியிருக்கிறது. ராணுவ உதவி அளிப்பதாக அமெரிக்கா சொன்ன உடனேயே இந்தியா பாக். உறவில் எத்தகைய விபரீத மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பதை பிரத்யட்சமாகப் பார்க்கிறோம். ஆகவே அமெரிக்காவின் இந்நடவடிக்கையால் ஆசியாவில் கொந்தளிப்பும், யுத்த அபாயமும் ஜாஸ்தியாகும் என்று அமெரிக்க ஜனாதிபதிக்கு பிரதமமந்திரி ஸ்ரீ நேரு எச்சரிக்கை விடுத்திருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை மேலும் அமெரிக்க ஆயுதங்களைப் பெறும் பாகிஸ்தானின் தற்போதைய பிரதமருக்கு இந்தியா விஷயத்தில் துராக்கிரமிப்பு எண்ணம் கிடையாதென்றே வைத்துக்கொண்டாலும் அவரது செல்வாக்கும் நிலையானதல்ல. அவர் பதவிக்கு வந்த புதிதில் இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்க ஒப்புக்கொண்டதும், ஆனால் தீவிரவாதிகள் அவருக்கு வழிவிடவில்லை என்பதும் பகிரங்க ரகசியம். அமெரிக்க ராணுவ உதவி கிடைத்தபின் அத்தகைய கோஷ்டிகளின் வெறி இன்னும் வரைமிஞ்சிப்போவது இயற்கை. அந்நிலையில் அமெரிக்க ஆயுதங்கள் துஷ்பிரயோகமாகுமானால், அதைத் தடுப்பதில் தற்போதைய அமெரிக்க சர்க்காருக்கு உண்மையில் அக்கறை இருக்கலாம். ஆனால் துராக்கிரமிப்பு ஒருமுறை ஆரம்பமான பின் அதைத் தடுத்து நிறுத்துவது எவ்வளவு கஷ்டம் என்பது ஏற்கனவே நாம் அநுபவபூர்வமாகக் கண்டதுதான். எனவே மிஸ்டர் ஐஸன்ஹோவரின் உறுதிமொழி கவைக்குதவாதது. பாகிஸ்தானின் அண்டை நாடுகள் பொருளாதாரத் திட்டங்களைக் கைவிட்டு ஆயுதப்போட்டியில் இறங்க நேரிடும். இதனால் இப்பிராந்தியத்தின் பொருளாதாரம் சீர்கெடும். அத்தகைய நடவடிக்கையை இப்பிராந்தியத்தில் ஊக்கிவிடுவது தங்கள் அடிப்படையான நோக்கத்துக்கே விரோதம் என்பதை அமெரிக்கர் உணரவேண்டும்.

வேண்டுமானால், பாகிஸ்தானைப்போல் இந்தியாவும் அமெரிக்க ராணுவ உதவி கோரலாம்; அதைப்பற்றி 'அனுதாபத்துடன் ஆலோசிக்கத் தயார் என்று மிஸ்டர் ஐஸன்ஹோவர் கூறுகிறார். இவ்வளவு நாளும் இந்தியா வெளியிட்டு வந்திருக்கும் ஆட்சேபனையை அமெரிக்க சர்க்கார் சிறிதும் புரிந்துகொள்ளவில்லை என்றே தோற்றுகிறது. ஒரு நாடு இவ்வாறு அந்நியரிடமிருந்து ராணுவ உதவி பெறுவது அவ்வந்நியருக்குத் தன்னை அடிமைப்படுத்திக்கொள்வதேயாகும். எங்கும் அந்நியமயமாயுள்ள தளங்களும், படையினரும் உள்ள ஒரு தேசத்தில் சுதேச சர்க்கார் உண்மையில் தங்களுக்கு இஷ்டமான வேலைமுறைகளைக் கையாள்வது சாத்தியமா என்பதை யாரும் எளிதில் ஊகிக்கக்கூடும். இப்பிராந்திய நாடுகள் பலவற்றில் நெடுநாளைய போராட்டத்தின் பலனாக அந்நிய ஆதிக்கம் ஒழிந்து இன்னும் சில வருஷங்கள்கூட ஆகவில்லை. அதற்குள் மறுபடியும் அதற்கு வழிவிடக்கூடிய ஒரு நடவடிக்கையை இந்தியா ஒருபோதும் ஆதரிக்க முடியாது. அந்த நடவடிக்கையில் இந்தியாவே பங்குகொள்ளுமாறு அழைப்பது பேதமை.

மத்தியக் கிழக்குப் பகுதியில் தற்காப்பு பலத்தை அதிகரிக்கும்பொருட்டு பாகிஸ்தானுக்கு ராணுவ் உதவி அளிக்கவிருப்பதாக மிஸ்டர் ஐஸன்ஹோவர் கூறுகிறார். ஆனால் அவர் வகுத்துள்ள முறையில் இப்பிராந்திய நாடுகள் தங்கள் பலத்தைப் பெருக்கிக்கொள்ள முற்படுவது தாங்களாக யுத்தத்தை இப்பிரதேசத்துக்கும் வருந்தியழைக்கும் ஒரு நடவடிக்கையே. பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதங்கள் கிடைப்பதன் பலன் வல்லரசுகளிடை நடக்கும் கெடுபிடி யுத்தம் உடனே கிழக்கு ஆசியாவுக்கும் பரவுவதுதான். இப்போது பாகிஸ்தான் கையாளத் துணிந்துள்ள முறை முதலாவதாகத் தனக்கே நல்லதா என்று யோசிக்க வேண்டும். நாடெங்கும் அந்நிய ஆயுதங்களைக் குவித்துக் கொள்வதால் தனது பலம் அதிகரித்து விடுமென்று அது இப்போதைக்கு எண்ணலாம். ஆனால் பாகிஸ்தானுக்குள்ளோ, அதன் எல்லைப்புறங்களிலோ நிலைமை இன்னும் ஸ்திரப்படவில்லை. மூலைக்கு மூலை ஆயுதங்கள் எளிதாக அகப்படக்கூடிய நிலையில் கலகம் அல்லது குழப்பம் ஏற்படுமாயின், அதை பாகிஸ்தான் சர்க்கார் சமாளிப்பது சிரமமாகிவிடும். இவ்வகையில் தற்போது இந்தோனேஷிய சர்க்காருக்கு ஏற்பட்டுவரும் சங்கடங்களை பாகிஸ்தான் அதிகாரிகள் சிறிது உன்னிப்பார்க்க வேண்டுகிறோம்.

காற்றுவாக்கிலே..

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மானமிழந்து மதிகெட்டுப் போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

என்றார் ஔவைப்பாட்டி. ஆனால் இது தனி மனிதர்களுக்குத் தானேயல்லாமல் ராஜாங்கத்துக்குப் பொருந்தாது என்பது ஸ்பஷ்டம்; எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் செலவழிக்கிறதோ அத்தனைக்கத்தனைதான் அரசாங்கத்துக்கு மதிப்பு. ஏனெனில் தனி மனிதனின் நியதிக்கு நேர் எதிர் அதனுடையது—பிறர் பொருளை ஒருத்தன் அபகரித்தால், அதைத் திருட்டென்றும் புரட்டென்றும் கூறும் நாம், அதையே சர்க்கார் செய்தாலோ, 'தேசீயமயமாக்குதல்' என்று உயர்வாகப் பேசுவதும், இல்லாவிட்டால் பறிமுதல், அபராதம், வரி என்றெல்லாம் பெத்த பெயர் கொடுப்பதுமே போதும் இதை நிரூபிக்க.

வேறு யாருக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் மத்திய நிதி மந்திரி தேஷ்முக்குக்கு இந்த ரஹஸ்யம் தெரிந்திருக்கிறது என்பது நிச்சயம். இல்லாவிட்டால் இந்த வருஷம் வரவுக்கு மேல் ரூ. 250 கோடி வரையில் செலவுசெய்ய முற்பட்டிருப்பாரா அவர்?....வாஸ்தவம், சர்வதேச செலாவணி நிதியின் தூது கோஷ்டி அவருக்கு தைரிய மூட்டி, தூண்டிவிட்டது என்பது உண்மையே. ஐந்து வருஷத் திட்டத்தை நிறைவேற்ற இதை விட்டால் அவருக்கு வேறு வழியில்லை என்பதும் வாஸ்தவம்தான். இருந்தபோதிலும், வரவுக்கு மிஞ்சி செலவு செய்தால்தான், பணப் பெருக்கத்தால்தான் தேசத்தின் மதிப்பும் பெருகும் என்பதை அவர் உணர்ந்திருக்கிறார் என்பதையும் மறுக்க முடியாது.

அடேயப்பா, 250 கோடி ரூபாயா? ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய் வீதம் நோட்டுகள் பெருகும் என்றல்லவா ஆகிறது? நம் தேசத்தின் பொருளாதாரம் தாங்குமா இதை? இதனால் சர்க்கார் மதிப்பு உயர்ந்தாலும் பணத்தின் மதிப்பு படுத்துவிடுமே! ஏற்கனவேயே உயரே நிற்கிற விலைவாசிகள் உச்சாணிக் கொம்புக்கல்லவா ஏறிவிடும்? அப்படியாவது என்ன திட்டம் வேண்டிக்கிடக்கிறது; வலது கையால் அதைக் கொடுத்து அதன் பலனை இடது கையால் இப்படிப் பறிக்க? என்று ஆயாசப்பட ஆரம்பித்துவிடாதீர்கள். பயப்படவே தேவையில்லை, பார்த்துக் கொள்வார் தேஷ்முக். இதுவரையில்போல இனியும் விலைகள் கட்டுக்கடங்காதுபோகாமல் காத்துவிடுவார் நிச்சயமாக!....திட்டம் பற்றியும் திட்டவேண்டாம். திட்டம் போடாது தக்கதைச் செய்ய முடியாது; ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்டு என்று தெரியாமலா சொன்னார்கள் பெரியவர்கள்?

அது சரி, 250 கோடி ரூபாயை சிருஷ்டிக்கிற புண்யாத்மா இன்னும் பத்துப் பனிரெண்டு கோடியையும் உண்டுபண்ணினால் என்ன கேடு? எதற்காக புது வரிகளைப் போட்டுத் தொலைக்கவேண்டும் என்றுதானே கேட்கிறீர்கள்?.... காரணம் பலவுண்டு; மாதிரிக்கு இரண்டொன்று மட்டும் சொல்கிறேன். — முதலாவதாக, முழுப் பணத்தையும் உற்பத்தி செய்துவிடுகிறதென்றால், பட்ஜெட் படலமே தேவையில்லை, வரி வசூல் அதிகாரிகளுக்கும் வேலை இருக்காது. இரண்டாவதாக, ஒருசில வரிகளையாவது போடாமல் தாளிக் அச்சுக்கூடத்தையே நம்பியிருந்தால், ஜனங்கள் பயந்துபோய், நோட்டுகளில் அடியோடு நம்பிக்கை இழந்துவிடுவார்கள். மூன்றாவதாக, பெயருக்காவது புதுப் புது வரி போடாவிட்டால் வரிப்பழக்கமே, வரி பய்மே விட்டுப்போய்விடும் பெரும்பாலோருக்கு....

அதுவும் சரிதான், இருந்தாலும் கொட்டைப் பாக்கையும், சோப்பு—செருப்பையும் துணி மணிகளையும் தேடிப்பிடித்துத் தீட்டுவானேன்? பாமர ஜனங்களையல்லவா பாதிக்கும் இந்த வரிகள்?' என்று ஆக்ஷேபித்தீர்களேயானால் அதற்கும் பதில் உண்டு, வண்டி வண்டியாக.... என்னதான் சொன்னாலும் இன்றைய நிலையில் இவையெல்லாம் அனாவசியமான டாம்பீகப் பொருள்களே. கோடிக்கணக்கானவர்கள் வயிறார உண்ணமுடியாமல் திண்டாடுகிற நேரத்தில் செருப்பும், சோப்பும்உபயோகிப்பது 'கும்பி கூழுக்கு அழுகிற போது கொண்டை பூவுக்கு அழுத' கதையல்லாமல் வேறு என்ன? கொட்டைப்பாக்கு இல்லாவிட்டால்தான் என்ன தட்டுக்கெட்டுப்போய்விடும்? மேலும், மதுவிலக்கைக் கொண்டுவந்து மக்கள் மனதை பரிசுத்தப்படுத்தும் மஹானுபாவர்கள், அடுத்தபடியாக கொட்டைப்பாக்கிலும் கைவைத்து, அனாவசியச் செலவைத் தடுப்பதுதானே முறையும் கூட?

என்னைக் கேட்டால் துணிமணிகளுக்கு வரி உயர்வு போதாது, சென்னை சர்க்கார் ரூபாய்க்கு 1¼ அணா கூடுதலாக 'விற்பனை வரி' போடுவதுகூடப் போதாது, இன்னும் நிறையப் போடவேண்டுமென்பேன். அப்போதுதான் வித விதமான, விநோதமான கோட்டு சூட்டெல்லாம் ஒழிந்து, சாதாரண உடைக்கே ததிங்கணதோம் போடவேண்டிய நிலை வரும். நேரு விரும்புகிற உடுப்புச் சீர்திருத்தத்துக்கு இதைவிட சுருக்குவழி வேறுண்டா?

—சிரேயஸ்.



இந்தியாவின் நடனக் கலையரசியான ஸ்ரீமதி தாரா சௌத்ரியிடம் பரத நாட்டியம் கற்றதற்குக் குரு காணிக்கையாக ரஷ்ய பாலே நடனக் கலை ராணி மாயா பிளெஸெட்ஸ்காயா ஸ்ரீமதி சௌத்ரிக்கு தனது பாலே பூட்ஸ்களை சமர்ப்பித்தார்.

—சென்னைச் செய்தி.

பலே! இந்திய சம்பிரதாயத்துக்கு ஏற்றாற்போல் 'பாத காணிக்கை'யே அல்லவா சமர்ப்பித்திருக்கிறார்போலிருக்கிறது!

• • •

பெரிய தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு இடைவேளையில் ஒரு கப் 'டீ' இனாமாக வழங்கிப் பார்த்ததில் உற்பத்தி அதிகமாகி வருவது கண்டுபிடிக்கப்பட்டது.

—நியூயார்க் செய்தி.

எனவே, இதே முறையை மற்ற தொழிற்சாலைகளும் 'காப்பி'யடிக்க முற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

• • •

எகிப்திய கடற்படையைப் புன்சிரிப்புடன் வரவேற்று வெள்ளிக் கோப்பை பரிசளித்த இந்திய கடற் படை அதிகாரிகளைப் பலத்த கரகோஷத்தினிடையே முத்தமிட்டு மகிழ்வித்தார் எகிப்திய ஸ்தானீகர் ஸ்ரீ இஸ்மேல் கமல்!

—பம்பாய் செய்தி.

'இனிமேல் இவர்களுக்கு இந்தியாவில் கிடைக்கும் வரவேற்பெல்லாம் 'முத்தண்ணா'க்கள் உறவு முறையிலேயே இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை' என்கிறார் இங்கொரு முத்தண்ணா!

• • •

பால்ச் சேனைக் கடற்படையில் மீன் பிடிக்கச் சென்ற ஒருவரை அஞ்சாலை என்னும் ஒருவகை மீன் கடிக்கவே சில தினங்களுக்குப் பிறகு அவர் மரணமானார்.

—வாகரை செய்தி.

பிரஸ்தாப மீன் 'சரியான 'கேண்டை' சிக்கிவிட்டது' என்று நினைத்துதான் கடித்திருக்குமோ அவரை!!

ரயில் நேரங்கள்

*

சென்ட்ரல் ஸ்டேஷன்

புறப்படும் நேரம்

கல்கத்தா மெயில்	இரவு 8—5
கிராண்டிரங் எக்ஸ்பிரஸ்	காலை 8—45
பூரி பாஸஞ்சர்	இரவு 7—10
பெஜவாடா பாஸஞ்சர்	காலை 6—35
பம்பாய் மெயில்	இரவு 9—0
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 7—35
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	காலை 9—10
ரேணிகுண்டா பாஸஞ்.	மாலை 5—30
" "	——
பெங்களூர் மெயில்	இரவு 8—45
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 12—15
பெங்களூர் பாஸஞ்சர்	காலை 6—10
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு 9—5
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 7—55
" "	மாலை 2—5
" "	மாலை 6—47
" "	இரவு 9—35
மங்களூர் எக்ஸ்பிரஸ்	இரவு 7—30
கொச்சின் எக்ஸ்பிரஸ்	மாலை 6—10
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு 8—10
ஜோலார்பேட்டை பாஸஞ்.	காலை 11—25
விசாகை பாஸஞ்சர்	இரவு 10—45
ஜனதா எக்ஸ்பிரஸ் 3—வது வகுப்பு மட்டும் சென்னை—பம்பாய் (பிரதி வியாழன் மட்டும்)	பகல் 2—0
டெல்லி—சென்னை ஜனதா எக்ஸ்பிரஸ் (3—வது வகுப்பு மட்டும்) பிரதி வியாழன்	மாலை 12—30

வரும் நேரம்

கல்கத்தா மெயில்	காலை 7—20
கிராண்டிரங் எக்ஸ்பிரஸ்	மாலை 5—50
பூரி பாஸஞ்சர்	காலை 9—0
பெஜவாடா பாஸஞ்சர்	இரவு 8—30
பம்பாய் மெயில்	காலை 5—50
பம்பாய் எக்ஸ்பிரஸ்	இரவு 7—20
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	மாலை 3—25
ரேணிகுண்டா பாஸஞ்சர்	காலை 9—48
" "	இரவு 9—0
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 8—50
" "	மாலை 4—25
" "	——
" "	மாலை 7—50
பெங்களூர் மெயில்	காலை 6—25
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 2—55
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு 8—10
பெங்களூர் பாஸஞ்சர்	காலை 6—50
மங்களூர் எக்ஸ்பிரஸ்	காலை 7—30
கொச்சின் எக்ஸ்பிரஸ்	காலை 8—35
நீலகிரி எக்ஸ்பிரஸ்	காலை 7—10
ஜோலார்பேட்டை பாஸஞ்.	பகல் 1—20
விசாகை பாஸஞ்சர்	காலை 5—0
ஜனதா எக்ஸ்பிரஸ் (3—வது வகுப்பு—மட்டும்) சென்னை—பம்பாய் (பிரதி திங்கள் மட்டும்)	பகல் 3—20
டெல்லி—சென்னை ஜனதா எக்ஸ்பிரஸ் (3—வது வகுப்பு மட்டும்) பிரதி செவ்வாய்	மாலை 5—20

கண்ணாடித் துண்டுகளை முறுக்கு தின்பதுபோல் தின்று விழுங்கிக் காட்டிய ஒருவரைத் தாம் பார்த்ததாகப் பார்லிமெண்டு அங்கத்தினர் ஒருவர் அறிக்கை வெயிட்டுள்ளார்.

—புளியங்குடி செய்தி.

'இந்த அறிக்கையைத் தொடர்ந்து பார்லிமெண்டில் பிரஸ்தாப மெம்பர் தானியப் பற்றாக்குறையைத் தவிர்க்கக் கண்ணாடித் துண்டுகளை ஏன் சப்ளை செய்யக் கூடாது என்று ஒரு மசோதா கொண்டு வரக்கூடும்' என்று கண்ணாடி வியாபாரிகள் விலையைத் தாக்கிவிட்டதாகவும் செய்தி!

—தாளம்.

எழும்பூர்

புறப்படும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 7—40
இந்தோ—சிலோன் எக்ஸ்.	இரவு 8—0
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	இரவு 9—40
விருதுநகர் பாஸஞ்சர்	இரவு 10—15
விழுப்புரம் பாஸஞ்சர்	மாலை 3—50
கார்டு லைன்	
திருவனந்தபுரம் எக்ஸ்.	இரவு 6—20
தனுஷ்கோடி பாஸஞ்சர்	காலை 11—20
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	இரவு 7—15
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	இரவு 9—55
பீச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	மாலை 5—32
" "	மாலை 6—1

வரும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	இரவு 7—5
இந்தோ—சிலோன் எக்ஸ்.	காலை 7—25
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	காலை 5—20
விருதுநகர் பாஸஞ்சர்	காலை 5—0
விழுப்புரம் பாஸஞ்சர்	காலை 11—15
கார்டு லைன்	
தனுஷ்கோடி பாஸஞ்சர்	மாலை 3—5
திருவனந்தபுரம் எக்ஸ்.	காலை 6—0
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	காலை 7—0
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	காலை 5—40
பீச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	காலை 9—26
" "	காலை 9—52

பேராசிரியரின் அனுபவம்

விருடராஜன்

மஹேந்த்ரா காலேஜ் பேராசிரியர் பிரதிமாதமும் முதல் சனிக்கிழமை மாலை தனது வகுப்பு மாணவர்களைத் தன் வீட்டிற்குத் தேநீர் பருக அழைப்பு வழக்கம். மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த அனுபவம். பேராசிரியர் ஆல்பிரெட் டிராவர்ஸ் ஆக்ஸ்போர்டு கலாசாலையில் பயிற்சி பெற்று இந்தியாவில் கல்விப் பணி செய்து புகழ் பெற்றவர். அவருக்கு உகந்த மனைவி மார்கரெட். அவளும் இந்திய மாணவர்களிடம் அன்பும் ஆதரவும் கொண்டு பழகி உபசரிப்பாள். ஆங்கிலேயர் தங்கள் தாய் நாட்டிலே வாழும் விவரங்களையும், அவர்களது பழக்க வழக்கங்களையும் மாணவர்கள் டிராவர்ஸ் தம்பதிகளிடம் சம்பாஷித்து அறிந்து கொள்வார்கள். தம்பதிகள் சேகரித்து வைத்துள்ள படங்களையும் பார்த்து மகிழ்வார்கள். ஆசிரியரும், மாணவரும் இப்படிப் பழகுவதால்ஒருவருக்கொருவரிடையே மேன்மையான தோழமை பண்பு பெருகியது.

அன்று ஒரு நாள் 'அட் ஹோம்' தேநீர் கூட்டத்தில் இங்கிலாந்தில் யுவர்கள் ஆணும் பெண்ணும் கலகலப்பாகப் பேசிப் பழகும் பத்ததியைப்பற்றி சம்பாஷணை தொடங்கியது.

'எங்கள் சமூகத்தில் தந்தை மகளை முத்தமிடுவது அல்லது அண்ணன் தங்கையை முத்தமிடுவதுகூட முறையல்ல' என்றான் வீராசாமி.

'உச்சி முகர்வது அல்லது தலை உச்சியை முத்தமிடுவதுதான் அன்பின் அடையாளம். ஆணும் பெண்ணும் உதட்டில் முத்தமிடுவது காமச் செயல்' என்றான் கண்ணுசாமி.

'இப்போது சினிமாப் படங்களில் முத்தமிடும் காட்சிகள் அதிகமாகிவிட்டன. அமெரிக்க ஐரோப்பிய படங்களில் உள்ள காட்சிகளை இந்தியப் படங்களிலும் காபி அடிக்கத் தொடங்கிவிட்டார்கள்' என்றான் அப்புசாமி.

'முத்தமிடுதல் போட்டி நடந்தது பற்றி ஒரு பத்திரிகையில் வர்ணித்திருந்ததே!'

'எந்த வழக்கத்தையும் மிகைப்படுத்தி கேவலமாக்கக் கூடாது. ஓரோர் சமூகத்திலும் நல்ல வழக்கங்களும் உண்டு. கேவலமாகக் காணும் சில வழக்கங்களும் உண்டு. சாக்கடைக் குப்பைகள் எல்லா நகரங்களிலும் உண்டு. குப்பைகளை மாத்திரம் எடுத்துக் காட்டி நகரத்தின் அழகையும் வளத்தையும் மறந்து விடலாமா' என்றார் பேராசிரியர்.

'அயல் நாட்டார் முதலில் குப்பைகளையே தேடுகின்றனர்.'

'பிறர் சமூகத்திலுள்ள ஊழல்களைப் பரிகாசம் செய்கிறார்கள். தம் சமூகத்திலுள்ள 'குறைபாடுகளை அகற்றி சீர்திருத்தம் செய்ய முயல வேண்டுமல்லவா?'

'ஆம். வாஸ்தவம். இப்போது எல்லா நாடுகளிலும் இந்த முயற்சி பெருகிவருகிறது. இங்கிலாந்தில்கூட என் பாட்டனார் காலத்தில் அனுஷ்டிக்கப்பட்ட பல சம்பிரதாயங்கள் இப்போது மாறி விட்டன.'

'பலர் முன்னிலையில் ஒரு யுவனும் யுவதியும் முத்தமிட்டுக் கொள்வது மரியாதை பண்புக்கு விரோதமல்லவா?'

'அப்படி என்றால் ரஹஸ்யமாக இருட்டில் முத்தமிடுவது மாத்திரம் மரியாதையாகுமா?' என்று கேட்டான் அப்புசாமி.

டிராவர்ஸ் தம்பதிகள் சிரித்தனர். மார்கரெட் விளையாட்டுச் சிரிப்புடன் சொன்னாள்: 'ஏன்! உங்கள் பிரதாபத்தைச் சொல்லுங்களேன்;' பேராசிரியரும் நகைத்தார். 'ஏன்! நீயே சொல்லேன்.'

'சார்! தயவுசெய்து சொல்லுங்கள்' என்று இரண்டு மூன்று மாணவர்கள் ஆசையுடன் கேட்டார்கள்.

'அந்த சம்பவத்தின் பயனாகத்தான் எனக்கு மார்கரெட் மனைவியாகக்கிடைத்தாள்'என்று பேராசிரியர் சொல்லிவிட்டுப் பழைய ஞாபகத்தை அனுபவித்தார். பிறகு அவர் சொன்ன கதை:

கலாசாலைப் படிப்பு முடிந்த பிறகு டிராவர்ஸ் இரண்டு நண்பர்களுடன் இரண்டொரு இடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் செய்தார். ஒரு ஜங்ஷனில் நண்பர்கள் சிற்றுண்டு சாப்பிட்டுவிட்டுத் தங்கள் வண்டியில் ஏறுமுன் பிளாட்பாரத்தில் சற்று உலாவிக் கொண்டிருந்தனர். சிகரட் பற்ற வைத்துக்கொண்டிருந்த ஒருவன் 'டே டிராவர்ஸ்! அதோ பார் மூன்று கரடிகள்' என்று சிரித்தான். அங்கு மூன்று மங்கையர்கள் நின்றுகொண்டிருந்தனர். முதலில் இருந்தவள் புசு புசு என்று கரடி ரோமத்தாலான அங்கி அணிந்துகொண்டிருந்தாள். உடனே யுவர்கள் தங்களுக்குள் கசமச என்று ஏதோ மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு நண்பர்கள் இருவரும் முன்னால் சென்று அவர்கள் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். ஆனால் டிராவர்ஸ் போகவில்லை. அந்தப் பெண்களையே கவனித்துக்கொண்டிருந்தான். சில விநாடிகளுக்குப்பின் கரடி ரோம அங்கி தரித்திருந்த பெண் மாத்திரமே வண்டி தொடரை நோக்கி நடந்தாள். மற்ற இருவரும் அவளுக்கு விடை கொடுத்தனுப்பும்போது ஏதோ தமாஷ் சொல்லிச் சிரித்தார்கள். அவளும் தலையை அசைத்து ஆமோதித்து நகைத்தாள். அவர்கள் பேசிய விஷயம் டிராவர்சுக்கு விளங்கவில்லை. அவள் போகும்போது ஏதோ தற்செயலாகத் திரும்புவது போலத் திரும்பி டிராவர்ஸைக் கடைக்கண்ணால் கவனித்து விட்டுச் சென்றாள். புறப்படுவதற்குத் தயார் செய்துகொண்டிருந்த டிராவர்ஸ் உடல் புல்லரித்தது. அவன் கையில் இருந்த சிகரட் நழுவியது. ஏதோ 'எலெக்டிரிக் ஷாக்' அடித்ததுபோன்ற உணர்ச்சி. ஒருவாறு சமாளித்துக் கொண்டு அப்பெண் எந்த வண்டியில் ஏறுகிறாள் என்று கவனித்தான். இன்னொரு சிகரட் பற்ற வைத்தான். பிறகு அங்குமிங்கும் சற்று நடந்தான், வண்டி புறப்படப் போகிறது என்ற விசில் சப்தம் கேட்டவுடன் அவசரம் அவசரமாக ஓடிப்போய் அப்பெண் ஏறியிருந்த முதல் வகுப்புப் பெட்டியில் ஏறிக் கொண்டான். வண்டியும் புறப்பட்டுவிட்டது. சுற்று முற்றும் பார்த்தான் டிராவர்ஸ். அப்பெண் அங்கியைக் கழற்றி மடித்துப் பக்கத்தில் வைத்து விட்டு, படங்கள் நிரம்பிய பத்திரிகையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முழு முகமும் டிராவர்சுக்குத் தெரியவில்லை. தலையில் இருந்த சிறு குல்லாய்க்கு வெளியே முரட்டுத்தனமாய் வெளிக் காட்டி நின்ற சுருட்டை மயிரும், நெற்றியும் தெரிந்தன. வேண்டுமென்றே முகத்தை மூடிக்கொண்டிருக்கிறாளோ என்று நினைத்தான் டிராவர்ஸ். கம்பார்ட்மெண்டில் இருந்த மற்றவர்களைக் கவனித்தான். ஒரு வயோதிகர் கண்களை மூடிக் கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார். அவர் காலடியில் இரு சிறு பெட்டிகள் இருந்தன. அவர் எதிரில் உட்கார்ந்திருந்த ஆசாமி ஒரு நோட் புத்தகத்தில் ஏதோ கணக்கு எழுதிக்கொண்டிருந்தான். டிராவர்ஸ் சற்று ஆசுவாஸப்படுத்திக் கொண்டு தன் எதிரில் உட்கார்ந்திருக்கும் பெண்ணைப் பார்த்து அவளைப்பற்றி மதிப்பிட்டுக் கொண்டிருந்தான். அவளிடம் பேச்சைத் தொடங்குவது எப்படி என்று யோசனை. யோசித்துக் கொண்டே அவளது அழகை வியந்து கொண்டிருந்தான்.

கணக்கு எழுதிக்கொண்டிருந்த ஆசாமி அடுத்த ஸ்டேஷனில் இறங்கிவிட்டான். அச்சமயம் நகர்ந்த மங்கை கையிலிருந்த பத்திரிகை கீழே விழுந்தது. உடனே டிராவர்ஸ் அதை எடுத்துக்கொடுத்தான். அதிலிருந்து சம்பாஷணை ஆரம்பமாயிற்று. அந்தப் பத்திரிகையில் உள்ள படங்களைப்பற்றிப் பேசினார்கள். 'டிட் பிட்ஸ்' பத்திரிகை இவ்வித பிரயாணத்திற்கு உகந்தது என்றான் டிராவர்ஸ்.

'அப்படி என்ன அதில் சிறப்பு?'

'அதில் தமாஷ் படங்கள் அதிகம். விகடத் துணுக்குகள் உண்டு'

'உங்களுக்குத் தமாஷ் ரொம்பப் பிடிக்குமோ?'

இருவரும் சிரித்தார்கள். பேச்சும் சிரிப்பும் கூச்சத்தைப் போக்கும் சாதனங்கள். பிறகு கேட்க வேண்டுமா? இருவரும் ஏதேதோ பேசத் தொடங்கினர். ஆனால் அவர்கள் பேச்சு லோகாபிராம விஷயங்களேயன்றிச் சொந்த விஷயங்கள் அல்ல. நீங்கள் யார், எந்த ஊர், எங்கே போகிறீர், என்ன வேலை, என்ன சம்பளம் என்று எல்லாம் கேட்கவில்லை. இவைகள் எல்லாம் முறையற்ற பேச்சுக்கள். ஆங்கிலேயர் ஒருவரைப் பார்த்தவுடன் இப்படியெல்லாம்கேட்டுக்கொள்வதில்லை. அவர்கள் டர்பி பந்தயம், கிரிக்கட் மாட்ச், புட்பால் போட்டி என்று எல்லாம் பேசினார்கள். பேச்சு சுவாரஸ்யத்தில் இரண்டு ஸ்டேஷன்கள் தாண்டியதுகூடத் தெரியவில்லை. அடுத்த ஸ்டேஷனில் வயோதிகரும் இறங்கிவிட்டார். இப்போது வண்டியில் இவர்கள் இருவரும்தான். இருவரும் ஒருவரையொருவர் நன்கு ஆற அமரப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நிமிஷத்திற்கு நிமிஷம் அந்த மங்கையின் அழகு அதிகரிப்பதாகத் தோன்றியது. டிராவர்ஸுக்கு இருப்புக்கொள்ளவில்லை. எழுந்து ஜன்னல் வழியாகவெளியேஎட்டிப்பார்த்தான். பிறகு நிதானப்படுத்திக்கொண்டு திரும்பிவந்து உட்கார்ந்தான். அவன் முகத்தில் புன்சிரிப்பு கிளம்பியது. அவனையே கவனித்துக் கொண்டிருந்த யுவதியும் கண்களை, அகட்டி என்ன விசேஷம் என்று கேட்பதுபோல நோக்கினாள்.

'இந்தப் பிரதேசத்தில் நீங்கள் பிரயாணம் செய்ததே இல்லையா? இன்னும் இரண்டு மைல் தாண்டினால் குகை டன்னல் வழியேரயில் செல்லும்' என்று சிரித்தான்.

'குகை வழி என்றால் உங்களுக்குச் சிரிப்பாயிருக்கிறதா? ஐயோ! எனக்குப் பயமாயிருக்கிறதே'.

'பயம் என்ன! நான் துணை இருக்கிறேன்'.

ரயில் வண்டியும் குகை வழியில் நுழைந்து விட்டது.

'இந்த இருட்டில் உங்கள் துணை என்ன பிரயோசனம்? ஒரு டார்ச் ஆவது கொண்டு வந்திருப்பேனே'.

'பயப்படாதே! நான் உன் அருகில் இருக்கிறேன்'.

'ஆம்! மிஸ்டர் டிராவர்ஸ் மிகவும் அருகில் வந்துவிட்டீர்'

'ஆஹா! என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது'.

'சளசளவென்று உங்கள் பிரதாபத்தைப் பற்றியெல்லாம் சொன்னீர்களே! அப்போதுதான் உங்கள் பெயரையும் உங்கள் கலாசாலைப் பெருமையையும் கூறினீர்கள்'.

'ஓஹோ! அப்படியா'.

அப்போதுதான் இருட்டில் இரகசியமான அந்தச் செய்கை நடந்துவிட்டது. ப்ளூ!

'என்ன! என்ன உமக்கு அவ்வளவு துணிச்சலா' இது அப்பெண்ணின் கோபப் பேச்சு.

அடுத்த நிமிஷம் ரயில் தொடர் குகை வழியைவிட்டு வெளிவந்துவிட்டது. வெளிச்சம் வண்டியினுள் வீசியது. ரயில் வண்டி இரைச்சலிலும் இன்ஜின் விசில் சப்தத்திலும் அப்பெண் போட்ட கூச்சல் அமுங்கிவிட்டது. அவள் எழுந்து அப்பால் உட்கார்ந்து கொண்டாள். அந்த ஆடவனைத் திரும்பிப் பார்க்கவே இல்லை. முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு டிராவர்ஸ் ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரம் சென்ற பிறகு வண்டி ஒரு ஜங்ஷனில் நின்றது. பரபரப்பாக எழுந்து அப்பெண் வெளியே சென்றாள். டிராவர்ஸ் இறங்கியவுடன் அவன் நண்பர்கள் ஓடிவந்தார்கள்.

'என்னடா! ஜெயித்துவிட்டாய் போலிருக்கே'.

'ஆமடா! அந்தப் பெண் கோபித்துக் கொண்டு விரைப்பாகச் சென்றதைப் பார்த்தபோதே எனக்குத் தெரியும். டிராவர்ஸ் பந்தயத்தில் கெலித்துவிட்டான். எடுத்து வை பந்தயப் பணத்தை! எவ்வளவு? ஒரு பவுண்டு அல்லவா'

'ஏண்டா டிராவர்ஸ்! உன் ஜெயத்திற்காக நீ எங்களுக்கு 'டிரிங்ஸ்' வாங்கித் தர வேண்டும். இந்தா ஒரு பவுண்டு'.

நண்பர்கள் பேச்சு ஒன்றையும் டிராவர்ஸ் ரசிக்கவில்லை. முன்பு இருந்த குஷியெல்லாம் எங்கோ மறைந்துவிட்டது. தான் ஏதோ பெரிய குற்றம் செய்துவிட்டதாகவே அவன் நினைத்தான். இந்த மாதிரி ஒரு பந்தயத்தை ஏன் ஏற்றுக்கொண்டோம் என்று நொந்து கொண்டான்.

'ஜெயித்தேன்தான். வாஸ்தவம். ஆனால் அந்த ஜெயத்தில் என்னையே தோற்றுவிட்டேன்' என்றான் டிராவர்ஸ்.

'என்னடா கண்டதும் காதலா? அந்தப் பெண் யார் தெரியுமா? அவளிடம் உன்னைப்பற்றி சிபார்சு செய்கிறேன்.'

'போடா! அவள் பெயரே எனக்குத் தெரியாதே'.

ஏதோ பித்துப் பிடித்தவன் போல் தோன்றிய டிராவர்ஸை இழுத்துக்கொண்டு இரு நண்பர்களும் வெளியே சென்றார்கள்.

பிறகு சில நாட்களில் டிராவர்ஸ் நிலைமை மோசமாகிவிட்டது. முன்போல் தமாஷ் விளையாட்டுக்களில் அவன் சேர்வதில்லை. தனியாக கடைகளில் சுற்றுவான். நகைக்கடை, துணிக்கடை, டாய்லட்சாமான்கள்கடை என்று எல்லாம்தேடி அலைந்தான். எங்காவது தற்செயலாக அந்தப் பெண்ணைக் காண முடியாதா என்று தவியாகத் தவித்தான். அவளைத் தேடிப் பிடித்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று துடித்தான். 'என்னை மணந்து கொள்' என்று கெஞ்சவேண்டும் என்ற ஆசை ஆண்டவன் இந்த அதிர்ஷ்டத்தை அளிக்க மாட்டாரா என்று பிரார்த்திப்பான்.

அவனது போக்கைக் கண்டு அவனது நண்பர்களும் கவலை கொண்டார்கள். வாஸ்தவமாகவே அவனுக்குக் காதல் நோய் பிடித்துவிட்டது. அப்பெண்ணைக் கண்டால் அன்றி அவனுக்கு நோய் தீராது. அவர்களும் முயற்சி செய்திருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் முயற்சியின் பலனாகவே பிற்பாடு சம்பவங்கள் நடந்திருக்க வேண்டும். நண்பர்கள் இருவரும் அவனை கட்டாயப்படுத்தி ஒரு இரவு நாடகத்திற்கு இழுத்துச் சென்றனர். அங்கு நாடகம் பார்த்திருந்தவர்களில் ஒரு சோபாவில் வீற்றிருந்த ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் டிராவர்ஸ் துள்ளிக் குதித்தான். உடனே எழுந்தான். ஆனால் நண்பர்கள் அவனைப் பிடித்து அடக்கினார்கள்.

'அந்தப் பெண்ணை எனக்குத் தெரியும். நான் எல்லா விஷயங்களையும் கவனிக்கிறேன். சாவகாசமாக நீ அவளுடன்பேசலாம் இங்கேஒன்றும் சீன் செய்யாதே' என்றான் ஒருவன். தன் அறைக்குத்திரும்பிய டிராவர்ஸ் அன்று இரவு முழுவதும் அந்த மங்கையைப் பற்றியே கனவு கண்டு இருந்தான்.

இரண்டு தினங்களுக்குப் பிறகு டிராவர்ஸைத் தேடிக்கொண்டு ஒரு புதிய ஆள் வந்தான். அவன் ஒரு அட்டர்னியென்றும், மிஸ் மார்கரெட் டால்டன் ஒரு மான நஷ்டபிராது கொடுத்திருப்பதாகவும் தெரிவித்துக் கொண்டான். டிராவர்ஸ் திடுக்கிட்டான். ஐயோ! கோர்ட்டில் கேஸ் நடக்குமா வெட்கம்! என்று அவன் மனம் தவித்தது. ரயில் பிரயாணத்தின்போது அவமானப்படுத்தியதாகப் புகார் என்று அறிந்தவுடன் டிராவர்ஸ் கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்துவிட்டான்.

நல்ல வேளை அச்சமயம் அவன் நண்பர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் சமரசமான ஒரு ஏற்பாடு சொன்னார்கள். பிராதை கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டாமென்றும் அப்பெண்ணை நேரில் பார்த்து டிராவர்ஸ் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதென்றும் அந்த ஏற்பாடு அட்டர்னியும் அதற்குச் சம்மதித்துப்போய்விட்டான்.

மிஸ்டர் டால்டன் லண்டன் கவுண்டி பாங்கியில் காரியதரிசி அவருடைய தம்பி மகள்தான் மார்கரெட் டால்டன். யுத்தத்தில் உயிர் துறந்த தம்பி மகளை அவரே வளர்த்து வந்தார். பெண்கள் கல்லூரியில் படிப்பு முடித்த பிறகு மார்கரெட் என்ன செய்வதென்று யோசித்திருந்தாள். பாங்கியில் வேலை பார்க்க அவளுக்கு இஷ்டமில்லை. ஆசிரியர் வேலைக்குப் பயிற்சி பெற உத்தேசித்தாள்.

இந்தச் சமயத்தில் தான் டிராவர்ஸ்எதிர்ப்பட்டான். அவள்தினமும் தேம்ஸ் கரையோரம் உலாவுவது வழக்கம். அச்சமயம் ஒரு நாள் அவளைத் தனியே சந்திக்க டிராவர்ஸ் திட்டமிட்டான். அப்படியே சந்தித்து அவளுடன் நடந்



தான். அவனைக் கண்டவுடன் அவள் சற்றுத் தயங்கினுள். பிறகு சாதாரணமாகவே நடந்தாள். அவன் கூட நடப்பதை ஆட்சேபிக்கவில்லை. டிராவர்ஸ் தட்டித் தடுமாறிக்கொண்டு தன் பேச்சை ஒப்புவித்தான். தான் மிகவும் வருத்தப்படுவதாகவும் எவ்வித தண்டனை அளித்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயார் என்றும் சொன்ஞன். அவன் மனே வியாதி அவனை ஆட்டிவைப்பதாகவும் அன்ன ஆகாரம், தூக்கம், விளையாட்டு ஒன்றும் அவனுக்கு ஏற்கவில்லை என்றும் வர்ணித்தான்.

'இந்தக் கஷ்டத்தில் ஏன்இன்னமும் அதிகம் சங்கடம் வரவேண்டும்'.

'இன்னும் என்ன சங்கடம்' என்று அவள் கேட்டாள்.

தன் பேரில் மான நஷ்டப் பிராது பற்றி டிராவர்ஸ் சொன்னவுடன் அவள் சிரித்தாள். என்ன முட்டாள்தனம் செய்தான் அந்த அட்டர்னி. டிராவர்ஸுக்குச் சற்று தெம்பு உண்டாயிற்று. ஓஹோ! இந்தப் பிராது விஷயம் அவளுக்குத் தெரியாது போலும். ஒருவேளை அவள் பெரியப்பா செய்திருப்பாரோ என்னவோ. இதைப் பற்றி இன்னும் பேசத் தொடங்கினுன்.. ஆனல் அவள் சொன்னுள்: 'இங்குபேசவேண்டாம்.இப்போது நான் அவசரமாகப் போக வேண்டும். லேடி பெட்டிங்டன் மாளிகையில் இன்று இரவு விருந்தும் டான்சும் நடக்கிறது. நீங்களும் வாருங்கள்' என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தாள்.

டிராவர்ஸ் மகிழ்ச்சி நிரம்பியவனுய்த் திரும்பினுன். அன்று இரவு டான்சுக்கு அவன் போகத் தவறவில்லை. அவனும் அவளும் கைகோர்த்துக்கொண்டு டான்சு செய்தார்கள். அன்று தொடங்கியது அவனது சொர்க்க வாழ்வு. ஒரு மாதத்திற்கெல்லாம் டிராவர்ஸ் — மார்கரெட் திருமணம் நடைபெற்றது.

இந்தக் கதையைக் கேட்ட மாணவர்கள் வியப்புடன் பேராசிரியரையும் அவர் மனைவியையும் நோக்கினுர்கள்.தன்கதையை ஒருவித ஒளிவுமறைவின்றிச் சொன்ன ஆசிரியரிடம் அவர்களுக்குப் புதியதொரு மதிப்பு ஏற்பட்டது.

'சார்! எத்தனை வருஷங்களுக்கு முன் நடந்தது?'

'இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்'

'அப்படி என்ருல் வெள்ளி விழா நடத்த வேண்டும். நாங்கள் கொண்டாட்ட ஏற்பாடுகள் செய்கிருேம். எங்கள்சம்பிரதாயப்படி மணையில் இருத்தி வாழ்த்து சொல்வோம். தம்பதிகளை ஊஞ்சலில் உட்காரவைத்துப் பூச்சூட்டி புகழ் உரை பாடுவோம். நீங்கள் அனுமதிக்க வேண்டும்' என்று அதி உத்சாகமாகப் பேசினுன் அப்புசாமி.

மார்கரட்டைப் பார்த்தார் பேராசிரியர். அவள் வாலிபப் பெண்போல நாணிக்கொண்டாள் அவள் முகம் சிவந்தது. கண்களில் அன்பு ததும்பியது. முகத்தின் புன்சிரிப்பில்இரு கன்னங்களிலும் சிறுகுழிகள் தோன்றின. மாணவர்கள் முன்னிலையில் அவளைக் கட்டி முத்தமிட பேராசிரியருக்கு வெட்கமாயிருந்திருக்கலாம். ஆனல் அப்படிச் செய்ய வேண்டுமென்று அவர் துடித்தார் என்று பிறகு அப்புசாமியும், ரத்தினசாமியும் பேசிக் கொண்டார்கள்.

'ஆமாம் கதையில் என் பங்கை மாத்திரம்தானே கேட்டீர்கள். அந்த யுவதியின் பங்கைப் பற்றி ஒன்றுமேகேட்கவில்லையே'என்று சிரித்தார். பேராசிரியர் டிராவர்ஸ்.

'ஓஹோ! இன்னும் ரசமான பாகம் இருக்கிறதா?'

'அம்மா நீங்கள் தான் சொல்ல வேண்டும்'.

மிஸஸ் டிராவர்ஸ் புன்னகை பூத்தாள்.

'தாத்தா பாட்டியிடம் கதை கேட்பதுபோலநினைத்துக்கொண்டீர்களா?'

'உங்களைப் பாட்டி என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். நாங்கள் அன்னை என்றே அழைக்கிருேம்'.

'விவாகமான பிறகு மூன்று வருஷங்களுக்கப்பால் மறுபடியும் அதே பிரதேசத்தில் அதே குகை வழியில் பிரயாணம் செய்தோம். அப்போது மறுபடியும்...—'

இதற்குள் பேராசிரியர் எழுந்துவிட்டார்.

'இப்படித்தான் முத்தமிட்டேன்' என்று கட்டி அணைக்காமல் மெதுவாக முகத்தோடு முகம் இணைத்து முத்தமிட்டார். மாணவர்கள் ஆர்ப்பரித்து ஆனந்தம் கொண்டனர்.

அப்போது இந்த அம்மையார் என்ன சொன்னுர் தெரியுமா? நான் உண்மையைக் கூறினேன். முட்டாள்தனமாக நண்பர்களுடன் பந்தயம் வைத்தேன்–காடி ரோம அங்கி அணிந்திருந்தவளை முத்தமிடுகிறேன் என்று. ஒரு பவுண்டு பந்தயம். இதைக் கேட்டவுடன் மிஸஸ் டிராவர்ஸ் விழுந்து விழுந்து சிரித்தாள். இந்த ஆண்களே கருமிகள்!என்னை முத்தமிட ஒரு பவுன் தானு! நான் என் தோழிகளுடன் எவ்வளவு பந்தயம் வைத்தேன் தெரியுமா?

ஆ! நீ வேறு பந்தயம் வைத்தாயா?

பந்தயம் வைக்காவிட்டால் என் அருகில் உட்கார விடுவேனு? என் தோழிகளும் நானும் உங்களையும், உங்கள் நண்பர்களையும் அளந்து மதிப்பிட்டோம். உங்களைத்தான் எனக்குப் பிடித்திருந்தது. நீங்கள் பந்தயம் வைத்ததும் எங்களுக்குத் தெரியும். தோழிகள் கேலி செய்து சிரித்தார்கள். அப்படி நீங்கள் முத்தமிட்டால் உங்களை விவாகம் செய்துகொள்வேன் என்று பந்தயம் சொன்னேன். ஒரு ரிஸ்டு வாட்ச் பந்தயம்.

ஓஹோ! அதுதான் திருமணத்தன்று இரண்டு பரிசுகள் அனுப்பினுயோ. இப்போது தெரிந்தது பேராசிரியர் சொல்லும்போது மிஸ்ஸ் டிராவர்ஸ் பழைய நாட்கள் நினைவில் மூழ்கி மறந்திருந்தாள்.

'முரளி'

நினது வீட்டிற்குள் பிரவேசித்த மது விலக்கு 'இன்ஸ்பெக்டர்' சுந்தரானந்தம் அடுக்களை வரை சென்று 'நாச்சியார்! நாச்சியார்!' என இரு முறை கூப்பிட்டுவிட்டு ஆயாசத்தோடு 'தொப்'பென்று கட்டிலில் உட்கார்ந்தார். அந்த ஆயாசம் அவருடைய உடலைவிட உள்ளத்தைத் தான் வெகுவாக பாதித்திருந்தது.

சில மணி நேரத்திற்கு முன்பு எந்த சட்டத்தை அமுல் நடத்த மனமில்லாமல் அலட்சியம் செய்தாரோ, அந்த சட்டம் கோரமான விஸ்வரூபம் எடுத்து அவரை விழுங்கிவிட வேண்டுமென்று வெளியே காத்திருப்பதுபோல அவருக்கு ஒரு உணர்வு ஏற்பட்டது. இடது கையால் நெற்றி வியர்வையை வழித்துக் கொண்டார். எதிரில் தோன்றிய தன் மனைவியைப் பார்த்துவிட்டு வாசல் பக்கம் திருஷ்டியைச் செலுத்தினுர்.

தலைக்கொரு கம்பும் கையுமாக பெற்ருேர் வீட்டிற்குள் உறுமிக் கொண்டிருக்க, உள்ளே நுழையவும் தைரியமில்லாமல் வெளியே ஓடிப்போகவும் போக்கிடமில்லாமல் தவிக்கும் குழந்தையைப் போல வாசலை ஒட்டி ஒரு பெண் நின்றிருந்தாள். அவளுடைய முகத்தைச் சூழ்ந்து பீதி மொய்த்துக்கொண்டிருந்தது.

'யாரம்மா? என்ன வேணும்?' என்று கேட்டாள் நாச்சியார்.

'நாச்சியார்! நான்தான் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். என் சிநேகிதர் ஒருவரின் மனைவி. என் தங்கையைப் போல! எனக்கு நேரமாகிறது. முழு விவரத்தையும் பிறகு வந்து சொல்லுகிறேன். இப்பொழுது அவள் நம் பாதுகாப்பில் இருக்க வேண்டும். பாதுகாப்பு என்ருல் கட்டுக் காவல் அல்ல. இன்னும் ஆறு மாதங்களுக்கு நம்முடைய குடும்பத்தில் அவளும் ஒரு உறுப்பு' என்று கட்டிலைவிட்டு எழுந்த சுந்தரானந்தம் வாசலுக்கு வந்தார். 'கோமு! தயங்காதே! சும்மா வா' என்று அந்தப் பெண்ணை அழைத்தார்.

வாடித் தொங்கிய தலையை நிமிர்த்தினுள் கோமு. அவளுடைய கண்கள் நாச்சியாரின் கண்களில் ஏதோ ஒரு அரிய வஸ்துவை விரும்பித் தேடின. உதடுகள் அரும்பி மலர 'வாம்மா!' என்ருள் நாச்சியார். வாத்ஸல்யம் கலந்த அந்த அழைப்பு

கோமுவின் கால்களுக்கு தெம்பு கொடுத்து அவளை வீட்டுக்குள் அழைத்து நிறுத்தியது.

'பலகாரம் இருக்கிறதா? இல்லாவிட்டால் கொஞ்சம் ரவை கிண்டி வை. அவள் இன்னும் சாப்பிடவில்லை போலிருக்கிறது.'

'தோசை இருக்கிறதே!' என்றாள் நாச்சியார். அவளுடைய பங்கு மட்டும்தான் அடுக்களையில் மிச்சமாக இருந்தது. சுந்தரானந்தம் சற்றுப் பொறுத்து வந்திருந்தால் 'அதுவும் இருந்திருக்காது.

'சரி. அதை வைத்துக்கொடு.... சீக்கிரத்தில் உலையும் ஏற்றிவிடு... கோமு! வித்தியாசமாக எண்ணாதே. இங்கே உனக்கு ஒரு குறைவும் ஏற்படாது. நான் அவசரமாகப் போகவேண்டும். மத்தியானம் வந்துவிடுவேன். வரட்டுமா?'

சைக்கிளில் ஏறி இரண்டு மிதி மிதித்தவர் உடனே இறங்கி சைக்கிளைப் பின்னால் தள்ளிக் கொண்டு வந்தார்.

'என்ன, கோமு?' அவள் வெளியில் வருவதைத் திரும்பிப் பார்த்துவிட்டுத்தான் அவர் இறங்கி விட்டார்.

'நான் இங்கேயே இருந்து கொள்ளவா?'

'வேறு என்ன செய்யப் போகிறாய் கோமு? இங்கிருப்பதில் உனக்கு இஷ்டமில்லையா?'

'என் இஷ்டமா?'

'உன் அம்மாவின் இஷ்டமும் கூடத்தான். உனக்கு ஒருவேளை ஆகாரம் கொடுக்கக்கூட என்னிடம் வக்கில்லை என்று உன் அம்மா கூறினார்களே! அது இன்னும் மாறாத வடுவாக நெஞ்சிலிருக்கிறது, கோமு! அந்த சாபம் நிலைத்திருக்க வேண்டுமென்றால் நீ போய்வரலாம். நான் தடுக்கப் போவதில்லை'

'நான் அப்படி எல்லாம் நினைக்கவில்லையே!'

'உன்னைக் குற்றம் சொல்வதற்கில்லை.' 'பாழுங்கிணற்றில் தள்ளாதே' என்று வீரம் பேசியவர்கள் உன்னை படுபாதாளத்தில் தள்ளிவிட்டிருக்கிறார்கள். இணை பிரியாமல் வாழலாம் என்று கனவு கண்டேன். அது விட்ட குறையாகவே நின்றுவிட்டது. இந்த ஆறுமாத காலமும் உன்னை சகோதரியாகப் பாதுகாத்து அந்த ஏமாற்றத்தை ஒருவாறு துடைத்து விடலாம் என்று ஆசைப்படுகிறேன் கோமு! என் மனைவி நல்ல சாது. அவளுக்கு ஒத்தாசையாக வீட்டு காரியங்களையும் கவனித்துக் கொள். இரண்டு குழந்தைகள் பள்ளிக்கூடம் போயிருக்கிறார்கள். அவர்களோடு இருந்து பொழுதைப் போக்கு. மனதில் ஒரு கலக்கமும் வைத்திருக்காதே. எப்படியும் ஆறு மாதம் பொறுத்துக்கொள் அதற்குள் உன் கணவனுக்கும் ஒரு வேலை பார்த்து வைக்கிறேன். உன் மனதில் இருப்பதை சொல்லு. எனக்கு நேரமாகிறது பார்!'

'சரி' என்று திரும்பி நடந்தாள் கோமு. அவள் வீட்டிற்குள் சென்று மறைவதைக் கண்ணாரக் கண்டுவிட்டு சுந்தரானந்தம் மீண்டும் சைக்கிளில் ஏறிக்கொண்டார்.

2

அன்று காரியாலயத்திற்கு வந்த கடிதங்களைப் புரட்டினார் சுந்தரானந்தம். நெல் விரிப்பில் ஒரு கல்லைப்போல ஒரே ஒரு கடிதம் திருட்டு விழி விழித்துக் கொண்டிருந்தது. அதைப் பிரித்துப் படித்தார்.

'மது விலக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு,

நீங்கள் மது விலக்கு சட்டத்தை அமுல் நடத்தி மதுவை பூரணமாய் ஒழிப்பதற்காக உத்தியோகத்தில் அமர்ந்திருக்கிறீர்கள்– மக்கள் செலவில்– மக்கள் சேவகனாக. தினமும் ஆபீசுக்கு ஜம்பமாகப் போய்வருகிறீர்கள். ஆனால் இதோ கூப்பிடு தூரத்தில் நடக்கும் அக்கிரமம் உங்களுக்கு தெரியவில்லையா? அல்லது தெரிந்துதான் விட்டு வைத்திருக்கிறீர்களா என்றுகூட சந்தேகிக்கிறோம். ஆரைக்குளத்தில் ஊரை விட்டு ஒரு பர்லாங் மேற்கே விலகி ஒரு குடிசை இருக்கிறது அங்கிருந்து தினமும் ஒரு பீப்பாய் சாராயம் வெளியேறுகிறது இதைக் கையுங் களவுமாகப் பிடித்து நீங்கள் நீதியை நிலை நாட்ட வேண்டும். இல்லாவிட்டால் மேலதிகாரிகளுக்கு 'ரிப்போர்ட்' செய்யப்படும். இந்த மனுவின் நகல்களை கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும், கனம் மதுவிலக்கு மந்திரி அவர்களுக்கும் அனுப்பி இருக்கிறேன் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

இப்படிக்கு,
பொது ஜனத் தொண்டன்,
பழனி.

முன் தினமும் இப்படி ஒரு கடிதம் வந்தது. இதே பொது ஜனத் தொண்டன்தான் இதே கையெழுத்தோடு அதில் பரமசிவனாக அவதரித்திருந்தான்! மொட்டை கடிதமாகவே இருந்துவிட்டுப் போகட்டுமே. அதன் மூலம் ருஜு கிடைத்தால் எவ்வளவு நல்லது!

ஆரைக்குளத்தை நோக்கி ஜீப் பறந்தது. நல்லவர்கள் குடியனை விலக்கி வைப்பதுபோல் கடிதம் சொன்ன அந்த வீடும் ஊரை விட்டு ஒதுங்கித்தான் இருந்தது ரஸ்தாவில் ஜீப்பை நிறுத்தி விட்டு சற்று நடக்கவும் வேண்டியிருந்தது. தூய்மையான காற்றுங்கூட அந்த வீட்டிற்குள் புகுந்து வந்த பிசகினால் போதையும் துர்கந்தமும் ஏறிப்போய் வீட்டைச் சுற்றி மயங்கிக் கிடந்தது

சுந்தரானந்தம் முன்னும் இரண்டு ஜவான்கள் பின்னுமாக வீட்டை நோக்கி முன்னேறினர் போதை யுண்டவன் தன்னை சூறையாடுபவர்களைத் தடுக்க முடியாமல் எப்படி விட்டுக் கொடுப்பானோ அவ்விதமே அந்த வீட்டுக் கதவும் எந்தத் தடங்கலும் செய்யாமல் திறந்துகிடந்து வழி விட்டது. வாடிக்கைக் காரர்களின் ரகசிய வரவையே எதிர்நோக்கி 'இருந்த அந்த மனிதன், சிறிது நேரத்தில் அரசாங்கத்தின் பகிரங்கவாடிக்கைக் காரனாக-'கேடி'யாக-தான் மாறப் போவதை உணராமல் கையில் ஒரு பாட்டிலுடனேயே அவர்களை வரவேற்றான். அவ்வளவுதான் 'ஆ'வென்று அவன் வாயை பிளந்தான். கையிலிருந்த பாட்டிலும் நழுவி உருண்டது.

'ராமசாமி! ஊம்' என்று கால் சராய்ப் பைக்குள்ளிருந்து 'கட்டிக் காப்பு'களை விட்டெறிந்தார் சுந்தரானந்தம். அவன் கைது செய்யப்பட்டு விலங்கு பூட்டப் பட்டான். இன்ஸ்பெக்டரும் ஒரு ஜவானுமாக வீடு முழுவதையும் அலசினார்கள். அவன் தப்ப முடியாதவாறு பல தடயங்கள் சிக்கிக் கொண்டன.

'எல்லாவற்றையும் வண்டியில் கொண்டுபோய் போடு' என்று சுந்தரானந்தம் உத்தரவிட்ட போது அவர்களை நோக்கி இரண்டு விம்மல்கள் வந்தன. வெளியில் வந்து அவர் எட்டிப் பார்த்த போது தண்ணீர்க் குடத்தைக் காலடியிலேயே இறக்கி வைத்துவிட்டு கண்களை கசக்கிக் கொண்டு அவள் நின்று கொண்டிருந்தாள்.

அவளுடைய முகத்தைக்கூர்ந்து கவனித்ததும் திகில் பட்டுப் போனவர் சட்டென்று முகத்தை திரும்ப வைத்துக்கொண்டு, "நீ... நீ...தானே...இவருடைய" என்றார் குளறியபடி.

"ஆமாம்...என் வீட்டுக்காரர்.."

சட்டைப் பைக்குள் கைவிட்டு மொட்டைக் கடிதத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டார் சுந்தரானந்தம். அது உள்ளிருந்தபடியே சீறி விழுந்தது. "மக்களின் சேவகன்-மேலதிகாரிகளுக்கு 'ரிப்போர்ட்' செய்யப்படும்-பிரதம மந்திரிக்கு நகல்."

ரஸ்தாவில் 'ஜீப்'பைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டிருந்தது. அந்த கூட்டம் நின்றிருந்த நிலை இந்த சம்பவத்தை விரும்பி எதிர்பார்த்திருப்பதாகவே தோன்றியது. சுந்தரானந்தம் மீண்டும் அவளைப் பார்த்தார்.

"கோமு! மாணிக்கம்இருந்தால் பார்த்துக் கூட்டிக் கொண்டு வாயேன்!" என்றான் அவளுடைய கணவன் பரிதாபகரமாக.

"ராமசாமி! என் சுணக்கம்? வண்டிக்குக் கொண்டு போ!" என்றார் இன்ஸ்பெக்டர் கடுமையாக.

மனைவி :—"இன்னிக்கு நானும் உங்க அம்மாவும் சேர்ந்து சமையல் செய்திருக்கோம்."

கணவன் :—"அதை நீ சொல்லணுமா என்ன? ஒவ்வொண்ணிலேயும் இரண்டு பங்கு உப்பு இருக்கிறதிலேயே தெரியறதே!"

"ஐயா...!"

"ஊம்"

"அவரைக் கொண்டு போகிறீர்களா?"

"சொல்லாமலே விளங்கவில்லையா?"

"எனக்காக..."

"சீக்கிரம் சொல்லு."

"இந்த ஒரு தடவை மன்னித்து விடுங்கள்"

"நான் மன்னிக்கவும் மாட்டேன்; தண்டிக்கவும் மாட்டேன். இரண்டும் என் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டவை."

"எனக்கு வேறு ஒரு நாதியும் கிடையாது."

"சொல்வதையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். என்றால் வேறு எதுவும் செய்ய முடியாது-இவரைக் கொண்டு போவதைத்தவிர"

'ஜீப்' மீண்டும் திசை மாறிக் கிளம்பியது. கோமுவின் பிடிமானமற்ற நிலையை எண்ணி தூரத்திலிருந்தே அவளை ஒரு முறை திரும்பிப் பார்த்த சுந்தரானந்தத்தின் கண்கள் கலங்கின.

வாய்தா தினத்தில் அவளும் கூட கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தாள்.

"ஆறு மாதம்"

அந்த வார்த்தைகள் அவளை வாய்விட்டு அழ வைத்தன. ஏமாற்றிவிட்ட கனவு லோகத்தில் பேசிக் கொண்ட சில வார்த்தைகள் சுந்தரானந்தத்தின் ஞாபகத்துக்கு வந்தன: "கோமு! உன் சிரித்த முகத்தையே என்னிடம் கொண்டு வா!"

3

எண்ணாத வண்ணம் கோமுவை கண்டதிலிருந்து சுந்தரானந்தத்திடம் அமைதியான தூக்கம் அணுக மறுத்தது. சற்று மறந்து கண்ணை மூடினாலும் யார் யாரோ அவளுடைய கைகளைக் கட்டி இழுத்துப்போவது போலவும் சில சமயம் அவரே அவளை சவுக்கால் நைய நொறுக்குவது போலவும் தோற்றங்கள்கண்டு உதறி விழித்தார். இன்றைக்கு-அவளுடைய கணவன் செய்த குற்றத்திற்குத் தீர்ப்புக் கிடைத்த நாளில்-அவள் கண்ணீருங் கம்பலையுமாக அவர் எண்ணத்தில் தோன்றி, "உனக்கு நான் கிட்டவில்லை என்பதற்காக என் கணவனிடமிருந்து என்னைப் பிரித்து வஞ்சம் தீர்த்துக் கொண்டாயா, பாவி?" என்று கதறினாள்.

ரணத்தின் மீது மருந்து பூசுபவன் அதன்மீது படிந்திருக்கும் கிருமிகள் மீது எவ்வித விரோதம் பாராட்ட முடியும்? சுந்தரா

S. 221-X52 TM
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

னந்தம் தன் கடமையாற்றும்போது தற்செயலாக நிகழ்ந்த இந்த சம்பவத்தால் வேண்டுமென்றே தனக்குத் தீங்கிழைக்கப்பட்டதாகத்தான் கோமு கருதுவாளா? அவர் தன் நெஞ்சின் மீது கை வைத்து அந்தத் துடிப்பு வஞ்சமும் களங்கமுமற்றது என்று திருப்தியடைந்து கொண்டார். அவளுடைய நிராதரவுக்கு அவர் பொறுப்பாளியாக முடியாது. இவ்விதமெல்லாம் நடக்குமென்று ஏழெட்டு வருஷங்களுக்கு முன் அவரோ வேறு யாருமோ எண்ணிப் பார்த்ததில்லை.

இளமையிலேயே சார்ந்துவிட்ட வறிய குடும்பத்தின் அழுத்தமான சுமை சுந்தரானந்தத்தை அலைக்கழித்தது. படிப்பை எஸ். எஸ். எல். ஸி.யோடு முடித்துக்கொண்டு தள்ளாத தந்தையையும், தங்கையையும் காப்பாற்றும் பொறுப்பேற்று வேலைக்காக அலைந்தார். ஒரு வருஷத்திற்குள் இரண்டு இலாகாக்களில், தற்காலிக குமாஸ்தாவாக சிற்சில மாதங்களுக்கு நியமிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். அவர் மனமொடிந்து நம்பிக்கை யற்றிருக்கும் நேரத்திலெல்லாம் கோமு தன் முக வடிவைக் கொண்டுவந்து காண்பித்து அவருக்கு ஆறுதலளிப்பாள். அவளை அடைய வேண்டும், என்றும் வாடாத மலரைப் போல அவளைப் பாதுகாப்பதற்காவது தனக்கு ஒரு சாஸ்வதமான தொழில் வேண்டும் என்று அடிக்கடி ஏங்கினார்.

என்றும் குதூகலமாக அந்த வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்த கோமு ஒருநாள் சந்துஷ்டி இல்லாமல் காணப்பட்டாள். இதழ்கள் வனப்பாக மலர்ந்து அடுத்தகணம் திரும்பவும் மூடிக் கொண்ட மலரின் இரு வேறுபட்ட தோற்றங்களும் சுந்தரானந்தத்தின் நினைவுக்கு வந்தன.

"ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? என் தங்கையோடு கூடப் பேசவில்லையே!"

"ஒன்றுமில்லை."

"இங்கு வருவதில் ஏதாவது கஷ்டமா?"

"எனக்கு ஒன்றும் கஷ்டமில்லை. என் அம்மாவுக்குத்தான் இஷ்டமில்லை."

"இருக்கத்தான் செய்யும். அவர்கள் மனசுபோல் நீ நடந்துகொள்ளேன்."

"நீங்களே இப்படிச் சொல்லிவிட்டால்?"

"நான் என்ன, ஒரு அற்பம்."

"அப்படி நான் நினைக்கவில்லை. நான் எவ்வளவோ எண்ணியிருக்கிறேன்!"

"ஆயிரத்தை எண்ணலாம், கோமு! ஆனால் எல்லாம் காரியத்தில் நடந்துவிடுமா?...இன்றைக்கு என்னால் ஒரு செப்புச்சல்லி வரும்படியில்லை. உன் அம்மா அடிக்கடி சொல்லிக் கொண்டு திரிவது போல உனக்கு ஒருவேளை ஆகாரங் கொடுக்கக்கூட என்னிடம் வக்கில்லை. அவர்கள் உன்னைத் தடுப்பதில் நியாயம் இருக்கத்தானே செய்கிறது?"

"இருட்டு இருட்டாகவே இருந்துவிடுமா? எப்பொழுதாவது நிலையான வேலை கிடைக்கத்தானே செய்யும்?"

"கிடைக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறேன். அதற்கிடையில் ஏன் மனக் கசப்பை வளர்க்க வேண்டும். கொஞ்ச நாட்கள் இங்கே தலை காட்டாமல் இருந்து கொள், கோமு!"

"நான் என்னசெய்யட்டும்? என் கால் நிற்க மாட்டேனென்கிறது."

"அப்படியானால் ஒன்றுமட்டும் கேட்கிறேன், கோமு! உன் இஷ்டம்போல் வந்து போயிரு, வரும்போது உன் சிரித்த முகத்தையே என்னிடம் கொண்டு வா! கிண்ணத்தின் சூடு கைக்குப் பரவுவதைப் போல நீ காட்டும் விசாரம் என்னையும் தொற்றிக் கொள்கிறது!"

"அதற்கு நீங்கள்தான் ஒரு உறுதி சொல்ல வேண்டும்."

"என்ன சொல்ல வேண்டும்?"

"'கைவிடமாட்டேன்' என்று!"

"அதை இப்பொழுது சொல்லக்கூடாது, கோமு! நீ என் பொருளாகி உன் கையைப் பிடிக்க வாய்ப்புக் கிடைக்கும் போது அந்த சொல்லைச் சொல்ல வேண்டும்! அதுவரைக்கும் நீ யாரோ, நான் யாரோ!"

அன்றிலிருந்து கோமு அந்த வீட்டுப் பக்கம் வருவதேயில்லை. அழிந்து கொண்டுவரும் நந்தவனத்தில் எஞ்சியிருந்த ஒரு பூஞ்செடியையும் பிடுங்கி எறிந்துவிட்டது போலிருந்தது சுந்தரானந்தத்துக்கு.

மதுவிலக்கு போலீஸாக சுந்தரானந்தத்துக்கு ஒரு வேலை கிடைத்தது. தந்தையையும் தங்கையையும் அழைத்துக் கொண்டு அவர் ஊரை விட்டுப் போய்விட்டார். சில மாதங்கள் கழித்து கோமுவுக்குக் கல்யாணம் நடந்துவிட்ட செய்தி அவருடைய காதுகளை எட்டியது; மிகுந்த கஷ்டத்தினிடையே தன் தங்கையைக் 'கரையேற்றி' விட்டார். உத்தியோக உயர்வு கிடைத்ததும் அவருக்கு நாச்சியார் வலிதில் கிடைத்தாள். அதன்பின் 'கோமு' என்ற பதம்கூட அவருடைய எண்ணத்திலிருந்து அழிந்துவிட்டிருந்தது.

இன்று கோமுவின் கணவனை அவளிடமிருந்து அப்புறப்படுத்தி விட்டார். இன்னும் ஆறு மாதங்களுக்கு அவள் கொழு கொம்பிழந்த மலர்க் கொடி, அச்சொடிந்த ஊர்தி. அவளை ஒருமுறை நேரில் கண்டு ஆறுதல் மொழி சொல்லவேண்டும். அவளுக்குத் தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும். எதற்கும் விடியட்டும்.

4

அதிகாலையில் எழுந்ததும் மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து சட்டைப் பையில் செருகிக் கொண்டு வெறும் காபியை மட்டும் குடித்துவிட்டு சைகிளில் புறப்பட்டார் சுந்தரானந்தம். சற்றுநேரத்தில் ஆரைக் குளத்தில் அந்த ஒண்டி வீட்டின் வாசலில் நின்று, வாயால்குரல் கொடுக்கத் தைரியமற்று, சைக்கிளை ஓசைப்பட முன்னும் பின்னும் நகர்த்தினார்.

"நீங்களா?"

"என்னை மன்னித்துவிடு, கோமு! என் கடமையைச் செய்யாமல் நான் இருக்கமுடியுமா? என்னால் உனக்குக் கஷ்டம். உன் கணவனை உன்னிடமிருந்து பிரித்துவிட்டேன்...."

"இப்பொழுது என்னையும் அவருடன் கொண்டுபோய் வைக்கப் போகிறீர்கள். இல்லையா?"

"ஒருவகையில் கணவன் குற்றமும் கூடத்தான்!"

"என் வீட்டுக்குள் வராதீர்கள்!"

"ஏன், எனக்கு உரிமையில்லையென்று நினைக்கிறாயா?"

"இதுவும் உங்களுக்கு எப்படித் தெரிந்துவிட்டது?"

"எது?" என்று கேட்டுக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்த சுந்தரானந்தம் 'குப்'பென்று துர்நாற்றம் அடிப்பதை உணர்ந்தார்.

"இது என்ன நாற்றம், கோமு? இன்னுமா?"

"......"

"நீயுமா?"

"......"

"முட்டாள்!"

"நானில்லை"

"நீயில்லாமல்?"

"எங்களுக்குத் தெரிந்த ஒரு சிநேகிதர்"

"நீ அதற்கு இடங் கொடுத்திருக்கிறாய்?"

"அவரேதான் இடங் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்."

"நீயும் இதை ஒப்புக்கொண்டாயா?"

"நான் என்ன செய்வது?...செலவுக்குப் பணம் தருகிறார்...."

"நீயும் உன் பணமும்! சொல்ல வெட்கமாயில்லை உனக்கு? எத்தனையோ குடும்பங்களின் உயிரை உறிஞ்சுவதால் வரும் பணம் உன் உயிரைக் காப்பாற்ற வேண்டுமா? புத்தி கெட்டுப் போனாயே, கோமு!"

"என்னைக் காப்பாற்றுங்கள்!"

"அந்த லட்சணத்தில் தானே நீ நடந்து கொண்டிருக்கிறாய்!"

"......"

"அந்த மனிதன் எங்கே?"

"வர நேரமாகும்"

"சரி நீ புறப்படு!"

"நானா? என்னையும் ஜெயிலில் வைத்துவிடுவீர்களா?"

"உன் கணவன் இருக்கும் இடம். உனக்கு சொர்க்கம்."

"உங்கள் காலைப் பிடிக்கிறேன். என்னை விட்டுவிடுங்கள்."

"அழுது என்ன பிரயோஜனம், கோமு! நீ புறப்படத்தான் வேண்டும். முதல் முறையாக நானும் குற்றவாளியாகிறேன் – உனக்காக. ஜெயிலுக்கு அல்லது என் வீட்டுக்கு. இரண்டிலொன்றை முடிவு செய்துகொள்."

"உங்கள் வீட்டிற்கா?"

"ஆமாம். நான் இப்பொழுது குழந்தை குட்டிக்காரன். உன் அண்ணன்."

"சரி!"

வீட்டுக்குள்ளிருந்த 'சரக்கு'களையெல்லாம் உரக்குழியில் கொட்டி மூடினாள் கோமு. கதவைப் பூட்டிக்கொண்டு அவருடன் புறப்பட்டாள். வழியில் அவள் கதை முழுவதையும் கேட்டுக்கொண்டுவந்த சுந்தரானந்தம் அவள் மீது பச்சாத்தாபப்பட்டார். 'பாழுங் கிணற்றில் தள்ளுவேனோ?' என்று வீரம் பேசிய கோமுவின் தாய் இன்று தன் மகள் வாழும் வகையைக் காண உலகில் இல்லை. இளமை தொட்டு ரகசியக் குடியனாக இருந்த அவளுடைய கணவன், சுய தேவையைப் பூர்த்தி செய்பவனாகமாறி, கடைசியில் இன்னும் பலரை, அந்தக் கொடிய பழக்கத்தில் சிக்கவைத்துவிட்டான்.

ஒரு காலத்தில் தனது காதலியாக இருந்தவளின் கணவனென்றும் பாராமல் உண்மை ஊழியனாக, கடமை தவறாமல், அவனுக்குத் தண்டனை கிடைக்கச் செய்ததை எண்ணி சுந்தரானந்தம் தனக்குள்ளே பெருமைபட்டுக் கொண்டார். ஆனால் அதே குற்றத்தைச் செய்த இன்னொருவனுக்கு இடங்கொடுத்த அந்தக் காதலியின் முன் அவர் ஊசலாடிவிட்டார். என்றாலும் அந்தத் தீச்செயல் அந்த இடத்தில் அவளால் இனி நடக்காது என்ற திருப்தி அவருக்கு.

'என் மகளுக்கு ஒருவேளை ஆகாரங் கொடுக்கக்கூட அவனிடம் வக்கில்லை' என்று கோமுவின் தாய் சொன்ன வார்த்தைகள் அடிக்கடி ஞாபகத்துக்கு வந்தன. அவள் இன்னொருவனுக்கு உடைமையாகி வெகு தூரம் விலகி பல வருஷங்களான பின்னும் கோமுவை ஆறுமாதங்கள் காப்பாற்றும் வாய்ப்புக் கிடைத்த வேடிக்கை, "அந்த அம்மாள் இன்று இருந்திருக்கவேண்டும்" என்று அவரை எண்ணவைத்தது. முற்றுப் பெறாமல் விட்ட குறையாக நின்றுவிட்ட அவர்கள் உறவு இப்போது புது ரூபமெடுத்து அவர்களை அண்ணன் தங்கையாக்கி நிறைவேறப் போகிறது என்ற எண்ணத்தினூடே தானே அமுல் நடத்த வேண்டிய சட்டத்துக்கு விரோதமாக நடந்துகொண்ட ஒரு குற்றவாளிக்கு இடங் கொடுக்கிறோம் என்ற எண்ணமும் அவரை உலுக்கியது. இது வெளியானால் தனக்கு இடைஞ்சல் நேரலாம் என்ற பயத்தோடுந்தான் கோமுவைத் தன் வீட்டில் சேர்த்துவிட்டுப் போனார்.

• • •

மத்தியானம் சுந்தரானந்தம் வீட்டுக்கு வந்து பார்த்தபோது கோமு அங்கில்லை.

"யாரோ அவளுடைய அண்ணனாம். ஆரைக் குளத்துக்குப் போய்ப் பார்த்துவிட்டு நீங்கள் போன அரை மணி நேரத்தில் வந்தார். அவளைக் கூட்டிக் கொண்டு போய்விட்டார்" என்றாள் நாச்சியார்.

"அவளுக்கு அண்ணன் கிடையாதே!"

"அண்ணனென்றுதான் அவளும் சொன்னாள்"

"ஒரு சுருட்டை முடிக்காரனா?"

"ஆமாம்"

"அவளுடைய பெரியப்பா மகன். அது சரி அவள் இங்கிருந்தது அவனுக்கு எப்படித் தெரியும்?"

"நீங்கள் கூட்டிக்கொண்டு வந்ததாக ஆரைக்குளத்தில் யாரோ சொன்னார்களாம்."

"காலையில் சாப்பிட்டாளா?"

"தண்ணீர்கூடக் குடிக்கவில்லை!"

"சரிதான். விட்டகுறை விட்ட குறையேதான்."

"அது என்ன?"

"அதெல்லாம் உனக்குத் தெரிய வேண்டாம், நாச்சியார்!" என்று பெருமூச்சுவிட்டார் சுந்தரானந்தம்.

அவன் தெய்வம்

ஏஸ்.மங்களநாயகி

"கல்யாணி யேய் கல்யாணி!' என்று கூடத்திலிருந்தபடியே கத்தினார் நாராயண அய்யர்.

'இதோ வந்துட்டேன்னு! ஏன் இப்படிக்கத்தறேள்?' என்று கேட்டுக்கொண்டேசமையலறையிலிருந்து வெளிப்பட்டாள் கல்யாணி. அவள் கைகள் தம்மிடமிருந்த ஈரத்தைப் போக்கப் புடவைத் தலைப்புடன் சரசமாடிக்கொண்டிருந்தன.

'உன் தம்பி வரானும்! லெட்டர் வந்திருக்கு...'

'யாரு? முரளியா?'

'இல்லேடீ பெரியவன் கிட்டு...'

'ஆமாம் குறைச்சலில்லே' என்று சலித்துக்கொண்டவளாய் தன் அந்தப்புரத்திற்குள் நுழைந்தாள் கல்யாணி. அவள் தலை ரேழி தோள்பட்டையிலே இடித்துக்கொண்டது.

• • •

கல்யாணியின் தம்பிகளான கிட்டு, முரளி இருவருள் கிட்டு ஒரு அப்பாவி சூதுவாது அறியாதவன். சிறு வயதிலிருந்தே குடும்பத்தில் யாருடனும் ஒட்டுதலாகப் பழகமாட்டான் அவன். இளமையில் தினமும் ஊர் சுற்றிவிட்டு, இரவு எட்டு மணி, ஒன்பது மணிக்கு வீடு திரும்பும் அவன் எத்தனையோ தடவைகள் கல்யாணியின் கோள் சொல்லும் பழக்கத்தால் அப்பாவிடம் அடிபட்டிருக்கிறான். அடித்தார்களே என்று மறு நாள் எங்கும் போகாதிருக்கமாட்டான்.கல்யாணியின் மேலும் வர்மம் பாராட்ட மாட்டான். அது அவன் சுபாவம். தன்னைவிட பத்து வயது சிறியவனை கிட்டுவை கல்யாணி எவ்வளவோ பிரியத்துடன் எடுத்து வளர்த்தாள் என்றாலும், அவள் சுபாவமும், அவன் சுபாவமும் க்ஷேத்திர கணிதத்தில் வரும் சமாந்திரக்கோடுகளாகவேஇருந்தன. ஆனால் அவனையடுத்துப் பிறந்த முரளி கல்யாணியை எளிதில் கவர்ந்தான். தனது விஷமத்தினாலும்சாதுரியபேச்சினாலும் கல்யாணியைத் தன் வசப்படுத்திக்கொண்டான் முரளி. இதனால் கல்யாணி முரளியைக் கொஞ்சி வளர்க்கவும் கிட்டுவை உதாசீனப்படுத்தவும் ஆரம்பித்தாள். ஆனால் கிட்டு முரளியை விட கல்யாணியின் மீது வாஞ்சையாக இருந்தான் என்பது கல்யாணி அறியாத விஷயம்.

கிட்டு எட்டு வயது பையனாக இருக்கையில் கல்யாணி நாராயணனை மணந்து குடித்தனம் போனாள். மறுவருடமே அவளுக்கு நீலா பிறந்தாள். அவள் பிறந்த உடனேயே 'இவள் முரளிக்குத்தான்' என்று தீர்மானித்தாள் கல்யாணி. இப்பொழுது நீலா பதினாறு வயது மங்கை. கிட்டுவும் வளர்ந்து விட்டான். கல்யாணியின் 'தடிப்பயல்' என்ற பெயரோடு. அவனுடைய சுபாவம் சற்றும் மாறவில்லை பதினாறு வருட காலத்தில். சிறு வயதிலேயே சங்கீதத்தில் விருப்புக் கொண்ட அவன் யார் யாரையோ பிடித்து பிடில் வாசிக்கக் கற்றுக் கொண்டான். படிப்பு என்னவோ எஸ். எஸ். எல். ஸிக்கு மேல் ஏறவில்லை. முரளி கல்லூரியில் சேர்ந்து பி ஏ. வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தான். அந்த வருடமே அப்பாவைக் கேட்டு முரளிக்கும் நீலாவுக்கும் முடிச்சுப் போட்டுவிட வேண்டுமென்று தீர்மானித்திருந்தாள் கல்யாணி எனவே இந்த நிலையில் கிட்டுவின் வரவை அவள் விரும்பவில்லை. ஆனால் நீலா...? அவளுக்கு வாரப்படாத சுருண்ட மயிரடர்ந்த கிராப் தலையுடன் பித்தானில்லாத ஷர்ட், வேஷ்டி அணிந்து குழந்தைப் போல 'நீலா நீலா!' என்று தன்னையே சுற்றி வரும் ஆஜானுபாகுவாக வளர்ந்துவிட்டிருந்த கிட்டு அத்தானைத்தான் ரொம்பப் பிடிக்கும். ஆமாம் அவளுக்கு கிட்டு 'அத்தான்'தான்.

அது ஒரு ரஸமான சம்பவம்

நீலாவுக்கு எட்டு வயதிருக்கும் அப்போது. நீலா குடும்பத்துடன் கிட்டு, முரளி யாவரும் ஒருமுறை சினிமாவிற்கு போயிருந்தனர் . அதில் வந்த கதாநாயகி தான் விரும்பும் ஆடவனை 'அத்தான்' என்று அழைத்தாள். அதைப் பார்த்துக்கொண்டிருந்த நீலா 'மாமா! உன்னை இனிமே அத்தான்னுநான் கூப்பிடுவேன். ஏன் தெரியுமா? எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு' என்று கூறிச் சிரித்தாள். அது முதல் யார் கேலியையும் பொருட்படுத்தாமல் கிட்டுவை அத்தான் என்றே அழைத்து வந்தாள். அம்மாவின் வார்த்தையையும் பொருட்படுத்தவில்லை அவள்.

• • •

'வாடா! வா. ஊரிலே முரளி அப்பா, அம்மா எல்லோரும் சௌக்கியமா?' என்று குசலம் விசாரித்தாள் கல்யாணி.

'சௌக்கியந்தான் அக்கா நாளைக்கி மயிலாப்பூரிலே ஒரு கச்சேரி. வந்ததுதான் வந்தோம் உங்களையும் பார்த்துவிட்டுப் போவோம்னுதான். இப்படி வந்தேன்....'

'ஹூம் உனக்குக் கச்சேரிகூட நடக்கிறதா?' என்றாள் கல்யாணி அஸ்வாரஸ்யமாக.

கிட்டு பதிலே சொல்லவில்லை. கல்யாணியின் இந்த மாதிரிப் பேச்சை அவன் நினைவு தெரிந்தது முதல் கேட்டுப் பழகியிருக்கிறானே 'அக்காதான் இப்படி வெறுக்கிறாளே! அங்கு எதற்காகப் போக வேண்டும்?' என்று நினைக்கமாட்டான் கிட்டு. நினைத்தாலும் அவனைக் கவரும் காந்தம் நீலா என்னும் உருவில் அங்கு உலாவுகிறதே!

சற்றைக்கெல்லாம் கல்லூரியிலிருந்து வந்தாள் நீலா.

'யார் அத்தானா! ஏது அதிசயமாயிருக்கே!' என்றாள் அவள் வந்ததும் வாராததுமாய். அவளிடம் அக்கா தன் கடிதத்தைக் காட்டவில்லை என்பதைக் கிட்டு புரிந்து கொண்டான்.

'பெரிய அதிசயத்தைக் கண்டவள்! போடீ போய் கைகாலை அலம்பிண்டு காப்பியைக் குடிப்பாளா? கதைக்கிறாள்' என்றாள் கல்யாணி.

'போ அம்மா!' என்று சிணுங்கிக்கொண்டே உள்ளே போனாள் நீலா.

• • •

கச்சேரியை சுமாராக முடித்துக்கொண்டு வந்த கிட்டு 'நாளை மாலையே புறப்பட்டால நல்லது அதற்குள் நீலாவைத் தனியே சந்தித்துத் தன் காதலை அவளிடம் வெளியிட வேண்டும்' என்று சிந்தித்தபடியே தூங்க முயற்சித்தான்.

அடுத்த அறையிலிருந்து கிளம்பிய மெல்லிய குரல் அவனைக் கலைத்தது.

'கல்யாணி! கிட்டுவுக்கே நீலாவைக் கொடுத்துட்டா என்ன? அவளுக்கும் அவனைத்தான் பிடிச்சிருக்கே....'

'போதுமே பேத்தல்! கிட்டுவுக்குப்போய் நீலாவைக் கொடுக்கிறதாவது? இவள்படிப்பென்ன? அவன் படிப்பென்ன பிடில் வாசிக்கிறானும், கச்சேரி பண்றானும் கட்டினவளை வைத்துக் காப்பாற்ற முடியுமா அவனாலே? நீலாவுக்கு ஒண்ணும் அவனைப் பிடிக்கல்லே. அதான் அவள் அவனோடே அத்தனை வெகுளியாப் பழகறா. அவளுக்கு முரளியைத்தான் பிடிச்சிருக்கு. அவனோடே பேசறதிலே அவளுக்கு எத்தனை வெட்கம் தெரியுமா? ஹாட்டும் ஸூட்டுமா முரளி எப்படி...!'

'என்னமோ! எனக்கு ஒண்ணும் தோணல்லே'.

இதற்குமேல் ஒன்றும் பேச்சரவம் கேட்கவில்லை கிட்டுவிற்கு. அவன் மனம் அலை பாய்ந்தது.

ஆமாம் நீலாவை மணக்க நமக்கென்ன யோக்கியதை இருக்கிறது? அக்கா சொல்வதுபோல கல்லூரி மாணவியான நீலாவுக்கு அவள் மனம் விரும்பும் வாழ்க்கையை அளிக்க முடியுமா என்னால்? பாவம் வறுமையில் அகப்பட்டு அவள் திண்டாடு



கண்ணாடிப் பேர்வழி:—போன வருஷம் அடுத்த தெருவிலே இருந்ததே ஒரு வாசகசாலை அதேபோல நான் ஒன்று ஆரம்பிக்கலாம்னு இருக்கேன்.
மற்றவர்:—உனக்கு ஏதுடா பணம் அதுக்கு?
கண்ணாடிப் பேர்வழி:—பணம் என்னத்துக்கு ஸார்! அந்த வாசகசாலையிலிருந்து இரவல் வாங்கிண்டு வந்த புஸ்தகமெல்லாம் இருக்கே. போறுதா?

வதைத்தான் என்றால் காண முடியும். சரீர இச்சைக்காக அவள் வாழ்வையும் கெடுத்து விட்டு அதனால் அக்கா நான் எல்லோரும் மனம் நோவதா? வேண்டாம் அவள் முரளிக்குத்தான் பொருத்தமானவள். ஈசுவரா என் மாயையை விலக்கினாயே என் சுகம் பெரிதல்ல எனக்கு நீலாவின் நல் வாழ்வுதான் முக்கியம் என்றெண்ணிய கிட்டுவின் கண்களில் நீர் துளிர்த்தது.

• • •

'ஏண்டா கிட்டு! சீக்கிரமா ஒரு பெண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கோயேன்...' என்று ஆரம்பித்தாள் கல்யாணி

'வேண்டியதுதான்'– உணர்ச்சியின்றி பதிலளித்தான் கிட்டு.

'என்னடா மெதுவா சோல்றே நீ முதல்லே பண்ணிண்டாத்தானே முரளி கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலாம்? வயசுப் பெண்ணை வச்சிண்டு நான் எத்தனை காலம் காத்துண்டிருக்கிறது?'

'அதுதான் நானும் யோசிக்கிறேன். எனக்காக இல்லாவிட்டாலும் நீலாவுக்காகவாவது நான் சீக்கிரம் ஒரு முடிவுக்கு வர வேண்டியதுதான்' என்ற கிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

* * *

'ஏன் அத்தான்? முடிவிற்கு வந்துவிட்டீர்களா?' என்று கேட்டபடி மாடி ஹாலிற்குள் நுழைந்தாள் நீலா.

'ஓ! வந்தாயிற்றே'

'என்ன? உங்கள் முடிவு என்ன அத்தான்?' அவள் குரலில் ஆவல் தொனித்தது.

'இதில் என்ன சந்தேகம்? சீக்கிரம் ஒரு நல்ல பெண்ணாய்ப் பார்த்து கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதுதான்'.

'என்ன? வேறே பெண் பார்க்கப் போகிறீர்களா?' நீலாவின் கண்களில் நீர் நிரம்பியது.

'ஏன் இதில் உனக்கென்ன வருத்தம்?'

'ஒன்றுமில்லை' என்ற நீலா அங்கிருந்து போக முயற்சித்தாள் அவள் கண்களில் நிரம்பிய கண்ணீர் கன்னத்திலே வழிந்து தரையிலே விழுந்து தெறித்தது.

'இங்கே வா நீலா!' என்ற கிட்டு அவள் சேலைத் தலைப்பைப் பிடித்து இழுத்தான்.

'நீலா! நிஜத்தைச் சொல் நீ... நீ...ம் என்னை விரும்புகிறாயா?'

'ம்...இதைச் சொல்ல வேண்டுமா அத்தான்?'

'அட அசடே! ஒரு பட்டமும் வாங்காத இந்த பிடில்காரனையா காலேஜ் மாணவியான நீ விரும்புவது? முரளிக்கு என்ன குறைச்சல்?' என்று கேட்டான் கிட்டு தன் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு இரும்பு வேலி போட்டுவிட்டு.

'அத்தான் இதற்கு பதில் சொல்லத் தெரியாது எனக்கு! அம்மாவிடம் சொல்லி எப்படியாவது ஏற்பாடு செய்யுங்கள் அத்தான்!' என்றாள் நீலா துணிச்சலாக.

'நீலா! நான் உன்னை மணக்க முடியாது' கிட்டுவின் குரலில் உறுதி தொனித்தது.

'என்ன? முடியாதா? என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லையா அத்தான்?'

'நான் உன்னை என் சகோதரியாக நினைக்கிறேன் நீலா உன்னை நான் கல்யாணம் செய்துகொள்வது என்பது கனவிலும் நடக்காதது.'

'ஹும்...உங்கள் அன்பை நான் நம்பிஏமாந்தேன்' என்ற நீலா முகத்தைக் கைகளில் புதைத்து கொண்டு அழுதாள்.

அப்படியே அவளை அணைத்து தன் உள்ளத்து உணர்ச்சிகளைக் கொட்டிவிட வேண்டும் போலிருந்தது கிட்டுவிற்கு. அப்படியே செய்துமிருப்பான் ஆனால் கடவுள் சித்தத்தால் ஏற்பட்ட ஒரு நிமிடத் தடுமாற்றம் அவனை மாற்றியது.

'நீலா! இந்தப் பெண்களே இப்படித்தான் ஒரு வாலிபன் தன் மேல்பிரியமாயிருக்கிறான்என்று கண்டால் அவன் தன்னைக் காதலிப்பதாக நினைத்துவிடுவார்கள் நிஜத்தை சொல்கிறேனே! நீலா நான் ஊரில் நம்வீட்டிற்கு எதிர் வீட்டிலிருக்கும் பெண்ணை மனப்பூர்வமாக நேசிக்கிறேன் உன்னை எப்படி....'

'வேண்டாம் அத்தான்! என்னை மன்னித்து விடுங்கள்' என்றாள் நீலா தன்னை உறுதி செய்து கொண்டு.

'அதுதான் நானும் விரும்புவது. நீயும் முரளியும் நன்றாயிருக்கவேண்டும். கல்யாணத்திற்குப் பிறகு என்னைப்பற்றி நினைப்பாயா நீலா?' என்ற அவ

புருஷன்:—அடுத்தாத்துக்குப் போறு எத்தனை நாழி பேசறது? பார்த்தால், காலணா பிரயோசனமிருக்காது......
மனைவி—ஆமாம்...எல்லாம் உங்களைப் பத்தித்தான்!

னுக்கு நீலா பதில் சொல்லாமலே போய்விட்டாள்.

அவள் அங்கிருந்து போன பிறகு தலையில் 'மடீர், மடீர்' என்று அடித்துக்கொண்டான் கிட்டு.

அன்றிரவே 'ரொம்ப அவசரம்' என்று கூறி விடை பெற்றுக் கொண்ட கிட்டுவை அதிசயத்தோடு பார்த்தாள் கல்யாணி.

• • •

மறு வருடம் அதே தினம்.

அன்றைய பேப்பரை ஈஸிசேரில் சாய்ந்தபடி படித்துக்கொண்டிருந்த முரளி ஏதோ ஒரு இடத்திற்கு வந்தவுடன் எழுந்து உட்கார்ந்துகொண்டு உன்னிப்பாய் கவனித்துப்படிக்க ஆரம்பித்தான். சற்றைக்கெல்லாம் தன் மேல் துண்டினால் கண்களைத் துடைத்துக்கொண்டான் அவன்.

காப்பி டம்ளரோடு அங்குவந்த நீலா அவனைப் பார்த்ததும் வியப்போடு 'அட, அழும்படியா என்ன சமாசாரம் வந்திருக்கு பேப்பரிலே? எந்த பெரிய மனுஷனாவது செத்துப் போயிட்டானா?' என்றாள்.

'ம்... கிட்டு அண்ணா...'

'என்ன? என்ன? கிட்டு அத்தானா? இருக்கற இடத்தைப் போட்டிருக்கானா? இங்கே கொடுங்கோ பார்க்கலாம்' என்று படபடப்போடு கூவிய நீலா பேப்பரை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு சமையலறையுள் நுழைந்தாள்.

சற்றைக்கெல்லாம் திரும்பிய அவள் 'என்னன்னா! பேப்பரிலே கிட்டு அத்தானின் நாமதேயத்தையே காணுமே!' என்றாள்.

'கிட்டுவா? அவன்தான் போயிட்டானே! நீதான் அவனைக் கொன்னுட்டே' என்றான் முரளி படபடப்புடன்.

'என்னது? நான் கொன்றேனா?' என்றாள் நீலா ஒன்றும்புரியாமல்.

'பின்னே என்னவாம்? உன்னால் தான் அவன் ஓடிப் போயிட்டான். எத்தனை நாளைக்குத் தான் மறைத்துவைப்பது? உன்னையே அவன் நேசித்தான். நீ தான் அவனை வெறுத்தே!....'

"என்ன நீங்கள் பேசுவது புதிதாயிருக்கிறதே!"

"ஒன்றும் புரியவில்லையா? இந்தா இதைப் படித்துப் பார். புரியும்" என்ற முரளி உள்ளே சென்று ஏதேதோ பெட்டியைக் குடைந்து ஒரு கடிதத்தை எடுத்து அவள் முன்பு வீசினான்.

பதைபதைக்கும் உள்ளத்தோடு அதைப் பிரித்தாள் நீலா. அதன் மடிப்புக்களெல்லாம் இற்றுப் போயிருந்ததிலிருந்து அதை அடிக்கடி யாரோ பிரித்துப் பார்த்திருக்கிறார்கள் என்று புரிந்தது அவளுக்கு. கடிதத்தில் பல இடங்களிலும் நீரினால் இங்கி கரைந்திருந்தது. அது நீராலா? அல்லது கண்ணீராலா? சுமார் ஒரு வருடத்திற்கு முன் அவள் திருமணத்திற்கும் முற்பட்ட தேதியிடப்பட்டிருந்தது அதில். ஆவலுடன் அதைப் படித்தாள் நீலா. அது பம்பாயிலிருந்து எழுதப்பட்டிருந்தது.

"சிரஞ்சீவி முரளிக்குக் கிட்டுவின் ஆசீர்வாதங்கள்.

மதராஸில் கச்சேரி சுமாராக முடிந்தது. அங்கு நீலா, அக்கா, அத்திம்பேர் யாவரும் நலம். நான் இக்கடிதத்தை பம்பாயிலிருந்து எழுதுகிறேன். அனேகமாய் நாளை இங்கிருக்க மாட்டேன். எங்கே போவேனோ எனக்குத் தெரியாது.

சகோதரா! நான் நீலாவின் மேல் கொண்ட காதல் நீ அறிந்ததே! என் வாழ்வைக் குறித்து நான் கண்டிருந்த கனவுகளை எத்தனையோ முறைகள் உன்னிடம் கூறியிருக்கிறேன். ஆனால், அந்தக் கனவுகள் நினைவுகளாகாமலேயே மடிகின்றன. அக்காவின் விருப்பத்தை அறிந்த நீ, எனக்கு நீலாவை எப்படியும் மண முடித்துவைப்பதாகக் கூறியிருக்கிறாய். ஆனால் என் மனச்சாட்சி கூறுகிறது நான் கண்ட கனவுகள் எத்தனை ஆதாரமற்றவை என்பதை. ஆம், நீலா என்னைச் சிறிதும் விரும்பவில்லை. அவள் உன்னைத்தான் நேசிக்கிறாள். உண்மை. இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? படித்த-பட்டம்பெற்ற நவநாகரிக இளைஞனை, உன்னை அவள் விரும்புவது இயற்கைதானே? இப்பொழுது என் நிலைமை எனக்குப் புரிகிறது. ஆனால் நீலாவை நேசித்த என் மனம் இனி யாரையும் விரும்பாது. இதுசத்தியம். அவளருகில் இருந்துகொண்டே என் மனதைத் திடப்படுத்திக்கொள்வது என்பது முடியாத காரியம். எனவே இந்த ஊரைவிட்டு விலகுகிறேன். இந்த உலகைவிட்டு நான் போகும்வரை இப்படியே வாழ்வேன்.

மிஸ் மாலதி

ஆசிரியர் வஸந்தன் எழுதிய ஒரு நாவல்: படிக்க இனிய கதை: வேகமுள்ள கதை: ஓர் அத்தியாயத்திற்கும் அடுத்த அத்தியாயத்திற்கும் இடையே வாசகர்களின் உள்ளத்தே அலைபுரளும்படி செய்யும் கதையின் அமைப்பும் இன்னபடிதான் கதை முடியும் என்று ஊகிக்க முடியாத போக்கும் எப்படி முடியுமோ என்ற ஆவலைத் தூண்டும் கட்டங்களும் கொண்டது.

விலை ரூ. 1—8—0

லைப்ரேரிகளுக்கு ஏற்றது.

கிடைக்குமிடம்:-

All General Book Sellers,
All Railway Book Stalls and
சுதேசமித்திரன் புக் டிபோ,
சென்னை.

144244

"நீங்க போட்டு வந்தீங்களே, பாக்கு பொட்டலம், அதுமாதிரியே போலி தயாரித்து ஒருவர் விற்பனை பண்ணி வந்தாரே, அது என்ன ஆச்சு?"

"எல்லாரும் நம்ம பாக்குத்தான் அது என்று நினைத்துட்டாங்க..."

"அடடா! அப்புறம்?"

"அதனாலே அவர் கம்பெனியும் படுத்துப் போச்சு!

சகோதரா! எனக்காக நீ செய்யவேண்டிய கடமைகள் இரண்டுள்ளன. வாழ்விலே பற்றற்றவனாய் இருந்த என்னை உன் அன்பினால் மலரச்செய்தாய். நான் ஏதோ ஓரளவிற்கு மனிதனாய் இருப்பது உன் அன்பினால் தான். ஆதலின் என் வேண்டுகோளைப் புறக்கணிக்க மாட்டாய் என நினைக்கிறேன். முதலாவதாக 'பட்டம் பெற்றவன்' என்பதற்காக நிறைய வரதக்ஷிணை வரும் இடங்கள் எத்தனை வந்தாலும் பணத்தில் மயங்காது நீலாவை மணந்துகொண்டு அவளைத் திருப்திசெய். அக்காவையும் திருப்திபடுத்துவது உன் கடமை. இரண்டாவது என்னைப் பற்றி அவர்களிடம் பேச்செடுக்காதே.

என் பிரிவை நினைத்து வருந்தாதே! பிறந்தபோது யாருடன் பிறந்தேன்? இறக்கும்போது யாருடன் போகப்போகிறேன்? பின் நடுவில் மட்டும் துணையை நாடுவானேன்? முடிவாக ஒரு விஷயம்: நீலாவை மனம் நோகாதபடி காப்பாற்று. இது ஒன்றுதான் என் கடைசி விருப்பம்...."

கடிதத்தைப் படித்த நீலா அதைமுடிக்காது அப்படியே முகத்தில் பொத்திக்கொண்டு நெஞ்சு வெடித்துவிடும்போலக் கதறினாள்.

"நீலா! நீலா! அழாதே. அவன் வேண்டுகோளைப் புறக்கணித்து விட்டேன். உன்னை நோகச் செய்துவிட்டேன். ஹூம்!..ஒரு வருடகாலமாக மறைத்து வைத்திருந்தேன்...இன்று என்னால் பொறுக்கமுடியவில்லை..ம்..இதோ பார்! இந்த விஷயத்தைப் படி." என்ற முரளி அன்றைய பேப்பரை எடுத்துவந்து அவளிடம் கொடுத்து ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டினான்.

சுவாமி கிருஷ்ணானந்தா மரணம்

காசி......

"நேற்று பிற்பகல் இரண்டு மணிக்கு காசி 'அன்பர் மட'த்தைச் சேர்ந்த சுமார் முப்பது வயதுள்ள இளம் சந்யாஸி கிருஷ்ணானந்தா அகால மரணமடைந்தார். சுமார் ஒரு வருடத்திற்குமுன் மேற்படி மடத்தில் வந்துசேர்ந்த கிருஷ்ணானந்தாவின் பூர்வாச்சிரமப் பெயர் கிருஷ்ணமூர்த்தி என்பதாகும். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்று யூகிக்கப்படுகிறது. இதுவரை யாரிடமும் தம் பூர்விக வரலாற்றைத் தெரிவிக்காத அவர் மரணத்தறுவாயில் 'ஆண்டவனே! நீலாவையும் முரளியையும் காப்பாற்று' என்று பிரார்த்தித்துக் கொண்டார். இதன்பின் அவரது ஆவி எத்தகைய துன்பமுமின்றி பிரிந்தது. மேற்படி மடத்தில் 'மிகவும் உத்தமர்' என்று அனைவராலும் போற்றப்பட்ட அவரது மரணத்திற்குக் காரணம் இருதய பலஹீனம் என்று தெரிகிறது.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைவதாக!"

"ம்....அவர் தெய்வம்! நான் குற்றவாளியில்லை" என்ற நீலா துக்கத்தைத் தாங்க முடியாமல் திணறினாள்.

"நீலா! நேற்று உன் பிறந்த தினமில்லையா?" என்ற முரளி துக்கத்தால் விம்மினான்.

நீலாவின் சிந்தனை ஓடிற்று. "அத்தானை மணந்திருந்தால் இன்று நான்...." அதற்குமேல் போகவில்லை. ஆனால் அவள் மனம் ஏதோ ஒரு நினைவினால் நிரம்பிற்று. "ஆம், கிட்டு அத்தான் அவளைத் தன் உயிரினும் மேலாக நேசித்தார்."

நீலா அழுதாள். முரளியும் அழுதான். விஷயங்களை அறிந்தபின் கல்யாணி அடைந்த துக்கத்திற்குமுன் அவர்கள் துக்கம் எம்மாத்திரம்?

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

★

மஹாராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ 5. மூன்று கேள்விகளுக்கு ரூ.2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தியாகராயநகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417.



பிள்ளைக் கனியமுது

13

யார் எஜமானன்?

★

அரும் பாலகா முனம் பூமணஞ்
 சொற் பொருளாக உயிர்
கரும் பாஞ்சுவை யெள்ளும்
 எண்ணெய்யும் போலொத்த காதலரைப்
பெரும் பாலில் நல்லன்னங்
 கங்கா சலத்தைப் பிரிப்பதுபோல்
கரும்பாம் புலவர் யமனுகச்
 செக்கெனத் தோன்றினையே

—பலபட்டடைச் சொக்கநாத புலவர்.

'நடிப்பிலே பிறந்தவனாக இருந்தாலும் குடும்பத்து ரகளையை முகத்தில் கண்டுபிடித்துவிடலாம். உங்களுக்குள் என்ன சண்டை?' என்று என்னை விசாரித்தபோது நான் திடுக்கிட்டேன். நான் எவ்வளவோ சாமர்த்தியமாகத்தான் நடித்தேன். வீட்டில் கோபித்துக் கொண்டு வந்திருப்பது என்னமாகத் தெரிகிறதோ. என்று மேல் உத்தியோகஸ்தர் ! இவ்வாறு கேட்கவே, நடந்த விவரங்களைச் சொன்னேன். எனக்குப் பரிந்து பேசாமல் அவர் தத்துவம் பேசினார்.

எனக்குள்ள கோபத்திற்கும், நான் காந்திமதியை அடித்ததற்கும் காரணங்கள் என் மனம் என்றார். மனசிற்குள்ளாக ஒரு தனி உலகம் இருக்கிறது என்றார். முதலில் சிரிப்பு வந்தது. உண்மையில் காந்திமதி சொல்லிய சொற்கள் என் மனசை வாதனை செய்ய வில்லையாம்; காந்திமதி என்னிடம் காட்டிய அலட்சியம், குழந்தையிடம் காட்டும் பரிவு இதுதான் என் மனசிலே புகுந்து தொல்லை தருகிறதாம். முக்கியமாக காந்திமதி குழந்தையின் தாயாக நடமாடினாளே தவிர, மனைவிக்குரிய ஸ்தானங்களை வகிக்க வில்லை; ஆகவே எனக்குள்ள உடமையை, என் குழந்தை பறித்துக் கொண்டதில் நான் பொருமைப்படுகிறேன்; குழந்தையிடம் கோபத்தைக் காட்ட இயலாதக் காரணத்தால்மனைவியிடம் கோபத்தை பன்மடங்கு காட்டுகிறேன். அன்றுடம் என் சுக சௌகர்யங்களைக் கவனிப்பதே தன் தொழிலாக வைத்திருந்த காந்திமதி வேலைத் தொல்லையாலோ அறிந்தும் அறியாமலும் என்னை கவனிக்க மறந்து போனாள். தன்னைக் கவனிக்கவில்லையென என் உள் மனது குறை கண்டது.அதை சொல்ல முடியாமல் அவள் சிறு குற்றத்தைப் பெரிது படுத்திற்று —இத்தனையும் மேல் உத்தியோகஸ்தர் மனஸ்தத்துவ முறையில் சொல்லச் சொல்ல எனக்கும் அது உண்மையென்று படுகிறது.

அவர் முன்னிலையில் புருஷன் என்ற கௌரவத்தில் நான் விறைப்பாக இருந்துவிட்டேன். தனித்திருந்த சமயம் என் உள் மனசும் வெளி மனசும் தர்க்கம் செய்து கொண்டன. எனக்குள்ள இடத்தை என் குழந்தை பற்றிக் கொண்டதன் காரணமாகவே, காந்திமதியை அவள் செயலை வெறுக்கிறேன் என்ற முடிவுக்கு வந்தேன். ஒரு குழந்தை பெற்றவள் கணவனை மறக்க ஆரம்பிக்கிறபோது இன்னும் குழந்தைகள் பிறந்தால் எனக்கு அவள் அன்பில் பங்கே கிடையாதோ என்று எண்ணுவேன். கோபித்துக் கொண்டு போன தினத்தில் ஓட்டலை நாடிப் போய் தாங்காமல், நீ இரங்காயெனில் வீட்டில் தாங்கி விழித்தேன். அவள் சமாதானம் செய்து மறுநாளுக்கு மறுநாள் வீடு புகுந்தேன்.

முன்பொரு சமயம் கோபித்துக் கொண்டு போனதும் என்னை தேடி பம்பரமாகச் சுற்றிய காந்திமதி இப்போது நான் இருக்கும் வீடு தெரிந்தும் கூப்பிட வரவில்லை. பிள்ளை பெற்றவர்களுக்கு நெஞ்சமுத்தம் ஜாஸ்தி; புருஷனே கதி என இருக்க வேண்டுவதில்லை. உலகமும் பிள்ளையும் குட்டியுமாக அலைய விட்டுவிட்டுப் போய்விட்டான் என்று கணவனையே திட்டும். உலகத்திற்கு பெண்களை கண்டுவிட்டால் நியாயம் மறைந்து அநியாய வழியிலேயே பேசும்.

என்னை வந்து மாமனாரும் மற்றும் இரண்டொருவரும் சமாதானம் செய்து அழைத்தார்கள். நானும் பிகு செய்து கொண்டு போய்ச் சேர்ந்தேன். சண்டை போட்டுக் கொண்ட தம்பதிகள் மீண்டும் சமாதானம் அடையுங் காலத்து அதிகமான பாசத்தை காட்டுவார்கள். காந்திமதி 'நான் வீட்டிற்கு வந்ததும் என்னிடம் பேசுவாளா? எனக்கு வேண்டுவன டயப்படி நடந்தது. கண் விழிக்குமுன் பல்பொடி காத்திருக்கும்; நான் கேட்காமலேதுணிமணி வந்துவிடும்.

'இலை போட்டாயிற்று என்று சொல்லடா கண்ணு'.

எப்படிஇருக்கிறது வேடிக்கை? சிறு பிள்ளையிடம் சொல்லுவதாக பாவனை குழந்தை வருவதற்கு முன்னால் நானும் சுவரைப் பார்த்துக் கொண்டு 'இலை போட்டாச்சோ?' என்பேன்.

'போட்டிருக்கிறதே' என்று சுவரைப் பார்த்துப் பதில்வரும். சுவருக்குள்ளா கௌரவந்தான் குழந்தைக்கு வந்திருக்கிறது.

சண்டை போட்டு, சமாதானம் ஆகிறபோது நடக்கிற பேச்சுக்கள்தான் தாம்பத்திய வாழ்விலே ரசமான பேச்சுக்கள். நேருக்கு நேர் கண்ணொடு கண் பார்த்து மனசைச் சொல்லாமல் சுற்றி வளைத்துச் சொல்வதிலே ஆனந்தம் இருக்கிறது; சமயாசமயத்தில் சண்டையும் இருக்கிறது.

'வீட்டிலே உளுந்து இல்லையடா கண்ணு. சொல்லு'

'பணம் இல்லையடா கண்ணு. அம்மாவிடம் சொல்லு'

'எங்காவது கடன் வாங்கியாவது.'

வார்த்தை முடியுமுன் 'கடன் வாங்குவதை அவனிடம் சொல்ல வேண்டுமா?' என்று எரிந்து விழுவேன்.

அழுகையின் ஊடாக, 'உங்களுக்குத்தான் என்னைக் கண்டால் வேப்பங் காயாக இருக்கிறதே. ஏன் வம்பும் தும்பும் பேசணும்' என அழுவாள்.

'நீலி அழுகை எதுக்கு. நேரடியாகச் சொல்லுகிறது. அவன் என்ன தூது. இக்கிணிப் பயல்' என்று திட்டும்போது மேல் உத்தியோகஸ்தர் சொல்லிய மனஸ் தத்துவம் நினைவில் வரும்.

'இதோ பாருங்கோ. உங்களை மாலையிட்டு கண்ட பலன் அழுகைதானே? வேறே என்ன சுகம்? இந்த வீட்டிலே அழுகைதான் மிச்சம்.'

கோவென அழும்போது, அதற்கு புருஷன் காரணம் எனச் சொல்லி அழும்போது, காரண

கர்த்தாவாக அதுவரை இல்லாதவன் இருந்துதான் விடுவோமேயென்று திட்டவோ, மட்டரகத்தில் பேசவோ சமயாசமயத்தில் கை நீட்டவோ கட்டன்கள் பிறக்கும். நானும் மனிதன் தானே; எனக்குள்ள மிருகத்தனம் விதிவிலக்காகுமா. மீண்டும் வம்பு அதிகமாகும் கண்ணீர் பெருக்கு; நாலு நாள் காராம்புராம். காதல் பேச்சு, சரசம், குழந்தையின் மூலமாகப் பேச்சு . . .

தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்தேன். என மனசிலே உள்ள கோபம் தாபம், வைஷம்யம்எல்லாவற்றையும் அடியோடுதுரத்தி விட்டு காந்திமதி எனக்குள்ளவள் மட்டுமன்றி தாரத்தின் பதவியைவிட தாயின் பதவி உயர்ந்தது என்று முடிவு கட்டிப் பெருமையுடன் வாழத் திட்டமிட்டேன். இதுதான் கல்யாணமானவர்களுக்கு முடிவாக நேரும் கதி என்றும் அறிந்தேன். சமயாசமயங்களில் சுயரூபம் தலை தூக்கும்போது அறிவோடும் அன்போடும் அடக்கிக் கொண்டேன்.

காட்டிலே புகுந்து துறவு நெஞ்சத்தோடு வாழ்வதைவிட இல்லத்திலே புகுந்து இனிமை நிறைந்த நெஞ்சொடு வாழ்வது மிகமிக கடினம். துறவியைவிட, இல்லறவாசி பலவகை துன்பங்களை வென்றவன். தன்னை மட்டுமன்றி தன்னைச் சார்ந்தவர்கள் மனசையும் வென்றவனாக வாழ்தலே இல்லறம் என்பதை உணர்ந்தேன். உணர்ந்தேன். முக்காலும் உணர்ந்தேன்.

ஆனால். . .?

ஆனால் போட்டுவிட்டதும் நீங்கள் சிரிக்க ஆரம்பிக்கிறீர்கள்; என் தோல்வியைக் கண்டு நகைக்கிறீர்கள். நான் ஆனால் போடுவது சிந்திப்பதற்காக. தருமம் நியாயம், அன்பு இவ்வழிகளில் செல்பவனுக்கு எத்தனைத் துயர்கள் காத்திருக்கின்றன. தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும் என்பது உண்மையாயிற்று. குடும்ப தர்மத்தில் சந்தோஷத்தில் ஒரு புல்லுருவி வந்து குடி புகுந்ததே. இன்னும் விளக்கமாகவே இதைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

தருமம் தழைத்த நாளில் இந்த நாட்டில் இந்தக் கேள்விக்கே இடமில்லாமல் எல்லோரும் எஜமானர்களாய் இருந்தார்கள். எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாய் இருந்தார்கள். ஆனால் காலம் செல்லச் செல்ல, யார் எஜமானன் என்ற கேள்வி நம்முடைய அரசியலில், சமூகவியலில் இங்கே புகுந்து குடும்ப இயலுக்குள்ளும் வந்துவிட்டது. நாட்டின் ஏற்றத் தாழ்வுக்குக் காரணம் அறிஞர்கள். முக்கியமாக கவிகளே பொறுப்பு. நம்முடைய கவிஞர்களில் பெரும்பாலோர் பெண்ணின் மனசை அறிந்தவர்கள். ஆண்களின் வேதனை அறியாதவர்கள். குடும்ப விளக்கென்றும் அறிவின் சுடர் என்றும், பொறுமையின் உரு, கடமையின் தரு, அப்படி இப்படியென பெண்களைப் புகழ்ந்து ஆண்களுக்கு வக்காலத்து வாங்கவே ஆள் இல்லாது போய்விட்டது.

நான் குடும்பம் செய்ய ஆரம்பித்த நாள் முதலாய், அல்லது நான் சிறுவனாக இருந்த நாள் முதலாய் கவனிக்கிறேன். பெயரை வாங்குபவள் பெண்மணி; உயிரை வாங்குகிறவள் பெண்மணி; பெயரையும் உயிரையும் கொடுத்துக் காப்பாற்றியும் 'சபாஷ்' எனத் தட்டிக் கொடுப்பார் இல்லையே. ஆண்களைத் தட்டிக் கொடுக்காது போனாலும், மட்டந்தட்டாமல் இருக்கவேண்டாமா? வீட்டிலே குழந்தை பிறந்துவிட்டால், யஜமான் என்ற பட்டத்தைத் துறப்பவன் தகப்பன் நான் பட்டம் இழந்தேன்; பதவி இழந்தேன். பலகாலும் கஷ்டம் அனுபவிக்கிறேன். எல்லாம் பிள்ளையின் பிரதாபம்.

இந்தக் கஷ்டம் என்றுமே இருந்திருக்கிறது. பலபட்டடை சொக்கநாதப் புலவர் ஆண்கள் படுகின்ற கஷ்டத்தை பெண்கள் படுவதாகச் சொல்லுகிறார். கவிதையில் நாயகிபாவ வழிபாடு ஏற்பட்டது. எதையும் பெண்

களின் கண்கொண்டு பார்க்க முற்பட்டார்கள் கவிகள். குழந்தை பிறந்தால் தனக்குக் கஷ்டம் வந்ததாக கவி சொல்லுகிறார். இது உண்மையா? பொய். கவியின் கற்பனையென்பதை நான் சொல்லும் விதங்களிலிருந்து நீங்கள் தெரியப் போகிறீர்கள் கவிதை சொல்லுகிறது.

"அப்பா மகனே, அருமையான பாலகனே எந்த நேரத்தில் நீ பிறந்தாயோ. உன்னைப் பெற்றது முதல் என்ன நேர்ந்தது சொல்லுகிறேன் கேள். நானும் அவரும் மலரும் மணமுமாக இருந்தோம்; நீ வண்டு போல வந்து மலரையும் மணத்தையும் பிரித்தாய். அம்மட்டுமா? சொல்லும் பொருளுமாக இருந்தோம். புலவனைப் போல வந்து எங்களைப் பிரித்தாய்; கரும்பும் சுவையுமாக இருந்தோம்; நீ கரும்பாலையாக கசக்கிப் பிழிந்தாய்; எள்ளும் எண்ணெயுமாக இருந்தோம்; செக்குலக்கை ஆனாய்; பாலும் தண்ணீருமாக இருந்தோம்; அன்னப் பறவையாக வந்து பிரித்தாய்."

இவ்வளவு தூரம் கசப்பு ஏற்பட்டு, குழந்தையை செக்குலக்கை, வண்டு, புலவன், கரும்பாலை, என்றெல்லாம் சொல்லுகிறாளாம். பெண் பெண்கள் சொல்லுகிற சொல்லா. என் போன்ற ஆண் வர்க்கம் சொல்லுகிற சொல்லை, சொல்ல வேண்டிய சொல்லை பெண்கள் வாயிலாகச் சொல்வதில் கவிகளுக்கு ஓர் மகிழ்ச்சி. சை, தைரியத்தோடு நான் நினைக்கிறேன் என்று சொல்லும் தைரியம் கவிகளுக்கு (பெண்மை நிறைந்தவர்களுக்கு) ஏது? எனக்கு மட்டும் கவிதை எழுதும் வன்மை இருந்தால் 'நாயகி பாவத்தோடு' பார்க்கலாம். முரட்டு நாயகன் பாவத்திலே பாட முடியும் என்பதை நீங்களே சொல்லுவீர்கள்.

நான் காலையில் எழுந்திருக்க முடியவில்லை; அல்லது எழுந்திருக்கிறேன் இரண்டுக்கும் மூல காரணம் கண்ணன் பயல். நான் காப்பி சாப்பிட முடியவில்லை. கண்ணனே காரணம். பாரதிக்கு கண்ணன் பல நிலையிலும் கவிதைக்குப் பொருளாக இருந்தது போலவே என் துயர்களுக்குப் பிறப்பிடமாக இருந்தான்.

'ஏ காந்திமதி காலை பேப்பர் எங்கே?'

'வாசல் ரேழியில் கிடக்கிறது'

'எடுத்து வா'

'ராஜூப் பயல் கையில் இருக்கிறான்.'

நான் போய் எடுக்கப் போகிறேன். சில நாள் நான் பேப்பரை படிக்கும் முன்பாக முன்னதாகவே அவன் கிழித்திருப்பான். பல் துலக்கப் புறப்பட்டால் எனது பிரஷ் அவனது விளையாட்டுப் பொருள். பற்பொடி டப்பாவில் தாள வாத்திய லய வின்யாசங்கள். பல்லைக் கடித்துக் கொண்டு பல் துலக்கி வந்து டவலை எடுக்கப் போனால், பயல் விரித்திருப்பான்; தலை துவர்த்த உடுத்திய வேஷ்டியே டவலாக மாறும்.

'வெந்நீர் எங்கே?'

கத்திப் பயன் இல்லை. காந்திமதி இருக்கும் இடம் சென்று

> அடுத்த வாரம்
>
> ★
>
> போட்டோ எடுக்கிறார்கள்

விளையாட்டாக, 'அம்மணி அவர்களே நான் எப்போது குளிக்கிறது? நான் எப்போது உணவருந்துவது. இந்த ஏழை எப்போது அலுவலகம் செல்லுவது?' என்று சொல்வேன்.

'சொல்லுடா கண்ணு அப்பாவுக்கு. போய் குளி; சாப்பிடு; ஆபீசுக்குப் போய் சம்பாதியின்னு சொல்லு'

'ஐய்யே. நீங்களும் பச்சைக் குழந்தை. உங்களை குளிப்பாட்டி விடணும்.'

இந்த வேளையில் நீ இரங்காயெனில் வருவான், 'யாரு குழந்தையாம் மீனு அக்கா. மணி வர வர குழந்தையாகத்தான் ஆகிறான்' என்று சொல்லும்போது, குளிக்கும் அறையில் நுழைவேன்.

நீ இரங்காயெனில், பாடுவான்.

"அப்பாவின் கோபமடா—ராஜா
ஆகாத கோபமடா
அதனை நீ கொள்ளாதே—ராஜா
அசட்டுப் பேர் வாங்காதேடா."

இவ்வாறு அவன் பாடுவதை உள்ளூர ரசிக்கும்போது எனக்கு வெந்நீர் இருக்காது. மனைவி மேலுள்ள கோபம் வேலைக்கார வள்ளிமீது திருப்பும். 'ஏவள்ளி உனக்கென்ன கொள்ளை, வெந்நீர் எங்கே?' என்று வெளியே வந்து கேட்டால் அவள் சொல்லும் பதில் இது.

'இட்டாச்சு. புடி புடி. கள்ளப்பயலை புடி.'

எப்படியிருக்கும். 'இட்டாச்சு.. பட்டாச்சு.. காதிலே விழலே வெந்நீர் எங்கே?'

'வெந்நீர் போட்டுருக்குது. குழந்தைக்கு எண்ணெய் கொடுத்திருக்கு வைச்சிருக்கிறேன்.'

'இந்தா வள்ளி அவுங்களுக்கு வெந்நீர் இல்லை எண்ணெய் குடிச்ச குழந்தைக்காக வெந்நீர் என்று சொல்.'

'இதைச் சொல்லணுமா? தானே தெரிஞ்சுக்கிறார்.'

குளிர்ந்த தண்ணீரிலே கோபக் கனலை குளிரவிட்டேன். வெந்நீர் கிடையாத பொருளாகிவிட்டது! வெந்நீர் மட்டுமா. நல்ல சாதம் குழம்பும் அப்படியே.

'இது குழம்பா..' என்று கத்தினால், காந்திமதி சும்மா இருக்க 'அட ஏஞ்சாமி கத்தறே. சின்ன எஜமான் தூங்குறார்' என்று பதில் வரும்.

'இது என்ன நீரக ரசம்?' என்று கேட்டேன்.

'இது என்ன பதில்?'

'எத்தனை நாள் சொல்லணும். அவன் எண்ணெய் குடித்தால் நான் பத்தியமாகச் சாப்பிட வேண்டுமா?'

'நான் எதற்காக பத்தியச் சமையல் சாப்பிட வேண்டும்? வேறே ஒரு சாம்பார், தக்காளி ரசம்..'

'என்னாலே இது வைக்கவே நேரமில்லை.'

ஏதோ உண்டு உதறி எழுந்து டிபன் பாக்ஸை தேடினால் அகப்படாது.

'எங்கே டிபன்?'

'சாப்பாட்டே வெல்லக் கட்டியா இருக்குதே எங்கே டிபன் செய்ய விடறான்.'

'அப்போ பட்டினி கிடக்கணுமா?'

'ஆபீசிலே சாப்பிடுங்கள் காண்டீனிலே டிபன் சாப்பிடறது.'

'நல்ல பிள்ளை வந்து வாச்சுது. வாய் ருசியும் கைருசியும் போச்சு... என் கோட்டு எங்கே?'

'பழைய கோட்டுத்தான் போடணுமா?'

'அதை வித்துட்டாயா?'

'நேத்து கிலுகிலுப்பையும், வெண்கலக் கெண்டியும் வந்தது.'

'கோட்டை வித்து பால்குடிக்க கெண்டி வாங்கினே. இருக்கிற கெண்டிகளில் கொடுக்கிறது' வெள்ளிக் கெண்டி மூணு கிடந்தது.

'அதை அடிச்சு நொறுக்கிறான்.'

'ஒரு நாளைக்கு இந்த வெண்கலக் கெண்டியாலே உந்தலையை உடைப்பான் நடத்துங்க சாம்ராஜ்யம்..' என்றவன் புதிய கோட்டை எடுத்துப் போட்டு விடுவேன்.

'இன்றைக்காவது பனிக் குல்லாயும் மாந்த மாத்திரையும் மறந்திடாமல் வாங்கி வாருங்கள்.'

'நான் பதிலே பேசாமல் ஓடுவேன். ஆபீசில் போய் உழைத்து ஓட்டலில் உண்டு, கடன்பட்டு மாந்த மாத்திரையும் பனிக் குல்லாவும் கொண்டு வருகிறவனுக்கு மரியாதை என்ன?

'என்ன சாமி டக்குடக்குன்னு நடக்கிறீங்க. மெதுவா நடங்க. இவ்வளவு நேரம் ஆட்டித் தூங்க வைச்சப் பாடு உங்களுக்கென்ன தெரியும்?'

அலுத்துச் சலித்து வந்த எனக்குக் கோபம் கொப்பளிக்கிறது, 'நீ யாரு கேக்கிறது?' என்று இரைந்தேன். 'வேலைக்கார வள்ளி நான். நீங்கயென்ன நான் சொல்லச் சொல்ல பொய்க்கால் குதிரைக்காரன் மாதிரி நடக்கிறீங்க' என்பாள்.

'இது என் வீடு. நீ சத்தம் போடாதே.'

'பாருங்க மீனு அம்மா; ஐயா இனமில்லாம சண்டைக்கு வர்றதை. என் கையே கடுத்துப் போச்சு.. தொட்டிலை ஆட்டி ஆட்டி.'

'முழிக்கட்டும் ராஜூப் பயல். அப்போ அவங்களிடம் தள்ளினாத்தான் தெரியும். ராத்திரியும் ஓட்டல் எடுப்பு வரும்படி நேரு'

'நீ வைச்ச வேலையாளுன்னு நினைப்போ? வந்தவனுக்கு காப்பி இல்லை ஒரு மண்ணும் இல்லை.'

'பூட்சு காலை ஓங்கித் தட்டிக் கொண்டு மாடிக்குத் தாவுவேன். 'இந்தாங்க' என்ற குரல் வரும். அந்தக் குரலில் பனிக்கட்டியின் குளிர்ச்சி இருக்கும்.

'என்ன?'

'கொஞ்சம் சொரசம் சாப்பிடுங்களேன்?'

'சொரசம் விளையாடறயா?'

'பயலுக்கு ஓமம் வைச்சு அறைச்சு மருந்து போட்டினேன். பசிக்கு நல்லது குடியுங்களேன்.'

'ஏன் நீ வயிறு வெடிக்கசாதம் வகைக் கறி போட்டதுக்கு மருந்து வேறே கேடு. பசி என் பெருங்குடலை திங்குது.'

சிரிப்புடன், 'ஓம மருந்து இல்லே காப்பி குடியுங்க' என அன்பாகத் தருவாள். அத்தனை கோபமும் போய்விடும். அவள் சிரித்தோ சிரிக்காமலோ என்னருகில் நிற்கிறபோது நான் இந்த உலகத்தை மறந்து விடுகிறேன். நீ இரங்காயெனில், 'மணி இருக்கிறானா?' என்று கத்திக் கொண்டு வந்து நிற்பான். கீழே வேலைகார வள்ளி, 'இந்தா சார் கத்தாதே. எஜமான் தூங்குறார்' எனக் கத்துவாள்.

'அப்படியா? எஜமானன் தூங்குறாரா? ஆபீஸ் போகலை?'

'இந்த வீட்டிலே தூங்குகிறவர் யார்? அதோ தொட்டிலிலே.'

'சின்னப் பயலா?' எனச் சிரிப்பு.

'அட அவருதான் எஜமான். சிரிப்புக் காட்டி முழிக்க வைச்சுடாதே சார்.'

'இவந்தானா வீட்டு எஜமான். பெரிய எஜமான் ஆபீஸிலே இருந்து வரலே'

காந்திமதி மாடியிலிருந்து வந்து கொண்டே, 'வந்துட்டாங்க' என இறங்குவாள்.

'பார்த்தாயா மீனு அக்கா. எஜமான் இந்த வீட்டுக்கு இந்தப் பயலாம். எப்படி இருக்கு கதை?'

'நிஜந்தானே' என்பாள் காந்திமதி. அருமையுடன் அன்பு கனியக் கனியக் கொடுத்த காப்பி குமட்டல் செய்யும். இந்த வார்த்தையைக் கேட்டால் எப்படி இருக்கும். என் தலை சுழலும். 'டேய் மணி எஜமானனுமே இவன்?' எனக் கிளறுவான்.

'பேசாதே'.

'நீ யாருடா என்னை பேசாதேயென்று சொல்ல? நீ இந்த குடும்பத்தில் வேலையாள்.'

'ஆமாம். நீ இரங்காயெனில் நான் பெரிய முட்டாள்.'

'கல்யாணத்திற்கு முந்தியா பிந்தியா?'

'பிந்திதான் முட்டாள்.'

'கலியாணம் செய்யும் எவனும் முட்டாள் என்பது என் சித்தாந்தம்.'

'ரொம்ப உண்மையடா'

'அட முட்டாள். குடும்ப பாரம் ஏற ஏற மனுஷன் புத்தி பேதலித்துப் போகிறது சகஜம். உன்னிடம் உள்ள குணத்தை கவனிச்சதில் இன்னும் உனக்கு தன் சௌக்கியத்தை விட்டுக் கொடுக்கும் சகஜ புத்தி வரலை.'

'போதும். போதும். நான் யார் இந்த வீட்டில் ஆண்டிப் பயல்.'

என் பேச்சில் குழந்தை விழித்துக் கொண்டது. காந்திமதியும் வள்ளியும் எடுத்து என் மடியில் கொண்டு வந்து தள்ளினார்கள். நான் திகைத்தேன். நீ இரங்காயெனில் செய்த சேஷ்டைகளைக் கண்டு அவன் சிரித்தான். சிரிக்கும் குழந்தை அருகில் இருந்தால், நம் கவலை மட்டுமன்று, இந்த உலகமே மறந்துவிடும். நானும் வரவர சிரித்தேன். என் சிரிப்புக்கு அவனை எஜமானன் என்று எண்ணினேன்.

'அடடா, அப்பாவும் பிள்ளையும் என்ன சிரிச்சு மகிழ்ந்து போறீங்க?' என்று காந்திமதி கேட்க வள்ளி ஆமோதித்தாள்.

'டேய் எஜமானப் பயலடா நீ.. சிரிக்கிறதைப் பாரு.. இட்டாச்சு..' என்றேன்.

'இந்தச் சமயம் ஒரு காமிரா இருந்தால் நீயும் பிள்ளையும் சிரிக்கிறதை எடுக்கலாம்' என்றான்...

இடியோசை கேட்ட நாகம் போல காந்திமதி நடுங்கினாள். எனக்கு விவரம் புரியவில்லை.

(தொடரும்)

தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்

எம். சாரதா

அன்று தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் ஒரே கூட்டம். கூட்டத்தை கிழித்துக்கொண்டு தன் பெட்டி படுக்கைகளுடன் இரண்டாம் வகுப்பு வண்டியை நோக்கி நடந்து கொண்டிருந்தான் ராஜு. காரியாலய விஷயமாக சென்னைக்கு சென்று கொண்டிருந்தான். ஒருவரும் இல்லாத பெட்டியாக பார்த்து ஏறிக்கொண்டான். அவன் படுக்கையை சௌகரியமாக விரித்து போட்டுவிட்டு போர்ட்டருக்கு அலட்சியமாக ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து வீசினான் ராஜு. படுக்கையில் சாய்ந்து கொண்டு கம்பார்ட்மெண்டை சுற்றி தம் பார்வையை செலுத்தினான். எதிர் ஸீட்டின் ஓரத்தில் அவனையே பார்த்த வண்ணம் அமர்ந்திருந்த ஓர் பெண் சட்டென்று தன் பார்வையை திருப்பிக்கொண்டாள். ஒரு நிமிஷம் அவள் எழிலுருவத்தில் மயங்கிய ராஜு அவளை விழுங்கிவிடுபவன் போல் பார்த்தான். எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருந்தானோ அவனுக்கே தெரியாது! கார்டு விசில் ஊதியதும் வண்டி புறப்படுவதற்கு அறிகுறியாக 'கூ' என்று கத்திய பிறகுதான் அவன் தன் உணர்வு வந்தவனாய் பிளாட்பாரத்தை பார்க்கலானான். பிளாட்பாரத்தின் முடிவுவரை மெதுவாக சென்றுகொண்டிருந்த வண்டி 'கூ' என்று இன்னொரு முறைகூவி விட்டு வேகமாய் செல்லத் தொடங்கியது.

ராஜு ஜன்னலை சாத்திவிட்டு உட்கார்ந்துகொண்டு எதிர் ஸீட்டில் தன் பார்வையை ஓட்டினான். துயரமே உருவாக இருந்த அப்பெண்ணின் மனம் ஏதேதையோ சிந்தித்த வண்ணம் இருந்தது.

"நீங்கள் எங்கு போகிறீர்கள்" என்று ராஜு கேட்டான். "சென்னைக்கு" என்று பதிலளித்தாள் அப்பெண். ஆனால் ராஜு அத்துடன் விடவில்லை மேலும் தொடர்ந்தான். "சென்னையில் யார் இருக்கிறார்கள்?"

"ஒருவருமில்லை."

"ஏதாவது படிப்பு விஷயமாக போகிறீர்களோ?"

...பதில் இல்லை.

நான் கம்பெனி விஷயமாகத் தான் போகிறேன். நீங்கள் கூட கேள்விபட்டிருக்கலாம் "...அண்டு கோ" என்று.

'ஓ!' கேள்விப்பட்டிருக்கிறேன் அதில் உங்களுக்கு என்ன வேலை என்றாள் தனது வருத்தத்தையும் மறந்து.

"நான்தான் அக்கம்பெனியின் மானேஜர். உம்....உங்கள் பெற்றோர்கள் சென்னையில் இருக்கிறார்களா?"

"இல்லை அவர்கள்"....என்று கூறும்போதே அவளுக்கு துக்கம் நெஞ்சை கவ்வியது.

"ஏன் இறந்துவிட்டார்களா?"

"ஆ! இருக்கிறார்கள்"..என்று கூறிய அவள் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் உருண்டோடின. ராஜுவிற்கு ஏன் கேட்டோம் என்று ஆகிவிட்டது. இருந்தாலும் ஏதாவது சுவாரஸ்யமான சமாசாரம் கிடைத்தால் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிகிறதா அல்லது நம் மனம்தான் விடுகிறதா? அவள் எதற்காக அழுதாள்? என்ன காரணம்! எப்படியாவது விஷயத்தை தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலால் ராஜுவின் மனம் துடித்தது.

"உஸ்....எதற்காக அழுகிறீர்கள் நான் கேட்டதில் ஏதாவது பிசகு இருந்தால் மன்னித்து விடுங்கள்" என்று பேச்சை மீண்டும் துவக்கினான் ராஜு.

"நீங்கள் கேட்டதில் தவறு ஒன்றும் இல்லை அது ஒரு பெரிய கதை" என்று பெரு மூச்சுவிட்டாள் அப்பெண். நல்ல பொழுது போக்குத்தான் என்று எண்ணிக் கொண்டு தன் படுக்கையை தட்டி விட்டு உட்கார்ந்து அவள் சொல்லப்போகும் கதையைக் கேட்க ஆவலாக சாய்ந்துகொண்டான்.

அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

"என் பெற்றோர்களுக்கு நான் ஒரே பெண். பல குழந்தைகள் பிறந்தும் ஒன்றுகூட தங்காமல் இறந்துவிடவே கடைசியாக பிறந்த நானாவது உயிருடன் இருக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டாத தெய்வமே இல்லை. நான் செல்லக்குழந்தை என்பதால் வீட்டில் நான் வைத்ததுதான் சட்டம். அப்பாவைவிட அம்மாவிடம் எனக்கு சலுகை ஜாஸ்தி ஏன் என்றால் அப்பா கொஞ்சம் கண்டிப்பானவர். உரிய வயதில் என்னை பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாக தேறிக் கொண்டு வந்தேன். என் பதினாறாவது வயதில் எஸ். எஸ். எல். சி. தேறினேன். அப்பா எனக்கு வரன் தேடுவதில் முனைந்தார்.

எனக்குக் குறைந்த பட்சம் பி. ஏ.யாவது படிக்கணும் என்ற எண்ணம். அம்மாவும் என் விருப்பத்தையே ஆதரித்தாள். ஆனால் அப்பாவிற்கு நான் மேலே படிப்பது அவ்வளவாக பிடிக்கவில்லை. நான் என்னை மேல் படிப்பிற்கு சென்னை அனுப்பும்படி கேட்டபோது அப்பா கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

கடைசியாக என் பிடிவாதம் தான் ஜயித்தது. என்னை சென்னைக்கு அனுப்ப ஏற்பாடு பண்ணினார்கள். புறப்படவேண்டிய நாளும் வந்தது.

அன்று இரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் நான் சென்னைக்கு கிளம்பினேன். அப்பாவும் அம்மாவும் என்னை வழியனுப்ப வந்தார்கள்.

அவ்வண்டியில் என்னைத் தவிர ராஜகோபால் என்பவரும் பிரயாணம் செய்தார். கார்டு விசில் ஊதியதும் வண்டி புறப்பட்டது. நான் நன்றாக ஆசனத்தில் சாய்ந்து கொண்டு எதிர்ஸீட்டை நோக்கினேன். அங்கு உட்கார்ந்து கொண்டு என்னை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்த அந்த இளைஞரை பார்த்ததும் என் மனம் விவரிக்க முடியாதவொரு விதச் சந்தோஷத்தில் படபட வென்று அடித்துக்கொண்டது. வெட்கம் மேலோங்க முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு கதை புத்தகம் ஒன்றை எடுத்து படிப்பதுபோல் பாவனை செய்தேன். என் மனம் ஓடினால்தானே.

மழமழ வென்று வாரி விடப்பட்டிருந்த சுருண்ட கிராப்பு. விசாலமான நெற்றி. தீட்சண்யமான பார்வையை மறைக்கும் கறுப்பு கண்ணாடி; சதா புன்னகை தவழும் உதடு; கறுநீல ஸூட்டிற்கு ஏற்றவாறு அணிந்திருந்த சந்தன கலர் புஷ்கோட் அவருடைய அழகை பன்மடங்கு எடுத்துக்காட்டியது. எந்த பெண்ணையும் வசீகரிக்கக்கூடிய ஒரு கவர்ச்சி அவரிடம் இருந்தது. அதற்கு பேதையான நான் மட்டும் விதிவிலக்கா என்ன? அவர் விரித்த வலையில் நான் சிக்கிக் கொண்டேன். கடைசியில் நான் விசாரித்ததில் அவரும் நான் படிக்கும் கல்லூரியிலேயே படிப்பதாக தெரிந்துகொண்டேன். கேட்கவேண்டுமா எங்கள் மகிழ்ச்சிக்கு ஒருவாறாக சென்னை வந்து சேர்ந்தோம். எங்கள் அன்பு மேன்மேலும் வளர்ந்து கொண்டிருந்தது. இப்படியாக இரண்டு வருஷ காலம் ஓடிற்று. நான் இண்டர் பாஸ் செய்தேன்.

ஒருநாள் நான் பேச்சுவாக்கில் அவரிடம் "என்ன எத்தனை நாள் இப்படியே இருந்துகொண்டிருப்பது? நமது விவாகத்தைப் பற்றி நீங்கள் முடிவு ஒன்றும் செய்யவில்லையா" என்றேன். அதற்கு அவர், "நீ சொல்வது சரிதான். ஆனால் ஏற்பாடு எல்லாம்தான் பண்ணிக் கொண்டிருக்கிறேனே" என்றார்.

இதைக் கேட்டதும் என் மனம் குதூகலமடைந்தது. குறிப்பிட்ட நாளில் சட்டபிரகாரம் நாங்கள் ரிஜிஸ்தர் மேரியஜ் செய்து கொண்டோம். சென்னையில் உள்ள பிரபல பத்திரிகைகளில் எங்கள் படத்தை பிரசுரித்தார்கள். இனி விவாகம்தான் ஆகிவிட்டதே பயம் என்ன? ஆகையால் நாங்கள் எங்கும் தைரியமாக சென்றுகொண்டிருந்தோம். என்னைப்போல் யாரும் இருக்கமாட்டார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இத்தகைய சமயத்தில்தான் எங்களுக்கு அதிர்ச்சி தரும்படி ஒரு சம்பவம் நடந்தது. பத்திரிகைகளில் பிரசுரித்த எங்கள் அழைப்பிதழ் ஊர் ஊராக தண்டோரா போட்டன. இவ்விஷயம் என் பெற்றோர்களுக்கும், ராஜகோபாலுடைய பெற்றோர்களுக்கும் தெரிந்து விட்டது. உடனே ராஜகோபாலுடைய தகப்பனார் நேரடியாக வந்து பிள்ளையை கண்டபடி திட்டினார். இனி நடப்பதெல்லாம் நடந்துவிட்டது என்று கடைசியில் பிள்ளையை பாதி படிப்பிலிருந்து பிரித்து இழுத்துச் சென்றார். கடைசியில் நான்தான் நிர்க்கதியாக நின்றேன்.. அவர் போகும்போது என்னிடம் "நீ வருத்தப்படாதே உன்னை எப்படியாவது சேர்த்துக்கொண்டு விடுகிறேன். அப்பாவின் கோபம் தணியட்டும். நான் போய்வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டார்.

..கண்ணீருடன் வழியனுப்பி விட்டு நான் என் பெற்றோர்கள் இருப்பிடத்திற்குச் சென்றேன். அங்கு என் அப்பா என்னை வீட்டிற்குள் நுழையவிட்டால்தானே? "உன்னை விவாஹம் செய்து கொண்டானே அவனால் உன்னை காப்பாற்ற முடியவில்லையா?" என்று கத்தினார். பாவம் அம்மாதான் "குழந்தை அறியாத்தனமாக செய்து விட்டாள், விட்டு விடுங்கள்" என்றாள்.

வாஸ்தவத்தில் எனக்கு அவர்கள் முகத்தில் விழிப்பதற்கு என்ன இருக்கிறது. புருஷர்களுக்

கென்ன நாளை இன்னொருவனை கண்டால் கட்டினவனை மறந்துவிடுவது சகஜம்தானே. அவர் சொன்ன வாக்கு என்ன, செய்த செயல் என்ன. பேதை உள்ளம் அவைகளை சத்தியம் என்று எண்ணிக்கொண்டிருந்தது. இப்படியாக ஐந்து வருஷங்கள் ஓடி மறைந்தன. நான் நினைத்தது நடந்தேவிட்டது. அவர் வேறு ஒரு பெண்ணை மணந்து நாலு குழந்தைகளுடன் வாழ்வதாக கேள்விப் பட்டேன். என் கதி. உண்மை அன்பு உள்ளவராக இருந்தால் என்னை விட்டுவிடுவாரா? இதையெல்லாம் முன்பே யோசித்து இருக்கணும். அவருக்குளென்ன? அவர் சந்தோஷமாக இருக்கார். நான்? மலர்ந்து அரும்புகையிலேயே 'கருகிவிட்டது என் வாழ்வு! ஊராருடைய அவக்யாதிக்கு கேட்கவேண்டுமா? நான்தான் சொல்லுக்கு இடம் வைத்துக்கொண்டு விட்டேனே. அம்மாதான் வருந்துவாள். இப்படியே இருக்கையில் ஊரார் என்பேரில் இடியைத் தூக்கிப் போட்டார்கள். முதல் நாள் சாயங்காலம் குளத்தில் ஜலம் எடுக்கச் சென்றேன். கால் இடறி விழுந்துவிட்டேன். நல்லவேளை என்னை யாரோ தாக்கி நிறுத்தினார்கள். அவர் வேறு யாருமல்ல அவ்வூரிலேயே 'கேடி' என்று பெயர் பெற்ற கந்தசாமிதான். என் உடல் நடுங்கிற்று. இச்சம்பவத்தை வேறு யாராவது பார்த்து இருந்தால்...வேறு யாரோ வரும் சப்தம் கேட்டது. நான் குடத்தைத் தூக்கிக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றேன். வழி நெடுகிலும் என் மனம் படபடவென்று அடித்தது. வீடு வந்து சேர்ந்தேன். மறுநாள் நான் பயந்தபடியே நடந்துவிட்டது.

அண்டை அயலில் உள்ளவர்கள் அப்பாவிடம், முதல் நாள் நடந்த சமாசாரத்தை ஒன்றுக்கு நாலாக ஜோடித்து சொன்னார்கள். இதை கேட்டதும் அப்பாவிற்கு கோபம் எல்லையை மீறிவிட்டது. என்னை கண்டபடி திட்டினார். "இந்த க்ஷணமே வீட்டை விட்டு இறங்கச்சொன்னார்" நான் அப்பாவிடம் முதல் நாள் நடந்த சமாசாரத்தை எடுத்து சொல்லி யழுதேன். "அவர்கள் பேச்சை நம்பாதீர்கள்" என்று கதறினேன். அம்மாவும் கதறினாள். "ஐயோ ஊராருடைய பேச்சிற்காக என் குழந்தையை வீட்டை விட்டு விரட்டுகிறீர்களே அவர்கள் பேச்சில் உங்களுக்கு நம்பிக்கையா" எதையும் தீர விசாரித்து சொல்லணும். வீணாக அவளை வையாதீர்கள், துரத்தாதீர்கள். இந்து அப்படிப் பட்டவளல்ல" என்று கதறினாள். ஆனால் அப்பாவோ அம்மாவையும் கோபித்தார். "உன் பேச்சை கேட்டு சென்னைக்கு அனுப்பி அங்கு அப்படி நடந்தது. இங்கு வந்தவுடன் இப்படியாகிவிட்டது. இனி உன் பேச்சைக் கேட்கப்போவதில்லை! இறங்கு வெளியே என் மானம் போய்விட்டது" என்று என்னை துரத்தியடித்தார்.

அம்மாதான் "இந்து உனக்கு படிப்பு இருக்கு கவலைப்படாதே. விடிவு வரும். இந்தா இந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு எங்காவது வேலை செய்து பிழை" என்று கண்ணீருடன் அனுப்பினாள்.

• • •

'அன்றே அப்பா பேச்சை கேட்டிருந்தால் இவ்வளவு தூரம் நடந்திருக்காது' என்று கூறியவள் முகத்தை மடியில் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழலானாள்.

இதுவரை கதை கேட்டுக்கொண்டிருந்த ராஜுவின் கண்களை நீர் மறைத்தது. 'இந்து உன் வாழ்வை பாழாக்கிய பாதகன் ராஜு நானேதான். உனக்கு என்னை இன்னும் அடையாளம் தெரியவில்லையா' என்றான் கம்மிய குரலில்.

அவனை உற்று நோக்கிய இந்துமதி திடுக்கிட்டாள். 'ஹா நீங்களா' என்று கூறியவள் பல்லை நறநறவென்று கடித்தாள்.

'இந்து என்னை மன்னித்துவிடு' என்று அவள் அருகில் நெருங்கினான் ராஜு.

'என்னைத் தொட உங்களுக்கு உரிமை கிடையாது. அருகில் நெருங்கினால்'... என்று அவனை முறைத்தாள்.

'இந்து என்னை மன்னி. நான் நிரபராதி!

பதில் சொல்லாமல் மௌனமாக அவனை எரித்துவிடுபவள்போல் பார்த்தாள்.

'வாஸ்தவத்தில் இதற்கு என் தந்தை தான் பொறுப்பாளி இந்து!'

இந்துவின் கண்களில் தீப்பொறி பறந்தது. 'தந்தை பொறுப்பாளி என்றால் உங்களுக்கு வாய் எங்கேபோயிற்று. இத்தனை படித்தவர் இப்படி மனைவியை கைவிட்டார் என்றால் அவமானமாக இல்லை? நீங்களும் ஒரு ஆண்பிள்ளையா?' என்று சீறினாள்.

ராஜு நடுங்கினான். அவனால் பதில்சொல்ல இயலவில்லை.

இந்து தொடர்ந்தாள் 'எனக்கு இனி இவ்வுலகில் வாழ பிடிக்கவில்லை. நான் என்றோ தற்கொலை செய்துகொண்டிருப்பேன்..ஆனால் அதற்கு முன் உங்களைக் கண்டு உங்களால் எனக்கு நேர்ந்த கதியை சொல்வதற்கென்றே உயிர் வாழ்ந்தேன், இன்றோடு என் வாழ்வு முடிந்துவிடும். அன்று இதே பௌர்ணமி நிலாவில் நாம் முதலில் சந்தித்தோம். இதே ரயில் சாட்சியாக என்னை கைவிடமாட்டேன் என்று சத்தியம் செய்தீர்கள்.

இன்று இதே ரயில், பௌர்ணமி சாட்சியாக நம் காதல் முடிந்தது. என்னைப் போல் கட்டினவளையும் விட்டு விடாதீர்கள்' என்று ஆவேசத்துடன் கத்திய இந்து ராஜு எதிர் பாராத வண்ணம் சட்டென்று கதவைத் திறந்து வெளியே குதித்துவிட்டாள்.

'இந்து இந்து' என்று கத்திய ராஜு சோகத்துடன் ஸீட்டில் சாய்ந்தான். இவைகள் ஒன்றையும் லட்சியம் செய்யாது கூ என்று கூவிக்கொண்டே சென்னையை நோக்கி விரைந்தது தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்.

தந்தையின் உள்ளம்

'ஆத்ரேயன்'

'ஜெயம். நாளைக்கு இத்தனை நேரம் சந்தோஷமா உங்க ஊரைப் பார்க்க ரயிலில் போயிண்டிருப்பே. இல்லையா' என்று கேட்டான் ராஜம். அவன் குரலில் ஒருவித ஏக்கம் குடிகொண்டிருந்தது.

பாலை ஆற்றிக்கொண்டிருந்த ஜெயம் தன் கணவன் முகத்தை நோக்கினாள். அதில் பரவியிருந்த சோகம் அவளைத் திடுக்கிடச் செய்தது. அவனுடைய பரிதாபகரமான பார்வை அவள் உள்ளத்தை ஊடுருவிச் சென்றது. அவனுடைய கண்களில் இதோ கீழே விழுந்து விடுவோம் என்று பயமுறுத்திக் கொண்டிருந்த நீர்த்துளிகளைக் காண அவள் மனம் மிக வேதனைப்படலாயிற்று.

பாலை எடுத்துக்கொண்டே அவனருகில் வந்து 'ஆமாம். உங்களை விட்டுப் பிரிந்து போறதுன்னா எனக்கு மட்டும் சந்தோஷமா இருக்குமா, என்ன? அதை நினைக்கறச்சேயே என் மனசு எவ்வளவு சஞ்சலப்படறது தெரியுமா?..ஆனா நாமென்ன பண்ணறது?... நான் போயித்தானே யாக வேண்டும், இல்லையா' என்று பரிவுடன் கேட்டாள்.

ராஜம் பதிலொன்றும் கூறவில்லை. சிறிது நேரம் மௌனமாக ஜெயத்தின் அழகிய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு திடீரென்று அவள் கரத்தைப் பற்றி அவளைத் தன்னருகிலமர்த்தி 'ஆமாம், ஜெயம் நீ போயித்தானாக வேண்டும்... ஆனால் வாரத்திற்கு ரெண்டு தடவை எனக்குக் கடுதாசு போட தவறக் கூடாது, தெரியுமா'..அப்புறம் நல்ல டாக்டராகப் பார்த்து உடம்பைக் காட்டி ஜாக்கிரதையாகப் பார்த்துக்கணும், தெரியுமா' என்றான்.

ஜெயம் அவனைப் பார்த்து புன்முறுவல் பூத்தாள்.

'நான் உங்களுக்குக் கடிதமெழுத மறப்பேனா? நீங்கள் தான் எனக்கெழுத மறக்கக் கூடாது. உங்க உடம்பையும் ரொம்ப ஜாக்கிரதையாகப் பார்த்துக்கணும். ....சரி, இந்தப் பாலைச் சாப்பிடறேளா' என்று பாலைக் கொடுத்தாள்.

'சரி, ஜெயம். மணி பதினொன்னு ஆயிடுத்து. அதிகம் முழிச்சிண்டிருந்தா உன் உடம்புக்கு ஒத்துக்காது. நீ போய் படுத்துக்கோ. எனக்குக் கொஞ்சம் ஆபீஸ் வேலையிருக்கு' என்றான் ராஜம்.

ஆனால் காகிதங்களைப் புரட்டிக்கொண்டிருந்தானே ஒழிய ராஜத்தின் மனம் வேறிடத்தில் லயித்திருந்தது.

• • •

அன்று பிற்பகல் ஒரு மணியிலிருந்து ஸிம்லாவில் பனி விடாமல் புஷ்பமாரியைப்போல் பெய்து கொண்டிருந்தது. மாலை ஐந்து மணிக்குள் நகர முழுவதும் அடர்த்தியான வெண்மைப் போர்வையால் மூடப்பட்டு விட்டது. தெருக்கள், வீடுகள், செடி கொடிகள் மரங்களெல்லாம் பனித் திவலைகளால் அடர்த்தியாகப் போர்த்தப்பட்டு, நகரத்தைத் தெய்வலோகமெனக்காட்சியளிக்கச் செய்தன.

மாலை ஆறு மணிக்கு ராஜம் ஆபீஸிலிருந்து இவ்வற்புதக் காட்சிகளைப் பார்த்துகொண்டே தன் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

வழியில் சிறுவர்களெல்லாம் கீழே மாவுபோல் குவிந்து கிடக்கும் பனித் திவலைகளையெடுத்து, பந்துபோல் உருட்டி வருவோர் போவோர் பேரில் குறி வைத்து விட்டெறிந்து விளையாடிக்கொண்டிருந்தனர்.

ஆனால் ராஜம் மட்டும் சிறுவர்களை அதட்டி பயமுறுத்தி தன் மேல் அடிபடாமல் தப்பித்துக்கொண்டு தன் வீடிருக்கும் தெருவிற்குள் 'அப்பாடா இனி பயமில்லை' என்று பெருமூச்சுவிட்டுக்கொண்டே திரும்பினான்.

மறு கணம் ஒரு வீட்டின் மாடியிலிருந்து அவன் தலையிலும் முதுகிலும் பலமாக இரண்டு பனி உருண்டைகள் வந்து விழுந்து சிதறிப் போயின!

மிகுந்த கோபத்துடன் ராஜம் மேலே பார்த்தான். அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்கச் செய்தது!

சுமார் பதினெட்டு வயதிருக்கும் ஒரு யௌவன நங்கை அவன் கோபப் பார்வையைக் கண்டு என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்தாள்.

ராஜத்தின் தலை சுழல ஆரம்பித்தது. அதற்குக் காரணம், பனிப் பந்தால் அவன் கொண்ட அடியல்ல! அப்பெண்ணின் அழகே அவனை அப்படிப் பிரமிக்கச் செய்தது!

ரதியைப் போலிருக்கும் அவளைக் காண ராஜத்தின் கோபமெல்லாம் மறைந்தது. அப்பெண்ணும் அவனைப் பார்த்துபுன்னகை செய்து மான்போல் துள்ளி உள்ளே ஓடிவிட்டாள்.

ராஜம் மெதுவாக அங்கிருந்து போக காலெடுத்து வைத்த போது 'என்ன ராஜம்! வெளியிலே ஏன் நிற்க வேண்டும்? வாப்பா, காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்' என்ற குரல் கேட்டுத் திரும்பினான்.

அவனுடைய சிநேகிதரான ராமநாத அய்யர் வந்து கொண்டிருப்பதைக் கண்டு 'ஏன் ஸார், இது உங்க வீடா? இங்கு எப்பொழுது குடிவந்தீர்கள்?' என்று கேட்டுக்கொண்டே அவருடன் உள்ளே சென்றான்.

'வந்து நாலைந்து நாளாகிறது, ராஜம்.. அதோ அந்த நாற்காலியிலே உட்காரு.. யாரங்கே, ஜெயம்! இரண்டு பேருக்குக் காப்பியும் டிபனும் கொண்டு வா' என்று உள்ளே நோக்கி உத்தரவிட்டார் ராமநாதய்யர்.

சிறிது நேரத்தில் ஜெயம் இரண்டு தட்டில் டிபனை எடுத்துக் கொண்டு அன்னம்போல் நடந்து வந்தாள்.

ராஜத்தின் உள்ளம் புளகாங்கிதமடைந்தது. தூரப் பார்வைக்கு அவள் அழகியாக விளங்கினுளென்றல் அவளை அருகாமையில் கண்ட ராஜத்திற்கு அவள் தேவ கன்னிகையாகவே காட்சியளித்தாள். அவன் உள்ளம் அக்கணமே அவளைச் சரணடைந்தது!

'என்ன ராஜம் ஒரே பனிமாவாகவிருக்கிறதே உன் உடம்பெல்லாம். உன்னையும் விடவ்ல்லையா, அந்தப் போக்கிரிச் சிறு பயல்கள்' என்று கேட்டார் ராமநாதய்யர்.

ராஜத்தின் கண்கள் ஜெயத்தின் முகத்தைக் குறும்புடன் நோக்கின. அவள் முகம் முழுவதும் செந்நிறம் படர்ந்தது.

'ஆமாம், ஸார். அப்போக்கிரிச் சிறுவர்கள் என்னையும்விடவில்லை' என்று ஜெயத்தைப் பார்த்துக்கொண்டே மொழிந்தான்.

தன்னுடைய நன்றியை கண்களாலேயே தெரிவித்துவிட்டு உள்ளே மறைந்தாள் ஜெயம்.

• • •

நாட்கள் பல கழிந்தன. தை மாதமும் பிறந்துவிட்டது. ராஜத்திற்கு வரன்கள் வந்து குவிந்தன ஆனாலும் தனக்கு ஒன்றும் பிடிக்கவில்லையென்று சொல்லிவிட்டான். அவன் இதயத்தில்தான் ஜெயம் நிரந்தர இடம் பெற்றுவிட்டாளே!

ஒரு நாள் தன் அன்னையிடம் ஆவலை வெளியிட்டான் ராஜம். அவளுக்கு சம்மதமென்று தெரிந்து களிப்படைந்தான்.

அதன் பயனாய் அடுத்த முகூர்த்தத்தில் ஜெயமும் அவனும் தம்பதியானார்கள்.

• • •

காலச் சக்கரம் சுழன்று சென்றது. ஜெயம் புக்ககத்திற்கு வந்து ஆறு மாதமாகியிருந்தது.

ராஜத்தின் வாழ்க்கை என்னும் படகு இன்பக் கடலில் சுகமாகச் சென்றுகொண்டிருந்தது. உண்மையில் ராஜத்தையும் ஜெயத்தையும் போன்ற மனமொத்த தம்பதிகள் அவ்வூரிலேயே கிடையாதென்றுகூட பலர் சொன்னார்கள்.

ஜெயம் தன் கணவனிடம் அன்பாயிருந்ததுபோல், தன் மாமியாரிடமும் பிரியத்துடனும், பக்தியுடனும் நடந்து வந்தாள். உண்மையில் ராஜத்தின் தாயார், அலமேலு அம்மாளிடம் யாராவது பேச வந்தால் தன் மருமகளின் குணத்தையும், தன்னிடம் அவள் கொண்டுள்ள பணிவையும் பற்றி கூறுமலிருக்கமாட்டாள்.

இப்படியாக அக்குடும்பத்தில் ஆனந்த லட்சுமி சாசுவதமாய் இடம்பெற்றுவிட்டாள்.

நாட்கள் செல்ல ஜெயம் கருத்தரித்து ஐந்து மாதங்களாயின. தன் பெண்ணை அழைத்துப் போக மதராஸிலிருந்து ராமநாத அய்யர் வந்துவிட்டார். (ஸிம்லாவிலிருந்து நான்கு மாதங்களுக்கு முன்னர்தான் அவரை மதராஸிற்கு மாற்றியிருந்தார்கள்)

• • •

பழைய சம்பவங்களை மனக் கண்ணால் கண்டுகொண்டிருந்த ராஜம் நீண்ட பெருமூச்சுவிட்டான்.

தலையை நிமிர்த்தி சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். இரவு மணி பன்னிரண்டிற்கு ஐந்து நிமிஷங்களிருந்தன. பிறகு தலையைத் திருப்பி ஜெயத்தின் முகத்தைப் பார்த்தான். களைப்பினால் அவள் உறங்கிக்கொண்டிருந்தாள். கர்ப்பிணிகளுக்கு வாய்க்கும் சோபையுடன் அவளது இயற்கை அழகும் சேர்ந்து, அவள் முகத்தைக் களை பொருந்தச் செய்தன.

மெதுவாக அவளருகில் சென்று ராஜம் அவள் ஆதரத்தில் அன்புடன் ஒரு முத்தம் ஈந்தான்.

'ஹே ஜகதீசா, ஜெயத்திற்கு ஒருவிதக் கெடுதியும் வராமல் பிரசவிக்கச் செய்து எங்கள் இன்ப வாழ்க்கை நீடித்திருக்க அருள் புரியவேண்டும்' என்று அவன் மனம் ஆண்டவனை வேண்டிக்கொண்டது.

'ஏண்டா ராஜம். உனக்கு உடம்புக்கு என்ன? வரவர சாப்பாடே, வேண்டியிருக்க மாட்டேங்கறதே. டாக்டரிடம் காட்டி ஏதேனும் மருந்து வாங்கிச் சாப்பிடக் கூடாதா' என்று பரிமாறிக் கொண்டே பரிவுடன் கேட்டாள் அலமேலு அம்மாள்.

'ஒண்ணுமில்லேம்மா. வயத்திலே ஏதோ கோளாறோ என்னமோ. தானு இரண்டு நாளிலே சரியாய்ப் போயிடும்' என்று மழுப்பினான் ராஜம்.

'என்னமோப்பா ஜெயம் ஊருக்குப் போனதிலேருந்து உனக்கு ஒண்ணும் பிடிக்காமப் போயிடுத்து. எப்போபார்த்தாலும் கவலைப்பட்டிண்டிருக்கேன்னு நன்னாத் தெரியறது.'

'கவலையா? என்ன கவலை? நான் எப்போதும் போலத்தானே இருக்கேன்!' என்று அசட்டுச் சிரிப்புடன் கூறினான் ராஜம்.

'ஆமாம். உன்னைத்தான் ஜெயம் போனதிலேருந்து இந்த அஞ்சு மாசமா கவனிச்சிண்டு வறேனே. உன் மனசிலே உள்ளது உன்னைப் பெத்தெடுத்த எனக்கா தெரியாது?..உம்..ஜெயம் நல்லபடியா பிரசவிக்கணுமேன்னுதானே கவலைப்பட்டிண்டிருக்கே. உண்மையா, இல்லையா?'

'ராஜம், உனக்கிருக்கிற கவலை எனக்கில்லையா? அந்த அம்பிகையின் அருளாலே, ஜெயம் சௌக்யமாய்க் குழந்தையோடு வருவாள் பாரு. வீணா ஏன் கவலைப் படறே?' என்று தேற்றினாள் அலமேலு அம்மாள்.

ஒருவாறு மன நிம்மதி அடைந்து தன் காரியாலயத்திற்குச் சென்றான் ராஜம்.

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக்கண்டு ஏமாருதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்.

19, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 85254

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

" டைரக்டர் வெட்கப்படும் கட்டத்தை கதாநாயகிக்குச் சொல்லித்தருகிறர் "

தன் ஆசனத்திலமர்ந்தவுடன் தன் கீழ் வேலை செய்யும் தீப்சந்த் என்ற குமாஸ்தா அவன் முன் வந்து வணக்கம் செய்து நின்றுன். அவன் முகம் வாடியிருந்தது.

'என்ன தீப்? என்ன சமாசாரம்?' என்று வினவினுன் ராஜம்.

'நான் உடனே நாக்பூருக்குப் போக வேண்டும் சார். எனக்கு ஒரு மாத லீவும் வேண்டும்' என்றுன் தீப்சந்த்.

'ஏன், என்ன விசேஷம்? திடீரென்று லீவு எதற்காக?'

'என் மனைவி..இறந்து...விட்டாளென்று இன்று காலை தந்தி வந்திருக்கிறது...தயவு செய்து...'

'ஐயோ. கேட்க மிக வருத்தமாயிருக்கிறதே...ஏன்? திடீரென்று மரணம் சம்பவிக்கக் காரணம்?'

'என்ன சொல்வேன். இதுதான் அவளுடைய முதற் பிரசவம். குழந்தை பிறந்தவுடனிறந்துவிட்டாளாம்.'

இதைக் கேட்ட ராஜத்திற்கு அந்தக் கட்டிடமே தன் தலையில் உடைந்து விழுந்துவிட்ட மாதிரி இருந்தது! விவரிக்க முடியாத ஒருவகைப் பீதி அவன் உள்ளத்தில் பாய்ந்தது!

'சரி தீப். நீ உடனே புறப்படு. உனக்கு ஒரு மாதம் லீவு சாங்ஷன் செய்ய ஏற்பாடு செய்கிறேன்...உனக்கு மீண்டும் என் அனுதாபங்கள்' என்று மொழிந்தான் ராஜம்.

தீப் வணக்கம் செலுத்திவிட்டுச் சென்றுன்.

ஆனல் ராஜமோ பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான். அவன் மனம் எண்ணுத எண்ணங்களை எல்லாம் எண்ணி உருகிக்கொண்டிருந்தது. பாவம், தீப்சந்தின் மனைவி பிரசவித்தவுடன்இறந்துவிட்டாளே! அது மாதிரி தன் ஆருயிர் ஜெயத்திற்கும் ஒரு வேளை ஏற்பட்டுவிட்டால்....? அதை நினைக்கவும் அவன் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது.

மாலை மூன்று மணி சுமாருக்கு சேவகன் ராஜத்திடம் ஒரு தந்தியைக் கொடுத்துச் சென்றுன். ராஜத்திற்கு அது எங்கிருந்து வந்திருக்கிறதென்று சந்தேகமில்லாமல் தெரிந்தது.

நடுங்கும் கைகளுடன் அதை வாங்கிக்கொண்டான். அவன் இருதயம் கன வேகமாக அடித்துக்கொண்டிருந்தது. தன்னுடைய வாழ்க்கையைப் பாழாக்கவோ அல்லது இன்பமயமாக்கவோ சக்தி வாய்ந்த அந்த மஞ்சள் உறையைப் பயத்துடன் நோக்கினுன். ஆனல் அதைத் திறந்து பார்க்க அவனுக்கு போதிய தைரியமில்லை?

சிறிது நேரத்திற்குப் பின், ராஜத்தின் நண்பன் மோகன் தாஸ் உள் நுழைந்தான்.

'ஹல்லோ ராஜம்! ஏன் ஒரு மாதிரி உட்கார்ந்திருக்கே? முகமெல்லாம் ஒரே வேர்வையாக இருக்கே! ஸிம்லாவிலேகூட வெப்பமாயிருக்கா என்ன?...உம் கையிலென்ன?..அடேடே தந்தி போலன்னுவிருக்கு...இப்படிக் கொடு பார்க்கலாம்' என்று ராஜத்தின் கையிலிருந்த தந்தியைப் பிடுங்கிப் படித்தான்.

ராஜம் துடிக்கும் இருதயத்துடன் மோகன்தாஸின் வார்த்தைகளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

'பஹுத் அச்சா! அடிச்சையே பிரைஸ் தம்பி, நமக்கு 'டீபார்ட்டி' கிலாவ்'.பண்ணு! 'லட்கா பைதா ஹோகயாதும்கோ' (உனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு) இதோ பார் தந்தியை' என்று மோகன் தாஸ் தந்தியை ராஜத்தின் நடுங்கும் கைகளில் கொடுத்தான்.

'ஜெயத்திற்கு ஆண் குழந்தை. இருவரும் சௌக்கியம்' என்று அதில் வரையப்பட்டிருந்தது.

'ராஜம் களிப்புடன் தந்தியை பன்முறை வாசித்தான். அவன் கண்களிலிருந்து நீர் பெருகிற்று. தன் வேண்டுகோளைப் பூர்த்தி செய்த தெய்வத்தை மனதார வாழ்த்தினுன்.

'மோகன். இந்த மங்கள சமாசாரத்தைச் சொன்ன உனக்கு பலமான விருந்து வைத்து உன் வயிறு வெடிக்கும்படி செய்வது என் கடமை. வெறும் 'டீபார்ட்டி' மட்டும் போதாது' என்றுன் ராஜம்.

'ராஜம், நீ உடனே வீட்டிற்குப்போய் உன் மாதாஜிக்கு இந்தச் சந்தோஷச் செய்தியைச் சொல். ஓடு' என்று கட்டளையிட்டான் மோகன்.

'அம்மா, உனக்குப் பேரன் பிறந்திருக்கிறுன்' என்று உரக்கக் கூவிக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான் ராஜம்.

சமையல் அறையிலிருந்து வெளியே வந்த அலமேலு அம்மாள், தன் இரு கைகளையும்கூப்பி 'எல்லாம் அம்பிகையின் செயல்!' என்றுள். இதயம் நிறைந்த நன்றி அவள் பண்பட்ட முகத்தில் காட்சியளித்தது.

எட்டு மாதங்கள் சென்றன. இப்பொழுது அலமேலு அம்மாள் விடாமல் அழுதுகொண்டிருந்த தன் பேரன் சந்துருவை சமாதானப்படுத்த முயன்றுகொண்டிருந்தாள். 'என்ன இருந்தாலும் மகா துஷ்டனடா நீ, சந்துரு! பூலோகத்திற்கு வருவதற்கு முன்னரே உன்னப்பாவை ஒரு ஆட்டு ஆட்டி வைத்துவிட்டாய்! இப்பொழுது என்னை இப்படி படுத்துகிருயே!' என்று மகிழ்ச்சியுடன் பேரனைக் கட்டிந்துகொண்டாள்.

சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டிருந்த ராஜம் தன்னருகிலிருந்த ஜெயத்தை நோக்கினுன். இருவரும் புன்முறுவல் பூத்தனர்.

புவனகிரியில், விதவிதமான கல்லிழைத்த தங்க நகைகள் செய்வதில் சமர்த்தரான ஏழு பொற்கொல்லர் வாசம் செய்துவருவதை அப்பக்கங்களில் அறியாதாரில்லை. அந்த ஏழு பேரும் ஒன்று சேர்ந்து ஒரு கம்பெனியின் பேரில் தங்கள் தொழிலை நாணயமாம் நடத்திவருவதையும் எல்லோரும் அறிவர்.

புவனகிரிக்கு வெளியே வெகு தூரத்தில் நாலாப் பக்கங்களிலும் பெரிய பெரிய மலைகள் சூழ்ந்த விஸ்தாரமான ஒரு பெரிய பயங்கரமான பள்ளத்தாக்கில் பெரிய பெரிய மாளிகைகள் அமைத்துக்கொண்டு ராக்ஷஸர் பலர் வாசம் செய்துவந்தனர். இந்தப் பள்ளத்தாக்கு பெரும் புதர்களும் மரங்களும் குகைகளும் நிறைந்த மலைக்காடானதினுல், இங்கே கொடிய வன விலங்குகளும் வாசம் செய்துவந்தன. இதனுல் இது ஜன சஞ்சாரமற்ற பிரதேசமாய்விட்டது.

ஒருநாள் அந்த ராக்ஷஸர்களுக்குத் தலைவனெருவன் பெரிய தனவந்தனைப்போல் உருவங்கொண்டு பொற்கொல்லர் வாசம் செய்யும் பட்டணம் சென்று அவர்களைக் கண்டு சில உயர்ந்த நகைகள் செய்துதர வேண்டுமெனக் கூறி அவர்களைத் தந்திரமாய் பயங்கரப் பள்ளத்தாக்கிலுள்ள தன் மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போய் விட்டான்.

பயங்கரமான அந்தப் பள்ளத்தாக்கிலுள்ள அந்த மாளிகையில் அந்த ராக்ஷஸ மனிதனைத் தவிர வேறு ஒரு மனிதனையும் அவர்கள் காணவில்லை; ராக்ஷஸர்களையும் காணவில்லை. ராக்ஷஸ மாயையே இதற்குக் காரணம்! இதனுல் அவர்கள் அந்த மாளிகையை ராக்ஷஸர் வாழும் இடமாயிருக்குமெனக் கருதி பயந்தார்கள்.

இதைத் தெரிந்துகொண்ட ராக்ஷஸன் தன்னுடைய ராக்ஷஸ மாயையினுல் அவர்களுடைய மன பீதியை மாற்றி அவர்களைத் தன்வசப் படுத்திக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய உபசாரணைகளெல்லாம் செய்து அவர்களை அந்த மாளிகையிலுள்ள ஒரு பெரிய கூடத்திற்கழைத்துப்போய் — "இந்தக் கூடத்திலிருந்துதான் நீங்கள் வேலை செய்ய வேண்டும். இங்கே உங்கள் வேலைக்கு வேண்டிய அடுப்பு, கரி, துருத்தி, ஊதுகுழல் முதலியயாவும் இதோ இருக்கின்றன பாருங்கள்" என்று அவற்றையெல்லாம் அவர்களுக்குக் காட்டி, 'நீங்கள் எந்த ஒரு சிறிய சாமானுக்காகவும் வெளியே போகவேண்டிய அவசியமிராது. நீங்கள் செய்யும் நகைகளெல்லாம் என் மனைவிக்கே. ஆகையால் எல்லாம் புதிய மாதிரியாய் கண்டவர் எவரும் வியந்து பேசிப் புகழும்படி தக்க வேலைப்பாடுகளுடன் கூடியவைகளாய் இருத்தல் வேண்டும். தெரிந்ததா?" என்று கூறி இன்னின்ன நகைகள் வேண்டுமெனவும் விவரம் தெரிவித்தான்.

பொற்கொல்லர் எழுவரும் அவனுடைய பேச்சில் மயங்கிச் சம்மதம் தெரிவிப்பதற்கடையாளமாகத் தலையை அசைத்தனர். ராக்ஷஸ மனிதன் சந்தோஷமடைந்து அவர்களைப்பார்த்து "இந்த நகைகளையெல்லாம் நீங்கள் ஏழுபேரும் ஏழு நாட்களுக்குள் முடித்துத் தரவேண்டும். மிகவும் அவசரம். அதனுலேதான் இந்த நிபந்தனை. என் இஷ்டப்படி ஏழு நாட்களுக்குள் நகைகளைச் செய்து தருவீர்களானுல் பேசியபடி.

கூலி கொடுப்பதுடன் தக்க வெகுமதியும் தந்தனுப்புகிறேன்" என்ருன்.

ராக்ஷஸன் இவ்வாறு ஆசை காட்டவே—ராக்ஷஸ மாயையிலே மயங்கிய அவர்கள் அவ்விராக்ஷஸன் இஷ்டப்படி வேலை செய்ய இணங்கினர்கள். இதுகண்டு 'மகிழ்ந்த ராக்ஷஸ மனிதன் அவர்களை அந்த அறைக்குப் பக்கத்தறைக்கு அழைத்துப் போனுன். அது மிக மிகச் சிறிய அறை. அந்தச் சிறிய அறையில் நான்கடி உயரமும் நான்கடி நீளமும் உடைய ஒரு பெரிய ஆடு இருந்தது. அந்த ஆட்டைக்கண்டு பொற்கொல்லர் வியந்தனர். அப்பொழுது ராக்ஷஸ மனிதன், "இது தேவலோகத்தைச் சேர்ந்த ஆடு. இது கறக்கக் கறக்கப் பால் கறக்கக்கூடிய சிறப்பினையுடையது. இதனுடைய பால் அமுதம் போன்ற சுவையுடையது; குடிப்பவர்களுக்கு நல்ல திடமும் புஷ்டியும் தரக்கூடியது. ஒரு நாளில் ஒரு வேளை குடித்தாற்போதும். மறு நாள் வரையில் பசியே எடுக்காது. கடுமையாய் வேலை செய்தாலன்றிப் பசி உண்டாகாது. இந்தப் பாலே நல்ல ஆகாரமாகையினுல் வேறு ஆகாரம் உட்கொள்ளவேண்டிய அவசியம் கிடையாது. ஆகையினுல் நாங்கள் வேறெந்த உணவுகளையும் இங்கே வைத்துக் கொள்வதில்லை"—என்ருன்.

மேலே பேசுவதற்குள் பொற்கொல்லர் — ஆச்சரியத்துடன் "அப்படியா! நல்லது" என்றனர். ராக்ஷஸ மனிதன் "இதோ பாருங்கள்! இங்கே கட்டிலும் படுக்கையுமிருக்கின்றன. இந்தக் கட்டிலிலே படுக்கையை விரித்து இரவிலே படுத்துக் கொள்ளுங்கள்! சுகமாகத் தூக்கம் வரும். மறு நாள் உற்சாகமாக வேலை செய்வீர்கள்"—என்று கூறி அவர்களை மறுபடி பெரிய அறைக்கு அழைத்துப்போய் — நகைகள் செய்வதற்கு வேண்டிய பொன்னும் புஷ்பராகம், வைரம் முதலியனவும் கொடுத்து — "இன்றே — இப்போதே வேலையைத் தொடங்குங்கள்" — என்று தேனொழுகப் பேசிவிட்டுச் சென்ருன்.

ராக்ஷஸ மனிதன் இப்படிப் பேசியதிலும் நிபந்தனைகள் ஏற்படுத்தியதிலும் ஏதோ சூதிருக்க வேண்டுமென்று பொற்கொல்லர் கண்டுகொண்டனர். ஆயினும் ராக்ஷஸனிடமிருந்து தப்ப வழிகாணுமல் வேலை செய்யத் தொடங்கி அன்று பொழுது சாயும்வரையில் இடைவிடாமல் வேலை செய்து ஒப்புக்கொண்ட வேலையிற் பல பகுதிகளைச் செய்து முடித்தனர்; இதனுல் குறிப்பிடப்பட்ட ஏழு நாட்களுக்குள் பாக்கி வேலைகளையும் முடித்துவிடலாமென்ற நம்பிக்கையுடன் அவர்கள் அன்று வேலையை நிறுத்திவிட்டுக் குளித்து வேறு உடை அணிந்துகொண்டு அடுத்த அறைக்குப்போய் ஆட்டைக் கறந்தனர். அவ்வாடு அந்த ஏழுபேருக்கும் போதுமான பால் கொடுத்ததுமல்லாமல் இன்னும் பால் கொடுக்கக் கூடியதாயுமிருந்தது.

இது கண்டு திருப்தியடைந்த பொற்கொல்லர், அந்தப் பாலை வயிறு நிறையப் பருகினர். பசிதணிந்தது. அப்பால் அவர்களுக்கு — படுத்துத் தூங்கவேண்டுமென்கிற உணர்ச்சியுடன் கூடிய ஒரு விதமான போதையுமுண்டாக்கிற்று. அதனுல் அவர்கள் உடனே அங்கிருந்த கட்டிலிலே படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டனர். கட்டிலில் ஆறு பேர் படுக்கவே இடமிருந்தது. இதனுல் அவர்களில் ஒருவன் கட்டிலுக்குப் பக்கத்தில் தரையிலே படுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

நாள் முழுவதும் வேலை செய்த களைப்பினுலும் ஆட்டுப் பாலினுலேற்பட்ட போதையினுலும் அவர்கள் படுத்தவுடன் நன்ருய்த் தூங்கிவிட்டார்கள். அவர்கள் நன்ருய்த் தூங்கியபின் நடுராத்திரியில் அந்த ஆடு மெதுவாய்ச் சென்று கீழே படுத்துக்கொண்டிருந்த பொற்கொல்லனுடைய குதிகாலை நக்கத் தொடங்கி, அவனுக்குச் சிறிதும் உபத்ரவமுண்டாக்காமல் வெகு தந்திரமாய் அவனுடைய உடம்பு ரத்தத்தையெல்லாம் உறிஞ்சிவிட்டது. அதனுல் அவன் தூங்குகிற பாவனையிலேயே மரணமடைந்தான்.

அவன் அவ்வாறு இறந்த மறுவிநாடியே அவ்வறைக்கு ராக்ஷஸ மனிதன் வந்து — "சகோதரியே உனக்குத் திருப்திகரமாய் உணவு கிடைத்ததா! பசி தணிந்ததா" — என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் அந்த ஆடு "அண்ணு! நீ இருக்கிற வரையில் எனக்கென்ன குறைவு? மனித ரத்தம் திருப்திகரமாய்க் கிடைத்தது"— என்றது — ராக்ஷஸன் "சந்தோஷம்" என்று கூறி மறைந்தான். அவன் மறைந்த அந்த நிமிஷமே இறந்து போன பொற்கொல்லனுடைய உடம்பும் மாயமாய் மறைந்துவிட்டது.

மறு நாள் காலையில் எழுந்த ஆறு பொற்கொல்லர்களும் கீழே படுத்திருந்த தங்கள் நண்பனைக் காணுமல் பெருந்திகிலடைந்து அங்கெங்கும் தேடினர்; கூப்பிட்டனர்; ஆளையும் காணேம் குரலையும் காணேம். ஆகவே பெருந் துக்கத்துடனும் பயத்துடனும் தாங்கள் வேலை செய்யவேண்டிய அறைக்குப் போய் முந்திய தினம் போல் வேலை செய்தார்கள்; ஆனுல் நிம்மதியில்லாமல் சங்கடப்பட்டார்கள்; "ஏதோ விபத்தில் அகப்பட்டுக் கொண்டோம் — தப்ப வழி காண வேண்டும்" — எனக் கூறிக்கொண்டார்கள்.

இப்படி ஏழு பொற்கொல்லரில் ஒருவன் இறந்ததுபோல அடுத்த நான்கு நாட்களிலும் நான்கு பொற்கொல்லர் ஆட்டுக்குப் பலியாயினர். இங்ஙனம் ஐந்துபேர் இறந்தபின் எஞ்சி நின்ற இருவரில் ஒருவன் எப்படியாவது இதன் மர்மத்தை அறிந்தே தீர்வதென்கிற உறுதியில் ஆருவது நாளிரவு தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தான். அன்றும் வழக்கம்போல் விபரீதங்கள் நடந்தன.—அவற்றைக் கண்டு இவையெல்லாம் மானிட இரத்தப் பிரியர்களாகிய ராக்ஷஸர்களுடைய செயல்களெனத்

தெரிந்து சந்தடி செய்யாமலிருந்து அன்று பொழுது புலர்வதற்கு முன்பே விடியற் காலையில் படுக்கையை விட்டெழுந்து அவ்வறையை விட்டுப் பக்குவமாய் வெளிப்பட்டு வெகு வேகமாக ஓடினன் பொற்கொல்லன்.

இதைக்கண்ட ராக்ஷஸ ஆடு உடனே ஓர் அழகிய மானிட மாதின் உருவங்கொண்டு அவனைத் தொடர்ந்தோடியது. அதுகண்ட அவன் வாயுவேகமாக ஓடினன். ராக்ஷஸமாது "அன்புடைய நாதா! என்னை விட்டுவிடாதே! உன்னோடு அழைத்துக்கொண்டுபோ" என்று கூவிக்கொண்டே அவனைத் தொடர்ந்தோடினள்.

இவ்வாறு இருவரும் ஓடுகையில் பொற்கொல்லன் அவளைவிட வேகமாய் ஓடி அங்கே வழியின்மேலிருந்த ஒரு பெரிய ஆலமரத்திலேறி அதன் உச்சிக்கிளையிலே போய் உட்கார்ந்து கொண்டான்.

அந்த ஆலமரத்தினடிக்குப் போய்ச் சேர்ந்த ராக்ஷஸியும் அம்மரத்தின் மேலேற முயற்சி செய்தாள். அதுகண்ட பொற்கொல்லன் தன் குல தெய்வத்தை நினைத்து — "தெய்வமே! நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று சரணமடைந்தான்.

அவனுடைய குல தெய்வம் அந்த ராக்ஷஸியை அம்மரத்தின் மேலேற வொட்டாமற் செய்துவிட்டது. ஆகவே அவள் அம்மரத்தினடியிலே உட்கார்ந்து — தலைவிரி கோலமாயிருந்து வாயிலும் வயிற்றிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு புலம்பினள்.

"ஓ கொடிய என் நாதனே! மணந்து கொண்ட மனைவியை ஏன் இப்படிக் கஷ்டப் படுத்துகிறாய்? படுபாவி! சண்டாளா! பெண்பாவம் பொல்லாதடா! அது உன்னைச் சும்மா விடாது"—என்று வாயில் வந்தபடி எல்லாம் கூறி மாய அழுகை அழுதாள்.

(தொடரும்)

"உன் சிநேகிதன் ராமு, கண்ணாடிச் சாமான்கள் வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தானே, இப்போ என்ன பண்ணுகிறான்?"
"இரும்புச் சாமான்கள் வியாபாரம் பண்ணுகிறான்!"
"ஏன் அப்படி?"
"கல்யாணமாகி, நாலைந்து குழந்தைகள் பிறந்தப்புறம், கண்ணாடி வியாபாரம் கட்டுபடியாகலையாம்!"



சாரணர் உலகம்

முதற் சிகிச்சை

★

காலெலும்பு

நமது அவயவத்திலிருக்கும் எந்த பாகம் மற்றவைகளைவிட முக்கியமானது என்று யாரால் சொல்ல முடியும். ஒவ்வொரு அவயவத்திற்கு தகுந்த வேலையிருக்கிறது. நமது கையை எடுத்துக் கொள்வோம். அதனால் நாம் எத்தனையோ காரியங்களை சாதிக்க முடிகிறது. நமது காலில்லா விட்டால் நம்மால் சரியாக நிற்கவும் முடியாது. நடக்கவும் முடியாது. இதுதான் நம் காலின் முக்யத்வம். பணக்காரர்களாயிருந்து, எத்தனையோ வசதிகள் வைத்திருக்கலாம். என்ன இருந்தாலும் காலில்லாவிட்டால் கஷ்டப்படுவார்கள். பிறர் தயவையும் நாட வேண்டியிருக்கும்.

நாம் நடக்க உதவும் கால் விபத்திற்குள்ளானல் நமக்கு எவ்வளவு கஷ்டங்களைத் தரும். இது எந்த சமயங்களிலும் விபத்திற்குள்ளாகலாம். நமது உடலிலிருக்கும் எந்த எலும்பும் பலத்த அடியினால் உடையுமல்லவா? இதற்கு கால் எலும்பு மட்டும் விதிவிலக்கா? அதுவும் நேரிடையான பலத்த அடியினால் ஒடியும். மேலும் எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருக்கின்றன இது ஒடிவதற்கு. கீழே தவறுதலாக, விழும் பொழுது ஒடியலாம். வேகமாக செல்லும் எந்த வண்டிக்கடியில் அகப்பட்டாலும் ஒடியலாம். பலத்த சாமான்கள்மேல் விழுந்தால் ஒடியலாம். ஒடிய சந்தர்ப்பங்கள் பல உள்ளன. அவைகளை அதிகமாக விஸ்தரிக்க தேவையில்லை. ஏதோ ஒரு காரணத்தினால் ஒடிந்ததாக வைத்துக்கொள்வோம்.

இது எந்த இடங்களில் ஒடியலாம். நமது கால் முழங்காலிலிருந்து பாதங்கள் வரைதான். ஆகலால் முழங்காலிலிருந்து பாதம் வரை எங்கு வேண்டுமானாலும் ஒடியலாம். முழங்காலுக்கருகில் ஒடியலாம். காலின் மத்தியில் ஒடியலாம். அல்லது கணுக்காலுக்கருகில் ஒடியலாம். கணுக்காலுக்கு இரண்டு அல்லது மூன்று அங்குலத்திற்கு மேல் காலெலும்பு ஒடிந்தால் அதற்கு 'பாட்ஸ் பிராக்ஸர்' என்று பெயர். இதை சாதாரணமாக சுளுக்கு எனத் தவருக கருதி விடுவார்கள்.

படம்



எங்கு ஒடிந்தாலும் சரி. சிகிச்சையென்னவோ ஒன்றுதான். முழங்கால் பாதிக்கப்பட்டால் அதற்கு வேறு சிகிச்சையிருக்கிறது. ஆதலால் அதையும் இத்துடன் சேர்க்கக்கூடாது.

நமது காலில் இரு எலும்புகள் இருக்கின்றன அல்லவா? அவைகளின் பெயர் சரவெலும்பு, நளக



உ. படம்

வெலும்பு இவைகளில் ஒன்று மட்டும் ஒடியலாம் அல்லது இரு எலும்புகளும் ஒடியலாம். எதுஒடிந்தாலும் எலும்பு முறிந்ததற்கான அடையாளங்கள் யாவும் இருக்கும். ஆனல் ஒன்று மட்டும் ஒடிந்தால் கால் குட்டையாகயிருப்பது சட்டெனத்தெரியாது.

காலெலும்பு ஏதோ காரணத்தினல் ஒடிந்ததாக வைத்துக்கொள்வோம். இதற்கு சிகிச்சை என்ன? இங்கு நாம் ஒருகால்மட்டும் விபத்திற்குள்ளானதாக கருதியிருப்பதை நன்கு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இங்கும் நாம் முதலில் கால்களை ஸ்திரப்படுத்த வேண்டும். மெதுவாகவும், வலி அதிகரிக்கச் செய்யாமலும் செய்ய வேண்டும். மேலும் இரு கால்களையும் எவ்வளவுமுடியுமோ அவ்வளவு அருகில் கொண்டுவர வேண்டும். பிறகு சிம்பின் மேலோ அல்லது வேறு ஏதாவது வஸ்துவின் மேலோ மிருதுவான வஸ்துக்களை (துணியைப் போல்) சுற்றி கணுக்காலிலிருந்து முழங்கால்வரை வைக்க வேண்டும். இதன் பிறகு கணுக் கால்களையும் பாதங்களை சேர்த்து ஒரு 'பிகர் ஆப்எய்ட்' பாண்டேஜினல் கட்ட வேண்டும்.

இதன் பிறகு முழங்காலைச் சேர்த்து அகல கட்டினல் கட்ட வேண்டும். முடிச்சு அடிபடாத காலின் மேல் வரவேண்டும். இதை நன்கு கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

இதன் பிறகு என்ன செய்வது? அடிபட்ட பாதத்திற்கு மேலாகவும், கீழாகவும் இரு கட்டுகள் போடவேண்டும். இங்கும் முடிச்சு அடிபடாத காலின் மேல் வர வேண்டும்.

இவ்வாறு அடிபட்டவனை எவ்வாறு தூக்கிச் செல்வது. கால்கள் அசங்காமல் இருப்பது நல்லதல்லவா? ஆதலால் இவ்வாறு அடிபட்டவர்களை ஸ்ட்ரெச்சரில் தூக்கிச் செல்வதுதான் மிகவும் நலம்.

ஹிந்தி உலகம் - हिन्दी जगत -

-பண்டித்ஜி-

राष्ट्रीय विकास

★

भारतीय राष्ट्रीय कांग्रेस का जो हाल का अधिवेशन कल्याणी में हुआ, उसके अध्यक्षासन से भाषण देते हुए पंडित जवाहरलाल नेहरु ने राष्ट्रीय एकता पर जोर दिया, जातियता तथा प्रांतीयता का खंडन किया और कहा :—

"हमारे देश के लंबे इतिहास में बाहर से हमें अनेक बार धमकियाँ मिली हैं और हमपर आक्रमण भी हुए । इस प्रकार के आक्रमण में जब कभी देश को नीचा देखना पड़ा है, उसका कारण मुख्यतः हमारी आंतरिक कमज़ोरियाँ ही रही हैं । साहस और शस्त्रास्त्रों के अभाव से देश की पराजय नहीं हुई है । हमारे देश में बड़ी-बड़ी विभिन्नताएँ हैं । इनसे भारतीय जीवन और संस्कृति की समृद्धि अवश्य हुई है । परन्तु कभी-कभी इनसे हमारी आंतरिक कमज़ोरियों को उत्तेजना मिली है । इसी त्रुटि के कारण अतीत में हमारी मौलिक तथा ऐतिहासिक एकता बार-बार छिन्न-भिन्न हुई है ।

"हमारे हथियारों का दुरुपयोग अपने ही विरुद्ध किया गया है और हमारे ही देशवासियों ने हमारे साथ विश्वासघात किया है । इतिहास के इस उदाहरण से हमें शिक्षा लेनी चाहिए । इस समय राष्ट्रीय एकता की उपेक्षा भाषा, जाति, धर्म आदि किसीके नाम से नहीं करनी चाहिए । यदि हम संघटित रहेंगे तो हमारे विरोधी दंग रह जाएँगे और हमारी स्वाधीनता तथा प्रसिद्ध शांतिप्रियता को खतरा पहुँचाने का दुस्साहस नहीं करेंगे ।

"राष्ट्रीय एकता का अर्थ समान रूप से राष्ट्रीय विकास है । यह सारा बोझ अकेले अपने ही सिर पर है ।

"என்ன பால்டா வாங்கிண்டுவந்திருக்கே? பசும்பாலா...? எருமைப் பாலா?"
"லைக்கின் பாலும்மா!"

दूसरों का मुहताज न होकर हमें अपने-आप राष्ट्रीय शक्ति बढ़ाने का प्रयास करना चाहिए । एक बात के लिए पराश्रित रहने पर, फिर पराश्रित मनोवृत्ति बढ़ती ही जाती है । कहा जाता है कि राष्ट्र अपने-आप बनते हैं । स्वावलंबन से प्रतिष्ठा बढ़ेगी और देश को हम अधिकाधिक अपना बना लेंगे । इसके लिए न केवल शारीरिक, आर्थिक और वित्तीय, बल्कि आध्यात्मिक प्रयत्न भी खूब करने की आवश्यकता है । इसी प्रकार के प्रयत्न से हम स्वतंत्र राष्ट्र बन सके हैं और ऐसे ही प्रयत्नों से स्वाधीनता के बाद आये संकटों का सामना करने में हम समर्थ रहे हैं । हमारे देशवासियों का यही विशेष गुण है और हमें जो चुनौती दी गयी है; उसका यही उचित उत्तर है हम सतर्क रहेंगे, अपने राष्ट्र की रक्षा के लिए सदैव सन्नद्ध रहेंगे, विश्वशांति के लिए प्रयत्नशील रहेंगे; परन्तु मूलतः हम अपने पैरों पर ही खड़े रहेंगे ।

इसमें तनिक भी संदेह नहीं कि हम इस कार्य को पूरा कर लेंगे ।

वर्षों में हमने बड़े-बड़े संकटों का सफलता से सामना किया है और जब कभी चुनौती दी गयी हमने साहस के साथ उसे स्वीकार किया है। हाल के वर्षों के अनुभव से भी हमारा यह दृढ़ विश्वास हो गया है कि यदि हम उचित ढंग से काम करगे, तो पर्याप्त जनसहयोग मिलेगा। जनता की नहीं, बल्कि अपनी ही त्रुटि से हमें कभी-कभी सफलता नहीं मिली है। शस्त्रास्त्र-निर्माण अथवा शस्त्रीकरण की होड़ में भाग लेने से नहीं, बल्कि देशके विकास और जनकल्याण से हमारी शक्ति की वृद्धि होगी।

"हमारी प्रथम पंचवर्षीय योजना को आरंभ हुए अढ़ाई वर्ष बीत चुके हैं और देशमें महान योजनाएँ कार्यान्वित की जा रही हैं। इनमें से कुछ योजनाओं की रूपरेखा और कार्यान्वय तो असाधारण हैं। हमने इन योजनाओं को प्रारंभ कर कार्य-रूप देना शुरू किया है, यही बात देश के महान भविष्य में हमारे विश्वास की परिचायक है। भारत को सुदृढ़ तथा शक्तिशाली बनाने का कार्य प्रारंभ हो चुका है और हमने अपनी कल्पना के नवभारत की नींव रख दी है। मेरा ख्याल है कि संक्रांतिकालीन भारत की तुलना उस स्थिति की किसी भी देश से की जा सकती है और हम अपनी सफलताओं के लिए थोड़े गर्व का भी अनुभव कर सकते हैं।

प्रांतीयता (பெ. பா.) மாகாண மனப்பான்மை

धमकी (பெ. பா.) மிரட்டல்

आक्रमण (ஆ. பா.) படையெடுப்பு, தாக்குதல்

मुख्यत: முக்கியமாக

आंतरिक உள்ளேயுள்ள

कमज़ोरी (பெ. பா.) பலஹீனம்

शस्त्रास्त्र (ஆ. பா.) ஆயுதங்கள்

अभाव (ஆ. பா.) இல்லாமை

पराजय (பெ. பா.) தோல்வி

विभिन्नता (பெ. பா.) வேற்றுமை

उत्तेजना (பெ. பா.) தூண்டுதல்

त्रुटि (பெ. பா.) தவறு, குறைபாடு

"உங்க பிள்ளை பெண்டாட்டிக்குக் கட்டுப்பட்டிருக்கான்னு முன்னே சொல்லிண்டிருந்தேளே; இப்பவும் அவன் அப்படித்தானிருக்கானு?"

"அப்படியே இருந்தாலாவது தேவலையே! அவன் இப்போ யாருக்கும் கட்டுப்படாமே தத்தாரியாத் திரிய ஆரம்பிச்சுட்டான்"

अतीत (ஆ. பா.) கடந்த காலம்

मौलिक அடிப்படையான

हथियार (ஆ. பா.) ஆயுதம்

विश्वासघात (ஆ. பா.) நம்பிக்கைத் துரோகம்

उपेक्षा (பெ. பா.) அலக்ஷ்யம், உதாசீனம்

संघटन (ஆ. பா.) கட்டுப்பாடான அமைப்பு

दंग रहना திகைத்திருத்தல்

शांति प्रियता (பெ. பா.) அமைதி விரும்பும் தன்மை

बोझ (ஆ. பா.) சுமை, பளு

प्रयास (ஆ. பா.) प्रयत्न (ஆ. பா.) முயற்சி

पराश्रित रहना பிறரை நம்பி வாழ்தல்

स्वावलंबन சுய பலத்தையே நம்பியிருத்தல்

वित्त (ஆ. பா.) பணம், நிதி

वित्तीय பண சம்பந்தமான

आध्यात्मिक ஆத்மார்த்தமான

सतर्क रहना ஜாக்கிரதையாக இருத்தல்

सन्नद्ध रहना தயாராக இருத்தல்

तनिक கொஞ்சம்

चुनौती (பெ. பா.) சவால்

शस्त्रास्त्र-निर्माण (ஆ. பா.) ஆயுத உற்பத்தி

शस्त्रीकरण (ஆ. பா.) ஆயுதம் தாங்குதல்

अढ़ाई இரண்டரை

नींव (பெ. பா.) அஸ்திவாரம்

संक्रान्ति (பெ. பா.) புரட்சி, மாறுபாடு, மறுமலர்ச்சி

तुलना (பெ பா.) இணை, உவமை

जय हिन्द ! जय हिन्दी !

கூஜாப்பொருத்தம்!

டி.எஸ்.ஜயராமன் பி.ஏ.

சூரியோதயமாகும் தருணம். சென்னையிலிருந்து வரும் திருவனந்தபுரம் பாஸஞ்சர் காவிரிப் பாலத்தைக் கடந்து மாயவரம் ஜங்ஷனிற்குள் பிரவேசித்தது. பிரயாணிகளெல்லோரும் கொள்ளிடம் ஸ்டேஷனிலேயே கூஜாவில் ஜலம் பிடித்துப் பல் தேய்த்துவிட்டுக் காபி சாப்பிடத் தயாராக இருந்தார்கள். வண்டி நின்றதுதான் தாமதம். இவ்வளவு ஜனங்கள் இந்த வண்டிக்குள் எப்படி இருந்தார்கள் என்று அதிசயிக்கும்படி ஏராளமான ஜனங்கள் இறங்கிக் கையில் கூஜாக்களுடனும், செம்புகளுடனும் ஐ. ஆர். ஸ்டாலை நோக்கி விரைந்தார்கள். இதற்குள் இன்னம் பல வண்டிகள் ஜங்ஷனிற்குள் பிரவேசித்து அவைகளிலிருந்தும் பிரயாணிகள் இறங்கினார்கள். என் தாயார், தங்கை தம்பிகளுடன் தஞ்சைக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்த நானும் எல்லோருக்கும் காப்பி வாங்கிக்கொண்டு வருவதற்காக வெள்ளி கூஜாவை எடுத்துக்கொண்டு இரயிலை விட்டிறங்கி கூஜா மூடியைக் கழற்றி மூடி ஒரு கையிலும் கூஜா ஒரு கையிலுமாக எடுத்துக்கொண்டு ஐ. ஆர். ஸ்டாலை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றேன்.

ஐ. ஆர். ஸ்டாலில் எனக்கு முன் அவ்வளவு கூட்டம் எப்படித்தான் கூடிற்றோ தெரியவில்லை. ஸ்டாலைச் சுற்றிப் பெருங்கூட்டம் கூடியிருந்தது. விதவிதமான ஜனங்கள், கல்யாணத்திற்காக போகும் குடும்பங்கள், பரீட்சை முடிந்து திரும்பும் மாணவர்கள், மாணவிகள் இவ்வாறு பலரகங்கள். கூட்டத்தில் முண்டியடித்துக்கொண்டு என்னுடைய தலையைக் கூட்டத்திற்குள் புகுத்தினேன்! எண்ணிக்கையற்ற கைகள் ஐ. ஆர். ஸ்டால்காரனை நோக்கி நீட்டப்பெற்றிருந்தன. சில்லரை பிடித்த கைகள் கூஜா பிடித்த கைகள், டிபன் ஸெட்டின் ஒரு அடுக்கு மாத்திரம் பிடித்த கைகள், இட்லியை இலையோடு வாங்கி கூட்டத்தைத் தாண்டி இழுக்கமுடியாமல் பெருமாள் கோவிலில் தூணைக் கட்டிக்கொண்டு சுண்டல் வாங்கிய ஸ்மார்த்தப் பெண்ணைப்போல் திணறும் கைகள், டமாராவில் காப்பி வாங்கி இழுக்கும்போதே பாதி காப்பியைக் கொட்டிவிட்ட கைகள் இவ்வாறு விநோதமாக இருந்தன. "ஸார்! எனக்கு ஏழு உப்புமா பார்ஸல்!" என்ற குரலும் "இந்தச் சொம்பில் இரண்டு கப் பால்!" என்ற குரலும், "என்னய்யா! சில்லரையை வாங்கிப் போட்டுக்கொண்டுவிட்டீர்! காபி கொடுக்கவில்லை!" என்ற குரலும், "எவ்வளவு நாழியாகக் கத்துகிறேனய்யா!" என்ற இரைச்சலும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு ஒரு யுத்தம் நடப்பது போன்ற தோற்றத்தைக் காட்டின, கம்பநாட்டாழ்வார் மாத்திரம் தேரெழுந்தூர் போகும் மார்க்கம் மாயவரம் ஐ. ஆர். ஸ்டாலில் காபி சாப்பிட இறங்கியிருந்தாரானால் அடியிற்கண்டபடி உடனே பாடியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

"நெரிந்தனர் மாக்கள்
மறந்தனர் இரயிலை
சொரிந்தனர் சில்லரையை
வருந்தியே காபியை
சிதறின உப்புமாக்கள்
உருண்டன டமாக்கள்
பதறினர் பணம் கொடுத்தும்
பயனிலாதார்."

ஆனால் எனக்குப் பாட்டுப் பாட நேரமில்லை. ஒரு மோது மோதிக் கூஜாவையும் சில்லரையையும் ஸ்டால்காரனிடம் நீட்டி "இதில் ஆறு கப் காபி போடுங்கள்" என்று நானும் ஒரு இரைச்சல் போட்டேன். ஒரு க்ஷணத்திற்குள் செப்பிடு வித்தைபோல் என்னுடைய வெள்ளி கூஜாவிற்கு மேல் மற்றொரு வெள்ளி கூஜா திணிக்கப்பட்டது. கூஜாவைப் பிடித்திருந்த கை வலது கையாக இருந்தபோதிலும் அதில் ஒரு சிறிய ரிஸ்ட் வாட்சு நாகரிகமாகத் திகழ்ந்தது. கூஜாவின் கழுத்தைக் கௌவிக்கொண்டிருந்த விரல்கள் தந்தக் குச்சிகள்போல் வெகு நளினமாயும் நகங்களில் க்யூடெக்ஸ் சாயம் பூசப்பெற்றவையாகவும் இருந்தன. இந்தக் கைக்கு உடைய பெண் யார் என்று திரும்பினேன். நான் திரும்புவதற்குத் தயாராய் காத்திருந்ததுபோல் அந்தப் பெண், "காபி வாங்கும் அவசரத்தில் ஜரிகை அங்கவஸ்திரம் போவதுகூட ஸாருக்குத் தெரியவில்லை" என்றாள். அப்பொழுதுதான் என் அங்கவஸ்திரத்தின் கதி என்னவாயிற்று என்று நான் கவனிக்கலானேன். அதனுடைய ஒரு நுனி அப்பொழுதுதான் காபி வாங்கிக்கொண்டு கூட்டத்தை விட்டு வெற்றிகரமாக வெளியேறும் ஒருவருடைய கழுத்தில் சுற்றிக்கொண்டிருந்தது. மற்றொரு நுனி என்னுடைய தோளிலிருந்து சரிந்து அங்கவஸ்திரம் என்னிடமிருந்து விடைபெற்றுக்கொண்டிருந்தது. கூஜாப் பிடித்த பெண் என்னைப் பார்த்து விஷமமாகச் சிரித்துக்கொண்டிருந்தாள். காபி வாங்கத் தவறிய துக்கம், தஞ்சாவூர் ஜில்லாவிற்கே உரித்தான விசிறி மடிப்பு அங்கவஸ்திரத்தைப் பறிகொடுக்கவிருந்த அவமானம், அந்தப் பெண் சிரித்த ரோஸம் எல்லாம் சேர்ந்து என்னை வாட்டின. அங்கவஸ்திரத்தை எடுத்துக்கொண்டு மறுபடி கூஜாவை நீட்டிக் காபி வாங்கினேன். கூட்டம் குறைந்ததால் காபி கிடைத்தது. நான் ஏறவேண்டிய ரயிலும் 'கூ' வென்று ஓலமிட்டது. அவசரமாகக் காபியுடன் கூஜாவை ஒரு கையிலும் மற்றொரு கையில் மூடியுமாக ஓடி என் கம்பார்ட்மெண்டைத் தேடிப் பிடித்து ஏறினேன். எல்லோருக்கும் காபியைக் கொடுத்து நானும் சாப்பிட்

டேன். தஞ்சாவூர் ஸ்டேஷன் வந்ததும் சாமான்களை எடுத்துக் கொண்டு இறங்கும்பொழுது கூஜாவை எடுத்து மூடியைத் திருகினல் மூடி சரியாகப் பொருந்தவில்லை. என் தாயார், "ஏ.ண்டா! மூடி மாறிப் போச்சா?" என்ருள். "மாறிவிட்டதுபோல்தான் இருக்கிறது. ஆனல் இதுவும் வெள்ளிதான்" என்று சமாதானம் செய்தேன். வீட்டிற்குப் போனதும் என் தகப்பனர், "என்னடா கிராஜு வேட்டு நீ அதிர்வேட்டு! கூஜா மூடியைத் தொலைத்துவிட்டாயே!" என்ருர்.

அதற்கடுத்த வாரம் என் அத்தான் வெங்குட்டுவிற்கு மன்னர்குடியில் கல்யாணம். வெங்கிட்டு என்னுடைய அத்தான் என்பதோடு இல்லாமல் என் ஆப்த நண்பன்கூட. வெகு உத்ஸாகமாக எல்லோரும் மன்னர்குடி கல்யாணத்திற்குச் சென்ருேம். மாப்பிள்ளை அழைப்பிற்குப் பிறகு என் தகப்பனரும் வெங்கிட்டுவின் மாமனராகப் போகிறவரும் வெங்கிட்டுவின் தகப்பனருமாக எல்லோரும் கூடிக்கூடிப் பேசினர்கள்.

வெங்கிட்டு ஒரு சங்கோஜப் பேர்வழி. கல்யாணத்தன்று வெங்கிட்டுவோடுகூட நான் மாப்பிள்ளை தோழன் என்ற பதவியில் பிரகாசித்து வந்தேன். நலங்கு ஆரம்பிக்கும் சமயம் வெங்கிட்டுவிற்கு தாகம் எடுத்தது. அங்கு ஜலம் கேட்க ஸங்கோஜப்பட்டு என்னை ஜலம் கொண்டு வரச் சொன்னன். நான் எங்கள் ஜாகைக்கு வந்து கூஜாவில் சுத்த ஜலம் எடுத்துக்கொண்டு போய் வெங்கிட்டுவிற்குக் கொடுத்தேன். ஜலம்குடித்தபிறகு கூஜாமூடியை சுமாராகத் திருக எத்தனித்தேன் திடீரென்று "மாப்பிள்ளைத் தோழரின் கூஜாவிற்கு மூடி பொருந்தவில்லை போலிருக்கிறதே! இந்த மூடியை ட்ரை பண்ணிப் பாருங்கள்" என்றது



"ஏனப்பா? கடன் கொடுத்த ரூபாயை திருப்பிக் கொடுக்கும்படி உன்னை ஒரு தடவைகேட்டால் போருதா?"
"போறும்......! பின்னே எதுக்காக திருப்பித் திருப்பிக் கேட்கறே?"

ஒரு பெண்ணின் குரல். நிமிர்ந்து பார்த்தேன். மாயவரம் ஐ. ஆர். ஸ்டாலில் நான் கண்ட பெண்தான் கையில் கூஜா மூடியுடன் நின்றுகொண்டிருந்தாள். வெங்கிட்டுவிற்கு மைத்துனியாம் அவள். யாருக்குத் தெரியும்! கூஜா மூடியை வாங்கினேன். அது எங்கள் கூஜாவின் சொந்த மூடியானதால் சரியாகப் பொருந்தியதில் ஆச்சரியமில்லை ஐ. ஆர். ஸ்டாலில்ஏற்பட்ட குழப்பத்தில் நான் கூஜா மூடியைக் கெளண்டரில் வைத்துவிட்டு அந்தப் பெண் வைத்திருந்த மூடியை எடுத்து வந்திருக்கிறேன். "கூஜா மூடி பொருந்திவிட்டது" என்றேன் நான். "ஜாதகமும் பொருந்திவிட்டது நாளைக்கு ஒரு முஹூர்த்தமும் இருக்கிறது" என்ருர் வெங்குட்டுவின் தகப்பனர். எல்லோரும் "தசப் பொருத்தமும் போதாமல் கூஜா பொருத்தம் உள்பட பதிஞெரு பொருத்தங்களும் இருப்பதால் நாளையே முஹூர்த்தம் வைத்துக்கொண்டு விடலாம்" என்ருர்கள். மறு நாள் நானும் வெங்கிட்டுவும் ஷட்டகர்கள் ஆனேம். கல்யாணப் பெண்களைச் சுற்றியிருந்த மற்ற பெண்கள் "மாப்பிள்ளை! அங்கவஸ்திரம் ஜாக்கிரதை!" என்ருர்கள்.

தையல் கலை

எ.சுகுமார் டி.எம்.டி.எஸ் லண்டன்

5
உடைகளின் குறைகளும் நிவர்த்திக்கும் முறைகளும்

★

மாறுதல்களைக் குறித்துக்கொள்ளும் விதம்

ஒவ்வொரு உடை வெட்டுபவர்களும் உடையில் ஏற்படும் மாறுதல்களைத் திருத்திக்கொள்ள சிறந்த முறையை கையாள்வது அவசியம். படம் 1-ல் காட்டியபடி அடையாளங்களை செய்து கொள்வதை பழக்கப்படுத்திக்கொண்டால், வெட்டுபவர்களுக்கும், மறு முறை மார்க் (ரீ ஷேப்பிங்) செய்யவும், மாறுதல்களின் தன்மைகளை அறிந்துகொள்வதற்கும், தொழிலாளிகளும் குறிப்பிட்ட அடையாளங்களை அறிந்து மாறுதல்கள் செய்வதற்கு மிகவும் அனுகூலமாக இருக்கும்.

மார்க் 1. நேர் மார்க் அடையாளம் உயரத்தைக் குறிக்கும் குறி. உயரத்தை அதிகப்படுத்த இரண்டு நேர் கோடுகள் செய்ய வேண்டும். சைடு தையல் நேர் கோடு, துணியை அதிகமாக பிடிக்கவோ அல்லது தளர்ச்சியாக விடுவதற்கோ செய்யப்படும் அடையாளம்.

உதாரணமாக சைடு தையலின் எண் 2-ல்வரைந்துள்ளமார்க்கைகவனிக்கவும். துணியை தளர்ச்சியாக விடுவதையும், இடுப்பை சுருக்குவதையும் குறிப்பிடுகிறது.

மார்க் 3. இரட்டை மார்க்கினல் (டபிள் மார்க்) அவ்விடத்தில் அதிகமாக 'வாடிங்' செய்யவேண்டும் என்பதைக் குறிக்கிறது.

மார்க் 4-5-ஐ பார்க்கவும். அவ்விடங்களில் இழுத்தல் (ஸ்ட்ரச்சிங்) செய்ய வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

மார்க் 6. இந்த அடையாளம் வரை துணியை உள்ளே பிடித்து தைக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

மார்க் 7. மார்க் 6-ல் குறிப்பிட்டபடி முன் பாகத்தைத் தைத்த பிறகு 'பட்டன்' அடையாளம், முன் பாகம் ஒன்று சேருமிடம் முதலியவைகளைக் குறிக்கிறது. சாதாரணமாக மேற்குறிப்பிட்ட அடையாளங்கள் 'பார்வோர்ட் பேஸ்டு' செய்து தயார் செய்யும் உடைகளுக்கு உபயோகப்பட்டு வருகிறது. சைடு தையல்கள் ஒழுங்காகவும் பொருத்தமாகவும் இருந்தால் பிரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. தோளில் ஏதாவது மாறுதல்கள் காணப்பட்டால், மாறுதல்களை குறித்துக்கொண்டு பிறகுதான் தையலை (டாக்ஸை) பிரிக்க வேண்டும்

கட்டம்போட்ட துணி, கோடுபோட்ட துணிகளில் மறுமுறை மார்க் செய்யும் போது (ரீ மார்க்கிங்) முன்புள்ள பாட்டனை மாற்றி கோடுகள், கட்டங்கள் ஒழுங்காகவும், அழகாகவும் பொருந்தும்படி மார்க் செய்ய வேண்டும். இவ்வாறு மறுமுறை மார்க் செய்த பிறகு 'பாட்டனை' மறுமுறைஷேப்புசெய்து, தைப்பவரிடம் அவர்களுக்கு தெளிவான குறிப்புகள் சொல்ல வேண்டும்.



நிமிஷக் கதை

கவலைக்கு முழுக்கு!

★

'சீமான்'

ஆந்திர ராஷ்டிரமுனே திருத்தணி அரவவாள்ளு அந்யாயலு' என்றெல்லாம் தொண்டை வரள பலர் இட்ட கோஷம், என் காதைக் குடைந்தது. மாடி வெராந்தாவிலிருந்து கீழே பார்த்தபோது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. ஏனென்றால், அந்தக் கும்பலுக்கு முன் வரிசையில், காவிக் கதர்ச் சால்வையை 'தேசோத்தாரக' மாதிரியில் அணிந்துகொண்டு என் நண்பர் முனிரத்னம் நாயுடு வருவதைக் கண்டேன். வீட்டிற்குள் தெலுங்கு பேசினாலும், தமிழினத்தில் இரண்டறக் கலந்து விட்டதாகப்பறை சாற்றியதுமன்றி பண்ணரும் பிரபந்தங்கள் ஓதப் பெறும் திருவேங்கடத்தையும் தமிழகத்தில் சேர்க்கத் தலைகொடுக்கவும் தயார் என்று வீண்ணதிர மேடைப் பிரசங்கங்கள் புரிந்து வந்தவர் அவர். அவரை இந்தக் கோலத்தில் கண்ட என் கண்களில்தான் கோளாறிருப்பதாக முதலில்நினைத்தேன். நன்றாக கசக்கிவிட்டுப் பார்த்தேன். ஆம் அவரேதான்! அந்த ஆட்டுக்கிடா மீசையும், ஊசித் திருமனும் எதிரில் வருவது தெரியாத அண்ணாந்த பார்வையும், அதை நிரூபித்தன. என்னைப் பார்த்த அவர் தலையை மேலும் கீழுமாக அசைத்து, சிரிக்கும் பாவனையில் உதட்டை பிதுக்கினார். மனக் குமுறலை அடக்கிக்கொண்டு, தனிமையில் சந்தித்து ஆத்திரம் தீர கேட்டுவிடுவது என்று தீர்மானித்தேன் நான்.

• • •

அன்றிரவு, நாடிச்சென்ற என்னை வாசலிலேயே எதிர்கொண்டழைத்து மிதமிஞ்சி உபசரித்தார் அவர். இந்த அனுபவத்தால் என் உள்ளத்தில் புகைந்துகொண்டிருந்த கோபமெல்லாம்கூட அவிந்துவிட்டது.

'என்ன நாயுடுகாரு! சொல்லாமல் கொள்ளாமல் குல்லாமாற்றிவிட்டீர்களே. இந்த ஆந்திர மோகம் இதற்குள் எப்படித் தலைக்கேறிவிட்டதோ' என்று சிரித்துக்கொண்டே துடுக்குத்தனமாக கேட்டேன்.

அவர் கொஞ்சமும் பதட்டப்படவில்லை.

'மதுக் கரத்தை நீட்டித் தன் மோக வலையிலே சிக்க வைத்து விட்டாளய்யா ஆந்திர மாது' எனத் தமிழ் நயம் ததும்ப விடை பகர்ந்தார் அவர்.

எனக்கு விஷயம் புரிந்துவிட்டது. மது விலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று, ஆந்திர நிபுணர் கமிட்டி செய்துள்ள சிபாரிசுதான் அவரை இப்படித் தலை கீழாக மாற்றியிருக்க வேண்டும் 'குடி' கெடுத்த சர்க்கார் கொள்கையை வெறுத்து வந்த காங்கிரஸ்காரர்களில் அவரும் ஒருவர். புட்டிபோட்டால்தான் அவருக்கு நிம்மதி! ஆந்திர ராஷ்டிரத்திலானால், இனி அக்கம்பக்கம் பாராமல், அச்சமில்லை அச்சமில்லை என்று அண்டாக் கணக்கில் தள்ளலாம் என மனப்பால் குடிக்கிறார் போலும்!

அந்தக் குடியில் என்னய்யா அத்தனை மகத்வம். நேற்று சொன்னதைக்கூட மறந்து வியவஸ்தைகெட்டு நடந்து கொள்வதற்கு?' என்றேன் நான்.

'என்னமோ பிரதர்! கவலைகளை முழுக்கடிப்பதற்கு, தண்ணி போட்டாக வேண்டியிருக்கே' எனச் சாவதானமாக பதிலளித்தார்.

'அப்படியானால் தினம் தினம் குடிக்கிறீரே, உங்க கவலையெல்லாம் முழுகிப் போச்சுங்களா'

'ஓஹோ ஹோ! அந்தக் கூத்தைக் கேக்கறீங்களா? அதுங்களுக்கெல்லாம் நீஞ்சத் தெரியும் போலேருக்கு. மேலே மேலே வந்து நிக்கிதாங்கன்னு' என்றார் அவர்.

குப், குப்' என்று அவர் திருவாயினின்று பொங்கிய காடி வேகம், என் மூக்கைத் துளைத்தது!



கோபாலபுரத்திலுள்ள சென்னை சங்கீத கலாசாலையின் 8-வது வருஷாந்த விழா ஸங்கீத கலாநிதி ஸ்ரீ முசிரி சுப்ரமண்ய ஐயர் தலைமையில் நடைபெற்றது.

பம்பாய்க் கடிதம்

★

பிரபல நடிகர் ஸ்ரீ பிரேம்நாத் தயாரித்திருக்கும் 'கோல்கொண்டாவின் கைதி' என்னும் கேவா கலர் படம் அடுத்த மாதம் சென்னையில் வெளிவரும்போது ஒரு புது நடிகர் சினிமா உலகத்தில் திகழ ஆரம்பிப்பார். அவர்தான் ஸ்ரீ பிரேம்நாத்தின் தம்பி ஸ்ரீ ராஜேந்திர நாத்.

யௌவனமும், வசீகரமும் கட்டுமஸ்தான தேகமும் பொருந்திய ஸ்ரீ ராஜேந்திர நாத் நல்ல அனுபவமுள்ள ஒரு நடிகர். அவருடைய தமயனைப்போல் நாடக மேடையில் நன்றாகப் பயின்றவர். அண்ணன் பெரிய நட்சத்திரமாகவும், பட முதலாளியாகவும் இருப்பதால் தானும் உடனே பெரிய நட்சத்திரமாகிவிடலாமென்று அவர் ஒருக்காலமும் எண்ணவில்லை. சினிமாவில் முதன் முதலாக ஒரு 'எக்ஸ்டிரா'வாக வேலை செய்திருக்கிறார். இப்பொழுதுதான் அவருக்கு 'கோல்கொண்டாவின் கைதி' என்ற படத்தில் ஒரு முக்கிய பாத்திரம் கிடைத்திருக்கிறது. இப்படத்தை சென்ற வாரம் நான் தற்செயலாக ஒரு ஸ்டுடியோவின் தியேட்டரில் பார்க்க நேர்ந்தது. இப்படத்தில், அண்ணனைக் காட்டிலும் அபாரமாக ஸ்ரீ ராஜேந்திர நாத் நடித்திருக்கிறாரென்று சொன்னால் மிகையாகாது.

ஸ்ரீ ராஜேந்திரநாத் 1931-ம் வருஷம் பிறந்தவர். அவருடைய தந்தை ஸ்ரீ கர்த்தார்நாத். அவர் ரேவா ஸ்டேட்டில் ஒரு பெரிய இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக வேலைபார்த்திருக்கிறார். 'பிரேம்நாத் ஒருவன்தான் சினிமாவில் புகுந்தாயிற்றே இன்னும் மற்றொரு பிள்ளை ஸ்ரீ ராஜேந்திரநாத்தும் சினிமாவில் சேருவானேன், வேண்டாம்' என்று அவர் பிடிவாதம் பிடித்தார். சினிமாவுக்கு இழுத்துச் சென்றது. அவரைஒருடாக்டராகஆக்கஅவருடைய தந்தை பிரயத்தனப்பட்டார். ஆனால், ஸ்ரீ ராஜேந்திரநாத்தின் விருப்பமே நிறைவேறிற்று.

காலேஜில் இண்டர் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும்போது, ஸ்ரீ ராஜேந்திரநாத் கோடைகால விடுமுறையின் போது, பம்பாய்க்கு வந்திருந்தார். அப்பொழுது ஒரு நாள் அவர் அண்ணன் ஸ்ரீ பிரேம்நாத்துடன் ஒரு ஸ்டுடியோவுக்கு சென்றார். அப்பொழுது அவருடைய உறவினரும், பிரபல நடிகருமான ஸ்ரீ பிருதிவிராஜ் கபூரை சந்தித்தார். ஸ்ரீ பிருதிவிராஜின் உபதேசத்தின் பேரில் அவருடைய தந்தைக்கு விரோதமாக முதலில் ஸ்ரீ பிருதிவிராஜின் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். கொஞ்சம் பெயர் வந்ததும், தந்தையும் மகனும் ஒன்று கூடினர்.

நடிப்புக் கலையில் கொஞ்சம் பயிற்சி பெற்றவுடன் ஸ்ரீ ராஜேந்திரநாத் சினிமாவில் முதன் முதலில் 'பர்சாத்' என்ற படத்தில் ஒருவரும் சரியாக கண்டு கொள்ள முடியாதபடி ஒரு சிறிய பாத்திரத்தில் நடிக்க ஆரம்பித்தார். பிறகு 'தம் இந்தியா', 'பீபீ', 'காஷ்மீர்' என்ற படங்களில் ஒரு எக்ஸ்டிராவாக நடித்தார். 'கோல்கொண்டாவின் கைதி' என்னும் படத்தில்தான் அவருடைய நடிப்புத் திறமையைக் காண்பிக்க அவருக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

படிப்பிலும், சங்கீதத்திலும், வேட்டையாடுவதிலும் அவருக்கு அலாதியான பிரியம். அவர் ஒரு பிரம்மசாரி.

—தி. மா. ராமச்சந்திரன்.

"பூர்ணிமா"வின் பின்பலம் இருந்தால் 'பகவா'னைப்போல் எல்லோரும் படிக்கலாம்-'ஸ்டாரில்' ஓடும் 'நங்கீலா'வைப் பாருங்கள்

ரங்கீலா

★

பகவான் கெட்டிக்காரர்! கடவுளுக்குத்தான் இப்படி சர்ட்டிபிகேட் கொடுப்பதாக வாசகர்கள் நினைக்கக் கூடாது. பகவான் என்ற ஹிந்தி நடிகரைப் பற்றித்தான் சொல்லுகிறேன். நல்ல லட்சியம் நிறைந்த ஒரு கதையை படம் பிடித்திருப்பதோடு, ஜனங்கள் ரசித்துப் பார்க்கும்படியாகவும் அதைத் தயாரித்திருக்கிறாரென்றால் பகவானை, நாம் பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்? பகவான் தயாரிப்பான ரங்கீலா உண்மையில் மிக நல்ல படம்.

படிக்காமல் கிராமத்தில் 'மத்து' என்று பெயர் வாங்கிய ஒரு வாலிபன் பட்டணத்துக்கு வந்து சிரமப்பட்டு படித்து தன்னைப்போல் படிக்காத கிராமத்து பையன்களுக்கு ஒருபள்ளிக் கூடமும் கட்டிக்கொடுக்கிறான். இந்தக் கதையில் ஒரு உபாத்தியாயினியும் குறுக்கே புகுவதால் ரொமான்ஸும், கதாநாயகனான பகவான் காமிக் நடிகராதலால் தமாஷும், பாடகராதலால் நிரம்ப பாட்டும் இப்படத்தில் இடம் பெறுகின்றன.

பகவானும், பூர்ணிமாவும் இப்படத்தில் நன்றாக நடித்திருக்கிறார்கள். விரஸம் இல்லை. ஹிந்தி தெரியாதவர்களும் பார்த்து அனுபவிக்கக் கூடிய நல்ல படம். சென்னை ஸ்டார் டாக்கீஸில் இப்பொழுது ஓடுகிறது.

★

[illegible]ஜு பேத

★

டைரக்டர் பி. ஏ. சுப்பராவ் அவர் '[illegible]ஜு பேத' என்ற தெலுங்கு படத்தை வாஹினி ஸ்டுடியோவில் எடுத்து வருகிறார். மார்க்ட்வெய்ன் எழுதிய 'பிரின்ஸ் அண்ட் தி பாபர்' என்ற நாடகத்தைத் தழுவியது இப்படத்தின் கதை. ரங்காராவ், லட்சுமிராஜ்யம், என். டி. ராமராவ் முதலியோர் நடிக்கிறார்கள்

கற்கோட்டை

★

'ஜலதுர்க்கா' என கன்னடத்திலும், 'கற்கோட்டை' எனத் தமிழிலும் கெம்பராஜ் தயாரித்திருக்கும் படம் மார்ச் 12ந் தேதியன்று வெளிவரும். இதைகெம்பராஜ் டைரக்ட் செய்திருப்பதோடு படத்தின் பிரதான பாத்திரத்திலும் தோன்றுகிறார்.

தோடு தொங்கலு

★

நேஷனல் ஆர்ட் புரொடக்ஷன்ஸார் தயாரித்திருக்கும் 'தோடு' தொங்கலு' முடியும் தருவாயிலிருக்கிறது. என். டி. ராமராவ் இதில் கதாநாயகனாக நடிக்கிறார். யோகானந்த் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

ஐஸன்ஹோவருக்கு ஆலோசகர் சினிமா நடிகர்

★

பிரபல சினிமா நடிகரும், டெலிவிஷன் புரொட்யூஸருமான ராபர்ட் மண்ட் கோமாரி யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜனாதிபதி ஐஸன்ஹோவருக்கு ரேடியோ டெலிவிஷன் விஷயமாக ஆலோசகராக இருந்து வருகிறார்.

'மனோஹரா'வில் ஊஞ்சலாடும் கணேசனும் கிரிஜாவும்.



ஸ்திரீகள் கிறிஸ்தவக் கல்லூரி வருஷாந்த விளையாட்டில் "ஹர்டில்ஸ்"—தாண்டிச் செல்லும் போட்டியில் முதலாவதாக ஜெயித்த மோலி பிலிப். (வலது பக்கம்) ஜாவ்லின் போட்டியில் வெற்றி பெற்ற மேரி பி. குரியன்.

நல்

பத்தர்:

சிவஸ்வாமி ஐயர் உயர்நிலைப் பள்ளியின் வருஷாந்தக் கண் காட்சியை ஸர் எஸ். வரதாச்சாரியார் ஆரம்பித்து [illegible]த விதமான உடைகளைக் காட்டும் பிரிவில் ஸன்யாசி வேஷத்தில் காட்சியளிக்கும் பெண்களைப் பார்க்கலாம்.

Regd. No. 2514

ஸ்ரீ K. S. ராமமூர்த்தி சர்மா
கணித்தது.

★

தனிப் பிரதி விலை அணா 4.
தபால் மூலமாக ... அணா 5.

மொத்த வியாபாரிகளுக்கு பஞ்சாங்க காப்பிகள் கீழ்க்கண்ட விற்பனை விகிதங்களில் சப்ளை செய்யப்படும். 100 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அனுப்பும் ஆர்டர்களும் நூற்றுக்கணக்கில்தான் இருக்கவேண்டும்.

1954 மார்ச் மாதம் இரண்டாம் வாரத்தில் பிரதிகள் வெளிவரும்.

சப்ளை விகித விலை விவரம்:

100 காப்பிகளுக்கு	...	ரூ. 24.
200 ,,	100-க்கு	ரூ. 23.
300 ,,	,,	ரூ. 22.
500 ,,	,,	ரூ. 21.
1000 அல்லது மேற்பட்ட காப்பிகளுக்கு	,,	ரூ. 20.

ஆர்டர்களை முன் பணத்துடன் சுதேசமித்திரன் ஏஜண்டுக்கோ அல்லது நேரில் ஆபீஸுக்கோ அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம். வி. பி. பி. கிடையாது.

Printed and Published by N. RAJAGOPALAN at the "Swadesamitran" Press, "Victory Ho[use]" Mount Road, Madras, Editor: C. R SRINIVASAN, B. A.

சுதேசமித்திரன்

நண்பர்:—"என்னுங்க! உங்க பெண்ணுக்கு அந்தப் பையனை கடைசியிலே நிச்சியம் பண்ணலியா ?"

பத்தர்:—" இல்லீங்க! அவங்க. பையனுக்கு மோதிரம், கடியாரச்செயின், பெண்ணுக்கு இரண்டு ஜதை வளையல் எல்லாம் வேணும்னு கேட்டாங்க...இந்தத் தொழில்லே இருந்துகிட்டு அதெல்லாம் நம்மாலே எப்படிங்க செய்ய முடியும் ?"

சுதேசமித்திரன்

சந்தா விகிதங்கள்

★

தினப்பதிப்பு

	(இந்தியா, இலங்கை, தபால் மூலம்)		சென்னை		வெளிநாடு	
	ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.
1 வருடம் ...	26	0	24	0	32	0
6 மாதம் ...	13	8	12	8	16	0
3 மாதம் ...	7	0	6	8	8	0
1 மாதம் ...	2	8	2	4	—	

தனிப்பிரதி

ஞாயிறு மலர் .... விலை 2 அணு

இதர நாட்களில் .... விலை 1 அணு

வாரப்பதிப்பு

	ரூ.	அ.	ரூ.	அ.
1 வருடம் ...	13	0	16	0
6 மாதம் ...	7	0	8	0
3 மாதம் ...	3	12	—	

தனிப் பிரதி அணு 4.

சர்க்குலேஷன் மானேஜர்,

சுதேசமித்திரன்.

பொருளடக்கம்

Vol XXV] விஜய ஞு பங்குனி மீ 1உ (14—3—54) [No. 6

கைத்தறியும் மில் ஜவுளியும்		3
காற்றுவாக்கிலே......	கரூர்	4
குதர்க்கம்	தரளம்	5
பிரதி உபகாரம்	எல்லார்வி	6
வீடு கிடைத்தது	நாதன்	11
மனோரதம்	அல்பாருக்	16
உங்கள் காலபலன்	ராவ்	18
பிள்ளைக் கனியமுது—தொடர் கதை	சுகி	23
இரு காதலிகள்	எச். ஜி. மூர்த்தி	29
நாட்டு நடப்பு	ஜகன்	30
வாழ வைத்தவள்	ஸ்ரீப்ரியா	31
ராக்ஷஸராணி	ஆஸ்திகன்	35
அனுமந்தன் குன்று	சந்தனு	38
சாரணர் உலகம்	சித்தார்த்தன்	40
ஹிந்தி உலகம்	பண்டிட்ஜி	41
குடும்பவைத்தியம்	குச்சாமாமா	43
தையற் கலை	எ. சுகுமார்	45
கலாமண்டபம்		47

'மித்திரன்' வாரப் பதிப்பில் கதைகளில் வெளியாகும் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல



உலகத்திலேயே மிக்க உயரமான ஸ்திரீ மிஸ் காட்ஜா வான்டைக். ஜெர்மனியைச் சேர்ந்த மாது. 8 அடி 4 அங்குல உயரமிருக்கிறாராம். அவரது எடை 448 ராத்தலாம். முதலில் பாடகியாக ஆரம்பித்த இவர் இப்பொழுது வருஷத்துக்கு லக்ஷ ரூபாய் வரை சம்பாதிக்கிறார் என்று கூறப்படுகிறது.



பெப்ஸுவில் காங்கிரஸுக்கு அமோக வெற்றி கிட்டியிருக்கிறது

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
வாழ்க நற்றமிழர்

Vol XXV] விஜயஸு பங்குனிமீ 1உ ★ 1954ஸு மார்ச்மீ 14உ [No 6

கைத்தறியும் மில் ஜவுளியும்

எதிர்ப்பைச் சமாளிக்க இரு வழிகள் உண்டு. ஒன்று, சுயபலத்தைப் பெருக்கிக்கொள்வது; இன்னொன்று எதிராளியைப் பலவீனப்படுத்துவது. தற்போதைய கைத்தறி-மில் போராட்டத்தில் குறிப்பாக இரண்டாவது வழியிலேயே சென்னை சர்க்கார் அதிக கவனம் செலுத்துவது தெளிவு. ஆனால் மத்திய சர்க்கார் எத்தரப்புக்கும் அவ்வளவு தெளிவான முறையில் ஓரவஞ்சனை செய்வதற்கில்லை. மில்கள் விஷயத்திலும் அவர்களுக்குப் பொறுப்புண்டு. இதோடு துணியை வாங்கி உபயோகிக்கும் பெருவாரியான மக்களைத் திருப்தி செய்விப்பதில் அவர்களுக்குள்ள பொறுப்பு இன்னும் முக்கியமானது. இதை உணர்ந்துதான் ராஜாஜிகூட, இந்த ராஜ்யத்தில் மில் துணிக்கு அதிகப்படியாக விற்பனை வரி விதிப்பதென்ற தம் யோசனையை மத்திய சர்க்கார் அங்கீகரிப்பரா என்று ஐயுறுகிறார்.

துணி வாங்கும் மக்களின் கருத்துக்கு சர்க்கார் உரிய மதிப்பு கொடுப்பது பொருத்தமே. அவர்களிலும் பெரும்பாலானவர்கள் ஏழைகள் என்பதை அதிகாரிகள் மறந்துவிடுவதற்கில்லை. அதற்காக கைத்தறி நெசவாளர்களை அவர்கள் அலட்சியம் செய்துவிட வேண்டுமென யாரும் சொல்லமுடியாது. தற்போதைய நிலையில் முற்றிலும் சுயபலத்தைக்கொண்டே அவர்கள் மில்களோடு போட்டியிட சக்தியற்றவர்கள்; எனவே அவர்களுக்கு ஏதாவதொரு வகையில் பக்கபலம் தேவை என்பது அநேகமாக அனைவரும் ஒப்புக்கொண்ட விஷயம். மில் துணி மீது தனி வரி விதித்து அதன் விலையை உயர்த்துவதுபோன்ற வழிகளில் கைத்தறி ஜவுளிக்கு அத்தகைய பலம் ஏற்கெனவே ஓரளவு அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. மில் துணி மேன்மேலும் விலை யேறும்படி செய்தால் அவ்வளவுக்கவ்வளவு தங்கள் துணிக்குக் கிராக்கி அதிகரிக்குமென்று கைத்தறியாளர் எண்ணலாம். ஆனால் இதற்குவழி விடுவதில் சர்க்கார் துணி வாங்கும் பொதுமக்களின் கருத்துக்கும் மதிப்புக்கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும் இத்தகைய வழிகளில் எதிராளியைப் பலவீனப்படுத்த முற்படுவதைவிட சொந்த பலத்தைப் பெருக்கிக்கொள்வதன் மூலமே தங்களுக்கு நிலையான வாழ்வு உறுதிப்படுமென்பதை கைத்தறி நெசவாளர் உணரவேண்டும்.

இயந்திர அபிவிருத்திக்கு தக்கவாறு கைத்தறிக்கு மில் போட்டி வரவர அதிகரித்தே தீரும். அதை வெற்றிகரமாகச் சமாளிப்பதாயின் கால மாறுதலுக்கேற்ப கைத்தறி நெசவாளரும் தங்கள் தொழில் முறைகளை மாற்றிக்கொள்ளவேண்டும். ஜனங்களின் மாறிவரும் ருசிகளை உடனுக்குடனே கண்டு அதற்குத்தக்க ஜவுளி ரகங்களை உற்பத்தி செய்வதுமட்டுமின்றி அவற்றைக் கூடியவரை குறைந்த விலைக்கு விற்கவும் வகை செய்ய வேண்டும். அவர்களுக்குத் தேவையான நூலும், மற்ற உபகரணங்களும், பொருள் வசதியும் தடையின்றிக் கிடைக்கச் செய்வதில் சர்க்கார் உருவான உதவிபுரியக்கூடும். இவ்வுதவியைப் பயன்படுத்திக்கொள்வதில் கைத்தறி நெசவாளர்களுக்குக் கூட்டுறவு முறையைப் போல் பயன்படக்கூடியது எதுவுமில்லை. உற்பத்தி செய்யும் ஜவுளியை உள்நாட்டிலும், வெளியிடங்களிலும் கூடியவரை லாபகரமாக விற்கவும் அந்த முறையே உகந்தது. பொதுஜன ஆதரவுள்ள ஒரு தொழில் வேகமாக வளர்ச்சியடைவது இயல்பு. அதில் உற்பத்தியாகும் சரக்கின் தரமும், விலையும் மேன்மேலும் நயப்படுவது அவ்வாதரவைப் பொறுத்தது. எனவே கைத்தறித் தொழிலின் வாழ்வில் அக்கரை கொண்ட அனைவரும் அதன் வளர்ச்சிக்கு உதவக்கூடிய வழி கைத்தறி ஜவுளி வாங்கி உடுத்துவதுதான். இது லட்சக்கணக்கான கு[illegible]பங்களுக்குப் பிழைப்பளிக்கும் தொழில் எ[illegible]தைக் கருதி இதற்குக் கூடியவரை ஆதர[illegible]பது பொதுமக்கள் கடமை.

ஆனால் சர்க்கார் சம்பந்தப்பட்டவரைகளுக்கு ஒரு கொள்கைதான் தெளிவாக [illegible] வேண்டும். அதாவது மில் துணி உற்பத்[illegible] பாதகம் விளைக்காத வகையில் எல்லாவிதலும் கைத்தறி ஜவுளிக்கு ஆதரவளிப்பது. [illegible] தகைய கொள்கைக்கு மில் துணி உற்பத[illegible]ளர்கள், கைத்தறியாளர்கள், பொதுமக்கள் [illegible]லாருடைய ஒத்தாசையும் கிடைக்கும். எந்த தொழிலுக்காவது பக்ஷபாதம் காட்டினால் அது நாட்டின் பொது நன்மைக்குத் தீங்கு விளைக்கும் என்பதை சென்னை அரசாங்கம் உணருமென்று நம்புகிறோம்.

காற்றுவாக்கிலே..

அப்பாடா---! நெசவாளர் பிரச்னை ஒருவிதமாகத் தீர்ந்தது. இடைவிடாது தறிகள் இயங்கும் இனிய ஓசை, இனி மதுர மோஹன கீதமாக காற்றினிலே மிதந்து வரும். ஆண்டியும், அதிபரும் பேதமின்றி தரிப்பதும் குடிசை சரக்கே. பகட்டாக பெண்டிர் பவனி போவதும் கையினால் நெய்த பல வண்ணச் சேலையில்தான். கியூவரிசை வழிந்தோடிய கஞ்சித் தொட்டிகள், காக்கை விரட்டிக்கொண்டிருக்கும். பாவம்; கப்பரை ஏந்திய தொழிலாளி, "எனக்கு எவர் நிகர்" என மிடுக்காக நடைபோட்டுச் செல்வார். "இவர்தான் மிஸ்டர் நெசவாளி" என்று கவுரவமாக அறிமுகம் செய்விக்கப்படும் சமூக வாழ்வில்!

நடைபாதையில் சோர்ந்துஅயரும் நெசவாளியின் கனவைச் சித்தரிப்பதாக நினைக்கிறீர்களா? சேச்சே! கொஞ்ச நாளாக தமிலோகப்பட்டு முடிந்ததே "கைத்தறி வாரம்", அதன் பலனை விவரிக்கிறேன். ராஜாஜி பேச்சு கிடக்கிறது, தூரத் தள்ளுங்கள். டி. டி. கே. உள்பட நேரு, ராஜன் ...ாபு முதல் சர்க்கார் குமாஸ்தா ...வரை சகலரும் விடுத்த வேண்டு ...கோள் வியர்த்தமாகி விடுமா ...னா?

...கத்தறி நெசவு என்ற ஒரு ...ழில் இருப்பதாக ஜனங் ...கு, இந்த திருவிழாவுக்குப் ...ாவது மூளையில் ஏறுவிடில் ... ஈரேழு ஜன்மங்களுக்கும் ...க்காது. பிரசங்கங்களைக் ...டு மாறுத மில் துணி மைன ...மனம், பாட்டுக் கச்சேரி, ...டியத்தைப் பார்த்தாவது ...ரியிருக்கும்! கைத்தறி நட...நதைக் கண்குளிரக் கண்டவர், ...லே ரஸிகருக்கு அழகு கைத்தறி ஆடை அணிதல்" என்ற சங்கல்பம் பூண்டிருப்பார்!

கொண்டாட்டம் முடிந்தும் திண்டாட்டம் தீரவில்லையே; தேங்கிக் கிடந்த ஸ்டாக்கில் ஒரு பகுதிதானே கரைந்தது என்று கேட்கலாம். கொஞ்சம் பொறுங்கள். வெளிநாட்டில் எம்போரியம் திறந்து, அங்கு சாக்கு பிடித்து, ஆர்டர் குவியும்வரை காத்திருக்கச் சொல்லவில்லை. ஜனங்களின் தியாக, அனுதாப உணர்ச்சிப் பிரவாகம் கைத்தறிக் கடைவரை பெருக்கெடுத்தோடி வருகிறதா? என்றுகூட நிதானிக்க வேண்டாம். போட்டி போட்டுக்கொண்டு மில் துணி மீது அனுக்கணக்கில் விற்பனை வரியைத் தாக்கியிருக்கிறார்களே அதற்காவது பலனிருக்கிறதா பார்ப்போம். இதனால் கைத்தறி நிறைய விற்பனையானால் ரொம்ப நல்லது; மில் ஜவுளி மோஹம் மங்காவிடில் வரி கணிசமாக வசூலாகி அதிக மான்யம் கிடைக்கும். மக்கள் ஒரேயடியாக ஸ்டிரைக் செய்து விட்டாலோ?—அப்படி குறுக்கே பாயாதிருக்கத்தானே வாரம், கூரம் கொண்டாடி தாஜா பண்ணுகிறோம்!

"ஸார்! தூக்கமருந்தை ஜாஸ்தி உபயோகிக்காதேயுங்கோ! அப்புறம் அதுவே பழக்கமா போய்விடும்!"

"என்ன டாக்டர் அப்படிச் சொல்றேளே! நானும்தான் பத்து வருஷமா தூக்க மருந்தை உபயோகிக்கறேன்! அது எனக்குப் பழக்கமாக ...... !"

என்னைக் கேட்டால் ராஜாஜி கேட்டபடி வேஷ்டி சேலையைப் பிரத்யேகமாக ஒதுக்கியிருந்தால்கூட தேவலை போலிருக்கிறது. மத்திய சர்க்கார் 'மக்கர்' பண்ணப்போக, கோட், கால் சட்டை, ஷர்ட் துணிக்குக்கூட அதிகம் கொடுத்து வாங்கவைத்து விட்டார். படித்தவர்களுக்கு அத்தியாவசிய உத்தியோக டிரஸ் அல்லவா இது? அவர்கள் கூச்சல் கிளப்பி, கிளர்ச்சி பண்ணி டில்லியைத் தம் வழிக்குத் திருப்பட்டுமே என்ற எண்ணம்கூட அவருக்கு இருக்கலாம். நிற்க,

நம்மை கட்டாயமாக கண்ணியவானாக்கும் முயற்சியோ என்னவோ இது! கச்சம் கட்டும் கனவான்களும், சீமான்களும் மில் வேஷ்டியை ஏற எடுத்துப் பார்க்காத காலமும் இருந்தது. கைத்தறி ஆடை தரிப்பதே கண்ணியமாகக் கருதப்பட்டது. இன்று ஜோடி ஆறு ரூபாய்க்கு கிடைப்பது இருபது ரூபாய்க்கு மேல் உயரவே கண்ணியத்தை விட்டு காசு மீது குறி திரும்பியது. பண்டத்தை நோட்டம் பார்க்கும் கெட்ட பழக்கமும் ஏற்பட்டது. பழைய காலம் திரும்பியும், புதிய பழக்கம் திருந்தவில்லை. ஆகவே, எளிதில் கிடைக்கும் ஆலை ஜவுளியை எட்டாக் கிளைக்கு உயர்த்துகிறார் நம் முதன் மந்திரி. மீண்டும் கைத்தறி தரித்து கண்ணியவானாவதைத் தவிர வேறு என்ன வழியிருக்கிறது?

நெசவுத் தொழிலை உன்னதமானதென்று திருவள்ளுவரே புகழ்ந்து பாடியிருக்கிறார். அவரைச் சாட்சிக்கு இழுக்காவிடில் இந்த காலத்தில் எந்த வாதமும் பூர்த்தியாகாதே. அப்பேர்ப்பட்ட தொழில் தயாரிப்புகளை மனமுவந்து, போற்றி, பேணி, ஆதரிப்பது நம் கடமையல்லவா? ஏனெனில்,

கை ஆடையணிந்து வாழ்வாரே
வாழ்வர் மற்றெல்லாம்
பொய் உடையணிந்து பின்செல்பவர்

—றென்

—கருர்.

குதர்க்கம்

ஸிரியாவின் மாஜி ஜனாதிபதி ஸ்ரீ அதிப்ஷிஷக் க்ஷேத்திராடனத்திற்குக் கிளம்பிவிட்டார்.

—மெக்காசெய்தி.

ஒருக்கால், மோக்ஷ சாம்ராஜ்யத்தையும் ஆளவேண்டுமென்ற திருவுள்ளத்திலிருக்குமோ, புறப்பாடு?!

• • •

முப்பத்தாறு வருடங்களுக்கு முன்பு கடைசியாக ஒரு காடியைத் தாம் வேட்டையாடியதாக ஸ்ரீ நேருஜி பார்லிமெண்டில் குறிப்பிட்டார்.

—புதுடில்லி செய்தி.

'அதற்கப்புறம் கம்யூனிஸ்டு 'காடி' வேட்டையில் முழு மூச்சுடன் இறங்கிவிட்டார்போலும்!' என்று வியாக்கியானம் செய்கிறார் இங்கொரு அரசியல் யதார்த்த வாதி!

• • •

யோகம் கற்றுச் செல்வதற்காக ரஷ்யாவிலிருந்து நிபுணர்களை இந்தியாவிற்கு அனுப்பிவைக்கவும், ரஷ்யாவில் யோகப் பயிற்சியைத் தீவிரப்படுத்தவும் தாம் முயற்சிக்கப்போவதாக ஸோவியத் கலாசார மந்திரி கூறினார்.

—பம்பாய் செய்தி.

பலே! யோகத்திற்கு இப்பொழுது நல்ல 'யோகம்' அடிக்கிறது போலிருக்கிறதே!!

• • •

பத்து ஏகராவரை லைசென்ஸ் இல்லாமல் உப்பு உற்பத்தி செய்யலாம் என்றிருந்த சலுகையை ரத்து செய்து இனிமேல் இரண்டரை ஏகராவுக்குத்தான் அந்த சலுகையளிப்பதென இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளது.

—புதுடில்லி செய்தி.

எனவே, பல உப்பு உற்பத்தியாளர்கள் சர்க்காரைக் 'கரித்துக்கொட்டி'க் கொள்வார்களானால் வியப்பில்லை!

• • •

போட்டிப் பயில்வான்களை ஆதரிக்கும் பக்தர்களிடையே ஏற்பட்ட குஸ்தியில் 5 பேர் பலியானதுடன், பலர் காயமுற்றனர்!

—பகல்பூர் செய்தி.

'தமது பக்தகோடிகளின் 'கைவன்மை'யைக் கண்டு பிரஸ்தாப பயில்வான்கள் அப்படியே மூக்கில் விரலைவைத்து அசந்திருப்பரே' என்று ஹாஸம் செய்கிறார் ஸ்ரீமான் கிண்டல்நாயகம்!

• • •

மத்திய நிதி மந்திரி ஸ்ரீ தேஷ்முக் தலைமையில் ஆசியப் பொருளாதாரப் புள்ளி விவர மகாநாடு நடைபெற்றது.

—புதுடில்லி செய்தி.

'அதையெல்லாம் பற்றி நமக்கென்ன? 'பெரிய புள்ளி'களின் விஷயமாச்சே!' என்கிறார் மிஸ்டர் பொதுஜனம்!

—நாரதம்.

ரயில் நேரங்கள்

★

சென்ட்ரல் ஸ்டேஷன்

புறப்படும் நேரம்

கல்கத்தா மெயில்	இரவு 8—8
கிராண்டிராங் எக்ஸ்பிரஸ்	காலை 8–45
பூரி பாஸஞ்சர்	இரவு 7–10
பெஜவாடா பாஸஞ்சர்	காலை 6–35
பம்பாய் மெயில்	இரவு 9—0
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 7–35
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	காலை 9–10
ரேணிகுண்டா பாஸஞ்.	மாலை 5–30
„ „	——
பெங்களூர் மெயில்	இரவு 8–45
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 12–15
பெங்களூர் பாஸஞ்சர்	காலை 6–10
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு 9—8
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 7–55
„ „	மாலை 2—5
„ „	மாலை 6–47
„ „	இரவு 9–35
மங்களூர் எக்ஸ்பிரஸ்	இரவு 7–30
கொச்சின் எக்ஸ்பிரஸ்	மாலை 6–10
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு 8–10
ஜோலார்பேட்டை பாஸஞ்.	காலை 11–25
விசாகை பாஸஞ்சர்	இரவு 10–45
ஜனதா எக்ஸ்பிரஸ் 3–வது வகுப்பு மட்டும் சென்னை–பம்பாய் (பிரதி வியாழன் மட்டும்)	பகல் 2—0
டெல்லி–சென்னை ஜனதா எக்ஸ்பிரஸ் (3–வது வகுப்பு மட்டும்) பிரதி வியாழன்	மாலை 12–30

வரும் நேரம்

கல்கத்தா மெயில்	காலை 7–20
கிராண்டிராங் எக்ஸ்பிரஸ்	மாலை 5–50
பூரி பாஸஞ்சர்	காலை 9—0
பெஜவாடா பாஸஞ்சர்	இரவு 8–30
பம்பாய் மெயில்	காலை 5–50
பம்பாய் எக்ஸ்பிரஸ்	இரவு 7–20
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	மாலை 3–25
ரேணிகுண்டா பாஸஞ்சர்	காலை 9–48
„ „	இரவு 9—0
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 8–50
„ „	மாலை 4–25
„ „	——
„ „	மாலை 7–50
பெங்களூர் மெயில்	காலை 6–25
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 2–55
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு 8–10
பெங்களூர் பாஸஞ்சர்	காலை 6–50
மங்களூர் எக்ஸ்பிரஸ்	காலை 7–30
கொச்சின் எக்ஸ்பிரஸ்	காலை 8–25
நீலகிரி எக்ஸ்பிரஸ்	காலை 7–10
ஜோலார்பேட்டை பாஸஞ்.	பகல் 1–20
விசாகை பாஸஞ்சர்	காலை 5—0
ஜனதா எக்ஸ்பிரஸ் (3–வது வகுப்பு மட்டும்) சென்னை–பம்பாய் (பிரதி திங்கள் மட்டும்)	பகல் 3–20
டெல்லி–சென்னை ஜனதா எக்ஸ்பிரஸ் (3–வது வகுப்பு மட்டும்) பிரதி செவ்வாய்	மாலை 5–30

எழும்பூர்

புறப்படும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 7–40
இந்தோ–சிலோன் எக்ஸ்.	இரவு 8—0
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	இரவு 9–40
விருதுநகர் பாஸஞ்சர்	இரவு 10–15
விழுப்புரம் பாஸஞ்சர்	மாலை 3–50
கார்டு லைன்	
திருவனந்தபுரம் எக்ஸ்.	இரவு 8–20
தனுஷ்கோடி பாஸஞ்சர்	காலை 11–20
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	இரவு 7–15
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	இரவு 9–55
பீச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	மாலை 5–32
„ „	மாலை 6—1

வரும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	இரவு 7—5
இந்தோ–சிலோன் எக்ஸ்.	காலை 7–25
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	காலை 5–30
விருதுநகர் பாஸஞ்சர்	காலை 5—0
விழுப்புரம் பாஸஞ்சர்	காலை 11–15
கார்டு லைன்	
தனுஷ்கோடி பாஸஞ்சர்	மாலை 3—5
திருவனந்தபுரம் எக்ஸ்.	காலை 6—0
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	காலை 7—0
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	காலை 5–40
பீச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	காலை 9–26
„ „	காலை 9–52

பிரதி உபகாரம்

'எல்லார்வி'

என் குழந்தை ராஜேசுவரிக்கு ஒரு நாள் ஜுரம் வந்து குணமாயிற்று. மறுநாள் இரண்டு கால்களும் சுவாதீனம் இல்லாமல் போய்விட்டன. ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்தேன். என் மனைவி குழந்தைக்கு துணையாக அங்கே இருந்தாள். நான் அடிக்கடி போய்ப் பார்த்து வந்தேன்.

அன்று மாலை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வந்து பஸ் ஸ்டாண்டை அடைந்து அரை மணிக்குமேல் ஆகியும் பஸ்வரவே இல்லை. நேரம் ஆக ஆகக் கூட்டம் அதிகரித்துக்கொண்டே இருந்தது. இந்தக் கூட்டத்தில் முண்டியடித்துக்கொண்டு பஸ்ஸில் ஏறுவதெப்படி என்பதே ஒவ்வொருவரின் யோசனையாகவும், பேச்சாகவும் இருந்தது. ஆனால் என் மனதில் அப்போது அந்தப் பிரச்னை அவ்வளவாக முக்கிய ஸ்தானம் பெறவில்லை. ஒரு பஸ் இல்லாவிட்டால் மறு பஸ்ஸிலே போகிறது. இது என்ன பிரமாத விஷயம்? என்று அதை ஒதுக்கிவிட்டு அதை விடப் பெரிய விஷயங்களைப் பற்றி எண்ணமிடலானேன்.

நிறை கர்ப்பிணியான என் மனைவி ஆஸ்பத்திரியில் குழந்தைக்குத் துணையாகத் தங்க நேர்ந்திருப்பது, வீட்டிலே உள்ள இதர குழந்தைகளின் நிலை, ஆபீஸில் உள்ள கடுமையான வேலைகள். மனித சகாயமற்ற நிலைகடன் தொல்லைகள்; பணப் பிரச்னை– இத்தனைக்கும் மத்தியிலே கேவலம் இந்த பஸ் பிரச்னை எம்மாத்திரம்?

முந்தின நாள் ஆபீஸில் என் மேலதிகாரி என்னிடம் அனுதாபங்காட்டிப் பேசிக்கொண்டிருந்தபோது சொன்னார் 'மற்றவர்களுக்கு கஷ்டங்கள் சம்பவித்தால் வெறும் அனுபவத்தோடு சரி. எழுத்தாளர்களுக்குக் கஷ்டம் நேர்ந்தால் அவை வீண் போகா. உடனடியாகவோ, சிறிது காலத்திற்குப் பிறகோ நல்ல பலனைக்கொடுக்கும்.

இதன் உள்ளர்த்தம் ஒன்றும் கடினமானதல்ல. எழுத்தாளனின் துயர அனுபவங்கள் சிறந்த சோகக் கதைகளாக மறுமலர்ச்சி பெறும் என்பதுதான். இதை நினைவு கூர்ந்ததும் எனக்கு ஒரு வறட்டுச் சிரிப்புத்தான் வந்தது. பிறர் படுகிற கஷ்டங்களைத்தான் வக்கணையாகச் சித்தரிக்க முடியுமே தவிர சுயமாக அனுபவிக்கிற காலத்தில் மனம் அலமந்து போய்விடும் என்பது என் எண்ணம். அதை நடைமுறையிலே அப்போது கண்டுகொண்டிருந்ததுதான் அந்த வறட்டுச் சிரிப்புக்குக் காரணம்.



பஸ் தொலைவில் தெரிந்தது. கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. ஏற்கனவே அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்த சட்டைப் பையை மேலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அதில் உள்ள கிழிந்த மணிபர்ஸையும் சில அணுக்களையும் காப்பாற்றுவதில் தீவிரமாயிருந்தேன். சென்னை பஸ் ஸ்டாண்டுகளில் திருட்டு அதிகமாகிக் கொண்டிருந்ததே என் உஷாருக்குக் காரணம்.

பஸ் வந்து நின்றது. ஒரே ரகளை மல் யுத்தம். வண்டி திணறும் அளவுக்கு ஜனங்கள் ஏறிவிட்டனர். நானும் இடுக்கிலே புகுந்து இடம் பிடித்து விட்டேன். கண்டக்டர் அதிகப்படி ஆட்களை இறக்கி விட்டு ரைட் கொடுத்தான். வண்டி புறப்பட்டது.

பிளாட்பாரத்தில் எஞ்சியிருந்த ஜனத்திரளிலிருந்து உருப்புரியாத ஓலம். இனம் தெரியாத பேச்சு. 'நிறுத்து நிறுத்து! பஸ்ஸை நிறுத்து!' என்று சிலர் கூவினர். பஸ் நின்றுவிட்டது. குழப்பம் அதிகரித்தது. அருகே பீட் கொடுத்துக்கொண்டிருந்த போலீஸ் சேவகன் வந்தான். விஷயம் அம்பலமாயிற்று.

கண்டக்டர் இறக்கிவிட்ட அதிகப்படி ஆசாமிகளுள் ஒருவருடைய சட்டைப் பையிலிருந்த மணிபர்ஸ் 'அபேஸ்' ஆகிவிட்டது. அதில் எண்பத்தாறு ரூபாயும் சில்லரையும் சில கடிதங்களும் கண்ணன் என்கிற அவருடைய குழந்தையின் புகைப்படமும் இருந்தன என்று பர்ஸைப் பறி கொடுத்தவர் சொல்லிக் கொண்டிருந்தார். வண்டிக்குள்தான் திருட்டுப் போயிருக்க வேண்டும் என்றும் அனுமானித்தார். அப்படியானால் திருடன் பஸ்ஸுக்குள்ளேதான் இருக்க வேண்டும் என்று போலீஸ்காரன் சோதனைபோட ஆரம்பித்தான். 'திருடியவன் நெடுந் தூரம் போயிருப்பான். இது வீண் வேலை' என்று சிலர் பேசிக் கொண்டனர்.

என் உள்ளத்தில் சற்றுமுன் சூழ்ந்திருந்த கவலைகள் அப்போதைக்கு அகன்று கொடுத்தன. நானும் மற்றவர்களைப் போல் பிரஸ்தாப விஷயத்தைப்பற்றி எண்ணமிடலானேன்; ஆனால் வாய்விட்டு எதுவும் பேசவில்லை. போலீஸ்காரன் வண்டியில் இருந்தவர்களைச் சோதனை இட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் என் மனதில் விசித்திரமான, விபரீதமான ஓர் எண்ணம் உதயமாயிற்று, 'நகர்ப்புறங்களில் நாகரிகமாக உடுத்துக்கொண்டு திருட்டுத் தொழில் புரிபவர் உண்டு என்கிறார்களே; அப்படிப்பட்ட ஒரு நாகரிகத் திருடன் இப்போது இந்தப் பஸ்ஸுக்குள்ளிருந்து வெளிப்பட்டால் எப்படி இருக்கும்?' என்று.

நான் இப்படி எண்ணமிட்டுக் கொண்டிருக்கையிலேயே, "இதோ திருடன்! இதோ திருடன்!" என்று குரல்கள் எழுந்தன.

ஜனங்கள் ஒலிவந்த திசையிலே நோக்கப் போட்டியிட்டனர்.

பறிகொடுத்த ஆசாமியைப் பஸ்ஸில் ஏற்றினான் சேவகன். பஸ்ஸைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டச் சொன்னான்.

சுயநலத்தில் மிகக் கருத்துடைய சிலர் அவன் கூற்றை ஆட்சேபித்து ஆர்ப்பரித்தனர். அத்துடன் நில்லாது தலைபோகிற காரியம் இருப்பதாகச் சொல்லிக்கொண்டே வண்டியைவிட்டு இறங்கியும்விட்டனர். அவர்கள் படை திரண்டு இறங்கிய வேகத்தில் வழியில் நின்றுகொண்டிருந்த நானும் உந்தப்பட்டு வண்டியினின்றும் கீழிறங்கினேன்.

சிலர் மட்டும் அசையாமல் பஸ்ஸிலே உட்கார்ந்திருந்தனர். அவர்களை, 'சத்தியத்திற்குப் பாடுபடும் மனித தெய்வங்கள்' என்று கிண்டல் செய்தனர் சிலர். 'அக்கப்போரில் அபிருசியுடையவர்கள்' என்று அப்பட்டமாக இடித்துக் கூறினர் மற்றும் சிலர்.

இதற்குள் அடுத்தாற்போல் ஒரு பஸ் வந்து நின்றது. எல்லோரும் அதை நோக்கி ஓடினர். நானும் ஓட நினைத்தேன். இடையே ஒரு சபலம்: அந்த ஜேபடி திருடன் யார் என்று பார்க்க மனம் அவாவியது. வண்டிக்குள் நோக்கினேன்.

என்ன ஆச்சரியம்! சற்றுமுன் நான் எண்ணிய விபரீத எண்ணம் வீண் போகவில்லை. ஸூட்டும் ஹாட்டுமாய்ப் பெரிய ஆபீஸரின் தோற்றத்தில் இருந்த ஒருவர் வண்டிக்குள்ளிருந்த மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தார்: "இது மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. இந்த மணிபர்ஸ் என் கை பைக்குள் எப்படி வந்ததென்று எனக்கே தெரியவில்லையே...."

போலீஸ்காரன் கண்டக்டரை முடுக்கினான். கண்டக்டர் 'ரைட்' என்றான். பஸ் புறப்பட்டது; வளைந்து திரும்பிற்று. அதுவரை குற்றவாளியாகப் பிடிபட்டிருந்த ஆசாமியின் முதுகுப்புறம் மட்டுமே தென்பட்ட என் கண்ணில் பஸ் திரும்பியபோது அவர் முகமும் நன்றாகத் தெரிந்தது.

"ஐயயோ! அவர் டாக்டர் புருஷோத்தமன் அல்லவா?" என்று வாய்விட்டுக் கூறினேன். ! என் கூவலைக்கேட்க அருகே யாருமே இல்லை என்பதை அப்புறந்தான் உணர்ந்தேன். அடுத்தடுத்துவந்த மூன்று பஸ்களில் எல்லோரும் ஏறிப் போய்விட்டிருந்தனர்.

தொலைவில் இன்னொரு பஸ் வந்து கொண்டிருப்பதைக் கண்டேன். அது நான் இருக்கும் இடத்தை நோக்கி வரவர என் மனத்திலே போராட்டமும் அதிகரித்தது. 'இந்தப் பஸ்ஸிலே ஏறி வீடு செல்வதா; போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ப் புருஷோத்தமன் தரப்பிலே சாட்சி சொல்லி அவரை விடுவிப்பதா?' என்று குழம்பினேன். அப்போது சென்டிரல் ஸ்டேஷன் கடிகாரம் மணியடிக்கத் தொடங்கிற்று. நிமிர்ந்து பார்த்தேன். மணி எட்டு!

'ஆ!...குழந்தைகள் என்னைக் காணாமல் கண்ணைக் கசக்கியபடி தெருவாசலில் நிற்பார்களே!...'

அவ்வளவுதான். பஸ்ஸை எதிர்கொண்டு ஓடிச் சென்று தாவி ஏறினேன். சஞ்சலத்தோடு பிரயாணம் செய்தேன்.

இரவெல்லாம் புருஷோத்தமனைப்பற்றிய நினைவுதான். 'மாசம் ஆயிரம் ரூபாய்க்குமேல் சம்பாதிப்பவர், பரம்பரைப் பிரபு, ஏழை பங்காளர். அவருக்கு இந்தச் சோதனையா?' என்று வெதும்பினேன். 'எவனோ செய்த காரியம் அவர் தலையிலே சுமந்ததே' என வருந்தினேன்.

காலையில் என் பெரிய பையன் வழக்கம்போல் அடுத்த வீட்டுக்குச் சென்று வாங்கிவந்த இரவல் தினசரிப் பத்திரிகை விஷயத்தை விளக்கமாகக் கூறிற்று.

புருஷோத்தமருக்கு நன்கு அறிமுகமான அந்த டிவிஷன் போலீஸ் அதிகாரி பர்ஸை உரியவரிடம் கொடுத்து அனுப்பிவிட்டுப் புருஷோத்தமனைத் தமது மோட்டார் சைகிளில் ஏற்றிக்கொண்டு தம் வீட்டுக்குச் செல்கிற மார்க்கத்திலே உள்ள

கேசவ்புரத்தில் புருஷோத்தமன் வீட்டிலே விட்டுவிட்டு மன்னிப் புக்கோரிச் சென்ருர் என்ற விஷயம் பத்திரிகையை முந்திக் கொண்டு தெருவிலே போவோர் வருவோர் பேச்சிலேயே அடிபடலாயிற்று.

அன்று விடுமுறை நாள். எனவே புருஷோத்தமனைப் பார்த்துவரலாம் என்று புறப்பட்டுச் சென்றேன். அவர் வீட்டை நான் சமீபிக்கிறபோது என்னை முந்திக்கொண்டு இளம் வயதுடைய ஒரு ஸ்திரீ காம்பவுண்டு கேட்டைத் திறந்துகொண்டு உள்ளே செல்வதைக் கண்டேன். அவள் கைவிரலில் ஏதோ கட்டுக் கட்டியிருப்பதும் கண்ணில்பட்டது. 'ஓ! இன்று டிஸ்பென்ஸரி விடுமுறையானதால் இந்த அம்மாள் வைத்தியத்தை முன்னிட்டு வீட்டுக்கே வந்துவிட்டாள் போலும்' என்று எண்ணிக்கொண்டேன். உடனே, 'ஆனல் அவர் அவசரக் கேசுகள் தவிர வீட்டில் யாரையும் அனுமதிப்பதில்லையே! அதிலும் மனைவி இறந்துபோனபின் ஸ்திரீகளைக் கண்டிப்பாக அனுமதிப்பதில்லையே! இந்த அம்மாளுக்கு அது தெரியாதோ' என்றெல்லாம் எண்ணமிட்டபடி மெல்ல நடந்தேன்.

அந்தப் பெண்மணி வராந்தாவைக் கடந்து அப்பால் இருந்த திரையை ஒதுக்கிக்கொண்டு ஹாலுக்குள் நுழைந்தாள். நான் வராந்தாவை அடைந்து, 'அவள் சென்றபின் நாம் போய்ப் புருஷோத்தமனைப் பார்க்கலாம்' என்று அங்கே கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தேன். அப்போது ஹாலிலிருந்து. புருஷோத்தமன் குரல் கேட்டது.

"அடடே! ... லக்ஷ்மியா! ... வா அம்மா."

இதைத் தொடர்ந்து லக்ஷ்மியின் பேச்சுக்குரல் கேட்கவில்லை; தேம்பித் தேம்பி அவள் அழும் சத்தங்கேட்டது.

"வருத்தப்படாதே அம்மா. என்ன செய்வது? எல்லாம் விதியின் செயல். கிடக்கிறான் போ; முட்டாள் பயல்!"

புருஷோத்தமனின் இந்தச் சமாதான வார்த்தைகளால் லக்ஷ்மியின் துயரமும் அழுகையும் அதிகரித்தனவேயன்றி குறையவில்லை.

"ஹூம்! நான் என்ன என்னவோ கனவுகண்டேன். கடைசியில் கடவுள் உன்னை இந்த நிலைக்கு உள்ளாக்கிவிட்டான் விவரம் அறிந்ததிலிருந்து என் மனம் ...."

"உங்களுக்கு எல்லாம் தெரியுமா?" விம்மலுக்கிடையே இப்படிக் கேட்டாள் லக்ஷ்மி.

"தெரியும் அம்மா, எல்லாம் தெரியும். அந்தப் படுபாவிஎன்றைக்கு உன்னை வயிறும் பிள்ளையுமாய், நிராதரவாய் விட்டுவிட்டு எவளோ ஒரு நாடோடிக் கழுதையுடன் ஓடிப்போனனோ அதற்கு மறுநாளே தெரியும். தெரிந்து என்ன பயன்? அப்போது இங்கே என் மனைவி படுக்கையில் இருந்தாள். சற்றுக் குணமானதும் கிராமத்திற்கு வரலாம்; உனக்கு உதவலாம் என்று நினைத்தேன். இரண்டு மாதப் போராட்டத்திற்குப்பின் அவள் போயே போய்விட்டாள். பிறகு கிராமம் சென்றேன். நீ அங்கே இல்லை. சரியான விவரமும் கிடைக்கவில்லை. வருத்தத்தோடு திரும்பினேன். இன்றுதான் மறுபடி உன்னைப் பார்க்கிறேன். இவ்வளவு நாள் நீ எங்கே இருந்தாய்; என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"அவர் தலை மறைந்ததுமே இருந்த சொற்ப நிலத்தையும் இடிந்த வீட்டையும் கடன்காரர் கைப்பற்றிக்கொண்டனர். நான் பட்டினியால் வருந்த நேர்ந்தது. பிறந்ததுமே பெற்றோரை இழந்துவிட்ட துர்ப்பாக்கியவதியான என்னை உறவினரும் உதாசீனம் செய்தனர். ஊரில் உள்ள காலிகள் உபத்திரவம் செய்யத் தொடங்கினர். உங்கள் ஒருவரைத்தவிர இந்தப் பூலோகத்தில் உற்ற மனிதர் யாருமே இல்லை. உங்கள் விலாசமோ தெரியவில்லை. என்ன செய்வது? ஊரை விட்டுக் கிளம்பினேன். பிரயாசைப்பட்டு இங்கே வந்து சேர்ந்தேன். ஓர் உத்தியோகஸ்தர் வீட்டிலே சமையல் வேலையில் அமர்ந்தேன். தாயானேன். குழந்தைக்கு அடிக்கடி உடம்புக்கு வந்தது. அவர்கள் வீட்டில் என்னை வேலைக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். குழந்தையும் கையுமாய்த் தெருத் தெருவாக அலைந்து பிச்சை எடுத்தேன். குழந்தைக்குத் திடீரென்று உடல் நிலை அதிகம் பாதிக்கப்பெற்றது. ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்தேன். அங்கே இலவச வைத்தியம் என்றார்கள். ஆனல் ஒரு டாக்டர் வந்து குழந்தையைப் பரிசோலனை செய்துவிட்டு ஏதோ ஒரு மருந்தைக் குறித்துக் கொடுத்து வாங்கிவரச் சொன்னர். நான் என் நிலையை அவரிடம் விளக்கினேன். அவர் அதை காதிலேயே வாங்கிக்கொள்ளாமல் வேகமாகப் போய்விட்டார். 'குழந்தை பிழைக்கவேண்டுமானல் மருந்தை வாங்கிவா' என்று அவர் சொன்னது என் காதிலே ஒலித்துக்கொண்டே இருந்தது. தாலி முதல் சகலமும் முன்னரே என்னிடமிருந்து அகன்றுவிட்டிருந்ததால் என்ன செய்வதென்று புரியாமல் திருதிருவென்று விழித்தபடி ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே வந்தேன். நடைபாதை யோரத்தில் காலில் சரக்கென்று என்னவோ ஏறிற்று. எடுத்து வெளிச்சத்தில் பார்த்தேன். க்ஷவரம் செய்துகொள்ளுகிற பிளேடின் ஒடிந்த துண்டு. அதை வீசி எறிந்துவிட்டுக் காலைப் பார்த்தேன். ரத்தம் பீறிட்டது. மனதில் வேறொரு பிரச்னை உலுக்கிக் கொண்டிருந்ததால் வலி தோன்றவில்லை. தெருப் புழுதியை அள்ளிக்



"நம்ம கல்யாணராம பாகவதர், அநுமார் கோவில் பஜனை கோஷ்டியிலே தினசரி பாடுகிறாரமே, வாஸ்தவமா?"

"தெரியாது. ஆனல், கூட்டமில்லை என்று சொல்லிக்கொள்வதைப் பார்த்தா, நீ சொல்வது வாஸ்தவமாக இருக்கலாம் என்று தோன்றது!"

காலில் தாவித் தேய்த்துவிட்டு நிமிர்ந்து நின்று நாற்புறமும் நோக்கினேன். நகரத்தின் வசீகரத் தோற்றத்திலே என் ஒருத்தியைத் தவிர ஏனையோர் அனைவரும் குதூகலமாக இருப்பதாக வேபட்டது. 'மூன்று ரூபாய் விலையில் ஊசலாடும் என் கண்மணியின் உயிரை மீட்க வழியே இல்லையா?' என்று யோசித்தேன். 'இருக்கிறது' என்றது அருகே இருந்த பஸ் ஸ்டாண்டில் தெரிந்த கூட்டம். மின்னல் வேகத்தில் மூளை வேலை செய்தது. வீசியெறிந்த பிளேடுத் துண்டைத்தேடி எடுத்துக் கொண்டு அந்தக் கூட்டத்தை நோக்கி விரைந்தேன். அப்போது ஒரு பஸ் வந்தது...."

"ல..க்ஷ்..மீ..!" என்று கூவினார் புருஷோத்தமன்.

லக்ஷ்மி மறுபடியும் அழ ஆரம்பித்தாள். அழுதுகொண்டே, "குழந்தைப் பாசத்தால் நான் துணிகரமாகச் செய்த அந்தக் கொடிய செயலால் என் காரியம் கைகூடவில்லை. பிளேடு அறுத்துக் கையில் காயம்பட்டதுதான் மிச்சம்; அந்த மணி பர்ஸ் உங்கள் கைப் பைக்குள் விழுந்து பெற்ற தகப்பனுருக்கும் மேலான வாத்ஸல்யத்துடன் என்னைக் காப்பாற்றிக் கல்யாணம் செய்துகொடுத்த உங்கள் கௌரவத்திற்கு இழுக்குத்தேடித் தந்ததுதான் மிச்சம்" என்று சொல்லிவிட்டுக் குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்தாள். டாக்டர் நெடுமூச்செறிந்தார்.

"இன்று என் விலாசம் எப்படித் தெரிந்தது?"

"ஆஸ்பத்திரியிலே சில டாக்டர்கள் பேசிக் கொண்டார்கள், உங்களைப்பற்றி.".

"என்னவென்று?"

"எவனோ சோதாப்பயல் ஜேப்படி வேலை செய்ய அது நம்ம புருஷோத்தமன் தலையில் விடிந்தது" என்றார் ஒருவர்.

"'புருஷோத்தமனா? எந்தப் புருஷோத்தமன்?' என்று கேட்டார் இன்னொருவர்.

"அவர்தாம் அப்பா, கேசவபுரத்திலே டிஸ்பென்ஸரி வைத்திருக்கிறாரே; ஏழைபங்காளர் என்று ஊரெல்லாம் கொண்டாடுகிறதே, தெரியாதா?...மனைவியை இழந்தவர். ஒரே அருமைப் பெண்ணைக் கான்வெண்டிலே சேர்த்து விட்டுத் துறவிபோல வாழ்ந்து வருகிறாரே!...இன்னுமா புரியவில்லை?' என்றார் முன்னவர்.

"'ஓ!...அவரா? அவருக்குத்தான் கார் இருக்கிறதே; அவர் பஸ்ஸிலே வந்து எப்படிச் சிக்கிக்கொண்டார்?' என்று கேட்டார் வேறு ஒருவர்.

"'இரண்டு நாளாய்க் கார் ரிப்பேராம். எல்லாம் போதாத காலந்தான். ஆனால் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனதுமே அவருக்கு விடுதலை கிடைத்துவிட்டதாம்' என்றார் முதலில் பேசியவர்.

"என் நெஞ்சு துயரத்தால் வெடித்துவிடும்போல் ஆகிவிட்டது. அந்த டாக்டரிடமே உங்கள் முழு விலாசத்தையும் கேட்டுக்கொண்டு ஓடி வந்தேன்... என்னை ... மன்னிப்பீர்களா? ..."

அழுதபடியே அவள் அவரை மண்டியிட்டு நமஸ்கரித்தாள் என்பதை உணர்ந்தேன். அதைத் தொடர்ந்து, "சேசே! இது என்ன அம்மா? லக்ஷ்மி, சுத்தப் பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதே நீ செய்வது! நீ என்ன வேண்டுமென்றா எனக்கு இன்னல் விளைத்தாய்?" என்று கேட்டுக் கொண்டே புருஷோத்தமன் சோபாவை விட்டு எழுந்திருப்பதையும் அறிந்தேன்.

"நீ எனக்கு வேண்டுமென்று கெடுதல் செய்யவில்லை. பொருளாசையால் அந்தக் காரியத்தைச் செய்யவுமில்லை. குழந்தையின் உயிரை மீட்கவே செய்தாய். உயிர் போவதானாலும் பொய் சொல்லலாகாது, திருடலாகாது என்ற நீதிவாக்கியங்களெல்லாம் தாய்ப்பாசத்தின் எதிரே நில்லா என்பதை நான் அறிவேன். அது போகட்டும். உன் குழந்தையின் தற்போதைய நிலை என்ன? அதைச் சொல்; சீக்கிரம் சொல்" என்றார் அவர்.

"கு.ழ.ந்.தை! அவனுக்கு..மாரி ரிழைபோல் . சுவாசம் .ஓடிக் கொண்டிருக்கிறது..."

"பிள்ளைக் குழந்தையா?..உம் ..சரி, புறப்படு போகலாம். முடியுமானால் என்னுடைய சகலத்தையும் கொடுத்தேனும் உன் குழந்தையை மீட்டுத்தர முயல்கிறேன்—"

டாக்டர் பரபரப்புடன் பிரயாணப்பட்டார். அந்நிலையில் நான் அங்கே இருப்பது அநுசிதம் என்று எனக்குப்பட்டது. மெல்ல அங்கிருந்து நழுவினேன்.

நான் தெருக்கோடி சென்று திரும்புகையில் பின்னால் கன வேகமாக வந்த கார் என்னைக் கடந்து முன்னேறிச் சென்றது. காரில் புருஷோத்தமனும் லக்ஷ்மியும் இருந்தார்கள். நான் புருஷோத்தமனைக் கரங்கூப்பி வணங்கினேன். அவரும் மந்தஹாசத்துடன் பதில் வணக்கம் புரிந்தார்.

கார் ஓடி மறைந்துவிட்டது. ஆனால்புருஷோத்தமனின்கருணை முகம் என் உள்ளத்தை விட்டு மறையவில்லை. லக்ஷ்மியின் சோக வாழ்க்கையையும் தாய்ப்பாசத்தையும்பற்றி எண்ணமிட்டவாறே மெல்ல நடந்தேன்.

திடீரென்று என் குழந்தை ராஜேசுவரியின் நினைவு. அதே சமயத்தில் எதிரே ஒரு பஸ் வந்து கொண்டிருந்தது. முன் பின் யோசனையின்றி அதில் ஏறி ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன், லக்ஷ்மியோடு போட்டி இடுவதுபோல!

வீடு கிடைத்தது!

'நாதன்'

வியர்க்க விறுவிறுக்க ஆபீஸினுள் வந்து நுழைந்த சந்திரனை, அவன் மேஜைமீது காத்திருந்த கடிதம் வரவேற்றது. அது யாரிடமிருந்து வந்ததென, முத்து முத்தான அந்த எழுத்துக்களே தெளிவுபடுத்தின.

ஆமாம், உமாதான் எழுதியிருந்தாள். "என்ன எழுதியிருக்கப் போகிறாள். "வீடு கிடைத்ததா?.. ஆபீஸே கதி என்ற உங்களுக்கு எங்கே வீடு கிடைக்கப்போகிறது..." என்ற பல்லவியைத்தான் பாடியிருப்பாள்" என்றெண்ணியவனாய்க் கடிதத்தைப் பிரித்தான் சந்திரன். வழக்கமான ஆவலின்றி, ஓர் அசுவாரஸ்யத்துடன்தான் பிரித்தான் அதை. சற்று நேரம் முன்பு அவனுக்கு ஏற்பட்ட ஏமாற்றமும், ஆத்திரமும் இன்னும்அடங்கியபாடில்லை.

உமாவின் கடிதம் என்றுமில்லாதபடி காரசாரமாயிருந்தது. "நீங்கள் ஏனோ இப்படி ஆபீஸ் வேலை, ஆபீஸ் வேலையென்று ஸ்மரித்து உயிரை விடுகிறீர்கள். ஒரு மாதம் லீவ் போட்டு விட்டு வாருங்கள் என எழுதியிருந்தேன். அதையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை நீங்கள். உங்கள் சிநேகிதர் ராமுநன்று இங்கே வந்திருந்தார். வேளா வேளைக்குச் சாப்பிடாமல், அரை உடம்பாக இருக்கிறீர்கள் என்று சொன்னார். அதைக் கேட்டதிலிருந்து எனக்கு இங்கே இருப்புக்கொள்ளவில்லை."

"வீடு பார்த்தீர்களா? கிடைத்ததா? சிறியதோ, பெரியதோ, நல்லதோ, கெட்டதோ ஏதோ ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள். இது வைகாசி. இந்த மாதம் விட்டால், ஆனியில் குடிப் புகக் கூடாது. ஆகையால் அசிரத்தை பாயிராதீர்கள். நீங்கள் வீடு திட்டம் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி நான் இந்த மாதக் கடைசியில் அங்கே வந்துவிடுவேன். உடம்பைப் பார்த்துக்கொள்ளுங்கள்."

ஆத்திரமாகவே வந்த அவனை அந்தக் கடிதம் இன்னும் கிளறிவிட்டது. ஏழெட்டு மாதங்களுக்கு முன் உமா பிறந்தகம் புறப்பட்டபொழுது அவள் சொல்லிப் போன வார்த்தைகள் அவன் நினைவுக்கு வந்தன. அவனது மாமனாரும் அதையேதான் அவனிடம் உபதேசித்தார். "இதுவரை எப்படியோ இருந்துவிட்டேன். இனிக் குழந்தையுடன் வந்து இங்கே என்னால் காலந்தள்ளுவது கஷ்டம். குளிர் ஊர். நான் திரும்பி வருவதற்குள் வேறு ஊருக்கு மாற்றிக்கொண்டு விடுங்கள். கோயம்புத்தூராயிருந்தால் நல்லது" என்று கூறினாள் உமா.

"இங்கே கஷ்டம் எதுவுமில்லை. இங்கே வேறு சின்னஞ் சிறு குழந்தைகள் இல்லையோ. உன் குழந்தை மட்டும் அதிசயமாக்கும்..." என்றான் சந்திரன், பாதி உண்மையாகவும், பாதி கேலியாகவும்.

"டேய் மணி......! ஏண்டா அடுத்தாத்து வீட்டுவோட அடிக்கடி சண்டை போடறே!"
"பின்னே, நீ தானே அவன் துஷ்டப் பையன் அவனோட சேர்ந்து விளையாடாதேன்னு சொன்னே!"

"உன் குழந்தையா...?" நல்ல பேச்சு. நம் குழந்தை என்று சொல்லுங்கள். அதெல்லாம் எனக்குத் தெரியாது. கூடிய சீக்கிரத்திலேயே உங்களுக்கு டிரான்ஸ்பர் ஆகிவிடவேண்டுமென்றுதான் நான் பிரார்த்தித்துக்கொள்வேன். தனியாக இந்தக் குளிர் ஊரில் உங்களாலும் இருக்கமுடியாது..." என்று பொரிந்து தீர்த்துவிட்டு அவள் ரயிலில் ஏறிக்கொண்டாள்.

"அவள்மனம்போலத்தான்ஆயிற்று" என்றெண்ணி அலுத்துக் கொண்டவாறே கடிதத்தை மடக்கிக் கோட் பையில் சொருகிக் கொண்டு வேலையில் முனையத் தொடங்கினான் சந்திரன். அவனுடைய கை மட்டும் பேனாவைப் பிடித்திருக்க, அவனுடையமனம் கடந்த கால நிகழ்ச்சிகளில் வட்டமிட ஆரம்பித்தது.

• • •

சந்திரன் மத்ய தர வர்க்கத்தைச் சேர்ந்தவன். அரசாங்க யந்திரத்தின் திருகாணிகளில் அவனும் ஒருவன். வேலை கிடைக்கும் மட்டும், அதை வியாஜமாய்க் கொண்டு ஒத்திப்போட்டவன் வேலை கிடைத்த பின் கல்யாணத்தை அதிக நாள் ஒத்திப்போட இயலவில்லை. இருந்தாலும் அவனுடைய நண்பர்கள் கூட்டத்தில் அவன்தான் கல்யாண மார்க்கட்டில் கடைசியாக விலை போனவன். "கல்யாணமா? நம்போன்ற மத்ய தர ஆசாமிகளுக்கு அது ஒரு 'லக்ஷரி' என்று சொல்லி வந்த அவனையும் ஒரு அசகாய மாமனார் வெற்றி கொண்டு, "தாம் பத்யம் தவிர்க்க முடியாத விஷயம்.." என்று அவன் சொல்லும்படி செய்துவிட்டார்.

வீடு தேடியலையும் தன் சகாக்களைப் பார்த்துப் பரிகசித்த நாட்கள் போய், தானும் அந்த நிலைக்கு வர நேரிட்டதே என்று யோசித்தான் சந்திரன். அவன் நண்பர்களோ சும்மா இருக்க

வில்லை. "தலை வலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும். சந்திரா, வீடு தேட ஆரம்பிக்கவில்லையா?..." என்று கேலி செய்யத் தலைப்பட்டார்கள். சந்திரனோ, தன் பிகுவைத் தளர்த்தாமல்.. "நான் குடித்தனம் வைக்கவேண்டுமென்றால், வீடு என்னைத் தேடிவராதா?..."என்று அழுத்தலாய்ச் சொன்னான். தான் விளையாட்டாய்ச் சொல்வது உண்மையாகவே நடக்கும் என அவன் கனவிலும் எதிர்பார்த்தவனல்ல. எனவே தனக்கு உதகமண்டலத்துக்கு மாற்றல் கிடைத்தபொழுது அவன் மகிழ்ச்சியால் பூரித்தான். ஏனெனில் அந்த மலைவாசஸ்தலத்தில் அவன் இலாகா சிப்பந்திகளனைவருக்கும் சர்க்கார் வீடுகள் இருந்தன.

"சந்திரா, நீ அதிர்ஷ்டக்காரன்தான்டா. "ஹனிமூனுக்கு" கவர்ன்மெண்டே உன்னை அனுப்புகிறார்கள் ஊட்டிக்கு..." என சந்திரனின் நண்பர்கள் அவனைப் பரிகசித்தனர்.

ர்த்தீர்களா, சந்திரன் சொன்னால் சொன்னதுதான். ஐயாவை வரவேற்க ஊட்டியில் 'குவார்டர்ஸ்' காத்திருக்கிறது..." எனப் பதிலுக்கு அவன் அவர்களைக் கேலி செய்தான்.

உதகமண்டலத்தில், சந்திரனுடைய மனோபாவத்துக்கு ஒத்தபடி அந்த சர்க்கார் வீடு அமைந்திருந்தது. அந்த வரிசையில் அதுதான் கடைசி வீடு. தனிப்பட்ட அறைகள். விளக்கு, தண்ணீர் முதலிய எல்லா வசதிகளும் நிறைந்த அது அவனுக்கு வெகுவாய்ப் பிடித்திருந்தது. பிறரால் தனக்கோ, தன்னால் பிறருக்கோ சற்றேனும் இடைஞ்சல் இல்லாமல் வசிக்க முடியும் என்ற நிம்மதியடைந்தான், சந்திரன்.

சில நாட்களுக்குள் புதுக் குடித்தனம் தொடங்க உமா வந்து சேர்ந்தாள். அவளுக்கும் வீடு ரொம்பத் திருப்தியளித்தது. "எதற்கும் யாரிடமும் இரவலுக்கு கைநீட்ட வேண்டாம். சாமான் வைக்க ஷெல்ப் முதல் அம்மி கல்லுரல்வரை எல்லாம் வீட்டிலிருக்கிறதே!" என்று அதிசயித்துப் போனாளவள். நல்ல வஸந்த காலத்தில் அவர்களது தாம்பத்யம் இளம் நடைபோட்டு ஆரம்பித்தது.

இடப் பற்றாக்குறை, ஜலப் பற்றாக்குறை, இன்னும் இதுபோன்ற பிக்கல், பிடுங்கல்கள் எதுவுமின்றி இளந் தம்பதிகளின்

வாழ்க்கை இரதம் ஓடிற்று. "பணப் பற்றாக்குறை" மட்டும் இருக்கவே செய்தது. ஆனால் அந்தக் குறை உதகைக்குப் போனாலென்ன, இன்னும் உயர எவரெஸ்டுக்குப் போனால்தானென்ன, எங்கும் சந்திரனை தொடரும்சாமர்த்தியம் வாய்ந்ததாயிற்றே! ஆகையால் அந்தக் குறையை சந்திரனும், உமாவும் பொருட்படுத்தவில்லை.

அந்த ஊரில் அவனுக்குப் பொழுது போக ஆபீஸ் இருந்தது. கதைப் புஸ்தகங்கள் இருந்தன. பசுமை கொழிக்கும் மலைத் தொடர்கள் இருந்தன. அவைகளைத் தழுவிச் செல்லும் மேகக் கூட்டங்கள் இருந்தன. சந்திரன் சுபாவத்திலேயே ரஸனை நிறைந்தவன்!

அவளுக்குப் பொழுது போக வீட்டு வேலை இருந்தது. புஸ்தகங்கள் இருந்தன. ஸ்வெட்டர் நூலும், ஊசியும் இருந்தன. பூ வேலை செய்ய மேஜைத் துணிகளும், சந்திரனின் கைக்குட்டைகளுமிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாகப் பின்னால் குடியிருந்த கள்ளங்கபடமற்ற தோடா எனும் மலைஜாதிப் பெண்களும் அவளுக்கு சிநேகமாகிவிட்டனர்!

அவனுக்கும்; அவளுக்கும் பொழுது போக்க அரசாங்கப் பூந்தோட்டமிருந்தது. "பிக்னிக்" செல்ல "தொட்ட பெட்டா" மலையுச்சியோ, மார்லிமந்து ஏரியோ இருந்தது. சினிமாத் தியேட்டர்கள் இருந்தன.

உமாவுக்கும், சந்திரனுக்கும் நாட்கள் உருண்டதே தெரியவில்லை. மூன்று வருடங்கள் ஓடிச் சென்றுவிட்டன. அப்பொழுது தான் உமா அந்த மாறுதலெய்தினாள். தன்னுள் அவள் இன்னொரு ஜீவனுக்கும் இடமளிக்கும் அந்த விவரம், அந்த இளந்தம்பதிகளுக்கு இணையற்ற ஆனந்தமூட்டியது.

உமாவைப் பிறந்தகத்துக்கு அழைத்துச் செல்ல, சந்திரனின் மாமனார் வந்தபொழுது தான் தம்பதிகளிருவரையும் கிலேசம் கவ்விற்று. "நானிருக்கும் பொழுதே உடம்பைக் கவனித்துக்கொள்ளமாட்டீர்கள். இப்பொழுது என்ன செய்வீர்களோ!" என அவள் விசனப்பட்டாள். "அதுதான் நானும் சொல்வது. நீ இங்கேயே இருந்து விடு. இங்கேயும் நல்ல ஆஸ்பத்திரி இருக்கிறது..." என்றான் அவன் அரை விளையாட்டாக.. தனிமை புரியப்போகும் பயங்கர ஆட்சி, அவனை அவ்விதம் கூறச் செய்தது.

உமா தகப்பனாருடன் புறப்பட்டாள். புறப்படும் முன்பே சந்திரன் இனி வேறு ஊருக்கு மாற்றல்பெறவேண்டும் எனும் தன் அபிப்பிராயத்தை அவள் மெதுவாய்ச் சந்திரனிடம் தெரிவித்தாள். தாய்மையின் இயல்பான பரிவு அப்பொழுதே அவளிடம் ஒட்டிக்கொண்டு விட்டது. சீக்கிரத்தில் வரவிருந்த இளம் விருந்தாளிக்கு அந்த ஊர்க் குளிர் தாங்காது!

உமாவின் அபிப்பிராயத்தைச் சந்திரன் ஒப்புக்கொள்ளவில்லை. குழந்தைக்குக் குளிர் ஊர் தொடக்கத்தில் ஒத்துக்கொள்ளாது தான். ஆனால் நாளடைவில் ஒத்துப்போகும். எனவே சௌகரியமான அந்த ஊரை விட்டு அனாவசிய மாறுதல் வேண்டாமென அவன் கருதினான்.

ஆனால் உமா மட்டும் தன் கருத்தை வலியுறுத்திவிட்டுத்தான் புறப்பட்டாள்.

உமாவின் இஷ்டம் நிறைவேறிவிட்டது. அவள் பிரார்த்தனைதான் பலித்துவிட்டதுபோலும். குழந்தை விஜயன் பிறந்த சில நாட்களுக்குள்சந்திரனை கோயம்புத்தூருக்கு மாற்றிவிட்டனர்.

அந்த சில மாதங்களுக்குள்ளேயே சந்திரன் தனிமையை அளவுக்கு மீறி உணர்ந்துவிட்டான். அதன் பயங்கரம் அவனுடைய கருத்தையுங்கூட ஒரு



சிறிது பாதித்திருந்தது. சந்தடியற்ற, ஒதுக்குப்புறமான சூழ்நிலையை விட்டு வேறிடம் சென்றாலென்ன என்று அவன்

சிந்திக்கத் தலைப்பட்டிருந்தான். அந்த நிலையில்தான் அவனை உதகமண்டலத்திலிருந்து மாற்றினார்கள். ஆனால் அந்த உத்தரவு வந்தபொழுதோ அவன் ஆனந்தப்படவில்லை! அங்கேயோ அவன் தனிமைக்கும், குளிருக்கும் மட்டும் பதில் சொன்னால் போதும். ஆனால் போகவேண்டிய ஊரிலோ அளவுகடந்த நெருக்கடிகளை அவன் சமாளித்தாக வேண்டும்.

சந்திரன் வீட்டைக் காலி செய்துகொண்டு அரை மனதுடன் புறப்பட்டான். குடித்தன சாமான்களை எங்கே போட்டு வைப்பது என்பதே முதல் பிரச்னையாக நின்றது. அவைகளை ஒருவிதமாய் நண்பர் ஒருவர் வீட்டில் ஒப்படைத்தான். அவன் தன் பிரம்மசாரி சகாக்கள் சிலருடன் ஒரு அறையில் தங்கினான்.

சந்திரன் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்ட செய்தி கேட்டு உமா கரைகடந்த மகிழ்ச்சியெய்தினாள். "இப்போதிருந்தே நல்ல இடமாகப் பார்க்க ஆரம்பியுங்கள். நான் கூடியசீக்கிரத்தில் வந்து சேருகிறேன்..." என்று அவள் எழுதினாள்.

புதிய ஆபீஸில் சந்திரனுக்கு அதிக வேலையும், பொறுப்பும் சுமந்தன. அவன் நாள் முழுதும் ஓய்வு ஒழிவின்றி உழைக்க நேரிட்டது. ஆபீஸ் அலுவலைத் தவிர வேறெதையுங் குறித்து சிந்திக்கவுங்கூட அவனுக்கு அவகாசமில்லை. இந்த லட்சணத்தில் வீடு தேடும் யக்ஞத்தை அவன் எப்படி மேற்கொள்ள இயலும்!

இரண்டொரு மாதங்களுக்குப் பின்னர்தான், சந்திரனுக்குக் கொஞ்சம் அவகாசம் கிடைக்கவாரம்பித்தது. அவன் வீடு வேட்டையில் முனைந்தான். எங்கே தன் நண்பர்கள் தற்சமயம் தன்னைப் பரிகசிக்கத் தொடங்கி விடுவார்களோ என்ற எண்ணம் ஒருபுறம் அவனுக்கு. வீட்டுக்கு அலைந்து, அலைந்து அவனுடைய அனுபவம் குபேர பட்டணமாகிவிட்ட கோயம்புத்தூரில் அவன் போன்றவர்களுக்கு இடமில்லை என்பதை உணர்த்தியது. அவன் மனதுக்கும் மணிபர்சுக்கு மிசைந்த வீடு கிடைக்கும் வழியைக் காணோம். அவனுக்கு அலுப்புத் தட்டிற்று.

"என்ன டெய்லர்! பாக்கெட்டை உள்புறம் வெச்சிருக்கே......!"
"கலபமா பர்ஸை ஒருத்தரும் எடுக்க முடியாதபடி அங்கே ஸ்பெஷலா வெச்சேனுங்க!"
"என்னாலேயே, அவசரத்துக்கு 'பர்ஸை' எடுக்க முடியாது போலிருக்கே!"

உமாவோ, கடிதத்துக்குக் கடிதம் வீடுபற்றி எழுதியவாறிருந்தாள்.

அன்றுங்கூட வீடுவேட்டையிலிருந்துதான் சந்திரன் திரும்பி வந்திருந்தான். ஏமாற்றத்துடனேதான் ரத்னஸ்வாமி புரத்தில் "மனோரம்மியம்" என்ற பங்களாவில் அவுட் ஹவுஸ் ஒன்று காலியிருந்தது. பங்களாவின் சொந்தக்காரர் சர்க்கார் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்ற ஒருவர். முதல் ஞாயிற்றுக்கிழமை தினம் போய் அந்தஇடத்தைப் பார்த்தான். இடம் அவன் மனதுக்குத் திருப்தியூட்டிற்று. வீட்டின் சொந்தக்காரர் கறுர்ப் பேர்வழி. "வெட்டு ஒன்று. துண்டு இரண்டு" எனப் பேசினார். இரண்டு மாத வாடகை ரூபாய் எழுபது முன்பணமாய்க் கொடுக்க வேண்டுமென நிபந்தனை சொன்னாரவர். கையில் பணத்துடன் செல்லாத சந்திரன், இரண்டு நாள் அவகாசம் கேட்டுக் கொண்டு திரும்பினான்.

குறிப்பிட்ட நாளான அன்று காலையில் சந்திரன் பணத்துடன் சென்றான். ஆனால் வீட்டுக்காரர் கூறிய பதில் அவனை ஏமாற்றத்தால் திடுக்கிடச் செய்தது. "ஸார், தயவு செய்து மன்னித்துக்கொள்ளுங்கள். என் நண்பர் ஒருவர் தன் மாப்பிள்ளைக்கு இடம் வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டார். அவருக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன்" என்றார் அவர். இடம் தேடி அலுத்திருந்த சந்திரனுக்கு அவரது பதில் பலத்த கோபமூட்டிற்று. "என்ன பெரிய மனிதர் ஸார் நீங்கள். எனக்கு இன்றுவரையில் அவகாசம் கொடுத்தீர்களே. அந்த உங்கள் வார்த்தைக்கு என்ன மதிப்பு?..." என்று அவன் சுடச்சுடத் திருப்பிக் கேட்டான். அரசாங்க மாஜி உத்யோகஸ்தரான அவருக்கும் ஆத்திரம் வந்தது. அவர் ஏதோ சொல்ல சந்திரன் திருப்பிச் சொல்ல வாக்குவாதம் முற்றியது. கடைசியில் சந்திரன் திரும்பி வந்து சேர்ந்தான். அந்த சந்தர்ப்பத்தில்தான் முன்சொன்ன உமாவின் கடிதம் அவன் மேஜை மீது காத்திருந்தது.

• • •

வாக்கு மீறிய வீட்டுக்காரர் மீது சந்திரனுக்கு ஏற்பட்ட ஆத்திரம் இன்னும் அடங்கியபாடில்லை. அந்த ஆத்திரத்தில் "குளிர், குளிர் என்று நீயும் உன் அப்பாவும் ஊட்டியை கரித்தீர்கள். இப்பொழுது நீயும் உன் அப்பாவுமே இங்கு வந்து வீடு தேடிப் பிடியுங்கள்..." என்று உமாவுக்குப் பதில் எழுதிப் போட நினைத்தான், சந்திரன். ஆனால் தலைக்கு மேல் குவிந்து கிடந்த ஆபீஸ் அலுவல் அவனையும், அவனது கோபத்தையும் அமுக்கி அடக்கிற்று.

அடுத்த நாளே சந்திரனுக்கு அவன் மாமனாரிடமிருந்து கடிதம் வந்தது. "அவ்விடம் வீடு ஒன்று உங்களுக்கு நிச்சயித்து விட்டேன். இந்த மாதத்தில் வேறு நல்ல நாள் இல்லாததால் நாளை புறப்பட்டு, நாளை மறுதினம் காலை நீலகிரி எக்ஸ்பிரஸில் உமா, குழந்தையுடன் வந்து சேருகிறேன். மற்றவை நேரில்..." என்று அவர் எழுதியிருந்தது சந்திரனை அதிஆச்சர்யத்தில் ஆழ்த்திற்று.

"நல்லவேளை வீடு தேடும் தொல்லை விட்டது..." என்றெண்ணிய சந்திரனுக்குத் தன் மாமனார் எப்படி வீட்டுக்கு ஏற்பாடு செய்தார். அவர் இருக்கும் சென்னை எங்கே, கோயம்புத்தூர் எங்கே என்றுமட்டும் ஆச்சரியப் படாதிருக்க முடியவில்லை.

அன்றிரவு முழுதும் இனமறியா ஒருவகை மகிழ்ச்சியால் சந்திரனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. குழந்தை விஜயனை அவன் பார்த்து ஆறு மாதங்களுக்கு மேல் ஆகியிருந்தது. குழந்தையைக் காணும் ஆவல் அவன் உள்ளத்தை நிறைத்து நின்றது. அது ஒருபுறமிருக்க, வீடு பார்த்திருக்கிறேன் என்று எழுதிய மனிதர் எங்கே எவ்விடம் எனும் விவரமெல்லாம் எழுதவில்லையே என்ற சிந்தனை அவனுள் ஒருபுறம் எழுந்தது.

மறுநாள் அதிகாலையிலேயே ஸ்டேஷனுக்குச் சென்றுவிட்ட சந்திரனை வெகுநேரம் காக்க வைக்காமல் குறித்த காலத்திலேயே நீலகிரி எக்ஸ்பிரஸ் வந்துசேர்ந்தது. குழந்தை விஜயன் சகிதம் உமாவும், அவள் தந்தையும் வந்திறங்கினர். க்ஷேமலாபங்களை விசாரித்த வண்ணமே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தபொழுதுதான், "வீடு எங்கே என்று சொல்லவேயில்லையே நீங்கள். நாம் இப்பொழுதுஎங்கேபோகவேண்டும்?" எனப் புன்சிரிப்புடன் தன் மாமனாரை வினவினான் சந்திரன்.

அதுகேட்ட அவரும் தன் மறதியை யுணர்ந்தவராய் "அப்படியா. கடிதம் அவசரத்தில் எழுதினேன். அதனால்தான் விவரமாய் எழுத மறந்துபோச்சு. இடம் நல்ல இடம்தான். உங்களுக்கு நிச்சயம் பிடிக்கும். ரத்னஸ்வாமிபுரத்தில் "மனோரம்மியம்"என்ற பங்களாவில் ஒரு பகுதி வீட்டுக்காரர் என் பிராண ஸ்நேகிதர்..." என்றார்.

"என்ன 'மனோரம்மியமா?' என்று சந்திரன் திடுக்கிட்டுக் கேட்டதை உமாவோ, அவள் தந்தையோ கவனிக்கவில்லை. அது மட்டுமல்ல. "மனோரம்மியம்" போய்ச் சேர்ந்த அவர்களை வரவேற்க வந்த அந்த வீட்டுக்காரர் முகத்திலும், சந்திரனின் முகத்திலும் ஒரே சமயத்தில் அசடு தட்டியதையுங்கூட அவர்கள் யாரும் கவனிக்கவில்லை!



சுபிட்ச உற்பத்திஸ்தானம்

சிறு துளி ஜலமும் யந்திர வித்தையின் முறையில் இதர ஜலத்துளிகளுடன் இணைந்து பெரும் மின்சார சக்தி உற்பத்தி யந்திரங்களை ஓட்டி, அதன் மூலமாக நாட்டின் முன்னேற்றத்திற்கும் சுபிட்சத்திற்கும் அடிகோலும்.

உங்கள் ரூபாயும் தேசிய சேமிப்பில் முதலீடு செய்யப்பட்டு, இதர ரூபாய்களுடன் சேர்ந்து மின்சக்தி உற்பத்தி யந்திரங்களை வாங்க உதவி, அதன் மூலம் ஒவ்வொரு ஜலத்துளியும் சக்தியாக மாறி, உற்பத்தி பெருகி, சுபிட்சம் நிலவ அடிகோலும்.

சேமித்து முதலீடு செய்யுங்கள்

நேஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகள்	ரூ. 100 முதலீடு செய்தால் 12 வருடங்களில் ரூ. 150 ஆகக் கிடைக்கும்.
பத்து வருட ட்ரெஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட்டுகள்	[illegible]
போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் டிபாஸிட்டுகள்	[illegible]

ஒவ்வொருவரும் பயனடைய அதிக வெளிச்சமும், சக்தியும்.

இந்தியாவின் சுபிட்சத்திட்டத்திற்கு உதவுங்கள்

மனோவைத்தியம்

'அல்பாருக்'

சாரை, சாரையாக எறும்புகளைப் போல அன்று டாக்டர் ஆரோக்கியசாமியின் வைத்திய சாலைக்கு நோயாளிகள் வந்து கொண்டே இருந்தனர். அநேகருக்கு அவர்கள் சொல்லுவதை வைத்தே வியாதியை யூகித்துக் கொண்டு, வழக்கத்தைவிடப் புரியாத எழுத்தில் கிறுக்கித் தள்ளிக் கொண்டிருந்தார் டாக்டர். சுருக்கெழுத்துக்காரர்களைப் போல கோடு கோடாக அவர் எழுதியிருந்த காகிதச் சீட்டுகளை எடுத்துக் கொண்டு போய் விதவிதமான வர்ண நீர்களைப் பெற்றுச் சென்று கொண்டிருந்த நோயாளிகள் திருப்தியோடுதான் போனார்கள். ஆனால் வியாதியஸ்தர்களை விரட்டியனுப்பிக் கொண்டிருந்த டாக்டர் ஆரோக்கியசாமிக்கு மட்டும் நிலைமை திருப்திகரமாக இல்லை. அவர் மனோவைத்தியத்தில்தான் வியாதிகள் அடங்கும் என்ற திடசித்தமுடையவர்; மருந்துகளைத் திணிக்கத் திணிக்க இருக்கும் வியாதி போய், புதிய வியாதிகள் ஜனித்துக் கொண்டேதான் இருக்கும் என்ற நவீன சித்தாந்தத்திலும் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவர். ஆனால் அவரிடம் மந்தை மந்தையாகவரும் நோயாளிகள் எல்லோர் உள்ளங்களையும், சிந்தனைகளையும், அமுங்கிக் கிடக்கும் ஆசைகளையும், ஈடேருத எண்ணங்களையும் பரிசீலனை செய்து அவைகளுக்கொப்ப பரிகாரம் தேடுவதற்கு அவரைப் போல் இருபது டாக்டர்கள் இருந்தாலும் பற்ருக்குறைவரும். ஆகவேதான் 'உலகத்தோடு ஒட்ட ஒழுக' அடித்துத் தள்ளிக் கொண்டிருந்தார்.

டாக்டரின் சிந்தனைகளைக் கலைத்துக் கொண்டு கடைசி வியாதியஸ்தர் உள்ளே பிரவேசித்தார்; வந்தவரை உற்றுக் கவனித்த டாக்டர் 'இந்த மனிதரை பொறுத்தவரையாவது நம்மனோ வைத்திய முறையைக் கையாள வேண்டியதுதான். இவருக்குக் கவலையோ களைப்போ தவிர வேறெதுவும் கோளாறு இருப்பதாகத் தெரியவில்லை' என்று எண்ணவட்டத்தில் தன் சிந்தனையை சுழல விட்டுக் கொண்டிருந்தார்.

நறுக்கு மீசை, வழுக்கை விழுந்த தலை, ஊன்றிப் பற்ருே பிடிப்போ இல்லாமல் சலனமற்றிருக்கும் பார்வை ஆகிய விசேஷங்களோடு உள்ளே புகுந்த புதியவரிடம் நோயாளிக்குரிய சின்னங்கள் எவையும் தென்படவில்லை. டாக்டருக்குத் தன் தத்துவங்களைப் பரீக்ஷை செய்து பார்க்க ஒரு நோயாளி கிடைத்ததில் நிரம்ப திருப்தி. ஏனென்ருல் வந்தவர்தான் கடைசிப் பிணியாளர். மணி பதினென்றுக்குமேல் ஆகிவிட்டதால் இனி மாலை நாலு மணிக்குத்தான் மீண்டும் இந்தத் திருவிழாக் கூட்டம் கூடும். ஆகவே இவரை ஆற அமர பரிசோதனை செய்யலாம்.

எடுத்த எடுப்பிலேயே மனோ தத்துவப் பரீக்ஷையை புது நோயாளி விரும்புவாரா என்பது டாக்டருக்கு சந்தேகம்தான். முதலில் தம் 'ஸ்டெதோஸ்கோப்'பைக் கொண்டு நோயாளியின் மார்புப் பிரதேசம் முழுதும் ஊர்ந்து பார்த்தார். பிறகு நிலத்தில் கோல் ஊன்றி ஊன்றி துள்ளி விளையாடும் சிறுவனைப் போல், 'ஸ்டெதோஸ்கோப்'பைப் பலஇடங்களில் குதிக்கக்குதிக்க வைத்துப் பார்த்தார். வயிற்றை இங்குமங்கும் அழுத்திப் பார்த்தார். வழக்கம் போல் நாக்கையும் நீட்டச் சொல்லிப் பார்த்தார். நோய்க்குள்ள சின்னங்கள் எங்குமே காணோம்.

கடைசி அஸ்திரமாகக் கையைப்பிடித்து நாடியையும்பார்த்தார். 'வாதக்கோன், பித்தக் கோன், ஏதக்கோன்' ஆகிய எல்லாக் கோன்களும், அப்பொழுதுதான் பழுது பார்க்கப்பட்ட கடிகாரம் போல் ஒழுங்காக அடித்துக் கொண்டிருந்தன. 'வியாதி இல்லை. ஏதோ மனக்கோளாறுதான்' என்ற தம் முடிவை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டார் ஆரோக்கியசாமி.

'ஸார்! உங்கஉடம்புக்குஒண்ணுமில்லே! எல்லாம் ஜோரா இருக்கு. உங்க மனசிலேதான் ஏதோ கஷ்டமிருக்காப் போல தெரியுது. இந்தக் காலத்திலே யாருக்குத்தான் அந்த மாதிரிக் கஷ்டமில்லை. வர்ர சம்பளம் பத்தலேண்ணு எல்லோருக்குமே குறை. பொண்ணுக்கு மாப்பிள்ளை கிடைக்கில்லையேன்னு மனக்கஷ்டம். மாப்பிள்ளை கிடைச்சாலும், அவனுக்குவேலை கிடைக்கக் காணுமே அப்படீன்னு மனக்கிலேசம். இதுக்கெல்லாம் மேலே அடுத்த வருஷம் பையனுக்குக் காலேஜிலே இடம் கிடைக்குமான்னு இந்த வருஷத்திலேயிருந்து கவலை ஆரம்பிச்சுடுது.

என்ன ஸார் பண்றது! மனுஷன்னு பொறந்திட்டா எல்லாம் கூடவே இருக்கத்தான் செய்யும். உரல்லே தலையைக் கொடுத்திட்டு, உலக்கைக்குப் பயந்தா முடியுமா? எல்லாத்தையும் ஒரு மாதிரி சிரிச்சுக்கிட்டே கொண்டு போகத் தெரியணும்..." மனோ தத்துவ சிகிச்சைக்குரிய ஒரு பக்குவ நிலையை ஏற்படுத்த முயன்று, இவ்வளவு உத்சாகத்தோடு பேசிக் கொண்டே சென்ற டாக்டர் ஆரோக்கியசாமி, நோயாளி தம் பேச்சை எப்படி ரஸிக்கிருர் என்றறிவதற்காக, தம் சொற்பொழிவை இடையில் சற்றே நிறுத்திக்கொண்டு அவரை உற்று நோக்கினுர். தம் பேச்சில் அவர் செலுத்திய ஆழ்ந்த கவனம், டாக்டரின் தன் மதிப்புக்கு இதமாக இருந்தது. இரட்டிப்பு சந்தோஷத்துடன் மீண்டும் பேசலானுர்.

"இப்போ பாருங்க பல வியாதிகள் சிரிச்சு, உத்சாகமா இருந்தா பறந்து போயிடும்னு புதுசாக் கண்டு பிடிச்சுக்கிட்டு வர்ராங்க. என்-சொந்த அனுபவத்திலேகூட அப்படித்தான். தூக்கம் வராமல் அவஸ்தையாயிருந்துது அப்படீன்ன, ஏதாவது ஹாஸ்யப் புஸ்தகத்தை எடுத்துப்படிச்சு வாய்விட்டுச் சிரிச்சா, தூக்கம் அள்ளி வாரிக்கிட்டு வருது!

சில சமயம் சாயங்கால நேரத்திலே மனசிலே ஏதோ கவலையாயிருக்கும். அப்போ இந்த புதுசா வந்திருக்கே ஒரு நாடகம் "சிரியாதே"ண்ணு, அதுலே போய் உக்காந்துட்டு வந்திட்டா சரியாப் போயிடுது. அதிலே காமெடியன் கல்யாணசுந்தரத்தைப் பத்தித்தான் கேள்விப்பட்டிருப்பீங்களே! அவன் புதுசு புதுசா ஒவ்வொரு வேஷத்திலே வந்து மேடையிலே நிக்கருனே அதைப் பாத்தாலே போதும் போலிருக்கு. அதுலேயும், ஒரு முழத்துக்கு அவன்வைச்சிருக்கிற ஒட்டுத்தாடி இருக்கே, அது அங்கேயும் இங்கேயும் ஆடும்போதெல்லாம் தென்னை மரத்திலிருந்து ஒடிஞ்சு தொங்கற மட்டை காத்திலே ஆடற ஞாபகம்தான் எனக்கு வருது!

அவன் பேசிட்டாம்னு ஒரே சிரிப்பு; நடிக்கிறதைப் பாத்தா வயிறு வெடிச்சிரும்; அவ்வளவு ஹாஸ்யம். உடம்பு குலுங்க குலுங்கச் சிரிச்சிட்டு வந்தா எல்லா வருத்தமும் மறைஞ்சு போயிடுது..."

டாக்டரின் மனோதத்துவப் பிரசங்கம் நோயாளிக்கு அலுப்புத் தட்டியதாகவேகாணோம்;டாக்டர் பேச்சில் அவ்வளவு தூரம் அவர் ஒன்றறக் கலந்துவிட்டார். ஆரோக்கியசாமி புதிய தெம்புடன் தன் பேச்சை முடிக்கலானுர்.

"நீங்க எதையும் மனசிலே போட்டுக்கிடாதீங்க. பேசாமே காமெடியன் கல்யாணசுந்தரம் நாடகத்துக்கு நாலைஞ்சு நாளைக்குப் போயிட்டு வாங்க. அப்புறம் சொல்லுங்க அதோட குணத்தை" என்று முத்தாய்ப்பு வைத்தார்.

வந்தவரின் கண்களிலே நன்றியறிதலின் ரேகை ஒளிவிட்டது. "நீங்க சொல்றது சரிதான் டாக்டர். ஆனுல்..வந்து..ம்ம்..நாந்தானே அந்த காமெடியன் கல்யாணசுந்தரம். நான் வேஷம் மாறி வர்ரதினுலே உங்களுக்கு அடையாளம் கண்டுபிடிக்க முடியல்லே போலிருக்கு .. அதனுலே வந்து ..." என்று மென்று முழுங்கிக்கொண்டே நின்ருர்.

இதையெல்லாம் டாக்டர் எங்கே கவனித்தார். அவர்தான் நோயாளியின் பெயரைக் கேட்டதும் சித்தப்பிரமை பிடித்தவர் போல் நாற்காலியில் சாய்ந்துவிட்டாரே!

ஆருடம்! ஜாதக பலன்!!
ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர். சுமார் வயது. செய்யும் தொழில். கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர் காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரு. 2.

ஒருவருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரு. 5. ஒரு தசைக்கு புக்தி வாரி பலன் எழுத ரு. 10. கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி கவசம்" 1-க்கு ரு. 7-0-0. பிரத்யேக ரக்ஷை ரு. 100 வி. பி. செலவு தனி.
வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrolozer & Journalist.
Triplicane : Madras-5

உங்கள் கால பலன்

பி.வி.ராவ்

[கீழ்க்கண்ட பலன்களை சந்திர ராசி, சூரிய ராசி, லக்ன ராசி மூன்றிலிருந்தும் பார்த்து மொத்தத்தில் பலன்களை மதிப்பிடலாம்.]

1954-ம் வருஷம் மார்ச் மாதம் 15-ந்தேதி முதல் ஏப்ரல் மாதம் 13-ந்தேதி வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள உதவியாக நக்ஷத்திரங்களும் பாதங்களும் கூடவே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

மேஷ ராசி

அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய

லக்னாதிபதி செவ்வாய் 8-ல் இருப்பது உங்கள் பண நிலைமைக்கும் உடல் நிலைமைக்கும் மார்ச் கடைசிவரையில் அனுகூலமாக இராது. செவ்வாயை குரு பார்ப்பது எதிர்பாராத விதமான பண வரட்சியைக் கொடுத்திருக்கிறது. கடைசி நேரத்தில் திடீர் உதவியும் கிடைக்கும் இம்மாதத்தில் சூரியன் அநுகூலமாக இல்லை. குடும்பத்தில் கவலை இருக்கும். பண விஷயங்களில் கடிதப் போக்குவரத்து அதிருஷ்டகரமாக இருக்கும். பலருக்குப் பிரயாணம் நேரிடலாம். சிலருக்கு புண்ய க்ஷேத்ர யாத்திரையோ அல்லது நண்பர் அல்லது உறவினர் ஊருக்குச் செல்வதோ நேரிடலாம். மார்ச் 28-ம் தேதி வாக்கில் ஏதாவது ஒருவிதமான ஏமாற்றமோ அல்லது ஆரோக்கியமின்மையோ ஏற்படலாம். குழந்தைகளில் ஒன்றைப்பற்றிய செலவு அதிக கவலையைக் கொடுக்கும். மனைவி உடம்பு இன்னும் சரியாகவில்லை. இம்மாதத்தில் நண்பர்கள் உறவினர்களிடமிருந்து பழிச் சொற்களை தவிர்க்கவும். முதல் பாதியை விட இரண்டாம் பாதி நன்றாக இருக்கிறது. சகோதரன் அல்லது உறவினர் விஷயத்தில் சண்டையோ மனஸ்தாபமோ ஏற்படலாம். இம்மாதத்தில் முக்கிய தஸ்தாவேஜுகளில் கையொப்பமிடுவதைத் தவிர்க்கவும் பெரிய சண்டை ஒன்றைத் தவிர்க்கவேண்டுமென்றால் மிகுந்த அளவு தந்திரம் தேவை. ஏனெனில் அதனால் உங்களுக்குதான் நஷ்டம். இரண்டாம் பாதயில் புதிய நண்பர்களும் மனதுக்குப் பிடித்தமான சூழ்நிலையும் ஏற்படும். மாத இரண்டாம் பாதியில் கலியாணப் பேச்சுவார்த்தைகள் அதிக வெற்றிகரமாக நடக்கும்.

பணம்: முதல் பாதியில் நிர்ப்பந்தம் அதிகமாக இருக்கும். செலவு கட்டுக்கடங்காது. எனினும் பண சௌகரியங்கள் முன்னைவிட அதிகமாக இருக்கும். உத்தியோகத்திலிருப்பவர்கள் சூதாட்டத்தில் இறங்காதிருந்தால் எல்லாம் சௌகர்யமாக இருக்கும்.

வீடும் சுற்றுப்புறமும்: உங்கள் உடம்பும் மனைவி தேக நிலையும் பாதிக்கப்படும். வயிற்றுக் கோளாறு, மயக்கம் வாய்வு, அல்லது ரகசிய வியாதி ஏதாவது பீடிக்கும். சிலருக்கு இரண்டாம் பாதியில் வீடு மாற்ற விருப்பம் ஏற்படும்.

உத்தியோகம்: திடீர் ஏமாற்றம் ஏற்படும். மேலதிகாரியே உங்களைக் கவிழ்த்து விடுவார். சிலருக்கு எதிர்பாராவிதமான பண உயர்வோ அல்லது மாற்றலோ கிடைக்கும். சிப்பந்திகள் தகராறு இம்மாதத்தில் நெருக்கடியை எட்டும். கடைசி வாரத்தில் அதிக சிக்கல்கள் இருக்கும்.

வியாபாரிகள்: இரண்டாம் பாதியைவிட முதல் பாதி கொஞ்சம் நன்றாக இருக்கிறது. திடீர் லாபம் ஏற்படலாம். கூட்டு வியாபாரம் முதல் பாதியில் உற்சாக மூட்டக்கூடியதாக இருக்கும். வெளிநாட்டு வியாபாரம் லாபகரமாக இருக்கும்.

20 21 31 ஏப்ரல் 4 5 8 10 12 அதிருஷ்ட நாட்கள் 17 18 ஏப்ரல் 3 6 7 நன்றாக இல்லை.

விருஷப ராசி

கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய

கிரக நிலை முதல் பாதியில் அநுகூலமாக இருக்கின்றன. முயற்சியில் வெற்றி கிட்டும். உங்களுக்கு மனோ உறுதியும் சிந்தனா சக்தியும் இருக்கிறது. அதனால் உங்களுக்குத் தனி மதிப்பு கிட்டும். சுயமுயற்சி மிகவும் முக்கியம். உங்கள் லட்சியங்கள் நிறைவேறுவதற்கு நல்ல சந்தர்ப்பங்கள் வாய்க்கும். இரண்டாம் பாதியில் இவை கிடைக்கமாட்டா. மார்ச் 27-ம் தேதி செவ்வாய் தனுவில் பிரவேசிப்பது உங்கள் வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக்காது. குடும்பத்திலும் வெளிப் பழக்கங்களிலும் திடீர் சம்பவங்கள் நிகழலாம் சனி 8-ஐப் பார்ப்பது பயமுறுத்தல்களையும் விரோதிகள் மூலமாக ஏற்படும் கவலைகளையும் அதிகப்படுத்தும். இரண்டாம் பாதியில் வெளிப் பழக்கங்கள் பாதிக்கப்படும். தூரப் பிரயாணம் ஒன்று ஏற்பட்டு அதனால் அநுகூலம் உண்டாகும். விரோதிகளும் உறவினர்களும் உங்கள் நடத்தை மீது அனாவசியமாக பழியை சுமத்துவார்கள். சிலருக்கு இதே காரணமாக தேகாரோக்கியம் பாதிக்கப்படும். நண்பர்கள் ஏராளமாக இம்மாதத்தில் சேருவார்கள். சொல்லிக்கொடுத்த யோசனைகள் தீவிர நடவடிக்கைகள் உணர்ச்சிவசமான போக்கு முதலியவைகளைத் தடுத்து ஆற அமர ஆலோசித்து முடிவு செய்யவேண்டும். நெருங்கிய உறவினர்கள் எதிர்பாராதவிதமாக வருவார்கள்.

பணம்: செலவு அதிகமாக இருக்கும் . இம்மாதத்தில் லாபமும் அதிக வசதியில் நம்பிக்கையும் உண்டாகும். இம்மாதத்தில் பணம்தான் பிரதானமாக இருக்கும். வருமானம் நன்றாக இருக்கிறது. பண நிர்ப்பந்தங்களைச் சமாளிக்க நண்பர்கள் உதவி புரிவார்கள்.

வீடும் சுற்றுப்புறமும்: முதல் பாதி மகிழ்ச்சிகரமாக இருக்கும். மனைவி ஆரோக்கியம். உங்கள் விசேஷ கவனத்தைக் கவரும் அல்லது மண வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக இராது. மனைவி உறவினருடன் மனவேற்றுமையைத் தவிர்க்கவும் இம்மாதத்தில் வீட்டு வசதிகள் அதிகரிக்கும். சர்க்கார் அநுகூலங் கிட்டும்.

உத்தியோகம்: பண அனுகூலம் கிடைக்கும் அல்லது வேலை உயரும். இரண்டாம் பாதியில் சகாக்களுடன் மனவேற்றுமையைத் தவிர்க்கவும் சிலருக்குக் கடைசி வாரத்தில் தனலாபம் ஏற்படலாம்.

வியாபாரிகள்: இம்மாதம் அதிருஷ்டகரமான மாதம். கூட்டு வியாபாரம் லாபகரமாக இருக்கும். புது மாறுதல்கள் ஏற்படலாம். புது ஐட்டங்கள் சேர்க்கப்படலாம்.

17 20 21 25 26 30 31 ஏப்ரல் 1 4 6 10 12 அதிருஷ்ட நாட்கள்.

18 23 ஏப்ரல் 3 7 9 13 சந்தேகம்.

மிதுன ராசி

மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை புனர்வஸு 3-ம் பாதம் முடிய

சனி குரு உங்களுக்கு இன்னும் கொஞ்ச காலத்துக்கு நன்றாக இல்லை. அஷ்டமாதிபதி சனி 5-ல் உச்சனாக இருப்பதால் மிதுன ராசிக்காரர்களுக்கு கொஞ்ச நாளைக்கு சரியாக இராது. தேகாரோக்கியமும் செலவும் மாறி மாறி பாதிக்கப்படும். இதை மாற்றும் அளவுக்கு மற்ற கிரகங்கள் வலுவுடன் இல்லை. 1955 இறுதிவரையில் நீங்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆனால் மனோ தைர்யத்தை இழக்கக்கூடாது. நெப்ட்யூன் சனியுடன் சேர்ந்து 5-ல் இருப்பது குழந்தைகளின் தேகாரோக்கியத்தைப் பாதிப்பதுடன் ஹேஷ்ய வியாபாரத்தில் குழப்பத்தையும் மனஸ்தாபத்தையும் உண்டாக்கும். பிறத்தியார் உங்களிடமிருந்து அதிகம் எதிர்பார்ப்பார்கள். அவர்கள் உங்களை நம்பமாட்டார்கள். சந்தேகிப்பார்கள் கூட. ஏப்ரல் 20-ந்தேதி குரு மிதுனத்தில் பிரவேசிக்கும்பொழுது இந்த நிலைமை சீர்படும். 10-ல் சூரியன் நீங்கள் முன்னுக்கு வருவதற்கு உதவி புரியும் குழந்தைகளில் ஒன்றைப்பற்றி எதிர்பாராவிதமான மகிழ்ச்சி ஏற்படும். கல்யாணப் பேச்சுவார்த்தைகளுக்கு முதல் பாதி நன்றாக இருக்கிறது. சகோதரி அல்லது நெருங்கிய உறவினர் ஒருவர் உங்களுக்கு தக்க தருணத்தில் உதவி புரிவார். அல்லது அவரே நீங்கள் எதிர்பாராதவகையில் சீர்படுவார். இரண்டாம் பாதியில் அதிக இடையூறுகள் ஏற்படும்.

பணம்: செலவு அதிகரித்துக்கொண்டே போனபோதிலும் பண பிரச்னைகளை சமாளிக்க முடியும். நண்பரோ அல்லது உறவினரோ தக்க சமயத்தில் உதவி புரிவார். இரண்டாம் பாதியில் நண்பர்கள் உதவி அதிகமாகக் கிடைக்கும். சிலர் தற்காலிகமாக கடன்பட நேரிடும்.

வீட்டு சூழ்நிலை: 7-ல் செவ்வாய் குடும்பத்தில் சந்தோஷத்தைக் கொடுக்காது. எதைச் செய்தாலும் மனைவியைச் சந்தோஷப்படுத்தமுடியாது. இந்த நிலைமை சிலமாதங்களுக்கு நீடிக்கலாம். முதலீட்டுக்கு இது நல்ல மாதமல்ல. ஆகாராதிகளில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். தேகாரோக்கியம் சரியாக இல்லை.

உத்தியோகம்: சிறு மாறுதலும் சம்பள உயர்வும் அதிக பொறுப்பும் எதிர்பார்க்கலாம். இருந்தாலும் மேலதிகாரியின் ஆதரவைப் பெறமுடியாது.

வியாபாரிகள்: ஹேஷ்யத்தில் மிக ஜாக்கிரதையாக இருந்தால்தான் நிலைக்க முடியும். லாபத்தைக் காண்பதில் இடையூறுகள் அதிகம் இருக்கும். நஷ்டம் ஏற்படாதிருந்தால் போதும் என்ற நிலையில் இருக்கவேண்டும். கூட்டு வியாபாரம் பாதிக்கப்படும்.

16 18 20 21 26 31 ஏப்ரல் 1 4 8 12 அதிருஷ்ட நாட்கள். 22 ஏப்ரல் 3 7 10 சந்தேகம்.

1954ஆம் மார்ச் 15-ந்தேதியுள்ள கிரகநிலை

சுக்ரன் சூரியன்		குரு	கேது யுரானஸ்
புதன்	ராசி		சந்திரன்
ராகு	செவ்வாய்	வ. சனி நெப்ட்யூன்	

கடக ராசி

புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம் ஆயில்யம் முடிய

இம்மாதத்தில் சுப பலன்கள் அதிகமாகக் காணலாம். போன மாதத்தில் இருந்த கவலைகள் அகலும். மாத முதல் பாதியில் சனியால் காலதாமதமும் ஏமாற்றமும் ஏற்படலாம். ராசிக்கு சனி செவ்வாய் பார்வை இருப்பதால் 2-ம் பாதியில் உங்கள் உடம்பு பற்றியோ, பணத்தைப் பற்றியோ கவலைகள் ஏற்படும். ஆனால் 11-ல் குரு உங்கள் கஷ்டங்களைக் குறைக்கும். 9-ல் சூரியன் தூரத்திலுள்ள உறவினர் விவகாரங்களையும், நீண்ட தூர பிரயாணத்தையும் கலியாணப் பேச்சுவார்த்தையையும் ஆத்மார்த்த விஷயங்களையும் வயதான பெண்கள் பிள்ளைகளையும் வலியுறுத்துகிறது. சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணம் நேரிடலாம். ராசியையும் சூரியனையும் செவ்வாய் பார்ப்பது கொஞ்சம் திமிராக நடந்துகொள்ளும்படிச் செய்யும். முதல் பாதியில் சுக்ரன் உச்சனாக இருப்பது வெளிப் பழக்கங்களுக்கும் சொந்த லட்சியங்களுக்கும் அநுகூலமாக இருக்கிறது. 9-ஐ செவ்வாய் குரு பார்ப்பது உங்கள் செல்வாக்கை வலுப்படுத்தும். பண விவகாரங்களில் நண்பருடன் மனஸ்தாபம் ஏற்படும். இம்மாதத்தில் கண்ணோய்க்காரர்கள் மிகவும் சிரமப்படுவார்கள். கடிதப் போக்குவரத்து பற்றியோ அல்லது ஆபீஸ் ரகசியங்களைப் பற்றியோ விவாதத்தைத் தவிர்க்கவும் கடன் கொடுக்கல் வாங்கல் செய்யுமாறு வற்புறுத்தும் யோசனைகளையும் நிர்ப்பந்தங்களையும் லட்சியம் செய்யாதிருக்கவேண்டும். அமாவாசைக்குப் பிறகு புதிய கௌரவங்களும் உயர் பதவியும் கிடைக்கும்.

பணம்: ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். இருந்தாலும் மொத்தத்தில் இது அதிக சௌகர்யமான மாதம். பலருக்கு திடீர் லாபம் ஏற்படலாம். பாக்கிகளை வசூலிக்க வழக்குகளைத் தவிர்க்கவும்.

வீட்டு சூழ்நிலை: சனி செவ்வாய் காரணமாக மனைவி உடம்பு பாதிக்கப்படும். உங்கள் உடம்பையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளாவிட்டால் சீர்குலையும். வயதான குழந்தைகளில் ஒன்று விசேஷ கவனத்தைக் கவரும். நிலம் அல்லது பங்குகளில் பணம் போட இம்மாதம் அநுகூலமாக இருக்கிறது. இம்மாதத்தில் கார் ஓட்டுவதைத் தவிர்க்கவும்.

உத்தியோகம்: மாறுதலோ அல்லது மாற்றலோ சம்பள உயர்வுடன் கிடைக்கும். மேலதிகாரியின் ஆதரவு கிட்டும். சகாக்களுடன் தகராறு கூடாது. ஆபீஸில் ரகசிய விரோதி ஒருவன் வேலை செய்யக்கூடும்.

வியாபாரிகள்: பொது வெற்றிக்கு முதல் பாதி அநுகூலமாக இருக்கிறது. வெளிநாட்டு வர்த்தகம் அனுகூலமாக இருக்கும். ஆனால் கூட்டு வியாபாரங்கள் அதிக சிரமத்துக்குள்ளாகும். கணக்கு இலாகாக்களில் தவறுதல்கள் ஏற்படும்.

16 19–21 25–27 31 ஏப்ரல் 3–5 10 12 அதிருஷ்ட நாட்கள்.

17 18 22 30 ஏப்ரல் 1 6 7 9 சந்தேகம்.

ஸிம்ம ராசி

மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய

பணம் வெளிப்பழக்கங்கள் வியாபாரம் முதலியனவற்றுக்கு இம்மாதம் மிக்க வெற்றிகரமாக இருக்கும். புது வாழ்க்கைக்கு திட்டங்களை வகுத்துக்கொள்ளலாம் புதனுக்கு செவ்வாய் பார்வை பண விவகாரங்களில் தகராறுகள் ஏற்படும்.

கலியாணப் பேச்சுவார்த்தை எதுவும் இம்மாத கடைசி வரை வெற்றி பெறாது. குரு, செவ்வாய், நிலைமை காரணமாக பெரிய இடத்து தொடர்பும் அதனால் ஏற்படக்கூடிய அநுகூலங்களும் கிடைக்கும் சொத்துக்கள் வாகனம் வாங்குவதற்கும் வீட்டு கௌரவத்தை உயர்த்திக் கொள்வதற்கும் இது நல்ல மாதம். வீட்டில் சண்டையைத் தவிர்க்கவும் இரண்டாம் பாதியில் பண நிர்ப்பந்தமும் தேகாரோக்ய குலைவும் ஏற்படும். எல்லாருக்கும் இல்லாவிட்டாலும் சிலருக்காவது தொலைதூரப் பிரயாணம் நேரிடலாம். குரு சுக்ரர்கள் பரஸ்பர பார்வையால் நண்பர்கள் உறவினர்கள் மூலமாக எதிர்பாராத அநுகூலங்கள் ஏற்படலாம். இரண்டாம் பாதியில் கலியாண பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறும். நண்பர்களுடனோ அல்லது வீட்டில் உறவினருடனோ மனவேற்றுமை ஏற்படலாம் இம்மாதத்தில் பத்திரிகைத் தொழிலுக்கு நன்றாக இருக்கிறது. பெரிய இடத்துப் பழக்கங்கள் கிட்டும்.

பணம்: கவலைகள் இருந்தபோதிலும் கௌரவக்குறைவு ஏற்படாது. திடீர் மாறுதல்கள் ஏற்படலாம் செலவு எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கும் பண விவகாரங்களில் கடிதப் போக்குவரத்து மந்தமாக இருக்கும்.

வீட்டு சூழ்நிலை: முதல் பாதி நன்றாக இருக்கும். இரண்டாம் பாதியில் குழந்தைகள் குடும்பம் காரணமாக கவலைகள் இருக்கும். உங்கள் உடம்பும் மனைவி தேகாரோக்யமும் சரியாக இராது ரகசிய நோயும் இருக்கும் குழந்தைகளில் ஒன்று மிகுந்த கவலையைக் கொடுக்கும் இரண்டாம் பாதியில் ரகசிய விரோதிகள் வேலை செய்கிறார்கள். ஏப்ரல் 3, 4–ம் தேதிகளில் ஜாக்கிரதையாக இருக்கவும்.

உத்தியோகம்: வேலையோ அல்லது மேலதிகாரி மாற்றமோ ஏற்படலாம் வேலைக்குப் பாராட்டு கிடைக்கும். ஆனால் பிறத்தியாருடன் சண்டை சச்சரவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு மாற்றல் ஏற்படலாம்.

வியாபாரிகள்: இது லாபகரமான மாதம். ரேஸ்யத்தில் அதிக லாபம் கிட்டும் முதல் பாதி அதிருஷ்டகரமாக இருக்கும் கூட்டு வியாபாரத்தில் தகராறுகள் இருக்கும்.

17 20 22 25 27 ஏப்ரல் 1 4 5 6 8 10 12 அதிருஷ்ட நாட்கள். 18 19 23 26 31 ஏப்ரல் 3 7 13 சந்தேகம்.

கன்யா ராசி

உத்திரம் 2–ம் பாதம் முதல் ஹஸ்தம் சித்திரை 2–ம் பாதம் முடிய

இம்மாதத்தில் பலன்கள் நல்லதும் கெட்டதும் கலந்திருக்கும். லக்னாதிபதி புதனும் ஆத்ம ஸ்தானாதிபதி செவ்வாயும் கேந்திரத்தில் இருப்பது உங்கள் ஆரோக்யத்துக்கு நல்லதல்ல. அதனால் விபத்தோ அல்லது திருட்டினால் நஷ்டமோ ஏற்படும். பிரயாணம் ஒன்று நேரிடலாம். கடிதப் போக்குவரத்தையோ அல்லது கையொப்பமிடுவதையோ இம்மாதத்தில் தவிர்க்கவேண்டும் சகோதரர்களிடையே அன்யோன்யம் இராது வழக்குகளை ஒத்திப்போடலாம். கல்யாண காரியத்தில் சுறு சுறுப்பாக இருப்பார்கள். இரண்டாம் பாதி அவ்வளவு நன்றாக இராது. மனைவி உடம்பு பாதிக்கப்படும் பண விஷயங்களில் நண்பர்களையும் உறவினர்களையும் நம்பவேண்டாம். சனி 4 ஐயும் அதில் உள்ள குஜனையும் பார்ப்பதால் வீட்டிலும் வெளியிலும் எதிர்பாராத அருவெறுப்புகளும் சிரமங்களும் ஏற்படும் உஷ்ணத்தினால் உடல் நிலை பாதிக்கப்படும். இரண்டாம் பாதியில் கண்ணோய்க்காரர்களுக்கு நன்றாக இல்லை. கிணறு அல்லது சமுத்திரங்களில் ஸ்நானம் செய்வதைத் தவிர்க்கவும். பொழுது போக்குகளில் அதிக சிரத்தை செல்லும். குடும்பத்திலும் வெளிப் பழக்கங்களிலும் வருங்காலம் அவ்வளவாய் தென்பாக இராது. சுக்ரனை செவ்வாய் பார்ப்பதால் மார்ச் கடைசி வரையில் இது நீடிக்கும். ஏப்ரல் முதல் வாரத்தில் சுக்ரனை சனி பார்ப்பதும் இதற்குக் காரணம்.

பணம்: இம்மாதத்தில் அதிக வசதிகள் இருக்கும். ஆனால் செலவு கட்டுக்கடங்காது குரு, சுக்ரர்கள் பரஸ்பர பார்வையிருப்பதால் சிலருக்கு உறவினரிடமிருந்து பண உதவி கிடைக்கும். நல்ல சொத்தில் பணம் முதலீடு செய்யக்கூடும்.

வீட்டு சூழ்நிலை: முதல் பாதி மகிழ்ச்சிகரமாக இருக்கும் இரண்டாம் பாதியில் மனைவி ஆரோக்யம் பாதிக்கப்படும் வீட்டில் மனஸ்தாபங்களைத் தவிர்க்கவும் திருட்டு ஏதாவது நடக்கக்கூடும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

உத்தியோகம்: அனுகூலம் இராது. சகாக்களுடன் மனவேற்றுமையைத் தவிர்க்கவும் நண்பன் ஒருவனால் பண விவகாரங்களில் எதிர்பாராத ஏமாற்றம் ஏற்படலாம்.

வியாபாரிகள்: இந்த மாதத்தில் அதிக வியாபாரத்தை எதிர்பார்க்கலாம். முதல் பாதி நன்றாக இருந்தால் இரண்டாம் பாதி நன்றாக இராது இரண்டாம் பாதி நன்றாக இருந்தால் முதல் பாதி நன்றாக இராது. வெளிநாட்டு வியாபாரம் அதிக உற்சாகமளிப்பதாக இருக்கும்.

17 20 21 22 26 30 31 ஏப்ரல் 1 4 5 10 12 அதிருஷ்ட நாட்கள் 18 ஏப்ரல் 3 6 7 13 நன்றாக இல்லை.

துலா ராசி

சித்திரை, 3–ம் பாதம் முதல் சுவாதி விசாகம் 3–ம் பாதம் முடிய

பெரிய கிரகங்கள் சரியாக இல்லாததால் நல்ல பலன்களை எதிர்பார்ப்பதற்கில்லை. பணம், தொழில் சம்பந்தமான சில சிரமங்களை தீர்த்துக்கொண்டால் தான் தற்போதைய கொந்தளிப்பு அகலும். இலக்கிய ஆராய்ச்சி, தீவிர படிப்பு, புது விஷயங்களைத் தெரிந்து கொள்ளுதல், குடும்பத் தகராறுகளை தீர்த்துக்கொள்வது முதலியனவற்றுக்கு முதல் பாதி அநுகூலமாக இருக்கிறது. குழந்தைகளில் ஒன்று எதிர்பாராத கவலையைக் கொடுக்கும்பொழுது போக்கும் மற்ற தொழில் நடவடிக்கைகளும் முக்கியமாக இருக்கும். த்வேஷ சூழ்நிலை அகன்று சுமுகமான நிலைமை ஏற்படும். எதிரியாக மாறிய நண்பர் ஒருவர் உங்களிடத்தில் இரக்கம் காட்டி உங்கள் முன்னேற்றத்துக்கு உதவிபுரிவார். இம்மாதத்தில் உங்கள் நெருங்கிய உறவினரே விரோதம் பாராட்டுவார். பத்திரிகைகள் மூலமாகவும் கடிதப் போக்குவரத்து மூலமாகவும் நற்செய்திகளைப் பெறமுடியாது. கடிதங்களில் மனஸ்தாபங்களையும் சண்டைகளையும் தவிர்க்கவும். சகோதரன் அல்லது சகோதரி அநாவசியமான கவலை கொடுப்பாள். முதல் பாதியில் சிப்பந்தியால் ஏமாற்றம் ஏற்படும். விரோதிகளுக்கு பரபரப்பு உண்டாக்கக்கூடாது. வியாஜ்யங்களைத் தவிர்க்கவும். செவ்வாய் தனுஸுக்கு பிரவேசித்த பிறகு இரண்டாம் பாதியில் நண்பர் ஒருவருடன் மனஸ்தாபம் ஏற்படலாம். கர்மஸ்தானமான கடகத்திற்கு பாபர்கள் பார்வை இருப்பதால் எந்த காரியத்திலும் வெற்றியை எதிர்பார்க்கமுடியாது. நீங்கள் ஆய்ந்தோய்ந்து பாராமல் எதைச் செய்தாலும் எதிர்பாராத கஷ்டங்கள் ஏற்படும்.

பணம்: முதல் பாதி அதிருஷ்டகரமாக இருக்கும். செலவு அதிகமாக இருந்தபோதிலும் பணக் கஷ்டங்களை சமாளிக்கமுடியும் இரண்டாம் பாதியில் திடீர் பண நிர்ப்பந்தங்கள் ஏற்படலாம். நண்பர்கள் உறவினர்களுடன் பணச் சண்டையைத் தவிர்க்கவும்.

வீட்டுச் சூழ்நிலை: மகிழ்ச்சிகரமான மாதமல்ல. உங்கள் மனைவி உடல் நிலையும் உங்கள் வயிற்றுக் கோளாறும் கவலையைக் கொடுக்கும். பித்தம் அதிகரிக்கும். உஷ்ணமாக இருந்தாலும் தண்ணீரை கொஞ்சமாக உபயோகிக்கவும். இரண்டாம் பாதி முதலீடு செய்வதற்கு நன்றாக இருக்கிறது.

உத்யோகத்தில்: முதல் பாதியில் லாபம் எதுவும் வராவிட்டால் மாதம் முழுவதிலும் அப்படியேதான் இருக்கும் இரண்டாம் பாதியில் மேலதிகாரியின் சீற்றத்துக்கு இலக்காகாதிருந்தால் அதிருஷ்டம்தான். வேலை கடுமையாகவும் பொறுப்புள்ளதாகவும் இருக்கும்.

வியாபாரிகள்: ரேஸ்யத்தில் இந்த மாதம் ஏமாற்றத்தை யளிக்காது. எண்ணெயும் இரும்பு வியாபாரமும் அதிருஷ்டகரமாக இருக்கும். கூட்டு வியாபாரம் திருப்தியளிக்கும். வெளிநாட்டு வியாபாரம் லாபகரமாக இருக்கும். வியாபார விஷயங்களில் மாறுதல் செய்யப்படலாம்.

16 19 22 25 31 ஏப்ரல் 4 6 8 10 12 அதிருஷ்ட நாட்கள்.

விருச்சிக ராசி

விசாகம் 4–ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய

ராசிக்கு இரு பக்கங்களிலும் இருக்கும் இரு பாப கிரகங்களைத் தவிர மற்ற கிரகங்கள் எல்லாம் பொதுவாக நன்றாகவே இருக்கின்றன இவ்விரு கிரகங்களும் கவலையையும் கஷ்டங்களையும் கொடுக்கின்றன. இருந்தாலும் குரு பார்வை நன்மையளிக்கும். 5–ல் உச்ச சுக்ரனும், 5–க்குடையவன் குரு 7–லும் பரஸ்பரம் பார்வையிருப்பதால் வியாபாரத்தில் செழிப்பையும் மனைவி உறவினர் மூலமாக உதவியையும் பெறலாம். சிலருக்கு குடும்ப க்ஷேமத்தையும் அதிருஷ்டக்கார குழந்தை ஒன்று பிறப்பதையும் இந்த கிரகங்கள் காட்டும். இவ்விரு கிரகங்களும் உங்களை நல்ல ஆலோசகராக்கும். மாத முதல் பாதியில் வெளிப் பழக்கங்களில் உங்களுக்கு கவர்ச்சி ஏற்படும். சிலருக்கு இம்மாதத்தில் சொந்த ஊருக்குப் பிரயாணம் நேரிடலாம். குடும்பத்தில் மனஸ்தாபத்தினால் ஸௌஜன்யம் இராது என்பதை செவ்வாயும் புதனும் காட்டுகின்றன. சகோதரர்களில் ஒருவரோ அல்லது உறவினரோ உங்களிடத்தில் அன்யோன்யமாக இருக்கமாட்டார். கலியாணப் பிரச்னை ஏதாவது இருந்தால் சிரமமின்றி தீரும். ஆகாரத்தில் ஜாக்கிரதை இருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஆரோக்யம் பாதிக்கப்படும் சிலருக்கு கண் சிகிச்சை செய்துகொள்ள வேண்டிவரும் புருஷன் மனைவி மனவேற்றுமை அகலும்.

பணம்: நிலைமை திருப்திகரமாக இருக்கும். சம்பாதனையும் சேமிப்பும் அதிகரிக்கும். ரேஸ்ய இனங்களில் ஒன்று பெரும் லாபத்தை யளிக்கும். இரண்டாம் பாதி உற்சாகமளிக்காது. செலவு அதிகமாக இருக்கும். நகைகளில் இல்லாவிட்டாலும் நிலங்களில் முதலீடு செய்வதைத் தவிர்க்கவும்.

வீட்டு சூழ்நிலை: வீட்டில் சந்தோஷகரமான வாழ்க்கை இருக்கும். இரண்டாம் பாதியில் மண வாழ்க்கைப் பாதிக்கப்படும். வீட்டில் அடிக்கடி விருந்தாளிகள் வருவார்கள். இரண்டாம் பாதியில் மனைவி உடம்பு கொஞ்சம் பாதிக்கப்படும். இரண்டாம் பாதியில் நண்பர் ஒருவரால் ஏமாற்றம் ஏற்படும்.

உத்யோகத்தில்: உயர்வோ அல்லது மாற்றலோ ஏற்படலாம். ஆபீஸில் எதிரி ஒருவன் உங்களைக் கவனித்துக் கொண்டே வருகிறான்.

வியாபாரிகள்: முதல் பாதி மிகவும் நன்றாக இருக்கிறது. கூட்டு வியாபாரம் நல்ல மாறுதலையடையும். வெளிநாட்டு வியாபாரம் லாபகரமாக இராது.

16 17 20 21 25 26 31 ஏப்ரல் 1 4 8 10 12 அதிருஷ்ட நாட்கள் 18 23 ஏப்ரல் 3 5 7 13 நன்றாக இல்லை.

தனுர் ராசி

மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய

லக்னாதிபதி குரு 6–ல் இருந்து 12–ல் உள்ள செவ்வாய் பார்வையுடன் இருப்பது குடும்ப வாழ்க்கையைப் பாதிக்கும் 4–ல் சூரியன் வீட்டு விவகாரங்களில் தகராறுகளையும் பிரயாணங்களையும் உண்டாக்கும். நண்பர்கள் உறவினர்களுடன் இருந்து வந்த மனவேற்றுமை அகலும் இல்லாவிட்டால் குடும்ப ஸௌஜன்யம் பெருமளவு பாதிக்கப்படும். உறவினர்களுடனோ அல்லது உங்கள் அன்புக்குப் பாத்திரமானவர்களுடனோ சண்டையைத் தவிர்க்கவும். உங்களைப் பற்றியோ அல்லது பிறரைப்பற்றியோ தவறாக நினைக்க நேரிடலாம் அதை தவிர்க்கவேண்டும். உங்களுக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்கு இம்மாத முதல் பாதியில் முக்கியம் பெறும். இம்மாத கிரகங்கள் உங்கள் தொழில் திறனுக்கு அதிக பாராட்டைச் சம்பாதித்துக் கொடுக்கும். குரு சுக்ரர்கள் பரஸ்பர வீட்சண்யத்தில் இருப்பது உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உதவியாக இருக்கும். முதல் பாதியில் உங்களுடைய அவசர புத்தியினாலேயே இந்த பலன்களை இழக்கவேண்டி வரும். ஏப்ரல் 3–ம் தேதி அமாவாஸை குடும்பத்தில் சுகத்தையும் முக்கிய மாறுதலையும் உண்டாக்கும். சொத்து விவகாரங்களில் சிரத்தை செல்லும். சிலருக்கு ஜாகை மாற்றம் ஏற்படலாம்.

பணம்: பொதுவாக நிலைமை நன்றாகத்தான் இருக்கிறது. வருமானாதிபதி சனி வக்ரித்திருப்பதால் எதிர்பார்த்த லாபத்தில் கொஞ்சம் குறைவு ஏற்படும். 12–க்கதிபதி செவ்வாய் லக்னாதிபதி குருவைப் பார்ப்பதால் சில சமயங்களில் பணம் அடியோடு வரண்டு போகும். திடீர் செலவும் அவசரப்பட்ட முடிவுகளும் தான் இதற்குக் காரணமாக இருக்கும். இரண்டாம் பாதியில் பண சௌகர்யங்கள் கொஞ்சம் அதிகமாக இருக்கும்.

வீட்டு சூழ்நிலை: சந்தோஷம் இராது. மனைவி தேகாரோக்யம் சரியாக இராது. கலியாணப் பேச்சு வெற்றி பெறக்கூடும். சொத்து வாங்குவதை ஒத்திப் போடலாம் உச்ச கிரகங்களான சனி சுக்ரர்கள் திடீரென உங்கள் பண நிலைமையை மாற்றக்கூடும் அதனால் நீங்கள் பெருமையடையலாம்.

உத்யோகத்தில்: லாபத்தைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. சிலருக்கு மாற்றல் கிடைக்கலாம். இரண்டாம் பாதி சரியாக இராது. சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்க்கவும்.

வியாபாரிகள்: திடீர் லாபத்துக்கு இது அநுகூலமான மாதம். இரண்டாம் பாதி இன்னும் அதிருஷ்டகரமாக இருக்கும். கூட்டு வியாபாரம் அதிருஷ்டகரமாக இருக்கும் முதல் பாதியில் கொஞ்சம் நஷ்டம் ஏற்படலாம்.

20–22 26 27 31 ஏப்ரல் 4 5 8 10 12 அதிருஷ்ட நாட்கள், 16 18 27 ஏப்ரல் 3 7 13 சந்தேகம்.

மகர ராசி

உத்திராடம் 2–ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2–ம் பாதம் முடிய

இம்மாதத்தில் பொதுவாக அனுகூலம் உண்டு. தொழில் பணம் குழந்தைகள் முதலிய இனங்களில் உச்ச சுக்ரனும் சனியும் உங்கள் விவகாரங்களை மாற்றக்கூடும். ஆனால் லக்னாதிபதி சனி வக்ரித்திருப்பது உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்குத் தடையாக இருக்கக்கூடும். முதல் பாதியில் புதிய நண்பர்கள் ஏற்படுவார்கள். வெளிப்பழக்கங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்கும். மார்ச் 27–ம் தேதி செவ்வாய் பிரவேசிக்கும் 12–ம் வீட்டுக்கு சனிபார்வை குடும்பத்திலோ அல்லது உத்தியோகத்திலோ தகராறுகள் ஏற்படுத்தலாம். நண்பர் ஒருவர் மூலமாக ஏமாற்றமோ அல்லது

 144 2244

ஆசை நிறைவேறுவதில் ஏமாற்றமோ ஏற்படலாம். இரண்டாம் பாதியில் பிறருடன் சகோதரப்பான்மை இராது. நண்பர்களை நம்பாதே. அவர்களில் ஒருவர் அனாவசியமாக உங்களுடன் சண்டை போட்டுக்கொள்வார். 3, 12—ல் உள்ள கிரகங்கள் நீண்ட தூர பிரயாணத்தைக் கொடுக்கும். இரண்டாம் பாதியில் வெளிநாட்டிலுள்ள பிள்ளை ஒருவனைப்பற்றி நல்ல செய்தி கிடைக்கும். கடிதங்கள், பத்திரிகைகள் முதலியன முக்யம் பெறும். செவ்வாயினால் கோபம் அதிகமாக வரும்.

பணம்: முதல் பாதியில் அதிக சௌகர்யங்கள் இருக்கும். திடீர் லாபமோ அல்லது நண்பரின் உதவியோ கிடைக்கும். செலவு அதிகமாக இருக்கும். இரண்டாம் பாதியில் பண பேரங்களால் லாபமிராது. அதிக உஷ்ணத்தினால் கண்ணோய் வரும்.

வீட்டு சூழ்நிலை: முதல் பாதி நன்றாக இருக்கிறது. இரண்டாம் பாதி குடும்ப சுகத்தைப் பாதிப்பதுடன் மனைவி உடம்பையும் பாதிக்கக்கூடும். வழக்கு ஏதாவது இருந்தால் அதை முதல் பாதியில் மாற்றியமைத்துக்கொள்ளலாம். இரண்டாம் பாதியில் வீடு மாற்றத்துக்கு அவசியம் ஏற்படலாம்.

உத்தியோகத்தில்: இம்மாதம் அதிருப்திகரமாக இருக்கும். உயர்வும் மாற்றமும் கிடைக்கலாம். இரண்டாம் பாதி நன்றாக இராது. சிப்பந்திகளுடன் தகராறைத் தவிர்க்கவும்.

வியாபாரிகள்: முதல் பாதி அதிக அதிருஷ்டமாக இருக்கும். இரண்டாம் பாதியில் ஹேஷ்யங்கள் வெற்றிக்கு தடங்கல்கள் இருக்கும். கூட்டு வியாபாரம் சரியாக நடக்காது.

18 20—22 25 26 31 ஏப்ரல் 4 8—10 12 13 அதிருஷ்ட நாட்கள். 17 18 19 ஏப்ரல் 3 7 நன்றாக இல்லை.

கும்ப ராசி

அவிட்டம் 3—ம் பாதம் முதல் சதயம்,
பூரட்டாதி 3—ம் பாதம் முடிய

5—க்கதிபதி புதன் ராசியில் இருந்து துலாத்தில் நெப்ட்யூனுடன் இருக்கும் உச்ச சனிக்கு திரிகோணத்தில் இருப்பதால் அதி ஆச்சர்யமான யோசனைகள் தோன்றக் கூடும். உங்கள் கருத்துகளுக்குப் பாராட்டு கிடைக்கக் கூடிய. கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு கிரகங்கள் அனுகூலமாக இருக்கின்றன. 5—க்கதிபதி புதன் செவ்வாய் பார்வையுடன் இருப்பது பிள்ளையின் விவகாரங்களில் கவனம் செல்லும் என்பதை குறிக்கிறது. புதன் மீனத்தில் நீசனாக இருப்பதாலும் செவ்வாய் 5—ல் உள்ள புதனைப் பார்ப்பதாலும் கடைசி இரண்டு வாரங்களில் அந்த பிள்ளையைப்பற்றி மிகுந்த அளவு மனக்கவலை ஏற்படும். இலக்கிய ஆராய்ச்சியிலும் கலாசாலை படிப்பிலும் ஈடுபடுவோருக்கு இது நல்ல மாதம். செவ்வாயும் நீச்ச புதனும் மன நிம்மதியைக் கொடுக்கமாட்டா. யாருடனும் சண்டை சச்சரவு வைத்துக்கொள்ளவேண்டாம். சிறு சிறு பிரயாணங்கள் கடிதப் போக்குவரத்துகள், விளம்பரம், உறவினருடன் விவகாரங்கள் முதலியன இம்மாதத்தில் முக்கிய விஷயங்கள்.

பணம்: இரண்டாம் பாதியை விட முதல் பாதியில் அதிக சௌகர்யங்கள் ஏற்படும். சேமிப்புகள் குறைவாக இருக்கும். செலவு அதிகம் இரண்டாம் பாதியில் வருமானம் நிதானமாக இருக்கும்.

வீட்டு சூழ்நிலை: சந்தோஷமான மாதம். சொத்து முதலீடு விக்கிரயம் முதலியனவற்றுக்கு அனுகூலம்இருக்கிறது. சிலருக்கு ஜாகை விஷயங்கள் முக்யம்பெறும். சிலருக்கு அதிக வாகன சுகம் ஏற்படும். முதல் பாதிக்குப் பிறகு ஆரோக்யம் சரியாக இராது.

உத்தியோகத்தில்: ஏதாவது லாபம் கிட்டும். வியாபாரத்திலோ அல்லது ஆபீஸிலோ புது மாறுதல்கள் வரும். மேலதிகாரி ஆதரவு இருக்கும்.

வியாபாரிகள்: ஹேஷ்யத்துக்கு முதல் பாதி அதிக லாபகரமாக இருக்கும். சாதாரணம்போல வியாபாரம் நடக்கும். முரட்டுத்தனமாக ஹேஷ்யத்தில் இறங்கினால் கடும் நஷ்டம் ஏற்படும். வெளிநாட்டு வியாபாரம் லாபகரமாக இருக்கும்.

16 20 25 27 ஏப்ரல் 1 4 8 12 அதிருஷ்ட நாட்கள் 17 18 21 ஏப்ரல் 1 3 5 7 நன்றாக இல்லை.

மீன ராசி

பூரட்டாதி 4—ம் பாதம் முதல், உத்திரட்டாதி,
ரேவதி முடிய

கிரகங்கள் போன மாதத்தை விட இந்த மாதத்தில் அதிக அனுகூலமாக இருக்கின்றன. மனமிரங்கினால் நீங்கள் அதிக தாராளமாக இருப்பீர்கள். ஆனால் வியவஸ்தையற்றவர்களிடம் ஜாக்கிரதையாக இருங்கள். உங்களுடைய உணர்ச்சி வசப்பட்ட போக்கை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு ஏமாற்றுவார்கள். மார்ச் 27—ம் தேதி செவ்வாய் 10—ல் பிரவேசிப்பதால் பணம் சம்பாதிக்கும் யோசனைகள் ஏதாவது கொண்டுவரப் பட்டால் அதைப்பற்றி ஆழ யோசித்துப் பார்க்கவேண்டும். இரண்டாம் பாதியில் உடம்பு சரியாக இராது. முதல் பாதியில் உறவினர் மூலமாக தகராறு ஏற்படும். உங்கள் பழைய உறவினர்களில் ஒருவர் உங்கள் விசேஷ கவனத்தைக் கவருவார். தூரத்திலுள்ள உறவினர் ஒருவரைப்பற்றி பிடிக்காத சேதி ஒன்று வரும். குரு சுக்ரர் பரஸ்பரம் இடமாறியிருப்பதால் சகோதரன் அல்லது சகோதரி விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்வீர்கள். சொத்து சம்பந்தமான தஸ்தாவேஜு விஷயத்தில் முக்கிய கடிதப் போக்குவரத்து நடக்கும். சகாக்கள் அண்டையினர் விஷயத்தில் உசிதானுசிதம் பார்த்து நடந்துகொள்ளவும். நிர்ப்பந்தம் அதிகமாக இருக்கும். ஆனால் பலாத்காரத்துக்குப் பணியக் கூடாது.

பணம்: எதிர்பாராத முடை இருக்கும். சுயமுயற்சிதான் முன்னுக்குக் கொண்டுவர முடியும். பண விவகாரங்களில் ஆத்ம தியாக மனப்பாங்கு இருந்தால் இறுதியில் நஷ்டத்தில் முடியும். செவ்வாய் தனுஸுக்குச் செல்லும். மார்ச் 27—ம் தேதி முதல் பண முடை மிகவும் அதிகமாகும்.

வீட்டு சூழ்நிலை: இரண்டாம் பாதியில் குடும்பத்தில் மகிழ்ச்சி இராது. குழந்தைகளில் ஒன்றின் தேக அசௌகர்யம்பற்றி கவலை உண்டாகும். மன நிம்மதி இராது. இரண்டாம் பாதியில் வீட்டுப் பிரச்னைகள் வாட்டும். முதலீடு எதுவும் லாபகரமாக இராது. மனைவி உறவினர் மூலமாக லாபம் இருக்கும்.

உத்தியோகம்: 10—ல் ராகுவை சனி பார்ப்பது உங்கள் கவலைகளை அதிகப்படுத்தும். நானாவித வேலைகளை நீங்கள் செய்யவேண்டி வரும். இரண்டாம் பாதியில் சூழ்நிலை சாதகமாக இராது. நண்பர்களைப்போலிருக்கும் சகாக்களை நம்பாதே. அவர்கள் நிச்சயமாக உங்களை கைவிடுவார்கள்.

வியாபாரிகள்: லாபத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும். தசாபுக்தியின் பலனையனுசரித்து சிலருக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். முதல் பாதி அதிருஷ்டகரமாக இருக்கும். கூட்டு வியாபாரத்தில் பண நிர்ப்பந்தம் இருக்கும்.

16 18 21 26 27 31 ஏப்ரல் 4 5 8 10 12 அதிருஷ்ட நாட்கள்.

19 22 ஏப்ரல் 1 3 6 7 நன்றாக இல்லை.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,
நெ. 5. வாஸுதேவபுரம், ஹைஸ்ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை—5.



14

போட்டோ எடுக்கிறார்கள்

★

புகைப்படம் எடுப்பதைச்
சொல்வேன்—குழந்தை
வஞ்கைப்படம் எடுப்பதைச்
சொல்வேன்
வாட்டமின்றி யோட்டமின்றி
வாய்சிரிக்க வேணும்
பாட்டியின்றி பாட்டனின்றி
படமெடுக்க வேணும்
அப்பனின்றி அம்மையின்றி
அதனை யெடுக்க வேணும்
தப்புமின்றி தயவுமின்றி
தனியே யெடுக்க வேணும்

—புகைப்படப் புலவனார்.

தசரத சக்ரவர்த்தி ராமனுக்கு மகுடாபிஷேகம் செய்ய எத்தனை முயற்சிகள் செய்தாரோ; அது கற்பனையான காவியம்; நான் செய்த முயற்சிகளைச் சொல்லப் போனால், இதிகாசமாக வளரும். ராமபிரானுக்கு பட்டாபிஷேகம் நடத்த முடியாதது போல கண்ணன் பயலை பல மாதங்களாக படம் பிடிக்க முயற்சிகள் செய்தோம்; ஆனால் திருட்டுத்தனமாக ஒருசமயம் இதை மீனுவின் தாயார் கண்டுவிட்டார்கள்; என் தாயாரும் பார்த்துவிட்டாள்.

‘ஐயோ. ஐயோ. குழந்தையைப் படம் எடுத்தால் ஆயுள் கம்மி. குழந்தை இளைத்துத் துரும்பாக போகும்’ என்றனர்.

நீங்கள் இது கேட்டுச் சரிக்கலாம். பலருடைய கொள்கைக்கு மத்தியில் குழந்தை வளருகிறது. நான் திருட்டுத்தனமாக, நீயிரங்காயெனில்தயவுகொண்டு படம் எடுக்க முயற்சித்த, படங்களில் தலையிருந்தால் கால் இருக்காது; கால் இருந்தால் தலை இருக்காது. இரண்டும் இருந்தால் போதிய வெளிச்சமின்றி அம்மிக் குழவியாக கருங்குமென்று இருக்கும். பல நாட்களாய் முயன்றும் நடவாத காரியத்தைத் துணிந்து செய்து விடுவதென முடிவு கட்டினோம். நானும் விசாரித்து வந்து விட்டேன்.

‘எவ்வளவுரூபாய் கேக்கிறான்?’ என்று விசாரித்தாள் காந்திமதி.

போட்டோ ஸ்டுடியோக்கள் இந்த நாளில் பஞ்சமில்லை; சலூன்களுக்கு அடுத்தபடியான எண்ணிக்கை இந்த ஸ்டுடியோக்கள்தாம். நாங்கள் எல்லோருமே போட்டோ ஸ்டுடியோவிற்குப் போவதென தீர்மானம் செய்தோம். வண்டி இரண்டு வந்தன. நாங்கள் அமர்ந்தோம்.

புகைப்படம் எடுப்பதிலே கஷ்டங்கள் இல்லை; குடும்ப சச்சரவு வராது என்று தீர்மானித்துத் தான் போனோம். ஆனால் புதிய பிரச்னைகள் எழுந்தன. குழந்தையை யார் வைத்துக்கொள்வது, யாரிடம் இருக்கும் போட்டோ நன்றாக இருக்குமென தீர்மானம் செய்தோம். முடிவுக்கு வராததுதான் தீர்மானம். எங்கள் தர்க்கங்களையெல்லாம் போட்டோ ஸ்டுடியோக்காரர் உடைத்துவிட்டார். குழந்தையை யார் வைத்துக்கொண்டாலும் ‘குழந்தையின் உருவம் சிறிதாக இருக்கும்; ஆகவே தனியே எடுப்பதே மேல்’ என்று யோசனை சொன்னார்.

போட்டோக்காரர் சொல்லிய யோசனையை நான் வரவேற்றது வம்பில் வந்து முடிந்தது.

வண்டிக்குள் இருந்தவர்கள், என் தாய், மாமியார் வேலைக்கார வள்ளி மூவரும் மனம் நொந்து போனார்கள். எல்லோரையும் சமாதானம் செய்ய ஒரு குரூப் போட்டோ எடுக்க ஸ்டுடியோக்காரரிடம் யோசனைக் கேட்க வந்தேன்.

‘என்ன சார். நீங்கள் குரூப் போட்டோ எடுக்க வந்தீர்களா? குழந்தைப் படம் எடுக்க வந்தீர்களா?’

‘குழந்தைப் படம்’

‘அதை மட்டும் எடுத்துக் கொண்டு போங்கள். ஒவ்வொருவரும் தானே குழந்தையை வைத்துக்கொள்ள ஆசைப்பட்டால், உங்கள் பணத்திற்குச் சனி பிடித்திருக்கிறது. வேண்டாம். வீண் செலவைச்செய்யாதீர்கள்.இன்று பிறர் தயவுக்காகச் சொல்லிவிட்டு நாளை ‘பில்’ கொடுக்கும்போது என்னைத் திட்டுவீர்கள்.’

'வாஸ்தவம். குழந்தையை மட்டும் எடுத்தாற் போதும்.'

'தைரியமாகச் சொல்லி அழைத்து வாருங்கள்.'

மீண்டும் நான் வண்டிப் பக்கம் போனபோது ஒரு வண்டி காலியாக நின்றது. 'என்ன மீனா எங்கே அவர்களை?' என்றதும், 'நீங்கள்தான் குழந்தையுடன் படம் எடுக்க முடியாது என்கிறீர்கள். எங்கம்மா, உங்கம்மா வேலைக்கார வள்ளி மூன்று பேரும் வந்ததே வந்தோம்.மலைக் கோட்டைப் பிள்ளையாரையாவது பார்க்கலாமென்று போய் விட்டார்கள். குரூப் போட்டோ ஒன்றும், ராஜூ பயலை தனிப் படம் ஒன்றும் எடுத்திருக்கலாம்' என்று சொன்னாள். என்னதான் கோபக்காரனாக இருந்தாலும் நடுவீதியில் மனைவியுடன் சண்டைப் பிடிக்கும் பண்பு எனக்கு ஏற்படுமா?'

'சரி நீ குழந்தையை எடுத்துக் கொண்டு வா.'

நாங்கள் ஸ்டுடியோவிற்குள் வந்தோம். போட்டோக்காரர் 'உள்ளே போங்கள்' என்றார். காற்று இல்லாத அறையைக் கண்டதும் குழந்தை அலற ஆரம்பித்தது.

'அழுகையைச் சமாதானம் செய்யுங்கள் சார்; ஏதாவது பப்பர்மெண்ட் பிஸ்கோத்து.'

'அட ா வாங்கவில்லையே?'

'குழந்தையைப் படம் எடுக்க வருகிறவங்க இது கொண்டு வர வேண்டாமா?' என்றவர் தமது வேலைக்கார பையனை பிஸ்கோத் வாங்கிவர அனுப்பினார்.

'நீ மடியிலே வைச்சுக்கோ, மீனா?'

'நீங்களே வைத்துக் கொள்ளுங்க.'

'சார் அந்த மேஜையிலே விடுங்க' என்ற அவரது குரல் பம்பரத்தை மேஜையில் ஆடவிடுங்கள் என்ற மாதிரி இருந்தது.

'எப்படி சார் குழந்தை புரண்டால், நிமிர்ந்தால் தொப்புன்னு விழுவானே. மேஜை அகலமாக இல்லையே.'

'விழத்தான் போடச் சொல்லறேன்' என்றவர் சிரித்துக் கொண்டு குறும்புப் பார்வையுடன் 'கீழே தரையிலே விழ அல்ல; காமிராவிலே விழத்தான் போடச் சொல்லறேன். உம் ரைட்' என்றார். வட்ட மேஜையில் போட்டுவிட்டு எங்கே கீழே விழுந்து விடுவானோ என்று நானும் காந்திமதியும் கண்கொட்டாது திக் திக்கென விழித்து நிற்போம்.

'மேஜையிலே துணிகூட இல்லை. ராஜூவுக்கு நெஞ்சை யழுத்துமே?' என்றாள் காந்திமதி.

'உன் பயல் நெஞ்சழுத்தக்காரப் பயல் தானே. சிரிக்கிறதை . . . பாரேன் பிடியுங்க சார்...' என்றேன்.



இதே வேளையில் 'அவன் விழுந்திடாமல் பிடியுங்க' என்று உத்தரவு கொடுக்கிறாள் தாய். 'எப்படியம்மா விழாமல் பையனைப் பிடிக்க?' என்று சிலேடையைத் தட்டுகிறார் காமிராமேன். இதற்குள் அவனுக்கு மேஜை அலுத்து விடவே மிரள மிரள விழிக்கிறான். பார்வை காமிராவை விட்டுப் போய்விடவே, 'அம்மா நீங்க இந்தப் பக்கம் வந்து கைதட்டிக் குழந்தையைக் கூப்பிடுங்கள்' என்று உத்தரவு பிறப்பிக்கிறார். நாட்டியம் சொல்லி வைக்கும் நட்டுவாங்கத்தார் உத்தரவுபோல காந்திமதிக்கு உத்தரவு வரவே, காந்திமதியும் குழந்தையின் அழகு அப்படியே படத்தில் விழ கை தட்டினாள். பெயர் சொல்லி அழைத்தாள். பயல் சிரித்தான். வயிற்றைத் தூக்கி எழுந்தான். தவழ ஆரம்பித்துவிட்டான்.

ஓடியோ போய் பிடித்துக் கொண்டேன். 'கெடுத்துப் பி[illegible]டீங்களே. ஏ ஒன் போஸ் [illegible] கப் போச்சே...இனிமே எங்கே வரும்?' என வருத்தமடைந்தார். 'கீழே விழுந்திருப்பான் சார்' என்று மீண்டும் மேஜையில் வைத்தேன். உஷ்ணம் தாங்காமல் உடம்பெல்லாம் முத்து முத்தாக வியர்வை. என் பட்டுச் சொக்காயிலும் மடிப்பு அங்கவஸ்திரத்திலும் வியர்வையைத் துடைத்[illegible]. பயல் மேஜையில் படுக்க மறுத்தான். பிஸ்கோத்து வரவே, மேஜையில் படுத்தான்.

காமிராக்காரர், 'சார் சார் நீங்களும் அம்மாவும் கால்மாடு தலைமாடா நின்று கூப்பிடாதீங்க' என்றார். சினிமாவில் நடிக்கப் போயிருந்தால்கூட டைரக்டர் எங்களை இத்தனை பாடு படுத்த மாட்டார். அப்படியே ஒரு பக்கமாய் நின்று கூப்பிட்டோம். 'தங்கக்கட்டி,' 'டேய் எமப்பயலே' இப்படி ஏதோ சொன்னோம். அவன் தலை தூக்கி எங்களைப் பார்க்கவேண்டுமே அத்தோடு விடுகிறாரா காமிராமேன்.

'சிரியுங்கள் சார்!' என்று உத்தரவு போட்டார். நினைத்தவுடன் சிரிக்க உணர்ச்சியில்லாத நடிகரா நான்? பயல் இரையெடுத்த சிங்கம் தலையைக் கீழே போட்டுத் தூங்குவது போல தூங்குகிறான். கண் மூடி இருக்கிறது;பிஸ்கோத் செய்யும் வேலை. பயலை நிமிர வைக்கக் காமிராக்காரர் டம் டம் டும் . . . ஹை . . இங்கே பாரு இதோ என்றெல்லாம் கத்தினார். அவன் சிரித்தான். அவரது தலை கருப்புத் துணிக்குள் புகுந்தது, அவன் அழ ஆரம்பித்தான்.

'அழுகையோட பிடிச்சுடாதீங்க. அழுமூஞ்சி படம் வேண்டாம். வேண்டாம்' என்றாள் மீனா என்னும் காந்திமதி.

'அம்மா நீங்க சும்மா இருங்க. ஆயிரம் புள்ளை படம் எடுத்தவன் நான். சார் உங்களைத்தானே. . .'

'என்ன?'

'சிரிப்புக் காட்டுங்க. உரக்க...'

'டாக்கியே பிடிக்கப் போறீங்களா? உரக்க எதுக்காகச் சிரிக்கணும்?'

'புன்முறுவல் பூத்தாலும் மெல்லிய சிரிப்புச் சிரித்தாலும் பையனுக்குத் தெரியாது..அதனாலே சிரிப்பு பலமாக நடக்கட்டும்.'

'இடைமறித்த காந்திமதி, 'புள்ளை கீழே விழுந்திடக் கூடாதே?' என்றாள்.

'கீழே விழுந்தாலும் கம்பளம் தான் விரிச்சிருக்கு ஒண்ணும் செய்யாது' என்றவர், 'கொஞ்சம்

சிரிங்க' என்றார். நான் சிரிக்க முயற்சித்தும் அழுகை முன்னுக்கு வந்தது. காந்திமதி 'நீங்க யானை யானை அழகர் யானை சொல்லி நாலு காலாலே வாங்க' என்றதும் எனக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. வீட்டில் குதிரைச் சவாரி செய்கிற பயல், இங்கேயும் வந்து என்னை கால்நடையாக்க வேண்டுமா?

'சார், குழந்தை சிரிக்கணும் சார். யானை மாதிரி கத்தி நடவுங்க' என்கிறார் காமிராமேன். நான் நடக்கிறேன்! என்ன செய்கிறது? நான் நடப்பதைப் பார்த்தவர், 'சார் சார் நல்ல தவழும் கிருஷ்ணனாக இருக்கிறீங்களே' என்று சிரித்தார். காந்திமதி 'தவறிப்போய் அவுங்க தவழும் லட்சணத்தைப் படம் எடுத்திடாதீங்க' என்று எச்சரித்தாள்.

ஒருவகையாக நான் தவழுவதைக்கண்டோ அல்லது இயற்கையாச் சிரித்தானோ அதன் கையிலிருந்த பந்து வாய்க்குள் போக முயற்சி செய்யவே. 'சார் சார் துணிப்பந்தை வாங்குங்கோ அதிலே மரத்தூள் இருக்கு' என்று மீனா கத்தினாள்.

'சும்மா இருங்கம்மா. நீங்க தவழுங்க சார். ஒரு பத்து நிமிஷம்.'

'பத்து நிமிஷமா? முழங்கால் வலிக்கிறதே..'

'முழங்கால் வலிக்கிறதா? போன வாரம் ஒரு குழந்தைப் படம் எடுத்தேன். அதனோட அப்பா தன் குழந்தையைச் சிரிக்க வைக்கச் சிரசாசனமே போட்டார். தவழுங்க சார்.'

'நல்லாத்தான் தவழணும். பிலிம் வைச்சு ஜல்தி...எடுங்க. நேரம் ஆகுது.'

'இதோ ரெடி...'

இவ்வாறு காமிராக்காரர் ரெடியாக இருந்தால், கண்ணன் பயல் சிரிக்க மாட்டான்; கண்ணன் சிரித்தால் காமிராக்காரர் போஸ் சரியில்லை என்பார். ஒருவகையாக என் முட்டும் வலியெடுத்தது. துணிப்பந்தில் பாதி மரத்தூளையும் தின்ற சமயம் பிலிம் பிடித்தது. 'குட் ஈவினிங் எவெரிபாடி' என்று வணக்கம் செய்தார்.



விருந்தாளி:—என்னசார் இது உங்கவீட்டு கடிகாரம் இவ்வளவு வேகமா போறதே!

வீட்டுக்காரர்:—அதுவா துபோறதே!

அடடா! அவர் சொன்ன 'குட் ஈவனிங் எவரிப்பாடி'க்கு அந்தப் பயல் சிரித்த சிரிப்பை எடுக்க ஹாலிவுட் காமிராமேன் வேண்டும். அத்தனை கொள்ளை இன்பம் இருந்தது. படம் பிடித்தாய் விட்டது. 'எப்போ சார் ஒரு வாரம் ஆகுமா?' என்றேன்.

'மூன்றே நாள்'

'சரி. காப்பி எத்தனை வேணுமின்னு அப்பாலே சொல்லறேன்.'

'ஒரு டஜன் போதுமா?'

'எந்த மூலைக்கு? குறைந்தது ஒரு குரோஸ் வேணும். 144 படம் அதுவும் போதுமோ போதாதோ' என்றேன். காமிராமேன் முகத்தில் பிரமிப்புக் குடியிருந்த சமயம் நாங்கள் தெருவையடைந்தோம். கோவிலுக்குப் போன மூன்று பேர்களுக்கு ஒரு வண்டியை நிறுத்திவிட்டு நாங்கள் வீட்டையடைந்தோம்.

மூன்று நாட்களைப் பல்லைக் கடித்துக்கொண்டு போக்கிவிட்டோம். குழந்தையின் படத்தைக் காண ஆவல். இன்னும் இரண்டு நாள் சென்றது. ஒரு வாரம் முடிவதற்குள் யார் யாருக்கு கண்ணன் படம் அனுப்ப வேண்டுமென எழுதிவந்தபோது ஓட்டர் லிஸ்டு மாதிரி நபர்கள் பெருகிவிட்டார்கள். என் கலியாணத்திற்கு அழைப்பிதழ் அனுப்பிய காலத்தில்கூட இத்தனை நபர்களுக்கு அனுப்பவில்லை. கண்ணன் அழகு வெள்ளத்தைக் காட்ட இத்தனை காப்பிகள் தேவையா என்ற விவாதம் முடியவில்லை. படம் நன்றாயிருந்தால் குறைந்த பட்சம் 144 காப்பிகள் போதுமென முடிவு செய்தோம்.

நூற்றி நாற்பத்துநாலு என்ன கணக்கென்ன நீங்கள் நினைக்கலாம். என் தந்தை, மீனாவின் தந்தை அவரவர்களுக்கு வேண்டிய நண்பர்களுக்கு கொடுக்கலாம். முக்கியமாக கொடுக்க வேண்டிய புள்ளிகளில் செல்லத்தம்மா பெயர் அகப்பட்டது. என் தந்தை படம் எடுக்கப் பெற்றதைச் செல்லத்திற்கு எழுதியிருக்கவேண்டும். அவளும் கண்ணன் படம் கேட்டு எனக்கு லெட்டர் எழுதியிருந்தாள். இது பொறுக்காக காந்திமதி பேச்சை ஆரம்பித்தாள்.

'செல்லத்தம்மாளுக்கு படம் அனுப்ப வேண்டாமா?' இதைச் சொல்லும்போது ஈட்டி குத்தியதைப் போலச் சொன்னாள்.

'மகள் பேச்சை புரியாத அவள் தாயார், 'யாரு மீனா, இந்தச் செல்லத்தம்மா? அது யாரு செல்லம்?' என்று கேட்கவே, என் தாயார் விளக்க ஆரம்பித்தாள். 'அதுவா செல்லத்தைத்தானே இவனுக்கு கட்டுவதாக இருந்தது? பூப்பொருத்தம் பார்த்தபோது பொருந்தலை. உங்கள் மகள் காந்திமதியை முடித்தோம்' என்றாள். எனக்குத் தலைவலி ஆரம்பித்தது. காந்திமதி மற்ற விஷயங்களில் தங்கக் கம்பி; செல்லத்தம்மா பெயர் கேட்டாளோ, கூரிய ஈட்டியாகிவிடுவாள்.

'அந்தச் செல்லத்தம்மாளே லெட்டர் எழுதியிருக்கிறாளே. இவாளுக்கு!'

'உன்னிடம் காட்டினேன்'

'படத்தைக் கேட்டு எழுதினதினாலே காட்டினீங்க. மற்ற லெட்டர் காட்டுவீங்களா?'

'வேறே லெட்டர் எழுதினால் அப்போது காட்டுகிறேன்.'

'உங்க படத்தைக் கேட்டு எழுதலையா?' என்று குத்தலாகக் கேட்டாள்.

'எனக்குப் பழைய கோபம் வரும்.'

'வரட்டுமே. என் பிள்ளை படத்தை இவள் என்ன கேட்கிறது?'

'இதில் தப்பு என்ன?' என்றாள் என் தாயார்.

'தப்பா? ரொம்ப அழகுதான். கலியாணமான ஒருத்தி இப்படிக் கடிதம் எழுதலாமா?'

'படித்தவளான நீயே இப்படிச் சொன்னால்?' என்று தாயார் பேச்சை நிறுத்திப் போய்விட்டாள்.

'மீனா. நீ பொல்லாதவள் நான் படம் அனுப்பமுடியாதென எழுதிவிடுகிறேன். சரிதானே. அவள் என் உறவுப் பெண். எனக்குக் கடிதம் எழுதுவது பிடிக்கவில்லையென்றால் நிறுத்திவிடுகிறேன்.'

'இன்னிக்குப் பிள்ளை படம் கேட்பாள்; நாளை உங்கள் படம் கேட்பாள். நடக்கட்டும் நடக்கட்டும்..'

'சே. அசடு..பேசறதைப்பார் பேச்சை.'

குழந்தைக்குப் படம் எடுக்கப் போய், காந்திமதி மனப்பாம்பு தலைதூக்கி என்னைக் கடிக்கவருகிறது. எல்லாம் குடும்ப சுகந்தானோ என்னமோ ஒரு வகையாக புகைப்படம் கைக்கு வந்து சேரும் எல்லாருக்கும் அனுப்பி வைத்து மீனாவின் கோபத்திலிருந்து விடுதலை பெற நினைத்தேன் காலதாமதம் ஆகிக்கொண்டே போயிற்று.

யாருக்குப் பதில் சொன்னாலும் வேலைக்கார வள்ளிக்குப் பதில் சொல்ல முடியவில்லை. 'புகையிலைப் படம் எப்போ வரும்' என்பாள். புகைப்படம் அவள்வாயில் புகையிலைப் படமாக உருவெடுத்தது. நான் அலைந்து அலைந்து என் காலே வலியெடுத்தது. ஸ்டுடியோ ஆசாமி ஏதோ தவறு பண்ணிவிட்டார் என்று முடிவு செய்தேன். ஆகப்போக ஒரு மாதம் ஆயிற்று. மாமியாரும், என் தாயாரும் ஊருக்குப் புறப்பட இருந்தார்கள். புகைப்படம் வந்தால் தபாலில் அனுப்பிவைக்கும்படி சொன்னார்கள். ஊருக்குப் போவதற்குமுன் எப்படியேனும் ஒரு டஜன் படம் தயாரித்துத் தரும்படி வற்புறுத்தியிருந்தேன்.

படத்தை ஆள்வசம் கொடுத்து அனுப்புவதாகச் சொல்லியிருந்தார். பொக்கிஷத்தை எதிர்பார்ப்பவர்கள் போன்று எதிர்பார்த்தோம். 'புரூப்' பார்க்கவில்லையா என்று கேட்கார்கள். 'புரூப்' அனுப்பியதாகவும் அது வந்து சேரவில்லையென்றும் நாங்கள் சொன்னோம். தெருமட்டும் படம் வந்துவிட்டது; வந்தேவிட்டது படம். வீட்டில் பரபரப்பு.

'கட்டியிருக்கும் நூலைப் பிரிக்கட்டும் என்ன அவசரம்?' என்றான் நீயிரங்காயெனில். அவசரமாக பிரிக்கவே கலகலவென அத்தனை படங்களும் சிதறின.

'புகையிலைப் படம் வந்துட்டுதா?' என்று கரித்தவலையைத் தேய்த்த கையோடு வள்ளி வந்து ஒன்றையெடுத்தாள். எல்லோர் முகத்திலும் அதிருப்தியே தாண்டவம்.

'இது என்ன அண்டங்காக்கா மாதிரி கன்னங்கரேல் னு இருக்கு' இது என் தாயார்.

'நம்ம ராஜு படமா?' இது காந்திமதி.

'வெந்நீர் தவலை மாதிரி இருக்குது' இது வள்ளி.

'இது அண்டங்காக்கா இல்லை; வெந்நீர் தவலையும் இல்லை. இருட்டடிப்பின் பிம்பம். இது, எவன் எடுத்த படம்?' என்றான் நீ இரங்காயெனில்.

'பிரதி பிம்பம் ஸ்டுடியோவாலே' என்றேன்.

நீயிரங்காயெனில் போட்டோவிற்கு ஒரு கவி பாடினான்.

அண்டாவும் சருவ மில்லே—இது
  அம்மிக் குழவியோடா?
அண்டங்காக்காயுமில்லை – இது
  ஆப்பிரிக்கா கண்டமடா.



பிரம்புச் சேரின் கால்கள் இப்போது மூலேக்கொன்ருக கோபித்துக்கொண்டு விட்டன!)

ஜாதகப் பொருத்தம் திவ்யமாக இருக்கிறதாம்! அநேகமாக் உன் விவாகத்துடனே என் கல்யாணமும் நடந்தேறிவிடும்என்று நம்புகிறேன்.

உன் கிரிஜா,

4

சென்னே,
25–6–53

அன்புள்ள கிரிஜா,

உன் கடிதம் கண்டதும் என் தலே சுழன்றது.

இந்த சமயத்தில் அதன் காரணத்தைச் சொல்லி உன் மனத்தில் வீணுக ஒரு புயலே உண்டாக்க நான் விரும்பவில்லே.

உன் கணவராக வர இருக்கும் ஸ்ரீமான் பாலகிருஷ்ணன்தான் என் மாஜி-காதலர் என்பதை மட்டும் தெரிவித்து விடுகிறேன்!

உனக்கும் அவருக்கும் என் மனமார்ந்த வந்தனங்கள்.

இத்துடன் என் விவாகப் பத்திரிகையை அனுப்பியுள்ளேன். அவசியம் முகூர்த்தத்துக்கு வா.

உன் விமலா.

5

மதுரை,
30–6–53

அன்புள்ள விமலா,

உன் கடிதமும், பத்திரிகையும் கிடைத்தன.

கல்யாணப் பத்திரிகையை பார்த்தவுடன் என் இதயம் துணுக்குற்றது... உன்னே மணக்க இருப்பவர் ஸ்ரீமான் சந்திரசேகர் எம். பி. பி. எஸ். ஒரு காலத்தில் நான் கோவிலில் சந்தித்த என் அபிமான-நேசராக இருந்தவர். பரவாயில்லே!... என் கணவரைப் பற்றி நீ, எழுதியதைக் கண்டவுடன் என் நிலேயில் உள்ள உன்னேக் குறித்து எனக்கு சிரிப்பு தான் வருகிறது!

இத்துடன் என் கல்யாணப் பத்திரிகையை அனுப்பியுள்ளேன். இருவர் விவாகமும் ஒரே நாளில் வருவதால் நாம் சந்திக்க முடியாது என்று நினேக்கிறேன்!

உன் கிரிஜா.

நாட்டு நடப்பு :: ஜகன்

★

ஆளப் பிறந்திட்டோம் அண்ணுச்சி அந்த,
வோட்டின் மகத்துவ மென்ருபார்
நாளும் நிகழ்வதை யறியாமே இந்த,
நாட்டை நடத்திடல் நலமாமோ
கண்ணிய சோதி வென்றிட்டதே நம்,
சென்னேக் கவுன்சில் தேர்தலிலே
திண்ணிய சி. ஆர். கட்சியதன்நல்,
அமைச்சர் கொள்கையும் நின்றதுவே
சின்னத் தனமாய் நடந்திட்ட அந்த,
சீக்கியரும் வாழ் 'பெப்சு'விலே
அண்ணல் நேருவின் காங்கிரஸுக்கே,
அமோக வெற்றி கிட்டியதே
இன்னும் அருகிலே தி. கொ.வில்,
தேர்தலின் முடிவோ நெருக்கடிதான்
சென்னேயில் சேதி யறிந்தனேயோ,
கைத்தறித் துணிகள் யாவுடனும்
இன்கனி காய்கறி இறைச்சிமீன்,
விற்பனே மேலினி வரியில்லே
சன்னமில் ஜவுளி ரகங்களுக்கோ,
இன்னமு மஞ்சு காலணுக்கள்
பின்னு மதிகவரி டில்லியிலும் உடன்,
போலிப் பட்டினுக்கும் எதிர்வரியாம்
மென்றிடு பாக்குக்கு மெத்தவரி,
சிமிட்டி செருப்புடன் சோப்புவரி
ஐந்நூறு ரூபாய் நிலவரிமேல்,
உபரியாய்த் தீர்வையும் வந்திடுதே
தென்பனி காப்பி ஏலம் டீ,
தோட்ட வரவுக்கும் வரியுண்டு
மெல்லிழைப் பஞ்சினி எகிப்தினிலே பொது
மக்களின் வல்லமை வென்றதுவே
கல்லுர நெஞ்சினன் கமாலென்பான் புரி
தொல்லே நஜீபுக் ககன்றதுவே
அண்டையி லின்ெெரு நாடப்பா,
அதன்பெயர் ஸிரியா என்பார்கள்
அங்கேயோ தலேவர் ஷிகாக்லியை எதிர்
ராணுவ கோஷ்டி விரட்டியதே
கிண்டாதி கிண்டர் சர்ச்சிலுடன் சேர்,
அமெரிக்கத் தலேவர் ஐஸன்ஹோவர்
சண்டபிர சண்டங்கள் செல்லுமோ இனி,
மத்திய கிழக்கு மண்டலத்தில்
இன்ெெரு சேதியும் கேட்டனேயோ,
தன் னிச்சைப்படியே பிரிந்திட்டபாக்.
அந்நிய யு. எஸ். உதவி பெற்று,
ஆயுதம் குவிக்குது அப்பப்பா!
பின்ெெரு துருக்கி கூட்டுஅதில்,
இராக்கும் சேர வருகுதப்பா
தன்னலம் கருதா நேருவுக்கு,
இன்னு மெத்தனேதான் சோதனேயோ!!
கன்னலி னினிய கடிதங்களில்,
காப்புக்குத் தானிவை என்கிருர்ஜக்.
யானே கட்டியே தீனிபோடுமொரு
ப்யூனு மிருக்கிருர் பீகாரில்
தேனினு மினிய தமிழ்மொழிக்குநம்,
தோழர்கள் நாட்டி லோரகராதி
ஆணின் வயிற்றி லொரு வளர்ந்தசிசு,
வாண்முக மூன்றுடன் பிறந்தசிசு
நானிலச் செய்திகள் நாளுவிதம்,
இதை நாளிதழ் வாங்கி யறிந்திடண்ணே

வாழ வைத்தவள்

ஸ்ரீப்ரியா

'ராஜு' என்று மகிழ்ச்சியுடன் அழைத்தவாறே உள்ளே நுழைந்தான் ராகவன். அவன் முகவிலாசம் சந்தோஷம், பரபரப்பு இவைகளேக் காட்டிற்று. ஈரக்கையைத் துண்டில் துடைத்தபடி சமையலறையிலிருந்து தலேயை நீட்டிய ராஜம் 'ஏது, ஒரே சிரிப்பும் கூத்தும்! ஏதாவது புதையல் கிடைத்ததா? அல்லது குறுக்'கெழுத்துப் போட்டியில் கூரையைப் பிய்த்துக் கொண்டது போல் வந்து விட்டதா பரிசு?' என்று சிரித்துப் பரிகசித்தபடி கணவன் கழட்டிய கோட்டை வாங்கி ஸ்டாண்டில் மாட்டினுள்.

'இன்று ஒரு விருந்து வருகிறது, யார் சொல் பார்க்கலாம்' என்று ஆருடம் பார்ப்பதுபோல் கேட்டான் வாசு.

'பூ. . .வேலே என்ன? இதுக்குத்தானு இந்தப் பாடு. . .எவனுவது புதுசா கல்யாணம் பண்ணிண்டவன் பலவந்தமா தானுகவே நம் அகத்திற்கு விஜயம் செய்வதாக மனேவியுடன் புறப்பட்டிருப்பான். . .'—ராஜியின் குரல் இறங்கியது.

'போ, உனக்கு தெரிந்தது அதுதான். இன்று நீ என்னே இப்படி கிள்ளுக்கீரை போல ஊதியெறியவும் உன் மாமியார் எங்க ராஜீ என்று பூரிப்புடன் பேசிக் கொள்ளவும் காரணபூதமான சாரதா வருகிருளடி என் கிளியே!' என்று செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டினுன் வாசு. தாயார் வீட்டிலில்லாததை இதற்குள் அவன் மோப்பம் பிடித்துவிட்டான்.

'என்ன, சாந்தாவா. . .எப்பி என்னிக்கு? எங்கே கடிதாசு' என்று பரபரப்புடன் கடிதத்தை பிடுங்கி, அதில் கண்களே சுழற்றின அவளின் முகம் பிரகாசமடைந்தது.

'அச்சா. பத்து நாள் மஜா' தான். பேசாமெ நீங்களும் லீவு போடுங்கோ...எல்லோரும் குழந்தையோடு சேர்ந்திருக்கணம். தவிர, அவ வந்தால் ஆபீஸுக்கு நேரத்தில் 'சிசுருஷை' செய்து உங்களுக்கு 'ஏன் ஸார்' போட என்னுலாகாது' என்று உத்தரவிட்டாள் ராஜம்.

'சரிதான், சொந்தத் தங்கைக்குக்கூட இந்த வரவேற்பு இராது . . ம் . .என்னே இன்ஸால்வென்ட்' ஆகாமெ விடமாட்டேன். இனி அம்மா உத்திரவு ஐயா ஊழியம் . . நீயோ அவள் கைப்பொம்மை . . ஹா தெய்வமே!' என்று நாடக பாணியில் பர்ஸைப் பிடித்துக் கொண்டான் வாசு.

'நன்னயிருக்கு' என்றுதலேயை ஒரு வெட்டு வெட்டியபடி சென்ருள் ராஜி.

'ஏன்ன, கொஞ்சம் சுறுசுறுப்பாத்தானே வேலேயைப் பாருங்கோ—இந்தக் காலத்தில் மனுஷா வந்தப்பறம் தந்தி வராப்பலே அவள் வந்தப்பறம் ஸ்டேஷுக்கு புறப்படாதங்கோ' என்று குரல்



சமையலறையிலிருந்து எழுந்தது.

ஈசிசேரில் சாய்ந்தபடி வீட்டின் லக்ஷ்மீகரத்தையும், இன்ப வாழ்வையும், தொட்டிலில் தூங்கப்போகும் சின்னக் கண்ணனையும் நினைக்கும்போது நான்கு வருடங்களுக்கு முந்தைய நிலை வாசுவின் மனதில் தோன்றுமலில்லை.

உள்ளே 'ஸ்டவ்'வின் பேரிரைச்சல் விருந்து தயாரிப்பதில் ராஜத்திற்குள்ள பரபரப்பைக் காட்டியது. சூடான பஜ்ஜி, காப்பியுடன் மறுபடி பிரசன்னமானாள் ராஜி.

ருசியான பண்டத்தை சுவைக்கும் நேரத்தில், சாந்தா அன்று அப்படி நடந்துகொள்ளாவிட்டால் தான் இன்றும் எந்த ஹோட்டலில் ரொட்டியை இழுத்துக் கொண்டு கிடப்போமோ என்ற எண்ணம் தோன்ற, மனம் கடந்த சம்பவத்தை அசை போட ஆரம்பித்தது.

* * *

வாசுவிற்கு மணமாகும்போது வயதுஇருபது. ராஜி பதினான்கு வயது சிறுமி. எட்டாவது படித்துக் கொண்டு இருந்தாள். சிறு வயது. பம்பாயில் ஏற்கப் போகும் புது உத்யோகம், புது சூழ்நிலை காரணமாக நான்கைந்து வருடங்களுக்கு குடித்தனம் வைக்கப் போவதில்லை என்று வாசு கூறிவிட்டான். ராஜி பிறந்தகத்திலேயே இருந்தாள்.

வாசுவின் தாயார் ஒரு கர்நாடகம். தன் ஒரே மகளான சாந்தாவிற்கும் அவ்வருடமே விவாகம் முடிக்க விரும்பினாள் அவள். ஆனால் வசதியின் பொருட்டு மாமா வீட்டில் வளர்ந்த சாந்தா தான் 'மெட்ரிக்' தேறிய பின் தான் மணக்கப் போவதாக தைரியமாக மறுத்துவிட்டாள். முன்னேற்ற நோக்கமும், உயர்ந்த பண்பும், பரந்த உள்ளமும் உடைய மாமா குடும்பத்தினரின் அன்பும், துணையுமே சாந்தாவிற்கு அறிவுச்சுடர் ஏற்றியது.

தாய் சொல் தட்டாத சத்புத்திரன் வாசு. பல கஷ்டங்களிடையே மகனை முன்னுக்கு கொண்டு வந்த தாய் சீதம்மாவிற்கு அவனிடம் அத்யந்த பிரேமை. அதுவே அவனுக்கு ஆபத்தாகவும் முடிந்தது. அன்பு நிறைந்த மனதில் பொறுமைத் தீ புகைந்து கொண்டேயிருக்கும். அன்பிற்கு பங்காளி வருகிறாள் என்ற நிலையில் புகையும் தீ கொழுந்து விட்டெரிகிறது. வாசுவின் தாயான சீதம்மா இதற்கு விலக்கா? ராஜியின் வருகை தாய் மனதில் களங்கத்தை உண்டுபண்ணியது. ஆகவே திருமணம் ஆரம்பமானதும் முதலே தகராறுதான். சம்மந்தி சண்டை கல்யாணமாகியும் ஓயவில்லை. தூரதேசம்சென்ற மகனுக்கு எழுதும் கடிதங்களிலெல்லாம்கூட சம்மந்திகளைப் பற்றிய அவதூறுகளே நிரம்பியிருக்கும். ஆனால் கல்யாணம் முடிந்ததும் சீதம்மாள் இரண்டு வருடங்கள் க்ஷேத்ராடனம் சென்றிருந்தாள்.

தாம்பத்ய உலகம் புரியும் பருவமடையாத ராஜி, வாசுவிற்கு கடிதமே எழுதுவதில்லை. எப்போதோ பிரும்ம லிபியில்வரும் 'மாமனாரின் நாலு வரி கடிதங்களே அவளைப்பற்றிய க்ஷேமலாபத்தை வாசுவிற்கு அறிவித்தது.

* * *

வருடங்கள் ஓடின. அன்று வாசுவிற்கு இரண்டு கடிதங்கள் வந்திருந்தன. முத்துப் போன்ற கையெழுத்துள்ள கவரைப் பிரித்த மாத்திரத்தில் அவன் உள்ளம் துள்ளியது. ராஜத்தின் முதல் கடிதம்! பெண்மை உணர்வு பெற்று, வெட்கத்தை விலக்கி வெளிவந்த அமிருத தாரை! அவள் படிப்பிற்கு அதுவே கடைசி வருடமாதலால் வீடு பார்க்க அவன் முயற்சி தேவை என்றும், சங்கீதம், தையல் முதலிய தேவையான சகல கலைகளையும் தான் நன்கு கற்றுவிட்டதாகவும் வரைந்திருந்தாள். இதயத்தில் மகிழ்ச்சி கோலமிட அதே 'சுருதி'யில் இன்னொரு கவரை பிரித்த வாசுவின் இதயவீணைத் தந்தி திடீரென அறுந்து அபஸ்வரத்தைச் சிதறடித்தது. க்ஷேத்ராடனம் முடிந்து வந்த தாயார் எழுதியிருந்தாள். ராஜத்தை ஏற்று குடும்பம் நடத்தக்கூடாதாம்!

வாசுவின் மூளை கலகலத்தது. அதில் அவன் தாயார் கூறும் காரணங்கள் 'பட்பட்'டென்று மோதின. பெண்ணை அனுப்புவது பற்றி பேச சம்மந்திகள் வந்தார்களாம். ஆனால் நேரான சீர்வரிசை செய்ய முன்வரவில்லையாம். இது மட்டுமல்ல, சீதம்மாள் மேலும் எழுதியது வாசுவிற்கு ஆத்திரமூட்டியது.

'குடித்தனம் உடனே இல்லை' என்று வாசு கூறியதுமே அவன் மாமனார் மேற்கொண்டு ராஜியை படிக்கவைக்க அவனிடம் உத்திரவு வாங்கிவிட்டார். ஆனால் க்ஷேத்ராடனத்திற்கு அவலும், அப்பளமும் மூட்டை கட்டுவதில் முனைந்திருந்த சீதம்மாவிற்கு இது தெரியாது. நகரவாசியான ஒவ்வொரு வாலிபனும் தன் மனைவி சகலகலா வல்லியாயிருக்க விரும்புவது இயற்கை தானே! ஆனால் மாப்பிள்ளையைக் கைக்குள் போட்டுக்கொண்டு உத்திரவு பெற்று, பெண்ணை ஆண்கள் பள்ளிக்கு அனுப்பியதும், ஆடவனிடம் பாட்டு படிக்கச் செய்ததும், வயது வந்த பெண்ணிற்கு அடுக்காத காரியம் என்று குற்றம் சாட்டினாள் சீதம்மாள்.

படித்துப் பட்டம் பெற்ற பெண்கள் குடும்பத்திற்கு லாயக்கற்றவர்கள் என்பது சிலர் முடிவு. ஆனால் வாசுவிற்குத் தெரியும் தாயின் அன்பின் ஏகபோக உரிமையின் கொடுமையான முடிவுகள் இவை என்பது. ஆனால் தாயை மீற அவனுக்குத் தெம்பில்லை. மிதமிஞ்சிய அன்பினால் தன் வாழ்வில் நஞ்சு கலந்துவிட்ட தாயின் அறியாமைக்காக மனம் குன்றினான் வாசு. 'ஆண் மகன் நெஞ்சில் தோன்றும் அன்பின் தரத்தில் தாய் — மனைவி என்ற வித்தியாசம் இல்லை. ஆனால் நோக்கமும், பாஷையும்தான் வேறு' என்ற உண்மையைத் தாய்க்கு புரிய வைக்கத் தெரியாது தவித்தது அவனது இள உள்ளம்.

நாட்கள் ஓட சாந்தா புக்ககம் சென்றாள். எந்த கிரகலக்ஷ்மி அவ்வீட்டில் விளக்கேற்ற வேண்டுமோ அவள் வராமலே அத்திருமணம் நடந்தது. தாயை மீறி மனைவியைக் காணக்கூட

தைர்யமின்றி பம்பாய் திரும்பினான் வாசு.

‘நீர் கொண்ட கடிதங்கள்’ பல ராஜத்தினிடமிருந்து வந்தன. ஊரார் ‘வாழாவெட்டி’ என்பது ஸ்திரமாகிவிடுமோ எனக் கதறினாள். அவைகளுக்கெல்லாம் வாசு அளித்த ஒரே பதில் ‘இன்று கட்டுண்டோம்;பொறுத்திருப்போம். காலம் மாறும்’ என்பதுதான். அதுகூட தாய்க்குத் தெரியாமல் எழுதியவை.

வாசுவின் மனம் சோர்ந்தது. பலருடைய ஏச்சுக்கு ஆளானான். நண்பர்களுக்கு மணமாயிற்று. தங்களுடைய இன்ப அனுபவங்களை அவர்கள் பரிமாறிக் கொண்டபோது அவன் வாயடைத்துப் போனான். அவனது அனுபவங்கள் வெளியிட லாயக்கற்றவை.

• • •

அது வாசுவின் தொல்லைகளின் எல்லைக் காலம். தாயாரிடமிருந்து திடீரென புறப்பட்டு வரும்படி தந்தி வந்தது. ஏதோ, என்னவோ என்று பறந்து வந்தவனை திடுக்கிடச் செய்தது ஒரு செய்தி. சாந்தா கணவனுடன் சண்டையிட்டு பிறந்தகம் வந்து விட்டாள்.

அன்று ராகவனின் உணர்ச்சிப் போராட்டத்தின் கடைசி நாள். தாய்க்கும் பெண்ணுக்கும் பலத்த வாக்குவாதம். சாந்தா கணவனை மீறியது தவறு என்றுபதேசித்தாள் தாய். அதைக் கேட்டுக் கொண்டு இருக்க அவள் வாசுவுமல்ல. ஊமையுமல்லவே!

‘ஏனம்மா, நீதான் மாமா என்னைப் படிக்க வைச்சுட்டார் என்று குறைப்படுவாயே...ஆகையால் படித்த பெண் என்று என் கணவர் என்னை ஒதுக்கி விட்டதாக நினையேன்...என் மாமியாரும்’...

‘நன்னாயிருக்கே..என் பெண்ணை யார் குறை சொல்ல... அவன் உளறினாலும் அந்த கிழப் பிணம் (சாந்தாவின் மாமியார்) அவனைத் திருத்தாமே..’ இது தாயின் குரல். வாசு திடுக்கிட்டான்.

‘ஏன் அம்மா, நீ ஒரு பெண்ணை சொன்னே. உன் பெண்ணை வேறொருவர் சொல்கிறார்’ சாந்தா குரலில் அழுத்தம் தொனித்தது.

அம்மா சற்று தயங்கினாள். ‘இப்போ நீயல்லவா அவனை வேண்டாமென்கிறாய். .அவன் நல்லவன்.’

விஷயம் இதுதான். சாந்தாவின் கணவன் ராஜூ ஆபீசரின் நிர்ப்பந்தத்தினால் அவர் மகள் சுசீலாவிற்கு பாடம் சொல்லிக் கொடுக்க ஒப்புக்கொண்டான். வயதுப் பெண்ணான அவளுடன் அவன் நெருங்கிப் பழகுவது பிடிக்காத சாந்தா சண்டையிட்டு தோற்று பிறந்தகம்வந்து விட்டாள்.

‘சாந்தா, பாடம் சொன்னா கெட்டுடுவானா ஆண்பிள்ளை?’ தாயின் சமாதான முயற்சியில் ஒரு கவலைக் குரல் இது.

வாசுவின் மனதில் ஓர் பிராபளம் தோன்றியது. ராஜியும், ராஜூவும் ஒரே நிலையிலிருக்கின்றனர். ஆனால் உலகமோ!

இதற்குள் வெகுண்ட சாந்தா ராகவனிடம்பாய்ந்தாள்.‘அண்ணா நீ ஏன் மன்னியை விலக்கினாய்? தவறுவது ஒரு பக்க குற்றமாகாதே! ஆண் பெண் இருபாலருக்கும் பொதுக் குற்றம் அல்லவா இது? இப்போது ஒருவர் பாடம் சொன்னவர். மற்றவள் கேட்டவள். வாழ்வில் சுகதுக்கம் போல், ஆண் பெண் உரிமையும் சமமானதண்ணா இந்தக் காலம் ஆகவே, இவர் நல்லவர் என்றும், மன்னி தீயவள் என்றும் சொல்வது முட்டாள்தனம். மன்னி சாது. நானாக இருந்தால் இந்த மூன்று வருட நரகவேதனைக்குப் பதில் உங்கள் அத்தனைப் பேரையும் கோர்ட்டில் ஏற்றியிருப்பேன்...’

சீதம்மாள் பேசவில்லை. பெண்ணின் சமநோக்கும் சட்டமும் அவளுக்கு புரிந்ததோ இல்லையோ! ஆனால் வாசுவிற்கு புரிந்தது. ஒரு பெண்ணின் துணிவு தனக்கில்லாததற்கு வெட்கினான்.

‘இந்தக் காலத்து பெண்களே வக்ரம்..அந்த நாளிலே..’ என்றபடி எண்ணெய்க் கிண்ணத்துடன் கோயிலுக்கு நழுவினாள் தாய்.

வீடு திரும்பிய அவளிடம் வாசு அன்று இரவே தான் புறப்பட்டுச் சென்று ராஜியை அழைத்து வருவதாகவும், ராஜூவிற்கும் உடனே வரும்படி தந்தி கொடுப்பதாகவும் சொன்னபோது சீதம்மா மறுக்கவில்லை.

• • •

ஆனால் இன்றுவரை வாசுவிற்கு சந்தேகமே. சாந்தி-ராஜூ இருவருமாக ஒரு நாடகமாடினார்களோ என்று. ஏனெனில் தந்திக்காக காத்திருந்தவன்போல் வந்தான் ராஜூ. சீதம்மாவோ வாசுவே சாந்தாவைத் தூண்டியதாக நினைத்தாள். எப்படியாயினும் வாசுவின்வாழ்வு ஆரம்பிக்க உதவியவள் சாந்தாதானே!

• • •

‘அம்பி மணி எட்டரை..இது என்ன டிபன் கைகூட அலம்பாமல் தூக்கம்.. பாவம் ஆபீஸ் வேலை அசதி..! என்று தாயின் குரல் கேட்டு திடுக்கிட்டு எழுந்தான் வாசு.

பரபரப்புடன் ஸ்டேஷனுக்குச் செல்ல தன்னைத் தயாரித்துக் கொண்டிருந்த வாசுவின் செவிகளில் சமையலறையிலிருந்து வந்த குரல் விழுந்தது.

‘சமையல் சரியாயிருக்கா, அம்மா’-இது ராஜி. “நன்னாயிருக்குடி, உன் சமத்தும், அடக்கமும், காரியமும் யாருக்கு வரும்..பூச்சூட்டலுக்கு உன் நாத்தனாரை கல்லிழைத்த காப்பும்”...தாயின் மேல்கொண்டு குரல் வருமுன் இன்பத்தால் பூரித்த ராகவனின் கால்கள் தன்னை வாழவைத்த அருமைச் சகோதரியை அழைக்க விரைந்தன.

இப்பொழுது பொழுது நன்றாய்ப் புலர்ந்துவிட்டது. சூரியன் ஒரு பனைமர உயரத்திற்கு வந்துவிட்டான். இச்சமயம் இந்த விநோதத்தையெல்லாம் சற்றுத் தூரத்திலிருந்தே பார்த்துக் கொண்டே அங்கே வந்து சேர்ந்த அரசனொருவன்— “யாரம்மா நீ? ஏன் அழுகிறாய்?” எனக் கேட்டான்.

இராக்ஷஸி— “ஐயா! இதோ மரத்தின்மேலேறிக் கொண்டிருப்பவன் என் புருஷன். இவன் மணந்துகொண்ட என்னை விட்டு விட்டு ஓடப் பார்க்கிறான். நான் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக் கொண்டும் இவன் மனமிரங்கவில்லை. தாங்கள்தான் இவனுக்குப் புத்தி கூறவேண்டும்—” என்று கூறி அவன் காலைப் பிடித்துக்கொண்டாள்.

அரசன் உடனே மரத்தின் மேலிருக்கும் பொற்கொல்லனை அழைத்து “ஏன் அழகான உன் மனைவியை இப்படித் தவிக்க வைக்கிறாய்? கீழே வந்து இவளையழைத்துக்கொண்டு உன் வீட்டிற்குப் போ! இல்லாவிட்டால் உன்னைத் தண்டிப்பேன். நான் அரசன்” என்றான்.

பொன் கொல்லன் அரசனாகிய அவனிடம் உண்மையைக் கூற அஞ்சினான்; “அப்படியே உண்மை கூறினும் நம்பமாட்டான்—” என்று கருதி பிரபுவே! தாங்கள் இவளை அழைத்துக்கொண்டு போகலாம். நான் இவளிடம் யாதொரு பாத்யதையும் கொள்ளப்போவதில்லை. எனக்கும் இவளுக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. நான் தேசாந்தரம் போகப் போகிறேன்” என்றான்.

அரசன் இதைக் கேட்டு பெருமகிழ்ச்சி யடைந்து “நல்லது! அரசர்களாகிய நாங்கள் குடிகளிடமிருந்து எந்த ஒரு வெகுமதியும் அடைவதில்லை. விலைக்கே பெற்றுக்கொள்வோம். இதோ இரண்டு லட்சம் ரூபா இப்பையிலிருக்கிறது. இறங்கி வா! இதைப் பெற்றுக் கொள்—” என்றான்.

அவன், “பிரபு நல்லது! பணத்தை மரத்தினடியிலேயே வைத்து விடுங்கள். இவள் என் கண்ணுக்குத் தென்படுகிற வரையில் நான் இம்மரத்திலிருந்து இறங்குவதற்கில்லை. அப்படி ஒரு பிரதிக்ஞை. தயை செய்யுங்கள்” என்றான்.

அரசன் இராக்ஷஸியின் அழகில் மயங்கியிருந்தபடியால், வேறு பேசாமல், பொற்கொல்லன் கேட்டுக்கொண்டபடி பண முடிப்பை அம்மரத்தினடியிலே வைத்துவிட்டு அந்த ராக்ஷஸியுடன் தன் நகரத்திற்குப் போய்ப் பலரறிய முறைப்படி விவாகமும் செய்துகொண்டான்.

இராக்ஷஸி, ராணியாய் விட்டபடியால், அவளைக் கட்டுக்காவலுடன் கூடிய ஒரு பெரிய மாளிகையில் தக்க வசதிகளுடன் வைத்து அரசன் ஆதரித்து வந்தான்.

• • •

சில மாதங்கள் சென்றன. அப்பால் ஒரு நாள் அந்த இராக்ஷஸ ராணி தன் மாளிகையிலிருந்து தன் இராக்ஷஸ மாயையினால் வெளிப்பட்டுப் போய் அரசன் வெகு பிரியமாய் வளர்த்து வந்த குதிரையைக் கொன்று அதன் மாமிசத்தைப் புசித்துவிட்டு அதன் எலும்பை அரசனுடைய முதல் மனைவியின் அரண்மனை வாசலில் போட்டுவிட்டுத் தன் அரண்மனைக்குப் போய்விட்டாள்.

மறுநாள் காலையில் தன் குதிரையைக் காணாத அரசன் ஒருவருடனும் ஒன்றும் பேசாமல் நேரே தன் புதிய மனைவியின் மாளிகைக்குச் சென்று குதிரை காணாமற் போனதைப் பற்றிக் கூறி வருந்தினான். அவள் அதுபற்றித் தானும் வருந்துகிற

பாவனையில் பல பேச்சுக்கள் பேசிக்கொண்டிருந்த பின்— "மூத்த மனைவியின் மாளிகையிலே இதுபற்றி விசாரித்தீர்களா—" என்று கேட்டாள்.

அரசன் "அங்கே விசாரிக்கவில்லை. விசாரிக்கிறேன் இதோ!" என்று கூறிச் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டுத் தன் முதல் மனைவியின் மாளிகைக்குப் போனான். அந்த மாளிகையின் முன் குதிரையின் எலும்பு குவியலாயிருக்கக் கண்ட அரசன்— "என் அருமைக் குதிரையைக் கொன்றவள் இவளே! இதில் சந்தேகமில்லை—" எனத் தீர்மானங் கொண்டு கடுங்கோபத்துடன் ராணியிடம் போய் ஒன்றும் விசாரியாமல் வாயில் வந்தபடி அவளைத் திட்டி விட்டுத் தன் அரண்மனைக்குப் போய்விட்டான்.

அந்தோ! மறுநாள் இரவு அந்த இராக்ஷஸி அரசன் மிகப் பிரியமாய் வளர்த்து வந்த நாயைக் கொன்று— புசித்துவிட்டு வழக்கம்போல் தன்னை அரசன் நிரபராதியென நம்பும்படி நடந்து கொண்டு நிம்மதியாயிருந்தாள்.

இந்தக் குற்றங்களிரண்டும் அரசனுடைய முதல் மனைவியின்மேலேயே சுமத்தப்பட்டன. ஆகவே அரசன் கடுஞ் சினங்கொண்டு— ராணியின் தலையை வாங்கிவிடும்படி கட்டளையிட்டான்; மந்திரி வெகு நேரம் மன்றாடியதன்பேரில் சிறைச்சாலையில் கடுங்காவலில் வைக்கும்படி செய்தான். உடனே அந்த ராணி— சிறைசாலைக் கனுப்பப்பட்டாள்.

இராணி இச்சமயம் கர்ப்பிணியாயிருந்தமையால் அங்கே போன சிலநாளைக்கெல்லாம் ஒரு புத்திரனைப் பெற்றாள். புத்திரன் பிறந்ததும் இராணி, "அந்தோ! நான் கஷ்டப்படுவது போதாதா! நீயுமா கஷ்டப்படப் பிறந்தாய்! என் கண்ணே! உன்னை நான் எப்படிக் காப்பாற்றுவேன்? எப்படியடா நம் கலி தீரப் போகிறது?"— என்றெல்லாம் புலம்பித் தெய்வத்தை நினைத்துத் துதித்தாள்.

தெய்வம் அச்சிறைச்சாலையில் அவள் முன் அவளுடைய தந்தையைப்போலத்தோன்றி "கவலைப்படாதே! இனி உனக்கும் உன்னுடைய இக்குழந்தைக்கும் வேண்டிய சௌகர்யங்கள் ஏற்படும்படிச் செய்கிறேன். இந்தக் குழந்தை சீக்கிரம் பெரியவனாவான். இவனால் உன்கஷ்டம் நீங்கும்" என்று கூறிவிட்டுச் சென்றது.

இராணி மனமகிழ்ந்தாள். மறுநாள் முதல் அவளுக்கு வேண்டிய சௌகர்யங்களெல்லாம் குறைவரக் கிடைத்து வந்தன. இதனால் இராணி தன் அரண்மனையிலிருந்து வந்ததைவிடச் சந்தோஷமாகவே இருந்து தன் குழந்தையைக் கண்ணுங் கருத்துமாகக் காப்பாற்றி வந்தாள்.

தெய்வங் கூறியபடி அந்தக் குழந்தை ஒரு வருஷ காலத்திற்குள் நல்ல வாலிபனாய் விட்டது; கல்வியிற் சிறந்தவனாகவும் அறிவிற் பெரியவனாகவும் தைர்யசாலியாகவும் நிகரற்ற வீரனாகவும் விளங்கிய அவனுக்கு அவன் தாயார் பிரதாபசீலன் என்று பேரிட்டாள்.

பின்பு பிரதாபசீலன் ஒரு நாள் தன் அன்னையைப் பார்த்து, "எனக்குத் தகப்பனார்— பாட்டனார்— சிறிய தகப்பனார்— மாமன்— முதலிய உற

வினர் யாருமில்லையா! இருந்தால் நான் அவர்களை எங்கே காணலாம்?"— என்று கேட்டான்.

பிள்ளை இவ்வாறு கேட்டதும் தாயார் பெருந் துயரமடைந்து கண்களிலிருந்து நீர் பெருக மகனை நோக்கி, "உனக்குத் தகப்பனாரில்லை. ஆனால் பாட்டனார் இருக்கிறார். அவர் என் தகப்பனார். அவர் பட்டணத்திற்கு வெளியே எங்கேயோ வாசம் செய்கிறார். அவர் தச்சு வேலை செய்பவர். அவர் நமக்கு இங்கே ஆகாரம் அனுப்புவது மன்றிச் சகல சௌகர்யங்களையும் செய்து கொடுக்கிறார். ஏனைய உறவினரில் நமக்கு இனி யார் யாருமில்லை"—என்றாள்.

இதைக் கேட்டதும் பிரதாபசீலன் பரபரப்படைந்து "அம்மா வெளியே எப்படியாவது போய் என் தாதாவைக் கண்டுபிடித்து நாம் இக்கஷ்டத்திலிருந்து விடுதலை பெற வழியைத் தேடுகிறேன். உத்தரவு கொடுங்கள் தைர்யமாய்! பயப்படாதேயுங்கள்"— என்றான்.

இராணி அவனை வெளியே அனுப்பத் தைர்யமில்லாமல் கஷ்டப்பட்டாள்; ஆதலால் பலவிதமாகச் சமாதானங் கூறித்தடுத்தாள். அவன் சுத்த வீரனாகையால்— "அம்மா, "கவலைப்படாதீர்கள். என்னை யனுப்புங்கள். உங்களுடைய

ஆசீர்வாதத்தினால் நான் வெற்றியுடன் திரும்பி வருவேன்" என்று கூறித் தாயாரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு சிறைச்சாலையிலிருந்து தன் சாமர்த்தியத்தினால் யாருக்குந் தெரியாமல் வெளிப்பட்டு மனம் போனபடி நடந்து பட்டணத்தைக் கடந்து வெகுதூரம் சென்று பலவிடங்களில் தேடியலைந்து களைப்படையும் சமயத்தில் ஓர் இடத்தில் தன் பாட்டனாரைக் கண்டுபிடித்தான்.

பாட்டனார் வாசம் செய்யும் அந்த இடம் ஒரு முனிவரின் ஆசிரமம்போலிருந்தது. அது கண்டு வியப்படைந்த பிரதாபசீலன்— தன் பாட்டனாரை நெருங்கி— "இதோ தங்கள் பேரன் பிரதாபசீலன் வந்தனம் செய்கிறேன்" என்று கூறி பணிந்தெழுந்து கரங்கூப்பி நின்று "தாதா உங்களையும் அதியற்புதமான இந்த இடத்தையும் பார்ப்பதற்காக வந்தேன்" என்று கூறி அவர் விசாரிப்பதற்கு முன் தானாகவே தன் வரலாறனைத்தையும் பணிவாய்த் தெரிவித்துக்கொண்டான்.

கிழவன் தச்சனானாலும் சிறந்த தெய்வ பக்தியுடையவன். ஆதலின்— "எல்லாம் தெய்வ கடாட்சத்தால் நடக்கின்றன" என்பது கண்டு தெய்வ சிந்தனையுடன்— பேரனுக்குச் சகல மங்களங்களும் வெற்றியுமுண்டாகும்படி ஆசீர்வாதம் செய்து, சாப்பாடு செய்வித்து—சாவகாசமாயிருக்கையில்— "உனக்கு நான் என்ன செய்ய வேண்டும் சொல். செய்கிறேன்—" என்று கேட்டான்.

பிரதாபசீலன்— தாதா! நான் உங்களுடைய ஆசீர்



வாத பலத்தால் எல்லாம் அடைவேன்! ஆயினும் ஒரு வேண்டுகோள்!— ஆகாயத்திலே பறந்து செல்லக்கூடிய ஒரு மரக் குதிரை செய்து தரவேண்டும். அது என் விருப்பப்படி ஆகாயத்திலும் தரையிலும் செல்லவேண்டும். நான் ஏவுகிறபடியெல்லாம் அது நடக்கவேண்டும். இது செய்தாற் போதும்— என்றான்.

கிழவன்—நல்லது என்று கூறி பிரதாபசீலனை ஒரு வாரம் தன்னிடமே வைத்துக் கொண்டு அந்த ஒரு வாரத்திற்குள் அவன் விரும்பிய படி குதிரையொன்று செய்து கொடுத்தனுப்பினான்.

இங்ஙனம் அற்புதக் குதிரையை பெற்றுக்கொண்ட பிரதாபசீலன் பாட்டனாரிடம் விடைபெற்றுக் கொண்டு நேரே தன் பட்டணம் போய் ராஜாவின் அரண்மனை வாசலிலே குதிரையை விட்டிறங்கிச் சமயம் பார்த்துத் தர்பாருக்குள் சென்றான்.

அப்பொழுது அரசன் தர்பார் நடத்திக்கொண்டிருக்கக் கண்ட பிரதாபசீலன்— நல்ல சமயமெனவறிந்து, சந்தோஷமடைந்து தைர்யமாய் அரசன் முன் சென்று வணங்கித் தனக்கோர் உத்யோகம் கொடுக்கும்படி வேண்டிக் கொண்டான்.

இவ்வாறு தைரியமாய் தர்பாரில் பிரவேசித்து உத்யோகம் கேட்கும் பிரதாபசீலனை அரசன் தன் மகனென அறியானாயினும் அவனுடைய ராஜ கம்பீரமான தோற்றத்தையும் முகப்பொலிவையும் தைரியத்தையும் கண்டு மகிழ்ந்து அவனை அன்றே தன் அரண்மனைக் காவலாளிகளுக்கெல்லாம் தலைவனாக்கினான். அல்றியும் அவனை அன்று முதல் தன் இராக்ஷஸ மனைவியின் மாளிகைக்குக் காவலாயிருந்து வரும்படியும் கட்டளையிட்டனுப்பினான்.

(தொடரும்)



"அன்றைக்கு ராத்திரி பத்துமணிவரை இங்கே ஒண்ணும் எழுதக்காணோம் ஸார்... ஹி.... ஹி...யாரோ கண்முழிச்ச புண்ணியம் சம்பாதிச்சுட்டா!"



உன் கண்ணை நம்பாதே!

மேலே எவ்வளவு சதுரமான பெட்டிகள் உள்ளன. எண்ணிப் பார்!...............மொத்தம் ஏழு - பெட்டிகள் இருக்கின்றன அல்லவா? இப்பொழுது படத்தை தலை கீழாகப் புரட்டி எண்ணிப் பார்!

சாரணர் உலகம்

சித்தார்த்தன்

முதற் சிகிச்சை

★

சென்ற இதழில் ஒரே ஒரு காலெலும்பு ஒடிந்தால் என்ன முதற் சிகிச்சை செய்வது என எழுதப்பட்டதல்லவா? இரண்டு காலெலும்புகளும் ஒடிந்தால் வேறு சிகிச்சை இருக்கிறது என்பதை அறிவுறுத்துகிறதல்லவா? ஆம், இரண்டு காலெலும்புகளும் ஒடிந்தால் வேறு சிகிச்சை இருக்கிறது.

தொடை யெலும்பு ஒடிந்தால் என்னசெய்வது என்பதைப்பற்றி விளக்கியது ஞாபகமிருக்கும். அப்பொழுது ஒரு தொடையின் எலும்பு ஒடிந்தால் என்ன செய்வது என்றும், இரண்டுதொடை யெலும்புகளும் ஒடிந்தால் என்ன செய்வது என்பதும் தனித்தனியாக விளக்கப்பட்டது ஞாபகமிருக்கும். அதேபோல் காலெலும்பு ஒன்று மட்டும் ஒடிந்தால் ஒருவித சிகிச்சையும் இரண்டு எலும்புகளும் ஒடிந்தால் வேறு விதமான சிகிச்சையும் செய்ய வேண்டும்.

இரண்டு காலெலும்புகளும் ஒரே சமயத்தில் ஒடிவது துர்லபம். அப்படியானால் இரண்டு கால்லெலும்புகளும் ஒடிய சந்தர்ப்பம் உண்டு எனத் தெரிகிறதல்லவா? அந்த சந்தர்ப்பங்கள்தான் யாவை? எந்தவிதமான விபத்து ஏற்பட்டால் இரு காலெலும்புகளும் ஒடியலாம். இரண்டு கால்களும் ஒரே சமயத்தில் நேரிடையான தாக்குதலுக்குட்பட்டால் ஒடியும். அல்லது மேலிருந்து கீழ் குதிக்கும்பொழுது கால்கள் பரப்பியவாறு உள்ளங்கால் பூமியில் அதிர்ச்சியுடன் படும்படி குதித்தால் ஒடியலாம். காரணங்கள் இவ்வளவுதானா? இன்னுமிருக்கிறது. யுத்தம், பூகம்பம் போன்ற விபத்துகளின்போது குண்டு அல்லது கனத்த சாமான்கள் இரு கால்களின் மேல் விழுந்தால் ஒடியலாம். இதுவும் தவிர, வேகமாகச் செல்லக் கூடிய வாகனங்களுக்கடியில் இரு கால்களும், அகப்பட்டால் ஒடியலாம்.

ஏதோ ஒரு காரணத்தினால் ஒடிந்ததாக வைத்துக்கொள்வோம். என்ன முதற் சிகிச்சை செய்வது? முதற் சிகிச்சையை நிர்ணயிக்கும் முன்பக்கத்தில் உதவி செய்ய யாராவது இருக்கிறார்களா எனத் தெரிந்துகொள்ள வேண்டும். உதவ ஆளிருந்தால் ஒருவிதமாகவும் இல்லாவிட்டால் வேறு விதமாகவும் முதற் சிகிச்சை செய்யவேண்டும்.



முதலில் ஆளிருப்பதாக வைத்துக்கொள்வோம்.

முதலில் ஒருசிம்பின் மேலோ அல்லது வேறு ஏதாவது வஸ்துவின் மேலோ மிருதுவான வஸ்துக்களை சுற்றி தொடை, கால்கள் மத்தியில் வைக்கவேண்டும். இதன் பிறகு கணுக்கால்களைப் பிடித்து கால்களை ஸ்திரப்படுத்த வேண்டும். இதன் பிறகு கால்களை எவ்வளவு அருகில் வலி அதிகரிக்கவொட்டாமலும்,மெதுவாகவும் கொண்டு வர முடியுமோ அவ்வளவு அருகில் கொண்டு வர வேண்டும். இவ்வாறு கொண்டு வந்த கால்களை ஒருவன் பிடித்துக்கொள்ள வேண்டும். சிம்பை வைத்துக் கட்டும்வரை தளர விடக்கூடாது.

இதன் பிறகு முழங்காலிலிருந்து கடைசிவரை கால்களின் இரு வெளிப்புறங்களிலும் சிம்புகள் வைக்கவேண்டும். சிம்பைச் சேர்த்துக் கட்ட ஐந்து பாண்டேஜ்கள் போடவேண்டும். முதல் பாண்டேஜ் அடிபட்ட பாகத்திற்கு மேலாக வரவேண்டும். இரண்டாவது கீழாக வர வேண்டும். மூன்றாவது முழங்காலுக்கு சற்று மேலாக வர வேண்டும். நான்காவது கணுக்கால்களை சேர்த்து பிகர் ஆப் எட் பாண்டேஜினால் கட்டவேண்டும். ஐந்தாவது முழங்காலுக்கு மேலாக வரவேண்டும். பாண்டேஜ்களின் முடிச்சு குறைந்த அடிபட்ட காலின் சிம்பின்மேல் வரவேண்டும். இது மிகவும் முக்கியம்.

உதவ ஆளில்லை என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது என்ன செய்வது. இப்பொழுதும் கால்களை ஸ்திரப்படுத்த வேண்டும். இரு கால்களையும் வலி அதிகரிக்காமல் அருகில் கொண்டுவர வேண்டும். இவ்வாறு செய்த பிறகு கணுக்கால்களைச் சேர்த்து ஒரு பிகர் ஆப் எய்ட் பாண்டேஜ் போடவேண்டும். இங்குதான் வித்தியாசம். ஆளிருந்தால் சிம்புகள் வைத்துக் கட்டும்வரை கால்களை பிடித்துக்கொள்ளவேண்டும். உதவ ஆளில்லாவிட்டால் ஒருவனால் இது செய்யமுடியாதல்லவா? ஆதலால்தான் இந்த பிகர் ஆப் எய்ட் பாண்டேஜ் போடவேண்டியது அவசியம். இதன் பிறகு சிம்புகள் இரு பக்கத்திலும் வைத்து ஐந்து பாண்டேஜ்கள் போடவேண்டும். முதலாவது அடிபட்ட பாகத்திற்கு சற்று மேலாக வரவேண்டும். இரண்டாவது சற்று கீழாக வரவேண்டும். மூன்றாவது முழங்காலிற்கு சற்று மேலாக வரவேண்டும். நான்காவது கணுக்கால்களைச் சேர்த்து பிகர் ஆப் எய்ட். ஐந்தாவது முழங்காலிற்கு மேலாக வர வேண்டும்.

இவ்வாறு அடிபட்டவர்களை ஸ்ட்ரெச்சரில் தான் தூக்கிச் செல்லவேண்டும். அப்பொழுது தான் அதிக அதிர்ச்சியில்லாமலும், வலி அதிகரிக்கவொட்டாமலும் செல்லலாம்.

ஹிந்தி உலகம் - हिन्दी जगत

-பண்டிதஜி-

समस्याओं का हल

✱

भारतीय राष्ट्रीय कांग्रेस का जो हाल का अधिवेशन कल्याणी में हुआ, उसके अध्याक्षासन से भाषण देते हुए पंडित जवाहरलाल नेहरू ने नवभारत की मुख्य-मुख्य समस्याओं का ज़िक्र किया और उनका हल भी बताया. उन्होंने कहा—

"हम अपने कई प्रयत्नों में सफल हुए हैं और अपनी सफलताओं के लिए हम थोड़े गर्व का अनुभव भी कर सकते हैं। इतना होते हुए भी हममें बहुत त्रुटियाँ हैं और इनमें सबसे बड़ी है आत्मसंतुष्टि की भावना। हमारा शासनयंत्र, कई दृष्टियों से अच्छा होते हुए भी देश की परिवर्तित परिस्थितियों के अनुरूप अपनेको तत्काल कार्य करने योग्य नहीं बना सका है। पग-पग पर विलंब से कार्य होता है और फलस्वरूप योजनाओं के लिए जो धन स्वीकृत किया जाता है, उसका भी उपयोग नहीं किया जाता। हम व्यवस्थित रूप से कार्य प्रारंभ ही नहीं करते और इस प्रकार आवश्यक संलग्नता का हममें अभाव है।

"जनता सरकारी विभागों पर बहुत अधिक भरोसा करती है और साथ ही उनकी आलोचना भी करती है। तीव्र निर्माण की प्रगति के लिए यह आवश्यक है कि जनता, संसद तथा विधान-मंडलों में जन-प्रतिनिधि और सरकार, सभी इस दिशा में कार्यरत हों। इन दोनों में परस्पर सहयोग भी होना आवश्यक है। यह कार्य केवल कांग्रेस का ही नहीं, बल्कि सभी इसमें योगदान कर सकते हैं।

"अपने पिछले इतिहास, परंपरा तथा वर्तमान विशिष्ट स्थिति के कारण अवश्य ही कांग्रेस इस कार्य के लिए विशेष उपयुक्त है; किन्तु यह संस्था तभी प्रभावकारी रूप से काम कर सकती है जब हम पहले की-सी भावना पुनः जागरित करें, आपस के छोटे-मोटे मत-भेद भूल जायँ, पद-लोलुपता तथा व्यक्तिगत महत्वाकांक्षा की प्रवृत्ति का परित्याग कर दें।

"सामुदायिक योजना तथा राष्ट्रीय विकास योजनाओं द्वारा हम देश की-विशेष कर भूतकाल में उपेक्षित अपने ग्रामीण क्षेत्रों की समस्या को बहुत अच्छी तरह हल कर सकते हैं। इन क्षेत्रों में प्रत्येक व्यक्ति के सहयोग की आवश्यकता है, चाहे वह किसी भी दल अथवा वर्ग का हो।

"जीवन के इस संघर्षकाल में हमें संकुचित तथा सीमित करनेवाले प्रभावों तथा विचारों से ऊपर उठना होगा। सांप्रदायिकता, प्रान्तीयता और जातीयता का हमें समूल नाश कर नये भारत का निर्माण करना है।

"आज हम अपनी प्रथम पंचवर्षीय योजना कार्यान्वित कर रहे हैं; और द्वितीय पंचवर्षीय योजना जनता के पूर्ण सहयोग से और उसकी विशेष आवश्यकताओं को ध्यान में रखकर तैयार की जानी चाहिए। पंचायतों और ग्रामीण जनता को इस संबंध में विचार करना चाहिए और अपने सुझाव उपस्थित करने चाहिए।

"अब केवल ऊंचे पदों पर बैठने से काम नहीं चलेगा, बल्कि हमें करोड़ों देशवासियों का सहयोग प्राप्त कर इन महान कार्यों और योजनाओं में उन्हें भागीदार बनाना होगा।

"इस कार्य की पूर्ति के लिए हमें जनता की भावना, उसके प्रतिदिन के दुख-सुख और गीत-नृत्य को पहचानना होगा। इस प्रकार उसके हार्दिक सहयोग से हमारी योजनाएँ जनता की

दृष्टि में महत्व प्राप्त करेंगी। इसी प्रकार हमारे पूर्वपुरुष जनता को शिक्षित करके महान सत्य का उपदेश देते थे। इस पद्धति से प्राप्त प्रसन्नता से, दुर्भाग्य और विपत्ति सरलता से सहन की जाती थी। यही कारण है कि भीषण दरिद्रता की स्थिति में भी हमारे देश की जनता हँसना, नाचना और एक-दूसरे के प्रति उदारता की वृत्ति रखना अभी नहीं भूली है। कुछ नगरों में रहनेवाली जनता अवश्य ही अपनेमें बड़प्पन की भावना उत्पन्न कर भारत की आत्मा से संपर्क जारी न रख सकी और बहुधा निराशा से पीड़ित रहती है।"

समस्या (பெ. பா.) சிக்கலான பிரச்னை
हाल का சமீபத்திய
ज़िक्र (ஆ. பா.) பிரஸ்தாபம்
हल (ஆ. பா.) தீர்வு
त्रुटि (பெ. பா.) குறைபாடு
आत्मसंतुष्टि (பெ. பா.) சுயதிருப்தி
शासनयंत्र (ஆ. பா.) ஆட்சியந்திரம்
तत्काल உடனடியாக
विलंब (ஆ. பா.) தாமதம்
व्यवस्थित रूप से திட்டவட்டமான முறையில்
पग (ஆ. பா.) காலடி
संलग्नता (பெ. பா.) ஈடுபாடு
अभाव (ஆ. பா.) இல்லாமை
कार्यरत முனைந்த
पद-लोलुपता (பெ. பா.) பதவிமோகம்
महत्त्वाकांक्षा (பெ. பா.) பெருமை வேட்கை
परित्याग करना விடுதல், துறத்தல்
संघर्ष (ஆ. பா.) போராட்டம்
सांप्रदायिकता (பெ. பா.) வகுப்பு வாதம்
प्रांतीयता (பெ பா.) மாகாண வாதம்
जातीयता (பெ. பா.) ஜாதிவாதம்
समूल வேரோடு
सुझाव (ஆ. பா.) யோசனை
भागीदार (ஆ. பா.) பங்காளி
नृत्य (ஆ. பா.) நடனம்
बड़प्पन (ஆ. பா.) பெருமை, பெரியதனம்
संपर्क (ஆ. பா.) தொடர்பு
बहुधा பலவிதத்திலும்

जय हिन्द! जय हिन्दी!



"சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸனுக்கு குன்றக்குடி அடிகளார் திருவண்ணாமலை ஆதீன மடத்தில் சமீபத்தில் பொன்னாடை போர்த்தினார்.

குடும்ப வைத்தியம்

'குச்சாமாமா'

அர்டிகேரியா

★

சின்ன விஷயங்கள் பெரிதாகி விடுவது இக்காலத்தில் சாதாரண சம்பவம். சில ஸமயங்களில் இவை மிகப் பெரிதாகிவிடுவதுமுண்டு. இவ்வகையில்தான் நண்பர் ஒருவருக்கு ஒருக்கால்பெரியதொரு விசாரமுண்டாயிற்று.

உடம்பில், கையிலோகாலிலோ—வேறு பாகத்திலோ, பிச்சி பிச்சி தினவு எடுக்கும். சொறிந்தால் அங்கெல்லாம் திட்டு திட்டாகத் தடித்துக்கொள்ளும். ஆயினும் தினவு நில்லாது. கொஞ்ச நேரஞ் சென்றால் இத்தடிப்புகள் தானே மறைந்து போகும். ஆனாலென்ன? வேறொருஇடத்தில் அவ்விதமே தினவெடுக்கும்.

ஓரிடத்தில் ஏற்பட்ட தடித்த தழும்புகள் முழுவதும் மறையும் முன்பே வேறொரு விடத்தில் அவ்வித தினவு கண்டு, சொறியவும் தழும்புகளுண்டாகவுஞ் செய்யும்; அன்றி உண்டான தழும்புகள் மறையும் முன்பே அங்கு மறுபடியும் தினவு ஏற்படவும் சொறியவும் அதனால் ஏற்கனவே இருந்த தழும்புகள் அதிகமாகவும் ஏதுவாகும்.

இவ்வகை அனுபவம் முகத்தில் ஏற்படிலோ, முகமெல்லாம் சொறியச் சொறிய தழும்புகளேறி முகமே வீங்கிப் போகும். தடித்த புருவங்களும் உதடுகளும் தொங்கவும், முகமே மிகப் பயங்கரமான தோற்றம் பெறும்.

இவ்வகையனுபமேற்பட்ட நண்பர் ஒருவர் மிகவும் பயந்து போனார். அருகாமையிலிருந்த ஒரு டாக்டரிடஞ் சென்றார். டாக்டர் இந்த நோய்க்கு 'அர்டிகேரியா'என்று நாமகரணஞ்செய்து ஏதோ சிகிச்சித்தார். நோய் சற்று குணமாயிற்று. ஆனால் சில தினங்களுக்குள் மறுபடியும் உண்டாயிற்று.

இப்படிப் போவதும் வருவதுமாகப் பலதரம் இந்த அர்டிகேரியா கண்ணாமூச்சி காண்பித்தது. இடையில் இதை ஒருவர் அலர்ஜியா என்ற புதிய பெயரிட்டழைத்தார். பெயரை மாற்றியதாலும் சிகிச்சைகள் மாறியதாலும் நண்பரின் பீதிதான் அதிகமாயிற்று.

இவ்வளவு கதைகளையுஞ் சொல்லிக் கொண்டே ஒரு நாள் நண்பர் வந்தார். நான் ஊரிலின்

லாத ஸமயத்தில் தமக்கு ஏற்பட்ட மேற்சொன்ன அனுபவங்களைச் சொல்லி—இதற்கு மருந்து ஏதாவது உண்டாவென்றுங் கேட்டார். அதற்கு நேரிடையாக நான் பதில் சொல்லவில்லை. நண்பரின் வீட்டைச் சுற்றிலுமுள்ள தோட்டத்தைப்பற்றி விசாரித்தேன். கத்திரிச் செடி வெண்டைச் செடி டொமாடோ செடியாவும் நன்றாக வளர்ந்திருந்தன வீட்டிற்கு வேண்டிய காய்கறிகள் ஓரளவு உதவி வந்தன. புடலஞ் செடியோ சொல்லிமுடியாதபடி காய்த்தது. ஆனால் அவரைச் செடிதான் ரொம்ப 'நோஞ்சலாய்' இருந்து வந்தது. செடியும் வளரவில்லை; காய்களும் அவ்வளவாகக் காய்க்கவில்லை. நண்பரோ தம்மாலான சிச்ருஷைகளெல்லாஞ் செய்து பார்த்துவிட்டார். ஒன்றும் பயனில்லை.

விஷயம் எனக்கு விளங்கிவிட்டது. அவரைச் செடியிலுள்ள பூச்சிகளின் மேற்சுணையோ அல்லது சுணையுள்ள இலைகளோ மேலேபடுவதால்தான் இந்த அர்டிகேரியாவும் அலர்ஜியாவும் வருவதும் போவதுமாயிருந்தது.

ஒன்றிரண்டு முருங்கை மரங்களையும் வீட்டையடுத்துவைத்து விடுங்கள். அப்போது உமது வீட்டிலுள்ள ஸகலருக்கும் இந்த அர்டிகேரியா பரவும். இன்னும் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் உண்டாகும் என்றேன்.

நண்பருக்கு திகைப்புத்தான் ஏற்பட்டது. 'என்ன கொஞ்சம் விளங்கும்படி சொல்லுங்கள்' என்றார்.

'விளக்கமெல்லாம் அப்புறமாகட்டும். முதலில், நாளை காலையில் ஒரு முறம் வரட்டிச் சாம்பலைத் தூளாக்கிச் செடிகளின் மேலெல்லாம் தூவிவிடுங்கள். முக்கியமாக அவரைச் செடியின்மேல் அதிகமாகவே தூவுங்கள்' என்றேன்.

இடைமறித்து நண்பர் 'என்ன விசேஷம்?' என்றார்.

'அதைத்தான் அப்புறஞ் சொல்வதாகச் சொன்னேனே! மேலும் இனியொருக்கால் அந்த அர்டிகேரியாவோ அல்லது அலர்ஜியாவோ ஏற்படுமானால், நமைச்சல் உண்டாகும் பிரதேசங்களின்மேல் விபூதியையோ அல்லது சாம்பலையோ நன்றாய்ப் பூசுங்கள். மேலும் அன்றைய தினமேயோ அல்லது மறுநாளோ நன்றாய்ச் சுத்தஞ்செய்த ஸீரத்து நிலாவாரை இலை, ரோஜா மொக்கின் தளம், திராக்ஷை இவற்றை ¼ தோலா 1 தோலா 4 தோலா என்ற அளவில் கையாலேயே நிமிட்டி ஒரு டம்ப்ளர் கொதிக்கும் நீரில் ஓரிரவு ஊறவைத்து மறுநாள் காலை சிறிது சூடாக்கி மருந்துகளைக் கசக்கிப் பிழிந்து களைந்து, கஷாயத்தை வடிகட்டிக் குடியுங்கள். ஒருதரம் அல்லது இரண்டுதரம் தாராளமாக மலசோதனையுண்டாகும். அப்படியாகாவிடில் ஒரு ஆபத்தும் ஏற்படாது. மறுநாளும் இதே மருந்தைச் சாப்பிடுங்கள். தாராளமாக மூத்திரமும் போகும். இந்த அர்டிகேரியா அலர்ஜியா முதலியவை இந்த ஜில்லாவில் நில்லாது ஓடிப் போகும். ஆனால் வாரத்தில் இரண்டு முறை செடிகளின்மேல் சாம்பலைத் தூவ மறந்து விடாதீர்கள்' என்றேன். ஆச்சரியமுற்ற நண்பர் 'காரணத்தையும் விளக்கிவிடுங்கள்' என்று நிர்ப்பந்தித்தார்.

“காரணம் ஒன்றும் பிரமாதமானதல்ல. இந்த செடிகளில் ஏராளமாக பூச்சிகளடித்திருக்கின்றன. முக்கியமாக அவரைச் செடிகளில் நீங்கள் ஓய்வு நேரமெல்லாம் அங்கேயே கழிக்கின்றீர்கள். பூச்சிகள் தீண்டுவதாலோ, அவற்றின் சுணைகள் ஒட்டிக் கொள்வதாலோ இந்த நமைச்சல் முதலிய உபத்திரவங்கள் உண்டாகின்றன. சாம்பலைத் தேய்ப்பதால் அச்சுணைகள் நீக்கப்படுகின்றன. உடனே சொறிச்சல் நின்று போகும். மேலும் நான் சொன்ன கஷாயத்தால் கணிசமாகப் பித்தம் குறைவுபடும். அர்டிகேரியா அலர்ஜியா முதலியவை அதனால் நீங்குவது மட்டுமல்ல. வராமலும், வந்தாலும் பொறுக்கவும் சகன சக்தியுண்டாகும். செடிகளின்மேல் சாம்பலைத் தூவ ஆரம்பித்தாலே அடிக்கடியும்வரும் இந்த அர்டிகேரியா நின்றுவிடும்” என்றேன்.

'ஆமாம்! இந்த முருங்கை மரம் வைக்கச் சொன்னீர்களே! அது எதற்காக.'

'நாராயணா! ஐயா முருங்கை மரம் வைத்தீரானால் அதில் நூற்றுக்கணக்கான கம்பளிப் பூச்சிகள் உண்டாகும். இவை நமது வீட்டினுள் சகல விடங்களையும் ஆக்ரமிக்கும். ஒருவருக்கும் தெரியாத வகையில் தமது சுணையை அங்கங்கே உதிர்த்துவிட்டுச் செல்லும். பிறகு எதைத் தொட்டாலும் போதும். பிச்சிப்பிச்சி தினவுதான். சொறியச் சொறிய தழும்புகள். மேலும் தினவு என்ற உத்ஸவந்தான். உமது வீடு இப்பாடுபடுவது மட்டுமல்ல. அண்டை அயல் வீடுகளுக்கும் இக்கம்பளிப் பூச்சிகள் குடிபுகும். அங்குள்ளவருக்கும் நாக வேதனையைக் கொடுக்கும், போதுமா' என்றேன்.

வெட்டிவேர் (இதைத் தென்னாட்டில் விளாமிச்சன் வேர் என்பர்) சந்தனக் கட்டை, செம்மரம், வெள்ளி லோத்துப் பட்டை, கோஷ்டம்இவற்றைச் சமனெடையில் பெருந்தூளாக இடித்து வைத்துக்கொள்ளுங்கள். இந்தூளில் அரைப் பலத்தை ஒரு மெல்லிய துணியில் சிறிய மூட்டையாகக் கட்டித் தண்ணீரிலிட்டு வெந்நீராகக் காய்ச்சி ஆறிய பிறகு குளிப்பதற்கும், கைகால்களைக் கழுவுவதற்கும் உபயோகித்து வாருங்கள். இதனால் அர்டிகேரியாவைத் தடுக்கும் சக்தி சருமத்திற்கு உண்டாகும். வருவது வெய்யிற்காலமானதால் சிறிதளவு சந்தனம் பூசிக் கொள்ளவும் செய்யலாம். அதனாலும் மேற்சொன்ன குணங்கள் ஏற்படும்.

இரண்டு வாரங்களுக்குப்பிறகு நண்பர் திரும்பவும் விஜயஞ் செய்தார். மருந்தின் உயர்வைப் பற்றியும், மருத்துவத்தின் நுண்மையைப்பற்றியும் வெகுவாகவும் புகழ்ந்து பேசினார். அவரைச் செடியும் தளதளவென்று துளிர்த்துக் கொத்துக் கொத்தாய் காய்க்கவுந் தொடங்கிவிட்டதாம்.

தையல் கலை

ஏ. சுகுமார்

சரித்திரகால பூ தையற்கலை

*

சாதாரணமாக தையற் கலையில் பல உட்பிரிவுகள் இருக்கின்றன. அதில் முக்கியமாக பூ தையற் கலையை குறிப்பிடலாம். சரித்திரம் எவ்வளவு பழமையானதோ, அவ்வளவு பழமையானது பூ தையற் கலை. சரித்திர காலம் முதற்கொண்டே பூ தையற் கலை மனிதனுக்கு இன்றியமையாத சாதனமாக உள்ளது. அழகுக்கு அழகு செய்வது பூ தையற் கலை, ஆதலால் அது என்றென்றைக்கும் இருந்துகொண்டே இருக்கும்.

இந்த கலை பழம்பெரும் கலைகளில் ஒன்றாக மதிக்கப்படுவதால் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஊடுருவிப் பாய்ந்துள்ளது. பூ தையற் கலை ஆடைகளை அலங்கரித்துக்கொள்ளவும் வீடுகளை அலங்கரிக்கவும் மனித படாடோபத்தையும் உயர்வையும் இனத்தையும் பிரித்துக் காட்டவும், பொது மக்கள், போர் வீரர் முதலியவர்களை வேறுபடுத்திக் காட்டவும் அவரவர்களின் மதமே சிறந்தது என எடுத்துக்காட்டவும் சாதாரணமாக ஒவ்வொருவர் வித்தியாசத்தையும் எடுத்துக்காட்டக்கூடியதாக இருந்தது பழங்காலத்து பூ தையற் கலை.

தற்காலத்தில் அணங்குகளின் ஆடைகளை அலங்கரிக்கவும், அவர்களின் அழகுகளை மிகவும் அழகாக எடுத்துக் காட்டவும் இக்கண்கவர் பூ தையற் கலை ஒரு சாதனமாக அமைந்திருக்கிறது. மேலும் ஒவ்வொரு பெண்டிரும் தன் இயற்கை அழகுடன் சேர்க்கை அழகையும் பூ தையற் கலையின் மூலமாக அதிகரித்துக்கொள்ளுவதால் தாங்கள் அதற்காக கொடுக்கும் பணத்திற்கு நஷ்டமில்லை என்று பெருமையடைகிறார்கள்.

எந்த காலத்தில் மக்கள் நூல் நூற்று ஆடை நெய்து, நெய்த ஆடைக்கு பலவிதமான வர்ணங்களை கொடுத்து உபயோகிக்க ஆரம்பித்தனரோ, அந்த காலத்திலிருந்தே பூ தையற் கலையும் வளர்ந்து வந்தது. அவரவர்கள் வசித்து வந்த நகரங்களின் நாகரீகத்திற்கு ஏற்றபடி இக்கலையும் மாறியிருந்தது. உதாரணமாக நாம் பழங்கால பூ தையற் கலையின் சரித்திரத்தைப் பார்க்கும் நோக்கில் உலகத்தில் புகழ்பெற்ற “பேபிலான்” நகரத்திலுள்ள பூந்தோட்டங்களிலே நாகரீகமாக பூ தையல் வேலைப்பாடுகள் அமைந்த கண்கவர் உடைகளை அந்நாட்டு நாரீமணிகள் அணிந்து மோகினிகளாக திரிந்து வந்ததை சரித்திரத்தில் பலவிதமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மக்களை “நடமாடும் கோயில்கள்” என்று நம்நாட்டு ஆழ்வார் ஒருவர் சொல்லியதுபோல, அந்நாரீமணிகளை கண்டவர்கள் “தொங்கும் பூந்தோட்டங்களோ” (ஹாங்கிங் கார்டன்ஸ்) என்று வியந்து சொல்லியிருக்கின்றனர்.

பிப்ரவரி 23-ந்தேதி திருச்சி அருகேயுள்ள பெட்டவாத்தலை கிராமத்தில் நிறுவியுள்ள ராமகிருஷ்ண குடில்-அநாதைச் சிறுவர்களின் கட்டிட நிதிக்காக சென்னை குமாரி ரேணுகா பரதநாட்டியமும் ஓரியண்டல் நடனமும் ஆடினாள். பஞ்சாயத்து தலைவர் குமாரி ரேணுகாவின் நடனத்தைப் பாராட்டி வெள்ளிக் கோப்பை பரிசளித்தார்.



வாலாஜாபாத் இந்துமத பாடசாலை புதுக்கட்டட கால் கோள் விழாக்கள் செங்கற்பட்டு நகராண்மைத் தலைவர் மே. வேதாசல முதலியார் மனைவியார் ராஜேஸ்வரி அம்மையார் தலைமையில் நடைபெற்றது.

எகிப்து நாட்டு அரசிளங் குமரிகள் பூ வேலைப்பாடுகள் அமைந்த உடைகளை அணிந்து தற்பெருமை கொண்டார்கள் என்றும் மனதை தொடக்கூடிய பூ தையல் வேலைபாடுகள் அமைந்த உடைகளை பலவிதமாக அணிந்து முன்காலத்தில் ரோமாபுரி வேல்விழி வனிதா மணிகள், வீர தீர பராக்கிரமம் நிறைந்த போர் வீரர்கள் வெற்றியுடன் திரும்பிய காலத்தில் அம்மேனகைகள் வரவேற்ற தன்மையை சரித்திரத்தில் பலவாறுக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய காலத்தில் பூ தையல் வேலைகள் கையாலேயே செய்யப்பட்டுவந்தது.

மனிதனுல் கண்டுபிடிக்கப்பட்ட பூ தையற் கலையின் அம்சங்களைப்பற்றி எஸ்கிமோ தேசத்தவர்கள், ஆப்பிரிக்கர்கள், இந்தியர்கள், எகிப்து தேசத்தவர்கள், சீனர்கள், ரோமர்கள் முதலியவர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை பெருமையுடன் சொல்லி புகழ்ந்திருக்கிறுர்கள். இனத்திற்கு இனம், நகரத்திற்கு நகரம். ஒவ்வொரு காலத்தின் வித்தியாசத்திற்கு ஒத்தபடியும் அவரவர்களுடைய நடை, உடை, பாவனைகளுக்கு ஒத்தபடியும் பூ தையற் கலையின் நாகரீகம் மாறுபட்டுக்கொண்டே இருந்தது. அவரவர்களின் விருப்பத்திற்கு ஏற்றபடியும் உபயோகித்து வந்தார்கள்.

ஒருநாட்டவர் பிற நாட்டில் வாணிபம் செய்த காலத்திலும் பட்டாளங்கள் கைபற்றிய நகரங்களில் அவர்கள் பவனி வர நேர்ந்த காலத்திலும் பல தேசத்தவர்கள் ஒன்றுகூடி பழக நேர்ந்ததாலும் பலவிதமான பூ தையலின் மாதிரிகள் மாறிவரலாயின. அன்று முதல் இக்கலை மின் வேகத்தில் வளர ஆரம்பித்தது. நாடாளும் மன்னர்களும் மேல்நாட்டு மத தலைவர்களும் இவ் வேலைப்பாடுகள் அமைந்த உடைகளை அணிந்து ஆடம்பரமாக வாழ்வதில் கவனம் செலுத்தினுர்கள். முன்காலத்தில் தையலுக்குத் தையல் கையாலேயே தைக்கப்பட்டு வந்ததால் தையற் கலை குறிப்பாக பூ தையற் கலைவிலை உயர்ந்த கலையாக கருதப்பட்டு வந்தது. மேலும் ஒருகாலத்தில் அக் கலையின் உயர்வை ஓவியங்களின் மூலமாகவும் எடுத்துக்காட்டியிருக்கிறுர்கள் என்பதை இன்று கண்கூடாக காண்கிறோம்.

'தையற் பொறி தந்த தைமோனியர்'

விஞ்ஞானமும் இயந்திர புரட்சியும் தோன்றிய காலத்தில் நடுத்தர வகுப்பினர் வேகமாக முன்னேறியதால் பூ தையல் வேலைப்பாடுகள் அமைந்த உடைகளையும் சாதா உடைகளையும் அதிகமாக அவர்கள் உபயோகிக்கலாயினர். இந்த காலத்தில் தான் முதல்முதலாக பிரஞ்சு நாட்டை சேர்ந்த "தைமோனியர்" என்பவர் தையல், பூ தையல் முதலிய வேலைகள் செய்யும் தையல் இயந்திரம் ஒன்றை 1795-ம் ஆண்டில் கண்டுபிடித்தார். இவருடைய சிருஷ்டிக்கு திருஷ்டியாக வேதான் அதே ஆண்டில் இந்த இயந்திரம் உபயோகத்திற்கு வந்தால் கை வேலைக்காரர்கள் அதாவது கையால் உடைகளை தைக்கும் தொழிலாளர்கள் தங்கள் பிழைப்பிற்கு ஆபத்து நேர்ந்துவிடுமோ என பயந்து கூட்டம் கூட்டமாக சேர்ந்து கூடிப் பேசி தையற் பொறி கண்டுபிடித்த 'தைமோனியரை' கொலை செய்துவிட முடிவு கட்டினுர்கள். ஆனுல் அவர்கள் எண்ணத்தில் மண் விழுந்தது. தொழிலாளர்களின் அறியாமையினுல் பரவிய இவ்வதந்தியை கேட்ட "தைமோனியர்" இரவோடு இரவாக செத்தோம் பிழைத்தோம் என்று இங்கிலாந்து தேசத்திற்கு ஓடிவிட்டார். அவர் தப்பிவிட்டார் என்று அறிந்ததும் சினம் கொண்ட தொழிலாளர்கள் மதியிழந்து அப்பொறியை சுக்கு சுக்கலாக உடைத்தெறிந்தனர். இனி கவலையில்லையென அத்தொழிலாளர்கள் ஆறுதல் அடைந்தனர்.

(தொடரும்)



திருவல்லிக்கேணி தர்ம சேவா சங்க விஷ்ணு சஹஸ்ரநாம வகுப்பு மாணவ மாணவிகள் வருஷ விழா பாண்டுரங்க மந்திரத்தில் கொண்டாடப்பட்டது

கலா மண்டபம்

'மனோகரா' விமர்சனம்

☆

[சாண்டில்யன்]

மனோகர் பிக்சர்ஸ் "மனோகரா"வில் கருணாநிதியின் வேகமான வசனத்தையும் சிவாஜி கணேசனின் வீர வெறி ததும்பும் நடிப்பையும் பார்க்கிறோம். விறுவிறுப்பான கதைப் போக்கும் தீப்பொறி கக்கும் சம்பவங்களும் இப்படத்தில் நிரம்ப இருக்கின்றன. கதையின் கடைசிப் பகுதியில் மட்டும் கழக வாசனை வீசாதிருந்தால் இந்தப் படத்தை முதல்தரமான படங்களின் வரிசையில் வைக்கலாம்.

கதை, வசனம்

ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார் எழுதிய "மனோகரா" நாடகத்தை அஸ்திவாரமாகக் கொண்டு திரைக் கதைப் புனையப்பட்டிருக்கிறது. சம்பந்த முதலியார் அவர்களின் "மனோகரா" நாடகத்தை அறியாதவர்கள் தமிழ்நாட்டில் இருக்கமாட்டார்கள். அதை ஆடாத நாடகக் கம்பெனிகளே தமிழ்நாட்டில் இல்லையென்று சொல்லலாம். சிறந்த கதைத் தொகுப்பும் நாடக அமைப்பும் உள்ள "மனோகரா" பாமர மக்கள் மனத்தை மட்டுமின்றி பெரிய அறிவாளிகளின் கருத்தையும் கவர்ந்தது. காலஞ்சென்ற எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் இந்தியாவின் பிரபல தலைவர்களில் ஒருவராக ஆனபின்பு கூட "மனோகர"ராக வேஷம் போட்டு நாடகமாடியருக்கிறுர்கள். இப்படி எல்லோர் அபிமானத்தையும் பெற்ற ஒரு நாடகத்தை திரைப்படமாகக் கொண்டு வந்திருப்பதுபற்றி மனோகர் பிக்சர்ஸாரை பாராட்டவேண்டும்.

திரைக் கதைக்கும் அசல் கதைக்கும் வித்தியாசங்கள் பல இருக்கின்றன. அசல் நாடகத்தில் கதை ஆரம்பிக்கும்போதே கதாநாயகனை மனோகரனுக்குக் கலியாணம் ஆகியிருக்கிறது. படத்தை நன்றாக நீட்டுவதற்காக திரைக் கதையின் ஆரம்பத்தில் மனோகரன் பிரும்மச்சாரி ஆசிரமத்தில் அமர்ந்து பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து பாண்டியனைக் கொன்று அவன் மகள் விஜயாவை மணக்கிறுன் இறுதிப் பகுதியில் வசனத்தின் தேவையை முன்னிட்டு சாமியார் ரூபத்தில் அயோக்கியர்கள் புருஷோத்தமன் அரண்மனைக்குள் புகுந்து மனோகரனைக் கட்டி வைத்து சாட்டையாலடித்து சிவாஜி கணேசனின் வீராவேசத்துக்கும் கண்ணாம்பாவின் சுடுவிழிகளுக்கும் கருணாநிதியின் கழக வசனத்துக்கும் இலக்காகிறுர்கள்.

சம்பந்த முதலியார் அவர்கள் அமைத்த நாடகத்தின் உட்கருத்து ஒரு ஹிந்துப் பெண்ணின் கற்பின் சிறப்பைப்பற்றியது. புருஷன் என்ன அயோக்கியத்தனம் செய்தாலும் கற்பரசி அவன் நலத்தையே நாடி சகலத்தையும் தியாகம் செய்வாள் என்பதை வலியுறுத்துவதற்காகப் பாத்திரங்களை சிருஷ்டித்தார். அதன் விளைவாக உருவான பாத்திரங்கள் நாடகத்தில் வேகம் பெற்றன. மனோகரன் சங்கிலியறுக்கும் காட்சியும் பத்மாவதி மகனையே கொலைக்களமனுப்பும் கட்டமும் ஆசிரியரின் அடிப்படை கருத்தில் எழுந்த கற்பனைகள்.

'மனோகரா'வில் அரசன் ஆசை நாயகியாக இருக்கும் டி. ஆர். ராஜகுமாரி திண்டுடன் காக்ஷியளிக்கிறுர்.

சம்பந்த முதலியார் நாடகம் எழுதிய போது எந்த அரசியல் நோக்கத்தையும் மனத்தில் வைத்துக்கொண்டு எழுதவில்லையென்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். ஆகவே அந்தமாதிரி ஒரு நாடகத்தை திரைக்குக் கொண்டு வரும்போது அசல் ஆசிரியரின் கருத்தை யொட்டியே திரைக்கதையை அமைக்க வேண்டும். அசல் பாத்திரங்களின் வர்ணத்தை எந்தவிதத்திலும் மாற்ருமல் திரைக் கதையைப் புனைய வேண்டும். அப்பொழுதுதான் அசல் கதையை எழுதிய ஆசிரியருக்கு நாம் நியாயம் செய்தவர்களாவோம். அப்படியில்லாமல் திரைக்கதாசிரியர் தமது சொந்தக் கருத்திலுள்ள விஷத்தை கதையில் புகுத்திஞல் அசல் கதை சுவடு மாறி சுவை குறையும். திரைக் கதையின் இறுதிப் பகுதியில் சாமியார்கள் வேஷத்தில் உக்ரசேனனும் அவன் ஆட்களும் நுழைவதும் அதைக் காரணமாக வைத்துக்கொண்டு 'குள்ள நரிக் கூட்டத்தை ஒழித்துவிடுகிறேன்' என்று சிவாஜி கணேசன் கூப்பாடு போடுவதும் சம்பந்த முதலியார் நாடகத்துக்கு நியாயம் செய்ததாக ஆகாது. தவிர அசல் நாடகத்தின் கருத்துக்கு விரோதமாகக் கற்பனை செய்வதால் பட வசூலும் பல சமயங்களில் வெறும் கற்பனையாகி விடுவதைத் தமிழ்நாட்டில் பார்த்துக்கொண்டிருக்கிருேம். ஆகவே இந்த விவகாரங்களில் திரைக் கதாசிரியர் இறங்குவது அசல் கதாசிரியர் கதையில் மட்டுமல்ல, படம் பிடிப்பவரின் மடியிலும் கை வைப்பதாகும்.

தவிர கழகப் பாணியில் மறைமுகமாகக் கதையையோ வசனத்தையோ எழுதிஞலும் அது (சென்ஸார்களுக்குத் தவிர) ஜனங்களுக்கோ விமர்சகர்களுக்கோ தெரியாதிருப்பதில்லை. ஏனென்ருல் 'தமிழனுக்குப் பண்டாரம் அரசன் அவனுக்கு தம்பட்டம் தட்ட ஒரு தம்பிரான்' என்ற பேச்சும் 'குள்ள நரிக் கூட்டத்தை ஒழிக்க' தமிழ்த் தாயிடம் கழகத் தம்பிரான்கள் அனுமதி கேட்பதும் மக்கள் கேட்டுக் கேட்டு அலுத்துப்போன பிரசாரம். இந்த உளுத்துப்போன பிரசாரத்தை நல்லதொரு நாடகத்தில் இணைத்திருக்கவேண்டாம்..

இந்தக் குறை இருந்தாலும் கருணாநிதியின் எழுத்துத் திறமையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. மனோகரன் சங்கிலியறுத்து வேந்தனை வாள் கொண்டு வெட்டப்போகும் காட்சியில் வேகம் துள்ளும் வீரம் செறியும் வசனத்தைக் கேட்கிருேம். சுத்தமான தமிழ், சுவை நிரம்பிய சொற்ருடர், கருத்தை அள்ளும் அபிப்பிராயங்கள் இவை அந்தக் காட்சியில் நிரம்பியிருப்பதால் புருஷோத்தமன் அரசவைக்கே ஆசிரியர் நம்மை அழைத்துச் செல்கிருர். இங்கு அசல் நாடகமும் திரைக் கதையும் ஒன்றுதான். வசனந்தான் மாறுதல். விரும்பத்தக்க மாறுதல். இந்த ஒரு காட்சிக்காக இப்படத்தைப் பார்க்கலாம்.

நடிப்பு

இருவர் பிரமாதமாக நடித்திருக்கிருர்கள். சிவாஜி கணேசன், கண்ணும்பா இருவரையுமே குறிப்பிடுகிறேன். கதாசிரியர் வசனத்துக்கு சிறந்த நடிகர்கள் எவ்வளவு உயிர் கொடுக்கமுடியும் என்பதை இவ்விருவரும் நிரூபிக்கிருர்கள். வேத்தவையில் வேங்கையென சீறியெழும் சமயத்தில் வசனங்களை தீப்பொறியென சிவாஜி கணேசன் கக்குகிருர். வீராவேசத்துடன் நடிக்கிருர். அந்த புயலில் புகுந்த கண்ணும்பா பொறுமையின் சிகரமாகத் திகழ்ந்து மகனைக் கொலைக்களமனுப்பி நம்மிடமிருந்து கண்ணீரை வசூல் செய்கிருர். இந்தக் காட்சியில் கண்ணும்பாவை கணேசன் மிஞ்சுகிருர். கணேசனை கண்ணும்பா மிஞ்சுகிருர். இருவர் நடிப்பும் விமர்சனத்தராசில் சமமாகவே நிற்கிறது. அரசன் ஆசை நாயகியாக வரும் டி. ஆர். ராஜகுமாரி, மனோகரன் மனைவியாகத் தோன்றும் கிரிஜா இவர்கள் நடிப்பும் நன்ருகவேயிருக்கிறது.

டைரக்ஷன், ஸெட்டுகள்

பிரசாத் டைரக்ஷன் இப்படத்தில் சுமார். நாடகம்போலவே படத்தை ஓட்டியிருக்கிருர். திரைப்படத்துக்கு வேண்டிய அம்சங்கள் அதிகமாயில்லை. ஸெட்டுகளும் உடைகளும் இந்தப்படத்தில் பிரமாதம். பட முதலாளிகள் செலவைப் பொருட்படுத்தவேயில்லை பிரும்மாண்டமான அரண்மனைகளையும் போர்க்களத்தையும் பார்க்கிருேம். ஒளிப்பதிவும் ஒலிப்பதிவும் மிக நன்ருக அமைந்திருக்கின்றன.

'மனோகரா'வின் பல பகுதிகள் மிக நன்ருயிருக்கின்றன. பார்க்கவேண்டிய படம் என்று சிபார்சு செய்கிறேன். திறமையான எழுத்துக்காகவும் தேர்ந்த நடிப்புக்காகவும் இதைப் பார்க்கலாம்.

பம்பாய்க் கடிதம்

★

சினிமாப் படங்களில் சிறுவர்கள் சாதாரணமாக நடித்திருந்தாலும் அவர்களுடைய நடிப்புத் திறமையைப் பற்றிப் புகழ்ந்து பேசுகிருேம். அவர்களுடைய புன்சிரிப்பாலும் சேஷ்டைகளாலும் நம்மை அவர்கள் மயக்கிவிடுகிருர்கள். அப்படியிருக்கும்போது அவர்கள் வெகு நன்ருக நடித்துவிட்டால் கேட்கவே வேண்டாம். அவர்களைப்பற்றி ஒரே பேச்சு ஏற்பட்டுவிடுகிறது.

உதாரணமாக, 'பூட் பாலிஷ்' என்ற படத்தில் நடித்த ஸ்ரீ ரத்தன் குமார் பேபி நாஸ் என்ற இருவருடைய புகழும் கீர்த்தியும் திடீரென்று இப்பொழுது அதிகமாயிருக்கிறது. இவ்விருவரும் அவ்வளவு அபாரமாக இப்படத்தில் நடித்திருக்கின்றனர். அவர்களைப்பற்றி இப்பொழுது இவ்விடத்தில் பேசாதவர்கள் கிடையாது. 'என்ன, இவர்கள் கைதேர்ந்த நடிக நடிகைகளுக்குமேல் நடிக்கிருர்களே' என்று எல்லோரும் ஒரேமுகமாக அவர்களைப் புகழ்ந்துகொண்டிருக்கிருர்கள்.

ஸ்ரீ ரத்தன் குமார் ஒரு உயர்ந்த முஸ்லீம் குடும்பத்தில் பிறந்த சிறுவன். அவருக்கு இப்பொழுது 12 வயதுதான். ஆகிறது. ஆஞல் அவர் இதுவரையில் 31 படங்களில் நடித்திருக்கிருர். அவர் 'தோ பிகா ஜமீன்' என்னும் படத்தில் மிகவும் மெச்சத்தகுந்தபடி நடித்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும்.

ஸ்ரீ ரத்தன் குமாரின் சொந்த பெயர் 'நாஜிர் ஆலி' அவர் நன்ருக கிரிக்கெட் ஆடுவார். 'எனக்கு சினிமா நக்ஷத்திரமாகத் திகழ்வதைக் காட்டிலும் ஒரு பெரிய கிரிக்கெட் நக்ஷத்திரமாக திகழ வேண்டுமென்று ஆசை இருக்கிறது' என்று அவர் சொன்ஞர்.

பேபி நாஸ் என்ற பெண்ணுக்கும் 12 வயதுதான் ஆகிறது. அவளும் ஒரு உயர்ந்த முஸ்லீம் குடும்பத்தில் பிறந்தவள். அவள் மூன்று வயதிலிருந்தே நடனமாடி ஜனங்களின் மனதைக் கவர்ந்தாள். சினிமாவில் நடிக்கவேண்டுமென்று அவளுக்கு ஒரே அவா. அவளை சினிமாவில் சேர்க்கக் கூடாதென்று தீர்மானித்திருந்த அவளுடைய தந்தை அவளை நன்ருக அடித்தார். ஆஞல் அவருடைய நண்பர் ஸ்ரீ லேக்ராஜ் பாக்கரியின் தொந்தரவின்பேரில் தன் பெண்ணை முதல்முதலாக 'ரேஷம்' என்ற படத்தில் நடிக்க உத்தரவு கொடுத்தார். எனக்கும் என் தந்தைக்கும் ஜாதகம், ஜோஸ்யம் முதலியவைகளில் நம்பிக்கை அதிகம். என் ஜாதகத்தின்படி நான் ஆயுள்வரையில் ஒரு சினிமா நடிகையாகயிருப்பேன். 29-ம் வயதில் கலியாணம் ஆன பிறகும் நான் நடித்துக்கொண்டுதானிருப்பேன்' என்று அவள் என்னிடம் அன்ருெரு நாள் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தாள்.

—தி. மா. ராமச்சந்திரன்.



கொரியாவில் சமாதான சேவை புரிந்துவிட்டுத் திரும்பிய இந்தியத் துருப்புகளின் மூன்ருவது கோஷ்டிக்கு துறைமுகத்தில் வரவேற்பளிக்கப்பட்டது



ஆப்கானிய கலாசாரத் தூதுகோஷ்டிக்கு பிரதம மந்திரி ஸ்ரீ நேரு ஒரு விருந்து நடத்திஞர்

Regd. No. 2514

ஸ்ரீ K. S. ராமமூர்த்தி சர்மா
கணித்தது.

★

தனிப் பிரதி விலை அணா 4.
தபால் மூலமாக ... அணா 5.

மொத்த வியாபாரிகளுக்கு பஞ்சாங்க காப்பிகள் கீழ்க்கண்ட விற்பனை விகிதங்களில் சப்ளை செய்யப் படும். 100 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அனுப்பும் ஆர்டர்களும் நூற்றுக்கணக்கில்தான் இருக்கவேண்டும்.

1954 மார்ச் மாதம் இரண்டாம் வாரத்தில் பிரதிகள் வெளிவரும்.

சப்ளை விகித விலை விவரம்:

100 காப்பிகளுக்கு	...	ரூ. 24.
200 ,,	100-க்கு	ரூ. 23.
300 ,,	,,	ரூ. 22.
500 ,,	,,	ரூ. 21.
1000 அல்லது மேற்பட்ட காப்பிகளுக்கு	,,	ரூ. 20.

ஆர்டர்களை முன் பணத்துடன் சுதேசமித்திரன் ஏஜண்டுக்கோ அல்லது நேரில் ஆபீஸுக்கோ அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம். வி. பி. பி. கிடையாது.

Printed and Published by N. RAJAGOPALAN at the "Swadesamitran" Press, "Victory House", Mount Road, Madras, Editor: C. R. SRINIVASAN, B. A.

சுதேசமித்திரன்



கான்ஸ்டபிள்:—"நேற்றிரவு 7 மணிக்கு நீங்கள் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தீங்களாமே!"

எழுத்தாளர்:—"நேற்றிரவு 7 மணிக்கு நானே எழுதிய ஒரு கதையைப் படித்துக்கொண்டிருந்தேன், தெரியுமா?"

SWADESAMITRAN WEEKLY 21, மார்ச் '54 4 AS.

சுதேசமித்திரன்

சந்தா விகிதங்கள்

★

தினப்பதிப்பு

	(இந்தியா, இலங்கை, தபால் மூலம்)		சென்னை		வெளிநாடு	
	ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.
1 வருடம் ...	26	0	24	0	32	0
6 மாதம் ...	13	8	12	8	16	0
3 மாதம் ...	7	0	6	8	8	0
1 மாதம் ...	2	8	2	4	—	

தனிப்பிரதி

ஞாயிறு மலர் .... விலை 2 அணு

இதர நாட்களில் ... விலை 1 அணு

வாரப்பதிப்பு

	ரூ.	அ.	ரூ.	அ.
1 வருடம் ...	13	0	16	0
6 மாதம் ...	7	0	8	0
3 மாதம் ...	3	12	—	

தனிப் பிரதி அணு 4.

சர்க்குலேஷன் மானேஜர்,

சுதேசமித்திரன்.

பொருளடக்கம்

Vol XXV] விஜயளுை பங்குனிமீ 8உ (21—3—54) [No. 7

பர்மாவில் அநீதி		3
காற்றுவாக்கிலே......	சிரேயஸ்	4
குதர்க்கம்	தரளம்	5
புயலும் அமைதியும்	அச்வினி	6
இடையிலே வந்தவன்	ஸ்ரீ [illegible]ம்மன்	10
தத்ரூபம்– நிமிஷக்கதை	[illegible]	14
மனம்	எஸ். பி. [illegible]	15
பகவானின் பொறுப்பு	எஸ். டி. வீரராகவன்	18
நழுவிய நக்ஷத்திரம்	டி. கே.	21
பிள்ளைக் கனியமுது—தொடர் கதை	சுகி	23
கார் சவாரி	ஆர். எஸ். ஞானம்பாள்	29
அடிமை	எம். பி. சுப்பிரமண்யம்	32
ராக்ஷஸராணி	[illegible] ஆஸ்திகன்	35
அனுமந்தன் குன்று	[illegible]சிந்தனு	38
சாரணர் உலகம்	சித்தார்த்தன்	40
சதுரங்க ஆட்டம்	எஸ். கே. சுப்பிரமணியம்	41
ஹிந்தி உலகம்	பண்டிதஜி	43
குடும்பவைத்தியம்	குச்சாமாமா	45
தையற் கலை	எ. சுகுமார்	46
கலாமண்டபம்		47

'மித்திரன்' வாரப் பதிப்பில் கதைகளில் வெளியாகும் பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

OFFICE OF THE REGISTRAR ... 2 APR 1954



மேல்பாக்கத்தில் பிச்சைக்காரர் விடுதியை ராஜாஜி ஆரம்பித்து வைத்தார்

கிழக்கு பாகிஸ்தான் தேர்தல்களில், ஹுப் பஸ்லுல் ஹக்கின் ஐக்கிய முன்னணிக்கு எதிராக நின்ற முஸ்லிம் லீக் படுதோல்வியடைந்திருக்கிறது.

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
வாழ்க நற்றமிழ்

Vol XXV] விஜயஹு பங்குனிமீ 8உ ✶ 1954ஹு மார்ச்மீ 21உ [No 7

பர்மாவில் அநீதி

பர்மாவில் நிலங்களை சர்க்கார் வசப்படுத்து வதற்கான மசோதா அங்குள்ள பார்லிமெண் டின் கீழ் சபையில் நிறைவேறிவிட்டது. இந்த மசோதா முக்கியமாக இந்தியரை, குறிப்பாக நகரத்தாரை விசேஷமாகப் பாதிக்கக்கூடியதென் பது ஏற்கெனவே பன்முறை சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. எனினும் பர்மிய சர்க்கார் நமது கோரிக் கைக்கு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. நிலச் சீர்திருத்தங்கள்பற்றி அந்நாட்டு சர்க்கார் தங்க ளுக்கு உசிதமாகத் தோன்றும் முறைகளைக் கையாள்வதில் நமக்கு ஆட்சேபணையில்லை. பர்மாவும் நம்மைப்போன்ற சுதந்திர நாடு தான் என்பதை நாம் பரிபூரணமாக உணருகின் ரேம். தேச நலனுக்கான சகல திட்டங்களையும் அந்நாட்டு சர்க்கார் அமுல் நடத்துவதை யாரும் ஆட்சேபிக்கமுடியாது. ஆனல் அத்திட்டங்கள் எவ்வகுப்பாருக்கும் தீங்கு உண்டாக்கக்கூடாது; அநீதி இழைக்கக்கூடாது. இந்த தத்துவத்தைக் கொண்டு பார்த்தால் பர்மா சர்க்காரின் தற்போ தைய நில ஆர்ஜித மசோதா எவ்வளவு தூரம் ஆட்சேபத்துக்கிடமானது என்பது தானு கவே விளங்கும். நிலங்களை தற்போதைய சொந்தக்காரர்களிடமிருந்து ஆர்ஜிதம் செய்கை யில் அவர்களுக்கு ஒரு நேர்மையான அடிப் படையில் நஷ்டஈடு கொடுப்பது அவசியம். இக் கொள்கையை பர்மிய சர்க்காரும் ஒருவாறு ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனல் இம்மசோதா வின்படி பர்மாவில் நிலமுள்ள நகரத்தார்களுக் குக் கிடைக்கக்கூடிய நஷ்ட ஈட்டை ஒரு கேலிக் கூத்தென்றே சொல்லவேண்டும்.

இந்த அநீதியைச் சுட்டிக்காட்டி இந்திய சர்க்கார் பன்முறை பர்மாவுக்கு முறையீடு அனுப்பியிருக்கின்றனர். கடைசியாக சென்ற வருஷம் டிசம்பர் மாதம் இங்கிருந்து ஒரு பிரதி நிதி கோஷ்டி சென்று பர்மிய சர்க்காருடன் விரி வாகக் கலந்து பேசியது அனைவருக்கும் நினை விருக்கும். அக்கோஷ்டியின் கருத்துக்கு உரிய மதிப்பு கொடுப்பதாக பர்மிய அதிகாரிகள் அப் போது உறுதி கூறவும் செய்தனர். எனினும் அதற்கு ஒத்தவாறு நில ஆர்ஜித மசோதாவின் அடிப்படையில் திருத்தம் காணேம். கொள்கை திருந்தாததுடன் விதண்டாவாதமும் கிளம்பி யிருப்பது வேதனையைக் கொடுக்கிறது. அம் மசோதாவில் குறித்த நஷ்டஈட்டு விகிதங் கள் இந்தியாவில் ஜமீன் ஒழிப்புச் சட்டப்படி ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடாகக் கொடுக்கப் படும் விகிதங்களைப் போன்றவைதான் என்று பர்மிய சர்க்கார் கூறுகின்றனர். ஆனல் ஜமீன் தார்களுக்கும், பர்மாவில் நிலம் வாங்கிய இந் தியருக்கும் அடிப்படையில் வித்தியாசமுண்டு. ஜமீன்தார்கள் தரகர்களைப்போல் இருந் தவர்கள். தங்கள் ஜமீன்கள் மீது தனிப் பட்ட நிலச் சொந்தக்காரர்களைப் போல் முழு பாத்தியதை உள்ளவர்களல்ல. ஆனல் பர்மாவில் நிலம் வாங்கிய இந்தியர்களின் நிலை வேறு. அவர்கள் ரயத்துவாரிப் பட்டதார்களைப் போல் அந்நிலத்தின் மீது முழு பாத்தியதையுள் ளவர்கள். ரொக்கம் கொடுத்து அல்லது ஏற் கெனவே கொடுத்த கடனுக்குப் பதிலாக அந்த நிலத்தைப் பெற்றவர்கள். இவர்களுக்கு அந்நில த்தில், இந்திய ஜமீன்தார்களுக்கு தங்கள் ஜமீன்கள் மீதிருந்த பாத்தியதைதான் உண் டெனப் பேசுவது எடுபடக்கூடிய வாதமல்ல.

இம்மசோதாவின்படி சுமார் இருபது லக்ஷம் ஏகர் நிலம் பர்மிய சர்க்காரின் வசமாகவிருக் கிறது. இந்நிலத்தின் மதிப்பு சுமார் எழுபது கோடி ரூபாய். ஆனல் அதில் பத்தில் ஒரு பங்கு கூட அந்நிலச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு கிடைக்க வழியில்லை. இம்மசோதாவின்படி நஷ்ட ஈட்டுக்கு அடிப்படை நில வரி; நில வருமானம் அல்ல; வருமானத்தில் ஒரு பகுதிதான் நில வரி என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள வேண் டும். முதல் நூறு ஏகராவுக்கு நஷ்டஈடு நில வரி யைப்போல் பன்னிரண்டு மடங்கு; அதற்குமேல் நில அளவு அதிகரிப்புக்குத் தக்கபடி அவ்விகி தம் வரவரக் குறையும்; 1100 ஏகருக்கு மேற்பட் டவர்களுக்கு ஒரு வருஷ நிலவரிக்குச் சமமான தொகைதான் நஷ்டஈடாகக் கிடைக்கும். நிலத் தின் பெறுமானத்துக்கும், இந்த நஷ்டஈட்டுக்கும் எள்ளளவும் பொருத்தமில்லை. இந்திய சர்க்கார் இவ்வநீதியை மீண்டும் பர்மிய சர்க்காருக்கு அறிவுறுத்தி பரிகாரம் தேட முற்படவேண்டும்.

காற்றுவாக்கிலே..

அயோக்கியர்களின் புகலிடமே அரசியல் என்றாராம் ஆங்கில அறிஞர் ஜான்ஸன்.—நம் நாட்டில் இதை அடிக்கடி சுட்டிக்காட்டிப் பேசுகிறவர் ஈ. வே. ரா. பெரியார்தான். ஆனால், அவரும் ஒரு அரசியல் வாதியேயாகையால் இது பொருத்தமற்ற வர்ணனையே என்பது ஸ்பஷ்டம்.—அவர் ஒருவர் இருப்பதே போதாதா, வெறும் அயோக்கியர்களை மட்டும் கொண்டதல்ல அரசியல் அரங்கம் என்பதை நிரூபிக்க?

இதற்கு நேர்மாறாகச் சொல்லியிருக்கிறார் கிரேக்க ஞானியான பிளாட்டோ.— அனைத்திலும் உத்கிருஷ்டமானது அரசியல் தொண்டு தான் என்பது அவரது ஸித்தாந்தம் — ஆனால், இதுவும் 'மட்டரக அரசியல்', 'மத்ய தர அரசியல்' என்றெல்லாம் பல விதப் பாகுபாடுகள் புகுந்திருக்கும் இந்நாளில் பொருந்தாது என்பது தெளிவு; நல்லதோடு கெட்டதும் கலந்ததுதான் அரசியல் என்பதை ஒப்புக்கொண்டேயாகவேண்டும்.

இவை ஒரு பக்கம் இருக்கட்டும்—சென்ற வாரம் நம் சென்னை மாநகருக்கு விஜயம் செய்த ஆசாரிய கிருபலானி இது சம்பந்தமாக ஒரு மணிவாக்கை உதிர்த்துவிட்டுப் போயிருக்கிறார்.—தேச நலனுக்கு உழைப்பதே, அவரவர் கடமையைச் செய்வதுதான் 'பவித்திரமான அரசியல்' என்பதே அது.

இதைக் கேட்டதும் பலபேருக்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கும். குறிப்பாக திருவாங்கூர்-கொச்சியில் சர்க்கார் அமைப்பது சம்பந்தமாக அவர் தலைமை தாங்கும் பிரஜா-சோஷலிஸ்ட் கக்ஷியின் போக்கு குறித்தே இது எழுந்திருக்கும். ஜனநாயகம் என்றால், பெரும்பாலோர் ஆதரிக்கும் கக்ஷிதானே ஆக்ஷிப் பொறுப்பை ஏற்கவேண்டும்? அந்தப்படிப் பார்த்தால், அந்த ராஜ்யத்தில் பாக்கி எல்லாக் கக்ஷிகளையும் விட அதிக ஸ்தானங்களைப் பெற்ற காங்கிரஸ்காரர்களால் அரசாங்கம் அமைக்கப்படுவதைத்தானே "தேசீய ஜனநாயக ஸ்தாபனம்" என்று சொல்லிக்கொள்ளும் பி-ஸோ. கக்ஷி ஆதரித்திருக்கவேண்டும்? அதைவிட்டு 'மந்திரிசபை அமைத்தால் நான்தான் அமைப்பேன், மற்றவர்களோடு கூட்டுசேரமாட்டேன்' என்கிற தீர்மானம் ஜனநாயக முறையாகுமா? இது எந்தவித அரசியல், கடமையைச் செய்யும் தாயகமா? அல்லது . . .

இதற்கெல்லாம் பதில்சொல்லிக் கொண்டிருக்க கிருபலானிக்கு நேரமில்லை என்பது பகிரங்க ரகஸியம். எவ்வளவோ ஜோலி அவருக்கு, எத்தனையோ பேருக்கு ஜவாப்கூற வேண்டியிருக்கிறது. ஆகவே ஒரொரு சமயம் அவருடைய சொல்லும் செயலும் வித்யாசப்பட்டால் வியப்பில்லை. இருந்தபோதிலும், அப்படியெல்லாம் முன்னுக்குப் பின் முரண்பாடு ஏதுமில்லை இந்த விஷயத்தில் என்பதே என் கக்ஷி.

தங்கள் கடமையை பிரஜா-சோஷலிஸ்டுகள் தட்டிக் கழிப்பதாகும் இத்தீர்மானம் என்று எப்படிச் சொல்லமுடியும்? தேர்தலில் நின்ற ஒவ்வொரு கக்ஷியும் ஆட்சிபீடமேறுவதை நோக்கமாகக் கொண்டுதான் போட்டியிட்டது; பி. ஸோ.க்களுக்கும் அதுவே லக்ஷியம். ஆகவே "நாங்கள் சர்க்கார் அமைக்கத் தயார்" என்று அவர்கள் சொன்னதில் என்ன தப்பு? அதுதானே அவர்கள் கடமையும்கூட? மிஞ்சி மிஞ்சிப் போனால், மெஜாரிடி இல்லாமலேயே பதவி வகிக்க சாணக்ய தந்திரம் இது என்று சொல்லலாமேயொழிய வேறு குறைக்கு இடமேயில்லை.

இன்னொன்றும் கேட்கிறேன், ஜனநாயகம் என்றால் மெஜாரிடி கக்ஷிதான் ஆட்சி நடத்தவேண்டும் என்று எந்த சாஸ்திரத்தில், சட்டத்தில் சொல்லியிருக்கிறது? இதெல்லாம் நாமாக சிருஷ்டிக்கிற சம்பிரதாயம்தானே?—அப்படியானால் பி. ஸோ. தான் மந்திரி சபை அமைக்கவேண்டுமென்று என்ன நியதி? அதை விடக் குறைவாக ஸ்தானம் பெற்றுள்ள தி. கொ. தமிழ்நாடு காங்கிரஸ் ஏன் அதை செய்யக்கூடாது என்று கேட்கிறீர்களோ?—தாராளமாக அமைக்கலாம். தன்னந் தனியாக இருக்கும் சுயேச்சையாளரும் கூட நிறுவலாம், கிருபலானிக்கு ஆட்சேபமேயில்லை; பகிரங்கமாகச் சொல்லியுமிருக்கிறார் இதை.

என்னைக் கேட்டால், இந்த ஒண்டிக்கட்டைக்கு முடிசூட்டி, ஏக சக்ராதிபதியாக்குவதுதான் எல்லாவற்றிலும் தரம் என்பேன். 'குரங்கு மத்யஸ்தம்' போலத் தோன்றினாலும் போட்டி, பொறாமை, பூசலைத் தவிர்க்க இதுவே சிறந்த வழி.—ஆனால் இந்த ஏழை சொல் அம்பலம் ஏறுமா? வேறு ஏற்பாடு செய்துவிட்டார்கள் அங்கே. இந்த இரண்டே வரித் தீர்மானத்தை வைத்துக்கொண்டே 'மழை விட்டும் தூவானம் விடாத' நிலைமையை கெட்டிக்காரத்தனமாக மாற்றிவிட்டார்கள் பி. ஸோ. கக்ஷியினர். கம்யூனிஸ்டுகளுடன் சேர்வதாக போக்குக் காட்டி, காங்கிரஸை சாமர்த்தியமாக ஆதரிக்கவைத்து பட்டம் சூட்டிக் கொண்டுவிட்டார் பட்டம் தாணுப் பிள்ளை.

இது சரியோ, தவறோ, எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். நம்மைப் பொறுத்த வரையில் இதிலிருந்து 'அரசியல்' என்றால் என்ன என்பது வியக்தமாகத் தெரிகிறது: நல்லதும் கெட்டதும் மட்டுமல்ல, கடமையும் உரிமையும் மாத்திரமல்ல, 'கெட்டிக்காரத்தனமும்' கலந்ததுதான் அது என்பதையே சொல்கிறேன். பார்க்கப்போனால், இந்த கடைசிச் சரக்குத்தான் அனைத்திலும் முக்கியமென்பேன். என்ன பெயரிட்டு அழைத்தாலும் சரி, 'அது' இல்லாவிட்டால் அரசியல் பூர்ணமாகுமா, ரஸிக்கத்தான் ரஸிக்குமா?

—சிரேயன்.



குதர்க்கம்

மந்திரிகள் மாறுவேஷம் பூண்டு நாடறிய முற்படவேண்டும் என்று அஸெம்பிளியில் மெம்பர் ஒருவர் வேண்டிக்கொண்டார்.

—சென்னைச் செய்தி.

மந்திரிமார்கள் எதற்கெடுத்தாலும் 'இல்லை, இல்லை'யென்று போடும் 'வேஷம்' போதாதென்று கருதியிருப்பாரோ, பிரஸ்தாப மெம்பர்?!

• • •

தன்னைப் பிச்சைக்கார விடுதிக்கு அழைத்துச் செல்வதை எதிர்த்து, ஒரு பிச்சைக்காரன் தன்னைப் பிடிக்க வந்த நான்கு போலீஸ்காரர்களைக் கத்தியால் குத்திவிட்டான்.

—பம்பாய் செய்தி.

'அருமையான 'சர்க்கார் விருந்து'க்கு ஆசைப்பட்டிருப்பவனைக் கேவலம் பிச்சைக்கார விடுதிக்கு அழைத்தால் வருவானா, என்ன?' என்று வியாக்கியானம் செய்கிறார் இங்கொரு கிண்டல்காரர்!

• • •

திருநெல்வேலியில் உள்ள பள்ளிக்கூடமொன்றில் மாணவர் பண சேமிப்பு பாங்க் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

—திருநெல்வேலி செய்தி.

இதைத் தொடர்ந்து மாணவர்களின் பெற்றோர்களுக்குக் கடன் கொடுக்கும் பாங்க் ஒன்றும் துவக்கப்படுமானால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

• • •

காடுகள் அழிந்துவிட விடப்போவதில்லை; அவற்றை எப்படியும் பாதுகாப்பதே சர்க்கார் கொள்கை என்று விவசாய மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் கூறினார்.

—சென்னைச் செய்தி.

'காடுகளைப் பாதுகாப்பது சர்க்கார் கொள்கையானால், சம்சாரச் சுழலிலின்றும் தங்களை விடுவித்துக்கொண்டு தங்களையும் 'பாதுகாத்து'க்கொள்ளப் பிரஸ்தாப வனாந்தரங்களைப் பயன்படுத்திக்கொள்வது' என்று பல புருஷ 'சிம்மங்கள்' தீர்மானம் செய்திருக்கின்றனவாம்!

• • •

ரயில் நேரங்கள்

✶

சென்ட்ரல் ஸ்டேஷன்

புறப்படும் நேரம்

கல்கத்தா மெயில்	இரவு 8—5
கிராண்டிராங் எக்ஸ்பிரஸ்	காலை 8—45
பூரி பாஸஞ்சர்	இரவு 7—10
பெஜவாடா பாஸஞ்சர்	காலை 6—35
பம்பாய் மெயில்	இரவு 9—0
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 7—35
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	காலை 9—10
ரேணிகுண்டா பாஸஞ்.	மாலை 5—30
" "	——
பெங்களூர் மெயில்	இரவு 8—45
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 12—15
பெங்களூர் பாஸஞ்சர்	காலை 6—10
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு 9—5
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 7—55
" "	மாலை 2—5
" "	மாலை 6—47
" "	இரவு 9—35
மங்களூர் எக்ஸ்பிரஸ்	இரவு 7—30
கொச்சின் எக்ஸ்பிரஸ்	மாலை 6—10
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு 8—10
ஜோலார்பேட்டை பாஸஞ்.	காலை 11—25
விசாகை பாஸஞ்சர்	இரவு 10—45
ஜனதா எக்ஸ்பிரஸ் 3—வது வகுப்பு—மட்டும் சென்னை—பம்பாய் (பிரதி வியாழன் மட்டும்)	பகல் 2—0
டெல்லி—சென்னை ஜனதா எக்ஸ்—பிரஸ் (3—வது வகுப்பு மட்டும்) பிரதி வியாழன்	மாலை 12—30

வரும் நேரம்

கல்கத்தா மெயில்	காலை 7—20
கிராண்டிராங் எக்ஸ்பிரஸ்	மாலை 5—50
பூரி பாஸஞ்சர்	காலை 9—0
பெஜவாடா பாஸஞ்சர்	இரவு 8—30
பம்பாய் மெயில்	காலை 5—50
பம்பாய் எக்ஸ்பிரஸ்	இரவு 7—20
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	மாலை 8—25
ரேணிகுண்டா பாஸஞ்சர்	காலை 9—43
" "	இரவு 9—0
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 8—50
" "	மாலை 4—25
" "	——
" "	மாலை 7—50
பெங்களூர் மெயில்	காலை 6—25
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 2—55
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு 8—10
பெங்களூர் பாஸஞ்சர்	காலை 6—50
மங்களூர் எக்ஸ்பிரஸ்	காலை 7—30
கொச்சின் எக்ஸ்பிரஸ்	காலை 8—25
நீலகிரி எக்ஸ்பிரஸ்	காலை 7—10
ஜோலார்பேட்டை பாஸஞ்.	பகல் 1—20
விசாகை பாஸஞ்சர்	காலை 5—0
ஜனதா எக்ஸ்பிரஸ் (3—வது வகுப்பு—மட்டும்) சென்னை—பம்பாய் (பிரதி திங்கள் மட்டும்)	பகல் 3—20
டெல்லி—சென்னை ஜனதா எக்ஸ்—பிரஸ் (3—வது வகுப்பு மட்—டும்) பிரதி செவ்வாய்	மாலை 5—20

ஹிட்லர் உயில் 4 பவுனுக்கு ஏலம்!

—பத்திரிகைத் தலைப்பு.

ஆகா! ஹிட்லர் உயிரோடிருந்தால் உயிரையே அல்லவா விட்டிருப்பார்!!

—தாளம்.

எழும்பூர்

புறப்படும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 7—40
இந்தோ—சிலோன் எக்ஸ்.	இரவு 8—0
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	இரவு 9—40
விருதுநகர் பாஸஞ்சர்	இரவு 10—15
விழுப்புரம் பாஸஞ்சர்	மாலை 3—50
கார்டு லைன்	
திருவனந்தபுரம் எக்ஸ்.	இரவு 8—20
தனுஷ்கோடி பாஸஞ்சர்	காலை 11—20
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	இரவு 7—15
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	இரவு 9—55
பீச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	மாலை 5—32
" "	மாலை 6—1

வரும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	இரவு 7—5
இந்தோ—சிலோன் எக்ஸ்.	காலை 7—25
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	காலை 5—20
விருதுநகர் பாஸஞ்சர்	காலை 5—0
விழுப்புரம் பாஸஞ்சர்	காலை 11—15
கார்டு லைன்	
தனுஷ்கோடி பாஸஞ்சர்	மாலை 3—5
திருவனந்தபுரம் எக்ஸ்.	காலை 6—0
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	காலை 7—0
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	காலை 5—40
பீச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	காலை 9—26
" "	காலை 9—52

புயலும் அமைதியும்

'அச்வினி'

'குப்குப்' என்று புகையை அள்ளிவீசும் பெருமூச்சு விட்டுக்கொண்டே தன் நீண்ட வண்டித் தொடர்களை இழுத்துச் சென்றது பெங்களூர் 'பாஸஞ்சர்.' பிரயாணிகள் தத்தம் இடத்தில் அமர்ந்தவாறே வெளியுலகிலுள்ள பயிர்ப் பச்சைகளை கண்காணித்துக்கொண்டும், அரட்டையடித்துக்கொண்டும் இருந்தனர். அவர்களை ஏற்றிச்செல்லும் அதே புகை வண்டி கற்பகத்தையும் சுமந்து சென்றதே தவிர அவளது மனப் பாரத்தை அவள்தான் சுமந்து கொண்டிருந்தாள். ஒரு சின்ன சச்சரவிற்காக கணவனுடன் தர்க்கம் செய்துகொண்டு கோபத்தில் அவனையும் உதறிவிட்டு பிறந்தகம் செல்லும் பேதையின் நிலை ரயில் வண்டிக்குத் தெரியுமா? அல்லதுபிரயாணிகளுக்குத்தான் தெரிய நியாயம் உண்டா? ரயிலின் வேகத்துடன் அவளது இதயத் துடிப்பின் வேகமும் போட்டியிட்டது. மனக் குமுறல் தாளாது அப்படியே ஜன்னலின்மீது சாய்ந்து கண்ணை மூடினாள். திரைப் படம் போன்று அவளுக்கும் ராஜூவிற்கும் நடந்த சிறிய தகராறு மூடின கண்களுக்கு முன் திரையிட்டன.

அவள்மீது குற்றமிருந்தாலும் ராஜூவின் மீதும் குற்றம் இருக்கத்தான் செய்தது. எப்பொழுதும் பெண்களுக்குள்ள சுபாவத்தினாலும் அற்ப ஆசையினாலுந்தான் அவள் தன் கோரிக்கைக்காக ராஜூவிடம் மனுப் போட்டாள். அது இன்று அன்று கேட்டதல்ல. கலியாணம் செய்துகொண்டு குடித்தனம் செய்யும் இந்த நான்கு வருடங்களாக அவளும் ஒரு ஜோடி முத்து வளையல்களுக்காக எவ்வளவோ தவம் கிடந்தாள். அவள் கோரிக்கையை ராஜூவும் தட்டினவனல்ல. ஒவ்வொரு வருடமும் போனஸ் வரும், வாங்கிக் கொடுத்து விடுகிறேன் என்று வினயமாக பதிலளிப்பான். கடைசியில் அவனும் போனஸிற்கு ஏமாந்துவிடுவான். அவளும் போனஸை எதிர்பார்த்து முத்து வளையலுக்கு ஏமாறுவது வழக்கம். இவ்வருடமும் அவள் அதே பல்லவியைத்தான் பாடினாள். ஆனால் அது இவ்வளவு தூரத்திற்கு விபரீதமாகி அவளுக்கும் ராஜூவிற்கும் இடையில் ஒரு பெரிய பிளவு ஏற்படும் என்று அவள் கனவிலும் கருதவில்லை. ஆனால் ராஜூ வழக்கப்படி இந்த வருடமும் அந்த போனஸ் பல்லவியை பாடி இருந்தானானால் இவ்வளவு தூரத்திற்கு வந்திராது. அத்துடனிராமல் அவளது பிறந்தகத்தை மறைமுகமாக ஏழை என்பதையும் சுட்டிக்காட்டிவிட்டான். தன்னை நிந்தித்திருந்தாலும் அவளுக்கு அத்தனை கோபம் ஏற்பட்டிராது. தாளாத குடும்ப கஷ்டப்படும் தன் தந்தையை சொன்னதுதான் அவளது பிறந்தகத்துப் பாசத்தைத் தாண்டிவிட்டது.

• • •

'ஏன்னா! இந்த வருடமாவது என் ஆசையைப் பூர்த்தி செய்வீர்களா? வருடா வருடம் பாடும் போனஸ் பல்லவியைக்கூட இந்தத் தடவை காணோமே!' என்று அப்பொழுதுதான் ஆபீஸிலிருந்து அலுத்துப்போய் வந்திருக்கும் தன் கணவனை நோக்கிக் கேட்டாள் கற்பகம். உழைத்து சலித்துபோன ராஜூவிற்கு அவளது கேள்வி ஆத்திரத்தை மூட்டியது.

'ஆமாம், அந்த மானேஜர் இந்த வருடம் வாயால்கூட போனஸ் கொடுக்கிறேன் என்று சொல்லவில்லை. நானும் அந்த பல்லவியை பாடவில்லை. உனக்கு வேறு என்ன வேலை? எப்பொழுது பார்த்தாலும் நகை நகை என்று நகைப் பைத்தியம் பிடித்துக் கிடக்கிறது. என் பிராணனை ஏன் வாங்குகிறாய்?' என்று எரிந்து விழுந்தான்.

'உங்களுடைய போனஸை எதிர் பார்த்து எதிர்பார்த்து எனக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது. ஏன் இந்த மாதிரி பொய் சொல்ல வேண்டும். வாங்கிக் கொடுக்க இஷ்டமில்லை என்று சொல்லிவிடுவதுதானே! அண்டை அயலில் இருக்கும் என்னோடொத்த பெண்களெல்லாம்எத்தனை பெருமையாக தங்கள் கணவன்மார்கள் வாங்கிக் கொடுப்பதை சொல்லிக்கொள்கிறார்கள். நானும் ஒரு ஜோடி முத்துவளையலுக்காக பஞ்சைப் பாட்டுபாடி சலித்துவிட்டது. எதற்கும் கொடுத்துவைக்க வேண்டாமா?" என்று பதிலுக்கு சுடச்சுட சொன்னாள் கற்பகம். அவளது கை தலைப்பை எடுத்து கண்களை துடைத்துவிட்டது.

"காரியாலயத்திலிருந்து வந்ததும் வராததுமாய் ஏன் இப்படி அழுது தொலைக்கிறாய்? அண்டை அயல் வாசிகள் அணியும் நகையைத்தானே உபமானம் எடுக்கிறாய்? அவர்கள் கணவன் மார்களை எத்தனை அன்பாக உபசரிக்கிறார்கள்? முதலில் உன்னிடம் அது இருந்தால்தானே என்னிடமும் மனைவியை நகை போட்டு அலங்கரிக்கும் ஆசை இருக்கப் போகிறது?"

"இன்றைக்கா நேற்று நான் கேட்பது? நான்கு வருடங்களாக மானத்தைவிட்டு கேட்கிறேன். பெண்டாட்டிக்கு செய்யவேண்டுமென்ற ஆசை இருந்திருந்தால் இந்த நாட்களில் ஒரு வைர வளையே செய்து போட்டிருக்கலாமே? எங்கப்பாவும் இரண்டு காசுவைத்துக்கொண்டு பெரிய மனுஷனாக இருந்தால் உங்களை இப்படி நச்சரிக்கவேமாட்டேன். அங்கு இல்லாத குற்றம்தான் வேறுவிதியின்றி உங்களை யாசிக்கிறேன் என்று துக்கமும் அருவருப்பும் கலந்த சொற்கள் உதிர, கண்ணீர் பிரவாகமெடுத்தோட,

விசும்பல் பலமாக வெளிவர பேசி முடித்தாள் கற்பகம்.

'வாஸ்தவம்தான். எனக்கும் எங்கப்பா நிறைய சொத்து வைத்திருந்தாரானால் உன் தலையிலிருந்து கால்வரை வைரத்தாலேயே இழைத்திருப்பேன். அங்கு இல்லாத குற்றம்தான் உன்னை கட்டிக்கொண்டு அவதிப்படுவது. எப்பொழுது பார்த்தாலும் நகை, 'புடவை என்று செல்லுபோல் அரிக்கிறாயே! உங்கப்பன் அப்படியே சத்திய அரிச்சந்திரன், தயாளகுணம் படைத்தவர், இந்த அழகிற்கு பெருமை வேறு அடித்துக்கொள்கிறாயா? சொல்லிக்கொள்ள உனக்கு வெட்கமா இல்லை?' ராஜூவின் கோபம் எல்லை கடந்துவிட்டது.

'ஏன் எங்கப்பாவை பிடித்து இழுக்கிறீர்கள்? அவர் என்ன பாவம் செய்துவிட்டார் உங்களுக்கு? நீங்கள் கல்யாணம் செய்துகொண்டு பெண்டாட்டிக்கு என்ன கிழித்துவிட்டீர்களாம்? ஒரு ஜோடி வளையல் பண்ணிக் கொடுக்க வக்கைக் காணோம். அவரைப் பிடித்து இழுக்கிறீர்கள்?'

'அப்பாவை' சொல்லும்பொழுதே எவ்வளவு பொத்துக்கொண்டு வருகிறதுபார்? கல்யாணம்ஆன மறுநாள், "மாப்பிள்ளை, நீர் கப்புவை அழைத்துக்கொண்டு ஊருக்கு போம்! ஆறுமாதத்திற்காக 'ரிஸ்ட்வாச்

சும்' 'செயினும்' வாங்கிக் கொண்டு அடுத்த வண்டியிலேயே வருகிறேன்' என்று உன்னை அழைத்துவரும் செலவைக்கூட சாமர்த்தியமாக என்மீது சுமத்திவிட்டார். உங்கப்பாவைப் போல நான் ஜகஜால புளுகனில்லை. முடிந்ததை செய்வேன். முடியாததை, இல்லாததையும், பொல்லாததையும் சொல்லி ஏமாற்ற மாட்டேன். இன்னும் உங்கப்பாவிற்கு 'அடுத்த வண்டி' கிடைக்கவில்லை' என்று எகத்தாளமாக ராஜு குத்திக்காட்டினான். கற்பகத்தின் விசும்பலின் பலம் அதிகரித்தது. நெஞ்சே விரிந்துவிடும் போலாகிவிட்டது.

'போதும்! உங்கள் பிரசங்கத்தை நிறுத்துங்கள். எங்கப்பா ஏழைதான். அவரைப் போல நாலு பெண்களைப் பெற்று சம்சாரியாக இருந்தால் நீங்களும் இந்த நிலைமையில்தான் இருப்பீர்கள் என்பதை தெரிந்துகொள்ளுங்கள். நான் ஒரு வளை கேட்டதற்காக இவ்வளவுதூரம் ஏன் சொல்லிக் காட்டுகிறீர்கள்? எங்கப்பாதான் பொய் பேசுபவர். நீங்கள் அரிச்சந்திரனாக இருப்பதுதானே! வாங்கிக் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு நான்கு வருடங்களாகியும் இன்னும் வாங்கிக் கொடுத்தபாடில்லை. இந்த அழகிற்கு அவரை ஏன் பழிக்கவேண்டும்? உங்களுக்கு என்னை பிடிக்காவிடில் இன்றைக்கே ரயிலேற்றிவிடுங்கள். நான் போகிறேன்', என்று கடைசி பாணத்தை பிரயோகித்தாள் கற்பகம்.

'போ போ! ஆனால், நான் வண்டியேற்றிவிடமாட்டேன். உங்கப்பாவிற்கே கடிதம் போட்டு வரவழைத்து தாராளமாகப் போ, நானும் கொஞ்ச நாட்களுக்கு நிம்மதியாக இருப்பேன்' என்று சொல்லிக்கொண்டே ராஜு துண்டை உதறி தோளில் போட்டுக்கொண்டு வெளியேறினான்.

சிறிய வேண்டுதலில் ஆரம்பித்த தாம்பத்ய சர்ச்சை பெருத்த வாக்குவாதமாகி, இருவர் வாய்களினின்றும் வார்த்தைகளும், சுடு சொற்களும் வெடித்து தெறித்து விசுவரூபமெடுத்து கடைசியில் ஓர் பெருத்த மனத்தாங்கலில் முற்றுப்பெற்றது. கற்பகம் மனப்பாரம் தீர விசித்து விசித்து அழுதாள். எவ்வளவு நேரம் அழுதாலும் அவள் மனம் சமாதானமடையவில்லை. 'பெண்' என்னும் மமதை விட்டுக்கொடுக்க மறுத்தது. அந்தராத்மா ஆக்ஷேபித்தது. கடைசியில் தன்னை உடனே வந்து அழைத்துச் செல்லும்படி தன் தகப்பனாருக்கு ஓர் அவசர லிகிதம் வரைந்தனுப்பிய பிறகுதான் அவள் நிம்மதியுடன் உறங்கினாள்.

கோபத்தில் கணவனிடம் ஒருவார்த்தைகூட சொல்லாமல் வண்டியேறிய கற்பகத்திற்கு ஊர் நெருங்க நெருங்க ஏனோ ஓர் பீதி பிடித்துக்கொண்டது. சாவதானமாக யோசித்த அவளுக்கு தன்மீது குற்றமா அவர் மீது குற்றமா? இந்த மனத்தாங்கலின் முடிவு எந்தவிதத்தில்? என்னும் பிரச்னைகளை எழுப்பி அதற்கான விடையை அலசுவதில் குழம்பியது அவளது மனம். கொஞ்சமாக அவள் தன் தவறை உணரவாரம்பித்தாள். உழைத்து அலுத்து வந்த கணவனை, அன்பு மொழிகளால் வரவேற்று, ஆசை வார்த்தைகளால் உபசரித்து அலுப்பு தீர்ந்த பிறகு வினயமாக கேட்பதைவிட்டு, வந்ததும் வராததுமாக ராம பாணம்போல் வீசியது தவறுதான். ஆனால் அதை சற்று முன்னதாகவே உணர்ந்திருக்கவேண்டும். வண்டியேறி ஊர்கிட்ட வந்த பிறகு உணர்ந்து என்னபயன்? காரியம் மிஞ்சிவிட்டது.

'கற்பகம் எழுந்திரம்மா! ஸ்டேஷன் வந்துவிட்டது', என்ற தகப்பனாரின் குரல் கேட்டதும் எண்ண சுழலினின்றும் விடுபட்ட கற்பகம் அவசரம் அவசரமாக எழுந்தாள். இயந்திரம் போல் இயங்கினாளே அன்றி அவள் உணர்வெல்லாம் எங்கோ மேயச் சென்றுவிட்டது. நிழலென தந்தையை பின் தொடர்ந்து வீடு சென்றாள்.

நாட்கள் என்னும் 'டயரி'யிலே ஏழு தாள்கள் தள்ளப்பட்டன. ராஜுவிடமிருந்து ஒரு கடிதம் கூட வரவில்லை. எப்படி வரும்? அவள்தான் சொல்லாமலே வந்தாளே! இருந்தபோதிலும் தன் தவறை மன்னிக்கும்படி தினம் ஒரு கடிதம் எழுதினாள். ஒன்றிற்காவது பதில் வராதது அவள் வேதனையை அதிகரித்தது. என்னதான் அம்மா அன்பை அள்ளி சொரிந்தாலும், சகோதரிகள் சுற்றி சுற்றி வந்தாலும், அவள் மனம் நிலைகொள்ளாது விரஹவேதனையில் அனலிலிட்ட மெழுகென உருகினாள்.

அன்று பிற்பகல் ஒரு மணி சுமாருக்கு எதிர்பாராவண்ணம் ராஜு வந்து சேர்ந்தார். சுந்தரம் ஐயர் மாப்பிள்ளைக்கு ராஜோபசாரம் செய்து கொண்டிருந்தார். கற்பகத்திற்கு சந்தோஷம் எல்லை புரண்டோடியது. ஆனால் ஒரே ஒரு சந்தேகம் அவள் மனத்திரையில் விடை காணாமல் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. 'என் ஒரு கடிதத்திற்கும் பதில் எழுதாமல் பாராமுகமாயிருந்தவர் நேரிலேயே எப்படி வந்தார்? இதில் ஏதோ விஷயம் இருக்கிறது. அது என்னவா இருக்கும்?' என்பதுதான். அந்த சமயம் பெண்ணினத்தின் கௌரவத்தை விட்டுக்கொடுக்க மனமில்லாமல் தானாக வலுவில் சென்று விசாரிக்கக் கூடாதென தன் அறையிலேயே சிறைபட்டுக்கிடந்தாள். மனம் என்னவோ ராஜுவை சுற்றி சுற்றியே அலைமோதிக் கொண்டிருந்தது.

பகல் போஜனங்களெல்லாம் ஒருவாறாக முடிந்த பிறகு ராஜு கற்பகத்தை தேடி அவள் அறைக்கு வந்தான். கற்பகம் அவன் வந்ததைக்கூட காணாமல் ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்தாள். அவளது சிந்தனைக்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல், 'எந்த கோட்டையை பிடிக்க இத்தனை பலமான சிந்தனையோ இளவரசனோ, இளவரசியோ பெறும் பாக்யத்திலே என்னிடம்கூட ஒளித்துவைத்து ஓடி வந்துவிட்டாயே கள்ளி!' என்ற ராஜுவின்

குரல் அவளை ஒரு உலுப்பு உலுப்பிற்று. வெட்கத்தினால் முகம் சிவக்க தலை கவிழ்ந்தாள்.

'நான் செய்தது தவறுதான். உங்கள் மனதை புண்படுத்திவிட்டேன். 'பெண் புத்தி பின்புத்தி' என்பதை பிறகுதான் உணர்ந்தேன். ஆனால் நீங்கள் இத்தனைக்கும் சுய கௌரவத்தை விட்டுக் கொடுத்து என்னைப்பார்க்க வந்திருக்கிறீர்கள். என்னை மனமார மன்னித்துவிடுங்கள்' துக்கம் நெஞ்சை அடைத்தது. கண்களின் கடையில் கண்ணீர் தேங்கி கீழே உருண்டோட தயாராக இருந்தன.

'அசடு! அப்படியெல்லாம் பேசாதே. உன்னை எதற்கு மன்னிக்கவேண்டும்? நான் அப்படி பேசியிருக்கக்கூடாது. என்மீதுதான் தவறு. போகட்டும். நடந்ததைமனதில் வைக்காதே.இந்தா உன் வளைகாப்பிற்கு என் பரிசு', என்று ஆறுதல் மொழிகளைக் கூறிக்கொண்டே ராஜு ஒரு பொட்டணத்தை அவள் கையில் திணித்தான். அதை பிரித்து பார்த்த கற்பகத்திற்கு தலை சுழன்றது. எந்த முத்து வளையல்களுக்காக அன்று சர்ச்சை செய்துகொண்டு வந்தாளோ அதே வளையலைக் கண்டதும் ஆனந்தம் ஒரு பக்கமும், சம்சயம் ஒரு பக்கமும் சேர்ந்து அவளை மதி மயங்கச் செய்தது. 'ஏதோ இது!' என்னும் பாவனையில் ராஜுவைப் பார்த்தாள்.

'உன் வளைகாப்பிற்கு உனக்கு நகை ஒன்றும் வேண்டாமென்று சொல்லிவிட்டதனால் தற்சமயம் அந்த பணம் கையில் இருப்பதால், உமக்கு முன்பு 'ரிஸ்ட் வாட்ச்' வாங்கிக் கொடுப்பதாக கொடுத்த வாக்கை இப்பொழுது காப்பாற்றிக் கொள்ளுகிறேன். இதில் நீர் 'ரிஸ்ட்வாட்ச்' வாங்கிக்கொண்டால்தான் என் மனது திருப்தியடையும்' என்று உன் தந்தை மணியார்டருடன் கடிதமும் எழுதி இருந்தார். அதிலிருந்துதான் நீ ஸ்நானம் செய்யாமலிருப்பது எனக்குத் தெரிந்தது. 'பிள்ளைத்தாச்சியை கண்டபடி கடிந்து கொண்டோமே' என்று என்மனம் கிடந்து தவித்தது. அந்த பணத்திலேயே நீ ஆசைபட்ட முத்து வளையலை வாங்கி வரவேண்டியது என்று திட்டமிட்டிருந்தேன். ஆனால் எதிர்பாராவண்ணம் அன்றே மானேஜர் எங்கள் எல்லோருக்கும் மூன்று வருடங்களாக ஏமாற்றி வரும் போனஸைக் கொடுத்துவிட்டார். உன் விருப்பப்படி போனஸில் உனக்கு வளையலும், உன் அப்பா அனுப்பின பணத்தில் எனக்கு 'வாட்'சும் வாங்கிவிட்டேன் இதோ பார்!' என்று சொல்லி இன்னொரு பொட்டணத்தையும் எடுத்துக் காண்பித்தான் ராஜு.

தம்பதிகள் தங்கள் அன்பை, அவன் அவளுக்கு தன் கரங்களால் வளை அணிவிப்பதிலும், அவள் அவன் கையில் 'வாட்'சைக் கட்டுவதிலுமாகப் பரிமாறிக்கொண்டனர். ஒரு சிறு புயலடித்த இருவரிடையே ஓர் ஆழ்ந்த அமைதி நிலவியது.



சிறு துளி
பெரு
வெள்ளம்

நீர்வளமும் நிலவளமும்
சேர்ந்தவிடத்தில் நல்ல விதை
களை தெளித்தால் செழிப்
பான விளைச்சல் கிடைக்கிறது

உங்கள் சொந்த நலனையும், சந்ததியின் நலனையும் உத்தேசித்து
இந்த உத்தரவாதமுள்ள செக்யூரிடிகளில்

சேமித்து முதலீடு செய்யுங்கள்.

நேஷனல் ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்	ரூ. 100 முதலீடு செய்தால் 12 வருடங்களில் ரூ. 150 ஆகக் கிடைக்கும்.
பத்துவருட டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாசிட்டுகள்	[illegible]
போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் டிபாசிட்டுகள்	[illegible]

சிறு சேமிப்புகளின்றும் பெரிய பயன்கள்:

இந்தக் குழாய்க் கிணறுகள்
அதிக நிலங்களுக்கு நீர்ப்பாசனம் ஏற்படுத்தி
உணவுப் பெருக்கத்திற்கு உதவுகின்றன.

A.C. SISTHE

இடையிலே வந்தவன்

ஸ்ரீரங்கம் நரஸிம்மன்

ஏதோ ஒரு புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த சீதாவின் பார்வை தற்செயலாய் கடிகாரத்தின் பக்கம் சென்றது. பனிரெண்டு மணிக்குப் பத்தே நிமிஷங்கள் இருந்தன. சீதா, அப்படியொன்றும் நாவல்பைத்தியமல்ல; என்றாலும் அந்தக் கதை அவள் மனதைக் கவர்ந்துவிட்டது. அபலை ஒருத்தியின் சோகக் கதையை வெகு அழகாக சித்தரித்திருந்தது அந்தப் புஸ்தகத்தில். "சோகத்தை ஏட்டில் காணும்போது எவ்வளவு சுவாரஸ்யமாயிருக்கிறது?.....ஒரு வேளை, நம் கதையையும் யாராவது எழுதினால், படிப்பதற்கு இதைவிட இன்னும் நன்றாய் இருக்குமோ என்னவோ?" என்று எண்ணியபடியே புஸ்தகத்தை மூடி மேஜை மீது வைத்து விட்டுச் சிறுவன் பாபுவைப் பார்த்தாள். ஒரு கவலையுமின்றி நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தான். விளக்கைச் சிறிதாக்கிவிட்டு பாபுவின் பக்கத்தில் வந்து படுத்துக் கொண்டாள். ஆனால் தூக்கம் வந்தால் தானே?....

பதினெட்டாவது வயதில் சீதாவுக்குக் கல்யாணமாயிற்று. சுந்தரத்தை மணந்ததில் அவளுக்குப் பரமதிருப்தி. ஆனால் அவளை அடியோடு வெறுத்தான் சுந்தரம். சீதா, நல்ல அழகிதான். படித்தவள், குணசாலி. இருந்தும் சுந்தரத்தின் மனதை அவளால் கவர முடியவில்லை. அது வேறு ஒருத்தியிடம் ஐக்யமாயிருந்தது. வீட்டிலேயே அதிக தங்க மாட்டான் சுந்தரம். அப்படித் தங்கினாலும் பேச்சு, பார்வை எல்லாம் நெருப்பு தான்!

எப்படியோ இரண்டு வருஷத்தைக் கடத்திவிட்டாள் சீதா. எப்படியும் ஒரு நல்ல காலம் வருமென்று பரிபூர்ணமாக நம்பியிருந்தாள். அவள் நம்பிக்கைக்கு தூண்டுகோலாக இன்னொரு விஷயமும் நடந்தது. சீதா கர்ப்பவதியானாள்!

இனிமேல் எப்படியும் தன் கணவர் திருந்திவிடுவார் என்று எண்ணினாள், சீதா. ஆனால் விதி, வேறு விதமாக இருந்தது. முன்னைவிட மோசமாக நடந்து கொண்டான் சுந்தரம். அவளுக்குப் பிறக்கப் போகும் குழந்தையின் மீதே பழியைச் சுமத்தி அவளை ஒதுக்கி வைத்து விட்டான்! சீதா, எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். கெஞ்சினாள், அழுதாள். ஆனால், சுந்தரம் எதற்கும் அசையவில்லை.

பிறந்தகத்திற்குப் போய் விட்டாள் சீதா. அங்கேயும் அவளுக்குச் சரியான வரவேற்பு கிடைக்கவில்லை. சிலநாளைக்கெல்லாம் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. சீதாவின் பெற்றோர்களும் அந்தக் குழந்தையை ஒரு தினுசாகத் தான் பார்த்தார்கள். சீதாவின் சகிப்புத் தன்மையை சோதிப்பதைப்போல் இருந்தது அவர்கள் பேச்செல்லாம். மேலும் பெற்றோர்களின் தயவில் வாழவிரும்பாமல் ஒரு உபாத்தியாயினி வேலையைத் தேடிக்கொண்டு தனியாகப் போய்விட்டாள்.

நோயாளி:—எனக்கு இரவில் சரிவர தூக்கம் வரமாட்டேங்கிறது. அதுக்கு ஏதாவது நல்ல மருந்தா கொடுங்களேன்.

டாக்டர்:—மருந்து என்னத்துக்கு சாஸ்திரிகளே? பேசாம, தினந்தோறும், ராத்திரி ஏதாவதொரு காலட்சேபத்துக்குப் போயிடும். எல்லாம் சரியாப்போகும்!

அப்பொழுதும் அவள் நிம்மதியாய் வாழமுடியவில்லை. ஊரில் பல பேர் பலவிதமாகப் பேசிக் கொள்வது அவள் காதில் விழுந்தது. பேசாமல் அந்த ஊரை விட்டே தன்னை மாற்றிக்கொண்டாள். ஆனால் எங்கே போனால் என்ன? அங்கேயும் அவளைப்பற்றி கதை கட்டும் சீமாட்டிகள் இருக்கத்தான் செய்தனர்!

வருஷத்திற்கு ஒரு ஊர்போய்க் கொண்டிருந்தாள் சீதா. பத்து வருஷம் ஓடிவிட்டது. இப்பொழுது இருக்கும் ஊருக்கு வந்து ஒரு வாரம் தான் ஆகிறது. ஒரு வீட்டின் மேல் மாடியில் இரண்டு அறைகள் வாடகைக்குப் பேசி, வசித்து வந்தாள். வீட்டின் கீழ் பாகத்தில் ஒரு கிழவி மட்டும் வசித்து வந்தாள். அவள் தான் அந்த வீட்டின் சொந்தக்காரி. கூடுமான வரையில் சீதாவுக்கு உதவியாகவே இருந்தாள் அந்தக் கிழவி. அடுத்தது ஒரு சிறிய வீடு. ஆனால், அது சீதா வந்த நாளாகப் பூட்டியே கிடந்தது.

படுத்துக் கொண்ட சீதா, கடந்த பத்து வருஷ அனுபவங்களையும் நினைத்துப் பார்த்தாள். "சீ! இனிமேல் எது வந்தாலும் சரி; இந்த ஊரை விட்டுப் போகவே கூடாது. அப்புறம் குழந்தை பாபுவின் படிப்பு என்ன ஆவது?" என்று நினைத்துக் கொண்டாள். சற்றைக் கெல்லாம் அப்படியே தூங்கி விட்டாள்.

சட்டென்று பாபு எழுந்து உட்கார்ந்து கொண்டான். தாயாரைப் பார்த்தான். அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவனுக்கு அவசரமாகக் கீழே இறங்கிப்போய்விட்டு வரவேண்டும். தனியாகப் போய் வரப்போதிய தைரியமும் இல்லை; இந்தச் சிறு விஷயத்திற்காக அம்மாவைத் துணைக்கு அழைக்கவும் வெட்கமாயிருந்தது. எழுப்பலாமா, வேண்டாமா வென்று தயங்கியபடியே சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். அதைரியம் ஒரு பக்கம்; அவசரம் ஒரு பக்கம்! மெதுவாக "அம்மா!" என்றான். ஆனால், நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தாள் சீதா. கடைசியில் துணிந்து தானாகவே கிளம்பிவிட்டான்!

அறையை விட்டு வெளியே வந்தான். நல்ல நிலா காய்ந்துகொண்டிருந்தது. "ராமா, ராமா, ராமா" என்று முணுமுணுத்துக்கொண்டு தைரியமாகக் கீழே இறங்கிப் போனான். சந்து வழியாகப் பின் பக்கம் போய் விட்டுத் திரும்பினான். வரும்போது பக்கத்து வீட்டில் ஏதோ சப்தம் கேட்டது. ஆனால், ஜன்னல் கதவுகளெல்லாம் மூடியிருந்தபடியால் உள் பக்கம் ஒன்றும் தெரியவில்லை. விடு விடுவென்று படிகள் ஏறி, மாடிக்கு வந்துவிட்டான். அறைக்குள் நுழையும்போது "அடுத்த வீட்டில் என்ன?" என்ற யோசனை எழுந்தது. இரண்டு வீடுகளுக்கும் ஒரே மொட்டை மாடிதான். ஒவ்வொரு அறைக்கும் மேலே வெளிச்சத்திற்காகக் கண்ணாடி வைத்திருந்தது. கண்ணாடி வழியாக உள்ளே பார்க்கலாம். உள்ளிருப்பவர்களுக்குக் கண்ணாடி வழியாக வெளியே ஒன்றும் தெரியாது.

ஒவ்வொரு கண்ணாடியாகக் குனிந்து பார்த்துக் கொண்டே வந்தான் பாபு. ஒரு அறையில் இரண்டு பேர் குஸ்தி போட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. பக்கத்தில் ஒரு ஸ்திரீ நின்றுகொண்டிருந்தாள். பாபுவின் உற்சாகம் கிளம்பிவிடவே, இன்னும் கொஞ்சம் சௌகர்யமாக உட்கார்ந்து கொண்டு நன்றாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒருவர், நீலச் சட்டையும் இன்னொருவர் வெள்ளைச் சட்டையும் அணிந்து கொண்டிருந்தனர். வெள்ளைச் சட்டைக்காரர்தான் ஜெயிப்பாரென்று முதலில் எண்ணினான் பாபு. ஆனால், பக்கத்தில் இருந்த பெண் அவ்வப்போது நீலச் சட்டைக்காரருக்கு உதவி செய்து கொண்டிருக்கவே வெள்ளைச் சட்டைக்காரர் சளைத்து விட்டார். திடீரென்று அவர்மீது பாய்ந்தார் நீலம். கழுத்தை நெறித்து மூச்சுவிட முடியாமல் பிடித்துக்கொண்டார். வெள்ளைச் சட்டைக்காரர் தன்னால் முடிந்த மட்டும் திமிறிப் பார்த்தார். ஆனால் இரும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தார் நீலச் சட்டைக்காரர். சற்றைக்கெல்லாம்பிரக்ஞையிழந்து, தலைதுவண்டுவிட்டது. அவர் மூக்கின் பக்கம் கைகளை வைத்துப் பார்த்தார். அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் அந்

தப் பெண். 'உயிர்போய் விட்டது' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தார் நீலச்சட்டைக்காரர். உடனே ஒரு பெரிய கோணியைக் கொண்டு வந்தாள். அதற்குள் அந்த மனிதரின் உடலைத் திணித்து, ஒரு மூட்டை போல் கட்டினார்கள். கையில் ஒரு விளக்கை எடுத்துக் கொண்டாள் அந்தப் பெண். தரதரவென்று மூட்டையைஇழுத்துக்கொண்டே வீட்டின் பின் பக்கம் போனார்கள். பாபுவும் மாடி வழியாகவே பின் பக்கம் சென்று பார்த்தான். பின்னால் பாழடைந்த கட்டிடம் ஒன்றுஇருந்தது. இருவரும் அதற்குள் நுழைவது தெரிந்தது. பாபுவின் இதயம் படக்படக்கென்று அடித்துக் கொண்டது. விடு விடுவென்று அறைக்குள் வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான். சிறிதாய் எரிந்து கொண்டிருந்த விளக்கைச் சற்று பெரிதாக்கினான். திடீரென்று உருவான அவனுடைய நீண்ட நிழல் ஒரு கணம் அவனைப்பதறச்செய்து விட்டது. ஜன்னல் வழியாக வெளியில் தெரிந்த தென்னை மரங்கள் பேய் பிசாசுகளைப் போல் பயமுறுத்தின. ஜன்னல் கதவை மூடுவதற்காகப்போனான். தெருவில் ஏதோ ஒரு நாய் பயங்கரமாக ஊளையிட்டுக் கொண்டிருந்தது. சடக்கென்று கதவுகளை மூடிவிட்டுத் தாயாரின் தலைமாட்டில் வந்து உட்கார்ந்து கொண்டான். பயத்தால், அளவுக்கு மீறி அடித்துக் கொண்டது அவன் இதயம். மெதுவாக "அம்மா!" என்றான். ஆனால் குரல் வெளியில் வந்தால் தானே! கை, கால் எல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தன. தான் தானா, இவ்வளவு நேரம் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தது என்பதை அவனாலேயே நம்ப முடியவில்லை. "அம்மா! அம்மா!!" என்று மீண்டும் இரண்டு குரல் கூப்பிட்டான். சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு "ஏன், என்னடாம்மா வேணும்?" என்றாள் சீதா.

என்ன சொல்வதென்று தெரியாமல் விழித்தான். அவன் முகத்தில் தோன்றிய கலவரத்தைப் பார்த்து விட்டு "ஏதாவது சொப்பனம் கண்டியா பாபு?" என்றாள், சீதா. "இல்லேம்மா; வந்து...."

"கீழே போய்ட்டு வரணுமா?"

"போய்ட்டு வந்துட்டேன்! ஆனா....."

"ஏன்? எதையாவது பார்த்துப் பயந்தியா? துணைக்கு என்னைக் கூப்பிடுவதற்கு என்ன பாபு?" என்றாள் செல்லமாக. பிறகு ஒரு வழியாகத் தான் கண்டது அனைத்தையும் சொன்னான். "சரிதான்; ஏதோ சொப்பனம் கண்டு விட்டுச் சொல்லுகிறான்!" என்று தீர்மானித்துக் கொண்டாள் சீதா. "இப்போ என்னம்மா பண்றது?" என்றான். லேசாகச் சிரித்து விட்டு "பேசாமல் தூங்கறது!" என்றாள். "அவனை எதுக்காகக் கொலை பண்ணா?" என்றான். "நமக்கு எதுக்கு பாபு, அந்த கவலை? அதைக் கண்டு பிடிக்க 'போலீஸ்' இருக்கிறது; நீ படுத்துக்கோ!"

"அவாளுக்கு எப்படித் தெரியும்?"

"எல்லாம் தெரியும். நீ தூங்கு!" என்று கூறிவிட்டுப் படுத்துக் கொண்டாள் சீதா. பாபுவின் மூளை தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்தது. "போலீஸ் காரர்களுக்கு மட்டும் எப்படித் தெரியும்?" என்றவாறு யோசித்துக் கொண்டிருந்தான். லேசாகக் குறட்டைவிடத் தொடங்கினாள் சீதா.

சில சமயங்களில், கோழை தைரியசாலியாகவும்நல்லதைரியசாலி கோழையாகவும் மாறிவிடுவது இயற்கை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் மனிதனை விபரீதமாக மாற்றி விடுகிறது. அந்த மாறுதலுக்குக் காரணம் 'அதிர்ஷ்டம்' என்று ஒரு சமயம் சொல்லுவார்கள்; 'விதி' என்று ஒரு சமயம் சொல்லுவார்கள். இரண்டும் மாறுதலினால் ஏற்படும் பலாபலனைப் பொறுத்தது. ஆனால் இப்பொழுது நாம் விதியைத்தான் சொல்லவேண்டும்!

திடீரென்று ஒரு அசட்டுத் துணிச்சலோடு எழுந்து உட்கார்ந்தான் பாபு. சப்தம் செய்யாமல் எழுந்துபோய் அறைக் கதவைத் திறந்துகொண்டு வீதி முன்னால் இழுக்க சனீஸ்வரன் பின்னால் துரத்த போலீஸ் ஸ்டேஷனை நோக்கி நடையைக் கட்டினான்.

போலீஸ் ஸ்டேஷனில் இரண்டு 'கான்ஸ்டபிள்'கள் மட்டும் இருந்தனர். அந்த நடு நிசி வேளையில் ஒரு பத்து வயதுச் சிறுவன் வருவதைக் காண அவர்களுக்கே ஆச்சர்யமாயிருந்தது. 'நீ யாரப்பா?' என்றார் ஒருவர். தான் பார்த்த கொலையைப்பற்றி விஸ்தாரமாக சொன்னான் பாபு. முதலில் அவர்களுக்கும் நம்பிக்கை ஏற்படவில்லை. பிறகு இன்ஸ்பெக்டருக்குச் சொல்லியனுப்பினார்கள்.

சற்றைக்கெல்லாம் இன்ஸ்பெக்டரும் பத்து பனிரெண்டு கான்ஸ்டபிள்களும் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்கள். பாபுவைப் பக்கத்தில் அழைத்து உட்கார வைத்துக்கொண்டார் இன்ஸ்பெக்டர். எல்லாவற்றையும் அவரிடமும் சொன்னான். சிறிது நேரம் யோசித்துக்கொண்டிருந்துவிட்டு 'ஏன் தம்பி! நீ அடிக்கடி கனவு காணும் வழக்கம் உண்டோ?' என்றார். 'உண்டு, ஆனால் இது கனவு அல்ல! என் கண்ணாலேயே பார்த்தேன்!' என்றான் பாபு.

'பார்த்துவிட்டு வேறு யாரிடமாவது சொன்னாயா?' என்றார்.

'அம்மாவிடம் மட்டும் சொன்னேன்!'

'அதற்கு அம்மா என்ன சொன்னாள்?'

'ஒன்றும் சொல்லவில்லை; 'போலீஸ் இருக்கும்போது உனக்கு ஏன் இந்தக் கவலை?' என்றாள்.'

'அப்புறம்?...'

'அப்புறம் அம்மா தூங்கிவிட்டாள். நான் மட்டும் எழுந்து வந்தேன்!' என்றான் பாபு.

'சரி, என்னுடன் வா!' என்று அவனை அழைத்துக் கொண்டு கிளம்பினார். கூடவே சில போலீஸ்காரர்களும் சென்றார்கள். அவன் காட்டிய வீட்டில் மினுக் மினுக்கென்று விளக்கு எரிந்துகொண்டிருப்பது தெரிந்தது. வாசற் கதவு தாளிடாமல் வெறுமனே மூடியிருந்தது. கதவைத் தள்ளிக்கொண்டு திடுதிடுவென்று நுழைந்தார்கள் இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும். பாபுவும் தயங்கிக்கொண்டே பின் தொடர்ந்தான். உள்ளே ஒரு ஆணும் பெண்ணும் பிரயாணத்திற்குத் தயார் செய்துகொண்டிருந்தனர். அவர்களைச் சுட்டிக் காண்பித்து 'இவர்கள்தான் ஸார்!' என்று கத்தினான் பாபு. இரண்டு மூன்று கான்ஸ்டபிள்களை அவர்களுக்குக் காவலாக வைத்துவிட்டு எல்லோரும் பின் பக்கம் இருந்த பாழடைந்த கட்டிடத்திற்குள் நுழைந்தார்கள். ஒரு 'டார்ச் லைட்'டை நாலாப் பக்கமும் சுற்றிக் காண்பித்துக் கொண்டே போனார் இன்ஸ்பெக்டர். ஒரு மூலையில் சாக்கு மூட்டை காணப்பட்டது. அவசர அவசரமாக அதைப் பிரித்து ஒரு மனித உடலை வெளியில் எடுத்தனர். அந்த ஆளை நன்றாகப் பரிசோதித்துவிட்டு 'சுவாசம் இருக்கிறது!' என்றார். உடனே எல்லோருமாகச் சேர்ந்து அந்த ஆசாமியைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தார்கள். ஒருவர் ஓடிப்போய் கொஞ்சம் ஜலம் கொண்டுவந்து அவன் முகத்தில் பளிச்சென்று அடித்தார். தலையிலும் கொஞ்சம் ஜலத்தை ஊற்றினார். சற்றைக்கெல்லாம் மெதுவாகக் கண்ணைத் திறந்தார் அந்த மனிதர். சட்டென்று எல்லோர் முகமும் மலர்ந்தது. ஒன்றும் புரியாமல் எல்லோரையும் பார்த்தார் அந்த மனிதர். 'ஒன்றும் பயமில்லை, எழுந்திரும்! ஒரு சிறுவன் முயற்சியால் நீர் உயிர் பிழைத்தீர்!' என்றார் இன்ஸ்பெக்டர். ரொம்பவும் சிரமப்பட்டு மெதுவாக எழுந்து நடந்து வந்தார். எல்லோரும் பாதி வழி வந்துகொண்டிருக்கையில் உள்ளிருந்து 'ஐயோ!' என்று அலறும் சப்தம் கேட்கவே பதறிக் கொண்டு எல்லோரும் அங்கே ஓடினார்கள். கீழே பாபு வீழ்ந்து கிடந்தான். அவன் வயிற்றில் ஒரு

பேனாக் கத்தி சொருகியிருந்தது! இரண்டு கான்ஸ்டபிள்களையும் மீறிக்கொண்டு தன்னைக் காட்டிக்கொடுத்த பாபுவைக் கொன்றுவிட்டான், அந்தக் கிராதகன்.

உடனே ஒருவனை அனுப்பி பாபுவின் தாயாரை வரவழைத்தார் இன்ஸ்பெக்டர். விஷயம் தெரியாமலேயே வந்தாள் சீதா. 'யார், நீயா! சீதா, இது உன் பிள்ளையா? ஐயோ! எனக்காக என் பிள்ளையே உயிரை விட்டானா?' என்று அலறிக்கொண்டு பாபுவின்மீது வீழ்ந்த சுந்தரத்தைப் பார்த்ததும் சீதா, அப்படியே ஸ்தம்பித்து விட்டாள். அவளால் அழக்கூட முடியவில்லை. சுந்தரத்தின் வாயால் 'என் பிள்ளை' என்ற வார்த்தையைக் கேட்டதும் அவள் காதுகளில் ஒரு கணம் தேன் மாரி பொழிவதுபோலிருந்தது. கீழே கிடந்த பாபுவைப் பார்த்தாள். தான் பிறந்த காரணம் இதுதான், என்று தெரிந்து கொண்டு அதைச் செய்துவிட்ட திருப்தியினாலோ என்னவோ அவன் முகத்தில் ஒரு அசாதாரண அமைதி குடிகொண்டிருந்தது!

இரண்டு நாள் சென்றது. சோகமே உருவாக உட்கார்ந்திருந்தாள் சீதா. சுந்தரம் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு, 'எல்லாவற்றையும் மறந்து என்னை மன்னித்து விட மாட்டியா 'சீதா!' என்றான் கெஞ்சுவதுபோல். 'உங்களை மன்னிக்க நான் யார்? யாரை, உங்கள் சொத்து அல்லவென்று உதறித் தள்ளினீர்களோ, அவனே உங்களை மன்னித்துவிட்டானே...!' என்னைத் தனியாய் தவிக்கவிட்டுப் போனதும் இந்தப் பத்து வருஷமாக எனக்குத் துணையாயிருந்தான். திரும்பவும் உங்களைப் பார்த்ததும் உங்களிடமே ஒப்படைத்துவிட்டுப் போய்விட்டான்!' என்றாள் சீதா. மேற்கொண்டு பேசமுடியாமல் அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. கண்களில் துளிர்த்த நீரை துடைத்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான் சுந்தரம்.

நிமிஷக்கதை

தத்ரூபம்!

★

ஸிம்மம்

"ஏது! இவ்வளவு அபூர்வமாக குழந்தைகளை யெல்லாம் அழைச்சிண்டு எங்கே புறப்பட்டேள்? என்ன விசேஷம்?" என்றேன் எதிரே வேகமாக வந்த வாஞ்சிநாதய்யரைப் பார்த்து.

"வாணி கலாமண்டபத்திலே நடக்கப்போற ட்ராமாவுக்காக கிளம்பினேன்" என்றார் அவர்.

"என்ன! அந்த ட்ராமாவுக்கா? கடைசி வகுப்பு டிக்கட்டே இரண்டு ரூபாயாச்சே! ஏதாவது ஓஸி 'பாஸ்' வந்திருக்கோ?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

"பின்னே அதிருஷ்டப் 'பிரைஸ்' ஏதேனும் குருட்டாம் போக்கிலே விழுந்து உம்ம கையிலே பணம் துள்ளுப்லே இருக்கு. அப்படித்தானே? தேவலய்யா உம்ம பாடு!"

"நம்ம மூஞ்சிக்கு அதிருஷ்டம் வேறே, அதற்கு 'பிரைஸ்' வேறயாக்கும்!" என்று பகு வசனத்தில் என்னையும் இழுத்தாற்போல் இடித்துக் கூறினார் வாஞ்சிநாதய்யர்.

மேற்கொண்டு வாயைக் கிண்டி உண்மையை வரவழைக்கலாமென தயங்கி நின்றேன். அதற்குள் அவரோ "நாழியாறது. அவசரமா போறேன். அப்புறம் பேசிப்போம்" என்று அசட்டு சிரிப்பு சிரித்த வண்ணம் பரிவாரங்களோடு நடையை கட்டினார்.

தெருக்கோடி திரும்புகிறவரை அவரை ஆச்சரியத்துடன் திரும்பித் திரும்பி பார்த்துவிட்டு என் வீட்டை அடைந்தேன். ஆனால் சிந்தனையோ அவரது பொருளாதார நிலைமையைக் குறித்தே வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

'கஞ்சி வரதப்பா' என்றால் எங்கே என்று கேட்கக்கூடியவர் வாஞ்சிநாதய்யர்! ஏழை வக்கீல் குமாஸ்தா. எஜமானருக்கே வரும்படி 'ததிங்கிணத்தோம்'! இவர் ஸ்திதியை அப்புறம் கேட்கவா வேண்டும்! ஏதோ வாயைக் கட்டி, வயிற்றை இறுக்கி மாதம் எழுபத்தைந்து ரூபாய்க்குள் காலட்சேபம் நடத்தும் இவர் ட்ராமா போவதாவது? அதுவும் டஜனுக்கு இரண்டு குறைவான குழந்தைகள் படையை திரட்டிக் கொண்டா? நேரில் கண்டு பேசிய எனக்கே நம்பிக்கை விழவில்லை என்றால் வேறு யார் நம்பப் போகிறார்கள்!

மறு நாள் காலை நியூஸ் பேப்பரை பிரித்துப் பார்த்தபோது தான் விஷயம் புரிந்தது. 'பக்த குசேலா நாடகத்துக்கு கவர்னர் பாராட்டு' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த அச்செய்தியின் பகுதியை இதோ நீங்களே படித்துப் பாருங்கள்:

"வேணு கான அமெச்சூர் நாடக சபாவின் இப் புது நாடகத்தில் திருவல்லிக்கேணி வக்கீல் குமாஸ்தா ஸ்ரீ வாஞ்சிநாதய்யர் பக்த குசேலராக பிரதான பாகமேற்று தமது குழந்தைகளுடன் நடித்ததை சென்னை கவர்னர் வெகுவாக ரஸித்ததோடு 'அப்படியே தத்ரூபம்' என்றும் பாராட்டினர்."

"என்னன்னு. இந்தக் கறுப்புப் புளியை வாங்கிண்டு வந்திருக்கேள்......குழம்பு வீணா போயிடுமே...!"

"ஆமா! இல்லாத போனமாத்திரம் தினம் திவ்யமா குழம்பு பண்ணிண்டிருக்க போ!"

மனம்

எஸ்.பி.ஹர்ஷன்

✶

இந்த தரம் ஊருக்குப் போயிருந்தபோது திருவையாற்றிலிருந்து என் அத்தையும் அந்த ஊருக்கு வந்திருந்தாள். லீவு எல்லாம் முடிந்து சென்னை திரும்பப் புறப்பட்ட சமயம் வயதான அத்தையை இன்னொரு தரம் பார்க்க முடிகிறதோ இல்லையோ என்ற எண்ணத்தோடு 'நமஸ்காரம்' செய்தேன்.

"ஏண்டா ரகு? பட்டணத்தில் சில பொட்டைக் கட்டைகள் எல்லாம் ஆண்களிடம் சிரித்துப் பேசிவிட்டு அவர்கள் கையில் இருக்கும் பணம், கடிகாரம், மோதிரம் எல்லாவற்றையும் தனுக்காகப் பிடிங்கிக்கொண்டு அல்லாட வைக்கிறதுகளாமே! என்னமோ அப்பா நீ பத்திரமாக இரு. இப்படி இசைகேடாக அகப்பட்டுக்கொள்ளாதே!' ' என்றாள் அத்தை.

நான் சிரித்தேன். அத்தைக்கு எவ்வளவு அஞ்ஞானம்! என் முகரக்கட்டையைப் பார்த்துவிட்டு என்னிடம் எந்தப் பெண் வரப் போகிறாள்?

ஊர் திரும்பினதும் எனக்கு ஒரு சந்தோஷச் செய்தி காத்திருந்தது. 'நம் தமிழ்' சிறு கதைப் போட்டியில் முதல் பரிசு ஐந்நூறையும் என் கதைக்கு அளித்திருக்கிறார்கள் என்ற செய்திதான் அது. இதை எனக்குத் தெரிவித்துவிட்டு, ஒரு நாளையும் குறிப்பிட்டு அந்த நாளில் நடக்க இருக்கும் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு கவர்னரின் கையால் கொடுக்கப்படும் பரிசைப் பெற்றுக்கொள்ளச் சொல்லிக் குறிப்பிட்டிருந்தார் ஆசிரியர்.

மறுநாள் பொழுது விடிந்தால் விழா.

அன்றைக்கு இரவு மணி பன்னிரண்டு அடித்தும் எனக்குத் தூக்கமே வரவில்லை. எனக்குத் தெரிந்த வித்தைகளை எல்லாம் அனுஷ்டித்துப் பார்க்கத் துவங்கினேன்.

• • •

விழாவைத் தான் எவ்வளவு நன்றாக ஏற்பாடு செய்திருந்தார்கள் தெரியுமா? ஏறக்குறைய எல்லா எழுத்தாளர்களுமே அங்கு வந்திருந்தனர். நான் பார்த்திராத ஆசிரியர்களை எல்லாம் அன்றைக்குச் சந்திக்க முடிந்தது. கொண்டாட்டத்தின் முதற் படியாக எல்லோருமாக சிற்றுண்டியையும் தேநீரையும் சாப்பிடத் துவங்கினோம்.

இவ்வளவு பெரிய கூட்டமும் என்னைக் கௌரவிப்பதற்காகத் தான் என்பதை நினைத்தபோது எனக்குப் பெருமையாக இருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தேன் நான்.

என் பக்கத்தில் அவள் உட்கார்ந்திருந்தாள். "ஆண்களிடம் சிரித்துப் பேசிவிட்டுப் பணம், கடிகாரம், மோதிரம் எல்லாவற்றையும் பிடுங்கிக்கொள்ளும் லங்கிணி!" என் நெஞ்சை யாரோ அமுக்குவதைப்போலத் தோன்றிற்று.

அரை நொடியில் என்னைச் சமாளித்துக்கொண்டேன். "சே! முற்போக்குக் கொள்கைகளை உடைய எழுத்தாளன் இப்படியா பயப்படுவது!"

அவள் கை எடுத்துக் கும்பிட்டாள். "நமஸ்தே!"

குலாப்ஜானை வெட்டிக்கொண்டிருந்த ஸ்பூனும் கையுமாக அவள் கும்பிட்டாள்போல இருக்கிறது. உடையில் சிதறிக் கரைப்படுத்திய ஜீராவைத் தட்டிக்கொண்டு பதிலுக்கு "நமஸ்தே!" என்றேன்.

அடுத்த நிமிஷம் நான் வேலையைக் கவனிக்கத் துவங்கினேன். ஆனால், அடிக்கொரு தரம் அவளைப் பார்ப்பதை என்னால் தடுக்க முடியவில்லை."

"நானும் உங்களைப்போலத் தான்" வலுவிலே மறுபடியும் பேசினாள் அவள்.

"ஏன்! உங்களுக்கும் கூட ஐந்நூறு ரூபாய் பரிசு கிடைத்திருக்கிறதோ!"

"எழுத்திலேதான் என்று பார்த்தேன். பேச்சிலே கூட கெட்டிக்காரராக இருக்கிறீர்களே!" என்று 'கலகல'வென்று சிரித்துவிட்டு "பரிசு பெற்ற விஷயத்தில் உங்களைப்போல என்று சொன்னேனா?" என்று கேட்டுக் கண் சிமிட்டினாள்.

"பின்னே எதில் என்னைப் போல என்கிறீர்கள்?"

"நானும் எழுதுவேன்! இது வரை இருநூறு கதைகள் எழுதியிருக்கிறேன்."

"அப்படியா? எந்தப் பெயரில் எழுதுகிறீர்களோ?"

"சொந்தப் பெயரில்தான். ஆனால் என் பெயரை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். என் கதை எதுவும் பத்திரிகையில் வந்ததில்லை" என்றாள் அவள்.

எனக்குச் சப்பென்று போயிற்று.

வெறும் நீர்க் குமிழிதானா?

"ஏன்! பத்திரிகையில் வெளிவந்தால்தானா என்ன? இல்லை என்றால் எழுத்தாளராக ஆகமுடியாதா?"

"ஆனால் சாப்பிட ஆளே இல்லாமல் சமைத்து வைப்பதில் என்ன பலன்?" என்றேன் நான்.

இதற்குள், அரங்கத்தில் நான் முதல் வரிசையில் உட்காரவேண்டும் என்பதற்காக என்னைச் சிலர் கூட்டிச் சென்றனர். அவளிடமிருந்து விடுதலை கிடைத்ததே என்று எனக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சியாகவும், மற்றொரு பக்கம் அவள் அழகிய முகத்தைப் பார்க்க முடியாதே என்று ஏக்கமாகவும் இருந்தது.

• • •

எல்லாம் முடிந்து நான் வெளியில் வந்தபோது என் கையில் பரிசாகக் கிடைத்த ஐந்து நூறு ரூபாய் நோட்டுகளும் இருந்தன. அதைப் பைக்குள் பத்திரப்படுத்திக்கொண்டு வழியில் குறுக்கிட்ட ஒவ்வொருவரிடமும் விடை பெற்றுக்கொண்டு பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தேன்.

"ஒருவேளை அங்கேயே தங்கிவிடுவீர்களோ என்று பார்த்தேன். உங்கள் வீட்டில் ஒருத்தரும் காத்துக்கொண்டு இருக்க மாட்டார்கள் போல இருக்கிறது?

"அடே! உங்களுக்கு இன்னமும் பஸ் கிடைக்கவில்லையா? பஸ் விஷயம் எல்லாம் ரொம்பவும் மோசமாகிக்கொண்டே போகிறது. கேழ்ப்பாரே இல்லை. – – –"

அவள் குறுக்கிட்டாள். "சே, சே! அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. பார்க்கப்போனால் இதுவரை பத்துப் பஸ்கள் போய்விட்டன. ஆனால் நான் உங்களுக்காக அல்லவா காத்திருந்தேன்!"

"நீங்கள் எங்கே போகவேண்டும்?"

"நீங்கள்!"

"நான் மாம்பலம்!"

"நான் மயிலாப்பூர்!!"

"சரி, இரண்டு பேருக்கும் வேறு வேறு வழி. நான் வரட்டுமா?"

விடை பெற்றுக்கொள்வதே போலக் கைகளைக் கூப்பினேன்.

அவள் விறைத்துப் பார்த்தாள். "அட என் பையில் உள்ள பர்ஸை அல்லவா அவள் முறைக்கிறாள்!"

மயிலாப்பூர் பஸ் வந்தது. "நீங்கள் கட்டாயம் என்னோடு வரத்தான் வேண்டும். நான் கொடுக்கும் 'டீ'யைக் குடித்துவிட்டு, கொஞ்ச நேரம் தமாஷாகப் பேசிக்கொண்டு இருப்போம். பிறகு போய்க்கொள்ளுங்கள்" என்றாள் அவள்.

அவள் முகம் மறைந்து அத்தையின் முகம் தென்பட்டது. "டேய்! ஏமாறாதேடா! பட்டணத்து மோஹினிஅவள்!"

"என்னை மன்னியுங்கள். அவசரமாக வீட்டுக்குப் போகவேண்டும்!"

அவள் அழத்துவங்கினாள். "தூ! நீங்களும் ஒரு எழுத்தாளர். உங்களுக்கும் ஒரு பரிசு. ஒரு பெண்ணின் வேண்டுகோளுக்குக் காது கொடுக்காத உங்கள் எழுத்தினால் யாருக்கு என்ன லாபம்?"

அடுத்த பஸ் வந்தபோது நான் அதில் ஏறிக்கொண்டேன். அவளும் ஏறினாள். அது மாம்பலம் பஸ் அல்ல! மயிலாப்பூர் பஸ்!"

• • •

டீ தயாராயிற்று. அவள் எழுதிய கதைகளைப்போலத்தான் இருந்தது. அவள் தயாரித்த "டீ"யும். அதை வாயில் வைக்க முடியவில்லை.

அவள் வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். அவளைத் தவிர யாரோ இருப்பதைப்போலவும் இருந்தது; யாரும் இல்லைபோலவும் இருந்தது.

கைக் கடிகாரம் எட்டு மணியைக் காட்டிற்று. "நான் சமைத்து விடட்டுமா? சாப்பிட்டுவிட்டு ஏதாவது சினிமாவுக்குப் போவோம். சாவகாசமாக வீட்டுக்குப் போகலாமே!"

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் சமையலைச் சாப்பிடுவதாமே!" அதெல்லாம் வேண்டாம் சாயந்திரம் சாப்பிட்ட பண்டங்கள் எல்லாம் வயிற்றைக் குழப்புகிறது. மேலும் வீட்டில் அத்தை காத்துக்கொண்டிருப்பாள். நான் வரட்டுமா?"

அவள் சிணுங்கினாள். "நல்ல ஆளையா நீர். வெறுமனே வரட்டுமா வரட்டுமா என்கிறீரே, உங்கள் நெஞ்சை எங்கேயாவது வைத்து விட்டீரா என்ன?"

பெண்ணுக்கு அடங்காதவன் யார்? அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஈடு கொடுத்துக்கொண்டு நான் அங்கேயே தங்கிவிட்டேன். என் வாய்மட்டும் சற்றைக்கொரு முறை அத்தை, அத்தையென்று உளறிக்கொண்டிருந்தது.

மணி ஒன்று இருக்கும்.

தூக்கமே வராமல் புரண்டு புரண்டு படுத்தேன். அவள் அடிக்கடி தலையைத் தூக்கி நான் தூங்கிவிட்டேனா என்று நோட்டம் விட்டாள். இதற்குப் பிறகும் தூங்க எனக்குப் பைத்தியமா என்ன? இருந்தாலும் அவள் என்னதான் செய்கிறாளோ பார்ப்போமே என்ற ஆசையோடு தூங்குவதைப்போலப் பாவனை செய்தேன்.

இரண்டொரு நிமிஷங்களுக்குள் அவள் என் 'ஷெர்வானி'யின் ஜேபியில் கையை விட்டாள். குருவியைக் குறி பார்த்துச் சுடும் வேடனைப்போல அவள் கை குறிப்பாக ஐந்து நோட்டுகளையும் தொட்டது. அடுத்த நிமிடம் அதைக் கொண்டு சென்று மேஜையில் வைத்திருந்த காகிதப் பூ வைக்கும் தொட்டியில் அதை அடக்கம் செய்தாள்.

மணி இரண்டு. நான் படுக்கையை விட்டு எழுந்தேன். அவள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். பூத் தொட்டியிடம் சென்று அவள் செய்ததுபோலவே, குப்பியினின்றும் காகிதப் பூக்கொத்தை அகற்றி அகப்பட்ட நோட்டுகளை எல்லாம் எடுத்தேன். மறுபடி பூவைக் குப்பிக்குள் பொருத்திவிட்டு பணத்தை 'ஷெர்வாணி'யின் ஜேபிக்குள் திணித்து நிம்மதியாகத் தூங்கினேன்.

காலையில் எழுந்ததும் மறுபடியும் அவள் போட்ட 'டீ'யைக் குடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவள் விட்டால் போதும் என்ற நோக்கத்தோடு அதைக் குடித்து வைத்தேன்.

"வரட்டுமா?"

"ஆகா! போய் வாருங்கள்! அடிக்கடி வந்து போங்கள்" என்றாள் அவள்.

"ஆகா வருகிறேன்" என்றேன். "ஆனால் இனி எப்போதாவது இங்கு வந்தால் என்னிடம் ஐந்நூறு ரூபாய்கள் இருக்காதே!" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டேன்.

அத்தை என்னைக் கோபித்துக்கொண்டாள். "ஏண்டா! பழி! எங்கேடா போயிருந்தாய். ராத்திரி பூராவும் வராமல் இருந்துவிட்டாயே!"

"கொண்டாட்டம் எல்லாம் முடிய ராத்திரி இரண்டு மணி ஆகிவிட்டது. பிறகு பஸ் கிடைக்கவில்லை. அங்கேயே தூங்கிவிட்டு வந்தேன்" என்று மனமறிந்து ஒரு பொய்யைச் சொன்னேன்.

பாங்கியில் கட்டலாம் என்று பாக்கெட்டில் கையை விட்டுப் பணத்தை வெளியே எடுத்தபோது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என் கையில் இருக்கவேண்டிய ஐந்நூறு ரூபாய்களுக்குப் பதில் இப்போது எழுநூறு ரூபாய்கள் இருந்தன!"

நான் நடந்ததைப் புரிந்துகொண்டேன். அந்தப் பட்டணத்து மோகினி பாவம் அந்தக் குப்பியில் ஏற்கனவே அவள் ஏதோ பணத்தைப் போட்டு வைத்திருக்கிறாள். அதோடு கூட என்னிடம் இருந்து திருடிய ஐந்நூறையும் வைக்கவே, நான் அதை எடுத்த வேகத்தில் அவள் பணத்தையும் எடுத்து விட்டேன்!"

"அத்தை! அத்தை!! பரிசு ஐந்நூறு இல்லை எழுநூறு" என்று கத்தினேன்.

• • •

உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டி இருந்தது. "என்னடா அத்தை, அத்தை என்று கத்துகிறாய்? என்னவோ என்றைக்கும் இல்லாத திருநாளாக எட்டு மணி வரைக்கும் தூங்குகிறாயே! அசதியாக இருக்கிறதோ என்னவோ என்று பார்த்தால் பகற் கனவு காண்கிறாயோ? ஐந்நூறும் எழுநூறும்" என்று கடிந்துகொண்டே என் அத்தை என்னை எழுப்பிக்கொண்டிருந்தாள்.

சுவரில் மாட்டியிருந்த காலண்டரில் என் கண்களை ஓட்டினேன்.

தேதி பதினேழு!

"இவ்வளவு நேரம் கண்டது பூராவும் கனவுதானா? பார்க்கப்போனால் 'பரிசளிப்பு விழா'வே இனிமேல்தான் நடக்கவிருக்கிறது. பட்டணத்து மோகினியைப் பற்றிய நினைப்பில் என்னவெல்லாம் கனவு கண்டுவிட்டேன்!

அன்றைக்குச் சாயந்திரம் விழாவுக்குக் கிளம்பியபோது பட்டணத்து மோகினியைச் சந்திக்கத் தயாராக இருந்தேன். ஆனால் அவள் கொண்டாட்டத்துக்கு வரவே இல்லை.

கையிலே ஐந்நூறு ரூபாய்களையும் தயாராக வைத்துக்கொண்டு அவளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். டீயும் கொடுத்து உபசாரமும் செய்து இருநூறு ரூபாய்களை இந்தக் காலத்தில் யார் தருவார்கள். ஆனால் அவளைத் தான் பார்க்கவே முடியவில்லையே.

பகவானின் பொறுப்பு

எஸ்.டி.வீரராகவன்.பி.ஏ ஹானர்ஸ்

ஜானகியம்மாள் சொல்லுகிறாள்:

பெண்ணைப் பெற்றவர்களுக்கு என்னிக்குமே நிம்மதி கிடையாது. அந்தமட்டும் நம்ம ராஜியின் அகத்துக்காரர் தங்கமானவரா இருக்காரேன்னு சந்தோஷப்பட்டுண்டிருந்தா இவருக்கு இருந்தாப்பலேயிருந்து உத்தியோகம் கல்கத்தாவுக்கா மாறணும்! அது என்ன, நினைத்தால் போய்ப் பார்க்கக்கூடிய ஊரா! ரயில் சார்ஜ் கொடுக்கிற பணத்திலே பெண்ணுக்குத் தங்க வளையலே வாங்கிப் போட்டுடலாம் போல இருக்கே. போன வருஷம் தலை தீபாவளிக்கு வந்தவர் மறுபடியும் இந்தப் பக்கம் தலைகாட்டவேயில்லையே. தீபாவளிக்குத்தான் வரமுடியலேன்னா பொங்கலுக்காவது வாராரோ இல்லையோ தெரியலையே. நம்ம மாப்பிள்ளைக்குன்னு இப்படிப்பட்ட ஆபீஸ் வாய்க்கணுமா. இந்த நடுவிலே ராஜி வேறே குளிக்காமே இருந்துண்டிருக்காம். பெண்ணைப் பார்க்கணும்னு பெத்த மனம் தவியாய்த் தவிக்கிறதே. இந்தத் தடவையாவது அவாள்ளாம் வந்தால் எவ்வளவோ நன்னாயிருக்கும். இன்னும் நாலு நாள்தான் இருக்கு பொங்கலுக்கு ஒன்னும் தகவல் தெரியவேயில்லையே. அந்தப் பாழாய்ப்போன தெய்வம் என்ன நெனச்சுண்டிருக்கோ..சரி.. வெறுமனே நின்னிண்டிருக்கறதில் என்ன உபயோகம். அவாள் வரபட்சத்தில் தலைக்கு மேலே வேலை இருக்கே. புடவை வேஷ்டிகள் வாங்கி, என்னென்ன பட்சணங்கள் செய்யறது என்னு திட்டம் போட்டு ...இத்தனைக்கும் இந்தப் பிராமணன் வேறே ஒத்து வரணும். அப்பப்பா...பெண்ணைப் பெத்தவாளுக்கு..

ஸ்ரீநிவாஸய்யங்கார் சொல்லுகிறார்:

சேச்சே, ஒரு மாமனாராயிருக்கிறதை விட பைத்தியக்கார ஆஸ்பத்திரி மானேஜராகவோ அசெம்பிளி ஸ்பீக்கராகவோகூட இருக்கலாம் போலிருக்கே. மாப்பிள்ளைன்னு ஒத்தர் வந்துட்டதும் நமக்கு என்னவெல்லாம் பொறுப்பு வந்துடறது! அந்தமட்டும் நம்ம கோபாலன் தங்கமான பிள்ளை. அதுதான் இந்த பகவானுக்குப் பொறுக்கல்லே. அவரை தூர தேசத்துக்கு மாற்றியிருக்கிறது. தலைதீபாவளிக்கப்புறம் இந்தப் பக்கம் வரவேயில்லையே. அந்தப் பெண் புது இடத்திலே எப்படி இருந்துண்டிருக்கோ! இந்தத் தடவைகூட வறது சந்தேகம்னுன்னு எழுதியிருக்கார். இவருக்கென்று [illegible]ங்கிருந்தோ

ஒரு பொல்லாத மானேஜர் வந்து வாய்க்கணுமா. அந்தப் பாபிக்கு இவர் மேலே ஏதோ விரோதமாம். ஒரு தடவைகூட லீவ் 'ஸாங்ஷன்' பண்ணும் படாதபாடு படுத்தறானாமே. இந்த மாதிரி பேர்வழிகளுக்குத்தான் இந்த தெய்வம் ஓசந்த வேலையைக் கொடுக்கிறது. ஒருவேளை இந்த தீபாவளிக்கும் 'ரிஸ்ட் வாச்' வாங்கி அனுப்பலேன்னு மாப்பிள்ளைக்குக் கோவமாயிருக்குமோ? சரி.. நாம் இப்படி நின்னுண்டிருக்கிறதைப் பார்த்தால் இவளுக்குப் பொறுக்காது. அது வாங்கியாச்சா, இது வாங்கியாச்சான்னு அதிகாரம் பண்ண வந்துடுவா. அதோ உள்ளேயிருந்து வராப்பலே தெரியறதே. புடவையை வீசிண்டு வறதைப் பார்த்தால் நமக்குக் கால் வெலவெலத்துப் போகிறதே. மாப்பிள்ளை வராததுக்கு நான்தான் காரணம்னுகூட சொல்லுவாளே... சேசே, இவளை சமாளிக்கிறதை விட நாலு மாப்பிள்ளைகளைக்கூட...சரி, நாம் வெளியே நழுவி விடுவோம்...

மானேஜர் சொல்லுகிறார்:

வரவர இந்தப் பயல் கோபாலுக்கு ஆபீஸில் ஹோதாவும் மதிப்பும் அதிகமாகிக்கொண்டே வறதே. வெறும் 'ஸ்டெனோ'வாக வந்து சேர்ந்தவன் அஸிஸ்டெண்டாக ஆகி, இப்போ அஸிஸ்டெண்ட் மானேஜரான்னு ஆகப் போறான்! இந்த ரீதியிலே நமக்கே ஆபத்து வந்துடுமே. மானேஜிங் டைரக்டருக்கு இவனிண்டே அலாதி மதிப்பு ஏற்பட்டுவிட்டதே. அன்னிக்குக்கூட எல்லா டைரக்டர்கள் எதிரிலும் இவன் எழுதியிருக்கிற 'டூர்

ரிபோர்ட்' என்னுடையதை விட நன்றாக 'இருக்குன்னு சொன்னாரே! மடையன்கள், இவன்களுக்கெல்லாம் என்ன தெரியும்? நேற்று வந்து முளைத்தவன் எனக்கு மேலே போறதா! இதை ஒரு நாளும் நான் அனுமதிக்கப் போகிறதில்லை. அந்தப் பயலுக்குச் சரியானபடி தண்டனை கொடுக்க வேண்டும். அப்போதான் அவன் கொட்டம் அடங்கும். ஏற்கனவே ஒன்றரை வருஷமாக மாமனார் வீட்டுக்குப் போக இவனுக்கு லீவே கொடுக்காம சரியானபடி பழிவாங்கியிருக்கேன். இந்தத் தடவையாவது பொங்கலுக்குச் சென்னைக்குப் போக வேண்டும்னு கெஞ்சிண்டிருக்கான். நம்மிடம் இதெல்லாம் நடக்காது. நான் உடனே ஒரு 'டூரு'க்குப் போகவேண்டுமென்று சொல்லி இவனை ஆபீஸைப் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னால் என்ன செய்யப் போகிறான். நாளை இரவே நான்புறப்படப்போகிறேன். அதற்கப்புறம் இவன் எப்படியும் போக முடியாது.

தவிர இவனைப்பற்றி கேவலமான அபிப்பிராயம் உண்டாகும்படி ஒரு மொட்டைக் கடிதத்தையும் [illegible] போர்டுக்கு எழுதிப் போட்டு[illegible] போகிறேன். அப்புறம் இவனுக்கு வேலை போகிறதா, 'ப்ரமோஷன்' கிடைக்கிறதா என்று பார்க்கிறேன்!

கோபாலன் சொல்லுகிறான்:

ஐயையோ! இந்தப் பாபி மானேஜர் சாயங்காலம் வரை விஷயத்தைச் சொல்லாமலிருந்து இரவு மெயிலில் நான் ஊருக்குப் போகணும்னு 'ப்ளான்' போட்டிருக்கும்போது 'லாஸ்ட் மினிட்'டில் லீவு இல்லை என்று சொல்லிவிட்டானே! இவனுக்குத்தான் ஆபீஸ் விஷயத்தில் கர்மசிரத்தை இருக்கிறமாதிரி 'அர்ஜெண்டா'க டூர் போகவேண்டுமென்று குதிக்கிறானே. சே, என்ன ஆபீஸ் வேண்டியிருக்கு! திறமை வாய்ந்தவன் முன்னுக்கு வரமுடியாதபடி எவனோ ஒரு சதிகாரன் முளைத்துவிடுகிறான். எனக்கு மட்டும் தெரியும், அன்று டைரக்டர் இந்த மானேஜருக்கு எதிரிலேயே என்னைப் புகழும் போதே, இவன் லீவு கொடுக்காமல் சதி பண்ணுவான் என்று. நல்லவனுக்கு இது காலமில்லை. என் நண்பர்கள் என்னமோ நான் நாஸ்திகன் என்று கேலி பண்ணுகிறார்களே! தவிர பகவானை நம்பியவர்கள் எவ்வளவுதூரம் முன்னுக்கு வந்துவிட்டார்கள்? கடவுளாவது, ரிலிஜனாவது எல்லாம் நான்ஸென்ஸ்!

ராஜி சொல்லுகிறாள்:

கடைசியில் இந்தத் தெய்வம் இப்படிச் சதி பண்ணிவிட்டதே! இத்தனை வருஷங்கள் கழித்து இப்பவாவது ஊருக்குப் போய் அப்பா அம்மாவைப் பார்க்கலாம்னு நான் சந்தோஷப்பட்டுண்டிருந்தா, அந்தப் பாவி மானேஜர் லீவு கொடுக்க முடியாதுன்னு சொல்லிட்டானாமே! ஏன் தான் இப்படிப்பட்ட ஒரு பாவியை இந்தப் பாழாய்ப் போன பகவான் படைத்தானோ! 'நீ வேண்டுமானால் போய்விட்டு வா' என்று சொல்றாரே இவர். இவாள் இல்லாமல் நான் மட்டும் எப்படிப் போவேனும். எனக்குப் பிடிக்கவேயில்லை. நான் கட்டாயம் போகப்போறதில்லே. கடைசியில் இந்தத் தடவையும் இங்கேயேதான் பொங்கல்... தூ, என்ன வேண்டிக் கிடக்கு!

ராஜியின் அப்பாவும் அம்மாவும் சொல்லுகிறார்கள்:

நாளைக்குக் காலம்பர மெயிலில் இவாள்ளாம் வரப்போறான்னு நாம் எதிர்பார்த்துண்டிருந்த கடைசியிலே லீவு கிடைக்கலேன்னு ஏர்மெயில் லெட்டர் வந்திருக்கே, இந்த தெய்வத்துக்குக் கொஞ்சமாவது ஈவிரக்கம் இருக்கா! சே...கடவுள் பக்தியிருக்கறவாளுக்குத்தான் மேலும் மேலும் சோதனை. நாம் என்னவெல்லாம் 'ப்ளான்' போட்டுண்டிருந்தோம்...தெய்வம் இப்படி சதி பண்ணிடுத்தே!

பகவான் சொல்லுகிறார்:

இந்த மனிதர்கள் சிறிதும் நன்றியில்லாதவர்கள். பாலூட்டும் கையைக் கடிக்கின்ற குழந்தையாவது அறியாமையினால் அவ்வாறு செய்கிறது. ஆறாவது அறிவை இவனுக்குத் தந்தும்

என்ன உபயோகம்! யாரைப் பார்த்தாலும் தங்களாலேதான்

எல்லாம் நடப்பதாக எண்ணிக்கொண்டு இதைச் செய்யவேண்டும் அதைச் செய்யவேண்டும் என்றெல்லாம் திட்டம் போடுகிறார்களே தவிர நான் என்று ஒருவன் இருப்பதாகவோ இவர்களுடைய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதோ, மாற்றுவதோ என் செயல் என்றோ நினைப்பதாகக் காணுமே! நமக்குக் கிடைப்பதெல்லாம் திட்டும் வசைமாரியும்தான்!

ஊருக்குப் போக முடியவில்லையே என்று மாப்பிள்ளையும் பெண்ணும், அவர்கள் வரவில்லையே என்று அப்பாவும் அம்மாவும்—ஆக எல்லாருமாக என்னையல்லவா நிந்திக்கிறார்கள்? இதன் நடுவில் இந்த மானேஜர், தான் உலகத்துக்கே மானேஜர் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான் போலிருக்கு! இவன் பண்ணும் அட்டகாசம் எனக்கு இரண்யனையும் ராவணனையுமல்லவா நினைவூட்டுகிறது. இவனும் நம்முடைய குழந்தைகளில் ஒன்று!

இவர்களெல்லாம் இப்படி இருக்கிறார்களே என்பதற்காக நான் என் கடமையைச் செய்யாமல் இருந்துவிட முடிகிறதா? அசடுகள் நாளைக்குக் காலையில் பேப்பரைப் பார்த்தால் எல்லோருமே நடுங்கிப்போய் 'தப்பினுமே' என்று நினைப்பார்கள். இந்த மாப்பிள்ளை போவதாக இருந்த கல்கத்தா மெயில் பாதி வழியில் கவிழ்ந்துவிடப் போகிறதே! அதிலல்லவா அந்த மானேஜர் மாட்டிக்கொண்டு காயப்படப் போகிறான்! (போகட்டும், அவனைக் கொல்லப் போவதில்லை!) எந்த ஆசாமி கோபாலன் மீது பழிவாங்க நினைத்து 'லீவு இல்லை' என்று தடை யுத்தரவு போட்டானே, அந்தத் தடை உத்தரவினாலேயே கோபாலனை—என்னை நான்ஸென்ஸ் என்று சொன்ன கோபாலனை—அகால மரணத்திலிருந்து தப்பும்படி செய்யப்போகிறேன்.

அந்த மொட்டைக் கடிதமும் மானேஜர் நினைத்தபடி வேலை செய்யப்போவதில்லை. அந்த ஆத்திரக்காரன் அன்று அவசரத்தில் தன்னுடைய 'லெட்டர் ஹெட்' பேப்பரில் அந்த மொட்டைக் கடிதத்தை எழுதும்போது அந்தப் பேப்பர்களின் மேல் பாகத்தைக் கத்தரித்தானே தவிர, கத்தரிக்கப்பட்ட அந்த நான்கு துண்டுகளும் டேபிள் நுனியில் ஒட்டிக்கொண்டிருந்ததை கவனிக்கவேயில்லையே. இது அந்த மானேஜிங் டைரக்டரின் கண்ணில் படும்படி செய்யப்போகிறேன். அப்புறம் அவனுக்கல்லவா வேலை போய் கோபாலனுக்கு மானேஜர் பதவி கிடைக்கப் போகிறது!

இவ்வளவெல்லாம் செய்தேனே என்பதற்காக இந்த மனிதர்கள் என்னிடம் நன்றிகாட்டப் போகிறார்களா என்ன? அப்படி நான் எதிர்பார்த்தால் இத்தனை அவதாரங்கள்— எத்தனை என்று மறந்துவிட்டதே!—எடுத்தும் இந்த மனிதர்களைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றல்லவா அர்த்தம்! ஆகவே, இவ்வளவெல்லாம் நடந்த பிறகும் இவர்களெல்லோரும் 'நா அப்பவே சொன்னேன்! எனக்கு மட்டும் தெரியும்' என்கிற ரீதியில் பேசினால் கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவர்களையெல்லாம் ரக்ஷிக்கவேண்டிய பொறுப்பு நமக்கு வாய்த்திருக்கிறதே; என்ன செய்வது!

பிரஜா ஸோஷலிஸ்ட் கட்சி தேசிய நிர்வாக கமிட்டியின் பிரதான மெம்பர்களைப் படத்தில் காணலாம்.

நழுவிய நக்ஷத்திரம்

'ழகே'

மாலை சுமார் ஆறுமணி இருக்கலாம். அன்று 'தங்கபவன்' காப்பி ஹோட்டலில் காப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்த முனிசாமியின் மனம் இருவிதத்தில் பூரிப்படைந்திருந்தது. ஒன்று, அச்சமயம் அவன் ருசியுடன் ரஸித்து அருந்திக் கொண்டிருந்த காப்பி அவனுடைய மனதிற்கு ஏற்றதுபோல் 'ஸ்ட்ராங்காக' அமைந்திருந்தது; இரண்டாவது அன்று மாலை முனிசாமிக்கு ஓர் கொழுத்த வேட்டை சிக்கியிருந்தது.

காப்பியில் பாதியைக் குடித்த பின் முனிசாமி அகஸ்மாத்தாக தன் பார்வையை தனக்குப் பின்புறம் செலுத்தினன். பின்புறம் சுமார் இருபது அடிக்கு அப்பால் ஓர் மூலையில் தன்போல் காப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்த ஓர் நவீன உடை அணிந்த கனவான் தன்னையே உற்று கவனிப்பதை முனிசாமி அறிந்தான். முதலில் ஏதோ சாதாரணமாகவே அக்கனவான் தன்னை பார்க்கிறார் என நினைத்தான். ஆனால் இரண்டு மூன்று முறைகள், தான் திரும்பி நோக்கும் சமயங்களிலும் அக்கனவான் தன்னையே விழுங்கிவிடுவதுபோல் முறைத்துப் பார்ப்பது முனிசாமிக்குச் சற்று பீதியை உண்டாக்கியது. பொதுவாகவே தன்னை யாரும் தனிப்பட்ட முறையில் உற்று கவனிப்பதை முனிசாமி விரும்புவதில்லை. ஏனெனில் அவன் ஓர் பக்கா முடிச்சுமாறி; ஜேப் அடிப்பேர்வழி நெ. 1. சற்றுமுன்புதான் கடைத் தெருவிலுள்ள ஜவுளிக் கடையொன்றில் கூட்டம் நெருக்கடியாக இருந்த சமயம் ஓர் காலேஜ் மாணவனின் மணிபர்ஸை கால் நிமிஷத்தில் தனக்குச் சொந்தமாக்கி வைத்திருந்தான். மணி பர்ஸில் இருபத்து ஒரு ரூபாய் நோட்டுகளும் சில்லரையும் இருந்தன. இக்கொழுத்த வேட்டையே முனிசாமியை ஹோட்டலுக்கு இழுத்துச் சென்றது எனக்கூறத் தேவையில்லை. ஆனால் அந்நவீன உடை கனவான் தன்னையே இவ்விதம் கவனிக்க முற்பட்டது முனிசாமியின் பூரித்த மனதை மிக்கப் புண்படுத்த ஆரம்பித்தது. ஒருவேளை ஜவுளிக் கடையில் தான் ஜேப் அடித்த சமயம் அக்கனவானும் அங்கிருந்து தன்னை நோக்கியபின் தன்னைப் பின் தொடர்ந்து 'தங்கபவன்' வந்திருக்கலாம்! அல்லது அவர் ஓர் ரகஸிய போலீஸ் சிப்பந்தியாக இருந்து தன்னைக் கையும் களவுமாக ஹோட்டலில் பிடிக்கவும் வந்திருக்கலாமன்றோ!

இவ்விதம் நினைக்க நினைக்க முனிசாமியின் ஏக்கம் உச்ச நிலையை அடைந்தது. 'மளுக்' கென ஒரே வாயில் மிகுதிக் காப்பியைக் குடித்து முடித்து ஓர் நிமிடம் அக்கம் பக்கம் பார்த்து யாரும் தன்னை கவனிக்காத சமயம் களவாடிய அம்மணிபர்ஸை அருகேயிருந்த ஹோட்டல் பூத்தொட்டி ஒன்றில் நாஜுக்காக நழுவவிட்டான். ஆகவே 'தங்கபவன்' ஹோட்டல் பூத்தொட்டிக்கு அர்ப்பணமாகியது அந்த மணிபர்ஸ்!

மணிபர்ஸை பூத்தொட்டியில் நழுவவிட்டபின் தானும் ஹோட்டலைவிட்டு அக்கணமே நழுவ வேண்டியதுதான் என நிச்சயித்த முனிசாமி ஆசனத்தை விட்டு எழுந்தான். இறுதியாக கனவான் பக்கம் ஒருமுறை திரும்பிப்பார்த்தான். என்ன விபரீதம்! தான் எழுந்தது போல் அவரும் அப்பொழுதுதான் ஆசனத்தைவிட்டு எழுந்திருந்ததைக்கண்ட முனிசாமி வெருண்டே போனன் மறுக்கணம் தன் அருகே இருந்த ஹோட்டல் மானேஜரிடம் காப்பியின் [illegible] கடாசிவிட்டு [illegible] மறைந்தான் நெருக்கும்பலில்!

முனிசாமி பில்லைச் செலுத்திய மறு நிமிடம் பரபரப்புடன் மானேஜரிடம் நடந்து சென்றார் அந்நவீன உடை கனவான். 'சார்! சற்றுமுன் எளிய உடை அணிந்த ஓர் பரட்டைத்தலை ஆசாமி உம்மிடம் பில் செலுத்திச் சென்றானே! அறிவீரா அவனை?' என்று வினவினார் கனவான்.

'சற்று முன்பா? ஆம், யாரோ ஊர்சுற்றிபோல் தோன்றிய ஓர் ஆள் அவசர அவசரமாக சில்லரையைக் கடாசிவிட்டு தெருவில் மறைந்துவிட்டான். அவனை நான் எப்படி சார் அறிவேன்?' என்றார் ஹோட்டல் மானேஜர்.

இப்பதிலைக் கேட்டதும் ஏதோ பறி கொடுத்தவர் போல் முகத்தைச் சுளித்தார் கனவான். இதைக் கவனித்த ஹோட்டல் மானேஜர், 'சார், மன்னிக்கவும். அந்த ஊர் சுற்றிப் பேர்வழியைப் பற்றி ஏன் உமக்கு அவ்வளவு அக்கரை?' என்று வினவினார்.

'அக்கரையில்லாமலா அவனை நாடினேன்! நான்தான் இவ்வூரில் புதிதாக ஏற்படுத்தியுள்ள 'பூமாலை' பிலிம் கம்பெனியின் டைரக்டர். தற்சமயம் நாங்கள் பிடிக்கப்போகும் ஓர் சமூகப் படத்திற்குத் தேவையான நடிகர்களைப் பொறுக்கி எடுக்கும் பொறுப்பை எனக்கே விட்டிருக்கிறார்கள். இப்படத்தில் பழைய சலித்துப்போன நடிகர்களுக்கு இடமில்லை. புது முகங்களே நான் நாடுவது. இப்படத்திலுள்ள ஓர் முக்கிய பாத்திரத்திற்கு நன்றாகப் பொருந்துவான் என்றே சற்றுமுன் நழுவிய ஊர் சுற்றி ஆசாமியைப் பின் தொடர்ந்தேன். அவனைச் சந்தித்துப் பேசி படத்திற்கு ஒப்பந்தம் செய்ய நினைத்தேன். ஆனால் ஏனோ என்னைக்கண்டு பயந்தோடிவிட்டான் அத்துர்ப்பாக்கியன்! அவன் பூனைபோன்ற தந்திரப்பார்வை, சாரைப் பாம்பு நெளிவது போன்ற நடை, தரித்திர நாராயணனையும் பழிக்கும் உடை இவைகளே என்னைக் கவர்ந்தன. பாவம்! ஒரு நிமிஷத்தில் அவன் நக்ஷத்திரமாயிருக்கலாம் வீணுனது அவன் இயற்கை அம்சங்கள்!' என்று பெரு மூச்சுடன் சொல்லி முடித்தார். அந்த

14244

நவீன உடை கனவான்.

இதைக்கேட்டு பிரமித்துப் போன ஹோட்டல் மானேஜர், 'என்ன சார் இது! ஓர் பாட்டைத் தலை ஊர் சுற்றிப் பேர்வழி ஒரே நிமிஷத்தில் சினிமா நக்ஷத்திரம் ஆகியிருக்கலாம் என்கிறீர்! நீர் பிடிக்கப்போகும் படந்தான் என்ன? அதில் இந்த ஊர் சுற்றிக்கு என்ன ஆக்ட்டைத்தான் கொடுக்க உத்தேசித்து இருந்தீர் என்று வியப்புடன் கேட்டார்.

'நான் பிடிக்கும் படம் 'கலியுகக் கள்வன்' என்பது. அதில் இந்த ஊர்சுற்றி ஆசாமிக்கு கொடுக்கவிருந்தது ஓர் முடிச்சு மாறி ஆக்ட்டு!' என்று வந்தது பதில்!



மத்தியான வேளையில் வெப்பம் தாங்காமல் சற்று கண் அயர்ந்தேன். அப்பொழுது தான் ஆபீஸ் பையன் கதவைத்தட்டி ஒரு சீட்டைக்கொடுத்து விட்டுப்போனான். அடபாவமே! என் கணவர் அவரது மேலதிகாரியை சாப்பாட்டிற்கு அழைத்து வருகிறாராம்! அவர்கள் சாப்பிடவர சரியாக மூன்று மணி நேரம் தானிருந்தது. விருந்தளிப்பதென்றால் ஏதாவது பிரத்தியேகத் தின்பண்டம் தயாரிக்க வேண்டாமா? நான் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தேன்.

அச்சமயம் தபால்காரன் ஒரு பெரிய கவரை என்னிடம் கொடுத்துவிட்டுப் போனான். அதனுள் புத்தம் புதிய டால்டா சமையல் புத்தகம் காட்சி அளித்தது. சமய சஞ்சீவி போல் அப்புத்தகத்தில் சீக்கிரமே தயாரிக்க முடிகிற பிரத்தியேகத் தின்பண்டங்களின் செய்முறைக் குறிப்புகள் பல இருந்தன. என் சந்தோஷத்தை என்ன வென்று சொல்வேன். உடனே சமையலறைக்குச் சென்று டால்டா வனஸ்பதி உபயோகித்து அவசர அவசரமாக தின்பண்டங்களைத் தயாரித்தேன்.

நான் பட்ட சிரமத்திற்கு சரிய பலன் கிடைத்தது. சாப்பிடும்போது என் கணவரின் முகம் பெருமையால் பூரித்தது. அந்த மேலதிகாரி என் சமையலை புகழ்ந்துபேசினதை நீங்கள் கேட்டிருக்கவேண்டும். டால்டா வனஸ்பதி தின்பண்டங்களின் இயற்கையான ருசியை வெளிக்கொண்டுவருகிறது. அன்றாடம் செய்யும் தின்பண்டங்களை இதில் தயாரித்து எவ்வளவு ருசியாயிருக்கிறதென்று பாருங்கள். பொரித்தல், தாளித்தல், தித்திப்புப்பண்டம் தயாரித்தல் இவைபோன்ற எல்லா சமையல்வேலைகளுக்கும் டால்டா வனஸ்பதி பயன்படுகிறது. மேலும் டால்டா வனஸ்பதியில் இப்பொழுது விடமின் 'ஏ' 'டி' இருக்கிறது.

கடையில் சில்லறையாக விற்கப்படும் தாவரக் கொழுப்பை வாங்குவது அபாயகரமானது. ஏனென்றால் மிகவும் விலையுயர்ந்த கொழுப்பும் கலப்படம் செய்யப்பட்டதாக இருக்கலாம். மேலும் எப்பொழுதுமே திறந்து வைத்திருப்பதால் அசிங்கமானதாகவும் ஈ மொய்த்ததாகவும் இருக்கலாம். இதை சாப்பிட்டால் வியாதிவர கேட்கவா வேண்டும்?

ஆரோக்யமாயிருக்க ஒவ்வொருவருடைய உணவிலும் தேவையான சுத்தமான கொழுப்பை டால்டா வனஸ்பதி அளிக்கிறது. காற்றுப் புகாத சீல் செய்த டின்களில் கிடைக்கும் டால்டா வனஸ்பதியையே கேட்டு வாங்குங்கள். இது 10 பவுண்டு, 5 பவுண்டு, 2 பவுண்டு, 1 பவுண்டு டின்களில் தேவைக்குத் தகுந்தபடி கிடைக்கிறது. இன்றே ஒரு டின் வாங்குங்கள்.

படங்கள் கொண்ட டால்டா சமையல் புத்தகம் தமிழ், ஹிந்தி, வங்காளி, ஆங்கிலம் என்ற பாஷைகளில் கிடைக்கிறது. 300 செய்முறைக் குறிப்புகள், சமையலறை பராமரிப்பு, ஊட்டம் முதலானவைகளைப்பற்றிய விவரங்கள் அடங்கிய இப்புத்தகத்தின் விலை ரூ. 2/-தான். தபால்செலவு அணா 12 தனி. உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1.

டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல்—குறைந்த செலவு

மர அடையாளமுள்ள டின்னைப் பார்த்து வாங்குங்கள்.

HVM. 210-X62 TM

பிள்ளைக் கனியமுது

'சூறி'

15

சில்லறைத் தொல்லைகள்

★

> படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
> உடைப் பெருஞ் செல்வராயினும் இடைபடக்
> குறு குறு நடந்து சிறுகை நீட்டி
> இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
> நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்து
> மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
> பயக்குறை இல்லைத்தாம் வாழு நாளே.
>
> —அறிவுடைநம்பி.

இதுநாள் வரையும் என்ன வாழ்ந்துவிட்டேன்; இப்போது சில்லறைத் தொல்லைப்பட – இப்படி நீங்கள் நினைக்கலாம். தொல்லைகளைப் பிரிப்பதே பெரிய தொல்லை. பலதரப்பட்ட தொல்லைகள் அடைந்ததைச் சொல்லிவிட வேண்டும். குழந்தைக்கு போட்டோ ஸ்டுடியோவில் வந்த ஆபத்தை நினைக்கும் போதெல்லாம் இன்னும் உடம்பு சில்லிடுகிறது. ஆனாலும், ஸ்டுடியோக் காரர் விடாப்பிடியாக குழந்தையைப் படம் எடுத்துவிட்டார்; படமும் உயர்தரமாக இருந்தது. பிரதிகள் 144 வாங்கி அனுப்பியும் முடிந்தது.

சில்லறை தொல்லைகளில் மிக மிக முக்கியமானது ஆகாரம் கொடுத்தல்; ஆகாரம் பறித்தல். தவழ்ந்து விளையாட ஆரம்பிக்கும் குழந்தைக்கு கண்ணிற் கண்டனவெல்லாம் ஆகாரம். யாரோ ஒரு கவிஞர், காட்சியிலே இல்லையடா கண்களிலே உள்ளதடா என்றார். பார்க்கின்ற பார்வையில் தான், பார்க்கும் பொருளுக்குச் சிறப்பு என்றார். இதையறிந்த மாதிரி பார்க்கின்றபொருள் அனைத்தும் உண்ணும் பொருளே என கண்ணன் நினைக்கிறான். மாயக் கண்ணனாக இருந்தால் அவன் வாயில் நமது வீடு வாசலும், ரேஷன் கடைக்காரரும் இருப்போம்! நம்முடைய பயல் கண்டதைத் தின்னத் தின்ன, டாக்டர்களின் கூட்டத்தை யன்றோ அழுதொழுகும் வாயில் பார்க்கிறோம்.

நான் மண்ணும் கல்லும் உண்டதோடு நில்லாது, பாத்திரத்திலும் அந்தக் திருகையை அளைய வரும்போது, நான் சகிக்க வேண்டுமாம். தாய்மை என்ற பரிபூர்ண உள்ளம் படைத்தவர்களுக்கே, குழந்தையின் கை உண்ணும் உணவில் பட்டாலும் சும்மா இருக்கத் தோன்றும். அவனையே மண்படாமல் உண்ணச் செய்ய முயற்சிக்கும் நான், மண்ணோடு அளைந்த கையை எனது சாதத்தில் படவிட மாட்டேன். தவழும் பருவத்திலே இடுப்புச் சதங்கை, காலின் கொலுசு, கை வளையல்கள், கிருஷ்ணன் கொண்டை, அழுதொழுகும் செவ்வாய், மழலைப் பேச்சு, தத்தித் தாவி நடக்கும் நடை எல்லாம் உயர்வான காட்சிகள். எனக்குப் பிடிக்காத ஒரு காட்சி, எப்பொழுதும்குழந்தைக்கு ஆகாரம் கொடுத்துக்கொண்டே இருப்பது.

முக்கியமாக என் தாயாருக்கும் மனைவின் தாயாருக்கும் குழந்தைக்குச் சோறூட்டுதல், இட்லி திணித்தல், பால் கெண்டியில் கொடுத்தல், இடைக்கு இடை பிஸ்கோத்து, ஆரஞ்சுப் பழம் கொடுத்தல்...அம்மம்மா. சில்லறைத்தொல்லைசொல்லி மாளாது. நான் மாடியிலே இல்லையென எண்ணி, 'மனை, இசக்கிப் பயலுக்குப் பால் கொடுக்க வேண்டாமா? என்பாள் மாமியார். என் தாயார் அப்போதுதான் மூன்று கெண்டி கொடுத்துவிட்டு கிணற்றடிக்குப் போயிருப்பாள். இது ஒருவருக்கும் தெரியாது.

'இன்னும் மணி எட்டு அடிக்கலையே?'

'அது என்னடியம்மா. மணி எட்டு அடிக்கறத்துக்கும் குழந்தைக்குப் பால் கொடுக்கிறதுக்கும்?'

'அவங்க டயப்படித்தான் பால், ஆகாரம் கொடுக்க சொன்னாங்க. மேலும் டாக்டர் உத்தரவும் அப்படித்தானே'

'டாக்டராவது மோட்டாராவது. நீயெல்லாம் டயப்படி பால் குடிச்சுத்தான் வளர்ந்தயோ? நீ சிறு பிள்ளையா இருக்

கிறபோது நம்ம வீட்டு சிவலைப் பசு பால் அரைப்படியும் நீ குடிச்சிருப்பே. காலையிலே எட்டு மணிக்குள்ளே ஏழுதரம் கொடுத்திருப்பேனே.'

மீனா மெதுவாக, 'அம்மா மாடியிலே அவங்க இருக்கிறாங்க காதிலே விழுந்தா பழி வரும். குழந்தைக்கு மாந்தம், கட்டி, வியாதி எல்லாம் அதிகமாகப் பாலும் பழமும் கொடுத்ததாலே வந்திட்டதாகச் சொன்னாங்க. . . ஆபீஸ் போகிறவரை சும்மா இரு' என்று சொல்லுவாள்.

'நான் பிள்ளை பெத்தவாளா? நீதான் அதிசயமா பெத்திட்டே' என மகள் மீது பாய்வாள். கண்ணீரே வந்துவிடும். இந்த வேளை பார்த்து வள்ளி நுழைந்து, 'அட பெரியம்மா ஏன் அழுது? ஐயா, ஏதாச்சும் சொன்னாங்களா?' என்பாள். மகள் காந்திமதி தன்னை அவமானம் செய்ததை அவள் தாய் சொன்னதும், 'அட சின்னம்மா என்னாத்தைக் கண்டது? நீங்க நல்லது சொன்னாத் தெரியாது. அடிக்கடி பால் ஏம்மா? பழச்சாறு ஏம்மா? ஒரு இட்லியைக் கொடுங்க' என்பாள். எனக்கு இட்லி என்ற சொல் நாராசமாக இருக்கும். குழந்தை வளர்ப்பைப் பற்றி ஒன்றும் தெரியாத அசடுகள் கூடிக் கண்ணனை மண் தின்ன வைத்துவிடுவார்கள் என ஆத்திரம் கொள்வேன். வள்ளியின் குழந்தைகள் பசும்பாலை அறியாதவர்கள்; தாய்ப்பால், அதன் பிறகு இட்லி தோசை பழைய சாதம் என்று பழகிவிடும் ஒவ்வொன்றும் இருப்புக் குண்டுகள்போல இருக்கின்றன. ஆனாலும், என் கண்ணனுக்கு இட்லி கொடுக்க நான் பயப்படுகிறேன். தடுக்கிறேன். நான் முதுகைத் திருப்பியதும், மனங்கொண்ட மட்டும் ஆகாராதிகளைக் கொடுத்துவிடுவார்கள். வயிற்றைக் கெடுத்துவிடுவார்கள். பிறகுகேட்கப்போனால் 'நான் ஒன்றும் கொடுக்கவில்லை. இல்லை' என்ற இல்லைப் பாட்டு வந்துவிடும்.

'ஏ வள்ளி இட்லி தோசை பேச்சை எடுக்காதே. அவங்க காதிலே விழுந்தா கொன்னுடுவாங்க.'

'இதுக்கு மாசம் பதினொன்று ஆகுது. இன்னும் பாலும் பழமும் கொடுக்கிறீங்க. வயிறு செரிக்க வேண்டாம்.'

கண்ணன் பயல் சாப்பிடுவதில் எல்லோருக்கும் அக்கறை; அவன் சாப்பிடாது இருப்பது பற்றியே எனது அக்கறை. இதற்குள்ளாக மீனாவின் தாய், 'வள்ளி பாலாடையைக் கொண்டா, மாவு கஞ்சி போட்டலாம்' என்று சொல்ல, வள்ளி எடுக்கப் போவாள். இதற்குள் பயல் ராகம் இழுப்பான். தெனாலிராமன் பூனை சூடு கண்ட பூனை; பாலைக் கண்டதும் எடுத்ததாம் ஓட்டம் அது கதை. இவனோ பால் பாத்திரம் கெண்டி, சங்கு எடுத்ததும் ஓடுவதும் நிஜம்.

'பார் பாரம்மா அழறான் ராஜா' என்பாள் மீனா.

'ஏன் அழறான்? வயிற்றுக்கில்லே அழறான்' என்பாள் அவள் தாய்.



'வயிற்று வலி அழறான்' என காந்திமதி தர்க்கம் செய்வதற்குள் பாலாடை கெண்டி, கஞ்சி ஆற்றும் வெள்ளித் தம்ப்ளர் எல்லாம் கொண்டுவருவாள் வள்ளி. என் பயல் கூச்சல் சகிக்காது. என் கோபமும் கூரையைப் பொத்துக் கொண்டு போகிறமாதிரி 'இது வீடா இல்லையா? ஏய் மீனா உன் காதிலே அரணை புகுந்துவிட்டதா?' என்பேன்.

'நான் சொன்னேன்.'

'மன்னாங் கட்டியை சொன்னே. சற்று முன்னாலேதானே எங்க அம்மா ஆறு லோட்டா பால் போட்டிவிட்டா இப்போ என்ன கஞ்சி வாழுது? பிஸ்கோத்து ஆரஞ்சு, இட்லி பாலு, முறுக்கு... ஆய ஆய.... அது என்ன தலையணையா?'

'அம்மாவிடம் சொன்னேன் கேட்கலை'

'அவன் உயிரோட இருக்கணுமா வேண்டாமா? ஏன் எல்லோரும் சேர்ந்து என்பிராணனை எடுக்கிறீங்க.'

இப்படிப் பேசினால் மாமியாருக்கு நாக்கை பிடுங்க வேண்டும் போலிருக்கும். 'இந்தாம்மா மீனா, உம் பிள்ளையைப் பிடி' என்பாள். நான் திட்டியதால் தனக்கு ஏற்பட்ட கோபம் குரலில் இருக்கும்.

'உன்னை வளர்த்த மாதிரி அந்தப் பயலையும் கெடுக்க வேண்டாம்' இதை நான் சொல்வது தப்பு என்றாலும் கோபத்தில் குதி போட்டல்லவா வருகிறது.

'என்னை வளர்த்ததில் என்ன தப்பு?'

'தப்புச் சொல்லறேன். எண்ணிக்கோ. எந்த வியாதி உனக்கு குறைச்சல்? ஒத்தை தலைவலி, இரட்டைத் தலைவலி, மயக்கம், வேலையைக் கண்டதும் வாயு குத்து, வயிற்றிரைச்சல் வாதம், பித்தம், தலைக்கனம்....'

'போதுமே. நீங்கதான் சயன்சு படி வளர்த்தீங்க'

'சயன்சா?'

'சுகாதாரப்படி வளர்த்தவங்களுக்கு என்ன குறைச்சல் கால் வலி, வாதம் குடல் மந்தம்'

'இந்தா இந்தா இல்லாத வியாதிகளை அடுக்காதே'

'நீங்க மட்டும் சொல்லலாமா?'

சண்டை வலுக்க இருந்த சமயம், சமாதானமாகப் பேச்சைத் திருப்பி 'மீனா நான் வியாதியிலே பிறந்தேன். வியாதியிலே வளர்ந்தேன். வியாதி மாலிகையைக் கல்யாணம் செய்தேன். என் குழந்தையைப் பார்த்து என் மருமகள் இப்படி கேட்காமலிருக்க, நல்ல துறையில் வளர்க்க ஆசைப்படுகிறேன். பார் பார் வயிற்று வலி அழறது' என்றேன்.

'நீங்களானால் பட்டினி போட்டு டயப்படி அளவோட வயிற்றுக்குக் கொடுக்கச் சொல்லுறீங்க. வீட்டிலே பெரியவங்க நொறுங்கத் தின்னா நூறு வயசு என்று சொல்லுறாங்க. நான் ஒருத்தி நடுவிலே அகப்பட்டு நைந்து நைந்து சாகிறேன்...'

'அட நீங்க என்னம்மா. ஒரு வேளைக்கு நாலு வேளை தின்னாத் தான் பசலை உடம்பு சத்துப் பிடிக்கும். மணியடிச்சுப் பால் கொடுத்தா அது என்னாப் பழக்கம்?'

'இந்தா வள்ளி உன்னோட யோசனையை உன் வீட்டிலே வை' என்று கத்திவிட்டு குழந்தையை கோபத்தில் விட்டுச் சென்ற மாமியாரின்பக்கம் பார்த்

தால், மாமியார் அண்டாவைத் தூக்கி தங்கென போடுகிறாள். என்மீது போட்டதாக நினைப்பு. பெரிய ஜீவன் மனம் நோகுமேயென்று நான் வாய்மூடி மற்ற காரியங்களில் இருந்தாலும், பையனுக்கு ஆகாரம் கொடுக்கும் வகையில் இருக்க முடியாது.

தனித்து விடப்பட்ட கண்ணன் தவழ்ந்தும், நடந்தும், எதை எதையோ தின்றுவிடுகிறான். 'துப்பு துப்புடா ஆய் ஆய்... என்னடா துவரம்பருப்பு...' என்று கத்திவிட்டு கண்ட கண்ட இடத்திலே சாமான்களைப் போடாதே, போடாதேன்னு நான் கத்த வேண்டும்; கதறவேண்டும்.. பெருக்குமாற்றுக் குச்சி... தூசி துரும்பு..உளுத்தம் பொட்டு கல்லு மண்ணா இது வீடுதானா? வீடு பெருக்கினாத்தானே என இரைவேன். குழந்தையைக் கெடுப்பதை நேரிடையாகக் கண்டித்துப் பேசாத சமயம் நமது கோபத்தைக் காட்டி வேறொரு தப்பிதத்தைத் தேர்ந்தெடுத்து அதற்காகத் திட்டினால், முன் காரியத்தைக் குறித்து சத்தம் போட்டதாக ஊகித்துக்கொள்ள முடியும். ஆகவே என் கூக்குரல் அதிகார வெறி கொடிகட்டிப் பறக்கிறது. மாமியாருக்குப் பேச சந்தர்ப்பம் கிடைக்கிறது. 'வயிறு நிறைஞ்சா ஏன் கண்ட கண்ட பொருளைத் திங்குது? கூட அரைக்கால்படி போட்டினால் சும்மா தெய்வமே என்று இருக்கும்' என்பாள்.

'ஒரு படியாவிட்டு இந்தத் தெய்வத்துக்கு அபிஷேகமே செய்யலாம்.'

'போட்டற பால் அரைக்கால் படி அதுவும் தண்ணி' என்பாள் காந்திமதி.

'ஏ மதி. நேற்று டாக்டர் என்ன சொன்னார் கோதுமை பண்டம் கண்ணுடித் தான், உளுந்து வடை கொடுக்காதீர்கள் என்று சொன்னாரே...'

'அப்பப்பா...எனக்கு ஒரு பிள்ளையே போதும். நீங்கள் எக்கேடும் கெட்டுப் போங்க'

மீறு போய்விடுவாள். குழந்தை நலம் பேணும் கருத்தோடும் சுயநலத்தோடும் ஆகாராதிகளைக் குறைக்கச் சொன்னேன். கண்ணன் பயல் குடிக்காத தித்திப்பு கஞ்சி, பால் இவைகளை எனக்கு தர்மாஸ் பிளாஸ்கில் ஊற்றிக் கொடுத்துவிடும் பழக்கத்தையும் நிறுத்த வேண்டும்.

ஆகாரத்தை மணிக் கணக்குப்படி நான் கொடுக்கச் சொன்னதால் முதலில் மாமியாரும், பிறகு தாயாரும் என்மீது கோபித்துக் கொண்டு ஊருக்குப்போய்விட்டார்கள். 'இவன்தான் ஓவியமாக பிள்ளை பெற்றவன்; எங்களுக்குப் பிள்ளையை வளர்க்கதெரியாதா?' என்று குறை கூறிச் சென்றார்கள்.

• • •

கண்ணனுக்கென வாங்கிய பொருள்கள், சரிப்படாவிட்டால் அதை என் தலையில்கட்டுவதுசில்லறைத் தொல்லைகளில் ஒன்று. தொட்டில் வேஷ்டி வாங்கியது அகலக் கட்டையாக இருக்கவே அதிலே கருப்புக் கரைபோல பூ போட்டு என்னை அங்கவஸ்திரமாக உபயோகம் செய்யச் சொன்னாள் அருமை காந்திமதி. பயலுக்குச் சட்டை தைக்கத் துணி எடுக்க, அது குறைவாக இருக்கவே என் கைவசம் கைக்குட்டையாக விரிந்தன.



'கப்புண்ணிக்குக் குழந்தை பிறந்திருக்கிறதாம். போய்ப் பார்த்துவிட்டு வரவேணடும். குழந்தைக்கு என்ன வாங்கிக் கொண்டு போகலாம்?'

'இது அவனுக்கு எத்தனையாவது குழந்தை?'

'எட்டாவது!'

'அப்போ ஒண்ணும் வாங்கிக்கொண்டு போகவேண்டாம் சும்மா கப்புவைப் பார்த்து அநுதாபம் தெரிவித்துவிட்டு வா போதும்!

'சட்டை சிறிசாகப் போவதை கைக்குட்டையாகக் கிழித்து' என்று ஆரம்பிக்கவே, 'இந்தா காந்திமதி நான் எத்தனை கைக்குட்டைகளை வைத்துக்கொள்வது. இந்தப் பயல் துணிமணி சிறிசாகப் போனாலும் இன்னொரு பிள்ளைக்கு உதவும்' என்பேன். 'போதுமே சும்மா இருங்க' என்று கோபத்தோடு முகத்தைச் சுளிக்கும் அழகே போதும்.

குழந்தைகள் இந்தப் பிராயத்தில் எதையும் சுவைத்துப் பார்க்கும். முக்கியமாக மண், துணிமணி பேப்பர், (என்னுடைய ஆபீஸ் பேப்பர்களின் நிறம் மகா மட்டம். அதைத் தின்னும் உரிமையுடைய பிராணியே எடுக்கும் ஓட்டம். ஆனாலும் கண்ணன் பயல் அந்தப் பேப்பர்களை கசக்கியும், வீணாக்கியும் படாதபாடு படுத்துவான்.) அவனுக்கு பேப்பர் கிழித்தல் ஒரு பொழுதுபோக்கன்று. லட்சியம் என்றே சொல்ல வேண்டும். அதிலும் அத்தனை பேப்பரையும் கொண்டுபோய் அண்டா, சருகம், கொப்பரை, குடம், ஈவைகளில் அமுக்கித் தண்ணீரை அலையவேண்டும். தண்ணீருக்கும் சிறு குழந்தைகளுக்கும் என்ன சம்பந்தமோ ...மொண்டு மொண்டு கொட்டுவதிலும் குடிப்பதிலும் கன குஷி. அப்பப்பா. தண்ணீரைத் தொடாவிட்டால் அவன் கத்துவான்; தொட்டால் நான் கத்துவேன். தொட்டால் டாக்டருக்கு நிமோனியா, இருமல் என்ற பெயர்கள் மூலம் கனத்த வரும்படி; எனக்கோ பணத்துக்கு நெருக்கடி. ஊர்ந்து செல்லும் பிள்ளையும், ஊர்வாயும் சரி. இரண்டும் பிறர் சொல்லுக்கும் அதிகாரத்திற்கும் அடங்காப்பிடாரிகள்.

• • •

பக்கத்து வீட்டிலுள்ள பூனைக் குட்டி, நாய், விளையாட்டுச் சாமான்கள் இவனுக்கு வேண்டும். இவனுக்காக வாங்கிக்

கொடுப்பவைகளை கழுநீர் பானையிலும் சாக்கிடையிலும்கொண்டு போடுவான். பக்கத்து வீட்டார்களுக்கு சாக்கடை ஓடாததால் வம்புக்கு வந்து மல்லுக்கு நிற்பார்கள். இக்கிணியூண்டு பயல் எத்தனை ரக வம்புகளை விலைக்கு வாங்குகிறான். பூனைக்குட்டியை சதா மடியில் வைத்துக் கொள்ள ஆசைப்பட்டால் அது பாவம் என்ன செய்யும். திமிறி ஓடும்; ஓடினால் அழுகை. ஓடாவிட்டால் போகவில்லையென அழுகை. பக்கத்து வீட்டுக்காரர் பூனைக்குட்டியை நாங்கள் தொடக்கூடாதென தன் வீட்டிலேயே கூடைக்குள் கவிழ்த்து வைத்துக் கொண்டார். இதற்காக புதிய பூனைக் குட்டி தேடி வாங்கும்படி நேர்ந்தது. அந்த மூதேவியை வெளியே ஓடாது அடைத்துப்போட்டால் கதறு கதறெனக் கதறி பிராணனை விட்டது. அவிழ்த்து விட்டாலோ பக்கத்து வீட்டுப் பூனைக்குட்டியோடு போய் ஜோராக விளையாடும். என் தகப்பனார் இம்மாதிரி பிராணிகளின் நண்பர். அவை வீட்டுக்குள் வர சம்மதிக்க மாட்டார். பையனுடைய சந்தோஷத்திற்காக வளர்க்கப் படுகிறது என்று சொல்லியும் 'டேய்,மணி ஒன்று இந்தப் பூனைக்குட்டி வீட்டில் இருக்க வேண்டும். அல்லது உன்னைப் பெற்ற இந்தப் பாவி இருக்க வேண்டும்' என்று சொல்லும்போது அப்பாவி நான் என்ன செய்ய? பூனைக்குட்டியை தற்காலிகமாக நீ இரங்காயெனில் வீட்டில் விட்டு வைத்தேன். தொல்லைகளில் இதுவும் ஒன்று.

• • •

சில்லறைத் தொல்லைகளின் எல்லைக் கல்லைச் சொல்லிவிடுகிறேன். பௌர்ணமி பூஜை நடந்த காலத்து எத்தனை குழந்தைகளை நாங்கள் நிலாச்சோறு உண்ண அழைத்தோமோ, அவர்கள் எல்லோரும் எங்கள் வீட்டை விளையாட்டு மைதானமாக எண்ணி வருகிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் தம்பி, மச்சான், மாமன், மைத்துனன், கொழுந்தன், அத்தான், என்ற முறை கொண்டாடி வருவார்கள். அவர்களுடைய தாய்மார்கள் தங்கள் குழந்தை பூஜையின்போது உண்ட புண்ணியத்தாலேயே இங்கு கண்ணன் பிறந்தான் என தம்பட்டம் தட்டுவார்கள். தம் வீட்டில் இல்லாத பொருள்களை கைமாற்றாகவோ, இனாமாகவோ தட்டிக்கொண்டு போவார்கள். தங்கள் குழந்தையின் தவப் பயனால் எங்களுக்குக் கிடைத்த குழந்தை பாக்கியத்தை நினைப்பூட்டி ரூபாயாக கைமாற்றுக் கேட்பவர்கள் கரண்டி கரண்டியாக சீனி, பால், டின்——உணவு இந்த தொல்லையைச் சொல்ல வேண்டாம். பணத்திற்கும் உணவுச் சாமான்களுக்கும் பிடித்த சனியனை மனக்கட்டுப்பாடு கொண்டு ஒரு வகையாக நிறுத்தியும், மறுத்தும் சமாளிக்கலாம்; விளையாட்டுத் தோழமை பூண்டு வருகிற ஆண்-பெண் குழந்தைகளை என்ன செய்ய? அவர்கள் கூச்சலும்கும்மாளமும்சிவசிவ.... கைலாசமே வெடித்து விடும்.ஏதாவது சொல்லி விட்டால் 'அட பாவி அவனுக்குக் குழந்தை அருமை தெரியுமா?' என்கிறார்கள். காது இரும்புக்காது இருந்தால் நலம் என்று தோன்றுகிறபடி பிறர் குழந்தைகள் வந்து சேர்ந்து விளையாடுவதன் மூலம்

"இட்டு என்ன ஒரு முழநீளம் தந்தி அடிச்சிருக்கான்?"

"இந்தத் தந்தியை லெட்டரா பாவிச்சு மறு தபால்லே பதில் எழுதும்படி அடிச்சிருக்கான்!"

நிர்தூளி நடத்துவார்கள். தடுத்தாலும் சண்டை, தடுக்காவிட்டாலும் ஒன்றுக்கொன்றுசண்டை. கண்ணன் பயலும் வீட்டுக்குள் இருக்கப் பிரியப்படாத மாதிரி சதா தெருவுப் பக்கம் ஓட்டம் எடுப்பான். இதனால் கம்பிக் கதவு போட்டு, பயங்கர மிருகங்களை மக்கள் தொல்லை செய்யாதிருக்க பாதுகாக்கும் நிர்வாகிகள் போன்று நாங்கள் செய்தோம்.

'அதிசயமான பிள்ளை பெத்திட்டாங்க. இரும்பு பெட்டியிலே வைச்சுப் பூட்டுகிறது தானே'

'எப்படிப்பட்ட பேச்சு!'

• • •

இருக்கிற தொல்லைகள் போதாதென்று உறவினர்களிலும் நண்பர்களிலும் ஒரு சிலர் புதிய தொல்லையை ஆரம்பித்தார்கள். தன் குழந்தையின் போட்டோவைப் பிறருக்குக் கொடுப்பவனை முட்டாள் என்றே சொல்ல வேண்டும். கண்ணன் படம் பெற்றவர்களில் ஒரு சில வியாபாரிகள் பயலுடைய படத்தைப் பார்த்தவர்கள் தங்கள் விளம்பரத்திற்கு தேர்ந்தெடுத்தார்கள். படம் இத்தனை கவர்ச்சியாக இருந்தது. செருப்புக் கடை வியாபாரி ஈரல்குலை கட்டி, மருந்து வியாபாரி, மூக்குப்பொடி வியாபாரி, இவ்வாறு பன்னிரெண்டு நபர்கள் என்னைத் தொல்லை செய்தார்கள். தங்களுக்கே ரிஜிஸ்டிரேட் மார்க்காக உபயோகித்துக்கொள்ள அனுமதி கோரினார்கள். மாதிரிக்காக எப்படி அந்த படத்தை உபயோகம் செய்ய முடியுமெனக் காட்டியும் இருந்தார்கள். குழந்தையின் தலைக்கு மேலாக அளவற்ற செருப்புக் குவியல்கள், இது வாயைப் பிளந்து சிரிக்கும் நிலையைக் காட்டும் படம். ஈரல்குலை கட்டி மருந்துக்கு இப்பால் நோஞ்சான், அப்பால் இவன் திட காத்திரனாக இருக்கிறான். மூக்குப் பொடி வியாபாரி பெரிய ஜாடிக்கு மேலாக இவன் படுத்திருப்பது போல

மாதிரி படம் கொண்டுவந்தார்.. எனக்கு வந்த கோபமும் ஆத்திரமும் சொல்லத்தரமன்று. ஆயிரம் ரூபாய் வரை, இனும் கொடுப்பதாகச் சொன்னார்கள். போதாக்குறைக்கு என் படத்தையும் கேட்டார்கள். என்ன வியாபார உலகம். தன்னை விற்றாலும் விற்கலாம் தன் குழந்தையை வியாபாரபொருளாக்கநான்சம்மதிக்கவில்லை. அவர்கள் என் அறியாமையை வியந்து கொண்டே போய்விட்டார்கள்.

• • •

எல்லாவற்றிற்கும் மேலாக, காந்திமதியின் உறவினர் பெரியப் பணக்காரர் குழந்தையில்லாதவர். அவர் வீட்டுக்கு இந்தப் படம் போனது முதல் அவரது மனைவி திரிபுரசுந்தரியம்மாள் எங்கள் வீட்டில் குடியேற வந்துவிட்டாள். பெரிய பணக்காரர் மனைவி விருந்தாளியாக வந்தால் ஏழை பரம ஏழை ஆகவேண்டியதுதான். காந்திமதிக்குத் தலைகால் புரியவில்லை. வந்து ஒரு வாரம் இரண்டு வாரம் தங்கினாள். எந்த நிமிஷமும் கண்ணனும் அந்தம்மாவும் குழந்தையும் 'தாயு'மாக இருந்தார்கள். 'அம்மா எங்கே?' என்றால் திரிபுரசுந்தரியைக் காட்டும் நிலைமையடைந்தான். காந்திமதியை ஏறிட்டும் பார்ப்பதில்லை காரும் கையில் நோட்டு நோட்டாகப் பணமும் இருக்கவே, எங்களைக் கேட்காமல் கடை வீதிக்குப்போய் அவன் கை நீட்டுகிற திக்கிலுள்ள பொருள்கள் அனைத்தும் வீட்டில் வந்து குவிய ஆரம்பித்தன. பிளாஸ்டிக் பஜார் ஒன்று வீட்டில் வைக்கலாம்; கல் பொம்மைகள்; மர பொம்மைகள்; துணி பொம்மைகள் இப்படி எவ்வளவோ. பழ வகைகள் பிஸ்கோத்து வகைகள் சொல்லிமுடியாது இதற்கெல்லாம் மேலாக, மனைவியைப் பார்த்துப்போக அவளது கணவர் பெரிய காரில் வாரம் ஒருமுறை வந்து போவார். என் பாடு பரம கஷ்டமாயிற்று. நிலாமுற்றம் வீட்டிற்கு நானும் காந்திமதியும் சொந்தக்காரர்களா, விருந்தாளியாக வந்த அந்த அம்மணி எஜமானியா என்றுதெரியவில்லை. வேலைக்காரவள்ளி, அந்தம்மா உத்தரவை,சிச்ருஷைகளை கவனித்தாள்; ஆக்ஞையை எதிர்பார்த்தாள். நானும் காந்திமதியும் அண்டிப்பிழைத்த ஆண்டிகள் போன்று எங்கள் சொந்த வீட்டில் நடமாடினோம். முன்பெல்லாம்; 'எஜமான் தூங்கறாங்க சத்தம் போடாதீங்க' என்ற வள்ளி, 'பெரியம்மா தூங்கறாங்க சத்தம் போடாதீங்க' என்று சொல்ல ஆரம்பித்தாள். நான் தரும சங்கடத்தில் மாட்டிக் கொண்டேன். கண்ணன் பயலும் 'அம்மா அம்மா'வென்று அந்த அம்மணியை பிரிவதில்லை. காந்திமதி கூப்பிட்டாலும், 'மாத்தேன் போ' என்றுவிடுவான். அவன் தூங்கவேண்டியது, உணவு கொள்ளவேண்டியது காந்திமதியின் செயலுக்கு அப்பால் போய் அந்தம்மாள் ஆதிக்கத்துக்குள் குடியேறிவிட்டது. பணம் எங்களைப் பயங்காட்டியது. இதுவும் நன்மைக்கே என்றிருந்த வேளையில் உண்மை சொரூபம் தெரிய வந்தது.

அடுத்த வாரம்

★

ஆண்டு நிறைவு

'ஏம்மா மீனு. கண்ணன் பயலை நாங்களே வளர்க்கிறோம்.'

விளையாட்டாகச் சொல்லுவதாக முதலில் நினைத்தோம், பின்பு அது உண்மையான பேச்செனத் தெரிந்தது.

பிச்சையெடுத்தாராம் பெருமாள்; அதைப் பிடுங்கினாராம் அனுமார் என்னும் கதையாக எங்களுக்கு வரப்பிரசாதமாக அரும்பாடுபட்டு ஒரு பிள்ளை கிடைக்க அதைத் தத்து எடுக்க வந்துவிட்டார்கள். அவர்களுக்கோ மூன்று கார்கள் இருக்கின்றன. லக்ஷ லக்ஷமாய் பணம் இருக்கிறது. என் சிந்தனையில் ஒரு மின்னல் ஒளிவிடும். பயலுக்கு நம்மால் அதிர்ஷ்டம் வராது போனாலும், வருகின்ற அதிர்ஷ்டத்தைத் தடை செய்வானேன்? தத்துப் பிள்ளையாகக் கொடுக்க ஆசை பிறந்தாலும், மனம் சில சமயம் மறுக்கும்; மீண்டும் மருகும். என் தகப்பனார் காதில் இது விழுந்தால் என் தலையைச் சீவிவிடுவார். என் மாமனார் உலகம் அறிந்தவர் அவரிடம் இதைச் சொன்னாலும், 'மாப்பிள்ளை நீங்கள் யோகம் செய்தவர்கள். பயலை இங்கேயே வளர்க்கவேண்டும், ஐந்து வயதுவரை வளர்க்கவேண்டும் என்று கட்டுப்பாடு போடுங்கள். அங்கே பணம் பூஞ்சாளம் பூத்துக்கிடக்கிறது. ஒரு பங்களாவை வாங்கி இந்த ஊரிலேயே குடியேறுவார்கள். ஐந்து வயதுக்கு அப்பால் நாம் பிள்ளைகளிடம் பாசம் கொள்ளமுடியாது. இதனால் உங்களுக்கும் நன்மை, அவர்களுக்கும் சந்தோஷம்' என்று யுக்தி சொன்னார்.

என் மனசில், பம்படி வீட்டுக்காரம்மா ஆறு குழந்தை பெற்ற ஏழையின் உருவம் வந்தது. எனக்குத் தன் மகனை முருகனைத் தத்துக்கொடுக்க முடியாதுயென்று சொன்ன தாய்மை உணர்ச்சி நினைவில் வந்தது இருப்பினும் நானே விட்டுக்கொடுக்க மனம் துணிகிறேன். காந்திமதி என்ன சொல்லுவாள்?' ஐந்து வயது வரை வளர்த்தபின் தத்து எடுக்கட்டும்' என விட மனசுவருமா? இந்தப் பேச்சுக்கள் கிணற்றில் போட்ட கல்லாக இருந்துவந்தன. மெல்லவும் மாட்டாமல், கொள்ளவும் மாட்டாமல், சேர்ந்து சிரித்துச் சமாளித்தோம். இன்னும் என்னென்ன சில்லறை தொல்லைகளை இந்தப் பயல் கொடுப்பானோ?

எதிர்பாராத விதமாக என் தந்தையிடமிருந்து தபால் வந்தது என்ன ஆபத்தோ சம்பத்தோ என்று கைநடுங்கியபடி பிரித்தேன்.

(தொடரும்)

கார் சவாரி

ஆர்.எஸ்.ஞானம்பாள்

மேட்டுக் குப்பத்தில் ஒரே அமளிதுமளி. திருவிழாவைப் போல் ஒரே ஆர்ப்பாட்டம்; தோரணங்களும் வாழை மரங்களும் சேரியைப் புது நகரமாக்கின. பள்ளிக்கூடத் திறப்பு விழா நடக்கப்போகிறது. 'மாஜி ராவ் சாகிப்' அமிர்தலிங்கம் வரப்போகிறார். அமிர்தலிங்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தூணாக இருந்தவர். இன்று எல்லோரையும்போலத் தம் ராவசாகிப் 'பட்டத்தைத் துறந்ததன் மூலமாகத் தேசத் தொண்டு செய்துவிட்டார். அதன் காரணமாக இன்றைக்கு அமிர்தலிங்கம் சமூக கலாசார, அரசியல் உலகில்அரும்பெரும் தலைவராகவும், தியாக மூர்த்தியாகவும், மதிப்பிற்குகந்த மனிதராகவும் விளங்கலானார். இவ்வளவு பெரிய மனிதர் வரும்போதாவது சேரியை அலங்கரிக்க வேண்டாமா? இல்லாவிட்டால் என்ன நினைப்பார்?

"ஆமாம்! எல்லாம் துப்புறவா இருக்கோணும். எல்லாரும் அமைதியா, ஒளுங்கா இருக்கோணும்" என்று குப்பத்தின் தலைவன் மாரி முத்துவும் கூறிவிட்டான்.

காரை இன்னும் கொஞ்சம் வேகமாக ஓட்டப்பா என்று டிரைவருக்கு உத்தரவிட்டார் அமிர்தலிங்கம். திறப்பு விழா நடந்ததும் ராஜபுரம் பண்ணையார் வீட்டில் டின்னர் இருந்தது. விருந்துக்குப் பல முக்கியஸ்தர்கள் வருவதாக இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் பக்குவமாகச் சொல்லி அடுத்த எலக்ஷனில் தன்னையே ஆதரிக்கும்படிக் கேட்டுக்கொள்ளவேண்டும்; சிமெண்ட் வியாபாரத்திற்கும் பணம் புரட்டி விடவேண்டும்; விருந்து முடிந்து ஆறு மணிக்குள்ளாவது திரும்பினால்தான் கோவிலுக்குப் போகலாம்; மேட்டுக்குப்பத்தில் மாரிமுத்து என்ன செய்திருக்கானோ' என்று பலவிதமாக எண்ணினார் அமிர்தலிங்கம். அமிர்தலிங்கம் புனர்ஜன்மம் எடுத்த பிறகு அதாவது "ராவ் சாகிபு" பட்டத்தைத் தியாகம் செய்த பிறகு ஏதாவது நல்லது செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டார். சேரி ஜனங்களுக்கு ஏதேனும் நன்மை செய்தால் தான் பெயர் பிரபலமாகும். தாமும் காலம் தள்ளலாமென்று நினைத்தார். மேட்டுக் குப்பத்திற்குப் பக்கத்தில் அவருக்கு நிலபுலங்கள் உண்டு. எனவே மாரிமுத்துவிடம் முந்நூறு ரூபாய் கொடுத்து பள்ளிக்கூடம் வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார்.

கூட்டம் கூடிவிட்டது. சேரி மகாஜனங்கள் எல்லோரும் திரண்டு வந்துவிட்டனர். மாரிமுத்து கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதில் முனைந்தான்.

மருதாயியும் கூட்டத்திற்கு வந்திருந்தாள். அவள் புருஷன் அம்மாசை பட்டணத்தில் "மிலிடேரியில்" வேலை பார்க்கிறான். மருதாயி மகன் சுப்பய்யன் போக்கே அலாதி. வயசு ஆறு

"ராமசாமி உங்களை "மடையன்"னு திட்டி னதுக்காக நீங்க அவருமேலே மான நஷ்ட தாவா போடவேண்டியது நியா யம்தான். ஆனு நீங்க மானமுள்ளவர்னு கோர்ட்டிலே ருஜுப்படுத்தனுமே! அதுக்கு ஏதாவது சாட்சி இருக்கா?"

அல்லது ஏழுதானிருக்கும். பேச்சு மட்டும் வெடுக் வெடுக் கென்றிருக்கும். சும்மா இருப்ப தென்பது முடியாத காரியம். அவன் விஷயத்தில்.

மோட்டார் என்றால் அவனுக்கு ஒரே பைத்தியம். அந்த ஆசை அவனுக்கு விழுவதில் என்ன நியாயம் இருக்கிறது? ஆனால் அதென்ன அவனைக் கேட்டா வரு கிறது! தன்னொத்த பையன்களிட மெல்லாம் மோட்டார் கார்களைப் பற்றித் தெரிந்ததை யெல்லாம் அளப்பான்.

"நான் நேத்து ஒரு மோட்டாரு பார்த்தேன். பண்ணை ஊட்டு சின்ன ஐயா ஏதோ ஒன்னை காலுலே அமுத்தாரு. காரு பஞ்சாப் பறக்குது" என்பான். இதை மற்றப் பையன்கள் ஆவ லுடன் கேட்டுக்கொண்டிருப்பார் கள். ஒருநாள் அம்மாவிடம் "அம்மா! எனக்கும் பெரிய பண்ணை ஊட்டு ஐயாமாதிரி கார் வண்டிலே சவாரி பண்ண னும்னு ஆசையாயிருக்குது ஒன்று வாங்கித்தாம்மா" என் ருன். "எலே! ஒங்கப்பன் பட்ட ணத்திலே சம்பாரிச்சுட்டு வரும். அப்போ அவுகளைக் கேளு! போடா! ஒனக்கு எதுக்கு இதெல் லாம் என்ருள். அதிலிருந்து எல் லாரிடமும் சுப்பய்யன் "எங்கப் பன் கார் வண்டி வாங்கியாரும். நான் சவாரி செய்யப்போறேன்" என்பான். அதைக் கேட்டுப் பெரியவர்கள் சிரிப்பார்கள். சிறு பையன்கள் ஆச்சர்யத்தால் வாயைப் பிளப்பார்கள்.

இதோ அமிர்தலிங்கம் வந்து விட்டார். மாலே போட்டாய்விட் டது. மாலேயிடப்பட்டு மேடை க்கு அழைத்துச் செல்லப்பட் டார். காரைத் திருப்பி ஒரு ஒதுக்கான இடத்தில் நிறுத்தி னன் டிரைவர். பிறகு எங்கேயோ போய்விட்டான்.

காரின் "ஹார்ன்" சப்தத்தைக் கேட்டதுமே சுப்பையன் மனதில் ஓர் ஆனந்தம். அவன் கண்கள் மலர்ந்தன. தன் வீட்டுக்குப் பக்கமாகவே வந்துவிட்டது. அவ னல் கூட்டத்தில் உட்கார்ந்திரு க்க முடியவில்லே. ஒரே ஓர் துள்ளு. மருதாயி கையைப் பிடித்திழுத்தும் திமிறிக் கொண்டு ஓடிவிட்டான். "எளவு! அடங்காப் பொடாரி" என்று சலித்துக்கொண்டாள் மருதாயி.

கூட்டம் நடந்துகொண்டிருந் தது. அதனால் சுப்பய்யனுக் கென்ன? மெள்ள மெள்ளக் காரின் அருகில் சென்ருன். இப் படியும் அப்படியுமாக அதைச் சுற்றி வந்தான். காரின் பின் புறம் புழுதியில் தன் பேரை எழுதினன்; படம் போட்டான். இங்கிலீஷ் கூட எழுதினன். உள்ளே ஒருவருமில்லே. உள்ளே குதித்து உட்கார்ந்து சவாரி... ஆமாம் கார் சவாரி செய்ய இதை விட நல்ல சமயம் எப்பொழுது கிடைக்கப்போகிறது! உள்ளே எப்படிப் போவது! கதவைத் திறக்கத் தெரியாது. அப்படியும் இப்படியுமாகப் பார்த்தான் ஒரு வருமில்லே. கதவைத் தொத்திக் கொண்டு உள்ளே எட்டிக் குதி த்துவிட்டான்.

வெகுநேரமாயிற்று. சுபய்யன் அசைவதாகக் காணும். அப் படியே முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டு ஸ்டியரிங்கைப்பிடித்து கொண்டு கார் ஓட்டும் பாவனை யில் இருந்தான். வாழ்க்கையின் லட்சியம் சித்தியாய் விட்டது. மெய்மறந்து பாடிக்கொண்டிருந் தான்.

மீட்டிங்கு முடிந்து விட்டது. அமிர்தலிங்கம் திரும்பிப் போக வேண்டும். டிரைவர் காரைத் தயாராக்க வந்தான். கதவைத் திறக்கப்போகும் சமயத்தில் அவன் முன்னுலிருந்த காட்சி அவனை திடுக்கிடச் செய்தது. "எலே! பறப் பயலே! ஒனக்குக் கார் சவாரி வேறு! இறங்குடா!" என்று வெடுவெடென்று கூறியபடி மன்றி முதுகில் 'ரப், ரப்' என்று இரண்டு அறையும் வைத்தான். அமிர்தலிங்கத்தின் முகம் சிவந் தது. மீசை துடித்தது. "சீ பற நாயே! எப்படிடா கார்லே ஏறினே! மூஞ்சியைப்பாரு" என்று அவனை அடிக்கப்போனர்.

ஆனல் சுப்பய்யனு அவர் கைக்குச் சிக்கப்போகிருன். அவன் இருதயமே வெடித்து விடும்போலிருந்தது. தாயை நோக்கிச் சென்ருன். அதற்குள் மற்ற பையன்களுக்கும் இவ்விஷ யம் தெரியவே அவர்கள் இவ னைப் பார்த்துச் சிரிக்கத் தொட ங்கினர்கள். சுப்பய்யனுக்கோ உலகமே இருண்டது. "வேறும்

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலேக்கட்டி வியாதிகளை சொற்ப காலத் தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளேக்கண்டு ஏமாருதீர்.

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
19, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 85254
கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

"வீட்டுக்காரர்:—என்ன மோ, ஐனங்க, என்னது, உன்னுதன்னு வீனு வித்தி யாசம் பாராட்டருங்க...போறபோதுகூட எடுத்துக்கிட்டாப் போகப்போரேம்...... இங்கே விட்டுட்டுத்தானே போகணும்!"

குடித்தனக்காரர்:—அதெப்படிங்க முடியும்! குளிக்கிற உள்மேலே நான் போட்டிருக்கிற ரெண்டு தகரத்தையும் போற போது எடுத்துக்கிட்டுப் போறதுன்னு தானே பேச்சு!

உனக்கு! நீ கெட்ட கேட்டுக்கு மோட்டார் சவாரியா; கழுதைப் பய! இன்னும் புத்திவரலே. இன் னும் ரண்டு வைக்காமப் போனனே" என்ருள் மருதாயி.

"அம்மா! என்னை என்னன்னு நினைச்சுக்கிட்டே ஒரு நாளா வது மோட்டார் கார்லே சவாரி செய்யாட்டா நான் சுப்பய்யன் இல்லே! பாரு!" என்று ஆத்திர மாகச் சொன்னன். "சரிதான்! கஞ்சியைக் குடிச்சிக்கிட்டுக் கெட" என்ருள் மருதாயி.

கஞ்சியைக் குடித்துவிட்டுப் படுத்த சுப்பய்யன் தூங்கிவிட் டான்.

அப்பன் பட்டணத்திலேந்து கார் வாங்கிட்டு வந்திருக்குது. 'ஐயய்யோ! பொம்மைக் காரு தானு! போ அப்பா! இந்தக் காரு எனக்கு வேண்டாம். பண்ணை ஊட்டு ஐயா சின்னக்காரு மாதிரி வாங்கித்தா. இல்லா ட்டி அழுவேன். ஊம்...ஊம்

"எளவுமவன்! படுக்கையைவுட்டு எழுந்திருக்கிறபோதே அழு கையா? எலே ஏண்டா அழு வறே?' என்ருள் மருதாயி. 'அம்மா! ஒண்ணுமில்லே. சீக் கிரம் கஞ்சி குடிச்சிட்டு நான் ஊர்ப்பக்கம் போறேன். மாரி யாத்தாளுக்குக் கும்பம் போட ருங்களாம் பார்த்துட்டுவரேன்" என்ருன் சுப்பய்யன்.

'தம்பி! சாக்கிரதை! காருகீரு வரும். பத்திரம்' என்ருள் மரு தாயி.

"அதுகிடக்கு காருவந்தா சவாரி செய்துட்றேன்" என்று அலட்சியமாகக் கூறிவிட்டு ஊர் ப்பக்கம் போனன் சுப்பய்யன்.

ஹார்ன் சத்தம் பூம்! பூம்! என்றது. சுப்பய்யனுக்கு ஒன் றும் தோன்றவில்லே. ஸ்தம்பித்து விட்டான். ட்ரைவர் பின் ஸீட் டில் இருந்தான். விருந்து சாப் பிட்டுவிட்டுத் திரும்பும் குஷி யுடன் அமிர்தலிங்கம்தான் காரை ஓட்டிவந்தார். ப்ரேக் போட்டுப்பார்த்தார்; பிடிக்க வில்லே. அடுத்தகணம் கார் சுப் பய்யன் உடல்மீது சவாரி செய்துவிட்டது.

'ஐயோ! எஜமான்' என்று கத் தினன் ட்ரைவர்.

'என்ன? உசிர் இருக்கா பாரு. பீடை. ஊர் போய்ச்சேர நேர மாகுது.' என்ருர் அமிர்தலிங்கம்.

'சந்தேகந்தானுங்க! சேரிப் பையன். நேற்று அடிபட்ட பையன் போலிருக்குது என்ன செய்யறதுங்க?'

'என்னத்தைச் செய்யறது? எளவு பீடைங்க நாசமாப்போக. இந்தப் பறப்பசக சும்மா உட மாட்டாங்களே சரி, சரி. எடுத் துப்போடு உள்ளே! சேரிலே கொண்டுபோய்த் தொலேச்சுட்டு, பெத்தவங்க கையிலே அஞ்சோ பத்தோ அழுதுட்டுவரலாம்.' என் ருர் ஹரிஜன சேவகமணி அமிர் தலிங்கம்.

• • •

கார் சேரியை அடைந்தது. மருதாயி வீட்டு வாசலில் கார் நின்றது. மருதாயி ஆச்சரியப் பட்டாள். ஆனந்தப்பட்டாள். காத்திருக்கும் துக்கத்தை அவள் அறியவில்லே.

மருதாயி 'சுப்பய்யா' என்றலறி னுள். சுப்பய்யன் ஒருகணம் மலர விழித்தான். மறுகணம் கண்விழி கள் செருகிக்கொண்டன. சுப் பய்யன் பிணமானன். மருதாயி அழுதாள். 'கார் சவாரி பண்ண உயிரைவிட்டாயே' என்று புலம் பினள்.

கார் சவாரி! ஆம்! சுப்பய்யன் செய்த முதல் சவாரியும் அது தான்; கடைசி சவாரியும் அது தான். ஆனல் அது அவனுக்குத் தெரியாது. அவன்தான் உயி ரையே, சவாரிக்காக கொடுத்து விட்டானே!



அடிமை

ம்.பி.சுப்ரமண்யன்

★

அந்தத் தீர்மானம்தான் சரி என்று தோன்றியது ராகவனுக்கு. மிகவும் கடினமான தீர்மானந்தான். எவ்வளவோ யோசனை செய்தான். வேறு வழி ஒன்றும் தோன்றவில்லை. அது தான் சரியான முடிவு! மானமிழந்த பின் வாழ்வென்ன!

ஆபீஸில் அன்றுகூட ஆறு மணி வரையில் வேலை செய்தான். கடைசியாகத்தான் இந்த வாழ்வில் செய்வது இதுதானென்று எண்ணி அந்தக் கடிதத்தை எழுதினான்; மிகவும் சிறிய கடிதம்தான்.

'வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டதால் நான் தற்கொலை செய்துகொண்டேன்! ராகவன். 133 இருசப்பமுதலி தெருவு, புரசவாக்கம், சென்னை'.

கடிதத்தை எழுதித் தன் சட்டைப் பையில் போட்டுக்கொண்டான். ஆபீஸ் பைல்களை எடுத்து வைத்து விட்டு வெளியே இறங்கினான். நேரே சமுத்திரக் கரையை நோக்கி நடந்தான்.

போகும் பொழுது திரும்பவும் அவன் மனதில் போராட்டம் துவங்கியது.

'சீ என்ன தீர்மானம் இது! ஏதோ ஆபீஸில் முதலாளி கண்டபடி பேசினார் என்பதற்காக நம் உயிரையே மாய்த்துக்கொள்வதா? முட்டாள்தனம்! வாழ்க்கையில் தைரியம் இல்லாதவன்!'

வேறு விதமாகப் பார்க்கையில் அதுதான் சரியான முடிவாகத் தோன்றியது. மானமிழந்த பின் வாழ்வதெப்படி? இருபத்தைந்து வருடங்களாக மாடாக உழைத்தவனுக்கா இந்தத் திட்டும் பேச்சும்! அதுவும் ஆபீஸ் சிப்பந்திகள் முன்னால்!! கடைசியாக முதலாளி சொன்னது 'இவென்களெல்லாம் என்ன சொன்னாலும் ஏன் வேலையை விட்டுப் போறானுங்க, இந்தச் சம்பளம் எவன் கொடுக்கிறான். எல்லோரும் பணத்திற்கு அடிமைதானே!' என்பது அவன் நினைவை விட்டு அகலவேயில்லை.

ராகவனுக்கு பழைய சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நினைவிற்கு வந்தன.

பி. ஏ. பட்டம் பெற்றதும் ராகவன் கோசல் ராம் கம்பெனியில் குமாஸ்தாவாகச் சேர்ந்தான். அந்த வருடம்தான் அவனுக்கும் சாரதாவுக்கும் கல்யாணம் நடந்தது. ஐம்பது ரூபாய் சம்பளம்; அதை வைத்துக்கொண்டு மிகவும் செட்டாக சாரதா குடும்பம் நடத்துவாள். வருடங்கள் ஓடின. ராகவன் குடும்பமும் வளர்ந்தது. இப்பொழுது ராகவனுக்கு ஐந்து குழந்தைகள். மூன்று பெண்கள், இரண்டு பிள்ளைகள். மூத்தபெண்ணுக்கு சில வருடங்களுக்கு முன் கல்யாணம் பண்ணினான். மாப்பிள்ளைக்கு ரயில்வேயில் உத்தியோகம். இரண்டு பிள்ளைகளில் மூத்தவன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். இளையவன் இந்த வருடம் காலேஜிற்குப் போக வேண்டும். மற்ற இரண்டு பெண்களும் சிறு குழந்தைகள்.

ராகவன் பழைய குமாஸ்தா இல்லை இப்பொழுது. ஆபீஸில் மானேஜர். மாதம் ரூ. 350 சம்பளம். சௌகர்யமாகத்தான் குடும்பம் நடந்துகொண்டிருந்தது. ஆபீஸில்தான் இரண்டு வருடங்களாகத் தொல்லை. பழைய முதலாளி இறந்துவிட்டார். அவர் பிள்ளை கோபால்தான் இப்பொழுது எல்லா நிர்வாகமும். புதிய முதலாளி படித்தவன். ஆனால்முரடன். செல்வத்திலேயே வளர்ந்தவனாதலால் பிறர் கஷ்டமறியாதவன். மனம் புண்பட பேச அஞ்சமாட்டான். அவர் நன்மையை உத்தேசித்து ஏதாவது யோசனை சொன்னால் தர்க்கம் பண்ணி மனதை வேதனைக்குள்ளாக்கிவிடுவான். ராகவனுக்கோ ஒளிவு மறைவு இல்லாமல் பேசிப் பழக்கம்.

அன்று ஆபீஸில் நடந்த சம்பவம் ராகவனை உலுக்கிவிட்டது. பழைய முதலாளியாய் இருந்தால் ராகவனை அவன் செய்த காரியத்திற்குப் புகழ்ந்திருப்பார். கோபால் புகழ வேண்டாம். ஆனால் தன்னை அவ்வாறு பேசியிருக்க வேண்டியதில்லை. வீணாகத் தன்னை அவமானப் படுத்தியதாகவே தோன்றியது ராகவனுக்கு. விஷயம் வேறொன்றுமில்லை. கோபால் அன்று ராகவனிடம் 2000 தோலா தங்கம் வாங்கச் சொல்லிவிட்டு பங்களூர் போய்விட்டான். மத்தியானம் ராகவன் தங்கம் வாங்கப் போனதும் நிலவரத்தைப் பார்த்தான். விலை மணிக்கு மணி குறைந்து கொண்டிருந்தது. இந்த நிலைமையில் வாங்கினால் கட்டாயம் நஷ்டம் வரும் என்று தோன்றியது ராகவனுக்கு. தங்கம் வாங்காமலேயே திரும்பிவிட்டான். மறுநாள் கோபால் பங்களூரிலிருந்து திரும்பி வந்தான். ராகவன் தங்கம் வாங்கியிருந்தால் சுமார் ஐந்து ஆயாரத்திற்கு மேல் நஷ்டமேற்பட்டிருக்கும். அதை கோபால் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

'மிஸ்டர் ராகவன் நான் தங்கம் வாங்கச் சொன்னேன். வாங்க வேண்டியது உங்கள் கடமை' என்றான்.

'ஆமாம் ஸார் ஆனால் மார்க்கெட் நிலவரத்தைப் பார்த்தபோது நீங்கள் சொன்னபடி வாங்கினால் கட்டாயம் நஷ்டமேற்படும் என்று தோன்றியது, அதனால் வாங்கவில்லை' என்றான் ராகவன்.

'நான் சொன்னபடி நடக்க வேண்டியது உங்கள் பொறுப்பு லாபமோ, நஷ்டமோ நீங்கள் அறியவேண்டியதில்லை' என்றான்

'இதுவரை அப்படியில்லைஸார் ....' என்று ஏதோ சொல்லத் துவங்கினான். அதற்குள் கோபால் இடைமறித்து,

'நீங்கள் என் கீழ் சம்பளத்திற்கு இருப்பவர். நான் சொன்னபடி கேட்கவேண்டும்; நீர் ஒரு வேலைக்காரன் என்பதை மறக்க வேண்டாம்' என்றான் கோபால் கடுமையாக.

அதற்குள் கோபால் பக்கத்திலுள்ள பழைய வாடிக்கைக்காரர் ஒருவர் 'ஒங்க கடையிலே ரொம்ப நாளா இருக்கிறவர். நல்ல அனுபவசாலி. இப்படிப் பேசாதேங்கோ; வேலையை விட்டுப் போய்விடப் போகிறார்' என்றார்.

'ஆமாம் ஸார்! எல்லோரும் பணத்திற்கு அடிமைதானே! இந்தச் சம்பளம் வேறு எங்கே இவனுக்குக் கொடுப்பார்? வேலையையாவது விடுகிறதாவது!' என்றான் ஏளனமாகச் சிரித்துக் கொண்டே.

ஏதோ சினிமாவில் காண்பது போல மேலே கூறிய நிகழ்ச்சிகள் ராகவன் மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தன. கடைசியாக கோபால்சொன்னவார்த்தைகள் அவன் இளகிய மனதில் கூறிய முள்போலத் தைத்தது. தான் ஒரு அடிமை என்பதை அவன் பண்புள்ளம் ஏற்றுக் கொள்ளவில்லை. புழுவாகத் துடித்தான். ஆபீஸ் சிபந்திகள் முன்னால் தன்னை இவ்வாறு பேசியது எண்ணி ஏதோ சவுக்கடி பட்டவன்போல் துடித்தான். இனி இந்த ஆபீஸில் வேலை செய்ய முடியாது என்று தீர்மானித்து விட்டான். இந்த வயதில் மாதம் 350 ரூபாயில் தனக்கு யார் உத்தியோகம் கொடுப்பார்கள்? மானமிழந்து பணமும் இல்லாமல் எப்படி வாழ்வது இந்த உலகில்! இதை எண்ணி எண்ணித்தான் ஒரே தீர்மானத்திற்கு வந்தான் ராகவன். அதை நிறைவேற்றுவதற்காகத்தான் கடற்கரையில் நடந்துகொண்டிருந்தான்.

ஹைகோர்ட் கடற்கரையைத் தாண்டித் தனிமையான இடத்தில் கடலை நோக்கிச் சென்றான். அந்தி மயங்கிவிட்டது. கடற்காற்று குளுமையாக அடித்துக் கொண்டிருந்தது. ராகவன் மன எரிச்சலை சிறிது குளுமைப் படுத்தியது. கடலோரமாக வந்து அலைகளுக்கெதிரே நின்றான் அவன் மனதில் ஓயாது எழுந்து கொண்டிருந்த எண்ண அலைகளை நினைவூட்டின அந்தக் கடல் அலைகள். ஏனோ அந்த ஓயாத அலைகளைக் காணக் காண அவன் மன அலைகள் சிறிது நிதானப்பட்டன. அவன் மனமும் சிறிது நிதானமாக யோசனை செய்யத் தொடங்கியது.

'சாரதாவையும் குழந்தைகளையும் விட்டுவிட்டு நான் என்ன காரியம் செய்யத் துணிந்தேன்! மனம் புண்படப் பேசியதற்காக மனைவியையும், குழந்தைகளையும் பரிதவிக்க விட்டு கடலில் மாய்ந்துவிடுவதா? ஒரு ஆண் மகன், பகுத்தறிவுள்ளவன் செய்யும் காரியமா இது'! தானும் சாரதாவும் குழந்தைகளுடன் இன்ப வாழ்க்கை நடத்துவதை சிந்தித்துப் பார்த்தான்.

'அவர்கள் காட்டும் அன்புக்கு இதுவா நான் செய்யும் உபகாரம்? நடுக்கடலில் உள்ள கப்பலைவிட்டு மாலுமி ஓடிவிடுவது போல் அல்லவா நான் செய்யத் துணிந்த காரியம்! கம்பெனியிலிருந்து ராஜீநாமா செய்துவிட்டால் போகிறது. எங்காவது மாதம் 50 ரூபாய் அல்லது 75-லாவது ஒரு வேலை கிடைக்காதா? கோபுவின் காலேஜ் படிப்பை நிறுத்திவிட்டு எங்காவது வேலைக்கு அனுப்பலாம். ரகுவை கலாசாலைப் படிப்புக்கு அனுப்ப வேண்டாம் ஷார்டாண்டும் டைப்பிங்கும் இரண்டு மாதத்தில் படித்துவிடுவான்– அவன் ரொம்பவும் கெட்டிக்காரன்– எங்காவது நல்ல வேலை கிடைத்துவிடும், பிறகு நமக்கும் கஷ்டமில்லை–' என்று இவ்வாறு எண்ணி சமாதானமடைந்தான் ராகவன்.

'நாளையே கோசல்ராம் கம்பெனியிலிருந்து ராஜீநாமா செய்து விடுகிறேன். அவன் வேலை யாருக்கு வேண்டும். நான் அடிமையாம்! என்னை என்ன என்று நினைத்துக்கொண்டான்.' என்று எண்ணி வீட்டை நோக்கி நடந்தான். முன்பு எழுதி வைத்திருந்த கடிதத்தைக் கிழித்து காற்றிலே பறக்கவிட்டான்.

'ஏன் இவ்வளவு நாழி, ஆபீஸிலே இவ்வளவு நேரமா வேலை?' என்று வாஞ்சையோடு வாயிற்படியிலேயே வந்து கேட்டாள் சாரதா. அவள் குரலிலிருந்தே எவ்வளவு ஆவலாகக் கணவன் வரவை எதிர்பார்த்துக்கொண்

டிருந்தாள் என்று தெரிந்தது. குழந்தைகள் மைதிலியும் லலிதாவும் அப்பாவிடம் ஓடிவந்தனர். ஆசையுடன் கடைசிப் பெண் லலிதாவை வாரிஎடுத்துக்கொண்டான் ராகவன். இவர்களையெல்லாம் பார்த்துவிட்டுத் தற்கொலை செய்துகொண்டுவிடலாம் என்ற அவன் தீர்மானத்தை நினைக்கவே அவனுக்கு வெட்கமாக இருந்தது. சாரதா கொண்டுவந்த காப்பியைக் குடித்துவிட்டு தன் கோர்ட்டு, ஷர்ட்டை களைந்துகை கால் சுத்தம் செய்துகொண்டு வந்து உட்கார்ந்தான் ராகவன்.

'அப்பா காலேஜ் அட்மிஷன் கிடைக்கிறது கஷ்டமாம். அதனாலே இப்பவே எல்லா கலாசாலைக்கும் விண்ணப்பம் போட்டுவிடவேண்டும்' என்றான் ரகு.

'ஏன்னா ரகு சொல்றான் அவன் இரண்டு வருடம் கலாசாலையிலே படிச்சப்புறம் டாக்டருக்குப் படிக்கப் போகிறானாம். உன்னையும் அப்பாவை சௌக்கியமாக வைத்துக்கொவேன்' என்றாள் சாரதா பெருமிதத்துடன்.

'அப்பா, எங்க பேராசிரியர் சொன்னார்— எனக்கு இலவசமாக இங்கிலாந்திற்குப் போக அனுமதி வாங்கித்தருவதாகச் சொன்னார். நான்தான் சென்னை ராஜதானியிலேயே முதலாகத் தேருவேனாம். ஆனால் அதை நினைத்து அஜாக்கிரதையாக இருக்காதே என்றார்' என்று தன் பங்கைக் கூறினான் கோபு.

ராகவனுக்கு தன் குடும்பத்தின் பேரில் எல்லையற்ற பற்று. மணி மணியாகக் குழந்தைகள் படிப்பிலும் நடத்தையிலும் நல்ல பெயரே. அவர்களைப்பற்றி புகழ்ந்தல்லாமல் யாரும் குறை கூறி கேட்டதேயில்லை ராகவன்.

ராகவன் மனதிலே உறுதியாக விருந்த தீர்மானம் தன் மனைவியையும் குழந்தைகளையும் கண்டதும் ஆட்டம் கொடுக்க ஆரம்பித்தது. வந்ததும் கோசல் ராம் கம்பெனியிலிருந்து ராஜிநாமா செய்யப் போவதாகத் தெரியப்படுத்தவேண்டும் என்று எண்ணியிருந்தான். ஆனால் இப்பொழுது அதை அவர்களிடம் எப்படி கூறுவது என்று சிந்திக்கத்தொடங்கினான். தன் மனைவி மக்கள் கட்டும் கோட்டை எல்லாம் தன் முன்னாலேயே மணல்மேல் கட்டிய கோட்டைகளைப்போல் சரிந்து விழுவதை எப்படிக் காண்பது? என்ன செய்வது என்று அறியாமல் தவித்தான். முதலில் நினைத்ததுபோல் சிவனே என்று கடலில் மூழ்கியிருந்தால் இந்த மனக் கஷ்டமும் கவலையும் போராட்டமும் வேண்டியே இருக்காது என்று எண்ணி பெருமூச்சுவிட்டான்.

அன்று இரவெல்லாம் யோசனை செய்தான். யோசனை செய்தான். ஒரு தெளிவும் ஏற்படவில்லை. பணத்திற்கு அடிமையாக அவன் மனம் ஒப்பவில்லை. வேலையை ராஜிநாமா செய்யத் துணிவும் இப்பொழுது இல்லை.

காலை மணி எட்டிருக்கும். காப்பி சாப்பிட்டுவிட்டு என்ன செய்வது என்று தோன்றாது பழைய நினைவிலே இருந்தான் ராகவன்.

'ஸார்' என்று கூப்பிட்டுக் கொண்டே வந்தார் சேகரன். ராகவனுக்கு அடுத்த பதவியை கோசல் ராம் கம்பெனியில் வகிப்பவர் சேகரன்.

'வாருங்கள் சேகரன் எங்கே அதிகாலையில் இப்படி' என்று முகமன் கூறி அழைத்தான் ராகவன்.

'முக்கியமாக உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். நேற்று உங்களிடம் கோபால் நடந்துகொண்டது எங்களுக்கு யாருக்கும் பிடிக்கவில்லை. நீங்கள் எவ்வளவோ நல்லவர். உங்களிடம் அவன் அப்படிப் பேசியது உங்கள் மனத்தை எவ்வளவு புண்படுத்தியிருக்கும் என்று நாங்கள் அறிவோம். நீங்கள் ஒருவேளை வேலையை ராஜிநாமா செய்துவிடுவீர்கள் என்று தோன்றியது; அப்படிச் செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்ளத்தான் நான் இங்கு வந்தேன்' என்றார் சேகரன்.

'நீ நினைத்தது சரிதான் சேகர். நான் ராஜிநாமா செய்யலாம் என்றுதான் இருக்கிறேன்; ஆனால் அதற்குரிய தைரியம் இன்னும்வரவில்லை' என்றான்

'நான் என் சார்பிலும் மற்ற சிப்பந்திகள் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அப்படி செய்யக்கூடாது. வேண்டுமானால், முதலாளி நடத்தையைக் கண்டித்து எல்லோரும் ஸ்ரைக்' செய்வோம். எல்லோரும் இதற்குத் தயார்' என்றான் சேகர்.

'அதெல்லாம் அழகாக இருக்காது சேகர். என் மனதில் இப்பொழுது நிம்மதியில்லை பின்பு சொல்கிறேன்' என்றான் ராகவன்.

'தயவுசெய்து ராஜிநாமா செய்யாதீர்கள். இன்று கட்டாயம் ஆபீஸ் வரவேண்டும். பிறகு நாம் வேண்டுமானால் கலந்து ஆலோசித்து முடிவு செய்யலாம். நான் வருகிறேன்' என்றுகூறி விடைபெற்றுச் சென்றான் சேகரன்.

ராகவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. குடும்பம் ஒருபக்கம், தன் மானமும், மரியாதையும் ஒரு பக்கம் இழுப்பதாகத் தோன்றியது. ஏதாவது ஒன்றை பலி செய்ய வேண்டும், இல்லாவிடில் எப்படி நிலைமையைச் சமாளிப்பது.

குளித்துவிட்டு பூஜை அறையில் போய் உட்கார்ந்தான். அவன் மனப் போராட்டம் கண்ணீராகக் கசிந்தது.

'நான் உனக்கு அடிமை எனக்கு ஒரு வழி சொல்லமாட்டாயா கடவுளே!' என்று அவன் மனம் கதறியது.

அன்பே தெய்வம். தெய்வமே அன்பு. என்று பெரிய எழுத்தில் எழுதிய ஒருஅட்டையைப் படம் போட்டு மாட்டியிருந்தான் ராகவன். அது அவன் கண்ணில் பட்டது. ஆம்! அன்புதான் தெய்வம்; தெய்வம்தான் அன்புக்கு அடிமை, கடமைக்கும்அடிமைஎன்றுபளிச் சென்று தோன்றியது அவன் மனதில். அவன் மனதில் எழுந்த ஓயாத துன்ப அலைகள் ஒருஒருவைக் கண்டன.மனதிலே ஒரு சாந்தி பிறந்தது. தெய்வத்தை வணங்கிவிட்டு எழுந்தான் ராகவன்.

என்றும்போல் ஆபீஸிற்குப் புறப்பட்ட அவன் முகத்தில் ஒரு புன்சிரிப்பு, நடையிலே ஒரு உறுதி.

'ஆமாம் நான் அடிமைதான்; பணத்திற்கு அல்ல அன்பிற்கும் கடமைக்கும்' என்று அவன் வாய் முணு முணுத்தது.

பிரதாபசீலன் உத்தரவு பெற்றதும் அரசனைப் பணிந்து விடைபெற்று தர்பாரை விட்டு வெளிப்பட்டுத் தன் குதிரையின் மீதேறிக் கொண்டு அந்த ராக்ஷஸியின் அரண்மனைக்குப்போய் அந்த அரண்மனையைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு அங்கிருந்த ஜனங்களெல்லாம் தன் பராக்ரமங்கண்டு பிரமிக்கும்படி செய்தான்.

இதையறிந்த ராக்ஷஸி இவனைத் தன் மாளிகையின் ஓர் அறையின் பலகணி வழியே கவனித்தாள். இவனுடைய முகத்தில் அரசனுடைய சாயலிருக்கக் கண்டு 'இவன் சிறைச்சாலையிலிருக்கும் ராணிக்குப் பிறந்த பிள்ளையாயிருக்கவேண்டும்' எனத் தெரிந்துகொண்டு, 'இவனை எப்படியேனும் ராக்ஷஸர்களுக்கு இரையாக்கி ஒழித்துவிடவேண்டும். இவன் நமக்குப் பகைவனல்லவா?' எனத் தீர்மானம் செய்துகொண்டு அரசன் வரவை எதிர்பார்த்தபடி இருந்தாள்.

அரசன் அன்றிரவு வழக்கம்போல் அவளைக் காணவந்தான். அப்போது அவள் தன் நகைகளையெல்லாம் கழற்றி ஒரு மூலையிலெறிந்துவிட்டு இடையில் ஒரு கந்தற் புடவையுடன் தலைவிரி கோலமாய் கோபக்கிரகத்திற் படுத்துக்கிடந்தாள்.

அரசன் அவளுடைய அந்த அலங்கோலத்தைக் கண்டதும் வருத்தப்பட்டு, அவளிடம்போய் அவளை இரு கரங்களாலும் தூக்கியெடுத்து உட்காரவைத்து, 'கண்ணே! உனக்கு யார் என்ன செய்தார்கள்? ஏன் இந்தக் கோபம்? சொல். உனக்குக் கோபமூட்டியவன் யாராயிருந்தாலும் அவன் தலையை வாங்கிவிடுகிறேன்' என்றான்.

ராக்ஷஸி, பதில் பேசாமல் விம்மி விம்மி அழுதாள். அரசன் அதுகண்டு மனமிளகியவனாய், 'கண்மணீ! நான் உனக்கு என்ன செய்யவேண்டும் சொல். அதை இப்போதே செய்து முடிக்கிறேன்'— என்று கெஞ்சிக்கேட்டான். அப்பொழுதும் அவள் பதிலே பேசாமல் விம்மி விம்மி அழுதாள். அதனால் அரசன்— 'என்ன விபரீதம் விளைந்ததோ' என அஞ்சி, அவளுடைய காலைப் பிடித்துக் கொண்டு பணிந்து கேட்டான்.

இப்பொழுதவள் கோபத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்து, 'எனக்கு ஹிருதயமே இல்லையெனத் தீர்மானம் செய்துவிட்டீர்களா? இப்பொழுதே என்னை என் தாயார் வீட்டிற்கனுப்புங்கள். என் பிறந்த வீட்டாருடைய க்ஷேமலாபங் கேட்டு நாள் மாதக்கணக்கிற் கடந்துவிட்டதன்றோ?'—என்றாள்.

அரசன்—'நல்லது—இதற்குத்தானா கோபம்? நாளைக்கே அதற்குவேண்டிய ஏற்பாட்டைச் செய்கிறேன். கவலைப்படாதே'—என்று கூறி மேலே பேசுவதற்குள் அவள் குறுக்கிட்டு—'அதிருக்கட்டும்—முன்னே அவர்களுடைய க்ஷேமம் தெரிந்துகொண்டு வருவதன் பொருட்டு இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் புதுக்காவலாளியை அனுப்புங்கள்! இவன் அதிசூரனாகக் காணப்படுகிறான். இவனாலேதான் அது செய்ய முடியும். நான் இவனிடம் ஒரு கடிதம் கொடுத்தனுப்புகிறேன். அவர்களிருப்பிடத்திற்குப்போக வழியையும் தெரிவிக்கிறேன். அங்கே-

பாடும் தண்ணீர்! வனஸ்பதி ஏற்றமரம்—இவைகளிருக்கின்றன. இவன் என் உறவினரைக்கண்டு, எனக்காக இவைகளைக் கேட்டால் அவர்கள் சந்தோஷமாகக் கொடுத்தனுப்புவார்கள். இவனையும் வெகுவித வெகுமதிகளால் சந்தோஷப்படுத்தி அனுப்புவார்கள். நாளைய தினமே அனுப்புங்கள். இல்லையானால் நான் உங்களைவிட்டு விலகிவிடுவேன். என் க்ஷேமத்தில் உங்களுக்கு விருப்பமிருக்குமானால் இன்றைக்கே இவனை அனுப்புங்கள்' என்றாள்.

அரசன்—'இதோ—அப்படியே செய்கிறேன். கவலைப் படாதே'—என்று கூறி அவளைத் தேற்றிவிட்டுத் தன் மகனாகிய காவலாளியை அப்பொழுதே தன் முன் வரவழைத்து, ராக்ஷஸ ராணியின் விருப்பத்தைக்கூறி அவளிடமிருந்து ஒரு கடிதமும் வாங்கிக்கொடுத்துத் தாமதியாமற் போய்வரும்படி கட்டளையிட்டான். அப்பொழுது ராக்ஷஸி அவனையழைத்து அங்கே போய்ச் சேர்வதற்குரிய வழியை விவரமாய்க் கூறி அவனை அனுப்பினாள்.

இங்ஙனம் புறப்பட்ட பிரதாபசீலன் தன் குதிரை மீதேறிக்கொண்டு ஆகாய வழியே பிரயாணம் செய்து பல நாட்களுக்குப்பின் ஒரு பெரிய வனத்தையடைந்து அங்கே ஓர் ஆற்றங்கரையில் ஒரு யோகியைக் கண்டு அவரை வணங்கி, 'சுவாமிகள் எனக்கொரு உபகாரம் புரிய வேண்டும்' என்று வேண்டினான்.

யோகி, அவனை அன்போடு நோக்கி, 'உனக்கு என்னாலாக வேண்டியதென்ன? சொல்' என, அவன் ராக்ஷஸ ராணியைப் பற்றித் தனக்குத் தெரிந்தவரையில் கூறி—'நான் இந்த ராணியினுடைய மாளிகைக் காவலாளி. இந்த ராணியினுடைய பெற்றோரைக் கண்டுபிடித்து அவர்களிடம் இக்கடிதத்தைக்கொடுத்து அவர்களுடைய க்ஷேமம் தெரிந்து கொள்வதுமல்லாமல் அவர்களிடமிருந்து — பாடும் தண்ணீர் வனஸ்பதிமரம் — இவ்விரண்டையும் வாங்கிவர வேண்டும். மகாராஜா இப்படிக் கட்டளையிட்டனுப்பியிருக்கிறார்கள். இந்தப் பணியை நான் எளிதில் நிறைவேற்றத்தக்க உபாயங் கூறியருளவேண்டும்' என்று பிரார்த்தித்துக்கொண்டு, அவரிடம் ராக்ஷஸி கொடுத்த கடிதத்தையும் கொடுத்தான்.

யோகி, அக்கடிதத்தின் மேல் விலாசத்தைப் படித்துப் பார்த்து—'எல்லாம் தெரிந்துகொண்டேன். கடிதத்தை வைத்துக்கொள். இன்றிரவு இங்கே தங்கியிரு. காலையிற் புறப்பட்டுப்போ. உன் எண்ணம் நிறைவேற ஆண்டவன் அருள் புரிவார்' என்று கூறி அவனைத்தம்மிடம் நிறுத்திக் கொண்டார்.

பிரதாபசீலன் யோகியின் கட்டளைப்படி அன்றிரவு அவருடைய விருந்தாளியாயிருந்து அவருடன் பல பேச்சுக்கள் பேசிக் கொண்டிருந்து பின் படுத்து நித்திரை போய்விட்டான்.

அவன் நன்றாய் உறக்கமுற்றதைக்கண்ட யோகி அவனிடமிருந்த கடிதத்தை மெதுவாய் எடுத்து நிதானமாய்ப் படித்துப் பார்த்தார்—அதில்

அன்புள்ள சகோதர!

இக்கடிதம் கொண்டுவரும் சிறுவனைக்கொன்று விழுங்கிவிடவேண்டும். இவனிடம் வேறெதுவும் பேச வேண்டாம்.

உன் பிரியமுள்ள

ஆடான ராக்ஷஸி

என்றெழுதியிருந்தது.

யோகி அக்கடிதத்தைக் கிழித்துத் தீயிலே போட்டு எரித்துவிட்டு வேறொரு காகிதத்தில்—

அன்புள்ள சகோதர,

இக்கடிதம் கொண்டு வருபவன் என்மகன். உன்னுடைய அருமை மருமகன். இவனை அன்பாய் உபசரித்துச் சில நாட்கள் அவ்விடம் வைத்திருந்து அனுப்பும்போது பாடுந்தண்ணீர் — வனஸ்பதி மரம் இரண்டையும் தவறாமல் இவனிடம் கொடுத்தனுப்பவும்.

உன் பிரியமுள்ள

ஆடான ராக்ஷஸி

என்றெழுதி அதைப் பிரதாபசீலனுடைய சட்டைப் பையிலே வைத்துவிட்டார்.

பிரதாபசீலன் காலையில் எழுந்ததும்—யோகி அவனுக்குக் காலையுண்டியளித்து—அவன் மன உற்சாகமடையும்படி சில உறுதிமொழிகள் கூறி அவன் எளிதில் ராக்ஷஸ நகரம் போய்ச் சேருவதற்குரிய குறுக்கு வழியையுங் காட்டிக்கொடுத்து—'அவ்விடத்தில் உனக்குச் சகல உபசாரங்களும் நடக்கும். அடைய விரும்பியவைகளையெல்லாம் அடைவாய். திரும்பி வரும்போது—அங்கே மாளிகையின் முன் மானிட எலும்புக் குவியல் குவித்திருக்கும். அந்த எலும்புகளையெல்லாம் மறவாமல் எடுத்துக்கொண்டு என்னிடம்

வந்து சேர். பிறகு நான் கூறுகிற ஆலோசனைப்படி நட. புறப்படு தைர்யமாய்' என்று கூறி அனுப்பினார்.

பிரதாபசீலன் யோகியை வணங்கி விடை பெற்றுத் தன் குதிரை மீதேறி ஆகாய வழியே சென்று ராக்ஷஸ நகரை அடைந்தான்; அங்கே ஒரு மறைவான இடத்தில் தன் குதிரையைப் பத்திரப்படுத்திவைத்துவிட்டுப் பின் ராக்ஷஸனுடைய மாளிகை சென்று அங்கிருந்த காவலாளியிடம் தான் கொண்டு போன கடிதத்தைக் கொடுத்தான். அவன் அக்கடிதத்தை அம்மாளிகையினுள் வீற்றிருந்த தன் தலைவனிடம் கொடுத்தான்.

அவன் அக்கடிதத்தைப் படித்துப் பார்த்ததும்—'ஓ என் தங்கையின் பிள்ளை வந்திருக்கிறான்' என்று கூறிக் கொண்டே சந்தோஷமாய் வெளியே வந்து—பிரதாபசீலனைக் கைகொடுத்து வரவேற்று மாளிகைக்குள்ளே அழைத்துப் போய்த் தன்னுடன் அமர்ந்திருக்க செய்து—க்ஷேமலாபங்களை விசாரித்த பின் அங்கிருந்த தன் அன்னையாகிய ஒரு கிழவியிடம் அவனைக்காட்டி, 'அம்மா இவன் உன் பேரன். இவனுக்கு வேண்டிய உணவு முதலியவை கொடுத்து ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்' என்று அவனை அவளிடம் ஒப்புவித்தான்.

பிரதாபசீலன் நடக்கும் நடவடிக்கைகளைக் கண்டு தான் ராக்ஷஸர்களின் வசத்திலிருப்பதைத் தெரிந்து கொள்ளாமலில்லை. தெரிந்து கொண்டானாயினும் சிறிதும் அஞ்சாமல் மேலும் நடப்பவைகளைக் கவனிக்கவேண்டு

மென்கிற கருத்தில் பொறுமையுடனிருந்தான். அங்கு அவர்கள் தன்னை நடத்துவதற்கேற்றபடி நடிப்பதிற் கவனமுடையவனாயுமிருந்

கடைக்காரர்:—"காது போன்" வாங்கிட்டுப் போனீங்களே, நல்லா கேட்குதா? இந்த சந்தோஷச் செய்தியை உங்க சொந்தக்காரங்களுக்குச் சொன்னீங்களா?

மற்றவர்:—ஆ! ரொம்ப நல்லா கேட்குதுங்க...ஆனா, அதுக்குள்ளே அவுங்க கிட்டே சொல்லிடுவேனா? இப்பத்தானே அவுங்கள்ளாம் என்னைப்பத்தி என்ன பேசிக்கிருங்க என்பது தெரிய வருது!

தான்; நாடிவந்த அலுவலை முடித்துக்கொண்டு அவர்களிடமிருந்து வெளிப்பட்டுத் தப்பச் சமயமும் பார்த்துக் கொண்டிருந்தான்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் தக்க சமயம் வாய்த்தது. அப்பொழுது பிரதாப சீலன் கிழவியைப் பார்த்து, 'நான் இங்குள்ள அதிசயங்களையெல்லாம் பார்க்க விரும்புகிறேன். பார்க்கலாமா?' என்றான். கிழவி, 'இதோ எல்லாம் காட்டுகிறேன் வா' என்று அழைத்துப்போய் அவனுக்கு பிரம்மாண்டமான அந்த மாளிகையிலுள்ள அதிசயங்களையும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள அதிசயங்களையும் காட்டிக்கொண்டே வந்தாள்.

அப்படிக் காட்டிக்கொண்டு வருகையில் கிழவி அம்மாளிகையின் பின்புறத்து நந்தவனத்தின் நடுவே விளங்கிய பெரியதோர் மண்டபத்திற்குள் பிரவேசித்தாள். அம்மண்டபத்தில் பலவிதமான கிளிகள், மாடப்புறாக்கள், மயில்கள், நாகணவாய்ப் புள்கள், வான்கோழிகள் கோழிகள், வானம்பாடிகள் முதலிய பலவகையான பறவைகளிருந்தன. அவற்றையெல்லாம் கண்ட பிரதாபசீலன் அதிசயமடைந்து, 'பாட்டி, இப்பறவைகளையெல்லாம் இங்கே ஏன் வளர்க்கிறீர்கள்?' என்று கேட்டான்.

கிழவி 'அப்பா, கேள் இவைதாம் எங்களுடைய உயிர்கள். இவைகள் உயிரோடிருக்கிற வரையில் எங்களுடைய உயிருக்குத் தீங்கில்லை. இவைகள் இறந்துவிடின் நாங்கள் இறந்துவிடுவோம். இதனாலேதான் நாங்கள் இவைகளை இந்தப் பத்திரமான இடத்தில் வைத்து வளர்த்து வருகிறோம். இதோ இங்கிருக்கும் இந்தக் கருப்புப் புறாதான் என உயிர். இந்த வெள்ளைப் புறாதான் உன் மாமாவின் உயிர். இந்தப் பெண் கோழிதான் உன் அன்னை' என்று கூறி மற்றப் பறவைகளில் முக்யமானவைகளைப் பற்றியும் தெரிவித்தாள்.

பிரதாபசீலன் – 'பாட்டி! சந்தோஷம்! பாடுந் தண்ணீரும் வனஸ்பதி மரமும் இங்கே இருப்பதாக அம்மாள் கூறினாள். அவை எங்கே இருக்கின்றன?' என்று கேட்டான்.

கிழவி, 'நல்லது அவைகளைக்காட்டுகிறேன்'– என்று அவனை வேறொரு தோட்டத்திற்கு அழைத்துப் போய் அங்கே உயரமாய் வளர்ந்திருந்த ஒரு மரத்தைக் காட்டி 'இதுதான் வனஸ்பதி மரம்' என்று தெரிவித்து வேறொரு பக்கத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கே ஒருபெரிய அறையில் பத்திரமாய் வைக்கப்பட்டிருந்த தண்ணீர் நிறைந்த கண்ணாடிப் புட்டிகளைக் காட்டி, இப்புட்டிகளிலுள்ள ஜலந்தான் பாடுந்தண்ணீர் என்றாள்.

பிரதாபசீலன் கேட்டு மகிழ்ந்து பாட்டியைக் கொண்டாடிப் பணிந்தான். இதனால் கிழவியும் சந்தோஷமடைந்து அவனை இன்னும் பல இடங்களுக்கு அழைத்துப்போய்ப் பல விநோதங்களைக்காட்டியதுமன்றி, இரத்தினங்கள், ஆபரணங்கள், தங்கப்பாளங்கள், வெள்ளிப் பாளங்கள் இவைகள் நிறைந்த அறைகளையும் காட்டினாள்.

(தொடரும்)

"உம்ம பையன் பெண்ணைப் பார்த்துட்டு வந்து என்ன சொன்னான்?"

"இந்த ஜன்மத்துக்குக் கல்யாணமே வேண்டாம்னு சொல்லிட்டான்!"

சாரணர் உலகம்

நமது தொடைகளையும் கால்களையும் பிணைக்கும் இடத்திற்கு தான் முழங்கால் என்று பெயர். இந்த பிணைப்பை மூடியிருக்கும் பாகத்திற்கு முழங்கால் சில்லு என்று பெயர். இது நமது அவயவத்தில் மிகவும் முக்கியமான பாகங்களில் ஒன்ருகும். கால்கள் நாம் நடக்க உதவுகிறது அல்லவா? நமது கால்களை மற்ற பாகங்களுடன் பிணைப்பது இந்த முழங்கால்தான். அதுதான் இதன் முக்யத்வம்.

இது எந்தெந்த சமயங்களில் ஒடியும்? நமது அவயவத்தில் இருக்கும் எந்த பாகமும் நேர்மையான தாக்குதலுக்குட்பட்டால் ஒடியுமல்லவா? அதற்கு முழங்காற் சில்லு மட்டும் விதிவிலக்கல்ல. ஆதலால் இதுவும் நேரிடையான தாக்குதலுக்குட்பட்டால் நிச்சயமாகஒடியும்என்றுசொல்லலாமல்லவா? நமது கால்களும், முழங்காற் சில்லும் நேரிடையான தாக்குதலுக்குட்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் சில இருக்கின்றன. நமது நாடு ஹாக்கி விளையாட்டில் பிராபல்யம்பெற்றதல்லவா? இந்த ஹாக்கி விளையாட்டு மிகவும் கஷ்டமானது. விளையாடும் பொழுது பலவித அடிக்குட்பட நேரும். சில சமயம் அகஸ்மாத்தாக அடி விழும். சில சமயம் வேண்டுமென்றே சமயம் பார்த்து அடிப்பார்கள். இது விளையாட்டின் தப்பல்ல. விளையாடுபவர்களின் தப்பு. யாராவது ஒருவன் எதிர்க்கட்சியில் நன்ருக விளையாடினுல்வேண்டுமென்றே பந்தை விட்டு 'ஸ்டிக்'கினுல் காலைப் பார்த்து அடிப்பார்கள். இது விளையாடுபவர்களின் கோழைத்தனமும், மிருகத்தனமுமாகும். இந்த சமயங்களில் அடி பலமாக முழங்காற் சில்லின்மேல் விழலாம். முழங்கால் சில்லு ஒடிவது அடியின் பலத்தைப் பொறுத்திருக்கிறது.

முதற் சிகிச்சை

★

இது ஒடிய வேறு சந்தர்ப்பம் இருக்கிறதா? இருக்கிறது. இதே விளையாட்டை எடுத்துக் கொள்வோம். விளையாட்டின் மேலுள்ள பற்றினுலும், உற்சாகத்தினுலும் சில சமயம் நம்மை மீறி அதிக முயற்சியுடன் விளையாட முற்படுகிருேம். இவ்வாறு ஆடுகையில் முழங்காலின் பக்கத்திலுள்ள சதைகள் அதிக சிரமத்திற்கு உள்ளாகிறது. இது கடைசியில் முழங்கால் சில்லை இரண்டாக ஒடித்துவிடும்.

படம். 1.

இதை கண்டு பிடிக்க சில அடையாளங்கள் இருக்கின்றன. ஒடிந்த பக்கத்தின் காலை அடிக்குட்பட்டவனுல் உபயோகிக்க முடியாது. இது முதல் அடையாளம். மேலும் முழங்காலில் வீக்கம் அதிகமிருக்கும். இதுவும்தவிர கையால் தொட்டுப்பார்த்தால் இரு துண்டுகளுக்கிடையே ஒருபள்ளம் தெரியும். இது மிகவும் முக்கியமான அடையாளம்.

இதற்கு சிகிச்சை யென்ன? முதலில் அடிபட்டவனை படுக்க வைக்கவேண்டும்.படுக்கவைக்கையில் அவன் முதுகு கீழ்படும்படியாக இருக்க வேண்டும். இதன் பிறகு அவன் தலையையும், தோள் பட்டையையும் தூக்கி தாங்கி பிடிக்கவேண்டும். அவனுடைய அடிபட்ட காலை தூக்கிப் பிடிக்க வேண்டும். இதற்கு முதற் சிகிச்சை செய்ய குறைந்தபக்ஷம் இரண்டு பேராவது வேண்டும்.

காலைத் தூக்கிப் பிடித்த பிறகு ஒரு சிம்பை காலுக்கடியில் வைக்க வேண்டும். இது தொடையிலிருந்து வரவேண்டும். கணுக்காலுக்கடியிலும் சிம்பிற்கு மேலாகவும் துணி முதலிய போன்ற மிருதுவான வஸ்துக்களை வைக்கவேண்டும்.



படம். 2.

இதன் பிறகு 'பாண்டேஜ்'களை போட வேண்டும். இங்கு இரு கால்களையும் சேர்த்து பீகர் ஆப் எய்டடைத் தவிர மற்ற பாண்டேஜ்கள் வராது. இதை நன்கு கவனத்தில் வைக்க வேண்டும். முதலாவது பாண்டேஜ். இது முழங்காலுக்கு சற்று மேலாக வரும். இரண்டாவது பாண்டேஜ் காலின் மத்தியில் வரும். இவை இரண்டும் அகல கட்டுகளாக இருக்கவேண்டும். மூன்ருவது பாண்டேஜ் இது முழங்காலின் அடிக்கு மேலாகவும் கீழாகவும் வரும். ஆனுல் இரு தனி பாண்டேஜ்கள் அல்ல! ஒரு குறுகலான கட்டின் மத்திய பாகத்தை முழங்காலிற்கு சற்று மேலாக வைக்கவேண்டும். இதன் பிறகு பாண்டேஜின் நுனிகளை கீழாக கொண்டுபோக வேண்டும். அங்கு முடிச்சுப் போடாமல் இதையே அடிபட்ட பாகத்திற்கு கீழாகமேலுக்குக் கொண்டுவந்து கட்டிவிட வேண்டும்.

இவ்வாறு செய்த பிறகு மற்ற காலை தூக்கி அடிபட்ட காலிற்கு சமமாக கொண்டு வரவேண்டும். இங்கும் மட்டும்தான் இரு கால்களையும் சேர்த்து முடிச்சு வரவேண்டும். மற்ற இடங்களில் பாண்டேஜ்களை ஒரே காலில் தான்போடவேண்டும். மற்றகாலை சமமாகக் கொண்டுவந்த பிறகு பீகர் ஆப் எய்ட் பாண்டேஜ் போட வேண்டும். அடிபட்ட கால் கீழ்படாமலிருக்க கம்பளி முதலியவைகளை கீழே வைத்து காலை தாங்கவேண்டும்.

கடைசியாக ஐஸ் ஒத்தடம் கொடுப்பது நலம். அல்லது துணியைத் தண்ணீரில் நனைத்து அடியின்மேல் வைக்கலாம்.

இதுவும் ஒரு ஸ்ட்ரெச்சர் கேஸ் தான்.

சதுரங்க ஆட்டம்

உலக நிபுணர்கள் சதுரங்கப்போட்டி ஒன்று ஸ்விட்ஸர்லாந்தில் சென்ற ஆண்டிலே நடந்தது. பாட்வினுக்கு எதிராக ஆடவல்ல மகா நிபுணரைத் தேர்ந்தெடுக்க நடந்த போட்டி அது. சமீப காலத்தில் சதுரங்க உலகத்திலே அதுவே முக்கிய நிகழ்ச்சி எனலாம். இத்தகையமகத்தான சமயத்திலேதான் சதுர ஆட்டத்தில் காணும் நவீன 'உருப்படிகள்' வெளிவரும் என்று நாம் எதிர்பார்க்கிருேம். 'தாமதிக்கப்பட்ட ஸாமிஷ் திட்டம்' என்பது இந்தப் போட்டி ஆட்டங்களில் மிகப் பிரபலமாக வந்த ஒரு 'உருப்படி'யாகும்.

ஸாமிஷ் திட்டம்

★

எஸ். கே. சுப்பிரமணியம்

இந்த ஸாமிஷ் திட்டம் என்பது மந்திரி பக்கத்துச் சதுரங்க ஆட்டத்திற்கு ஆரான் நிம்ஜோவிட்ச் என்னும் மகாநிபுணர் கண்டுபிடித்த பாதுகாப்புத் திட்டத்தை எதிர்க்கும் ஒரு வழியாகும். நேரான ஸாமிஷ் திட்டம் 1931ம் ஆண்டிலேயே டாக்டர் ஆலிகைனுல் ஸாலோ பிளாருடன் ஆடப்பட்டது (நைஸ் போட்டி) என்று 'மாடர்ன் செஸ் ஓபெனிங்க்ஸ்' கூறுகிறது. ஸாமிஷ் வெள்ளையின் நான்காவது நகர்த்தலிலேயே தமது ஆளை மந்திரி யானை மூன்றில் வைக்கவேண்டும் என்ருர். அது பழைய ஆட்டமாகிவிட்டது. இக்காலத்தில் அதன் சூக்ஷ்மம் எல்லோருக்கும் தெரியும். எனவே, நிபுணர்கள் அந்த நகர்த்தலைச் சிறிது தாமதம் செய்தேவைப்பது நலம் என்று கருதுகிருர்கள். மேற்கூறிய ஸ்விட்ஸர்லந்து சதுரங்கப் போட்டியில் வந்த பல ஆட்டங்கள் இந்தத் தாமதிக்கப்பட்ட ஸாமிஷ் திட்டத்திலே அமைந்திருக்கின்றன. அவற்றில் ஒரு ஆட்டத்தை இங்கு தருகிருேம். பெயர் பெற்ற பால் கெரீஸ் இந்த நவீன திட்டத்தால் நிம்ஜோவிட்ச் பாதுகாப்பை இவ்வாட்டத்தில் எதிர்க்கின்ருர். கெரீஸ் இந்த ஆட்டத்தில் தோற்றுப் போகிருர். எனினும் அவர் நன்ருக ஆடவில்லை என்று சொல்லுவது சரியன்று. இந்த தாமதிக்கப்பட்ட ஸாமிஷ் திட்டமே அவ்வளவு சரியான உருப்படியாக இன்னும் வரவில்லை என்று சொல்வதே பொருத்தமாகும். முழுதும் தெளிவுபடவில்லை என்பதனுலேயே இதனை ஒழித்துவிடுவதும் தவருகும். ஆராய்ச்சியிலும் போட்டியிலும் இன்னும் பல விஷயங்கள் இத்திட்டத்தைப்பற்றி வெளியாக வேண்டியிருக்கின்றன எனவே சதுரங்க உலகம் நம்புகிறது. முழுதும் விஷயம் தெளிவடைந்தால் அதன்பின் நிபுணர்கள் போட்டியில் இதனைக் காண்பதே அரிதாகிவிடும்! இப்படித்தானே ஆர்தடாக்ஸ் பாதுகாப்பு, ஜியாகோ பியானே, கிங்கஸ் காம்பிட் முதலான ஆரம்ப ஆட்டங்கள் அரிதாகிவிட்டன! எனவே, இந்த ஸாமிஷ் திட்டத்தை நாம் இப்பொழுதே ஆராய்ந்து, ஆட்டப் போட்டிகளில் பிரயோகம் செய்ய வேண்டும். வெற்றியும் தோல்வியும் ஒருவர் பங்கல்ல! விஷய ஆராய்ச்சியினுல் அறிவு விளக்கம் ஏற்படுவதே முக்கியமாகும்.

ஆட்டம் 57



ஸ்விட்ஸர்லாந்து போட்டி, 1953

வெள்ளை	கருப்பு
கெரீஸ்	அவெர்பாக்
1. ஆ—ம 4	கு—ரா. ச. 3
2. ஆ—ம. ச. 4	ஆ—ரா 3
3. கு—ம. ச. 3	ச—கு 5

இது நிம்ஜோவிட்ச் பாதுகாப்புத் திட்டம்.

4. ஆ—ரா 3

இது மகா நிபுணர் ரூபின்ஸ்டீன் கையாண்ட முறை. ரா. சகடு வெளிவரவும், மையத்திலுள்ள ஆளைக் காக்கவும் பயன்படுகின்றது. ஆனுல், நேரான ஸாமிஷ் திட்டம் 4. ஆ—ம. யா. 3 ஆட வேண்டும் என்பதாகும். வந்த சகடை உடனே தாக்குவது அதன் நோக்கம், யானை ஆளை இப்படித் தள்ளுவது ஆரம்ப ஆட்ட விதிகளுக்குப் புறம்பானது. எனவே அது நவீனமானதொரு திட்டம். பழைய விதிகளுக்கு உட்பட்டு கெரீஸ் ஆடுகிருர். பழையதும் புதியதும் கலந்திருப்பதை இதில் காணலாகும்.

4. .... 0—0

5. ச—ம 3 ஆ—ம 4

இந்த நகர்த்தல் நிம்ஜோவிட்சு பாதுகாப்புத் திட்டத்திற்கு மாருனது. அத்திட்டத்தின்படி மையத்தில் ஆள்களை வைக்காமல் யானையாலும் குதிரையாலும் சகடாலும் மையத்தைக் காக்க வேண்டும். ஆ—ம 4—க்கு ஆடுவது அவசியமானுல் தவிர வேறு நிலைகளில் ஆடக்கூடாது. இப்பொழுது அவசியம் இல்லை. இந்த நகர்த்தல் என நினைப்பது சரியாம்.

6. கு—ச 3 ..... ஆ—ச 4

இந்த ஆட்டம் நி. பாதுகாப்புக்கு அவசியமாகிறது.

7. 0—0 கு—ச 3

8. ஆ—ம. யா. 3

இதுதான் தாமதிக்கப்பட்ட ஸாமிஷ் திட்டம். வெள்ளை தன் காய்கள் இரண்டை வெளியே கொண்டுவந்து மையத்தைப் பாதுகாத்தபின் காஸில் பண்ணி, ஸாமிஷ் நகர்த்தலைச் செய்கின்றது. பழைய ஆட்ட விதிகள்படி. பார்க்கவேண்டுமானுல், ம. சகடு வெளியே வரவும், யானைகள் மையத்தைப் பார்க்கவும் முயற்சி செய்ய வேண்டும். ஆனுல் இந்த ஒரு நகர்த்தலை ஆராய்வதே நாம் கொண்டுள்ள துணிவு ஆதலால் இதனை இப்பொழுது கண்டித்தல் கூடாது.

8. ச×கு

9. ஆ×ச ஆ—ம. கு. 3.

நாஜ்டார்ப்–ரெஷிவ்ஸ்கீ போட்டி ஆட்டங்களில் இந்த நகர்த்தல் வெகுவாகக் கையாளப்பட்டது. வெள்ளைச் சகடு வெளிவர இது வழியாகிறது.

10. கு—ரா 2

இந்த குதிரையைக் கருப்பு சகடு வெட்டு வெட்டினுல் கருப்பு குதிரை ரா. ச. 3–யில் இருந்து வெளியேற வேண்டும்; வெள்ளை ஆ—ரா 4—க்குத் தள்ளமுடியும். எனவே இது சரியேயாம்.

10\. .... — ச—கு 2
11\. ஆ—ச 4

இது கருப்பு ஆள் திட்டத்தைப் பலவீனப்படுத்துகிறது. வெள்ளையின் மந்திரி சகடு வேடிக்கை பார்த்திருக்கிறது!

11\. .... — கு—ம. யா. 4
12\. ச. ஆ×ஆ

இப்பொழுது நிம்ஜோவிட்ச் பாதுகாப்பு வலுக்கிறது. ஆனால் எடுக்காமல் காயால் கருப்பு வெட்டுகிறது. சரியேயாம். இதைச் செய்யாவிட்டாலும் வெள்ளைக்குக் கஷ்டம் உண்டு. கருப்பு சகடு யானை–3; பின் ஆ×ஆ செய்வதாக பயமுறுத்துகிறது. மொத்தத்தில் வெள்ளைக்கு ஆட்சியிடம் குறைவாயிருக்கிறது–ஒரு சகடு பயனற்றிருப்பதும் கவனிக்கவேண்டியதாம்.

12\. .... — ம×ஆ!
13\. ம—ரா 2 — ஆ×ஆ
14\. ரா. ஆ×ஆ — கு—கு 6
15\. யா—கு 1 — கு×ச

இதனால் ஒரு பயனற்ற காயை ஒரு போக்கிடமற்ற குதிரை சமவெட்டு செய்கிறது. ஆராயவும்! வெள்ளையின் மைய ஆட்சியே முக்கியம் என்பது தெளிவாயிருக்கிறது.

16\. ம. யா.×கு — ம. யா. ச 1
17\. ம—கு 2

யா. ஆளைக்காக்க வேண்டிவருகிறது.

17\. .... — ம—ம 3
18\. ஆ—ச 5 — ஆ×ஆ
19\. ச×ஆ — யா—ச 2

வெள்ளையின் பலவீனமான வரிசையைத் தாக்க கருப்புக்கு பலம் இருக்கிறது.

20\. ஆ—ச 4 . . . , — யா–ம 1

மையத்தில் வெள்ளை ஆள் பலவீனமாயிருக்கிறது.

21\. யா—ச 4 ?

ம. யா—ம 1–க்கு வருவது இந்நிலையில் பொருத்தமானது. யானைகளைப் பிரிப்பது நலமன்று. இது விதியாகும்.

21... — ஆ—ரா. கு. 4!

தைரியம்தான்! ஆனால் வெள்ளை பலசாலியல்லவா!

22 யா—ச 2 — ம×ம.ஆ.

வெற்றியின் முதல் படி. பலவீனத்தால் வந்தது கேடு வெள்ளைக்கு.

23 ம×ம — யா×ம
24 ம. யா—ரா. ச. 1 — யா—ம 3
25 ஆ—ரா. யா. 4 — ஆ×ஆ
26 யா—ச 4 — யா—ச 4

கறுப்பு 26–ம் நகர்த்தல் செய்த பின் உள்ள நிலையைப் படத்தில் காணவும். இப்பொழுது கறுப்புக்கு இரண்டு ஆள் அதிகம் இருக்கிறது. முன்னால் கொடுத்த ஆளுக்குப் பதிலாக வெள்ளைக் கறுப்பு யானை ஆளை எடுக்கவும் தன் சகடு யானைக் காக்கவும் வருகிறபோது கறுப்பு வெள்ளைக் குதிரையைத் தாக்குகிறது. வெள்ளை ஆள்கள் பலியாகவும் இந்த நகர்த்தல் பயன்படுகிறது. மேலும் மையத்தில் கறுப்புக்கு ஒரு ஆள் கூட இல்லை என்பதை நோக்க வேண்டும். கறுப்பு யானைகளும், சகடும், குதிரையுமாகச் சேர்ந்து மையத்தில் பலமாயிருக்கின்றன. (நிம்ஜோவிட்ச் திட்டம்) தனிப்பட்ட ஆள் மேலேற முடியாதபடி அதற்கு முன்னுள்ள கட்டத்தில் யானை அமர்ந்திருப்பதும் நிம்ஜோவிட்ச்சின் 'தடைத்திட்டம்' (ப்ளாகேட்)படி யிருப்பதும் கவனித்து ரஸிக்கவேண்டியதாம். இத்தனைக்கும் வெள்ளை கறுப்பு மந்திரி ஆளை வெட்டினது காரணம் என்பதை நினைக்கும்போது நிம்ஜோவிட்ச் திட்டம் பலமுள்ளதுதான் என்னும் முடிவுக்கு வருகிறோம்.

27 கு—கு 4 — கு×கு
28 யா×கு (ஷா) — ரா—ச 1
29 ச×ஆ — ச—யா 3
30 யா (1)—ச 4 — யா—யா 3!

ஒரு யானையைச் சமவெட்டினால் போக்கிவிடுவது இந்த நிலையில் நன்றும். "சதுரங்க வசனங்கள்" (4–1–53 வாரப் பதிப்பு): விதி 51: "ஆள்பலம் மிகுந்தவர்தாம் ஆனையை வெட்ட வேண்டும்" இதற்காக அவெர்பாக் செய்துள்ள இந்த நகர்த்தல் பாராட்டுதற்கு உரியதாம். அவசரப்பட்டு மந்திரி பக்கம் புகுவது இப்பொழுது கறுப்புக்குச் சரியன்று. இத்துடன் யானை–ம. ச. 4ல் 'ப்ளாகேட்' பண்ணி வருகிறது. மையத்தை விட்டு வெள்ளையின் யானை ஆளைத் தாக்குவது தவறாகும்.

31 ச—ம 3

(31) ச—கு 6—ச×ஆ; (32)யா×ச—யா×ச! (33) யா×ஆ—யா×யா—இப்படி வரும். அப்பொழுது வெள்ளை மந்திரி பக்க ஆள் பலவீனத்தால் தோல்வியடைவது நிச்சயம். ("செஸ்" பத்திரிகை இங்கிலாந்து.)

31 — ஆ—யா 6!
32 ஆ×ஆ — யா×யா. ஆ
33 யா—ம 4 — ச—ச 1
34 யா—ம 8 (ஷா) — ரா—ரா 2
35 யா (4)—ம 4 — ச—ரா 3!

இந்த இக்கட்டான நிலையில் கேரீன் மையத்தில் ஆட்சி பெற வருவது மெச்சத்தகுந்தது.

36 ரா—கு 2 — யா—ரா. கு. 4 (ஷா)
37 ரா—ச 2 — யா—ம. யா. 4

"இருபுறம் தாக்கி நின்றால் சிதறுமே எதிரி சேனை" கறுப்புக்கு இடபலம் மிகுந்திருக்கிறது. யானைகள் பிரிந்து, பிறகு ஒன்று சேர்வது இந்நிலையில் கூடும்.

38 யா—ம. கு. 8 — யா×ஆ
39 ச—ரா 2 — யா—ரா.யா. 7 (ஷா)
40 ரா—ரா 1 — யா—ம. யா. 8 (ஷா)
41 யா—ம 1 — யா×ச (ஷா)!

42 வெள்ளை தோல்வியை ஒப்புக்கொண்டது.

(42) ரா×யா—ச—கு 5 (ஷா) வருவதால் இன்னும் ஒரு சகடு பலமும் கறுப்புக்கு வருகிறது. முடிவில் வெள்ளை ஆனை மூலையில் பதுங்கிவிட்டதைக் கவனிக்கவும். சாதாரணமாக இரட்டை யானையைப் பிரிப்பது நன்றன்று. இந்த ஆட்டத்தால் "ஸாமிஷ் தாமதத் திட்டம்" கறுப்புக்கு மந்திரி பக்கம் தாக்குதலும், மையத்தில் ஆளும் தருகிறது என அறிகிறோம். மேலும் ஸாமிஷ் திட்டம் ஆராயவேண்டியதாம்.

செய்தி: 'ரத்னம் மெமோரியல் செஸ் டோர்னமென்டு" என்னும் சதுரங்கப் போட்டி சென்னைபுரி ஆந்திர மஹாசபையில் மார்ச் 21, 1954 முதல் நடக்கும். சதுரங்க நேயர்கள் மார்ச் 18–ம் தேதிக்குள் கட்டணம் ரூ 2–4–0 தந்து இப்போட்டியில் கலந்துகொள்வது நலம்.



-பண்டிட்ஜி-

भारतीय राष्ट्रीय कांग्रेस का जो हाल का अधिवेशन कल्याणी में हुआ, उसके अध्यक्षासन से भाषण देते हुए पंडित जवाहरलाल नेहरू ने हमारी बेकारी की समस्या का भी ज़िक्र किय और कहा—

"आज बेकारी और बेरोज़गारी की समस्या अनेक नौजवानों के लिए अभिशाप बनी हुई है। यह हमारी एक बड़ी समस्या है। हम इसे किसी जादू के ज़ोर से दूर नहीं कर सकते। उचित नियोजन और कठिन परिश्रम से ही इसे धीरे-धीरे खतम किया जा सकता है। हर एक व्यक्ति के लिए सरकारी नौकरियों की तलाश करते रहना ठीक नहीं, बल्कि ऐसी व्यवस्था होनी चाहिए कि जो मेहनत से काम करने को तैयार हो और शारीरिक श्रम से नाक भौंह न सिकोड़ता हो, उसे रोज़गार की गारंटी मिले। मुझे दृढ़ विश्वास है कि यदि हम आगे बढ़ने के लिए कृतसंकल्प हैं, तो धनाभाव के कारण हमारे रास्ते में किसी प्रकार की बाधा नहीं आ सकती। आगामी पंचवर्षीय योजना से, जो शीघ्र ही शुरू होगी, भूमि-समस्या का समाधान होगा और लोगों को रोज़गार मिलेगा।

बेकारी की समस्या

"स्वतंत्रता बड़ी कीमती चीज़ है। उसके साथ हमें एक ओर तो अनेक अधिकार और विशेष सुविधाएँ प्राप्त हो जाती हैं, दूसरी ओर हमपर अनेक नयी ज़िम्मेदारियाँ भी आ जाती हैं। हम अपनी स्वतंत्रता की रक्षा तभी कर सकते हैं जब हम हमेशा अपने कर्तव्य का पालन करने के लिए सचेत रहें। हममें से जिन लोगों को विधानमंडलों में सेवा करने का गौरव प्राप्त हुआ है, उनकी ज़िम्मेदारी और बड़ी है। संसदीय सरकार के कार्यों की सफलता मुख्यतः उसके द्वारा बनाये गये कानूनों और विधानमंडलों की संख्या से नहीं नापी जाती है, किन्तु यह उसके कार्य की महत्ता और जनता तथा उसके द्वारा चुने गये सदस्यों के पारस्परिक संबंध पर निर्भर है। इसके अतिरिक्त यह शासन-व्यवस्था और विधान-मंडलों के पारस्परिक संबंध के उचित विकास पर भी निर्भर है। संसद अथवा विधान-सभा का सदस्य अपने निर्वाचन-क्षेत्र में हमारे लोकतंत्र का प्रतिनिधि है। निर्वाचन-क्षेत्र में उसके द्वारा किये गये कार्यों से ही विधान-सभाओं और जनता का निकट संपर्क पड़ता है और उन संबंधों तथा समझौतों का पालन होता है जिससे लोकतंत्र गतिशील और प्रभावकारी बन पाता है। अपने मतदाताओं को और इस प्रकार सारे देश को राष्ट्र की गतिविधि से पूर्णतया अवगत रखना उसकी ज़िम्मेदारी है। उसे जनता के हितों का संरक्षक और उसकी आवाज़ का प्रतिनिधि होना चाहिए।

"स्वतंत्रता के साथ ही हमारे ऊपर जो बड़ी ज़िम्मेदारियाँ आ गयी हैं, उनके प्रति भी जनता को जागरूक और सतर्क रखना उसका कर्तव्य है। लोकतांत्रिक और संसदीय प्रणालियों में जनता की आस्था मुख्यतः विधायकों के द्वारा अपने निर्वाचन क्षेत्रों में किये गये कार्यों पर ही निर्भर करती है। इन सदस्यों को स्थानीय, राज्यीय अथवा राष्ट्रीय प्रशासन का स्थान नहीं ग्रहण करना चाहिए; किन्तु वे यदि अपने कर्तव्य का उचित ढग से निर्वाह करें, तो सरकारों पर बड़ा प्रभाव डाल सकते हैं और उन्हें जनता की आकांक्षाओं की पूर्ति के लिए विवश कर सकते हैं। किसी चुनाव अथवा राष्ट्रीय या स्थानीय महत्त्व की किसी घटना के

अवसर पर पथ-प्रदर्शन के लिए जनता, संसद या विधान-सभा के सदस्य की ओर ही विश्वास से देखती है। उसे जनता में संतुलित विवेक की भावना का जो संसदीय सरकार की सफलता के लिए बड़ी आवश्यक है, विश्वास करते हुए सांप्रदायिक या जातीय कटुता एवं संघर्षों को रोकने के लिए सतत कार्य करते रहना चाहिए। वह केवल नारों पर नहीं जी सकता। विधान-मंडलों के लिए चुने जाने के बाद कांग्रेसी सदस्य न केवल कांग्रेस का, बल्कि अपने निर्वाचन-क्षेत्र की सारी जनता का प्रतिनिधित्व करता है ”

बेकारी (பெ. பா.) வேலையின்மை
रोज़गार (ஆ. பா.) தொழில்
बेरोज़गारी (பெ. பா.) தொழிலின்மை
अभिशाप (ஆ. பா.) சாபக்கேடு
जादू (ஆ. பா.) ஜாலவித்தை
तलाश (பெ. பா.) தேட்டை
भौंह (பெ. பா.) புருவம்
सिकोड़ना சுளித்தல்
नाक-भौंह सिकोड़ना புருவம் சுளித்தல், விருப்பின்றி முனு முனுத்தல், வெறுத்தல்
धनाभाव (धन का अभाव) (ஆ. பா.) பணமின்மை
मुख्यतः முக்கியமாக
निर्वाचन—चुनाव (ஆ. பா.) தேர்தல்
निर्वाचन-क्षेत्र (ஆ. பா.) தேர்தல் தொகுதி
मतदाता (ஆ. பா.) வாக்களிப்பவர், வாக்காளர்
जागरूक விழிப்புள்ள
विधायक (ஆ. பா.) சட்டமியற்றுவோர், சட்டசபை மெம்பர்
संपर्क (ஆ. பா.) சம்பந்தம், தொடர்பு
निकट நெருங்கிய, சமீபத்து
गतिशील होना இயங்குதல்
संसद (பெ. பா.) சட்டசபை, பார்லிமெண்ட்
संसदीय सरकार (பெ. பா.) சட்டசபைக்கு ஜவாப்தாரியான சர்க்கார்
कटुता (பெ. பா.) கசப்பு
संघर्ष (ஆ. பா.) மோதல், போராட்டம்
नाश (ஆ. பா.) கோஷம்

'जय हिन्द! जय हिन्दी!



சென்னையை அடுத்த மேல்பாக்கத்தில் சர்க்கார் ஏற்படுத்தியுள்ள பிச்சைக்காரர் விடுதியை சமீபத்தில் முதல் மந்திரி ராஜாஜி திறந்துவைத்தார்; விடுதியை அவர் சுற்றிப் பார்த்தபோது இப்படம் எடுக்கப்பட்டது.

குடும்ப வைத்தியம்: குச்சா மாமா

கோடை வருகிறது

★

கோடைகாலம் வருகிறது. துவங்கிடும் முன்பு, இப்பொழுதே கன கொடுமையாகத் தோன்றுகிறது.

கோடையின் கொடுமையைச் சகிப்பதற்கும், காலச் சுபாவத்தால் ஏற்படக்கூடிய பிணிகளைத் தடுப்பதற்கும் நமது தினசரி வாழ்க்கையையும், ஆகாரம், குடிநீர்வகைகள், ஸ்நானம், விளையாட்டுகள், தூக்கம் முதலியவற்றையும் எவ்வாறு மாற்றியமைத்துக்கொள்ள வேணுமென்று ஒருக்கால் மித்திரனில் வெளியிட்டுள்ளதை வாசகர்கள் இப்போது ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அடுத்துவரும் நான்கு மாதகாலமும் வெய்யிலின் கொடுமை தினே தினே அதிகரித்துக் கொண்டே வரும். அதனால் சரீரத்தில் எல்லோருக்குமே ஒருவகை பலஹீனம் ஏற்பட்டு தினேதினே அதிகரிக்கவுஞ் செய்யும். ஒரு வேலையும் செய்யமுடியாத ஓய்ச்சலுண்டாகும். வரவரப் பசி குறையும். தாகம் அதிகமாக ஏற்படும். இரவில் சரியாகத் தூக்கம் வராது. அதிகமாக வியர்ப்பதும் வியர்வை சரீரத்தில் ஊறிப் போவதாலும், மற்றும் வியர்வையும் தாகமும் அதிகமுள்ள சமயத்தில் தடுக்கமுடியாதபடி ஐஸ் கூட்டிய குளிர்ந்த பானங்களைக் குடிப்பதாலும் பசி மிக மிகவும் மந்தப்படவும், மார்சளி முதலியவை பிடிக்கவும் ஏதுவாகும். சிறங்கு சொறிகள் பலதரப்பட்டதாயுண்டாகும். அம்மைகள் உண்டாகலாம். முக்கியமாகக் குழந்தைகளுக்குத் தட்டையம்மை போடுவது கோடையில்தான். கோடைக் கொப்புளங்கள் சிலருக்கும் ரத்தக் கட்டிகள் சிலருக்கும் உண்டாகலாம். வேர்க்குருவென்னும் சரும நோய் உண்டாவது வெகு சாதாரணம். இதுவே சிலருக்கு பெரியம்மையோவென சந்தேகிக்கும்விதத்தில் அவ்வளவு கொடுமையாக விருக்கும். ஊசி நாட்டிடவும் இடமில்லாது முகத்தில் முக்கியமாகவும், சரீரம் முழுவதுமே பொதுவாகவும் உண்டாகும் இவ்வேர்க்குரு கட்டிகளில் சஹிக்கமுடியாத ஒருவகை தறிப்பு நோவும்... பொதுவாக ஒரு தூர்மனஸூசும், ஆகாரத்தில் வெறுப்பும் ருசிக் குறைவும், கணகணவென்று ஜுரம் காய்வதுபோல் ஒரு தோற்றமும் உண்டாகி குளிக்கவும் முடியாது குளியாமலிருக்கவும் முடியாது. உடுக்கவும் முடியாது கிடக்கவும் முடியாது பலவகையிலும் நரகவேதனையைத் தரும்.

கூடுமானால் இவ்வகை உபத்திரவங்கள் வராமலே தடுத்திட முயற்சிப்பது அவசியம். அப்படி ஒருக்கால் வந்தாலும் அதை நிவர்த்திப்பதற்குச் செய்யவேண்டிய சிகிச்சைகளும் அவ்வப்போது விஸ்தாரமாக 'மித்திரனில்' வெளியாகியுள்ளன. அவற்றில் முக்கியமான சிலவற்றைச் சுருக்கத்தில் இப்போது ஞாபகப் படுத்திக்கொள்வது நலம்.

தினந்தோறும் எண்ணெய்க் குளி அவசியம். மாலையில் இதை வைத்துக் கொண்டால் சற்று சாவகாசமாகக் குளிக்க வசதிப்படும். நாள் முழுவதும் வெயிலின் அபிகாதத்தால் ஏற்பட்ட அலுப்புத் தீரும். பலஹீனம் குறையும். இரவில் நல்ல தூக்கம் வரும். எண்ணெய்க் குளிக்குப் பின் வெய்யிலில் அலையும் அபத்தியமும் தவிர்க்கப்படும்.

வெந்நீரோ தண்ணீரோ அவரவருக்குப் பழக்கப்பட்டதை ஸ்நானத்திற்கு உபயோகிக்கலாம். காலை நேரத்தில் கழுத்து வரையில் குளிப்பதும் மாலையில் உஷ்ணம் குறைந்த பிறகு எண்ணெய் தேய்த்துக் குளிப்பதும் கோடையின் விளைவால் உண்டாகும் பல பிணிகளையும் தவிர்க்கும். நல்லெண்ணெயோ, தேங்காயெண்ணெயோ பழக்கத்திற்கேற்ப உபயோகித்தாலும் போதும்.

அன்றி, நன்னாரி மஞ்ஜிஷ்டி இரண்டையும் அரைத்துக் கலக்கிக் குழம்பாக்கிக் காய்ச்சி அதில் தேன்மெழுகு வெள்ளைக் குங்கிலியம் இவற்றைப் பாத்திர பாகமாகக் கூட்டி வடிகட்டிய பிண்டதைலம் என்னும் எண்ணெயை தேகத்திற்குப் பூசிக் குளிப்பதால், சருமம் மிருதுவாகி வேர்க்குரு, கோடைக் கொப்புளம் இவை உண்டாகாமலிருக்கும்படியும் காத்திடும்.

கடுக்காய்த்தோல் நெல்லிமுள்ளி தானிக்காய்த்தோல் இவற்றையோ அல்லது அதிமதுரத்தையோ அரைத்துக் கலக்கிக் காச்சிய எண்ணெயைத் தலைக்குத் தேய்த்துக் குளிப்பதும் உஷ்ணத்தைக் குறைத்து, கண்ணெரிச்சலைப் போக்கி நல்ல தூக்கத்தைக் கொடுக்க உதவும்.

சிறங்கு, சொறி, நமட்டுச் சிறங்கு இவை உண்டாயிடின் அல்லது உண்டாகும் போலத் தோன்றிடினும், அருகம்புல்லைத் தண்ணீர் தெளித்து இடித்துப் பிழிந்த இரஸத்தில் அருகம் புல்லையோ, அதிமதுரத்தையோ, கடுக்காய்த் தோலையோ கல்க்கமாக அரைத்துக்கூட்டி எண்ணெயுடன் குழப்பிக் காய்ச்சி எடுத்த 'தூர்வாதைலம்' என்ற எண்ணெயை உடம்பிற்குத் தேய்த்துக் குளிப்பது மிகவும் நல்லது. இதற்கு எள்ளெண்ணெய், தேங்காயெண்ணெய் எதை வேணுமானாலும் அவரவர் பழக்கத்தையொட்டி உபயோகித்துக் கொள்ளலாம்.

குழந்தைகளுக்கும், பொதுவாக எல்லோருக்குமே சொறி சிறங்கு கடுவன் கரப்பான் இவை உண்டாகுமாகில், கார்போகரிசியைத் தேங்கா எண்ணெயில் கருக்கி—எண்ணெயை வடிகட்டி தினம் 2 அல்லது 3 தரம் மேலே தடவுவது இதம்.

சூரத்து நிலாவாரை ரோஜா மொக்கு திராக்ஷை இவற்றின் கஷாயத்தைக் குடித்துக் குடலை அவ்வப்போது சுத்தப்படுத்திக் கொள்வதால் வேர்க்குரு தட்டையம்மை இவற்றைத் தடை செய்யலாம்.

கார்போகரிசி, வாலுளுவை, வெப்பாலரிசி, தனியா, ஏலரிசி, வாயுவிடங்கம், வேப்பம்பூ

திராக்ஷை, இவற்றைச் சமனிடையில் கூட்டியுண்டாக்கிய கஷாயத்தை தினம் இரண்டு வேளை உள்ளுக்குக் கொடுத்து வருவதால் மக்களுக்கு உண்டாகும் சிரங்கு, சொறி, நமைச்சல் கரப்பான் கடுவான் முதலியவை குணமாகும்.

தேங்காய்பாலில் அரைத்த ஜீரகத்தை அப்பாலிலேயே சந்தனம்போல் கரைத்து மேலே பூசி, ஊறி, குளிப்பதால் வேர்க்குரு, வேர்க்குருகட்டி முதலிய எவ்வளவு கொடுமையானதாயிருப்பினும் குணமாகும்.

எளிதில் ஜெரிக்கக் கூடியதும், சூடுள்ளதுமான ஆகாரங்களை, பசித்த பிறகு மிதமாக உட்கொள்ளல் வேண்டும்.

வெய்யில் காலத்தில் தயிரை உபயோகிக்கலாகாது. அதிலும் தினந்தோறும் உபயோகிக்கக் கூடாது. இரவில் ஒருபொழுதுமே கூடாது, நெய்யும் வெண்ணெயும் அளவோடு கூட்டிக் கொள்ளலாம்.

பகலில் சிறிது தூங்குவதும், முக்கியமாக பகல் தூங்கிப் பழக்க முள்ளவருக்கும், பாலர் விருத்தர் பலஹீனர் ஆகியவருக்கும் மிகவும் நல்லது.

தனியா, ஜீரகம், சிறிது சுக்கு இவற்றை யிட்டுக் காய்ச்சிய ஜலத்தை இதமான சூடுள்ள பொழுதோ அல்லது குளிர்ந்த பிறகோ குடிப்பதற்கு உபயோகிக்க வேண்டும். இது உஷ்ணத்தைக் குறைக்கும். தாகத்தைத் தணிக்கும், பசியை மந்தப்படுத்தாது. மார்சளி ஜலதோஷம் போன்றவையை உண்டாக்காது. ஆனால் இக்குடிநீர் ஒருநாள் காய்ச்சியதை வைத்திருந்து மறுநாள் உபயோகிப்பது மிகவும் கெடுதலானது.

இவ்வகையான தகவல்கள் யாவும் நினைவிலிருக்குமேல் கோடையின் வியவங்களைச் சமாளிப்பது சிரமமாகாது. இக்கட்டுரையில் ஸூசிக்கப்பட்டுள்ள மருந்துகளை உண்டாக்கும் விதம் விவரமாக மித்திரனில் வெளியாகியுள்ளன. ஆயினும் மறுபடியும் விவரமாக அறிய விரும்புவோர் எழுதிக் கேட்டறிந்து கொள்ளலாம்.

தையல் கலை::

எ. சுகுமார்,
டி எம். டி சி.ஏ.
லண்டன்

2
தைமோனியரும் சிங்கரும்

★

பிரஞ்சு நாட்டிலிருந்து தையல்காரர்களால் துரத்தப்பட்டு இங்கிலாந்து தேசத்தில் குடிபுகுந்த "தைமோனியர்" பலவிதமான நூதன முறைகளில் மறுபடியும் தையல் இயந்திரத்தை தயாரிக்க ஆரம்பித்துவிட்டார். அக்காலத்தில் இயந்திரங்களின் தேவை மிகவும் குறைவாகவே இருந்தது. தைமோனியர் கண்டுபிடித்த தையற்பொறியில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் தையலை ஓட்ட முடியும். இதைப்பற்றி தைமோனியர் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த காலத்தில் அவர் நாட்டைச் சேர்ந்த "போனுஸ்" என்பவர் தைமோனியருக்கு துணையாக இருந்து சிலகால மாறுதல்களை உண்டாக்கினார். அதன் பயனாக தையலை சிறிதாகவும் பெரிதாகவும் பலவித கோணங்களிலும் சிரமமின்றி தைக்க சுலபமாக இருந்தது. இது மாட மாளிகைகளுக்குவேண்டிய திரைகளில் பூ வேலைக்கு முக்கிய நகரங்களான பிரஞ்சு நாட்டிலும் சுவிஸர்லாண்டிலும் ஒரு பரபரப்பை உண்டாக்கியது. சிறிது காலத்திற்குள்ளாகவே இந்த இயந்திரத்தின் உபயோகம் உலகத்திற்கு தெரிய வந்தது.

ஐரோப்பா முழுவதிலும் இதை முக்கியமாக உபயோகிக்க ஆரம்பித்த காலம் அது. 1865ம் ஆண்டில் மேற்கூறிய போனுஸ் என்பவர் திருத்தி அமைத்த மாதிரியாகவே பாரிஸ் நகரத்திலுள்ள "எமையில் கார்ணலி" என்பவர் அதிகமாக உற்பத்தி செய்ய ஆரம்பித்தார். ஆரம்பித்த பிறகு அவருடைய மகனை "ராபர்ட்" என்ற பொறி இயல்வல்லுனர் (இஞ்சினீயர்) உடனிருந்து ஒத்துழைத்து நாளுக்கு நாள் புதுபுது மாதிரியாக தையற் பொறிகளை தயாரிக்க ஆரம்பித்துவிட்டார். அவரின் ஆராய்ச்சியின் பயனாக 2லிருந்து 4 நூல் இழை சேர்த்து தைக்கக்கூடிய தையற் பொறியை தயாரித்தார். அதற்கு கார்ணலி மிஷின் எனபோற்றி வழங்கி வந்தனர். அவர்களின் மிஷின்கள் உலகெங்கும் புகழ்பெற்றன. தையற் பொறி கண்டுபிடிப்பதற்குமுன் செல்வந்தர்களால்தான் பூவேலை நிறைந்த உடைகளை அநுபவிக்க முடிந்தது.

இயந்திர புரட்சியின் காரணத்தால் ஏழை எளியவர்களுக்குக்கூட மலிந்த விலைக்கு சுலபமாக பூவேலைகள் செய்யப்பட்ட ஆடைகள் கிடைக்க ஆரம்பித்தது. இதன் பிறகு பல இடங்களில் பல தொழிற்சாலைகள் உருவாகி உடைகள், தொப்பிகள், பலவிதமான பைகள், பாதரட்சைகள், கை உறைகள் முதலியவைகளைஉற்பத்தி செய்யலாயினர். அன்று இருந்ததைவிட இன்று எத்தனையோ விதவிதமான மாதிரி தையற் பொறிகள் உபயோகத்திற்கு வந்துவிட்டன. நாளுக்கு நாள் அவைகளுடைய தேவைகளும் புகழும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. வளருமேயன்றி குறையுமென்று சொல்வதற்கில்லை.

பிரஞ்சு நாட்டில் இக்கலைக்கென புத்தகங்கள் பிரசுரிப்பதில் முக்கிய கவனம் செலுத்துகிறார்கள். இங்கிலாந்திலும்கூட இதன் மறுமலர்ச்சி ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றது. பெரும்பாலும் ஆண்களின் உடைகளிலும்கூட பூ தையற் வேலைகளை தைக்க ஆரம்பித்திருக்கின்றனர். உதாரணமாக மேல் நாடுகளில் புது விதமாக எல்லோராலும் விரும்பி அணியப்படும் பான்ஸி வேஸ்ட் கோட்டுகளிலும் பூ தையல் வேலைகளை காணலாம்.

நம் நாட்டில் இன்றைக்கும்கூட பழங்கால பூ வேலைப்பாடுகள் அமைந்த உடைகளை அணியப்படும் வழக்கத்தை பல பாகங்களிலும், முக்கியமாக காஷ்மீரத்திலும் பார்க்கலாம். இப்பழம் பெரும் கலைக்கு அழியா புகழ்தந்த அப்புகழை நிலைநாட்டிய பெருமை தைமோனியரை சார்ந்தது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை என்பதே என் ஆழ்ந்த சிந்தனையின் முடிவு.

1850ம் ஆண்டில் உலகப் புகழ்பெற்ற தைமோனியரின் தையற் பொறியை ஆதாரமாகக் கொண்டு அமெரிக்கா தேசத்தில் "ஐஸெக் மெரிட் சிங்கர்" என்பவர் தையற் பொறி உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து 1850ம்ஆண்டிலேயே "பாஸ்டன்" என்ற இடத்தில் ஒரு தையற் பொறியைத் தயாரித்தார். அது சரியாக வேலை செய்யவில்லை. காரணம் தையலுக்கு தையல் நூல் அறுந்துகொண்டே வந்தது. அவர் நிம்மதியற்றவராக இருந்தார். முக்கிய காரணம் அவர் வேறொருவரிடம் 40 டாலர் (சுமார் ரூ. 200) கடன் வாங்கி முதன் முதல் தொழிற்சாலை ஆரம்பித்து இதில் வெற்றி பெற முடியவில்லையே என்பதே கவலையாக இருந்தது.

இரவும் பகலுமாக சிந்தித்து அதை சரியான வழியில் இயங்க வைத்தார். அவரது துயரமும் கவலையும் மறைந்தது இதற்கு முன்பாகவே ஊசியையும், காகித காலர்களையும் கண்டுபிடித்த "வால்டர் ஹண்ட்" என்னும் அமெரிக்கர் 1834ம் ஆண்டில் முன் குறிப்பிட்டவர்கள்போலவே ஒரு தையற்பொறியை உண்டாக்கினார். அதற்கு அவருடைய அருமை மகள், ஆயிரமாயிரம் கைத் தொழிலாளர்கள் கவலைப்படுவார்களே, பிழைப்பின்றி வருந்துவார்களே என்று கவலை கொண்டு அவர்களுக்காக மனமுருக எடுத்துக் கூறியதன்மேல் அம்மாதிரியான தையல் மிஷின்கள் தயாரிப்பதை நிறுத்திவிட்டார்.

(தொடரும்)

கலா மண்டபம்

பம்பாய்க் கடிதம்

✱

சினிமாத் தொழிலுக்கு நெருக்கடியான நிலைமை வந்ததால், இப்பொழுது உண்மையான பட முதலாளிகளே வேலை செய்து வருகிறார்கள். பணத்தை ஒரு தொடியில் சம்பாதிக்கலாம், உல்லாசமாகக் காலத்தைக் கழிக்கலாமென்று பட முதலாளிகளாகச் சேர்ந்தவர்கள் இப்போது இருந்த இடம் தெரியாமல் ஓடோடிப் போய்விட்டார்கள்.

தற்சமயம், பணம் உள்ள பட முதலாளிகளே இவ்வூரில் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் கையிலிருக்கும் பணத்துக்குத் தக்கபடி இப்பொழுது படங்களை எடுக்கிறார்கள். அனாவசியமாகக் கடன் வாங்கி படம் பிடிக்க அவர்களுக்கு இப்பொழுதெல்லாம் மனமில்லை.

சினிமாக் கொட்டகைக்காரர்களும் தற்சமயம் விழிப்படைந்துவிட்டார்கள் அவர்கள் கொட்டகைகளுக்கு முன் போல் வாடகை கிடைக்காததால், அவர்களுடைய வாடகையை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரியே, சினிமா டிக்கெட்டுகளின் விலைகளையும் குறைத்திருக்கிறார்கள். இக்காரணங்களினால், அநேக படங்கள் இங்கு மிகவும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றன. மேலும், நல்ல படங்கள், எப்பொழுதும் இங்கு நன்றாக ஓடிக் கொண்டிருக்கின்றன. ஜனங்களிடம் பணம் இருக்கிறதோயில்லையோ, ஒரு நல்ல படம் நகரத்தில் ஓடினால், அதைப் பார்க்க ஆயிரக்கணக்கான பேர்கள் வருகிறார்கள். சினிமாத் தொழிலில், பழைய காலம் போல், ஒரு நிதானமான நிலைமை வந்து கொண்டிருக்கிறது.

• • •

ஸ்ரீ பிரகாஷ் பிக்சர்ஸார் 'பாத் மிலாப்', 'ராம் பாண்', 'ராம ராஜ்யா' என்ற மூன்று படங்களை தயாரித்திருப்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். அவர்கள், இம்மூன்று படத்திலிருந்தும் முக்கியமான இடங்களை மாத்திரம் எடுத்து ஒன்றாகச் சேர்த்து 'ராமாயணம்' என்ற தலைப்பின்கீழ் ஒரு புதுப் படத்தைத் தயாரித்து வருகிறார்கள்.

ஸ்ரீ அமியா சக்ரவர்த்தி, ஸ்ரீ விக்டர் ஹூகோவின் 'ஹன்ச் பாக் ஆப் நாட்டர்டாம்' என்ற கதையைத் தழுவி 'பாத்ஷா' என்ற தலைப்பின்கீழ், ஒரு படத்தைத் தயாரிக்கிறார். இதில், ஸ்ரீமதி உஷாகிரன், ஸ்ரீ பிரதீப் குமார், ஸ்ரீ உல்ஹாஸ் முதலியோர் நடிக்கிறார்கள்.

ஸ்ரீ டி. டி. காஷ்யப் 'ஷாமப்பர்வானு' என்ற தலைப்பின்கீழ் ஒரு படத்தைத் தயாரித்து வருகிறார். இதில், ஸ்ரீமதி சுரையாவும், ஸ்ரீ ஷம்மி கபூரும் நடித்து வருகிறார்கள்.

ஸ்ரீ ஷஹீத் லதீப் தற்சமயம் 'நர் வாஜா' என்ற ஒரு படத்தை தயாரித்து வருகிறார். இதில் கதாநாயகியாக நடிப்பது ஸ்ரீமதி ஷியாமா.

—தி. மா. ராமச்சந்திரன்.

வசந்தா பிக்சர்ஸ் 'திலோத்தமா'வில் நடிகை சித்ரா

பிரிட்டிஷ் நடிகை உயிரைக் காப்பாற்றிய குதிரை!

பிரிட்டிஷ் நடிகை நான்ஸி ப்ரைஸ் இந்தியா ஜீவகாருண்ய சங்கத்தில் பேசுகையில் தான் எப்படி ஒரு போராபத்திலிருந்து தன் குதிரையால் காப்பாற்றப்பட்டார் என்பதை விளக்கினார்.

ஒரு பாலத்தின் அருகில் வரும் போது புயலடிக்க ஆரம்பித்துவிட்டது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் பாலத்தை தாண்டிவிட விரும்பினேன். பாலத்தின் அருகில் வந்ததும் குதிரை நகர மறுத்துவிட்டது. என்ன செய்தும் குதிரை நகரவில்லை 10 அல்லது 20 வினாடிகள் இருக்கும். பாலம் இடிந்து விழ ஆரம்பித்துவிட்டது. குதிரையின் புத்திசாலித்தனத்தினால் தான் உயிர்பிழைத்தேன் என்றார் அந் நடிகை.

கால்நடைகளுக்கான ஒரு மோட்டார் ஆஸ்பத்திரியை இந்தியாவிற்கு அனுப்புவது சம்பந்தமாகவே இந்த கூட்டம் நடைபெற்றது.

பிரபல நடிகை ஹெடி லமாருக்கு 5-வது தடவை திருமணம்!

பிரபல நடிகையான ஹெடிலமார் 5-வது தடவையாக மணம் புரிந்து கொள்ளவிருக்கிறார்.

டெக்ஸாஸ் எண்ணெய் வயல் முதலாளியான ஹோவார்ட்லீதான் லமாரை மணக்க விருக்கிறார்.

சினிமாப் படத்தில் முதன் முதலாக தோன்றிய படத்தில் இவர் முழு நிர்வாணமாக நடித்தார். அவருடைய முதல் கணவர் பரிப்ஸ்மாண்டல் 60,000 பவுன் செலவிட்டு அந்த படத்தின் பிரதிகளை எல்லாம் வாங்கி கொளுத்தினார். அப்படியும் சில பிரதிகள் தப்பி விடவே நிர்வாண லமாரை பலர் பார்க்க நேர்ந்தது.

முதல் திருமணத்தின்போது ஹெடிக்கு வயது 16. இவ்விவாகம் ரத்தான பின்பு பிரபல படாதிபதி ஜேனிமார்க்கயை லமார் மணந்தார்.

மூன்றாவது கணவர்தான் பிரபல நடிகர் லோடர், நான்காவது கணவர் எர்னஸ்ட் ஸ்டபர் என்கிற ஹோட்டல் முதலாளி தன் முந்திய கணவர்கள் அளித்த நகை நட்டுகள் துணிகள் எல்லாவற்றையும் அவர் விற்றுவிட்டார் சினிமாவைக்கூட விட்டுவிட்டு குடியும் குடித்தனமாக இருக்க முடிவு செய்துவிட்டதாக கூறினார். ஆனால் இதுவும் விவாகரத்தில் முடிந்தது.

அன்று பென்ஹர் படத்தில் கதாநாயகி

இன்று அதே படத்தில் ஒரு எக்ஸ்டிரா

மௌனப்படக் காலத்தில் தயாரிக்கப்பட்ட 'பென்ஹர்' படத்தில் கதாநாயகியாக நடித்த மேமக்கவாய்க்கு இப்போது 54 வயதாகிறது. இப்போது தயாரிக்கப்பட விருக்கும் படத்தில் இவர் ஒரு 'எக்ஸ்டிரா' நடிகையாக நடிக்கவிருக்கிறார்.

அப்போது கதாநாயகியாக நடிக்க இவருக்கு வாரம் 3000 டாலர் சம்பளம் கொடுக்கப்பட்டது. இப்போது வாரம் 100 டாலர் அவர் பெறுவார்.

மேமக் இவ்வளவு வயதான போதிலும் அன்றிருந்த அழகின் சாயலை இன்றும் அவர் பெற்றிருக்கிறார். இவருக்கு நடித்தாகவேண்டும் என்ற நிலை இல்லை. அப்படியிருந்தும் நடிப்பு துறையிலிருந்து விலக இவர் விரும்பவில்லை.

மன்னர், கோடீஸ்வரர்களை மதிமயக்கிய அழகி அதோகதி!

50 வருஷங்களுக்கு மன்னர்களையும் கோடீஸ்வரர்களையும் மயக்கி செல்வத்திலேயே புரண்ட அழகி மாடிலேன் ஒதேரோ இன்று தன் முதிர்ந்த பருவத்தில் தன்னைக் கவனிப்பாரின்றி தானே சமைத்துண்டு கஷ்டப்படுகிறார்.

ஸ்பெயினைச் சேர்ந்த இவரின் நடனங்களையும் அழகையும் கண்டு மனதை பறிகொடுக்காத பிரமுகர்கள் அக்காலத்தில் இல்லை என்றே சொல்லலாம். சூதாட்டத்தில் பெருந்தொகை நஷ்டமாகிவிடும் அதைக்கண்டு சிரிப்பாள். ஒரு கோடீஸ்வரர் இழந்த தொகையைப்போல இரட்டிப்பு மடங்கு அவளுக்கு காணிக்கையாக சமர்ப்பிப்பார்.

ருஷ்யாவை ஆண்ட ஸார் மன்னர் இவளுக்கு ஒரு டஜன் தங்கஸ்பூன்களை பரிசாக அளித்தார். இப்போது இவரிடம் ஒரு ஸ்பூன் மட்டும்தான் உள்ளது. மற்றவை எல்லாம் விற்கப்பட்டுவிட்டது. இப்போது பணம் வேண்டுமென்றால் அவளிடமுள்ள ஒரே ஆஸ்தி அந்த தங்கஸ்பூன்தான்.

ஒரு செல்வச் சீமான் தினம் இரவு இவளை விருந்துக்கழைத்தான். இவள் உண்பதற்கான கேக்குகளுக்கு விலையுயர்ந்த முத்துக்கள் வைத்திருப்பதுண்டாம். நான்கு வாரங்களில் சுமார் 350 முத்துக்களை இவர் சேர்த்தாராம். இதாலி கவி காப்ரியேல் டி அனன்ஸியோ இவளைப்பற்றி ஒரு கவிதையே எழுதியிருக்கிறார்.

மனோஹர் பிக்சர்ஸ் 'மனோஹரா'வில் சிவாஜி கணேசனும் கண்ணாம்பாவும்

14 424

கோட்டு மயமாகவிருக்கும் இந்தக் காட்சி பாரிஸிலுள்ள பெரிய கடை ஒன்றில் காணப்பட்டதாம். ஏழைக் குடும்பங்களுக்கு வீடு கட்டித்தர உத்தேசித்த அந்தக் கடை, அட்டைகளினாலான சுவருகளை நிர்மாணித்து, தருமம் செய்ய விரும்புவோர் அந்த அட்டைச் சுவருகளில் நோட்டுகளைச் சொருகிவிட்டுப் போகலாம் என்று வேண்டுகோள் விடுத்தது. அதற்கிணங்க ஏராளமானவர்கள் நிதி வழங்கியிருப்பதை இப்படம் காட்டுகிறது.

ராயபுரம் ஸெயின்ட் ஆன் பெண்பாடசாலை மாணவிகளின் நடனக் காட்சி. அப்பாடசாலை பரிசளிப்பு விழாவில் மந்திரி ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம் தலைமை வகித்தார்.

Regd. No. 2514

ஸ்ரீ K. S. ராமமூர்த்தி சர்மா
கணித்தது.

★

தனிப் பிரதி விலை அணா 4.
தபால் மூலமாக ... அணா 5.

மொத்த வியாபாரிகளுக்கு பஞ்சாங்க காப்பிகள் கீழ்க்கண்ட விற்பனை விகிதங்களில் சப்ளை செய்யப் படும். 100 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அனுப்பும் ஆர்டர்களும் நூற்றுக்கணக்கில்தான் இருக்கவேண்டும்.

1954 மார்ச் மாதம் இரண்டாம் வாரத்தில் பிரதிகள் வெளிவரும்.

சப்ளை விகித விலை விவரம்:

100 காப்பிகளுக்கு	...	ரூ. 24.
200 ,,	100-க்கு	ரூ. 23.
300 ,,	,,	ரூ. 22.
500 ,,	,,	ரூ. 21.
1000 அல்லது மேற்பட்ட காப்பிகளுக்கு	,,	ரூ. 20.

ஆர்டர்களை முன் பணத்துடன் சுதேசமித்திரன் ஏஜண்டுக்கோ அல்லது நேரில் ஆபீஸுக்கோ அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம். வி. பி. பி. கிடையாது.

Printed and Published by N. RAJAGOPALAN at the "Swadesamitran" Press, "Victory House", Mount Road, Madras. Editor: C. R. SRINIVASAN, B. A.

" என்ன மாமா ! என்னை அடையாளம் தெரிகிறதா ?...குருசாமியின் தம்பி... "
" அடேடே ! கிட்டணு ? நீ இவ்வளவு இருக்கிறபோது பார்த்தது......தெரியவேயில்லை ! "

SWADESAMITRAN WEEKLY 28,மார்ச் '54 4 As.

சுதேசமித்திரன்

சந்தா விகிதங்கள்

★

தினப்பதிப்பு

	(இந்தியா, இலங்கை, தபால் மூலம்)		சென்னை		வெளிநாடு	
	ரு.	அ.	ரு.	அ.	ரு.	அ.
1 வருடம் ...	26	0	24	0	32	0
6 மாதம் ...	13	8	12	8	16	0
3 மாதம் ...	7	0	6	8	8	0
1 மாதம் ...	2	8	2	4	—	

தனிப்பிரதி

ஞாயிறு மலர் ... விலை 2 அணு

இதர நாட்களில் ... விலை 1 அணு

வாரப்பதிப்பு

	ரு	அ.	ரு	அ.
1 வருடம் ...	13	0	16	0
6 மாதம் ...	7	0	8	0
3 மாதம் ...	3	12	—	

தனிப் பிரதி அணு 4.

சர்க்குலேஷன் மானேஜர்,

சுதேசமித்திரன்.

பொருளடக்கம்

Vol XXV] விஜய௵ பங்குனி௴ 15௨ (28-3-54) [No. 8

லீக் அதோகதி		3
காற்றுவாக்கிலே......	கரூர்	4
குதர்க்கம்	தரளம்	5
ஹாஸ்டல் பேய்	ஆர். எஸ். ஞானம்பாள்	6
வெற்றி	ப. ரா.	10
நக்ஷத்திரக் கதை	மகரம்	16
அன்பு பிழைத்தது	டி. எம். வாசுதேவன்	19
பிள்ளைக் கனியமுது—தொடர் கதை	சுகி	23
அன்பின் சிகரம்	பீ. ஆர். சரஸ்வதி	29
பழிக்குப்பழி—நிமிஷக்கதை	எஸ். டி. வீரராகவன்	30
பெண்கள் உலகம்	குகப்ரியை	31
ராக்ஷஸராணி	ஆஸ்திகன்	35
அனுமந்தன் குன்று	சந்தனு	39
சாரணர் உலகம்	சித்தார்த்தன்	40
ஹிந்தி உலகம்	பண்டிதஜீ	41
பிரிவு	ஸ்ரீ ஆர். ராஜம்மா	43
தையற் கலை	எ. சுகுமார்	46
கலாமண்டபம்		47

...பெயர்கள் சம்பவங்கள் எல்லாம் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

... OF THE REGISTRAR ... 2 APR 1954

பிரதம சிஷ்யராக ஸன்யாஸ ஆச்ரமம் ஏற்று உபதேசம்பெற்ற ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி சுவாமிகள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஆசார்ய சுவாமிகள்.

ராணுவ உதவிக்கு முன்பு வைத்ய உதவிதான் தேவை



கிழக்கு பாகிஸ்தான் தேர்தலில் கிடைத்த அடியினுல் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் சர்க்காருக்கு பெரிதும் கௌரவம் குலைந்திருக்கிறது.

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு
வாழிய செந்தமிழ் — வாழ்க நற்றமிழர்

Vol XXV] விஜயஹு பங்குனிமீ 15௨ ★ 1954ஹு மார்ச்மீ 28௨ [No 8

லீக் அதோகதி

கிழக்கு வங்காளப் பொதுத் தேர்தலில் முஸ்லிம் லீக் வெறும் தோல்வியுறவில்லை; அடியோடு நிர்மூலமாகிவிட்டது. வோட்டுப் பெட்டிகள் மூலம் அங்கு ஒரு முழுப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. ஆளும் கட்சியொன்று உண்மையில் இவ்வளவு கேவலமாக மண்ணைக் கவ்விய அதிசயம் இதற்குமுன் எங்கும் நடந்ததில்லை. மந்திரிகள் பலரும் முறியடிக்கப்பட்டனர்; லீகின் முக்கிய நிர்வாகிகள் எல்லோருக்கும் அதே கதி. அவர்களில் பலர் ஜாமீன் தொகையைக்கூடக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. போட்டியிட்ட ஐக்கிய முன்னணிக் கட்சியில் பெரும்பாலானவர்களைப் பற்றி யாரும் கேள்விப்பட்டதில்லை. உண்மையில் முதன் மந்திரி நூருல் அமீன் ஒரு மாணவனுல் தோற்கடிக்கப்பட்டார்.

கிழக்கு வங்க மக்கள் இவ்வளவு ஆத்திரத்துடன், அநேகமாக ஒருமுகமாக லீகை விரட்டியடித்துவிட்ட காரணமென்ன? இதை அறிய ஏழு வருஷ காலத்தில் அக்கட்சி அதிகாரத்திலிருந்து கொண்டு நடத்தியுள்ள நிர்வாகத்தைச் சிறிது கவனித்தால் போதும். குறிப்பாக, கிழக்கு வங்கத்தினர் அநேகமாக ஒவ்வொரு முக்கிய அம்சத்திலும் கொதிப்புறும் வகையிலேயே பாகிஸ்தான் சர்க்கார் நடந்துகொண்டு வந்திருக்கின்றனர். பாக். ஜனத் தொகையில் கிழக்கு வங்கத்தினர் 54 சதவிகிதம். எனினும் அம்மக்களின் தாய் பாஷையாகிய வங்காளிக்கு முறைப்படி ராஜாங்க அந்தஸ்து அளிக்க பாக். சர்க்கார் தயாராயில்லை. அதற்கு மாருக உருதுவை அம்மக்களின் தலையில் பலவந்தமாகக்கட்ட அந்த சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டு வந்திருக்கின்றனர். அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளிலும் கிழக்கு வங்க ஜனங்களின் கருத்துக்கு அவர்கள் மதிப்பு கொடுத்ததில்லை. அந்த ராஜ்ய சர்க்காரிலோ, மத்திய பாக். சர்க்காரிலோ அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் கிடையாது. உண்மையில் தங்களை அடிமையுற்றவர்களாகவே பாக். சர்க்கார் நடத்துகின்றனரென்ற உணர்ச்சி நெடுநாளாக அம்மக்களிடை உரம் பெற்று வந்திருக்கிறது. பாஷைபோன்ற கலாசார அம்சங்களிலும், பொருளாதார வகையிலும் கிழக்கு வங்கத்துக்கு இயற்கையான பிணைப்பு மேற்கு வங்கத்துடன் தான். இந்தத் தொடர்பு எவ்வளவுக்கெவ்வளவு பலவந்தமாக அறுக்கப்பட்டிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு வங்க மக்களின் துன்பம் பெருகி வந்திருப்பது நிதர்சனம். ஆனுல் அரசியல் காரணங்களை முன்னிட்டு, இந்த உண்மையை அங்கீகரிக்க பாக். சர்க்கார் தயாராயில்லை. அதற்கு மாருக இந்தியாவுடன் கூடியவரை ஒத்துழையாமையை அனுசரிப்பதென்பது அவர்களது வேலைமுறையாக இருந்திருக்கிறது. இந்தியாவைப் போல் பாக். ரூபாய் மதிப்பை மாற்ற அவர்கள் மறுத்ததற்கும் அதே மனோபாவந்தான் காரணம். ஆனுல், பொருளாதாரம், பாஷைபோன்ற அடிப்படையான அம்சங்களில் ஜனங்களை மத பேதத்தை ஆதாரமாகக்கொண்டு இந்தியா தேசத்தவர் என்றும், பாக். தேசத்தவர் என்றும் பிரிப்பது இயற்கைக்கு முரணனது; அதனுல் கொடிய விபரீதமே விளையும் என்பதை தற்போதைய பாக். அனுபவம் தெளிவாக அறிவுறுத்துகிறது. பாக். சர்க்காருக்கு இவ்வுணர்வு என்றுமிருந்ததில்லை. வகுப்பு வெறியை வளர்ப்பதிலேயே எல்லாப் பிரச்னைகளுக்கும் பரிகாரமிருப்பதுபோல் நடந்து வந்திருக்கின்றனர். இதோடு சமீபத்தில் ஒரு அந்நிய நாட்டுடன் ராணுவ ஒப்பந்தம் செய்துகொள்ள முற்பட்டதன்மூலம் அவர்கள் பாக். அரசியல் சுதந்திரத்தையும் ஆபத்துக்குள்ளாக்கிவிட்டனர். இதற்கு ஐக்கிய முன்னணிக் கட்சியில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு அமெரிக்காவின் கண்ணைத் திறந்துவிடவேண்டும்.

கிழக்கு வங்கத் தேர்தல் முடிவைக்கண்டபின் அந்த ராஜ்ய மந்திரி சபையை மட்டுமின்றி, பாக். மந்திரி சபையையும் உடனே மாற்றியமைப்பதே முறை. இதோடு அரசியல் நிர்ணய சபையையும் கலைத்து மறு தேர்தல் நடத்தியாக வேண்டும். ஏனெனில் அதில் உருவாகக்கூடிய அரசியலுக்கு பாக். மக்களில் பெரும்பாலோரது ஆதரவில்லையென்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. மேலும் ஸிந்து, வட மேற்கு எல்லைப்புறம், பலுசிஸ்தானம் ஆகியவற்றிலும் லீக் ஆட்டங் கண்டுவிட்டதற்கான அறிகுறிகள் அதிகரித்து வருகின்றன. பஞ்சாபிலும் லீகுக்குள் பல பிளவுகள். அவ்விடங்களில் மற்ருெரு தேர்தல் நடக்குமாயின், லீகுக்கு அங்கு கிழக்கு வங்கத்தில் ஏற்பட்ட கதியே ஏற்படக்கூடும். இந்நிலையிலாவது பாக். சர்க்கார் உள், வெளி விவகாரங்களில் தற்போது தாங்கள் கையாண்டுவரும் வேலை முறைகளை மக்கள் உணர்ச்சிக்கு ஒத்தவாறு திருத்திக்கொள்வது பற்றி ஆலோசனை செய்வார என்பது தெரியவேண்டும்.

காற்றுவாக்கிலே.

பிரஞ்சு இந்திய விவகாரங்கள் எப்பொழுதுமே ஒரு தினுசாகத் தானிருக்கும். ஊருக்கெல்லாம் ஒருவழி யென்றால், புதுச்சேரி வகையறுவுக்கென புதிய பாணி யொன்று உண்டு. இப்படியும் உண்டா என அன்று மூக்கில் விரல் வைத்தோம்!

இன்றும் விழிக்கிறோம், ஆனால் 'அடி சக்கை', 'பலே பேஷ்' என சொல்லிக்கொண்டு, உத்ஸாகம் உந்த உந்த. வில்லன் கடைசியில் மனம் மாறி பிராயச் சித்தம் பண்ணுகிற பழைய சினிமா மாதிரி இருக்கிறதே என பிரமிப்புத் தட்டுகிறது. ஆனால், 'உத்தம' கதை லட்சணப் பிரகாரம் இதுதானே சரியான முடிவு!

இந்தியாவுடன் இரண்டறக் கலப்பதென்ற ஸ்ரீகுபேர் கோஷ்டியினர் முடிவைத்தான் சொல்கிறேன். இணைப்பு ஆதரவாளரை இப்படி இம்சித்து, அப்படி அடித்து நொறுக்கியதே, அந்தக் கும்பல்தானே இது என்று கேட்கிறார்கள்? பிரஞ்சிந்திய ஸோஷலிஸ்ட் கட்சி என்று சொன்ன மாத்திரத்திலேயே, "எங்களுக்கும் அதற்கும் ஸ்நானப் பிராப்தி கூடக்கிடையாது" என ஜெயப்பிரகாஷ்— லோஹியா— மேத்தா கூக்குரலிட்டது ஞாபகத்துக்கு வருகிறதா என்ன?

பாக்கிக் கட்சிகளின் பிரதாபம் மாத்திரம் பொன் எழுத்துகளில் பொறிக்கப்பட்டிருக்கிறது போலும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அஞ்ஞாதவாசம் புரிந்த போது, இணைப்பு பற்றிய பேச்சு அதற்கு வேப்பங்காயாக இருந்தது. இப்பொழுது சர்வதேச கண்ணோக்கு காரணமாக இனிக்கிறதாம்.

திராவிட கழகத்தில் ரொம்ப ரொம்ப முற்போக்காளருக்கு, பிற்போக்கு செயலாகப் பட்டது பாரதத்துடன் சேருவது! இன்றோ இங்கிருந்தபடியே "விடுதலை"க்காக தினமொரு அறிக்கை மூலம் கிளர்ச்சி நடக்கிறது!

தேச பக்திக்கு 'காபிரைட்' பெற்றிருக்கும் கட்சிப் பிரமுகர்கள் கூட, சொல் வேறு செயல் வேறாகக் காட்சியளித்தனர். நல்லவேளையாக, அடுத்துள்ள இரண்டொரு ஜில்லாவில்தான் இந்த நிலவரம். பிரஞ்சிந்தியாவுடன் தற்சமயம் 'பிஸினஸ்' ரொம்ப மந்தம். கண்டிப்பும் காய்தாவும் அதிகம். ஆகவே வெளியில் சொல்வதையே திரைமறைவிலும் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இதுகளுக்கெல்லாம் குபேர் கோஷ்டி ஒருவிதத்திலும் சளைத்தது அல்ல. அதன் முடிவும், அறிவிப்பும், நடவடிக்கைகளும் முன் வைத்த காலை இனி பின் வைக்க முடியாமல் செய்துவிட்டன. சிலர் சந்தேகிப்பதுபோல, இது தந்திரமாக இருந்தால்கூட நமக்கு என்ன நஷ்டம்? இவர்களுடன் கூடிப் பேசி, ஒத்துழைத்துக் காரியத்தை சாதிக்க முடியுமா என்ற சந்தேகம் ஒரு சாராருக்கு. கடந்து போனதை நினைத்துக் கொண்டு சிரமமாயிருக்குமே யெனக் கஷ்டப்படுகின்றனர்.

இந்தமாதிரி சந்தர்ப்பத்தில் தான் கை கொடுக்கும் 'கருவேப்பிலை சித்தாந்தம்'. சென்னை மாஜி முதன் மந்திரி ஒருவரின் ஞானப்பிரகாசம், இந்த கண்டுபிடிப்பு. கருவேப்பிலையை சமையலுக்குச் சேர்த்துக் கொள்ளுகிறோம். ஆனால் மற்ற ஆகாராதிகளைப்போல அதைச் சாப்பிடுவதில்லை. இலை ஓரத்தில் ஒதுக்கி வைக்கிறோம். அறுசுவை உண்டியில் மட்டும் கருவேப்பிலை மணம் வீசுகிறதல்லவா? அது போல நம் நோக்கத்துக்கு உபயோகப்படுகிறவரையில் குபேர் கோஷ்டியைப் பயன்படுத்துவது தான் புத்திசாலித்தனம்.

இதுதான் ராஜதந்திரமும்கூட. சாணக்கியரின் 'அர்த்த சாஸ்திரப் பிரகாரம், நமது விரோதியின் விரோதி எப்பொழுதும் உகந்த நண்பனாவான். அதுவும் சமீப விரோதியிடம்தான் அதிக வைரம் காணப்படும். பிரஞ்சு சர்க்காருடன் சண்டையிட்டதால், அடக்குமுறைக்கு ஆளாகி குபேர் கோஷ்டி இந்தியாவுக்கு உற்ற நேசனாவது உறுதி.

அவர்களுக்கு அதிகப்படியாக நாம் சலுகை காண்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. புனித மத நூல் ஒன்றிலிருந்து ஆதாரமும் கிடைக்கும். பாவ மன்னிப்பு கேட்டு தகப்பனிடம் திரும்பிய தனயன்பற்றிய பைபிள்கதைமிக பிரசித்தம். தந்தை சொல்படி நடந்து வீட்டிலிருந்து உழைத்த மூத்த மகனுக்குக் கிடைக்காத வரவேற்பும், விருந்தும், சொத்தைப் பிரித்துக் கொண்டு நாடோடியாக அலைந்து, காசைத் தொலைத்துவிட்டு நிர்கதியாகத் திரும்பிய இளைய மகனுக்கு அளித்தார் தகப்பனார். பிள்ளைக்காகப் படைத்த அமுது அல்ல அது; அவன் மனதைத் திருப்பிய ஆண்டவனுக்கு அளித்த அன்புக் காணிக்கை. நிற்க,

சகல விதத்திலும் ஸ்ரீ குபேரைப் பாராட்ட நாம் கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, பிரஞ்சிந்திய சம்பிரதாயத்தை கைவிடாமல், ஒரு அதிசுவாரஸ்ய கட்டத்தில் கொணர்ந்து நிறுத்தியிருப்பதற்கு நமது நன்றி உரித்தாகுக!

—கரூர்.



பழைய வாத்தியார்:—அட! என்கிட்ட படிச்ச ராமுவா? இப்பொழுதாவது, நாலுபேர் கேட்கிற கேள்விக்கு ஒழுங்கா பதில் சொல்லிண்டு வரயா?

உத்தரப் பிரதேசத்தில் யானையைக் கட்டி ஏர் உழத் திட்டம் தீட்டப் பட்டுள்ளது!

—லக்ஷ்மணபுரி செய்தி.

'முதலில், 'யானையைக் கட்டித்தீனி போட' இவர்கள் தீட்டியுள்ள திட்டம் தான் என்ன?' என்று கேட்கிறார் இங்கொரு பஞ்சத்து ஆண்டி!

• • •

எலிஸெபத் ராணியும் அவரது கணவரும் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் உடனுக்குடன் பதிலளித்து ராணி தம்பதியைத் திகைக்க வைத்து விட்டது ஒரு 'பேசும் குதிரை!'

—பிரிஸ்பேன் செய்தி.

பிரஸ்தாப குதிரையை ராணிதம்பதிகள் 'பலே! 'கஜ'ப் போக்கிரியாக விருக்கிறதே!' என்று வியந்திருப்பார்களானால் வியப்பில்லை.!

• • •

'பல ஹோட்டல்களில் காப்பியின் விலையை 2½ அணாவிலிருந்து 2 அணாவாகக் குறைத்திருக்க மற்ற ஹோட்டல்காரர்கள் மாத்திரம் குறைக்காதிருக்கிறார்களே இதென்ன பிடிவாதம்?'

—பத்திரிகையில் கடிதம்.

மற்ற ஹோட்டல்களைப் பார்த்துக் 'காப்பி' யடிக்கத் தங்களுக்கு விருப்பமில்லையென்று ஹோட்டல் முதலாளிகள் சால்ஜாப்பு கூறுவார்களோ?!

• • •

யானையை ஈன்ற நாய்!

—செய்தித் தலைப்பு.

அடா! 'துப்பாக்கி வயிற்றில் பீரங்கி பிறந்திருக்கிறது' போலிருக்கே!!

• • •

மத்திய சர்க்கார் சென்னை ராஜ்யத்தில் நிறுவ உத்தேசித்திருக்கும் மூன்று கரும்பாலைகளை சர்க்காரே நடத்தாமல், தனிப்பட்டவர்களுக்கே விட்டுவிட உத்தேசித்திருப்பதாக தொழில் மந்திரி அஸெம்பிளியில் அறிவித்தார்.

—சென்னைச் செய்தி.

எனவே தனிப்பட்ட முதலாளிகள் 'சக்கை போடு' போட்டுவிடுவது என்று கனவு காண்பதும் சாத்தியமே!

• • •

மந்திரிமார்கள் பெருமான் கோவில்களுக்கே போகிறார்கள்; சிவன்கோவில்களுக்குப் போவதே இல்லையே, ஏன் என்று சட்ட சபையில் ஒரு மெம்பர் கேள்வி கேட்டார்!

—சென்னைச் செய்தி.

'பெருமாள் கோவில் பிரசாதம் வெகு ருசியாக விருப்பதற்கு அவர்கள் என்ன செய்வார்கள், பாவம்!' என்று விளக்கம் கொடுக்கிறார் ஒரு மடப்பள்ளிப் பெருச்சாளி!

—தரனம்.

ரயில் நேரங்கள்

*

சென்ட்ரல் ஸ்டேஷன்

புறப்படும் நேரம்

கல்கத்தா மெயில்	இரவு 8—5
கிரான்டிரங் எக்ஸ்பிரஸ்	காலை 8-45
பூரி பாஸஞ்சர்	இரவு 7-10
பெஜவாடா பாஸஞ்சர்	காலை 6-35
பம்பாய் மெயில்	இரவு 9—0
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 7-35
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	காலை 9-10
ரேணிகுண்டா பாஸஞ்.	மாலை 5-30
„ „	——
பெங்களூர் மெயில்	இரவு 8-45
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 12-15
பெங்களூர் பாஸஞ்சர்	காலை 6-10
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு 9—5
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 7-55
„ „	மாலை 2—5
„ „	மாலை 6-47
„ „	இரவு 9-35
மங்களூர் எக்ஸ்பிரஸ்	இரவு 7-30
கொச்சின் எக்ஸ்பிரஸ்	மாலை 6-10
நீலகிரி எக்ஸ்பிரஸ்	இரவு 8-10
ஜோலார்பேட்டை பாஸஞ்.	காலை 11-25
விசாகை பாஸஞ்சர்	இரவு 10-45
ஜனதா எக்ஸ்பிரஸ் 3-வது வகுப்பு-மட்டும் சென்னை-பம்பாய் (பிரதி வியாழன் மட்டும்)	பகல் 2—0
டெல்லி-சென்னை ஜனதா எக்ஸ்பிரஸ் (3-வது வகுப்பு மட்டும்) பிரதி வியாழன்	மாலை 12-30

வரும் நேரம்

கல்கத்தா மெயில்	காலை 7-20
கிரான்டிரங் எக்ஸ்பிரஸ்	மாலை 5-50
பூரி பாஸஞ்சர்	காலை 9—0
பெஜவாடா பாஸஞ்சர்	இரவு 8-30
பம்பாய் மெயில்	காலை 5-50
பம்பாய் எக்ஸ்பிரஸ்	இரவு 7-20
ரெய்ச்சூர் பாஸஞ்சர்	மாலை 3-25
ரேணிகுண்டா பாஸஞ்சர்	காலை 9-48
„ „	இரவு 9—0
அரக்கோணம் பாஸஞ்சர்	காலை 8-50
„ „	மாலை 4-25
„ „	——
„ „	மாலை 7-50
பெங்களூர் மெயில்	காலை 6-25
பெங்களூர் எக்ஸ்பிரஸ்	பகல் 2-55
பெங்களூர் பாஸஞ்சர்	இரவு 8-10
பெங்களூர் பாஸஞ்சர்	காலை 6-50
மங்களூர் எக்ஸ்பிரஸ்	காலை 7-30
கொச்சின் எக்ஸ்பிரஸ்	காலை 8-25
நீலகிரி எக்ஸ்பிரஸ்	காலை 7-10
ஜோலார்பேட்டை பாஸஞ்.	பகல் 1-20
விசாகை பாஸஞ்சர்	காலை 5—0
ஜனதா எக்ஸ்பிரஸ் (3-வது வகுப்பு-மட்டும்) சென்னை-பம்பாய் (பிரதி திங்கள் மட்டும்)	பகல் 3-20
டெல்லி-சென்னை ஜனதா எக்ஸ்பிரஸ் (3-வது வகுப்பு மட்டும்) பிரதி செவ்வாய்	மாலை 5-20

எழும்பூர்

புறப்படும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 7-40
இந்தோ-சிலோன் எக்ஸ்.	இரவு 8—0
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	இரவு 9-40
விருதுநகர் பாஸஞ்சர்	இரவு 10-15
விழுப்புரம் பாஸஞ்சர்	மாலை 3-50
கார்டு லைன்	
திருவனந்தபுரம் எக்ஸ்.	இரவு 8-20
தனுஷ்கோடி பாஸஞ்சர்	காலை 11-20
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	இரவு 7-15
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	இரவு 9-55
பிரான்ச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	மாலை 5-32
„ „	மாலை 6—1

வரும் நேரம்

மெயின் லைன்	
செங்கோட்டை பாஸஞ்சர்	இரவு 7—5
இந்தோ-சிலோன் எக்ஸ்.	காலை 7-25
திருவனந்தபுரம் பாஸஞ்சர்	காலை 5-20
விருதுநகர் பாஸஞ்சர்	காலை 5—0
விழுப்புரம் பாஸஞ்சர்	காலை 11-15
கார்டு லைன்	
தனுஷ்கோடி பாஸஞ்சர்	மாலை 3—5
திருவனந்தபுரம் எக்ஸ்.	காலை 6—0
திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்	காலை 7—0
தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்	காலை 5-40
பிரான்ச்	
காஞ்சிபுரம் பாஸஞ்சர்	காலை 9-26
„ „	காலை 9-52

ஹாஸ்டல் பேய்

ஆர். எஸ். ஞானம்பாள்

காலேஜ் திறந்து ஓரிரு வாரங்கள் ஓடிவிட்டன. யாரைப் பார்த்தாலும் 'ஹாஸ்டல் பேயைப்' பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். 'சார்! நான் கண்ணால் பார்க்காமல் சொல்லமாட்டேன். நம் ஹாஸ்டல் மத்தியில் உள்ள புளியமரத்தில் பேய் இருப்பதென்னவோ உண்மை. அதை மறுக்கமுடியாது. போன வருஷம் அதைப் பார்த்துப் பயந்தும்விட்டேன்' என்றான் யதார்த்தவாதியாக நடித்த ஒரு பழைய மாணவன்.

'ஆமாம். ப்ரதர்! நானும் பார்த்திருக்கிறேன். ஒரே கறுப்பு எலும்பு மட்டும் தெரிந்தது' என்று விளக்கம் கொடுத்தான் சகபாடி.

'பேயாவது மண்ணாவது எல்லாம் மூட நம்பிக்கைகள்' என்றான் ஒரு முற்போக்கு மாணவன்.

'புலியோ கிலியோ என்பார்கள். எல்லாம் மனசுதான் காரணம்' என்றான் சமாதானப்ரியன்.

'சார். நான் சொல்றேன் கேளுங்கோ. போன வருஷம் ஹாஸ்டல்லே 'சி' ப்ளாக்கிலே ஒரு ஸ்டூடன்ட் தற்கொலை பண்ணிக்கொண்டாராம். அவருடைய பேய்தான் சுத்தறதாம். கிளார்க் கூட சொன்னார்.'

'என்னவோ! என் இரு கண்களாலும் பார்க்கும்வரை நம்ப முடியாது' என்றான் மறுபடியும் முற்போக்கு மாணவன்.

'எது எப்படியிருந்தாலும் நாம் ஜாக்கிரதையாக இருந்துவிடலாமே. ராத்திரி பத்து மணிக்கு மேலே ரூமைவிட்டு வெளியே வரப்படாது சார்' என்று எச்சரித்தான் வெங்குட்டு.

வெங்குட்டு கலாசாலையின் பி. ஏ. முதல் வகுப்பில் புதிதாக வந்து சேர்ந்த மாணவன். இன்டரை வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டே படித்தவன். இந்தக் காலேஜுக்கும், ஹாஸ்டலுக்கும் அவன் புதுசு. ரொம்ப சாது, தப்புத் தண்டாவிற்குப் போகமாட்டான். யார் என்ன சொன்னாலும் அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டுப் போய்விடுவான். மகா பயல்தனாகிய அவன் எல்லோரையும் ஸ்நேகம் செய்துகொண்டுவிட்டால் நல்லது என்று நம்பினான்.

வெங்குட்டு இந்தக் காலத்துக் 'காலேஜ் ஸ்டூடன்ட்' மாதிரி இல்லை. தாத்தாவின் செல்லப் போராட்டையால் அவர் பேச்சைத் தட்டாமல் தலை நிறையக் குடுமி வைத்திருந்தான். நீர் கொட்டிய பழையதைப் பாட்டி பிசைந்து பிசைந்துபோட ஆசையுடன் சாப்பிடும் வெங்குட்டு மொழு மொழுவென்றிருந்தான். குண்டஞ்சி வேஷ்டியும், காக்கி ஷர்ட்டும், காதில் என்னெய் இறங்கிய ஒரு சிகப்புக் கடுக்கனும் வெங்குட்டுவிற்கு அழகு செய்தன. நாகரிகத்தில் நீச்சலிடும் அவன் நண்பர்கள், வெங்குட்டுவின் அலங்காரத்திலிருந்து, த்ரிகால சந்த்யாவந்தனம்வரை கேலி செய்து விமர்சிப்பார்கள். அவர்கள் கேலி செய்யமுடியாமல் இருக்கும் அம்சம் வெங்குட்டுவிடம் ஒன்று உண்டானால் அது அவன் வாங்கும் மார்க்கே. இன்டரில் வெங்குட்டு ப்ரசிடென்ஸி பஸ்டாகப் பாஸ் செய்தவன்.

பேயைப் பற்றிய விவரங்கள் எல்லோரையும்விட வெங்குட்டுவை சற்று அதிகமாகவே கலக்கிவிட்டது. மனம் வெகுவாக சஞ்சலப்பட்டது. ஜாக்கிரதையாகவே இருந்தான். ஹாஸ்டலில் உள்ள அனைவரும் அவன் பயத்தைக்கண்டு சிரித்தனர்.

ஒரு நாள் ஆங்கில ஆசிரியர் 'ஹாம்லெட்'டில் ஒரு கட்டுரை எழுதத் தயாராய் இருக்கும்படி உத்தரவிட்டிருந்தார். மகா கண்டிப்பு மனுஷர் அவர். அவரை ஏமாற்ற முடியாதாகையால் இரவு மூன்றும் வகுப்பு மாணவர்களின் அறைகளில் வழக்கத்திற்கு விரோதமாக வெகு நேரம் வரை விளக்குகள் எரிந்தன. வெங்குட்டுவின் அறையிலும் தான்!

பத்து மணியடித்தது. அநேகமாக எல்லா விளக்குகளும் அணைக்கப்பட்டுவிட்டன. ஒன்றிரண்டு அறைகளில் மட்டும்தான் எரிந்தன. அதுவும் படுக்கப் போகுமுன் விளக்கை அணைக்க சோம்பல்கொண்டு அப்படியே தூங்குபவர் அறைகள். மணி பதினொன்று ஆயிற்று. வெங்குட்டு மட்டும் தீவிரமாக ஏதோ எழுதிக்கொண்டிருந்தான். அறையிலுள்ள சின்னஞ்சிறு கடிகாரம் டிக்டிக் என்று அடித்தது தெளிவாகக் கேட்டது. வெங்குட்டு, கதாநாயகன் தன்காதலியைச் சுடுகாட்டில் தேடப்போகும் வழியில் பேய்கள் எள்ளி நகையாடுவதையும், பயமுறுத்துவதையும் 'எழுத வேண்டியிருந்தது. வெங்குட்டுவின் இதயம் குப்குப்பென்று அடைத்தது. பாடம் ஓடவில்லை. புஸ்தகத்தை மூடவும் மனம் வரவில்லை, விடிந்தால் ஆசிரியர்முகத்தில் விழிப்பது எப்படி? வயிற்றில் சங்கடம் செய்தது.

கடியாரத்தைப் பார்த்தான். பதினொன்றே முக்கால் ஆகிவிட்டது. இனி படிக்க முடியாது என்று படுக்கையை விரித்தான். விளக்கை அணைக்கக் கையைத் தூக்கின அவன் ஜன்னல் வழியாக இரு உருவங்கள் தூரத்தில் வருவதைப் பார்த்தான். அவற்றின் வாயில் நெருப்பு வேறு! வெங்குட்டு நிலைகொள்ளாமல் தவித்தான். தலை கிறுகிறு என்று சுழன்றது. பட்டென்று விளக்கை அணைத்துவிட்டுக் 'கடவுளே கதி' என்று படுக்கையில் விழுந்துவிட்டான். கண்கள் மூட மறுத்தன. காதுகள் எதையோ கேட்கத் தயாராக இருந்தன.

உருவங்கள் வெங்குட்டுவின் ரூமை நெருங்கிவிட்டன. பேய்கள் பாட ஆரம்பித்தன. ரூம் வாசலுக்கு வந்ததும் பாட்டும் நின்றுவிட்டது. அசட்டுத்தனமாக திறந்து வைத்திருந்த கதவை மூட எழுந்திருக்கலாமென்றாலோ, அப்பொழுது, பேய்கள் கழுத்தை நசுக்கிவிட்டால்... தாத்தா கொடுத்த கம்பளிக்குள் சுருண்டு முடங்கிக்கிடந்தான் வெங்குட்டு.

பேய்கள் பேச ஆரம்பித்தன.

'என்ன அண்ணே! நமக்கு வேட்டைதான். நல்ல மூஞ்சிலே முழிச்சோம்'.

'ஆமாப்பா. அந்தப் பயலை ஒருகை பாத்துடறதே சரி. எங்கே புட்டியை இப்படித்தள்ளு' பாட்டுக் கிளம்பியது. 'யாராத்தா வண்டியிலே ரோசாப்பூக் கொண்டையிலே—போடப்பனு ஒண்ணரை பூப்போட்ட கிளாசிலே.'

வெங்குட்டுவுக்கு நாக்கு உலர்ந்துவிட்டது. பாட்டில் உடையும் சத்தம் கேட்டது. அவன் வாய், 'வந்தே பூத பிசாச நாதவடுகம், க்ஷேத்ரஸ்யபாலம் சிவம்' என்று கடவுளைத் துணை அழைத்தது.

'அடே தம்பி! இண்ணைக்குப் பாட்டில் சுகமில்லே. நாளைக்கு வந்து உன்னைக் கவனிச்சுக்கறோம்' என்று கூறிய பேய்கள் போய்விட்டன.

நல்லபடியாகப் பொழுதுவிடிய வேண்டுமே என்று பிரார்த்தனை புரிந்து கொண்டிருந்த வெங்குட்டு அப்படியே தூங்கிவிட்டான்.

• • •

வெங்குட்டுவுக்குத்தான் அவ்வுருவங்களைப்பற்றிப் பயம். நமக்கென்ன? அவை வேறு யாருமில்லை. 'இமிடேஷன்' சாமாவும், காக்கா ராமசாமியும்தான். இமிடேஷன் சாமா மானோ—ஆக்டில் நிபுணன். யாரைப்போல வேண்டுமானாலும் பேசி நடித்து இமிடேட் செய்வான். ஷேக்ஸ்பியர் காதல் காட்சியிலிருந்து, தெருக்கூத்துக்காமிக்குவரை நடித்துவிடுவான். காலேஜ் ட்ராமாக்கள் அவனில்லாமல் நடைபெறாது. மாறுவேஷப் போட்டியில் வருடம் தவறாமல் முதற்பரிசு அவனுக்குத்தான். ஹானர்ஸ் கடைசி வருஷம் படிக்கிறான். நாலு வருஷம் ஹாஸ்டலில் பழம் தின்று கொட்டையும் சப்பினவன், புதிதாக வரும் மாணவர்களைக் கலாட்டா செய்வதில் அவனுக்குப் பரமானந்தம்.

அவனுடைய இணைபிரியா நண்பன் காக்கா ராமசாமி. புரொபஸரிலிருந்து ப்யூன் வரை எல்லோரையும் காக்கா பிடித்துக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் அவன் திறமையை வியந்தே, மற்றவர்கள் அவனைக் காக்கா ராமசாமி என்று குறிப்பிட்டனர்.

சாமாவும், காக்காவும் வார்டனை ஏமாற்றிவிட்டு எப்படியோ சினிமா பார்த்துவிட்டு வந்துவிட்டனர். அதைப் பற்றிப் பேசிக்கொண்டு வரும்பொழுதுதான் வெங்குட்டு ரூமில் விளக்கெரிவதைக் கண்டனர். 'வெங்குட்டுவை அழவைத்து வேடிக்கை பார்க்க' ஆசைப்பட்டனர். பாட்டுக் கிளம்பியது. பேய்களாக நடித்தனர். சினிமாவிலிருந்துவரும் வழியில் வாங்கி வந்த சோடாபாட்டில் உடைபட்டது. வெங்குட்டுவை நடுங்க வைத்ததோடு நாடகத்தை முடித்துக் கொண்டனர்.

மறுநாள் காலை. வெங்குட்டுவின் கண்முன் முதலிரவுச் சம்பவங்கள் படமெடுத்தாடின. உடைந்த பாட்டில் அவன் பயத்தை உறுதியாக்கியது.

இரவு நெருங்கியது. வெங்குட்டுவின் வயிற்றில் நெருப்பைக்கட்டியது போலிருந்தது. பேய்கள் வருவதாகச் சொல்லி விட்டுப் போயிருக்கின்றனவே! 'கோபாச்சு' ரூமிற்கு ஓடினான்.

'என்னடா சாஸ்திரி! எங்கே வந்தே?' என்று வரவேற்றான் கோபாலகிருஷ்ணன். அவனும் வெங்குட்டுவும் ஒரே வகுப்பில் படித்தனர். ஒரே ஊர்க்காரர்கள்.

'என்ன கோபாச்சு! கேலி பண்றே?' என்றான் வெங்குட்டு தணிவாக.



'நான்சென்ஸ். கோபாச்சுவு மாச்சு, சீமாச்சுவுமாச்சு. இனி மேல் கோபால் என்று கூப்பிடுற தானால் பேசு. இல்லாவிட்டால் வெளியே நடடா' என்று விரட்டினான் கோபாலன்.

'சரி அண்ணா. நீ சொல்றபடியே ஆகட்டும். நீ ஒரு உதவி செய்யணுமே. எனக்குத் துணையாக என் ரூமில் படுத்துக்கொள்ளேன்' என்று கெஞ்சினான். முன்னாள் இரவு நடந்த சம்பவத்தை நடுக்கத்துடன் கூறி விடாப்பிடியாகக் கெஞ்சினான்.

'அதுமட்டும் முடியாது. எனக்கு இடம் மாறினால் தூக்கம் வராது'.

'தயவு செய் அண்ணா. வார்டனிடம் கேட்டு இரண்டு நாளில் அவர் ரூமிற்குப் பக்கத்தில் ரூம் எடுத்துக்கொள்கிறேன். (வார்டனென்றால் பேய்கூடப் பயந்துவிடும் என்று வெங்குட்டு நம்பினான்). இன்றைக்கு மட்டும் தயவு செய்து படுத்துக்கொள் அண்ணா. கட்டில் தரேன் என் மெத்தையையும் தரேன். நான் கீழே வேணுமானாலும் படுத்துக் கொள்கிறேன்' என்று காலைப் பிடிக்காத தோஷமாகக் கெஞ்சவே கோபு சம்மதித்தான். பேயை விரட்டக் கண் விழிக்க டீ, பீடா, பழம், சாக்லேட் எல்லாம் சப்ளை செய்தான் வெங்குட்டு கோபுவுக்கு.

மாலையில் விளையாடுமிடத்தில் கோபுவுக்குத் தெரியவந்தது, 'வெங்குட்டுவைப் பயமுறுத்திய பேய்கள் சாமாவும் காக்காவும் தான்' என்று. மூன்று பேருமாகக் கூடி நாடகத்தைத் திறம்பட நடிக்கத் திட்டமிட்டனர்.

இரவு ஒன்பதரை மணி. சப்-வார்டன் அட்டெண்டன்ஸ் எடுத்துவிட்டுப் போய்விட்டார். தயாராக விரித்திருந்த மெத்தையில் கோபு மிகவும் களைப்புடன் படுத்தான். வெங்குட்டு கட்டிலுக்கு அருகில் கீழே படுத்துக் கொண்டான்.

வெங்குட்டு 'கோபண்ணா! தூங்கறயா?' என்று பேச்சை ஆரம்பித்தான்.

'ஏண்டா?'

'ஒண்ணுமில்லே. உன் ரூமில் அலமாரியிலே ஒரு மண்டையோடு வைத்திருந்தாயே அது எதற்கு?'— வெங்குட்டுவின் பேச்சில் அருவருப்புக் கூத்தாடியது.

'ஏன் அண்ணா, கிளிஞ்சல்கள் பொறுக்குவதும், பட்சிகளின் இறகுகளைச் சேர்ப்பதும் தான் 'ஹாபி'யாகக் கொண்டிருந்தாய். எலும்பையும், நரம்பையும் எதற்குச்சேர்க்கிறாய்?' என்று வாதாட ஆரம்பித்தான் வெங்குட்டு.

கோபு பெருமூச்சுவிட்டான். "ஐயோ! வெங்குட்டு. அந்த மண்டை ஓட்டை சாதாரண எலும்பு நரம்புகளுடன் சமமாகப் பேசுகிறாயே. அதன் அருமை உனக்கு எப்படித் தெரியும்? இண்டரில், ஸ்டீபன்ஸ் என் நண்பனானான். மத வேறுபாடு எங்கள் நட்பைப் பாதிக்கவில்லை. நீ அவனைப் பார்த்ததில்லை. ரொம்ப நல்லவன். ஒருநாள் நாங்களிருவரும் வாக்கிங் போய்க்கொண்டிருந்தோம். சற்று முன்தான் மழை பெய்துவிட்டிருந்தது. வெயில் அடித்தது சுகமாக இருந்தது. ஸ்டீபன்ஸ் காலில் முள் குத்திவிட்டது. முள்ளை எடுப்பதற்காக பக்கத்திலிருந்த எலெக்ட்ரிக் ட்ரான்ஸ் பார்மரில் ஒரு கையை

"என்னடா! அந்தக் கண்ணுசாமி பயல் என்னைப்பத்தி கன்னாபின்னான்னு பேசறானாமே...!"

"அது டெக்குது விடுங்க! மலையைப் பார்த்து நாய் குலைக்கறான்!"

தாங்கிக்கொண்டு காலைத் தூக்கினான். துரதிர்ஷ்டம்! உடனே ஸ்டீபன்ஸ் உடல்கருகிக் கீழே விழுந்துவிட்டான். மழையினால் ட்ரான்ஸ்பார்மரில் எங்கேயோ 'கரண்ட்', 'எர்த்' ஆகியிருக்க வேண்டும். ஓடிப்போய் ஸ்டீபன்ஸின் தந்தைக்குத் தெரிவித்தேன். என்னை அழவைத்துவிட்டு என் ஆருயிர் நண்பன் போய்விட்டான்.

ஒரு நாள் இரவில் நான் கிறிஸ்தவ இடுகாட்டிற்குப் போய் ஸ்டீபன்ஸின் கல்லறைக்கு மலர் சாற்றினேன். துக்கம் தாங்காது அழுதேன். சிறிது நேரத்தில் ஒரு பேய் என்னருகே வந்தது. நான் பயந்தே போய்விட்டேன். ஆனால் அப்பேய், 'பயப்படாதே. இந்த மண்டையோடு உன் நண்பன் ஸ்டீபன்ஸுடையது. அவன் ஞாபகார்த்தமாக இதை வைத்துக் கொள். இதைப் பிரியாதே' என்று கூறி மண்டை ஓட்டை அளித்தது. அதைத்தான் நீ பார்த்தாய். அதன்மூலம் தான் நான் தினம் ஸ்டீபன்ஸைப் பார்த்துப் பேசுகிறேன்" என்று கூறி முடித்த கோபாலன் தன் நண்பனுக்காக இரு சொட்டுக் கண்ணீரையும் உதிர்த்தான்.

முகத்தைச் சுளித்துக் கொண்டே அருவருப்புடனும், பயத்துடனும் கேட்டுக் கொண்டிருந்தான் வெங்குட்டு.

'வெங்குட்டு! கோபித்துக் கொள்ளாதே. ஏன் முதலிலேயே சொல்லவில்லை என்று வையாதே. எப்பொழுதும்போல் இன்றிரவும் பன்னிரண்டு மணிக்கு ஸ்டீபன்ஸுடன் பேசுவேன். எங்கு போனாலும் மண்டை ஓடுவிடாது என்னை'.

'ஐயோ! அண்ணா! வேடிக்கை பண்ணாதே, இதற்காகவா உன்னை அழைத்து வந்தேன்?' என்றான் வெங்குட்டு.

'சரிப்பா. நான் போய்விடுகிறேன்' என்று கோபு எழுந்தான்.

'இல்லை அண்ணா. அதற்குச் சொல்லவில்லை. ப்ளீஸ் எக்ஸ்க்யூஸ்மீ' என்று வெங்குட்டு மன்னிப்புக்கேட்டான்.

"...சாமி! லாண்டிரிங்க. அழுக்குத்துணிப் போடறீங்களா?"

"டேய். சீனு! நேத்து இவன் கொண்டு வந்தத் துணிகளையெல்லாம் கொண்டு வந்து போடுடா!"

'பின்னே என்னடா? பயப்படாதே. தூங்கு'

விளக்கு அணைக்கப்பட்டது.

கோபு சற்றுக் கண்ணயர்ந்தான். வெங்குட்டுவுக்குத் தூக்கம் வரவில்லை. கண்ணை மூடினால் பேய்கள் வந்து கழுத்தைப் பிடித்து அமுக்திவிட்டால்...என்ற பயத்தால் உடல் வியர்த்தது.

போலீஸ் ஸ்டேஷன் கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடித்தது. பேய்களின் ஞாபகத்தால் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது.

'கோபு! கோபு!' என்ற சத்தம் எங்கிருந்தோ வந்தது. சத்தம் பக்கத்துக்கே வந்துவிட்டது. வெங்குட்டு கோபுவைத் தட்டி எழுப்பினான். 'எழுந்திருடா கோபாச்சு! பேய் வந்துவிட்டதடா!' என்று பதறினான் வெங்குட்டு.

'டே! மடையா. போர் பண்ணாதேடா!' என்று கோபு திரும்பிப் படுத்தான்.

'கோபு! நான்தான் ஸ்டீபன்ஸ். கதவைத் திற.'

வெங்குட்டு கஷ்டப்பட்டுக் கோபுவை எழுப்பி உட்கார வைத்துவிட்டான். பொய்த் தூக்கம் தாங்கிய கோபு கண்ணைக் கசக்கிக்கொண்டு எழுந்தான்.

'கோபு! வெங்குட்டு ரூம்தானே. பரவாயில்லை. கதவைத் திற!'

வெங்குட்டுவின் தேகம் வெடவெட என்று நடுங்கியது. 'பயப்படாதே வெங்குட்டு. தைரியமாயிரு' என்று தட்டிக் கொடுத்தான் கோபு.

கதவுமேல் வலைக்கம்பி வழியாக நெருப்பின் ப்ரகாசமும், புகையும் கலந்து வரவே வெங்குட்டு, 'ஐயையோ! கொள்ளி வாய்ப் பிசாசு' என்று அலறினான். கோபு அவன் வாயைப் பொத்தினான்.

'கோபு! கதவைத் திறக்கிறாயா? நானே வலைக்கம்பி வழியாக வரட்டுமா?' என்று கேட்டது பேய்.

'நான் என்னண்ணா பண்ணுவேன்?'

'அழாதே நான் வெளியே போய்விட்டால் பேய் ஒன்றும் செய்யாது'.

'ஐயோ நான் தனியாக என்ன செய்யட்டும்?' வெங்குட்டுவின் கண்களில் நீர் தேம்பியது.

'நீ கட்டிலுக்கு அடியில் படுத்துக்கொள். ரூமைப் பூட்டிக் கொண்டுபோய் விடுகிறேன். காலையில் வந்து திறக்கிறேன்'. என்று யோசனை கூறினான் கோபு.

வெங்குட்டு ஒப்புக்கொள்ளவே, கட்டிலுக்கடியில் அவனைப் படுக்கவைத்து, பெட்ஷீட், கம்பளி எல்லாவற்றையும் போர்த்தி கட்டில்மேல் இரு பெட்டிகளையும் தூக்கிவைத்துவிட்டு, கோபு ரூமைப் பூட்டிக்கொண்டு சென்றான்!

கோபுவும் பேயும் பேசிக் கொண்டனர். பின் 'வெங்குட்டு! குட்நைட் தைரியமாகத் தூங்கு'. என்றான் கோபு. பேய்களும் 'குட்நைட்! வெங்குட்டு' என்றன. வெங்குட்டு பதிலே பேசவில்லை.

காலையில் ரூமைத் திறக்க வந்தான் கோபு. கதவைத் திறந்து வெங்குட்டு வெங்குட்டு, என்று கத்தியும் பதில் வராமற் போகவே பெட்டி, கட்டில்களை அப்புறப் படுத்தினான். 'பேய், கொள்ளிவாய்ப் பிசாசு.' என்று வெங்குட்டு பிதற்றிக் கொண்டிருந்தான். உடம்பு நெருப்பாகக் காய்ந்தது.

• • •

ஹாஸ்டல் டாக்டர் வந்து பார்த்தார். காய்ச்சல் நூற்றிநாலு டிகிரி இருந்தது. மன அதிர்ச்சியால் காய்ச்சல் என்றுகூறி இன்ஜெக்ஷன் செய்தார். ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் படுக்க வைத்துக் கவனித்தார்.

வெங்குட்டு பூரண குணமடைந்தான். 'டே, லீவில் ஊருக்குப் போனதும் அம்மாவைக் கூழ் மோர் காச்சிக் கொடுக்கச் சொல்லு. தாத்தாகிட்ட சொல்லி ஒரு யந்திரம் கட்டிக் கொள்ளுடா' என்றான் கோபு மிகவும் பரிந்து சொல்பவன்போல்.

பொங்கி வரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு சாமாவும், காக்காவும் 'ஆமாம் அப்பா. இனிமேலாவது தைரியமாக இரு. தைரியம் தான் பெரிய ரட்சை' என்றனர்.

'ஆகட்டும் அண்ணா' ஊருக்குப் போனதும் ரட்சை கட்டிக்கொள்கிறேன்' என்றான் வெங்குட்டு.

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயாகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக்கண்டு ஏமாறாதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
19, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 85254.
கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

வெற்றி

ப. ரா.

மீண்டும் அவர்களது கண்கள் சந்தித்தன. அவ் விழிகளில் தோன்றிய உணர்ச்சி காதல் அல்ல; பரஸ்பர அனுதாபம் தான்! தம் வாழ்வின் முக்கியமான குறிக்கோளைப் பொறுத்தவரையில் அடுத்தடுத்து ஏமாற்றமே கண்டு பற்றி எண்ணக்கூட இடமில்லாதிருந்தது.

அவன் ஓர் எழுத்தாளன். தன் பேனாவின் வன்மையால் வெற்றி கண்டு வயிற்றைக் கழுவிக்கொள்வதோடல்லாமல் பெயரும் புகழும் சம்பாதித்து விடலாமெனவும் மனக்கோட்டை கட்டியவன். அவனது முயற்சிகளெதுவும் நாளதுவரை பயன் தரவில்லை. தன் லட்சியக் கொள்கையினின்று சிறிது கீழே இறங்கி வந்து, மூன்றாந்தரமான பத்திரிகாசிரியர்களையோ அல்லது புத்தகப் பதிப்பாளரையோ அவன் திருப்தி செய்ய இசைந்திருப்பானாகில் இவ்வளவு சங்கடப்பட வேண்டிய தேவை அவனுக்கு இருந்திராது. ஆனால் உயர்ந்த கற்பனையும் குறை கூற இடமற்ற இலக்கிய நடையும் அவனால் கைவிடப்பட முடியாத அம்சங்கள். என்ன காரணத்தினாலோ நல்ல முறையில் நடத்தப்படும் பத்திரிகைகளும் அவனது சிருஷ்டிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்" என்ற வள்ளுவரின் தெய்வ வாக்கை மூலமந்திரமாகக் கொண்டு மறுபடியும் மறுபடியும் முயற்சி செய்தே வந்தான். எனினும் ஏமாற்றம் அவனது உறுதியைக் குலைத்து வாழ்விலேயே வெறுப்பு உண்டாகச் செய்த சந்தர்ப்பங்களும் குறுக்கிடாது போகவில்லை.

அவளது நிலைமையும் கிட்டத்தட்ட இதே விதமானதுதான். சித்திரக் கலையில் அளவற்ற ஆர்வம் கொண்டு அதற்கெனவே தன் வாழ்வை அர்ப்பணிக்கத் துணிந்துவிட்டவள். 'ஓவியம், சிற்பம் போன்ற கலைகளில் பெண்கள் பிரகாசிக்க முடியாது' என்ற கொள்கையைப் பொய்யாக்க வேண்டுமென்பது அவள் அபிலாஷை. இரவு பகலென்று பாராமல் தூரிகை கொண்டு வரைந்து தள்ளினாள்; பற்பல பத்திரிகைகள் கண்காட்சிகளுக்கு ஓவியங்களை அனுப்பி வைத்தாள். அங்கு அடைந்த தோல்விகள் அந்த எழுத்தாளனின் அனுதாபத்துக்கு அவளைப் பாத்திரமாக்கின.

ஒரே தபாலில் அவர்களது நிராகரிக்கப்பட்ட சிருஷ்டிகள் திரும்பி வருவது சகஜமாயிற்று. எவ்வளவுதான் எதிர்பார்க்கப்பட்டதாயினும் தோல்வி தோல்வி தானே? தபாற்காரன் போவதற்குள் அவள் கண்கள் சிறிது கலங்கும். அவனது முகமும் இதயத்தைப்போலவே, குன்றிப்போயிருக்கும். ஒன்றையொன்று எதிர் நோக்கியிருந்த வீடுகளில் வசித்தமையால் தூர நின்றாகிலும் ஒருவரது உணர்ச்சிகளை மற்றவர் புரிந்துகொள்ள முடிந்தது. தத்தம் சொந்த ஏமாற்றம் அவர்களைப் பாதிப்பது ஒரு கணநேரத்துக்குத்தான். அடுத்த வினாடியில் மற்றவர்பால் ஏற்படும் அனுதாபம் அதை மறைத்து விடும்.

"அதைரியம் வேண்டாம். மீண்டும் முயற்சி செய்யுங்கள்" என்று ஊக்கும் அவன் பார்வை.

"என் தோல்வி பெரிதல்ல. உங்கள் வெற்றியையே விரைவில் காண விரும்புகிறேன்" என்று அவள் கண்கள் சொல்லாமற் சொல்லும்.

எப்போதாயினும் இருவரும் சந்திக்க நேர்ந்தால் நாலு வார்த்தை பேசுவார்கள். தூரத்து நட்பையும் மதிப்பையும் தவிர வேறு உணர்ச்சிகள் அங்கு தோன்றா. கூச்சம் உண்டாக்கக்கூடிய கேள்விகள் எதற்கும் இடமில்லை. இன்றுவரை இவ்வேழை எழுத்தாளன் எப்படி ஜீவிக்கிறானென்ற மர்மம் அவளுக்குத் தெரியாது. அவளைப் பற்றி அவன் அறிந்ததும் சொற்பம்.

• • •

வீட்டுக்காரர் இடியோசை போல் இரைந்தார். மரியாதையோ, மனிதத் தன்மையோ அற்ற முறையில் வார்த்தைகளை அள்ளி வீசினார். அவருக்கு ஆறு மாதமாக வாடகை பாக்கி!

ராகவன் கெஞ்சிப் பார்த்தான். பழைய வாக்குறுதிகளைப் புதுப்பித்தான். சீக்கிரத்தில் வாடகையை வட்டியோடு செலுத்தி விடுவதாக ஓர் புதுவாக்குறுதியையும் வீசினான். ஒன்றும் பலிக்கவில்லை. "இதையெல்லாம் கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போயிற்று ஐயா. இந்தச் சின்ன ரூமுக்கு வாடகை கொடுக்க முடியாத நீ என்ன மனிதன்? உன் சாமான்களை எடுத்துக்கொண்டு இப்போதே நட வெளியே" என்று வீட்டுக்கார மிருகம் கர்ஜித்தது. மானத்துக்குப் பயந்த எழுத்தாளன் தக்ஷணமே கீழ்ப்படிந்தான்.

காலி செய்துகொண்டு போவதற்கு அவன் உடைமைகளும் அதிகமில்லை. பல இடங்களில் நசுங்கிப் போன பூட்டும் சாதனமற்ற ஓர் பழைய 'டிரங்குப்' பெட்டி; பாய் தலையணை; இரண்டொரு புத்தகங்கள், எழுதுவதற்கான உபகரணங்கள்—அவ்வளவே.

வெளியே கும்பிருட்டு. மார்கழி மாதத்துப் பனி பல்லைக் கிட்டிக்கொண்டிருந்தது. தெருவில் காலை வைத்தான். வாசற்படியருகே முடங்கிக் கிடந்த நாய்கூட எழுந்து அவனுக்கு வழிவிடவில்லை. ஏழை எழுத்தாளன்தானே! என்ற அலட்சியம் போலும்!

ஒரு கையில் பெட்டியும் மறு கையில் படுக்கையுமாக நடுவீதியில் திகைத்து நின்றான் ராகவன். எங்கு செல்வதென அவனுக்குத் தோன்றவில்லை. யாருடனும் அதிகமாகப் பழகும் சுபாவமற்ற அவனுக்குத் தங்க இடமளிக்கக்கூடிய நண்பர்கள் எவரும் அவ்வூரில் இல்லை.

விளக்குக் கம்பத்தினடியில் அவன் நின்ற அந்த ஒரு நிமிஷ காலத்துக்குள்ளாகவே கொடும் பனி அவனுடலை உறையச் செய்து விட்டது.

அவனை விரட்டிய கையோடு, தம் வீட்டு வாசற்படியில் உறங்க முயன்ற நாயையும் அடித்துத் துரத்தும் பணியில் ஈடுபட்டிருந்தார் அந்த வீட்டுக்காரப் புண்யாத்மா. அங்கு படுப்பதற்கு நாயும் வாடகை செலுத்த வேண்டுமென்பது அவரது நிபந்தனை.

'நாயின் பாடு பரவாயில்லை. அவர் கதவை மூடியதும் அது திரும்பி வந்து விடும். அல்லது வேறு ஒரு வீட்டுத் திண்ணையிலாவது ஏறி விடும். ஆனால் நம் கதி என்ன?' என்று யோசித்தான் ராகவன். அப்போது தான் அவ் வினிய குரல் அவன் சிந்தனையைக் கலைத்தது.

"ஏன் இன்னும் இங்கேயே நிற்கிறீர்கள்? குளிரவில்லையா உங்களுக்கு?"

எதிர் வீட்டு சைத்திரிகை அங்கு நின்றாள். "இல்லை அம்மா... நான்... நான்" என்று தடுமாறி விழித்தான் ராகவன்.

"எனக்கு எல்லாம் தெரியும். அந்த மனிதர் போட்ட கூச்சல் என் காதில் விழுந்தது. ஆனால் நீங்கள் இப்படித் தயங்கி நிற்க வேண்டிய காரணமில்லையே. செல்வதற்கு வேறிடம் இல்லாது போனால் நேரே என் அறைக்கு வந்திருக்கலாமே" என்றாள் அவள்.

எழுத்தாளன் பிரமித்துப் போனான். இத்தகைய மொழிகளை அவன் எதிர்பார்க்கவேயில்லை.

"சரி. இப்போதாவது வாருங்கள். அந்தப் பையை நான் தூக்கிக் கொள்கிறேன்..."

"அம்மணி. கொஞ்சம் யோசித்துச் செய்யுங்கள். நீங்கள் தனியாக வசிக்கும் பெண். தங்கள் அறையில் எனக்கு இடமளித்தால் உலகம் தவறாக எண்ணிக் கொள்ளும்...."

"அதனால் எனக்கொன்றும் நஷ்டமில்லை. நீங்கள் யோசிக்க வேண்டாம். மனிதத்தன்மையொன்றுதான் நான் முக்கியமாக எண்ணுவது"

பையுடன் அவள் முன்னால் நடக்க, தயக்கத்தோடு அடிமேலடி வைத்து அவளைத் தொடர்ந்தான் ராகவன். எதிர்வீட்டு மாடியேறி இருவரும் அவ்வறையை அடைந்தனர்.

லட்சுமி மின்சார விளக்கைப் போட்டாள். ஒளி பரவி அறையிலிருந்த சகல பொருள்களையும் அவன் கண்களுக்குப் புலனாக்கியது. ஓவியம், வர்ணங்கள், தூரிகைகள் – கண்ணுக்கெட்டிய இடமெல்லாம் இவைதாம்.

கலைஞர்கள் என்றால் அவர்களது தோற்றம், சூழ்நிலை எல்லாமே ஓர் ஒழுங்கற்று அலங்கோலமாகக் காட்சி தருவதுதான் இயற்கையென உலகம் பாவிக்கிறது. ஆனால் இங்கு ராகவன் கண்டதோ, அதற்கு நேர் எதிரான காட்சி. ஒவ்வொரு பொருளும் அதனதன் இடத்தில் அழகுறக் காணப்பட்டது. வரைந்து முடிக்கப்பட்ட சித்திரங்கள் வரிசையாக மாட்டப் பெற்றுச் சுவர்களை அணி செய்தன. காகிதத்தில் வரையப்பட்ட சிறு சித்திரங்கள் மேஜை மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இக்கலைப் பொருள்கள் தவிர வெகு சில இதர வஸ்துக்களே ராகவன் கண்ணுற்றன.

மனைவி:—என் தம்பி, இதிலே என்ன எழுதியிருக்கிறான். படிச்சேளா?

கணவன்:—இதை எப்படி நான் படிக்க முடியும்? அவன் டாக்டரில்லையா? ஒரு மருந்துக் கடைக்காரன்கிட்டே கொடுத்துத்தான் படிக்கச் சொல்லணும்.

"இதுதான் என் கலைக்கூடம்" என்றாள் லட்சுமி சிறிது பெருமையுடன். அப்புன்னகையில் அவளது முத்துப் பற்கள் ஒரு கணம் தோன்றி மறைந்தன.

ராகவன் நாற்புறமும் பார்த்து விழித்தான். அப்பெண்ணுக்கிருந்த நிதானமும் சகஜபாவமும் அவனுக்கில்லை. அவனது இயல்பான கூச்சம் தான் மேலிட்டது. சற்று முன் வீட்டுக்காரரிடம் தான் பட்ட அவமானம் பற்றி அவள் அறிந்து கொண்டு விட்டாளேயென உள்ளூர வருந்தினான். அவளும் அவனது உணர்ச்சியின் தன்மையை ஓரளவு ஊகித்தவள்போல் மௌனமாக அவனை நோக்கி நின்றாள்.

சில நிமிஷங்கள் கடந்தன. "உங்களுக்கு அலுப்பாக இருந்தால் படுக்கையை விரித்துக் கொண்டு இளைப்பாறுங்கள். நான் என் சித்திர வேலையைத் தொடரப் போகிறேன்" என்றாள் அவள் இறுதியில்.

"வேண்டாம். என் பெட்டி இங்கேயே இருக்கட்டும். நான் படுக்கையை எடுத்துக்கொண்டு போய் வாசற் திண்ணையில் படுத்துக் கொள்கிறேன்" என்று ராகவன் சொன்னான்.

அவனது பயந்த சுபாவத்தைப் பரிகாசம் செய்யும் தோரணையில் ஒரு பார்வையை வீசிவிட்டு "இந்தக் குளிரிலா" என்று கேட்டாள் லட்சுமி.

"குளிர் என்னை ஒன்றும் செய்யாது. ஆனால் நான் உங்களுக்கு எவ்வித அசௌகரியமும் அளிக்க விரும்பவில்லை."

அவனது அர்த்தத்தைப் புரிந்து கொண்டாள் அவள். உள்ளேயே தங்கும்படி மேலும் அவனை வற்புறுத்துவது அழகல்லவென்று அவளுக்குப்பட்டது. அடுத்த நிமிஷம் படுக்கையை எடுத்துக்கொண்டு ராகவன் மாடியிறங்கினான்.

• • •

லட்சுமி பயந்தது சரியாகிவிட்டது. அவள் தன்னைத்தானே கடிந்து கொண்டாள். "அவரை இந்தக் கொல்லும் குளிரில் வெளியே படுக்க அனுமதித்தது

என் தவறு. ஏழை மனிதர்! உடலை உஷ்ணமாக வைத்துக்கொள்ளப் போதிய கம்பளிகள்கூட அவரிடமில்லையென்று தெரிந்தும் நான்..."

குளிர் ஜுரம் வந்து நடுங்கித் தவித்துக் கொண்டிருந்தான் ராகவன். தலை தலையணையின் மீது நிற்காமல் இடைவிடாது உருண்டுகொண்டிருந்தது. தன் சூழ்நிலையை நினைவுக்குக்கொண்டு வந்து அடக்கமாக இருக்க அவன் செய்த முயற்சிகள் அடிக்கடி பயனற்றுப் போகத் தன்னையறியாமலே ஏதேதோ புலம்பத் தொடங்கினான் அவன். தன் படுக்கையருகே கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்து தனது சௌகரியங்களைக் கவனித்து வரும் லட்சுமி அவன் கண்களுக்கு ஓர் பெண் தெய்வமாகவே தோன்றினாள்.

"அம்மா! என்னால் உங்களுக்குக் கஷ்டமோ வீண் அபவாதமோ வேண்டாம். என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுங்கள்" என்று அவன் கெஞ்சினான்.

"ஆஸ்பத்திரியில் நோயாளிகளைச் சரிவரக் கவனிப்பார்களோ, என்னவோ. நான் டாக்டருக்குச் சொல்லியனுப்பியிருக்கிறேன். அவர் இங்கேயே வந்து கவனித்துக் கொள்வார். என்னைப்பற்றி நீங்கள் கவலையே படத் தேவையில்லை. உங்கள் உடம்பு குணமானால் போதும் எனக்கு" என்றாள் அவள். அக்குரலில் பரிவும் பாசமும் தொனித்தன.

டாக்டர் வந்தார், மருந்துகள் கொடுத்தார். இறுதியில் அந்தக் கேள்வியையும் அவர் கேட்காமல் போகவில்லை. "இவர் உங்களுக்கு என்ன உறவாக வேண்டும் அம்மணி?"

"என் நண்பர், அவ்வளவுதான்" என்றாள் லட்சுமி தைரியமாக.

"ஓஹோ! அப்படியா?" என்று அவளை ஒரு மாதிரியாக ஏற இறங்கப் பார்த்துவிட்டுப்போனார் டாக்டர். இயல்பாகவே அவர் மனதிலும் சந்தேகம் விழுந்து விட்டது. ஆயினும் வேறெதையும்விடப் பணம் ஒன்றிலேயே அதிகக் குறியுள்ளவராதலால் அவளிடம் வாய் திறந்தும் எதுவும் சொல்லவில்லை.

உரிய காலத்தில் வதந்தி பரவிற்று. வீட்டுக்காரர் மனைவி மாடியேறி வந்து, "என்னம்மா இது? நீ ஒழுங்கான பெண்ணென்று நம்பியல்லவா உனக்கு இங்கே இடம் கொடுத்தோம்" என்ற ரீதியில் பேசினாள். எப்போதாவது லட்சுமி தெருவில் இறங்கினால் நாலு பேர் அவளைச் சுட்டிக் காட்



டித் தம்முள் ஏதோ கேவலமாகப் பேசிக் கொள்வதும் தெரிந்தது. லட்சுமி எதையும் பொருட்படுத்தவில்லை. உலகத்தின் பேச்சைத் துச்சமாக மதிக்கும் நெஞ்சத் திடம் அவளுக்கிருந்தது.

இதற்கிடையே சாதாரணக் குளிர் ஜுரமாகத் தொடங்கியது டைபாயிட் ஜுரமாக பரிணமிக்க ராகவன் பாயும் படுக்கையுமானான். முன் பின்னறியாத அந்த ஏழை இளைஞனுக்காக இரவு பகல் கண் விழித்துச் சிசுருஷை செய்தாள் லட்சுமி. அவளிடமிருந்த சொற்பத் தொகையும் விரைவாகக் கரைந்து வந்தது. "என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுங்கள் அம்மா" என்ற ராகவனின் வேண்டுகோட்களை அவள் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

ஜுரம்முற்றி ராகவன் பிரக்ஞையிழந்த நிலையை அடையும் போதெல்லாம் லட்சுமி வடித்த கண்ணீருக்கு அளவே கிடையாதெனலாம். அவள் உடலும் நலம் குன்றித் தேய்ந்து வருவது தெளிவாகத் தெரிந்தது. ஓவியம் தீட்டும் உபகரணங்கள் தொடப் படாது கிடந்தன.

• • •

"மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா. ஸ்ரீராகவன் இங்கே தங்கியிருப்பது உண்மைதான். ஆனால் அவர் யாரையும் கண்டுபேச இயலாத அளவுக்கு நோயுற்றிருக்கிறார்" என்றாள் லட்சுமி பணிவாக.

"அடடா! நான் கொண்டு வந்திருப்பது மிக முக்கியமான செய்தியாயிற்றே! அதினும் சந்தோஷகரமானதும் கூட. அவரைக் கையோடு போட்டோ பிடித்துக்கொண்டு போவதற்கு காமிரா கொண்டு வந்ததும் பயனில்லாமல் போயிற்று..." என்று பெருமூச்செறிந்தார் வந்தவர்.

"அது என்ன விஷயமென்று என்னிடம் கொஞ்சம் தெரிவிக்கலாமோ?"

"தாராளமாய்ச் சொல்கிறேன் .... ஸ்ரீ ராகவன் மகத்தானதொரு வெற்றியை அடைந்து விட்டார். இனி எழுத்தாளர் உலகில் அவர்பெயர் தலைசிறந்து விளங்கப் போகிறதென்பதில் ஐயமில்லை, எப்படியென்றால் அகில இந்தியச் சிறுகதைப் போட்டியில் அவரது சிறுகதை முதற்பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது!"

அவ்வெற்றியும் புகழும் தனக்கே கிடைத்துவிட்டதுபோல் ஓர் கணம் பெரு மகிழ்ச்சி கொண்ட மங்கையின் மதிவதனம் மறுகணமே வாடி விட்டது.

இந்தச் செய்தி வந்த சமயம் எப்படிப்பட்டது? ஏழை எழுத்தாளனின் உயிரே நமன் கையில் ஊசலாடிக்கொண்டிருக்கும் வேளையிலல்லவா...?

"நீங்கள் ஸ்ரீ ராகவனின் மனைவியென்று எண்ணுகிறேன். அது சரிதானா?" என்று தொடர்ந்து கேட்டார் வந்தவர். எதையும் விளக்கிச் சொல்லக்கூடிய நிலையிலில்லாத லட்சுமி மௌனமாக இருந்து விட்டாள்.

"அவர் உடம்பை நன்றாகக் கவனித்து கொள்ளுங்கள். சிறிது குணமானதும் எனக்குச் செய்தி அனுப்புங்கள். இதோ என் விலாசச் சீட்டு, அவர் தேறிய பிறகு ஓர் கூட்டம் கூட்டி அவரைக் கௌரவித்து முதற் பரிசுத் தொகையான பத்தாயிரம் ரூபாயையும் அளிப்பதாக இருக்கிறோம். அவரது வெற்றியில் உங்களுக்கும் பங்குண்டென்று நான் சொல்லவேண்டியதில்லை" என்று கூறி விடைபெற்றுச் சென்றார் சிறுகதைப்போட்டியின்பொறுப் பேற்று நடத்திய பிரபல பத்திரிகையின் அப்பிரதிநிதி.

லட்சுமிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. நல்லதோ, கெட்டதோ, அதிர்ச்சியளிக்கக் கூடிய செய்திஎதையும் நோயாளியிடம் தெரிவிப்பது உசிதமல்ல என்ற புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்தவளாக உள்ளே சென்றாள் அவள். தன் பெரும் வெற்றியை அறியாத ராகவன் படுக்கையில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தபடி வெகு நேரம் நின்ற லட்சுமியின் உள்ளத்தில் பற்பல சிந்தனைகள் அலை பாய்ந்தன.

அவ்வெழுத்தாளன் இறுதியில் தன் லட்சியத்தை அடைந்து விட்டான். பல தோல்விகளால் மனமுடைந்து போகும் நிலைமையில் வெற்றி கிட்டியிருந்தது. அபாரமான புத்திக்கூர்மையைக் குறிக்கும் அவனது முகதேஜசைக் கண்டபோது அவன் எவ்வாறேனும் முன்னுக்கு வருவாரென்பதில் லட்சுமி சந்தேகப்படவில்லை. அதே சமயத்தில் தன் கலை முயற்சிகள் மட்டும் இன்னும் வெற்றி பெறாத விஷயம் அவளுக்குத் துயரமோ அல்லது பொறாமையோ விளைவிக்கவில்லை. அதற்குமாறாக அவனது வெற்றியை அவள் தனதாகப் பாவித்து மகிழும் மனோ பக்குவத்தை அடைந்திருந்தாள். லட்சுமியின் அச்சமெல்லாம் ஒன்றே ஒன்றுதான்.

வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாக இவ்வெழுத்தாள மேதாவியின் வாழ்க்கை முடிவடைந்து விடக்கூடாதே!

எவ்வாறாகிலும் அவனுயிரைக் காக்க வேண்டியது தன் கடமை

யென்ற உறுதி அவள் மனதில் பன்மடங்காக வளர்ந்தது. அவ்வழியில் என்ன இடைஞ்சல் நேரினும் பொருட்படுத்துவதாயில்லை அவள்.

• • •

காரை விட்டிறங்கும்போதே அப் பெரிய மனிதரின் கண்கள் கனல் வீசின. 'தம் திம்' என்று கால்கள் சப்திக்க விரைவாக மாடிப்படியேறி வந்தார். அறையில் அவர் கண்ட காட்சி எரிகிற தீயில் எண்ணெயை வார்ப்பதாயிருந்தது.

"லட்சுமி! இது என்ன அக்கிரமம்! விஷயத்தை நான் கேள்விப்பட்டபோது முதலில் நம்பவேயில்லை. இப்போது என் கண்ணாலேயே பார்க்கிறேன். கலைக்குத் தொண்டு செய்யப்போவதாகச் சொல்லி என்னிடம் நீ அனுமதி பெற்றுக்கொண்டு இங்கு வந்தது இப்படி விபசாரம் செய்யத்தானா? நம் குடும்பத்தின் மானம் காற்றில் பறக்க வேண்டுமென்றா இப்படிச் செய்கிறாய்" என்று கர்ஜித்தார் அவர்.

அவள் ஒரு கணம் நடுங்கிப் போனாள். இந்த வேளையில் திடுமென்று தன் தகப்பனார் வந்து குதிப்பாரென அவள் எண்ணியே இருக்கவில்லை. செய்தி காற்று வாக்கில் போய், ஊரிலிருந்த அவர் காதையும் எட்டியிருக்க வேண்டும்!

"என்ன விழிக்கிறாய்? உண்மையைச் சொல். யார் இந்த அயோக்யன். எத்தனை காலமாக இவனோடு சம்பந்தம் வைத்திருக்கிறாய்?" என்று அவர் போட்ட இரைச்சலில் தூங்கிக் கொண்டிருந்த ராகவன் பதறி விழித்துக்கொண்டான்.

இரு கைகளாலும் செவிகளைப் பொத்திக் கொண்டாள். அவள் முகம் பெருத்த கலவரத்தையும் வேதனையையும் காட்டியது.

"அப்பா! இறைவனறியச்சொல்கிறேன். நான் தகாத முறையில் இவருடனோ அல்லது வேறு யாருடனோ தொடர்பு கொள்ளவில்லை. இவர் எனக்குத் தெரிந்த மனிதர். யாருமற்ற அநாதை. விதியின் விளையாட்டால் இவர் நோயுற்றபோது நான் பராமரிக்க வேண்டியதாகிறது. இதை நான் என் கடமையாகக் கருதுகிறேன்..."

"ஏன்? அந்தக் கடமையைச் செய்ய இங்கே ஆஸ்பத்திரிகள் எதுவும் கிடையாதோ?" என்று ஏகத்தாளமாகக் குறுக்கிட்டார் தகப்பனார்.

"இருக்கின்றன. ஆனால் ஏழை நோயாளியைக் கவனித்துக் கொள்ளும்விதத்தில் எனக்கு அவ்வளவாக நம்பிக்கையில்லை"

"ஓஹோ! நீ அவ்வளவு தூரம் சிரத்தையெடுத்துக் கொள்ளுமளவுக்கு உன் அன்பைக் கவர்ந்து விட்டானோ இவன்?... உன் நகைகளெல்லாம் எங்கே"

"இவருக்குச் சிகிச்சை செய்ய பணம் போதாதபடியால் நகைகளை விற்றுவிட்டேன்"

மகளை எரித்து விடுவதுபோல் ஒரு நிமிஷ காலம் கண்கொட்டாது நோக்கினார் தந்தை. சாந்தமும் தைரியமும் கலந்த தன் பார்வையால் லட்சுமி அதைச் சந்தித்தாள்.

"சரி, உன்னுடைய பைத்தியக்காரத்தனத்தைஇனியும் என்னால் அனுமதிக்க முடியாது. இந்தக் கலை, கொலையையெல்லாம் தூர வீசி விட்டு இப்போதே ஊருக்குப் புறப்படு என்னோடு. கீழே கார் தயாராக இருக்கிறது" என்று பெரியவர் ஆக்ஞாபித்தார்

"முடியாது அப்பா" என்று தீர்மானமாகப் பதில் வந்தது.

"ஏனோ?"

"உங்கள் கோபத்திற்கு நான் அஞ்சவில்லை. பின்னிட்டு நீங்களே நிதானத்துக்கு வந்து விடுவீர்கள். ஆனால் இதோ உயிருக்குப் போராடும் நிலையில் இவரை விட்டு வர நான் இசையமாட்டேன்"

"அடேடே, அவ்வளவு தூரம் வந்து விட்டதா? இதுதான் உன் கடைசி வார்த்தை போலும்!"

"ஆமாம்" என்று லட்சுமி தலையை அசைத்தாள்.

"சரி. இதற்குமேல் பேச வேண்டியதில்லை. இந்த நிமிஷத்தோடு நம் பந்தம் விட்டது. இனி நீ எனக்கு மகளல்ல, நான் உனக்குத் தந்தையுமல்ல. என்னிடமிருந்து எத்தகைய உதவியையும் எதிர்பார்க்காதே"—வந்த மாதிரியே 'தம் திம்' என்று வீடு அதிரும்படியாகப் படிகளில் இறங்கிப் போனார் பெரியவர்.

லட்சுமி கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். இந்தக் கலவரத்தின் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாது புத்தி நிதானமிழந்து விழித்துக் கொண்டிருந்த நோயாளியின் மீது அவள் பார்வை விழுந்தது.

நடுங்கும் விரல்களால் மருந்துப் புட்டியை எடுத்து அவுன்ஸ் கிளாஸில் ஊற்றினாள். அவளுக்குத் தன் வீட்டைப் பற்றி எண்ணி வருந்தக்கூட நேரமில்லை. நோயாளியின் பராமரிப்பு ஒன்றே பெரும் பொறுப்பாக அவள் தலைமீது அமர்ந்திருந்தது.

• • •

அந்தக் கடைசி நான்கு நாட்களில் பேதை லட்சுமி அனுபவித்த மனோ வேதனைக்கும் அடைந்த தேக சிரமத்திற்கும் அளவேயில்லை வெகு நெருக்கடியான நிலைமையில் நமன் வாயிலிருந்து மீண்டதையொப்ப எழுத்தாளன் உயிர் பெற்றான். அவளது நிர்ப்பந்தத்தின் பேரில் அல்லும் பகலும் அங்கிருந்து சிகித்சை செய்திருந்தார் திறமையும் அனுபவமும் மிக்க ஒரு டாக்டர். அதற்கேற்ப அவர் பெற்ற பீசும் பெரிய தொகை தான்!

"டாக்டர் ஸார். நீங்கள் காப்பாற்றியது ஓர் சாதாரண மனிதனின் உயிரையல்ல. வருங்காலத்து அபூர்வ மேதாவியான இலக்கியகர்த்தா ஒருவரை நீங்கள் உயிரோடு கிடைக்கச் செய்திருக்கிறீர்கள். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதெனத் தோன்றவில்லை என்று உணர்ச்சி பொங்கக் கூறினாள் லட்சுமி.

அறைக்கு வெளியே பத்திரிகை நிருபர்கள் செய்தியறியவும் ஆவலோடு காத்து நின்றனர். எழுத்தாளர் ராகவனின் உடல் நிலை பற்றிய தகவல்கள் ஏற்கெனவே பத்திரிகைகளில் வெளியாகத் தொடங்கியிருந்தன. தெரிந்தோ தெரியாமலோ ஸ்ரீமதி லட்சுமி ராகவன் என்ற பெயரும் அங்கே அடிபட்டது. லட்சுமி அது பற்றி அறிந்த போது தனக்குள் புன்னகை செய்து கொண்டாள். இருந்து விட்டுப் போகட்டுமே பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெற்ற மாதிரி. எனக்கும் இனி அவரை விட்டால் வேறு யார் கதி? என்னையறியாமலே என்மனம் அவரிடம் ஒன்றிப்போய்விட்டதை இப்போது தான் அதிகமாக உணர்கிறேன்" என்று சிரித்தாள் அவள்.

உடல் தேறிப் பூரண குணமுற்ற எழுத்தாளர் ராகவனுக்கு பெரிய பத்திரிகாசிரியர்களும் பிரமுகர்களும் கூடி ஓர் விருந்தளித்துப் பாராட்டினர். மிகுந்த புகழ்ச்சியுரைகளுக்கிடையே முதற் பரிசுத் தொகை அவனிடம் சேர்ப்பிக்கப்பட்டது. சுருக்கமாகவும் அழகாகவும் தன் நன்றியை உணர்த்திய ராகவனின் சொற்பொழிவு எல்லோர் உள்ளத்தையும் அள்ளியது. தனக்கும் ஸ்ரீமதி லட்சுமிக்கும் உள்ள உறவின் உண்மைத் தன்மை பற்றி அவன் உணர்ச்சி ததும்பும் குரலில் விளக்கியபோது பலர் திடுக்கிட்டனர். விசித்திரமான அந்த உண்மை அவர்களது கண்களைத் திறந்தது.

முக்கியமாக, அக்கூட்டம் நடக்கப்போகும் விவரமறிந்து யாருக்கும் தெரியாமல் அங்கு வந்திருந்த லட்சுமியின் தகப்பனாருக்குப் பெரும் ஞானோதயம் ஏற்பட்டது. அவர் கண்யமான மனிதர். தன் உள்ளத்தைக் கவிந்திருந்த சந்தேகமென்ற பனித்திரை விலகியதும், அங்கு அன்புக் கதிர் ஒளி வீசுவதைக் கண்டார்.

"அம்மா லட்சுமி. நான்அவசரப்பட்டு உன்னைப்பற்றி முடிவு செய்து விட்டேன். என்னை மன்னித்து விடு. உன் சுயநலமற்ற பெருந்தன்மைக் குணம் என்னை வெட்கச் செய்கிறது. இனி உங்களிருவரையும் வாழ்க்கைப் பாதையில் ஒன்றுபடுத்திப் பார்ப்பதை விட எனக்கு அதிக இன்பம் தரக்கூடியது வேறொன்றுமில்லை" எனக் கைகூப்பி முன்வந்தார் அவர்.

இலக்கிய மன்னனும் கலையரசியும் அவர் கால்களில் விழுந்து நமஸ்கரித்து ஆசி பெற்றனர்.

"நான் நினைத்தபடி பெரிய சைத்திரிகையாகிப் புகழ் பெற முடியவில்லை. ஆனால் அத்துறையில் என் முயற்சிகள் என் வாழ்க்கை இன்னும் அதிக இன்பகரமாக அமைய உதவின. நான் உங்களை என் பதியாக அடைந்து விட்டேன்" என்று பெருமையுடன் ராகவனின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள் லட்சுமி.

தன் உயிர் காத்த பெண் தெய்வத்தின் கன்னத்தை செல்லமாக தட்டிய ராகவனுக்கு அவளது அன்பின் வலிமை தன் பேனாவுக்கும் அதிக வலிமை தருமென்ற நம்பிக்கை ஊன்றியது.

நட்சத்திரக்கதை!

'மகரம்'

பிரபல சிறு கதை எழுத்தாளர் 'பிறைசூடி'யின் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தது அந்தக் கடிதத்தைப் படித்தவுடன். 'நாங்கள் வெளியிடப்போகும் 'தென்னாட்டுச் சிறு கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதியில் தமிழ் நாட்டுச் சிறு கதைக்கு எடுத்துக்காட்டாக உங்களுடைய சிறு கதைகளில் ஒன்றை வெளியிட விரும்புகிறோம். தாங்கள் எழுதின கதைகளுக்குள் மிகச் சிறந்த கதையை எங்களுக்கு இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அனுப்பி வைத்தால், தொகுதியில் சேர்த்துக்கொள்ள சௌகரியமாக இருக்கும்' என்று 'கதாஞ்சலி' பிரசுராலயத்தார் எழுதியிருந்தனர்.

'பிறைசூடி' உடனே தமது கதைகளுக்குள் தலைசிறந்தது எது என்று யோசிக்க ஆரம்பித்தார். 'திருப்தி' என்ற கதையை அவருடைய நண்பர்களும், வாசகர்களும் பாராட்டிக் கடிதங்கள் எழுதியிருந்தபோதிலும் அந்தக் கதை அவருக்கு ஒரு நாளும் திருப்தியளித்ததேஇல்லை 'முடிவு' என்ற கதை நல்லதேயானாலும் அதனுடைய ஆரம்பம் அவருக்கே சற்றுப் பிடிக்காமலிருந்தது! 'தவுல் தங்கப் பிள்ளை' என்ற சிறு கதையில் எங்கோ ஓரிடத்தில் காலப் பிரமாணம் ஒரு சிறிது பிசகிவிட்டது போன்ற பிரமை அவருக்குண்டு! 'குயிலிசையாள்' என்ற அவருடைய கதை மகத்தானதுதான். அதை ரஸிகர்கள் விழுந்து விழுந்து பாராட்டினதென்னமோ உண்மைதான். ஆனால் அந்தக் கதையிலும்கூட ஓரிடத்தில் அபஸ்வரம் தட்டியிருக்கிறது என்பதை அவர்மட்டுமே அறிவார்! இப்படி யோசித்துக்கொண்டே வந்தவருக்கு திடீரென்று 'நட்சத்திரம்' என்ற கதை மின்னல் வேகத்தில் ஞாபகம் வந்தது. "ஆம். 'நட்சத்திரம்' என்ற கதைதான் நான் எழுதினவைக்குள் அப்பழுக்கற்ற உயர்ந்த தலைசிறந்த நட்சத்திரக் கதை" என்ற முடிவுக்கு வந்தார் பிரபல சிறுகதை ஆசிரியர் 'பிறைசூடி'.

கதாஞ்சலி பிரசுராலயத்தாருக்கு அனுப்ப வேண்டிய கதையை மனத்தால் தேர்ந்தெடுத்த பிறைசூடிக்குத் திடீரென்றொரு விஷயம் ஞாபகம் வந்தது. நான்கு வருஷங்களுக்கு முன் படரத் தொடங்கி, இரண்டு வருஷங்களுக்கு முன் வாடிவதங்கிப் போன 'கலைக்கொடி' என்ற பத்திரிகையில்தான் அந்தக் கதை வெளிவந்தது என்பதும், அந்தக்



கதை வெளிவந்தவுடன் தன்னிடமிருந்தகையெழுத்துப் பிரதியை தான் கிழித்துப் போட்டுவிட்டதும், பிறகு தன்னுடைய கதை வெளிவந்த பக்கங்களை மாத்திரம் அக்கறையாகக் கிழித்தெடுத்து வைத்திருந்ததும் பிறகு அந்தப் பக்கங்களை ஒரு ரஸிக நண்பரிடம் படிக்கக் கொடுத்ததும், அவர் அதைத் திருப்பிக் கொடுக்காமல் 'என்னுடைய ஒரு வயதுப் பையன் உங்கள் கதையைத் தம்பிடி தம்பிடியாகக் கிழித்துவிட்டான் ஸார்! மன்னிக்கணும்!' என்றுரத்னச்சுருக்கமாக நிலைமையை விளக்கிவிட்டு விடை பெற்றுக்கொண்டதும், பிறைசூடிக்கு ஒன்றன் பின் ஒன்றாக ஞாபகம் வந்தன! உடனே அவர் அந்தக் கதை வெளிவந்த 'கலைக்கொடி'யின் பழைய இதழைத் தேட முனைந்தார்.

'கலைக்கொடி' பத்திரிகையை நடத்தி வந்தவர்கள் இலக்கியத்தைப்பற்றியும், சிறு கதைகளைப் பற்றியும் கடுமையான நிர்ணயங்களையும், விதிகளையும் வைத்திருந்ததால் அந்தப் பத்திரிகைக்கு கதை எழுத எல்லோரும் பயப்பட்டு வந்தனர். பிரபல கதாசிரியர்கள்கூட, 'நாம் எழுதுவதை 'கலைக்கொடி' ஆசிரியர்கதை என்று ஒப்புக்கொள்வாரோமாட்டாரோ', என்ற சந்தேகத்துடன்தான் தங்கள் கதைகளை தபாலில் சேர்ப்பார்கள்! 'நமது இந்தச் சிறு கதையில் மூன்றே மூன்று பேர்கள் தாமே கொலையுண்கின்றனர். இருவர் தாமே தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கலைக்கொடி ஆசிரியருடைய மனத்தில் 'இவ்வளவு போதும்' என்று தோன்றுமோ தோன்றாதோ' என்றெல்லாம் கதாசிரியர்கள் கவலைப் படுவார்கள். துர்க்கந்தம் துராசாரம், துர்மரணம் துராக்ரகம் போன்ற வாழ்க்கையில் கோரமான கோணங்களை — மற்றையபத்திரிகாசிரியர்கள்வெளியிடபயப்படும் கருத்துகளை மையமாகக்கொண்டபல சிறு கதைகள் கலைக்கொடியில் பூத்துக் குலுங்கின. இன்ப நினைவுகளைவிட சோக நினைவுகளும், பயங்கர எண்ணங்களுமே மனிதனுடைய சிந்தனையில் அதிக நேரம் நிலைக்கக் கூடியவையான படியினால் கலைக்கொடியில்வெளி வந்த கதைகளில் பல வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சிரஞ்சீவிக் கதைகளாகஅமைந்துபோய் விட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

சிரஞ்சீவிக் கதைகள் பலவற்றை வெளியிட்ட போதிலும் கலைக்கொடி மாத்திரம் அல்பாயுளாக இறந்ததை விதியின் சோதனை என்றே கூற வேண்டும் கால் மணி நேரம் படித்துவிட்டு, ஒரு ஐந்து நிமிஷம் வாய்விட்டுச் சிரித்துவிட்டு அடுத்த நிமிஷம் மறந்து போகக் கூடிய கதைகளையே வாசகர்கள் விரும்பினதால் இத்தகைய 'அல்பாயுள்' கதைகளையே பிரசுரித்து வந்த வேறு சில பத்திரிகைகள் சிரஞ்சீவியாக நிலைத்துவிட்டன! அரை மணி நேரம் படித்த பிறகு ஆறு மணி சிந்தனையைக் கிளறி ஆயுள் பரியந்தம் ஞாபகம் இருக்கும் கலைக்கொடி கதைகளை வாசகர்கள் படித்துத் திண்டாடித் திணறியதே அந்தக் கொடியைத் துவள வைப்பதற்குப் போதுமானதாகிவிட்டது!

இந்தக் காரணங்களால், மிகக் குறைந்த பிரதிகளே செலவான அந்தப் பத்திரிகையின் குறிப்பிட்ட ஒரு பழைய பிரதியைத்

தேடியெடுப்பதென்பது மிகவும் சிரமமான காரியம் என்பதை பிறைசூடி உணர்ந்திருந்தார். அவருடைய நண்பர்கள் பலரைக் கேட்டபோது அவர்கள் 'ந' அப்படி ஒரு கதை எழுதியிருக்கிறீரா என்ன?' என்றே பதிலுக்கு கேட்டுவிட்டார்கள்! 'நட்சத்திரம்' என்னும் அந்தக் கதையில் ஒரு க்ஷயரோகியின் இருமலும், ஒரு விதவையின் விம்மலும் மாத்திரம் வராமல் இருந்திருந்தால் அந்தக் கதையை அவர் வேறு ஒரு பத்திரிகைக்கு அனுப்பியிருப்பார். ஆனால் அப்பொழுது அந்தக் கதை ஒரு சிரஞ்சீவிக் கதையாக இருக்காதே!

பழைய பத்திரிகைகள் விற்கும் கடைகளை ஒன்றுவிடாமல் அலசி ஆராய்ந்து பார்த்தார் பிறைசூடி. அவருடைய மனைவியிடம் சொல்லி அவளுடைய சிநேகிதிகள் வீட்டிலெல்லாம் கலைக்கொடியின் அந்தக் குறிப்பிட்ட இதழைத் தேடச் செய்தார். பலன் ஏற்படவில்லை. அவருடைய காரியாலய நண்பர்களில் யார் பழைய பத்திரிகைகளை வைத்துப் படித்துக்கொண்டிருந்தாலும் கலைக்கொடியாக அவை இருக்கலாகாதா என்று கூர்ந்து பார்த்து ஏமாறுவார். கதாஞ்சலி பிரசுராலயத்தார் அளித்திருந்த ஒரு மாத காலவரை வெகு வேகமாக நெருங்கிக் கொண்டேயிருந்தது.

நடை பாதைகளின் மீது கடை பரப்பிக்கொண்டு பழைய சஞ்சிகைகளை விற்கும் பையன்களிடம் எல்லாம் அந்தக் குறிப்பிட்ட இதழைத் தேடிக்கொடுத்



நாளுக்கு நாள் அதிக தெளிவான, எழிலோங்கும் சருமம்

கேடில் கலந்த ரெக்ஸோனு இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்.

ரெக்ஸோனுவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் மெதுவாகத் தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும், தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள். அதனால் புதுப்பொலிவுடன் விளங்குவீர்கள்.

ரெக்ஸோனு

கேடில்* கலந்த சோப் இதுஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 118-50 TM

தால் புதுப் பிரதியின் விலையான எட்டணாவையே தருவதாக ஒப்புக்கொண்டிருந்தார். பிரதி தினம் தேடியலைந்தும் அவருடைய கண்களில் கலைக்கொடியின் ஒரு இதழ்கூட படவில்லை.

வண்ணாரப்பேட்டைப் பகுதி பிறைசூடி அதிகம் பழகாத ஓரிடம். அங்கு ஒரு கல்யாணத்துக்கு வந்துவிட்டு பஸ் ஸ்டாப்பில் கால் கடுக்க நின்றிருந்தவர் கண்ணில் வெயிலுக்கு மறைவாகக் கோணித் திரை கட்டியிருந்த ஒரு பழைய புத்தகக் கடை தெரிந்தது. எதிர் சாரிலிருந்த கடையை அடைந்து, அங்கிருந்த பழைய பத்திரிகைகளைச் சற்று அலட்சியமாகப் புரட்டிக்கொண்டே வந்தவருடைய கையில் அவருடைய லட்சிய இதழ் திடீரென்று தட்டுப்பட்டது! சோகம் நிறைந்த ஒரு மங்கையின் ஓவியத்தை மேலட்டையில் தாங்கி வெளிவந்திருந்த அந்தக் கலைக்கொடியின் இதழை அவரால் மறக்க முடி

யுமா? அந்தப் பத்திரிகையைக் கையிலெடுத்தாரோ இல்லையோ அவர் வெகு நேரமாகக் காத்துக் கொண்டிருந்த பஸ் வேகமாக வந்து பஸ் ஸ்டாப்பில் நின்றது தெரிந்தது! பிறைசூடி சட்டென்று தன்னுடைய சட்டைப் பையைத் துளாவி, எடுத்தவுடன் கையில் கிடைத்த எட்டணா நாணயத்தை ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துப்போன அந்தக் கடைக்காரரின் கையில் திணித்துவிட்டு, 'ஹோல்டான்' என்று குரல் கொடுத்துக்கொண்டே அப்பொழுதுதான் நகர்ந்துகொண்டிருந்த பஸ்ஸில் தாவி ஏறி ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் காலி ஸீட் ஒன்றைப் பிடித்து அதில் அமர்ந்தார்.

கலைக்கொடியின் பக்கங்களை வேகமாகப் புரட்டிக்கொண்டே வந்த பிறைசூடி தடையுண்ட நாகம்போல் ஓரிடத்தில் 'தட்'டென்று நின்றுவிட்டார். அது பத்து மூன்றாவது பக்கத்துக்குப் பிறகு எழுபத்திரண்டாவது பக்கமே அங்கு காணப்பட்டது! ஆம் அவருடைய கதை— அவருடைய நட்சத்திரம் என்னும் நட்சத்திர கதை அந்தப் பிரதியிலிருந்து அடியோடு கிழித்தெடுக்கப்பட்டிருந்தது!

பஸ்ஸை விட்டிறங்கி வீடு நோக்கி நடந்துகொண்டிருந்த பிறைசூடியின்உள்ளத்தில்ஏமாற்றம் நிறைந்திருக்கவில்லை. அதற்குப் பதில் எழுத்தாளர்களுக்கே பிரத்யேகமான ஒரு பெருமை அவர் உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடியது! நம்முடைய கதை வெளிவந்த புத்தகத்தை ஒரு வாசகன் விலை கொடுத்து வாங்கி நமது கதையை மாத்திரம் கிழித்தெடுத்து வைத்துக்கொண்டிருக்கிறான் என்றால் அதைவிட நமக்குச் சந்தோஷம் தருவது எது என்று எண்ணிக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தார் பிறைசூடி.

பெருமை பிடிகொள்ளாமல் நடந்ததைவிவரித்துவிட்டுகலைக் கொடியின் இதழைத் தன்னுடைய மனைவிக்குக் காட்டினார். சிறு கதை ஆசிரியர். அந்த இதழின் கடைசி பக்கம் வரை பக்கங்களைப் புரட்டிக்கொண்டே வந்த அந்த அம்மாள் சற்றுக் கேலியும் பரிதாபமும் கலந்த சிரிப்பை உதிர்த்துவிட்டு, 'இந்த இதழ் உங்களுடைய ரஸிகர்கள் யாரும் வாங்கினதில்லை. உங்கள் பேருக்கு 'காம்பிளிமெண்டரி'யாக வந்த இதழேதான் இது. இந்தக் கடைசி பக்கத்தில் நான் போட்ட பால் கணக்கும், நம்ம அம்பி அவன் பேரைக் கோணாமாணலாக இந்தப் பக்கத்து அடியில் கிறுக்கினதும் அப்படியே இருக்கிறது பாருங்கள்!' என்றாள் பாவம்! 'பிறைசூ!'

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1024

பிரபல ஜோதிஷர்

★

மஹாராஜாக்களால் தங்கமெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் பார்த்து வரி எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ.2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

★

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்
தபோநிதி
தியாகராயநகர், மதராஸ்-17
தபால் பெட்டி 1417.

அன்பு பிழைத்தது

 டி. எம். வீரதேவன்

கெட்டி மேளம் முழங்கியது. அந்தக் கல்யாண வீட்டில் குதூகலம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது.

குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு இதைவிட நல்ல சந்தர்ப்பங்களேது! அவைகள் புத்தம்புது சட்டைகளையும் ஆபரணங்களையும் அணிந்துகொண்டு அளவற்ற மகிழ்ச்சியுடன் வளைய வளைய வந்துகொண்டிருந்தன.

அந்தக் குழந்தைகளின் மத்தியில் இரண்டு குழந்தைகள் மட்டும் அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் வண்ணம் இருந்தன. இரண்டும் நல்ல அழகு; நல்ல சிவப்பு.

பட்டுப் பாவாடையின் சரசர என்ற சப்தத்தை அமுக்கிக் கொண்டு அக்கா அக்கா என்ற குரல் எழுந்தது. திரும்பிப் பார்த்தாள் அவர்களில் வயதில் சற்று மூத்தவளான மற்றவள்.

எங்கிருந்தோ பாய்ந்து வந்தாள் ஒரு நடுத்தர வயதுள்ள ஸ்திரீ. அவள் இளையவளை உறுத்துப் பார்த்து "யாரடி அக்கா? தெருவில் போகும் தேவடியாக் குட்டிகளுக்கெல்லாம் இவள் அக்கா! இன்னொரு தடவை அப்படி உறவு கொண்டாடி அழைத்தால் நாக்கை அறுத்துவிடுவேன். ஓடடி இந்த இடத்தை விட்டு" என்று உறுமி அக்குழந்தையின் முதுகைப் பிடித்துத் தள்ளிவிட்டாள். இன்னும் அவள் ஆத்திரம் தணியவில்லை. பிறகு மூத்தவளின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

அவமதிப்புக்கு ஆளான அச் சிறுமிக்கு ஒன்றும் புரிபடவில்லை. விசித்து விசித்துஅழுது கொண்டே தன் இல்லத்தையடைந்தது.

அக்குழந்தையின் அன்னை புனிதம், குழந்தையின் அழுகுரல் கேட்டு ஓடிவந்து வாரியணைத்து மடிமீது அமர்த்திக் கொண்டாள். குழந்தையின் அழுகைக்குக் காரணம் என்ன என்பதை அறிய அவள் நெஞ்சு துடித்தது.

அன்னையின் அன்பிலே ஆறுதல் கண்டது குழந்தை. ஆயினும் விம்மல் விசுவரூபம் கொண்டது. திக்கித் திணறிக்கொண்டே "மீனு அக்காவோடு விளையாடிக் கொண்டிருந்தேன். அக்கா என்று அழைத்தேன். எங்கிருந்தோ வந்த பெரியம்மா என் முதுகைப் பிடித்துத் தள்ளி தெருவில் போகிற தேவடியாக் குட்டி என்று என்னை ஏசினாள்" என்று கூறிப் பெரிதாக அழ ஆரம்பித்தது.

தன் கண்களைக் குழந்தை அறியாவண்ணம் துடைத்துக் கொண்டாள் புனிதம்.

முத்துலக்ஷ்மி அவள் காதற் கணவனின்கைப்பிடித்த மனைவி. புனிதம் அவருடைய ஆசை நாயகி என்ற அளவிலே உள்ள பேதைப் பெண். அவளால் என்ன செய்ய இயலும்?

"சரி அம்மா நீ கவலைப் படாதே. நான் பெரியம்மாவை சண்டை போடுகிறேன். நீ போய் சமர்த்தா விளையாடிக் கொண்டிரு அம்மா" என்று சொல்லிவிட்டு சமையல் அறையை அடைந்தாள். பொங்கி வந்தது அழுகை. எவ்வளவு முயன்றும் அவளால் அடக்க முடியவில்லை. கோவென அழுதாள். அவள் நெஞ்சின் வேதனை தீரும் வரையில் அழுது கொண்டேயிருந்தாள். பழைய நினைவுக் குளத்திலே அவள் நெஞ்சம் நீந்த ஆரம்பித்தது.

ஆம். குலத்தால் அவள் தாசி தான். அவள் தாயார் ஒரு பச்சைத் தேவடியாள். ஊர் அறிந்த விஷயம். ஒளிவு மறைவு இல்லை. அவளுடைய ஏக புதல்விதான் இந்தப் புனிதம்.

சேற்றில் செந்தாமரை முளைப்பது இயற்கை. விலைமகளின் வயிற்றிலே குலமகள் தோன்றுவது விந்தையல்லவே! புனிதம் ஒழுக்கத்தால் உயர்ந்தவள். உளப் பண்பால் சிறந்தவள். இயற்கையளித்த பட்டத்துக்கு அவள் எப்படி ஜவாப்தாரியாவாள்?

அவளை நாடி வந்து சாந்தி கழித்தார் சம்பந்தம். சம்பந்தம் அந்த ஊரின் பிரபலஸ்தர். நல்ல பணக்காரர். வயது நாற்பத்தைந்து இருக்கும். நல்ல வாலிப முறுக்கும் மிடுக்கும் கொண்டவர். அவருக்கு ஏற்கனவே விவாகமாகி ஒரு பெண் குழந்தையுமிருந்தது. இருந்தாலும் சபலசித்தம் படைத்த அவரால் ஒரு மனைவியுடன் வாழ முடியவில்லை. பல பெண்களின் எழிலில் மயங்கி மனதையும் பொருளையும் பறிகொடுத்தவர்.—இதெல்லாம் புனிதத்துக்குத் தெரியும். ஆயினும் அவள் மனங்கோணவில்லை. அன்று முதல் அவரையே கணவராகத் தீர்மானித்து விட்டாள்.

அவள் அழகிலும் பண்பிலும் உள்ளத்தை நெகிழவிட்டார் சம்பந்தம். அவளிடம் ஏதோ காணாததைக் கண்டார். அவருடைய மிருக வெறி திருந்தியது. முத்துலக்ஷ்மி-புனிதம் இருவரையும் இரு மனைவிகளாகக் கொண்டார். பல நாட்கள் புனிதத்தின் இல்லத்திலும் சில நாட்கள் தன்னில்லத்திலுமாகக் கழித்தார் அவர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின் புனிதத்தின் வயிற்றிலே பிறந்தாள் பத்மா. சம்பந்தம் தன் மூத்த பெண் மீனுவையும் புனிதத்தின் பெண் பத்மாவையும் வித்தியாசமின்றி வளர்த்தார். இருவரையும் இரட்டைக் குழந்தைகளாகப் பாரபட்சமின்றி நேசித்தார். பத்மாவைத் தன் வீட்டுக்கும், மீனுவைப் புனிதத்தின் வீட்டுக்கும் அழைத்துச்

செல்வார். விசேஷ காலங்களில் புனிதம்—முத்துலக்ஷ்மியின் இல்லத்துக்கும், முத்துலக்ஷ்மி புனிதத்தின் இல்லத்துக்கும் போய் வருவார்கள். இப்படியாக இருவரிடையேயும் அன்பை வளர்க்க விரும்பினார் அவர்.

அவர் முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது. முத்துலக்ஷ்மி மாதருள் மாணிக்கமாகக் கருதப்படவேண்டியவள். சம்பந்தம் இழுத்த இழுப்புக்கு இணங்கி வந்துகொண்டிருந்தாள் அவள். பத்மாவையும் தன் குழந்தையாக ஏற்றுக்கொண்டது அவள் வெள்ளை உள்ளம்.

நன்மலரினூடே மறைந்திருக்கும் நச்சரவம் தலைதூக்குவது போல் அவள் வெள்ளை உள்ளத்தை கலங்கவைத்தனர் சில சிநேகிதிகள். புதுமனுஷியானாள் அவள். அவள் உள்ளத்தைக் குரோதமும், பொறாமையும் பற்றியது. நீறு பூத்த நெருப்பென குமுறிக்கொண்டிருந்தது அவள் உள்ளம்.

தன் கணவர், விசேஷ அக்கறையும் அன்பும் காட்டவேண்டிய தன் தம்பியின் அந்தக் கல்யாணத்தில் அவர் அவ்வளவாக உற்சாகம் காண்பிக்காததும் மூன்றுவது நபரின் கல்யாணத்தைப்போல் தூர விலகிப்போவதையும் அவளால் பொறுக்க முடியவில்லை. அதுவும், அவர் அந்தத் தாசி வீட்டிலேயே போய் அடைந்து கொள்வதை அவளால் சகிக்க முடியவில்லை.

நாளுக்குநாள் சிறிது சிறிதாக அவர் தன்னை விட்டுத் தொலையாத தூரத்தில் நழுவிக்கொண்டிருப்பதாக உணர்ந்தது அவள் நெஞ்சு.

இந்த அவமதிப்பு—ஏமாற்றம்—இவைகளைத் தாள முடியவில்லை அவளால் அதன் முதல் இலக்கு தான் அவள் அந்தப் பேதைச் சிறுமி பத்மாவின் மீது சீறி விழுந்தது!

அதைத் தொடர்ந்து அவன் படபடப்பும் சீற்றமும் பலவித அவமானங்களை விளைவித்தன புனிதத்துக்கும் சம்பந்தத்துக்கும்.

தன் மனைவியின் போக்கு சம்பந்தத்துக்கு வெறுப்பை அளித்தது. நாளடைவில் தன் சொந்த வீட்டுக்கு வருவதையே நிறுத்திக்கொண்டார். புனிதத்தையே மனைவியாகவும் பத்மாவையே குழந்தையாகவும் கொண்டு புது வாழ்வை ஆரம்பித்து விட்டார்.

முத்துலக்ஷ்மி வளர்த்துவிட்டிருந்த துவேஷம் குழந்தைகள் வரையிலும்கூட முளைவிட்டிருந்தது. மீனுவும் பத்மாவும் ஒரே பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார்கள். தன் சிநேகிதைகளிடமெல்லாம் பத்மாவை தேவடியாக் குட்டி என்று விளம்பரப்படுத்தி விட்டிருந்தாள். பலவகையிலும் அவளை அவமானப்படுத்தி வைத்தாள்.

அந்த வருஷம் சம்பந்தத்துக்குப் போதாத காலம். வியாபாரத்தில் நஷ்டம். விவசாயத்தில் நஷ்டம். கடன்காரர்கள் நெருக்க ஆரம்பித்தார்கள். அவருடைய வீடு ஏலம் போயிற்று. நிலபுலங்கள் அனைத்தையும் கடன்காரர்கள் வசப்படுத்திக் கொண்டுவிட்டார்கள்.

முத்துலக்ஷ்மிக்கு நிற்க இடம் இல்லை. குழந்தை மீனுவுடன் கிளம்பி விட்டாள் பிறந்த வீட்டை நோக்கி. அப்புறம் அவளைப் பற்றிய சேதி ஒன்றும் தெரியவில்லை.

வந்தவர்:—"என் பையனைப் போட்டு இப்படி அடித்திருக்கிறீரே. எந்த மடையனாவது குழந்தையை இப்படி இம்சிப்பானா ஐயா?"

உபாத்யாயர்:—"அவன் வகுப்பில் என்ன செய்தான் தெரியுமா?"

வந்தவன்:—"அது எதுவாக இருந்தாலும் சரி. என்னிடம் சொல்லியிருந்தால் அவன் தோலை உரித்து உப்புத் தடவியிருப்பேனே!"

காலம் மனிதனுக்காகக் காத்திருப்பதில்லை. அதன் சுழற்சியில் பல மாறுதல்கள். கடைசி காலத்தில் அதிர்ஷ்ட தேவதை அவர் பங்கில் இருந்தாள். கொள்ளை கொள்ளையாகச் சம்பாதித்தார். அத்தனை செல்வத்துக்கும் புனிதத்தை ராணியாக்கினார். தன்னுடைய ஆஸ்தி முழுவதும் அவளையே சேரவேண்டுமென்று உயில் எழுதி வைத்துவிட்டு இறந்து போனார்.

பருவத் தென்றல் பத்மாவின் மேனியில் இணையற்ற சௌந்தர்யத்தை அள்ளிப் பூசியது. யௌவனத்தின் பூரிப்பில் அவள் அழகு பொங்கி வழிந்துகொண்டிருந்தது.

இந்த அழகும் பருவ மாற்றமும் புனிதத்தின் மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கவில்லை. ஓரளவு கவலையைத்தான் உருவாக்கியிருந்தது. தன் புதல்விக்கு நல்ல கணவன் வாய்க்க வேண்டுமே. தாசி மகள் என்ற பாவத்துக்கு உள்ளான அவளுக்கு சமூகம் எந்த ஸ்தானத்தை அளிக்குமோ என்று வேதனைப்பட்டாள்.

அவளுடைய அந்தப் பயத்துக்குக் காரணமில்லாமலே செய்துவிட்டார் ஜெயராஜ். ஜெயராஜ் மூர்த்தியில் இளையவர். ஆனால் கீர்த்தியில் இமாசலத்தை நிகர்த்தவர். டாக்டர் ஜெயராஜ் என்ற பெயரால் அவரை அனைவரும் அறிந்திருந்தனர். பொது மக்களின் அன்பையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் நன்மதிப்பையும் ஒருங்கே பெற்றிருந்தார்.

ஏதோ ஒரு அவசர கேஸ் விஷயமாக புனிதத்தின் இல்லத்துக்கு வந்திருந்த டாக்டர் ஜெயராஜின் கண்ணில் பட்டாள் பத்மா. அவர் மனதுக்குப் பிடித்துவிட்டது. திருமணப் பேச்சு தொடங்கியது. திருமணமும் விரைந்து நடந்தது.

கண் நிறைந்த கணவன். கை நிறையச் சம்பாதிக்கும் காதலன், புகழ் ஏணியின் உச்சாணியில் உலவும் உத்தமன். இத்தகையவனைத் தன்னுடையவனாகப் பெற்ற பத்மாவின் வாழ்க்கை இன்ப ஓடையாக ஓடிக்கொண்டிருந்தது.

பரந்த பாரதத்தின் வடபகுதியில் வெறியர்களின் தீச்செயலால் வகுப்புக் கலவரம் மூண்டது. காலிகளின் தாக்குதலால் உயிரிழந்தோர் பலர். கால் இழந்தோர் கை இழந்தோர் அனந்தம். பயங்கரமான காயங்களால் அவதிப்பட்டோர் அநேகர். அவர்களின் சிகிச்சைக்காக அவசரமான மருத்துவ விடுதியை தற்காலிகமாக நிறுவியது சர்க்கார். அதை நிர்வகிக்க ஜெயராஜை அழைத்தனர்.

அந்த அன்புப் பணியை விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டார் ஜெயராஜ். அடுத்து ஜெயராஜ், பத்மா, அவள் அன்னை மூவரும் கல்கத்தா சேர்ந்தனர். நோயாளிகளைச் சுறுசுறுப்பாகவும், அக்கரையோடும் கவனித்து பணியாற்றி வந்தார்.

அந்த அகதிக் கூட்டத்தில் தமிழ் இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் சுப்ரமணியம் என்றறிந்தார். அவனுக்குக் கை மணிக்கட்டில் ஆழமான வெட்டுக் காயம். அபாயகரமான காயம் அல்ல; ஆயினும் பலமான காயமே. டாக்டர் ஜெயராஜைக் காணும்போதெல்லாம் "டாக்டர் ஸார், தயவு செய்து இந்த ஏழையைக் காப்பாற்றுங்கள் டாக்டர். கை மணிக்கட்டு போய்விட்டால் நான் வாழவே தகுதியற்றவனாகி விடுவேன். கை மணிக்கட்டை நம்பி வாழும் ஏழைக் குமாஸ்தா நான். அதற்கு ஊனம் நேராது பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்வான்.

அவனுடைய உருக்கமான வேண்டுகோள் அவருடைய நெஞ்சைப் பிளந்தது. டாக்டர் என்ற முறையில் எல்லா நோயாளிகளிடமும் ஒரேவித பாசத்தைச் செலுத்தவேண்டிய அவர், தன் மனம் அவன் மீது மட்டும் விசேஷமானதொரு பிரீதியைச் செலுத்துவது கண்டு தடுமாறினார். அதைக் கட்டுப்படுத்திக் கொள்ள சிரமப்பட்டார்.

அன்றொரு நாள் பிற்பகல் வேலை முடிந்து வீட்டில் விச்ராந்தியாக சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தார்.

அச்சமயம் வெளியிலிருந்து ஒலித்த ஒரு குரல் அவர் கவனத்தைக் கவர்ந்தது. [illegible] கவனித்தார். பேசியது [illegible] பெண் குரல். டாக்டரைப் [illegible] பார்க்கவேண்டுமென்று கெஞ்சினாள் அவள். இப்போது முடியாது. அப்புறம் வா என்று தடுத்துக் கொண்டிருந்தான் பியூன்.

டாக்டரின் இரங்கிய நெஞ்சு அதைப் பொறுக்கவில்லை. எழுந்து வந்து பியூனுக்கு கையினால் சமிக்ஞை செய்து அப்பெண்ணை உள்ளே அனுமதிக்குமாறு உத்தரவிட்டார்.

உள்ளே வந்த அந்தப் பெண்ணைப் பார்த்தார். எளிமை ததும்பும் தோற்றம். இளமை பளிச்சிடும் முகம். வேதனையை வெளிக் காட்டும் கண்கள்.

"இப்படி உட்கார் அம்மா. என்ன வேண்டும் உனக்கு?" என்று கனிவுடன் கேட்டார்.

"உங்களை நேரில் சந்திக்க வேண்டுமென்று இரண்டு மூன்று நாட்களாகவே எண்ணி வருகிறேன். இன்றுதான் முடிந்தது... ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும்— மணிக்கட்டில் காயப்பட்டுள்ள அவர்— என் கணவர். தாங்கள் அவர் மீது கிருபை கொண்டு விரைவில் குணப்படுத்த வேண்டுகிறேன். [illegible] நன்கு வாழ்ந்தவள். இன்று [illegible]தையாக இருக்கிறேன்....

144244.

இப்படி சொல்லிக்கொண்டிருந் தாள் அவள்.

அதே சமயம் காபியும் கையு மாக கணவர் அருகே வந்தாள் பத்மா. அவளையே பரக்கப் பரக் கப் பார்த்தாள் அந்த ஏழைப் பெண். பத்மாவும் அவளையே பார்த்தாள். ஒருவரை யொருவர் புரிந்துகொண்டனர். "பத்மா" என்று தாவி வந்து தழுவிக் கொண்டாள். "ஐயோ, மீனு அக்காவா நீ. உன்னை இந்தக் கோலத்திலா நான் காணவேண் டும்?" என்று கண்ணீர் பெருக்கி ஞள்.

"இந்தப் பாவிக்காக கவலைப் படாதே பத்மா. நானும் என் அம்மாவும் உன்னையும் உன்னு டைய தாயாரையும் கண்டபடி அவமானப்படுத்தியதற்கு கட வுளே தகுந்த கூலியைக் கொடு த்துவிட்டார். அது போகட்டும். என் வரலாற்றைக் கேள்.... நானும் அம்மாவும் அப்பாவிடம் கோபித்துக்கொண்டு மாமா வீட் டுக்கு வந்தோம். கொஞ்ச நாள் மாமா எங்கள் மீது பிரியமாக இருந்தார். நாளாக நாளாக எங் களை ஒரு சுமையாகக் கருதினர். அந்த எண்ணம் கடுஞ் சொற்க ளாக வெளிப்பட்டது. அந்த மாமியோ பகிரங்கமாகவே எங் களைத் தூஷித்தாள். அம்மா இந் தக் கவலையினால் படுத்த படுக்கை யாகி உயிர் விட்டாள். இதற்குள் நான் நன்கு வளர்ந்து விட்டேன். மாமா கடமைக்காக என்னை ஒரு வர் காலில் கட்டிவிட்டார். அவர் மிகவும் ஏழை. கல்கத்தாவில் ஒரு பாங்கியில் குமாஸ்தாவாக இரு ந்துவந்தார். நானும் ஒருவிதமாக நிம்மதியாகக் காலம் கழித்துக் கொண்டிருந்தேன். அந்த நிம் மதியும் நீடிக்கவில்லை. கல்கத் தாவில் மூண்ட வகுப்புக் கல வரத்தால் மணிக்கட்டில் வெட் டுக் காயத்துக்கு உள்ளாகி இருக் கிறார் அவர்....

"இனி கவலை வேண்டாம் அக்கா. நடந்ததை யெல்லாம் மற ந்துவிடுவோம் அம்மாவும்இங்கே தான் இருக்கிருள். இரவு பகலாக உன் நினைவாகவே உயிரை வைத் துக்கொண்டிருக்கிருள்" என்று கூறி பின்கட்டிலிருந்த புனித வதியிடம் அழைத்துச் சென் ருள்.

"இதோ பாரம்மா. மீனுஅக்கா" என்று அவளைச் சுட்டினுள் பத்மா. அவ்வளவுதான். தான் பெற்ற மகளேபோல் ஓடி வந்து தழுவிக்கொண்டாள் புனிதம். அவள் கண்களிலிருந்து கண் ணீர் வழிந்தது. "என் மூத்த பெண் அம்மா நீ. என் சொத்து முழுவதும் உன்னையே சேர வேண்டுமென்று உயில் எழுதி வைத்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்கிறேன் நான். இதோ ஒப்புக்கொள் அம்மா. பத்மா வைப் பற்றிக் கவலையில்லை. அவள் நல்ல இடத்தில் வாழ்க் கைப்பட்டு விட்டாள். என் கவலையெல்லாம் உன்னைப் பற்றித் தான்"—கரகரத்த குரலில் சொன் ஞள் புனிதம்.

மீனுவின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. இப்படிப்பட்ட உத் தமியைப்பற்றி ஒரு காலத்தில் தவருக எண்ணினேமே என்று உருகியது அவள் உள்ளம் "உன் தங்கமான குணத்தை அறியாமல் நானும் அம்மாவும் அந்தக் காலத் தில் ஏதேதோ குரோதவார்த்தை களை யெல்லாம் கொட்டினேம். அதையெல்லாம் மன்னித்துக் கொள் சின்னம்மா" என்றுபாதங் களைப் பிடித்துக்கொண்டாள்.

அவள் கண்களில் வழிந்த கண் ணீர் அவள் நெஞ்சில் அது காறும் படிந்திருந்த களங்கத் தைக் கழுவியது.



பிள்ளைக்கனியமுது

16
ஆண்டு நிறைவு

✶

கேள்வி:—தாம்பத்தியம் எப்போது குற்றமாகும்?

பதில்:—வருஷம் ஒரு குழந்தை பிறக்க ஆரம்பிக்கும் போது.

—பாபுராவ் பட்டேல்

சந்தோஷ சமாசாரத்தை என் தந்தை எழுதியிருந்தார். பைய னின் ஜாதகத்தைக் கணிக்க எடு த்த சமயம் ஆண்டு நிறைவு தேதி யைக் குறித்தும், அதை சாஸ்திர முறைப்படியும் ஆடம்பரமாகவும் கொண்டாட தம் வீட்டுக்கே வரும்படியும் ஆக்ஞையிட்டார்.

நாட்களை எண்ணிக்கொண் டிருந்தோம். ஆண்டு நிறைவு நாளும் வந்துவிட்டது. எங்கே ஆரம்பித்து எங்கே வந்து நிற்ப தென்று தெரியாமல் பம்பரம் போல் சுழல்கிறது தலை.

காலை நேரத்துச் சடங்குகள் முடிவுற்றன. குழந்தையுடன் பலர் முன்னிலையில் பூர்ண கும்ப ஆசி யுடன் மஞ்சள் நீராடி புத்தாடை புனைந்து வருகிறேம். வீட்டுக் குள் சமையலறையிலிருந்து புகை மண்டுகிறது. எங்கும் ஜே ஜே என்ற கல்யாண சப்தங்கள்; வாழ்த்துக்கள். முக்கியமாகக் கண்ணன் பயலைச் சுற்றி நாரீ மணிகளின் கூட்டம். கைக்குக் கை தாவுகிருன். இந்தச் சின்னப் பயலுக்கு உபசாரங்கள் கண் கொள்ளாக் காட்சி. அவன் உடம் பிலே மின்னும் தங்க ஆபரணங் கள் பட்டுடைகள், இட்டிருக்கும் பொட்டு உள்பட முகங்கொள்ளாக் காட்சி. ஏதோ இளவரசனைச் சுற்றிச் சுயம்வரம் நடத்துகிற மாதிரி அத்தனை சிரிப்பும் கேலி யும் பெண்கள் பகுதியிலிருந்து அலைஅலையாக மிதக்கின்றன.

அவனுடைய (அம்மா வழித்) தாத்தா 'எங்கே அந்தப் பயல்? விநாயக சுந்தரத்தை எங்கே?' என்றதும் இன்னொரு தாத்தா (அப்பா வழி) சொல்லுகிறார். 'எங்கே சுந்தர விநாயகத்தை எங்கே?'

இவ்வாறு தாத்தாக்கள் அலற, பாட்டிகள் கூச்சலிட, பந்துஜன மித்திரர்கள் பரிசுவழங்க காத்து நின்றார்கள்; சாவகாசமாக ஜமுக் காளத்தில் இருப்பதைத்தான் காத்து நிற்கிறார்கள் என்று சொல்லுகிறேன். புண்யாகவாச னத்திற்கு வந்த வெள்ளிக் கெண்டிகள், பாலாடைகள், தம் ளர்கள் இன்னும் வீடு கொள்ள வில்லை. இப்போதும் அதே பரி சுப் பொருள்களை சிவந்த பட்டுப் பேப்பரில் சுற்றிக்கொண்டும், ரூபாயை ரொக்கமாகக் கொடுக்க வும் காத்திருந்தார்கள். தத்தியும் விழுந்தும் காலில் சதங்கை கலீர் கலீரென வருகிருன், ஆடியும் பாடியும் வருகிருன்.

வருகிற பயலை மறித்து 'எங்கே ஒரு டான்ஸ் ஆடு' என்கிறார்கள். அவன் தத்தி நடக்கும்பணியைத் தவறிச் செய்யும்போது அவன் நடனத்தை ஆடுவதாகக் கைதட் டல் நடக்கிறது! திருஷ்டி பட்டு விடுமேயெனக் கைசொடுக்கல். 'இந்தாடா காடிக் குட்டி' என்று என் மாமனுர் பரிசு கொடுத்தார். அதை அமுக்கியபோது கத்து கிறது. பயல் என்னமோ தனக்கே உரித்தான பாஷையில் சொல்ல அது மாமனுர் காதில் 'பாத்தி பாத்தி' என விழவே, 'பாட்டி யாடா இது? இது பாட்டியாடா' என்கிறார். என் மாமியார் 'டேய் போக்கிரிப் பயலே கா டிடா அது' என்கிருள். எல்லோ ரும் சிரிக்கிறார்கள். 'காடியைக் கண்டதும் பேரனுக்குப் பாட்டி நினைவு வந்துவிட்டது' என்று மாமனுர் மேலும் சொல்லவே சிரிப்பலைகள் பேரலைகளாக கோஷமிடுகின்றன.

குழந்தையின் ஆண்டு நிறை வுக்கும் சரி, அவ்வப்போது மற்ற படி குழந்தையைப் பார்வையிட வருகிறவர்களும் பட்டுத் துண் டாக சட்டைக்குக் கொண்டு போய் விடுகிறார்கள். கொடுக்கிற தொகையை ரொக்கமாகக் கொடு த்தால் அது பயனுள்ள வழியில் உதவியாக இருக்கும். எனக்காகச்

சொல்லவில்லை; குழந்தை பெற்ற யாபேருக்குமாகச் சொல்லுகிறேன். ஆறு டஜன் அரை கஜம் பட்டுத் துணியை வைத்து என்ன பயன்? வேண்டுமானால் இன்னும் பிறக்கிற குழந்தைகளுக்கு இவைகளை வைத்துப் பரிசு கொடுக்கலாம். சில சமயங்களில் கெண்டிகள், பாலாடைகள், வெள்ளிப் பாத்திரங்கள், பரிசு கொடுத்தவர்கள் வீடுகளுக்கே பாத்திரத்திலுள்ள பெயர்களை நாசூக்காக அழிக்கப் பெற்றுப் போய்ச் சேரும். எங்கள் பயலுக்கு வந்த பாத்திரங்களில் பெயர்கள் அழிக்கப் பெற்றதையும் ஊன்றிப் பார்த்தால் புரிய முடியும்.

தனக்கு வந்த பரிசுப் பொருள்களை ஒன்றோடு ஒன்று மோதி கொரியா செய்தான். இதைக் கண்ணுற்ற மனத்தத்துவம் தெரிந்த பெரியவர்கள் பயல் எஞ்சினியர் வேலைக்குப் போகலாம் என்றனர். என் தந்தை, 'இவனை டிராக்டர் பூட்டி உழச் சொல்ல வேண்டும். உழவுக்குள்ள சிறப்புத் தனி' என்றார். நானோ, 'இவன் ஓட்டல் முதலாளியாகட்டும். தனக்கும் சௌக்கியம்; பிறருக்குப் பேருதவி' என்று சொன்னேன். இம்மாதிரி சமயங்களில் பேசும் பேச்சுக்கள் சிரிப்பதற்காகத்தான். சிந்தனை செய்யவன்று.

நீஇரங்காயெனில் தன் பங்காக நிறைய விளையாட்டுச் சாமான்கள் உதவினான். ஒரு டஜன் தகர கஞ்சிராக்கள். கல்கலவென வட்டங்கள் ஓசையிட்டால் ஒன்பது காட்டு நரிகள் கத்திய மாதிரி. போதாக்குறைக்கு ஊதல்கள், கொட்டுகள். அதாவது அவன் வாங்கிய பொருள்கள் எல்லாம் உரத்து நாதப் பிரளயம் கொப்புளிக்கிறவை. பரிசு வந்த ஊதல்கள், தகர கஞ்சிராக்கள் வாய் ஆர்மோனியங்கள் பலூன்கள் டமடம வண்டிகள், கலகல கிலுக்குகள் எல்லாம் சேர்ந்தால் அணுகுண்டு ஆயிரம் வெடிப்பதற்குச் சமம். வேலைக்கார வள்ளியும் குடும்பத்தோடு விஜயம் செய்து தன் சக்திக்காக அவனுக்கு ஒரு மோதிரம் செய்து போட்டாள். அவள் குடும்பத்தோர் (ஏழு பேருக்கும்) புதிய துணிமணிகள் இனாம் வகையில் ரொக்கமாக முந்நூறு பெற்றார்கள். வள்ளி வகையறாவுக்குப் பரம திருப்தி.

'யார் யார் இனாம் என்னென்ன கொடுத்தார்கள்?' என்ற பிரச்னை வந்தபோது கதிகலங்கினேன். என் தாயார், 'மீனா நீதான் ஒரு லிஸ்டு எழுதி வை. நாளை அவரவர்கள் வீட்டுக்குத் திருப்பிச் செய்யவேண்டாமா?' என்று சொன்னாள்.

'நான் எழுதிக்கொண்டிருக்கிறேன்' என்று என் தந்தை சொன்னார்.

'எல்லாம் வட்டியில்லாக் கடன். விட்டுவிடாமல் எழுதுங்கள்' என்றேன். யாரோ 'பாருங்களேன் கண்ணனை காசைக் கொடுக்க மாட்டேன்கிறான். என்ன ஆசை இந்த வயதிலேயே' என்று மெச்சிக்கொண்டார். காசின் ஓசை சொல்லளவில் கேட்டாலே குழந்தைகள் சும்மா விடுகின்றனவா? விடுவதில்லை. வீட்டின் தலைமை ஸ்தானம் தகப்பனார் என்ற பெருமையை இன ஜனத்தார் அறியும்போது நமக்கும் தலைக் கர்வம் ஏற்படுகிறது. இதற்கு முன், 'இலை போட நேரம் ஆகுமா?' என்பதை என் தந்தையிடம் கேட்பவர்கள் 'என்னப்பா மணி என்ன ஏது' என என்னிடம் திரும்பினார்கள். நான் குடும்பத்தின் கிளையன்று, முக்கிய நடுமரம் என்பதைப் பயல் ஆண்டு நிறைவு உறுதிப்படுத்திற்று. இந்த ஆண்டு நிறைவில் என் தந்தை தாமும் பாலகனாய் அமர்ந்துவிட்டு, என் தோளில் நிர்வாகம். விருந்தோம்பல், உபசரிப்பு ஆகிய சுமைகளை வைத்தார். ஆண்களைப் போன்று பெண்கள் சுலபமாக அதிகாரத்தை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். எனக்குள்ளபொறுப்புகள் காந்திமதிக்கும் ஏற்படவேண்டுமே. அவளுக்கு வீட்டு நிர்வாகம் கொடுக்கப்படலாம். ஆனால்அவள் மாமியார் இன்னும் தானே வீட்டு எஜமானி யென்றே நிரூபித்து வந்தாள். சமையல்காரர்கள், வேலை ஆட்கள், மற்றும் விவரம் தெரிவோர் என்னை யண்டியும் விசாரித்தார்கள். அடுத்ததாக என் தாயாரை அண்டி விசாரித்தார்கள். காந்திமதிக்கு இந்தப் பொறுப்புகள் இல்லாதவரை மகிழ்ச்சியே. குஷாலாகக் குழந்தையைப் பெற்ற பெருமையை பலருக்கு நிரூபித்துக்கொண்டிருந்தாள். அவள் பாக்கியசாலி. நான் கஷ்டசாலி.



நான் சமையல் கட்டுக்கும், காலைப்பந்தி நடக்கும் இடங்களுக்கும் உக்கிராண அறைக்குமாக அலைகிறேன். நீயிரங்காயெனில் பலாப்பழம் உரிக்கும் கைங்கரியத்திற்கும், வடை, அப்பளம், பூந்தி, லாடு இவைகளை சிறுவர் சிறுமியர்களிடமிருந்து காப்பாற்றி பந்திக்கு உதவுவதாகச் சொல்லிவிட்டான். பந்திக்கு பழங்கள் மிஞ்சினால்தான் உண்டு; அப்பளங்களும், வடைகளும் அவனே காப்பாற்றத் தலைப்பட்டான். எங்கும் உணவுப் பொருள்கள்; அல்லது உணவாகவேண்டிய பொருள்கள் குவிந்தும் கூடை கூடையாகவும் இருக்கின்றன. விசேஷ வீட்டுக்கென ஒருவகை கதம்ப மணம் இருக்குமே அது வீசிக்கொண்டிருந்தது. இத்தனை சிறப்பும் சீரும் ஒரு வயசுப் பயலுக்காகவா நடைபெறுகிறது? அவன் உண்பதென்னமோ ஒரு கவளம்; மாங்காய்ப் பருமன். அவன் பெயரைச் சொல்லி இத்தனை மகோற்சவம். பந்தி ஆராதனைகள்.

"ஏன் அழுகிறான்?" அன்றைய விசேடத்திற்கு கதாநாயகன் அழுகிறதைத் தணிக்க ஆட்கள் போட்டியிட்டனர். ஆகவே அழுகை அதிகமாயிற்று. நீயிரங்காயெனில் பலாப்பழத்தைக் கொடுத்ததை என் தந்தை பார்த்துவிட்டார். ஒரே இரைச்சல் முடிவிலே காலை முதல் பயல் பட்டினியென்ற விவரம் தெரியவந்தது.

'நீங்கள் கெண்டியில் பால் விட்டுக் கொடுக்க வில்லையா?' என்கிறாள் மாமியாரை நோக்கி மீனா.

'உன் அம்மா கொடுத்திருக்கலாம்' என்றாள் என் அம்மா.

'ஐயோ நான் கொடுக்கவில்லை. மீனா நீயும் கொடுக்கவில்லையா?' என்று மீனாவின் மீது அவள் தாய் பாய்கிறாள். கண்ணன் பட்டினி என்ற கோஷம் வானைப் பிளக்கிறது. பால் எங்கே? பால் எங்கே? என்ற கேள்விகள் அலை மோதுகின்றன. சேகரித்திருந்த பசும்பாலை விசேஷ வீட்டிற்கு வந்த குழந்தைக்காரிகள் வாங்கிக்கொண்டார்கள். மணி 12 அடிக்கும்போது காலைப் பால் கிடையாது. கிடைத்தாலும் கொடுக்கக்கூடாது என்ற பேச்சுக்கள் எழுந்தன.

முடிவிலே புட்டிப் பால் தயாரித்துக் கொடுக்க மீனா சமையல் அறைக்குள் ஓடுகிறாள். 'இப்படியும் ஒரு பெண் பிள்ளை இருப்பாளோ?' என்று பலரும் சொல்லுகிறார்கள். மீனாவுக்குத் தாங்க முடியாத அவமானம். இத்தனை நாள் கவனமாக வளர்த்தும் முக்கிய தினத்தன்று மறந்துவிட்டார்கள். பலரும் பலவிதமாக அன்றாடம் ஆகாராதிகளை திணித்தார்களே, இன்று எல்லோரும் மறந்துவிட்டது விந்தையே. சமையல் அறையில் நெருப்பெழ

நான் விழிக்கிறேன், மீனா தலை குனிகிறாள்.

'இந்தாங்கம்மா. குழந்தைக்குப் பால் பாயசம் கொடுங்கள் அது தான் முறை' என்கிறார் தலைமை சமையல்காரர். புட்டிப் பாலை மறந்து பாயசத்தோடு ஓடுகிறாள். கண்ணன் பாயசம் உண்ணுவதற்கு பரிசு பாத்திரங்களில் யார் வீட்டுப் பாத்திரத்தை எடுப்பது என்ற பிரச்னை. முடிவில் என் தங்கை பாலா வாங்கி வைத்து உண்மையில் என் தாயார் பணத்தைக் கொண்டு வாங்கிய சந்தன பேலாவை தன் மகன் வாங்கியது என்று சபை மெச்சச் சொல்லி விட்டாள் அம்மா. வெள்ளிப் பாத்திரம் வருகிறது. பெண்களுக்கு விசேஷ தினங்களில் பொழுது போக்கு அன்றைய விசேடத் தலைவன் தலைவிக்குத் தேவைக்கும் அதிகமான இம்சை செய்வதுதாம். அப்படித்தான் நடத்தினார்கள். பயல் பாயசம் உண்ணும்போது தலையை வாரிப் பின்னல் போடுவாள் ஒருத்தி; பின்பக்கம் பின்னுவாள் இன்னொருத்தி, காலுக்கு பூட்சு மாற்றி விடுவார்கள்; மாட்டியதை கழற்றுவார்கள். ஒரு காலில் செருப்பு, இன்னொரு காலில் பூட்சு; குரங்கு கை அகப்பட்ட பூமாலை பழுதடையாமல் இருக்கலாம்; ஆண்டு நிறைவன்று அகப்படும் குழந்தைகள் படும் பாடு சொல்லுக்கு அப்பாற்பட்டது. சற்று பொறுத்து ஆணுடைகள் மாறி பட்டுப் பாவாடையும் ஜம்பரும், நகையுமாக பயல் வருவான். பலவிதமான தோற்றங்கள். அழகுச் சிங்காரங்கள்.

புதிதாக வருவோரெல்லாம், குழந்தை விழித்தாலும், தூங்கினாலும் ஆசீர்வாதம் செய்து தான்பம் செய்வார்கள். பயல் அவர்களிடம் வரப் பயந்து ஒதுங்கினாலும் விடாப்பிடியாகத் தூக்கி சதா அழவைப்பதைத் தங்கள் கடன் என்று செய்த வண்ணம் இருந்தார்கள். இன்று அவன் இம்சை படப் பிறந்தவன். பிறந்த நாள் ஜன்ம நட்சத்திரம் என்பது மறு பிறவியைக் குறிக்கும் நாள்போலும்.

முக்கியமாகப் பெண்கள் தத்தம் பிறந்த நாள் முதல் தத்தம் முதற் குழந்தையின் ஆண்டு நிறைவு வரை நடந்த விநோதங்கள் தகடுதத்தங்கள். மாமன் மாமியார் குறை விரோதங்களை அளக்க அளக்க அதுகுறித்து ஓர் பால் சண்டையும் பூசலும் ஏற்படுகின்றன. முதற் குழந்தையின் ஜன்ம நட்சத்திரத்திற்கு அப்பால் வீட்டிலே பிறக்கும் குழந்தைகள் பாடு அப்படி அப்படித்தான். , பிந்தியவர்கள் ஆண்டு நிறைவை ஆடம்பரமாகக்கொண்டாடமாட்டார்கள். இதை சபையோர் விளக்கினார்கள். கற்கண்டும் பழமும் எங்கும் மிதிபட்டன. கதம்ப பேச்சுக்கள் எங்கும் தெறிபட்டன.

சந்தன தாம்பூலங்களை எடுத்துக் கொள்வதும் பூசிக்கொள்வதுமாக வாழ்ந்துவிட்ட எனக்கு இடுப்பொடிந்தது. ஒவ்வொருவரும் குறைகூறுவண்ணம் குனிந்தும் நிமிர்ந்தும் சந்தனம் கொடுத்தபோது வாசனையும், சொகுசும் நிறைந்த சந்தனம் வாசனை தரும் பொருளாயிற்று. எல்லாம் ஒரு வயதடைந்த பயலின் கியாதியைச் சொல்லத்தானே. ஆண்டு நிறைவு வந்தால்,தகப்பன் பெற்றப்பின் தந்தை ஆகிறான்; கடமையின் தந்தை ஆகிறான். பலர் குடும்பத்துக்கும் கடன் பட்டவன் ஆகிறான்; இவ்வளவும் தொல்லைகளை அறிந்தேன்.

ஆண்டு நிறைவுக்கு வந்தவர்களை உபசரித்து உணவளிப்பதில் உள்ள பந்தி சிரமங்களையும் சமாளிக்க முயற்சி செய்தேன். முன்னைப்போல பந்திக்கு முந்த முடியவில்லை. எல்லோருக்கும் உபசரித்து 'உண்ணுங்கள், உண்ணுங்கள்' என்று பரிமாறும் பணியும் கிடைத்தது. பரிசாரகர்களோடு நானும் பரிசாரகனாக இருந்தேன்; தண்ணீர் விசாரிக்கும் தாக சாந்தி சிறுவனுடன் சேர்ந்தவன் ஆனேன். விசிறி பிடிக்கும் வேலைக்காரனாய் நின்றேன். நான் தகப்பனார் என்ற ஸ்தானத்தைத் தவிர்த்து மற்றப் பணிகளில் ஈடுபட்டேன். எல்லோரும் 'கண்ணன் வாழ்க, வாழ்க' என வாழ்த்தினார்கள். பந்தி பந்தியாக இருந்தும் எழுந்தும் வாய்க் குதப்பிய வெற்றிலை தாம்பூலத்துடன், நெஞ்சு குளிரக் குளிர பூசிய சந்தனத்தோடு வாழ்த்தொலி சொன்னார்கள்.

பந்திகள் நடந்த வண்ணம் இருந்தன.

• • •

மறுநாள் காலையில் ஆண்டு நிறைவை யொட்டிய கர்ண பூஷணம் காதைத் துளைத்துப் பொன்னிட்டுப் பார்க்கச் சித்தமாயிருந்தோம். வெள்ளைக் கல்லில் நகையும் கையுமாக வந்தார் ஆசாரி. அவர் கையிலே இருந்த குத்தூசி என் கண்ணைக் குத்திற்று; அதாவது அத்தனை இம்சை தந்தது. பூப்போன்ற காதிலே குத்தப் போகிறார்; சிரிக்கும் சிறுவன் சிந்தச் சிந்தக் கண்ணீர் விடுவான். என் உடல் நடுக்குற்றது. துளையிடும் படலத்தைக் காணப் பெண்கள் உற்சாகமாக கூடிவிட்டார்கள். இதில் எங்களுக்குப் பங்கில்லையென்று எந்த ஆண்களுமே வரவில்லை. ஒப்புக்காக பாட்டனார்களும் இரண்டொருவருமே இருந்தார்கள். பெண்களுக்குத் தாங்கள் நகை போட்டுக் கொள்வதிலும் திருப்தி; பிறர் போட்டிருப்பதை பார்ப்பதிலும் திருப்தி ; இத்தோடு நகை , போடுவதற்கு காதைத் துளைப்பதைப் பார்ப்பதாலும் கன குஷியென்றல்லவா தெரியவருகிறது.

சுபமுகூர்த்த நேரம் வந்தது.

'மாமனார் யார்?' என்றார்.

நான் என் மாமனாரைக் காட்டினேன். எல்லோரும் சிரித்தனர்.

"குழந்தையின் தாய் மாமன்" என்று ஆசாரி விளக்கம் தந்தார். மீனாவின் தம்பி நாணிக் கோணி வந்தான். மருமகனை வாங்கி மடியில் வைத்தான். குத்துவிளக்குச் சுடர் விடுகிறது. விளக்கடியிலிருந்த பிள்ளையார் முன் தெய்வமேயென இருந்த வாழைப் பழத்தை உரித்து ஆசாரியார் கொடுத்தார். நான் மறுத்தேன்.

'காரணமாகத்தான்' என்றார். பிறகு விஷயம் விளங்கிற்று. அழப்போகிற பிள்ளைக்கு வாழைப் பழம் என்பதை அறிந்தேன். சிரித்துக்கொண்டே சுண்ணாம்பைக் குழைய குழைய உள்ளங்கையில் தேய்த்துக் குத்தூசியால் எடுத்துக்கொண்டு பயல் காதில் குறி வைத்தார். குறி சரியா, தப்பா நடு மையமாக இருக்கிறதா என்ற விவாதம் ஆரம்பமாயிற்று. சுண்ணாம்புக் குறி சரியென பலரும் ஒப்புக் கொள்ளும்படி வைத்துவிட்டு சிரித்துக் கொண்டே ஊசியைப் புகுத்திவிட்டார்.

மறு விநாடி அந்த பட்டகசாலையே அதிர்ந்து விடும்படியான அலறல் கூச்சல். வில்லாக வளைந்தவனை இறுக்கிக் கட்டினார் தாய் மாமன். துக்க உணர்ச்சி தாங்கமாட்டாது வெளிப் பக்கம் போய்விட்டாலும், என் மனம் அழும் பயல் பக்கமே இருக்கிறது. உடல் வெளிப் பக்கம், உள்ளம் குத்துப்படும் குழந்தை பக்கம்.

ஆசாரியார் 'உம் பழத்தைச் சாப்பிடு' என உபசாரம் செய்யும் குரல் அவரை 'போ போ...'என உதைக்கும் பயலின் அழுகைக் குரல், இதற்கு ஊடாக, 'பளிச் சின்னு வெள்ளைக் கடுக்கன் மின்னுது' என்ற ரஸிகக் . குரல் எல்லாம் கேட்கின்றன. மாமனை உதைத்தும், துப்பியும் தள்ளித் 'தாயின்' முகம் பார்க்க முயற்சி செய்த என் கண்ணன் 'அழத் தான் செய்வான்; இடது காதையும் குத்துங்கள்' எனப் பலரும் சொல்லுகிறார்கள்.

'அழுகை அமரட்டும்' என்றேன் வெளியிலிருந்து...

'இல்லை. இல்லை. அழுகையோடு அழுகையாக நடக்கட்டும்' என்றார்கள். அது மெஜாரிட்டியான பேச்சு. மெது மெதுவாக ஆசாரியார் சுண்ணாம்புக்குறியிட்டு அடுத்த காதையும் துளைத்து மற்றொரு கடுக்கனையும் போட்டுவிட்டார்... பயல் துடியாய்த் துடித்துவிட்டான். தாய்க்காரி வாங்கிக் கொண்டு காற்றோட வந்தாள். எல்லோருக்கும் பரம திருப்தி, சந்தோஷம்.

காதிலே கடுக்கன் போடறதிலே அர்த்தம் உண்டு' இப்படி ஒரு குரல்.

'என்ன?' என்றது மற்றொரு குரல்.

'அதாவது மண்டுவாக இருந்தாலும், இப்படிக் காது குத்துவதன் மூலம் அறிவுக்குத் துடிப்பு வருகிறது' என்றார். எனக்கும் விஞ்ஞானி சர் சி. வி. ராமன் காது குத்துவது பிறருக்கன்று தனக்கு நல்லதென்று சொல்லியதைப் படித்திருந்த ஞாபகம் வந்தது. காதுக்கும் மூளை நரம்பிற்கும் சம்பந்தம் இருக்கவேண்டும்; இல்லாது போனால் பள்ளி ஆசிரியர்கள் காதைத் திருக மாட்டார்கள். காதைப் பிடித்துத் தூக்கிய பிராணிகள் கத்துவதை அறிகிறோம். ஆகவே காதில் துளையிட்டு ஆபரணம் அணிவது அறிவின் பிரகாசத்திற்கு வழியென்றும் உணர்ந்தேன்.

பயல் அழுகை இன்னும் முடியவில்லை தாயாரும், அந்தப் பெண் குலம் அத்தனையும் சமாதானம் செய்கிறார்கள். எல்லோருக்கும் தாம்பூலம், அதற்கு மேல் விருந்து. விருந்து. வடை பாயசத்தோடு மறுநாளும் விருந்து.

முதல் நாளைப்போலவே, மறு நாள் நான் பணி செய்தேன். எங்கும் பாராட்டுரைகள். வயதான பாட்டி, 'மணிக்கு ஆண்டு நிறைவு நடந்தபோது கூட இவ்வளவு சிறப்பாக நடக்கவில்லை'யென்று பாராட்டினாள். என் ஆண்டு நிறைவைவிட என் குழந்தையின் ஆண்டு நிறைவு பிரமாதம். அதேபோல 'காந்திமதியின் ஆண்டு நிறைவை விட, பயல் ஆண்டு நிறைவு பிரமாதம்' என்றார் மாமனார். நானும் மீனாவும் அவரவர் வீட்டுக்குத் தலைப் பிள்ளைகள். ஆகவே இரு வீட்டு பந்து மித்திரர்களும் 'கண்ணன் ஜன்ம நட்சத்திரம் பேஷ் பேஷோ பேஷ்' எனப் புகழ்ந்தார்கள். புகழை எவ்வளவு கேட்டாலும் இன்னும் கேட்க வேண்டும்போலிருந்தது. கண்ணன் பயல் காதில் கடுக்கன் விழுந்தது முதல் 'தாயைத் தவிர யாரையும் அருகே வரவிடவில்லை. 'தாய்' என்பது மீனா அல்ல; மீனா அல்ல மீனாவின் உறவினரான பணக்கார திரிபுர சுந்தரி அம்மாள். இந்த அம்மாளைப்பற்றி நான் எதுவும் சொல்லாமல் விட்டு விட்டதாக வாசகர்கள் நினைக்க வேண்டாம். ஆண்டு நிறைவு பிரக்யாதி பெற்றதற்கு முக்கிய ரகசியம் இதுவே. அவர்கள் உதவிய ரூபாய் மூவாயிரம் என்பதை நீங்கள் மனசில் போட்டுக் கொள்ளுங்கள்.

பயலுக்கு அழுகை ய ட ங் க திரிபுர சுந்தரியம்மாள் தங்கள் வீட்டுக்காருக்குள் எடுத்துப் போய் அதை ஓட வைத்தார்கள், பயல் அழுகை அடங்கிற்று.

சந்தடி அடங்கிய சமயம் மீனாவிடம் ஒரு விஷயம் விசாரிப்பதற்காக நான் தோட்டத்துப் பக்கம் வந்தேன். அவள் அங்கே தலையைப் பிடித்துக் கொண்டு இருந்தாள். வேலையும், அலைச்சலும், சிரமமும் அவளுக்கு வாந்தி தந்ததோ யென்ற கவலையால், 'என்ன மீனா தலைவலியா?' என்றேன். அவள் பதில் பேசவில்லை.

'என்ன?'

அவள் பதில் சொல்ல முடியாமல் சிரித்தாள். வாந்தி யெடுக்கும் காரணம் புரிந்துவிட்டது.

'அட ராம ராம...இன்னொன்றா?'

'எ ல் ல ா ம் உங்களால்தான். பேசாதீர்கள். யாருக்கும் தெரிய வேண்டாம்...' என்று மகிழ்ச்சி நிறைந்த கண்ணோடு சைகை செய்தாள். இன்னொரு குழந்தை; என் மனம் ஆனந்தமடைகிறதா வருத்தம் அடைகிறதா? மனப் பூரிப்புடன் அவள் கையைப் பிடிக்க, என் பிடியைத் திமிறி ஓட்டமெடுத்தாள். என் மனசிலே என்னென்னவோ கனவுகள்.

'கண்ணனுக்கு விளையாட தங்கையோ தம்பியோ அவசியந்தான்' என்றேன்.

'ஐயோ வாயை மூடிக்கொண்டிருங்கள்.'

நான் வாயை மூடிக்கொண்டேன்; ஆனாலும் மனசை மூட முடியுமா? அது பற்பல விந்தை விநோதங்களை கற்பனைக் கோட்டை வழியிலே அழைத்துச் சென்று கொண்டேயிருக்கிறது.

நாங்கள் பாக்கியசாலிகள்!

(முற்றும்)

சென்னை விஜயம் செய்திருந்த ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டுக்கு மேயர் விருந்து நடத்தினர்.

அகில இந்திய மாதர் மகாநாட்டினருடன் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி

அன்பின் சிகரம்

★

பி. ஆர். சரஸ்வதி

மறையும் கதிரவனின் பொன்னொளிபட்டு பசும் இலைகளெல்லாம் தகதகவென்று மின்னின குனிந்த தலையுடன் மொகலாய சாம்ராஜ்யத்தின் அதிபதிபூங்கா மேடையில் அமர்ந்திருந்தார். உள்ளத்திலே கொந்தளித்த துயரம் அவ்வீரர் முகத்தில் அப்படியே பிரதிபலித்தது.

"அல்லா! இதுவும் உன் சோதனையா? அரும் பாடுபட்டு நான் ஸ்தாபித்த இம்மொகலாய சாம்ராஜ்யத்தின் முதல் அரசன் நான் தான் என்று இறுமாந்திருந்தேன். இந்த வம்சத்தின் கடைசி அரசனும் நானேதானா? என் ஆசை மைந்தன் ஹுமாயூன் இனி பிழைக்கமாட்டானா? எனக்குப் பிறகு இப்பரந்த நாட்டை ஆள ஒருவருமே இல்லையா?" என்று அவர் வாய் முணுமுணுத்தது. அகன்ற விழிகளில் தேங்கிய கண்ணீரை துடைத்துக் கொண்டு எழுந்து உலாவ துவங்கினார்.

சூழ்ந்து வந்த இருள் அரக்கனை அவர் பீதியோடு நோக்கினார். இனி தன் வாழ்விலும் இதே இருள்தான் கவ்விக்கொள்ளும்—தன் அருமை மைந்தன் ஹுமாயூன் மறைந்த பிறகு.

"முடியாது... ஒரு நாளும் முடியாது...ஹுமாயூன் சாகக்கூடாது. அவன்பிழைக்கவேண்டும்" என்று வெறி கொண்டவர்போல் பிதற்றினார்.

அன்று காலை நடந்த சம்பவம் அவர் முன் நிழல் படம்போல காட்சியளித்தது. அழகான மஞ்சத்தில் அசையாமல் படுத்திருந்தான் ஹுமாயூன். அறையில் அசாதாரணமான ஒரு மயான அமைதி நிலவி நின்றது. அரசாங்க வைத்தியர்கள் எல்லாம் கவிழ்ந்த தலையுடன் ஒதுங்கி நின்றிருந்தனர். மேல் நாட்டிலிருந்து அழைக்கப்பட்டிருந்த பிரபல வைத்திய நிபுணர் ஒருவர் இளவரசனை சோதித்துக் கொண்டிருந்தார்.

கவலை தோய்ந்த முகத்துடன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தார் பாபர். அமர்களத்தில் அஞ்சா நெஞ்சுடன் போரிட்டு "சிங்கம்" என்று புகழ்பெற்ற அம்மகா வீரனது கண்களிலிருந்து கண்ணீர் அருவி பெருகி வழிந்தது.

"சொல்லுங்கள். என் குலக் கொழுந்து பிழைப்பானா?" என்றார் தழுதழுத்த குரலில்.

அந்த நிபுணரின் முகத்தில் சோகம் மண்டிக்கிடந்தது. அவர் கையை விரித்து, தூரத்தே தெரியும் நீலவானத்தை வெறித்த நோக்கோடு பார்த்துக்கொண்டு "இனி அல்லாதான் காப்பாற்ற வேண்டும்" என்று தன் தோல்வியை ஒப்புக்கொண்டார். ஹுமாயூன் வேதனை தாளாமல் முனகிக்கொண்டே புரண்டு படுத்தான்.

அக்காட்சியைக் காண சகியாமல் கண்களை இறுக மூடிக்கொண்டார் பாபர். கண்ணை மூடிக் கொண்டால் மன வேதனையை நீக்கிவிட இயலுமா?

பளிங்கு தடாகத்தில் கதிரோனின் பிரிவால் கமலங்கள் முகம் வாடி கூம்பின. அல்லி மலர்கள் இதழ்விரித்து இன்ப புன்னகையோடு அம்புலியை வரவேற்றன. வானத்து தாரகைகளோடு போட்டிப் போட்டுக்கொண்டு அரண்மனையில் தீபங்கள் சுடர்விட்டு மிளிர்ந்தன. பாபருக்கு அரண்மனைக்குள் நுழைய மனம் துணியவில்லை. நோயுடன் போராடும் தன் செல்வனைப் பார்த்து எப்படி சகித்துக்கொள்வது? பித்தனைப் போல் நந்தவனத்தை சுற்றிச் சுற்றி வந்தார்.

திடீரென்று,

"ஆவதும் அவனால் அழிவதும் அவனால்".

அல்லாவின் அருளின்றி அணுவும் அசையாது–மனமே! என்ற மோகன கீதம் இளந்தென்றலில் தவழ்ந்துவந்தது. பாபரின் புண்பட்ட உள்ளத்திற்கு அமிர்த ஔஷதமாக ஒலித்தது அப்பாடல். பாட்டின் இனிமையில் கட்டுண்டு நின்றார் அரசர். பாட்டு சமீபத்தில் கேட்கவே அரசர் ஆவலோடு வாயிற் புறத்தை நோக்கினார்.

சிதாரை மீட்டியவாறு உள்ளே நுழைந்தார் ஒரு யோகி. அவர் முகத்தில் சாந்தம் நிலவியிருந்தது. அரசர் அவரை வணக்கத்தோடு வரவேற்று பளிங்கு மேடையில் அமரச் செய்தார்.

"அரசே! ஏன் தங்கள் முகத்தில் இத்தனை சோகம்?" என்று வினவினார் அம்மகான்.

"ஸ்வாமி! எனக்கு ஒரே அருமை மைந்தன். அவன் தற்சமயம் மரண தேவனின் வாயிலை நெருங்கிக் கொண்டிருக்கிறான். மனித சக்தியால் கூடின மட்டும் முயற்சித்துப் பார்த்தோம். ஒன்றுமே பயனில்லை" என்றார் சோகத்தோடு.

"அரசே! கலங்காதீர்கள். நீங்கள் மிகவும் அருமையாக நேசிக்கும் ஒரு பொருளை தங்கள் மைந்தனின் உயிருக்கு ஈடாக கொடுத்துவிடுவதாக வேண்டிக்கொள்ளுங்கள். இறைவன் அதை ஏற்றுகொண்டு தங்கள் மைந்தனுக்கு சுகம் அளிப்பார். அல்லா உங்களுக்கு கருணை புரிவார்" என்று சொல்லிக்கொண்டே சிதாரை மீட்டியவாறு போய்விட்டார். அந்த மோகனகீதம் சிறிது சிறிதாக தேய்ந்து மறைந்தது.

"நான் மிகவும் அருமையாக நேசிக்கும்பொருள் எது? ஹுமாயூனுக்கு அடுத்தபடியாக நான் அருமையாக கருதுவது எனது இன்னுயிர் தானே! ஆகவே என் மைந்தன் பிழைப்பதற்காக என் உயிரையே கொடுத்துவிடுகிறேன்" என்று ஒரு முடிவுக்கு வந்தார் பாபர். கவலை நீங்கின

அவர் முகம் கிரகணத்திலிருந்து விடுபட்ட பூர்ண மதிபோல் பிரகாசித்தது.

விரைவாக அரண்மனையுள் நுழைந்த அவர் தன் குமாரன் படுத்திருந்த மஞ்சத்தை அணுகினார். கூப்பிய கரங்களுடன் அம்மஞ்சத்தை மும்முறை வலம் வந்தார்.

"அல்லா! என் உயிரை எடுத்துக்கொண்டு அதற்கு ஈடாக என்குல விளக்கின் உயிரைக் காப்பாற்று. இம்மொகலாய வம்சத்து மங்கா ஜோதியாக அவன் விளங்க அருள் செய்" என்றார் உணர்ச்சி பெருக்கோடு. ஹுமாயூன் கண்களை மலர விழித்து "அப்பா" என்றான் தெளிவான குரலில். பொங்கும் மகிழ்ச்சி வெள்ளத்தில் உணர்வற்று மயங்கி சாய்ந்தார் பாபர்.

நாட்கள் உருண்டு மறைந்தன. ஹுமாயூன் பூரண குணமடைந்தான். பாபர் நோயின் பிடியில் சிக்கினார். அன்று காற்றும் மழையும் கோர தாண்டவம் ஆடின. பாபர் திணறும் மூச்சோடு மஞ்சத்தில் சயனித்திருந்தார். கவலை தோய்ந்த முகத்தோடு அவர் அருகில் அமர்ந்திருந்தான் ஹுமாயூன். பாபர் தன் செல்வக்குமாரனை ஆசை ததும்ப பார்த்தார்.

"அல்லா அருள் புரிந்தார். என் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டார்" என்றார் மெல்லிய குரலில். அவர் வதனத்தில் புன்னகை அரும்பிற்று. பூரண சாந்தத்துடன் கண் இமைகள் தானாக மூடிக்கொண்டன.

பாபர்-மொகலாய சாம்ராஜ்யத்தின் முதல் அரசர்-மீளாத நித்திரையில் ஆழ்ந்துவிட்டார். வேகமாக வீசின காற்றில், சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருந்த தீபம் அணைந்துவிட்டது. "அப்பா! அப்பா!" என்று பாபரின் காலை அணைத்தவாறு கதறினான் ஹுமாயூன். இயற்கை அன்னையே அந்த இணையற்ற வீரனின் பிரிவுக்காக குமுறி அழுவதைப்போல "ஹோ"வென்ற இரைச்சலுடன் மழை கொட்டத் துவங்கிற்று. தன் தனயனுக்காக தன் இன்னுயிர் ஈந்து அன்பின் சிகரத்தை எட்டிப்பிடித்த அவ்வுத்தம தந்தையின் முகத்தில் நிரந்தர அமைதி நிலவி நின்றது.

நிமிஷக் கதை

பழிக்குப் பழி

★

எஸ். டி வீரராகவன்

"ஒரு விஷயத்திலே பார்க்கப்போனா நம்ம சாம்பசிவம் ஒரு யானைமாதிரி!"

"மாதிரியாவது மண்ணாவது! மனுஷர் அசல் யானைதான்! பல்லிலே உட்காண்டார்னா மூணு லீட் போருதே!"

"சேச்சே! அதுக்குச் சொல்லலேன்னா? அவருடைய விரோதத்தைச் சம்பாதிச்சுண்டா மனுஷன் மீளவே முடியாதுன்னு சொல்றேன்!"

"என்னங்காணும் அப்படிச் சொல்றீர் இருந்தாப்பலே இருந்து! உமக்கு எதுவானா அப்படி 'ட்ராஜிக்'கா ஆயிடுத்தா என்ன?"

"சே! நானும் சாம்புவும் நல்ல 'ப்ரண்ட்ஸ்' ஆச்சே?"

'பின்னே என்னவாம்?'

'ஓஹோ! உமக்கு ஒண்ணுமே தெரியாதா? அப்புறம் சொன்னா மட்டும் கோவம் வறது! ஏங்காணும், நீர் ஊரிலே இருந்துண்டே இவ்வளவு பெரிய விஷயங்களெல்லாம் காதிலே விழாதபடி பஞ்சா அடைச்சிண்டிருக்கீர்! அல்லது ஒருவேளை தனுர்மாஸ பஜனை பண்ணிண்டிருந்தீரா?"

'ஓய்! உம்மாலே கிண்டல் பண்ணாம ஒரு விஷயத்தையும் சொல்லமுடியாதா?'

"நம்ம சாம்புவுனுடைய தகப்பனார் நடேசய்யர் 'சிலண்டர்' 'டைம்' ஆயிட்டாரேல்லியோ..."

'ஆமா! மனுஷர் தங்கமானவர், பாவம்?'

'அவருக்குக் காலகண்ட மேஸ்திரித் தெருவிலே ஒரு வீடு இருந்ததே!'

'ஆமாம்! அதைத்தான் சமீபத்திலே சாம்பு விற்று விட்டாராமே!'

'அதைத்தானே சொல்ல வறேன்! சுமார் எட்டாயிரம் பெறக்கூடிய அந்த வீட்டை மனுஷர் ஆயிரத்தைத் தூறக்குன்னு விற்றிருக்கார்!'

'அட ராமச்சந்திரா! அப்படியா செஞ்சார்! மனுஷர் ஏமாந்து விட்டார்னு சொல்றீர்!'

'சே! சாம்பசிவத்தைப் பற்றி நன்னாத் தெரிஞ்சிண்டே இப்படிக் கேழ்க்கிறீரே. மனுஷர் யமகாதகராச்சே!'

'ஓஹோ! சரிதான் வீடு நல்லதில்லே போலிருக்கு. ஏதாவது தோஷம்...ஆவிகள் நடமாட்டம்...'

'தூத்தூ! அதெல்லாம் ஒண்ணுமில்லே. பேஷான வீடாச்சே!'

'அல்லது ரொம்ப 'ஓல்ட்' ஆக இருக்குமோ? வேற ஏதாவது 'டிபக்ட்' இருந்திருக்கும்!'

'ஓய்! உமக்கு ஊகம் பண்ற சாமர்த்தியம் கிடையவே கிடையாது. வீடு புதிசா இப்பத்தான் கட்டினது! நாம் வாங்கிக்காம போயிட்டோமேன்னு ரொம்ப வருத்தப்பட்டுண்டிருக்கேன்...'

'பின்னே என்னதான் காரணம் இருக்க முடியும் அப்படி 'சீப்'பிலே தள்ளிவிடும்படி! ஒருவேளை தம் உறவு மனுஷாள் யாருக்காவது விற்று விட்டாரோ?'

'அதுவுமில்லே! மனுஷர் விற்கவே மனசு வராம ரொம்பக் கஷ்டப்பட்டுண்டுன்னா அதை விற்றிருக்கார்!'

'ஓய்! எனக்கு சொல்றதுக்கு இனிமே ஒண்ணுமேயில்லே. நீரே விஷயத்தைச் சொல்லிவிடும்.'

'அப்படிக் கேளும்! சாம்புவினுடைய அப்பா காலமாயிட்டபோது தம்முடைய உயில்லே அந்த வீட்டை விற்றுக் கிடைக்கிற தொகையை தம்மிடம் முப்பது வருஷமா குமாஸ்தாவாயிருந்த சபேசய்யர் என்கிறவருக்குக் கொடுத்துவிடும்படி எழுதியிருந்தாராம்!'

'அடாடா, இவனுக்கும் சபேசனுக்கும் ஜன்ம பகையாச்சே!'

தமக்கு 'சான்ஸ்' கிடைக்கச்சே அவர் மேல் பழிவாங்கிவிட்டார் சரியானபடி!'



பெண்கள் உலகம்



காந்தி கிராமம்

★

நம் நாட்டிலே ஆண்களாகட்டும் பெண்களாகட்டும் ஒரு இடத்திலே கூடினால் அங்கே தங்கள் ஊரைப்பற்றிய பெருமையும் ஊரிலுள்ள பொருள்களைப்பற்றிய பெருமையும்இல்லாமலிராது. மற்ற விஷயங்களிலே எப்படி இருந்தாலும் இந்தப் பெருமை பேசும் விஷயத்தில் தமிழ்நாட்டிலே உள்ள ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்தவரும் ஒருவரையொருவர் மிஞ்சிவிடுவார்கள். கேரளம் வானராசாரம் என்று பரிகசிப்பான் தமிழன். எங்கள் மலையாளத்துஅவியலுக்கு மிஞ்சி ஒரு சுவையுண்டோ? மிளகுக்கு மேலானதொரு பொருள் உண்டோ என்பார் மலையாளத்து அண்ணா.

"எங்கள் திருநெல்வேலி தமிழ் பிறந்த பொதிகை, தண்பொருனை"எங்கள் ஊர்த் தோசைக்கு ஈடு சோடே கிடையாது என்பர் நெல்வேலி நண்பர்.

பாண்டிய நாட்டிலே பிறந்த கல்லும் மண்ணும் கவிபாடும் என்றார் பாரதி. அது தென்பாண்டி நாட்டுக்கல்ல. நான் மாடக்கூடலுக்குத்தான் பொருந்தும்.தமிழ் வளர்ந்தது தென் மதுரையில். முத்தும், முத்தமிழும் உண்டு. எங்கள் சொக்கலிங்கப் பெருமானே சங்கப்புலவராக வீற்றிருந்தார் என்று பேசுவார் தமிழன்பர்.

எங்கள் சித்தப்பா இந்த விஷயங்களுக்கெல்லாம் செல்லமாட்டார். 'மதுரைக்கு ஈடு மதுரைதான். முத்தமிழ் க்ஷேத்திரம். துவாசாந்தஸ்தலம். சாக்ஷாத் மீனாக்ஷி ராஜ்ரீகம் செய்த இடம். அந்தக் கோயிலும் குளமும் வேறு எங்கேதான் காணமுடியும்? என்று பக்தி உலகிலே ஒரு சுற்று சுற்றிவிட்டு அந்த மதுரை முதுக்கை வற்றலும் மாவடுவும், அரைக் கீரையும் மானா மதுரைச் சுண்டைக்காயும், சிவகங்கை கீரைத்தண்டும் என்று உணவுப் புராணத்திலே இறங்கிவிடுவார். பள்ளியில் படிக்கும் பிள்ளைகளெல்லாம் அவரிடம் பாடங் கேட்கலாம். பாண்டிய நாட்டின் கோயில் குளங்கள், விளை பொருள்கள், உற்பத்திச் செய்யும் சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதி ஒன்றுவிடாமல் ஒப்புவிப்பார். அவ்வளவு பெருமை அவருக்குத் தம் ஊரைப்பற்றிப் பேசுவதிலே.

அதற்கு ஏற்றாப்போல சந்தர்ப்பங்களும் ஒன்று சேரும். ஒத்துழையாமை இயக்கத்திலும் கதர் உற்பத்தியிலும் பாண்டி நாடும், கொங்கு நாடும் முன்னணியிலே நின்று பணி செய்த பெருமைநம்எல்லோருக்கும்தெரியும். கடந்த சில வருடங்களாகச் சுதந்திரம் பெற்ற பிறகு சித்தப்பா பல வேறு காரணங்களால் அதிகமாய்ப் பெருமை பேசுவதில்லை என்று தோன்றிற்று. அவருக்கே அலுத்துவிட்டதோ என்றுதான் நாங்கள் நினைத்தோம். ஆனால் நாங்கள் நினைத்தது தவறு என்று பிறகு தெரிய வந்தது.

திடீரென்று ஒருநாள் சித்தப்பா காலை வண்டியிலே வந்து இறங்கினார். கையிலே ஒரு சமுக்காளம். துண்டுகள் ஒரு கதர் ஜவுளி மூட்டை இவைகளுடன் காட்சி தந்தார். "ஏது சித்தப்பா! திடீர் விஜயம்" என்று குழந்தைகள் வரவேற்றனர். பகல் சாப்பாட்டிற்குப் பிறகு சித்தப்பாவின் சொற்பொழிவு தொடங்கிற்று.

• • •

"கிராமங்கள்தான் நம் பாரத நாட்டின் உயிர்நாடி. அவை முன்னுக்கு வந்தால்தான் நம் நாடு முன்னேறும்" என்று பாபுஜீ சொன்ன வாக்கு இப்பொழுதுதான் பலிக்க ஆரம்பித்திருக்கிறது. பாபுஜீ அவர்களின் நிர்மாணத் திட்டங்கள் பதினெட்டும் உனக்கு ஞாபகமிருக்கிறதா? என்றார்.

சரியாக ஞாபகமில்லை. பொதுவாக கிராம புனருத்தாரணம், தீண்டாமை ஒழிப்பு, கதர், ஹிந்தி பிரசாரம், பசு சம்ரக்ஷணை, குஷ்ட நிவாரணம் இவைகள்தான் ஞாபகமிருக்கின்றன. பதினெட்டு என்பது சரியாக நினைவிலில்லை என்றேன். உள்ளூர நடுக்கம். ஏன் மறந்து போகும் என்றுகூடச் சில சமயங்களிலே அவருக்குக் கோபம் வந்துவிடும். ஆகவே மெல்ல மூடி மழுப்பி ஒரு மாதிரியாகச் சொல்லி வைத்தேன்.

"சரி! எது ஞாபகமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அவருடைய அருமையான மகாமந்திரம் ஞாபகமிருக்கிறதல்லவா?" என்றார்.

"ஆகா! அதை மறந்து வாழ முடியுமா? "கரோ பட்டலே கஹோ பீதே" என்பதுதானே. வித்தகம் பேசவேண்டாம் பணி செய்யவேண்டும் என்பதுதானே தமிழ்" என்றேன்.

"இல்லை. இல்லை. முதலில் செயலில் இறங்கு பிறகு அதைப்பற்றி சொல்" என்பது. இதற்கு ஒரு விளக்கமாக அமைந்திருக்கிறது காந்தி கிராமம். நீங்கள் எல்லோரும் கட்டாயம் வந்து அதை பார்க்கவேண்டும். அப்பொழுது தான் அதன் உண்மையான சேவை உங்களுக்கு விளங்கும்" என்றார்.

"நான் வருவது என்பது அவ்வளவு சுலபமல்ல. நீங்கள் கண்டதை எங்களுக்குச் சொல்லுங்களேன்!" என்றேன்.

ஒருவர்:—நம்ப கப்புணி கெட்டிக்காரன் தான் கடன் வாங்கியே ஒரு பங்களா கட்டிவிட்டான்!

மற்றவர்:—கெட்டிக்காரன் மட்டுமா? மகா கெட்டிக்காரன் ஓய்! உங்களுக்குத் தெரியுமா? அந்தப் பங்களாவை விற்றே கடனை அடைத்துவிட்டான்!

ஏற்கனவே பெருமையினால் பூரித்திருந்த அவரது முகம் மேலும் மலர்ந்தது. நீ என்னதான் சொல்லு அந்தப்பாண்டி நாட்டு மண்ணுக்கே ஒரு தனிப் பெருமை உண்டு. அங்கே எத்தனையோ அருமையான கருத்துக்கள் புதையுண்டுகிடக்கின்றன. அதனால்தான் அங்கே தொடங்கியுள்ள செயல்கள் மளமளவென்று கற்பக விருட்சம்போல் செழித்து ஓங்கி வளருகிறது.

மலை வாழைப்பழம் உயர்ந்தது. அதிலும் சிறந்தவகை சிறுமலைப்பழம். அந்தச் சிறு மலையின் தாழ்வரையிலேதான் அமைந்திருக்கிறது காந்தி கிராமம். மலையின் பின்னணி அந்தக் கிராமத்துக்கே ஒரு தெய்வீக சௌந்தர்யத்தை அளித்திருக்கிறது. அங்கே சென்றுவிட்டால் நாள் முழுவதும் இங்கேயே தங்கி இவர்களோடு பணி செய்ய வேண்டுமென்றே தோன்றும். இந்தக் காந்தி கிராமத்தின் ஸ்தாபகர் டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள். அவர்கள் தமது வாழ்க்கையைஇதன்பொருட்டே அர்ப்பணம் செய்த பெரியார், அங்கே நடைபெறும் ஒவ்வொரு சிறு விஷயமும்அவருடன் நேர்முகமாகத் தொடர்பு கொண்டவை, செடிகளின் புதிய தளிர் முதல் நோய்க்கு மருந்துண்ணும் நோயாளி வரையில் எல்லோருடைய நலன்களைப் பற்றிய விஷயங்கள் எல்லாம் அவருக்குத் தனித்தனியே தெரியும்.

அன்பின் வழியது உயர்நிலை என்ற குறளுக்கு விளக்கமாக அமைந்தது அவரது வாழ்க்கை.

ஏழையென்றும் அடிமை
என்றும் எவனுமில்லை சாதியில்
இழிவு கொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே—
என்று பாடிப் போனார் பாரதி.

அதைச் செயலாகச் செய்து காட்டுகிறார் ஸ்ரீமதி சௌந்தரம். கோடீசுவரர் என்று பெயர்பெற்ற ஸ்ரீமான் சுந்தரமய்யங்காரின் செல்வப் பெண் இவர், இன்று காந்திக் கிராமத்திலே உள்ள எளிய மக்களுள் தாமும் ஒருவளாக வாழ்கின்றார். வாழ்வது என்று சொல்லுவதைவிட உழல்கின்றார் எனலாம். பாகவத புராணத்திலே கண்ணனுடைய ராஸலீலை என்று ஒரு பகுதி உண்டு. அதிலே கண்ணன் கோபிகளைத் திருப்தி செய்விக்கும் பொருட்டு ஒவ்வொருவருடனும் தனித்தனி ஒரு கண்ணனாக காட்சியளிப்பார் என்று சொல்லுவதுண்டு. இங்கே சௌந்தரம்மாள் ஒவ்வொருவருடனும் அப்படித்தான் பழகுகிறாள் என்று சொல்லலாம். ஒவ்வொருவரிடமும் ஒரே மாதிரியாக அன்பு செலுத்துகிறார்கள் என்பதை அங்குள்ளவர்களின் சொற்களும் செய்கையும் தெரிவிக்கின்றன.

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே என்று கோஷித்தார் பாரதி. அந்தச் சொற்களின் விளக்கமாக விளங்குகிறது இந்த கிராமம். இதன் முக்கியமான நோக்கங்கள், கல்வி புகட்டுதல், ஆதாரக் கல்வித் திட்டம் முதியவர் கல்வித் திட்டம். காந்தீய வழிப்படி நமது சமூகத்தை மாற்றி அமைத்தல், நிர்மாணத் திட்டத்தின் கீழுள்ள எல்லா விஷயங்களையும் நடைமுறையில் கொண்டு வருவதற்கான வகையில் பெண்களை கிராம ஸேவிகைகள் என்ற பெயருடன் பயிற்சியளித்தல், கைத்தொழில்களின் மூலம் கல்வியைப் பரவச் செய்தல், கிராமங்களில் வீடுகளையும் தோட்டங்களையும், வீதிகளையும் கிணறு, குளம், வாய்க்கால், ஏரி, முதலியவைகளையும் சுகாதார விதிகளுக்கு ஏற்றவாறு எப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேணுமென்பதைப் பற்றிப் பிரசாரம் செய்தல் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான பாதுகாப்பு விடுதிகளை அமைத்தல் மருத்துவ நிலையங்களை அமைத்தல், தாய்மையை ஏற்று நிற்கும் பெண்களைக் கவனித்து, வருமுன் காப்பு—வந்தபின் காப்பு, என்ற வகையிலெல்லாம் உதவி செய்தல், ஜாதி மத பேதங்களை எல்லாம் ஒழித்து எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற முறையிலே சிறந்த குடிகளாய் வாழ்வதற்கு வழி வகுத்துக் கொடுத்தல் முதலியவைகளே.

இந்த நோக்கங்கள் எல்லாம் இன்று எந்த அளவில் நிறைவேறி இருக்கின்றன என்பதைச் சென்று பார்த்தால்தான் தெரிந்துகொள்ள முடியும். கிராமத்தை இவ்வளவு சுத்தமாகவும் ஆரோக்யமாகவும் வைத்துக் கொள்ளமுடியுமா? என்று ஆச்சர்யப்பட்டுப் போவோம். இந்த கிராமத்தை ஒரு ஆதர்சமாகக் கொண்டு எல்லாக் கிராமங்களும் வளருமானால் வெகு சீக்கிரத்தில் நாம் இலட்சிய பூமியாகிய இராம ராஜ்யத்தைப் பார்க்கலாம், கிராம ராஜ்யம் ராம ராஜ்யமாகிவிடும் என்று சற்றே நிறுத்தினார் சித்தப்பா.

“அது சரிதான்! இப்பொழுது நிறைய விளைகின்ற பூமியின் சொந்தக்காரருக்கு கிருஷி பண்டிட், உழவு மாணிக்கம் என்றெல்லாம். பட்டம் கொடுத்தார்களே. அது நிறைய உரங்கள் ரசாயன உரம் எல்லாம் போட்டு வளர்த்துப் பயிரிட்டதுதானே! அந்த மாதிரி எல்லாஏழைக்குடியானவனும் செய்யமுடியுமா? இந்தக்

கிருஷி பண்டிட் என்பவரே, அதே பூமியில் நீடித்துப் பல வருஷங்கள் இதே அளவில் பயிரிட்டு இதே அளவு பலன் பெற முடியுமா? என்று கேட்டாள் விமலா.

“இதென்ன? திடீரென்று காந்தி கிராமத்திலிருந்து விவசாயத்துக்கும் கிருஷிபண்டிட்டுக்கும் முடி போடுகிறாயே?” என்றார் சித்தப்பா.

“திடீரென்று பாயவில்லை.

இவர் ஒருவர் ஏராளமான பணச் செலவில் இப்படி ஒரு ஆதர்ச கிராமத்தை நிர்மாணம் செய்து காட்டுகிறார். கஸ்தூரிபாய் தேசீய ஞாபகார்த்த நிதியும் வேலை செய்கிறது. கிராம புனருத்தாரணம் நடைபெறுகிறது. "சர்க்காருடைய பிர்க்கா டெவலப்மென்ட்"டும் வேலை செய்கிறது. ஆனால் இந்த மாதிரி அபிவிருத்திகள் நீடித்துச் செய்து அதன் பிறகு அதே நிலையில் நிற்பது என்பது சுலபமா? என்றாள் விமலா.

"சுலபமல்ல, என்பதன் பொருட்டு ஒரு செயலைச் செய்யாதிருக்க முடியுமா? இந்த ரீதியிலே சென்றால் நாளடைவிலே கிராமங்கள் தம்மைத் தாமே உயர்த்திக்கொள்ள முன்வரும். அந்தந்தக் கிராம வாசிகள் தங்கள் தேவைகளுக்கு பிறர் கையை எதிர்பார்ப்பதில்லை என்றால் கிராமம் முன்னேறக் கேட்பானேன்.

இங்கே உள்ளவர்கள் மாணவர்களானாலும், ஆசிரியர்களானாலும் சரி எல்லோரும் தங்களுடைய தேவைகளைத் தாங்களே செய்துகொள்வது என்ற முறையிலேதான் வேலை செய்கிறார்கள். தாங்களே நூல்நூற்று தாங்களே தறியில் துணி நெய்து உடுக்கிறார்கள். தங்களுக்கு வேண்டிய மரசாமான்கள், மேஜை நாற்காலி, பலகை போன்றவைகளைத் தாங்களே தயார் செய்துகொள்கிறார்கள். இதுமட்டுமா? தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையெல்லாம் கூட தாங்களே பயிரிட்டுக் கொள்ளுவது என்ற மனநிலையோடு முயற்சி செய்கிறார்கள்.

குழந்தைகளைப் போஷித்துப் பாதுகாத்துப் பால் வழங்கும் நிலையம் பால்வாடி என்று பெயர் பெற்று விளங்குகிறது. அங்கே குழந்தைகள் நிறைந்தவயிறோடும் மலர்ந்த முகத்தோடும் காணப்படுகிறார்கள். அவைகள் நல்ல ஆரோக்யத்துடனிருக்கின்றன என்பதைப் பார்க்கும் பொழுதே கண்டு கொள்ளலாம். பல ஸேவிகைகள் இரண்டு மூன்று டாக்டர்கள் எல்லோரும் கண்காணிக்கும் பொழுது குழந்தைகளுக்கு என்னகுறை?

இதுமட்டுமின்றி தங்களைச் சுற்றிலுமுள்ள இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வது. தங்களுக்கு வேண்டிய சமையலையும் விகிதம் போட்டுக்கொண்டு ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி வேலை செய்கின்றது பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத ஒரு காட்சி.

தங்கள் படுக்கைக்கும் உட்காருவதற்கும் கோரைப்பாய்கள்,ஜமக்காளங்கள் இவைகளையும் அங்கேயே நெய்து கொள்ளுகிறார்கள். தவிர, கூடை ஓலைப் பெட்டி முதலியவைகளும், விளையாட்டுப் பொருள்கள், தையல் வேலை செய்த சாமான்கள், முதலியவைகளும், உபயோகத்திற்கு எடுத்ததுபோக விற்பனை செய்யும் அளவிற்கும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இங்கே நல்ல முறையிலே காகிதம் செய்யப்படுகின்றது. காகிதம் மிகவும் நன்றாக இருக்கிறது. மில்களோடு போட்டியிடும் அளவுக்கு வராவிட்டாலும் தனிப்பட்ட மனிதரது உபயோகத்துக்கு இந்தக் கைக்காகிதம் மிகுதியும் பயனுள்ளதாக இருக்கிறது. இதோ பார்! இந்த ஜமக்காளம் அங்கே நெய்தது. இந்தப் பேப்பர், கையினால் செய்தது என்று அவைகளை எடுக்கப் புகுந்தார் சித்தப்பா.

விமலாவின் கண்கள் ஆச்சர்ய மிகுதியினால் மலர்ந்தன. இது அங்கே செய்த விளையாட்டு சாமானா? இது கையினால் செய்த காகிதமா? கதர் துணி மாதிரி தான் இருக்கிறது என்று தனது விமரிசனத்தைத் தொடங்கினாள் அவள்.

இதெல்லாம் சரிதான் அம்மா! நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு பெண்ணும் இவைகளையெல்லாம் பற்றித் தெரிந்து கொள்ள வேணும், அதுமட்டும் போதாது. இம்மாதிரியான செயல்களில் எவைகளையெல்லாம் நம்முடைய கிராமத்திலும் வீடுகளிலும் பின்பற்றலாம் என்பதைப்பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும். கடந்த ஒரு வருஷமாக கதர் துணிகள் தேங்கிக்கிடக்கிறது. மில் வாங்குகிறவர்கள் அதை நிறுத்திக் கைத்தறியை ஆதரிக்க வேண்டுமேயன்றி கதர் வாங்குபவர் கைத்தறித் துணிகள் வாங்குவதில் அர்த்தமில்லை. கதர் ஏன் தேங்க வேணும், நாம் ஏன் கைக்குத்தல் அரிசியை ஆதரிப்பதில்லை. என்பதையெல்லாம் நினைத்துப் பார்க்கவேணும். அப்படி நினைக்கும் பொழுதுதான் காந்திக் கிராமம் செய்கிற முறையிலே எல்லாக் கிராமங்களும் பின்பற்றலாம். நல்வாழ்வு பெற முடியும் என்ற உண்மை புலனாகும்.

ஊரில்லாத ஒரு இடத்திலே ஒரு லட்சியக் கிராமத்தைச் சிருஷ்டிப்பது என்றால், செலவுகள் அதிகமாக இருக்கலாம். ஆனால், ஏற்கனவே சிற்சில அம்சங்களில் காந்தீயத்தைப் பின்பற்றிப் புனருத்தாரணம் பெறுகின்ற கிராமங்கள் கொஞ்சங் கொஞ்சமாக சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவும், சுத்தமாகவும், சுகாதார முறைகளுடனும் வாழ முற்பட்டால், பாரத நாட்டிலுள்ள எல்லா கிராமங்களுமே காந்தி கிராமமாக மாறலாம். ஏன் முடியாது? என்றார் சித்தப்பா.

ஆருடம்! ஜாதக பலன்!!

ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர். சுமார் வயது. செய்யும் தொழில். கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர் காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ. 2.

ஒருவருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்ய யோகாம்சங்களும் சுருக்கமான பலனுடன் ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ. 10. கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி கவசம்" 1-க்கு ரூ. 7-0-0. பிரத்யேக ரக்ஷை ரூ. 100 வி. பி. செலவு தனி.

ஸ்ரீ கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist.
Triplicane : Madras-5

இவ்வாறு பிரதாபசீலன் அங்கே எல்லா அதிசயங்களையும் கண்டறிந்து பின், ஒரு நாள் ராக்ஷஸர்களும் ராக்ஷஸிகளும் கொஞ்ச தூரத்தில் வேறொரு மாளிகையிலே நடந்த ஒரு விருந்துக்குச் சென்றிருந்தனர். அப்பொழுது பிரதாபசீலன் நல்ல சமயம் கிடைத்ததென மகிழ்ந்து பறவைகளிருக்கும் மண்டபஞ் சென்று பறவைகளை ஒவ்வொன்றாய்ப் பிடித்து கொன்றுகொண்டே வந்தான். இவன் அவைகளைக் கொல்லக் கொல்ல அந்தந்தப் பறவைகளுக்குரிய ராக்ஷஸர்களும் ஒவ்வொருவராக உயிர் துறந்தனர். கடைசியில் அவன் ராக்ஷஸ ராணியின் உயிராகிய பெண் கோழியைக் கொல்லாமல் எடுத்துக்கொண்டதுமன்றி, வனஸ்பதி மரத்திலிருந்து ஒரு கிளையையும் பாடுந் தண்ணீரில் ஒரு புட்டியையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். புறப்படுகையில் அவனுக்கு யோகி எலும்புகளை யெடுத்து வரும்படி கூறியது நினைவுக்கு வந்தது. அதனால் அவன் மளமளவென்று அதை தேடிப் பார்த்துக் கண்டுபிடித்து அவ்வெலும்புகளையும் மூட்டையாகக் கட்டி யெடுத்துக்கொண்டு சிறிதும் தாமதியாமல் அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டுத் தன் குதிரை யிருக்குமிடம் வந்து அதன் மேல் ஏறிக்கொண்டுஆகாய வழியே சென்று யோகியின் குடிசையை அடைந்து, அவரை வணங்கி, அவரிடம் ராக்ஷஸ மாளிகையிலே நடந்தவைகளையெல்லாம் விவரமாய்க் கூறி "சுவாமி, தங்களுடைய ஆசீர்வாதத்தினால் வெற்றியுடன் திரும்பி வந்தேன். இதோ—எலும்புகள், இதோ வனஸ்பதி மரம்—இதோ பாடுந் தண்ணீர்—" எனக் கூறி அவைகளை அவர் முன் வைத்தான்.

யோகி, பிரதாபசீலனுடைய வீரச் செயல்களை எல்லாம் கேட்டுச் சந்தோஷமடைந்து—பாடுந் தண்ணீரில் கொஞ்சம் எடுத்து எலும்பு மூட்டையிலே தெளித்தார். தெளித்ததும் அவ்வெலும்புகளிலிருந்து ஆறு பொற் கொல்லர்கள் உயிர் பெற்றெழுந்தனர். யோகி அவர்களைக் கண்டு வியப்படைந்து 'நண்பர்களே வாருங்கள்! வாருங்கள்!! இதோ நானிருக்கிறேன்" என்றார்.

பொற் கொல்லர் அறுவரும் யோகியைத் தங்கள் நண்பனெனக் கண்டு ஆச்சரியப்பட்டனர். அந்த ஆச்சரியத்தில் வாய் பேசமுடியாமல் பிரமித்து நின்றார்கள். யோகியாகிய பொற் கொல்லன் அவர்களுக்கும் பிரதாபசீலனுக்கும்— தான் ராக்ஷஸ மாளிகையிலிருந்து தப்பியது முதல் நடந்தவைகளையெல்லாம் சொல்லிக் கொண்டே வந்து "உங்களுடைய க்ஷேமத்தையும், ராக்ஷஸர்களுடைய நாசத்தையும் கருதி இங்கே இருந்து இதுவரையில் தவம் புரிந்துகொண்டிருந்தேன்—" என்று கூறிப் பிரதாபசீலனைப்பற்றிய விசேஷங்களையும் பொற் கொல்லர்களுக்குத் தெரிவித்தான்; பின்பு பிரதாபசீலனைப் பார்த்து ராக்ஷஸ ராணியினுடைய சரித்திரமெல்லாம் விளங்க உரைத்து— "அப்பனே! நீ ராஜாவினுடைய பிள்ளை. நீயும் உன் அன்னையும் அடைந்த கஷ்டங்களுக்கெல்லாம் இந்த ராக்ஷஸ ராணிதான் காரணம்! இனி இவளுடைய காலம் சீக்கிரத்திலேயே முடியப்போகிறது. நாங்களெல்லோரும் உன்னுடன் வருகிறோம். வந்து அரசனிடம் இவற்றை யெல்லாம் வெளியிடுகிறோம்—புறப்படு—" என்றார்.

பிரதாபசீலன் கேட்டு மகிழ்வுற்று— "அப்படியே" என்று கூறி பெட்டைக் கோழி, வனஸ்பதி—பாடும்

தண்ணீர்—ஏழு பொற் கொல்லர் இவர்களுடன் அவ்விடமிருந்து புறப்பட்டுச் சென்று ஒரு பெரிய காட்டிற்குப் போய்ச் சேர்ந்தான். அந்தக் காட்டிலிருந்த சில மிருகக் குட்டிகளையும், பறவைகளையும் பிடித்துக்கொண்டு தன் குதிரை மேலேறிக்கொண்டு எல்லோரும்தன்னைத் தொடர்ந்து வரச் சென்று சில நாட்களுக்கப்பால் தன் பட்டணம் போய்ச் சேர்ந்தான்.

அங்கே அவர்கள் எல்லோரும் ஒருபக்கமிருந்து ஆலோசனை செய்து, தங்களை ஜால வித்தைக்காரர்களென சொல்லிக்கொண்டு அரசனைக் காண்பதெனும் தீர்மானஞ் செய்து கொண்டனர். ஆகவே- பிரதாபசீலன் ஜால வித்தைக் காரர்களுக்குத் தலைவனைப் போல் வேடம் பூண்டான். பொற்கொல்லர் அவனுடைய உதவி ஆட்களென வேஷம் பூண்டனர்.

பின்னர்- அங்கே ஒரு சோலையில் மிருகங்களின் குட்டிகளையும் பறவைக் குஞ்சுகளையும் மற்றும் தான் ராக்ஷஸ மாளிகையிலிருந்து தன்னுடன் கொண்டு வந்த பாடும் தண்ணீர்- வனஸ்பதி- விநோதக் குதிரை—ராக்ஷஸியான கோழி — இவைகளையும் ஒரு பொற் கொல்லனுடைய காவலில் வைத்து விட்டு- ஆறு பொற் கொல்லருடன் புறப்பட்டு அரண்மனையை அடைந்து தர்பாரில் பிரவேசித்து—அரசனைக் கண்டு வணங்கினான் பிரதாபசீலன்.

அரசன் அவர்களை வரவேற்று. யாரென விசாரிக்கையில்- "நாங்கள் ஜால வித்தைக்காரர்கள். பலவாருன ஜால வித்தைகள் காட்டுவோம். ராக்ஷஸர்களையெல்லாம் வெளிப்படுத்துவோம்- அவர்களையும் ஆட்டி வைப்போம்- இந்த சமூகத்தில் அந்த வித்தைகளையெல்லாம் காட்டி வெகுமதி பெறுவதற்காக வந்தோம்- அனுமதி தரவேண்டும்–" என்று வேண்டிக் கொண்டான் பிரதாபசீலன்.

அரசன் கேட்டு மகிழ்ந்து 'நல்லது—நாளையதினம்இங்கே நம் அரண்மனை வாயிலிலே நடத்தலாம்—அதற்கு வேண்டிய வசதிகளெல்லாம் மந்திரிகள் செய்வார்கள்" என்று கூறி வித்தைகளைக் காட்டுவதற்குரிய நேரத்தையும் தெரிவித்தனுப்பினான். பிறகு பிரதாபசீலன் அரசனை வணங்கி, வெளிப்பட்டு- தனியே மந்திரியைக் கண்டு தான் வித்தைகளைக் காட்டுவதற்கு வேண்டிய உபகரணங்களைப் பற்றியும் விவரமாய்த் தெரிவித்துத் திரும்பினான்.

மறுநாள் அரண்மனை வாயிலில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் நகரப் பிரமுகர்களும், குடிஜனங்களும் வந்து கூடி அவரவர்க்கேற்ற இடங்களில் அமர்ந்தனர். அப்பால் அரசன் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே- பிரதாபசீலன் தன் சகாக்களுடனும் ...ற்றும்- மிருகம்- பறவை முதலியவைகளுடனும்அங்கே வந்து- சேர்ந்து வித்தைகளைக் காட்ட ஆயத்தமானான். அதுகண்ட அரசன் தன் பரிஜனங்களுடன் அரண்மனையிலிருந்து வெளிப்பட்டு சபைக்கு வந்து சேர்ந்தான். எல்லோரும் அரசனைக் கரகோஷம் செய்து வரவேற்று வணக்கம் தெரிவித்துக் கொண்டனர். பின் அரசன் பெரு மகிழ்ச்சியுடன் தன் ஆசனத்தில் அமர்ந்தான். பரிஜனங்களும் தத்தம் ஆசனத்தமர்ந்தனர்.

அப்பால் பிரதாபசீலன் அரசனுடைய உத்தரவு பெற்று- பூர்வாங்கமாகச் செய்யவேண்டிய வாத்திய கோஷங்களை நடத்திய பின்- வித்தைகளை ஒவ்வொன்றாகக் காட்ட முன்வந்தான்.

முதலில்- மிருகக் குட்டிகளின் நடனம் நடந்தது. அப்பால்- வனஸ்பதி மரக் கிளையை அங்கோரிடத்தில் நட்டான். அது உடனே ஒரு பெரிய மரமாய் வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுத்தது. அப்பழங்களைப் பறித்து பிரதாபசீலன் எல்லோருக்கும் தந்தான். எல்லோரும் அந்தக் கனியை உண்டு அதிசயமடைந்தனர். அப்பால் அந்த மரம்- பலவகையான பணியாரங்களையும் கொடுத்தது. அவைகளையும் பிரதாபசீலன் அரசன் முதல், அங்கிருந்த யாவருக்கும் கொடுத்தான். எல்லோரும் அவைகளை உண்டு- "இதுவரையில் இத்தகைய சுவையுள்ள அதிசயமான பணியாரங்களை உண்டதேயில்லை" யெனக் கூறி வியந்தனர்.

இச்சமயத்தில் பிரதாபசீலன் அங்கிருந்த சிறு தடாகத்தில்-பாடுந் தண்ணீரைத் தெளித்தான்- உடனே அக்குளத்தில் பலர் இனிமையாகப் பாடுவது கேட்டது. எல்லோரும் கேட்டு மகிழ்ந்து- சபாஷ்- எனக் கொண்டாடினர்.

அப்பால் பிரதாபசீலன் சற்று முன்வந்து நின்று- "இதுதான் கடைசிக் காட்சி! இது என்றும் காணாத காட்சியாயிருக்கும்! எங்கும் இதுவரையில் நடைபெறாததாகவுமிருக்கும்- கவனியுங்கள்- என்று கூறிப் பறவைகளையெல்லாம் எடுத்துவிட்டு பலவிதமாய் நடனமிடும்படி செய்து,- முடிவில் ராக்ஷஸ ராணியின் உயிராகிய பெட்டைக் கோழியை எடுத்து விட்டு "எங்கே நடனம்-நடக்கட்டும்–" என்றான்.

அக்கோழி உடனே நடனமிட ஆரம்பித்தது. கோழி நடனமிட ஆரம்பித்த அந்த க்ஷணமே- எங்கிருந்து எப்படி வந்தாள் என்பது தெரியாமல் ராக்ஷஸ ராணி திடீரெனச் சபையில்பிரவேசித்து நடனமிடலாயினள். அரசனும், மற்றும் யாவரும் அதுகண்டு பரபரப்பும் பெருவியப்பும் கொண்டனர். பிரதாபசீலன் –"பொறுமை! பொறுமை–" எனக் கூறி எல்லோரையும் அமைதியுறச் செய்தான். அப்பொழுது அரசனும் தன் துடிதுடிப்பை யடக்கிக்கொண்டு பொறுமை வகிக்கலானான்.

இச்சமயத்தில்- பிரதாபசீலன்- கோழியைப் பிடித்து அதன் ஒரு காலை ஒடித்துக் கீழே விட்டான். அது ஒற்றைக் காலால் நடனமிட ஆரம்பித்தது. அந்த க்ஷணமே ராக்ஷஸ ராணியின் ஒரு காலும் முறிந்தது. அவளும் தன் ஒற்றைக் காலால் நடனமிடலானாள். பின் பிரதாபசீலன்- கோழியின் ஒரு பக்கத்துச் சிறகைப் பிய்த்தெறிந்து கீழே விட்டு- "நடனம் நடக்கட்டும்–" என்றான். கோழிநடனமிட்டது.உடனே ராணியின் ஒரு கை முறிந்து கீழே விழுந்தது. அவளும் அதைப் பொருட்படுத்தாமல் நடனம் செய்தாள்.

அப்பால் கடைசியில் பிரதாபசீலன் கோழியைப் பிடித்து அதன் கழுத்தை முறித்தெறிந்தான். அந்த நிமிஷமே ராணி பயங்கரமாய்க் கத்திக் கொண்டு- 'நாற்பது அடி

உயரமுடைய தன் ராக்ஷஸ உருவத்தில் தோற்றமளித்த வண்ணம் கீழே சாய்ந்து மரணமடைந்தாள்.

இதுகண்ட அங்கிருந்தோர் எல்லோரும் ஒரே கூச்சலில்– "ஆகா இவள் யார்? இது என்ன அதிசய உருவம்! இது என்ன?–" என்று கூறிப் பெரிய ஆரவாரம் செய்தனர்.

இச்சமயம் பிரதாபசீலன் முன்வந்து– எல்லோரையும் அமைதியுறச் செய்து– "இங்கே நீங்கள் பார்க்கும் இவள் ராக்ஷஸி. இவள்தான் மானிட உருவில் அரசனை மணந்து இந்த ராஜ்யத்தைப் பாழாக்கிய பாவி! இதோ வந்தேன்" என்று கூறிச் சபையை விட்டு எல்லோரும் அதிசயமடையும்படி மறைந்தான்.

இப்பொழுது ஏழு பொற்கொல்லரும் தங்கள் சுயரூபத்துடன் வெளிப்பட்டனர். அவர்களில் யோகியாயிருந்த பொற்கொல்லன்–தங்களுடைய கதை முழுவதையும் தெளிவாய்த் தெரிவித்தான். அது கேட்டு– "ஓ அத்தனைக் கொடிய ராக்ஷஸியா இப்போதிறந்தவள்! அந்தோ! அரசனைப் பாழாக்கினளே பாவி!" என்று கூறி வியப்புற்றனர். பின்னர் அப்பொற்கொல்லன் பிரதாபசீலனுடைய சரிதத்தையும் அவனுடைய வீர பராக்ரமச் செயல்களையும் கூறினான்.

இச்சமயத்தில் பிரதாபசீலன் அங்கே அச்சபையில் அரசகுமாரனுக்குரிய வீரக் கோலத்துடன் திடீரெனத் தோன்றி அரசனையும் சபையோரையும் வணங்கினான். அதே நேரத்தில் அங்கே அரசனுடைய அன்புக்கு பாத்திரமாயிருந்து– ராக்ஷஸியால் உணவாகக் கொள்ளப்பட்ட குதிரை–நாய்– இவைகளும் உயிர் பெற்று வந்து நின்றன.

ஆகா என்னென்று கூறுவது இந்த அதிசயத்தை! அதே சமயத்தில்– பிரதாபசீலனுடைய அன்னையும் சிறைச்சாலையிலிருந்து வெளிப்பட்டு அச்சபைக்கு வந்து சேர்ந்து அரசனைப் பணிந்தாள், அரசனும் அவன் பரிவாரங்களும்– நகர ஜனங்களும் அளவுகடந்த மகிழ்ச்சிக்குள்ளாகி பிரதாபசீலனை வாயாரப் புகழ்ந்தனர். அரசன் தன் மனைவியாகிய பிர

தாபசீலனுடைய அன்னையை கரம் பிடித்தேற்றுக்கொண்டு தன் மக்கள் புடைசூழச் சபைக்குக் காட்சி தந்து– கடவுளை வணங்கித் துதித்தான். சபை கலைந்தது.



ஒட்டகத்தினிடம் 12 முயல்கள் பாடம் கற்றுக்கொண்டன. ஒரு சமயம் ஒட்டகம் தன்னிடமுள்ள 12 முயல்களை நோக்கி, எப்படிப் பார்த்தாலும் வரிசையில் 4 பேர்கள் உட்கார்ந்திருக்க வேண்டும். அதுபோல உட்கார்ந்து காட்டுங்கள் என்றது. உங்களால் முடியுமா? பாருங்கள்:—

—விடை அடுத்த இதழில்

சாரணர் உலகம்

சித்ராக்கன்

முதற் சிகிச்சை

★

இதுவரையில் நம் அவயவத்தில் எந்தெந்த பாகம் எவ்வாறு என்ன அடையாளங்களுடன் ஒடியலாம், எந்த சந்தர்ப்பத்தில் ஒடியலாம், என்ன முதற் சிகிச்சை செய்யவேண்டும் என எழுதப்பட்டது. இதில் இன்னும் ஒன்றே ஒன்றுதான் பாக்கியிருக்கிறது. அதுதான் நம் பாதம்.

நம் பாதத்தின் முக்யத்வத்தை அதிகமாக விஸ்தரிக்க தேவையில்லை. நமது காலிலுள்ள எலும்பு ஒடிந்தாலே நிற்கவோ அல்லது நடக்கவோ சிரமப்படும். அவ்வாறிருக்கையில் பாதத்திலுள்ள எலும்பு ஒடிந்தால் எவ்வளவு கஷ்டத்தை உண்டாக்கும். நம்மால் நடக்கவும் நிற்கவும் மிகவும் சிரமப்படும்.

சாதாரணமாக இது எந்த சமயத்தில், எவ்வாறும் ஒடியலாம். இதை நொறுங்கின பாதம் எனச் சொல்வார்கள். இது எந்த சமயத்தில் எந்த் காரணத்தினுல் ஒடிகிறதோ அதே காரணத்தினுல் நொறுங்கின பாதம் எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. இது சாதாரணமாக பலமான வஸ்துக்கள் நம் பாதங்களின் மேல் விழுந்தால் ஒடியும். வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா? அதற்கென்ன குறைச்சல்? நாம் முன்னேற காரணங்களும் எண்ணிக்கையில் ஏறுகிறது. நவீன சாதனங்கள் மலிந்து கிடக்கும் இந்நாளில் விபத்துக்களுக்கென்ன குறைச்சல். ஏதாவது வாகனம் காலின் மேல் ஏறினுல் போதும், நம் பாதங்களிலுள்ள எலும்புகள் கட்டாயம் ஒடியும்.

இதை எப்படி கண்டுபிடிப்பது? ஏதாவது அடையாளம் உண்டா? எந்த எலும்பு ஒடிந்தாலும் அதற்குத் தனி அடையாளம் இருக்கிறதல்லவா? அதே போல் இதற்கும் உண்டு. அடிபட்ட பாதத்தில்வலி அதிகமாயிருக்கும். மேலும்அதை உபயோகிப்பதே மிகவும் சிரமமாயிருக்கும். அதுவும் தவிரவீக்கம் அதிகமிருக்கும். பொதுவாக பாதத்தில் மேற்சொன்ன அடையாளங்கள் இருந்தால் பாதம் நொறுங்கியிருப்பதாக அனுமானிக்க வேண்டும்.

இதில் இரண்டு விதமிருக்கிறது. ஒன்று எலும்பு ஒடிதலுடன் புண்ணுமிருத்தல். மற்றென்று புண்ணில்லாமல் இருத்தல். இதற்கு வெவ்வேறுசிகிச்சையிருக்கிறது. ஆதலால் முதலில் புண்ணிருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும்.

முதலில் புண்ணில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது என்ன முதற் சிகிச்சை செய்கிறது. இந்தச் சமயத்தில் காலிலிருக்கும் பூட்ஸை கழற்ற வேண்டாம். முதலில் நொறுங்கின பாதத்திற்கு ஐஸ் ஒத்தடம் கொடுக்கவேண்டும். ஐஸ் உடனே அகப்படாவிட்டால் குளிர்ந்த ஜலத்தில் துணியை நனைத்து அதனுல் ஒத்தடம் கொடுக்கலாம். இல்லாவிட்டால் இவ்வாறு நனைத்த துணியை அதன் மேல் கட்டலாம்.

இதன் பிறகு ஒரு பாண்டேஜ் கட்ட வேண்டும். இதை எவ்வாறு கட்டுவது. பாதத்தின் பரிமாணத்திற்கு தகுந்தவாறு அகல கட்டோ குறுகக் கட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மத்திய பாகத்தை பாதத்திற்கடியில் வைத்து பாதத்தின் மேல் ஒரு சுற்று சுற்ற வேண்டும். இதன் பிறகு பிகர் ஆப் எய்ட் பான்டேஜில் செய்வது போல் கணுக்காலின் பின்னுல் இரு துனிகளையும் எடுத்துச் சென்று பிறகு முன்னுல் கட்டி விடவேண்டும். இதை நன்கு புரிந்துகொள்ள பின் படத்தைப் பாருங்கள்.



படம் .1.

நொறுங்கலுடன் புண்ணும் சம்பந்தப்பட்டால் வேறுவித சிகிச்சையிருக்கிறதல்லவா? அது என்ன? இதில் முக்கியமாக காலிலிருக்கும் பூட்ஸை கழற்ற வேண்டும். இது மிகவும்முக்கியம். இதன் பிறகு புண்ணுக்கு மருந்துபோட வேண்டும். இதன் பிறகு மிருதுவான வஸ்துக்களை காலைச் சுற்றி வைக்க வேண்டும். இதன் பிறகு தான் பாண்டேஜ் போட வேண்டும். இங்கும் அகல அல்லது குறுகலான கட்டை உபயோகிப்பது பாதத்தின் பரிமாணத்தைப் பொறுத்திருக்கிறது. புண்ணில்லாவிட்டால் எப்படி பாண்டேஜ் போடுகிறுேமோ அவ்வாறுதான் இப்பொழுதும் போட வேண்டும்.

ஆனுல் ஒரு வித்தியாசம். பாதத்தில் கட்டை ஒரு சுற்று சுற்றுவதற்கு பதிலாக கணுக்காலில் சுற்றவேண்டும்.

படம்.2.

இவ்வாறு அடிபட்டவர்களை ஸ்ட்ரெச்சரில்தான் தூக்கிச் செல்ல வேண்டு மென்பதில்லை. அவர்களை உட்கார வைத்தும் தூக்கிச் செல்லலாம். எவ்வாறு தூக்கிச் செல்வது என்பது சமயத்தைப் பொறுத்திருக்கிறது.

ஹிந்தி உலகம் - हिन्दी जगत -

-பண்டிட்ஜி-

जनता की सेवा

★

भारतीय राष्ट्रीय कांग्रेस के कल्याणी अधिवेशन के अध्यक्षासन से भापण देते हुए पंडित जवाहरलाल नेहरू ने कांग्रेस की तरफ़ से चुनाव लड़ने की आवश्यकता बतलायी और आलोचना का स्वागत किया। उन्होंने कहा:—

"कांग्रेस का काम चुनवा लड़ना भी अवश्य है। वह अपने इस रूप में जरूर कार्य करती रहेगी। मगर उसका यही एकमात्र तथा सबसे अधिक महत्वपूर्ण कार्य नहीं है। यह गर्व और गौरव का विपय है कि स्वतंत्रता प्राप्त करनेवाले शक्तिशाली राष्ट्रीय आंदोलन के हम सब सैनिक हैं। हम कांग्रेस को अब केवल चुनवाव लड़नेवाली संस्था बनने नहीं दे सकते। जनता की सेवा करना कांग्रेस के लिए अत्यंत आवश्यक है। केवल चुनाव के समय ही इसमें सरगर्मी न रहे, बल्कि जन-सेवा के लिए वह अन्य अवसरों की भी ताक में रहे। लोकसभा, राज्य विधानमंडलों, स्वायत्त संस्थाओं तथा पंचायतों के कार्य में भी वह प्रवेश करे। इसे स्थानीय शासन में हस्तक्षेप या सरकार के काम में दख़ल देने का अर्थ नहीं लगाना चाहिए। हमारी संस्था केवल एक दल मात्र न होनी चाहिए, बल्कि इसकी हैसियत कुछ अधिक होनी चाहिए। यह अपनी निःस्वार्थ सेवा से जनता का विश्वास और आदर प्राप्त करे और इस प्रकार जनता के दिलों में अपनी जगह बनावे।

"हम आलोचना ही नहीं, विरोध भी पसंद करते हैं, क्योंकि वही लोकतंत्र का मूलमंत्र है। किन्तु खेद का विपय है कि हमारे विरुद्ध अधिकांश आलोचनाएँ अव्यावहारिक तथा वास्तविकता से दूर होती हैं; और वर्तमान समस्याओं से उनका कोई संबंध नहीं होता है। बारबार वे ही बातें बेमतलब दोहरायी जाती हैं। हमसे सभी बड़े उद्योग-धंधों का राष्ट्रीयकरण करने के लिए कहा जाता है, जैसे इस कार्य से समस्या तुरंत हल हो जाएगी। राष्ट्रमंडल त्यागने से क्या लाभ होगा, यह बिना बताये हमें उससे संबंध-विच्छेद करने के लिए कहा जाता है। जहाँ तक मेरा संबंध है, मेरा यह पक्का विश्वास है कि राष्ट्रमंडल में रहना उचित ही है। हमारे दृष्टिकोण तथा विश्व की समस्याओं की दृष्टि से राष्ट्रमंडल से संबंध बनाये रखना उचित है।

"यह संस्था ऐसी है जिसमें बहुत स्वल्प शक्ति का लगाव या हस्तक्षेप है। हम केवल इसीका स्वागत नहीं करेंगे, बल्कि दूसरे अन्य देशों से भी संबंध स्थापित करेंगे। वास्तविकता तो यह है कि बिना किसी प्रकार बंधनबद्ध हुए संयुक्त राष्ट्र संघ में हम एशियाई-अफ्रीकी गुट में शामिल हैं और यह पारस्परिक दृष्टि से लाभप्रद है। कुछ पड़ोसी देशों से हमारा घनिष्ठ संबध है।

"जहाँ तक राष्ट्रीयकरण का प्रश्न है, हममें से अधिकांश समजवाद का व्यापक सिद्धांत मानते हैं। जहाँ राष्ट्रीयकरण उपयोगी है, वहाँ हम इससे नहीं हिचकते। बहुत-कारखाने हमने राज्य की ओर से खड़ा किया है; और उनकी संख्या बढ़ ही रही है। हम अपने स्वल्प साधनों को प्राप्त करने में क्यों व्यय करें, जब कि हम नये उद्योग खड़ा करना चाहते हैं। प्रत्येक प्रश्न का सही मूल्यांकन होना चाहिए।

"हमें यह याद रखना चाहिए कि किसी देश की उलझी हुई समस्याएँ

किसी और देश का अंधानुकरण करने से हल नहीं होतीं। अमेरिका का व्यापक रूप से उद्योगीकरण हो चुका है। यह बहुत ही बड़ा औद्योगिक देश है। क्या हम अपनी अविकसित आर्थिक व्यवस्था में उसके तौर-तरीकों और टेकनिक को अपनाएँ या व्यावहारिकता का बिना विचार किये यहाँ सरूके तौर-तरीकों को अपनाएँ? हमें घनी आबादी, अविकसित देश की, जो स्वयं लोकतांत्रिक एवं शांतिमय ढंग से आगे बढ़ रहा है, समस्याओं का सामना करना पड़ेगा। किसी भी हालत में हम हिंसा या कोई भी अन्य रास्ता, जिसे हम गलत समझते हैं, अपनाने के लिए तैयार नहीं हैं। यह हमारे सिद्धांत का प्रश्न नहीं, बल्कि यही आज व्यावहारिक राजनीति है, क्योंकि हिंसा से संघर्ष और द्वेष पैदा होगा और वह सारी प्रगति को समाप्त कर देगा"

चुनाव (ஆ. பா.) தேர்தல்

चुनाव लड़ना தேர்தலில் போட்டியிடுதல்

आलोचना (பெ. பா.) விமர்சனம்

संस्था (பெ. பா.) ஸ்தாபனம்

सरगर्मी (பெ. பா.) ஊக்கம், பரபரப்பு

ताक (பெ. பா.) எதிர்நோக்கு

स्वायत्त संस्था (பெ. பா.) ஸ்தலஸ்தா[பனம்]

हैसियत (பெ. பா.) முறை, அந்தஸ்து, ஹோதா

निःस्वार्थ தன்னலமற்ற

खेद (ஆ. பா.) வருத்தம்

अव्यावहारिक காரிய சாத்தியமற்ற

बेमतलब அர்த்தமில்லாமல்

दोहराना திருப்பிச் சொல்லுதல்

विच्छेद (ஆ. பா.) துண்டிப்பு

दखल—हस्तक्षेप (ஆ. பா.) தலையிடு[குறுக்கிடு]

उलझी हुई சிக்கலான

अंधानुकरण (ஆ. பா.) குருட்டுத்தனமாய்ப் பின்பற்றுதல்

तौर-तरीका (ஆ. பா.) வழிமுறை

जय हिन्द! जय हिन्दी!



இலங்கைக்கு விஜயம்செய்து பல இடங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்து சொற்பொழிவுகள் நிகழ்த்தும் ஐ. நா. சபைத் தலைவி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் கவியரசர் தாகூரினால் அஸ்திவாரக்கல் நாட்டப்பட்ட ஸ்ரீ பாலிவித்தியாலயத்துக்குச் சென்று பல்லாயிரக்கணக்கான மாணவிகளின் கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றினர்.

பிரிவு

ஸி. ஆர். ராஜம்மா

★

டாக்டருக்கு டெலிபோன் பண்ணி அவரை வரவழைப்பதின் மூலம் தன் கடமை தீர்ந்துவிட்டது என்று எண்ணினாள் போலும் சமந்தகமணி. இது தெரியாத்தனமாகச் செய்வதா? அல்லது அவள் வேண்டுமென்றே இப்படி நடந்துகொள்கிறாளா? இதை நினைத்து, நினைத்துப் பொருமினான் ராகவன்.

ராகவன் சமந்தக மணியைக் கல்யாணம் செய்துகொண்ட போது அடைந்த பெருமை கொஞ்சநஞ்சமல்ல. இப்படிப்பட்ட ஒரு அதிர்ஷ்டம் தன்னைப் போன்றவர்களுக்கு கிடைப்பது அரிது என்றே எண்ணினான். படித்த பெண்களுக்குரிய கூனல் முதுகும், ஒட்டிய உடலுமாக இருக்கவில்லை அவள். வாட்டசாட்டமாக வளர்ந்திருந்தாள். சற்றே நீண்ட முகத்தில் நீள நயனங்கள் தனி பாஷை பேசுபவையாக அமைந்திருந்தன. மழை காலத்துப் புஷ்பச் செடி போல செழுமையாக வளர்ந்திருந்த அவளைக் கண்டு பூரித்துப் போனான் ராகவன். சமந்தக மணியின் அழகு யாருடைய உள்ளத்தையுமே சுவீகரித்துக் கொள்ளக்கூடியதுதானே.

ராகவன் உயர் குடும்பத்துப் பிள்ளை. வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து இரண்டு வருஷமே படித்தான். அப்பொழுது அவன் கட்டிய மனக்கோட்டைகள் அனந்தம். தான் ஒரு ஸர்ஜனாக வாழ்வதுபோலவே அவன் கனவுகள் கண்டிருக்கிறான். ஆனால் அவனுடைய கனவுகளெல்லாம் கனவுகளாகவே ஆகிவிட்டன. மூன்றாவது வருஷ ஆரம்பத்தில் ராகவனுடைய தகப்பனார் யாரும் எதிர்பாராத வண்ணம் திடீரென்று காலமானார். அவர் உயர்ந்த உத்தியோகமொன்றில் இருந்தார். தன் அந்தஸ்துக்கு அதிகமாகவே செலவும் செய்தார். இறந்து போகும்போது பெரிய ஆஸ்தி ஒன்றும் வைத்துவிட்டுப் போகவில்லை. அதனால் ராகவனுடைய படிப்பு மேலும் வளராமல் நின்றுவிட்டது. தகப்பனார் வைத்துவிட்டுப் போன கொஞ்சம் ஆஸ்தியை வைத்துக்கொண்டு பிள்ளையும், தாயாருமாக சிறிது நாள் காலம் கழித்தார்கள். ராகவன் வேலைக்காக முயன்றுகொண்டிருந்தான். சாதாரணமான ஒரு சிறிய குமாஸ்தாவான வேலை ஏதாவது கிடைத்தால்கூடஅவன் போகத் தயார். ஆனால் அதுவும் சீக்கிரத்தில் கிடைப்பதாக இல்லை.

கல்யாணத் தரகர் மூலம் சமந்தகமணியும், ராகவனும் ஒருவரைப்பற்றி மற்றவர்கள் தெரிந்துகொண்டார்கள். சமந்தக மணியையும், தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்த ராகவன் திகைப்படைந்து போனான். தன்னுடைய அதிர்ஷ்டத்தை எண்ணியும் வியந்தான். ராகவனுடைய தாயாரைப்பற்றியோ சொல்லத்தேவையில்லை. சமந்தகமணிக்கு எதில் குறைவு. படிப்பு, பணம், அழகு, அந்தஸ்து எல்லாவற்றிலுமே அவளுக்கு நிகர் அவள்தான். அப்படிப்பட்டவளுக்கு கணவன் கிடைப்பதுதானா கஷ்டம். இப்படியெல்லாம் தான் எண்ணமிட்டனர் ராகவனும் அவனுடைய தாயாரும். அந்த இடம் தங்களுக்குக் குதிரவேண்டுமே என்றும் கவலை கொண்டனர்.

கிட்டிமுட்டிப்போய் கல்யாணம் நிச்சயமாகும் என்ற நிலைமை ஏற்பட்டபோதுதான் உள் விஷயம் என்னவென்று தெளிவாயிற்று ராகவனுக்கும், அவனுடைய தாயாருக்கும். சமந்தகமணியினுடைய தமக்கை ஒருத்தி நல்ல படிப்பாளி மேல்நாடுகளுக்கெல்லாம் சென்று வந்தவள். அவள் மேல்நாட்டான் ஒருவனிடம் தன் மனதைப் பறிகொடுத்து தகப்பனார் என்ன சொல்லியும் கேளாமல் அவனையே கல்யாணம் செய்துகொண்டாள். ஜாதி வித்தியாசத்தை அதிகம் பாராட்டக்கூடியவரல்ல சமந்தகமணியின் தகப்பனார். இருந்தாலும் அன்னிய நாட்டினன் ஒருவனை தன் மகள் மணம் செய்துகொள்ள விரும்பவில்லை அவர். மூத்த மகள் விஷயத்தில் மனமுடைந்து போன அவர் சமந்தகமணியைத் தன்னுடைய லட்சியப் பெண்ணாக வளர்த்தார். படிப்பும், உத்தியோகமும் அவளுக்களித்தார். தான் சொல்லும் வார்த்தை ஒன்றுக்குக்கூட அவள் தட்டி நடக்காதபடி அவளை அன்பினால் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். சம்பிரதாயப்படி சமந்தக மணியைக் கல்யாணம் செய்து கொடுக்கவும் முயன்று வந்தார். ஆனால் சம்பிரதாயப்படி நடக்கும் எந்தப் பிள்ளை வீட்டாரும் அவருடைய மூத்த மகளின் செய்தியைக் கேட்டு சமந்தக மணியை ஏற்றுக்கொள்ளத் துணியவில்லை.

இவைகளை எல்லாம் அறிந்த போது ராகவனுடைய தாயாருக்குக்கூட இந்த சம்பந்தம் நல்லதுதானா என்றே தோன்றியது. ஆனால் ராகவன்தான் பிடிவாதமாக இருந்தான். கடல் சிப்பிகள் எல்லாமே வெறும் சிப்பிகளாக இருப்பதில்லை. சிலவற்றில் உயர்ந்த நல்முத்துக்கள் இருக்கின்றன. சமந்தகமணி நல்முத்தைப் போன்றவள். இப்படி ஏதாவது ஒரு குறை அவளுடைய குடும்பத்தில் தோன்றாதிருந்தால் தனக்கு ஏன் அவள் மனைவியாக வாய்க்கப்போகிறாள் என்றுதான்அவன் எண்ணினான். அரைகுறையாக விட்ட தன்னுடைய வைத்தியப் படிப்பை மேல்கொண்டும் தொடரலாமல்லவா? இந்த ஆசையும் அவன் மனதினூடே முளையிட்டது. கடைசியில் கல்யாணம் நடந்தேறியது. சமந்தகமணி ராகவனைச் சரியாகப் பார்க்கக்கூட இல்லை. படித்த பெண் என்பதற்காக இரண்டு வார்த்தை அவனுடன் பேசவில்லை. எல்லாம் அவளுடையதகப்பனாரே இருந்து

பழைய காலத்து முறைப்படி நடத்தி வைத்தபோது ராகவன் ஆச்சரியமடைந்து போனான்.

கல்யாணமான சில நாட்களிலேயே ராகவனுக்கு தன்னுடைய வாழ்க்கையில் அலுப்புத் தட்டத் தொடங்கிவிட்டது. மாமனாருடைய பங்களாவில்தான் அவனும் அவனுடைய தாயாரும் வசித்தார்கள். வெளியே போய் வரக் கார். இட்ட வேலையைச் செய்ய வீடு நிரம்ப வேலைக்காரர்கள். பெரிய பெரிய பீரோக்களில் அடுக்கடுக்கான ஆடைகள். என்ன இருந்தென்ன. அவனுடைய மனதில் மட்டும் நிறைவே இல்லை. ஏன். சமந்தகமணி தன்னை அலட்சியம் செய்வதாக ஒரு எண்ணம் தோன்றி வளர்ந்துகொண்டே வந்தது அவனுடைய உள்ளத்தில். தான் அவளுடைய அந்தஸ்துக்குத் தகுதியான கணவனல்ல. தன்னிடம் அவள் காதல் கொள்ளவில்லை. தன் தகப்பனாருடைய மகிழ்வுக்காக வேண்டியும், தன்னுடைய கடமைக்காக வேண்டியும் மனதில் தோன்றிய வெறுப்பை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஏதோ இயந்திரம்போல அவள் வாழ்ந்து வருவதாக முடிவு கட்டினான் ராகவன்.

காதலுக்காக வேண்டி தன்னுடைய சுயகௌரவம், சொந்தக்காரர்கள். தான் பிறந்த தாய்நாடு எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டுச் சென்றவளின் தங்கையா இவள் என்று எண்ணியபோது ராகவனுக்குச் சமந்தகமணியின்மேல் கோபம் கோபமாக வந்தது. அவள் தன்னுடைய வெறுப்பை வெளிப்படையாய்க் காண்பித்துக்கொண்டாலாவது அவன் அதைப்பற்றிக் கேட்டு ஒரு முடிவுக்கு வந்திருப்பான். அவள் அப்படியும் நடந்துகொள்ளவில்லை. அவனுக்குச் செய்யவேண்டிய வேலைகளில் ஒன்றுகூடக் குறைவில்லாமல் செய்தாள். ஆனால் அவைகள் அன்புடன் செய்யப்படுவதாக அவனுக்குத் தோன்றவில்லை. சமந்தகமணியிடம் பேசக் கிடைக்கும் சந்தர்ப்பமே மிகக் குறைவு. அப்படிக் கிடைத்த மிக அரிய சமயத்தில் ராகவன் நான்கு வார்த்தைகள் பேசினால் அவள் ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டுப் போய்விடுவாள். கோர்ட்டுக்குப் போகவேண்டிய நேரம் போக மீதி நேரம் கக்ஷிக்காரர்களுடன் பேசுவதிலும், பெரிய பெரிய பயில்களைப் பிரித்துப் படிப்பதிலும் செலவாகிவிடும். இம்மாதிரி இரவு வெகுநேரம்வரை அவள் தூங்காமல் பெரிய பெரிய சட்ட புஸ்தகங்களுக்கு நடுவில் திணறுவதை ராகவன் பார்த்துப் பரிதாபப் பட்டிருக்கிறான். தன் மனைவியின் பெயர் பிராபல்யமடைவதைக் கண்டு அவன் முதலில் பெருமை கொண்டான். இப்பொழுது வெறுப்புக் கொண்டான். இப்படி கஷ்டப்பட்டு அவள் சம்பாதித்து என்ன ஆக வேண்டும். யாருக்குச் சேர்த்து வைக்கவேண்டும். இருப்பதை வைத்துக்கொண்டு மன சந்தோஷத்தோடுவாழ்ந்தால் போதாதா? இது ஏன் தந்தைக்கும் மகளுக்கும் தெரியவில்லை என்று அவர்களை நொந்து கொண்ட அவன் தன்னையும் நொந்துகொண்டான். கஷ்டப்பட்டு ஏதோ ஒரு குமாஸ்தா உத்தியோகத்தில் அமர்ந்து தன் அந்தஸ்துக்குத் தகுந்த பெண்ணாக மணந்து கொள்ளாமல் போனேனே. அதிக ஆசை அதிக நஷ்டம் என்பதுபோல் என் வாழ்வைப் பாழடித்துக்கொண்டேனே என்று உள்ளுக்குள்ளேயே முணுகினான் ராகவன். அவள் மனதைத் தன்பால் திருப்ப அவன் எடுத்துக் கொண்ட பிரயாசைகளெல்லாம் வீணாயின.

அன்று சாயங்காலம் ராகவன் அழகாக உடை உடுத்திக் கொண்டு அவளுடைய அறைக்குப் போனான். வெளியிலிருந்து வந்த அவள் அப்பொழுதுதான் தன்னுடைய கோட்டைக் கழற்றிக் கொண்டிருந்தாள். 'ரொம்பவும் களைப்பாக இருக்கிறாய் போலிருக்கிறதே சமந்தகா' என்றான் மெல்லிய புன்னகையுடன் இனிமையாக. அவள் அவன் முகத்தை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் 'உம்,' என்றாள். 'கொஞ்சம் தமாஷாக களைப்பாறிவிட்டு வரலாம்வா' என்றான், நாற்காலியின் கால் ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்துகொண்ட அவன். 'நாளைக்கு ஒரு முக்கியமான கேஸ் இருக்கிறது. எனக்கு வெளியில் வரமுடியும் என்று தோன்றவில்லை' என்று அவனை நிமிர்ந்து பார்க்காமலேயே கூறிய சமந்தகமணி தன்னுடைய நாற்காலியில் உட்கார்ந்து எதையோ ஆழ்ந்து படிக்கத் தொடங்கிவிட்டாள். சிறிது நேரம் அங்கேயே அவளைப் பார்த்தவண்ணமே உட்கார்ந்திருந்த ராகவன், 'நல்ல பாம்பு நிரம்ப அழகாகத்தான் இருக்கிறது. ஆனால் கொடிய நஞ்சுடையதல்லவா இருக்கிறது' என்று முணுமுணுத்த வண்ணம் வெளியே வந்தான். அது அவள் காதில் விழுந்திருக்கவேண்டும். ஆனால் அதை கவனித்ததாகவே காண்பித்துக்கொள்ளவில்லை.

வேறொரு நாள் ராகவனுக்கு உடம்பு சரியில்லாமல் இருந்தது. அது ஒன்றும் அவ்வளவு பிரமாதமாக இல்லாவிட்டாலும் ராகவன் படுக்கையில்தான் படுத்திருந்தான். மனம்தான் தெம்பிழந்து போயிருந்ததே. சமந்தகமணி வந்து அவன் நெற்றியைத் தொட்டுப்பார்த்தாள். உன்னுடைய அந்த மிருதுவான கைகளை அப்படியே வைத்துக் கொண்டிரு சமந்தகா என்று கதறவேண்டும்போல இருந்தது ராகவனுக்கு. ஆனால் அவனுடைய நாக்கு எழும்பவில்லை. பெரும்பாலும்தான் அவள் தான் சொல்வது ஒன்றையுமே கேட்பதில்லை, இதை மட்டுமா கேட்டுவிடப் போகிறாள் என்று பேசாதிருந்தான். சமந்தகமணி டாக்டருக்கு டெலிபோன் செய்தாள். அப்பொழுதுதான் மனைவி என்ற உன்னுடைய கடமை இதனால் தீர்ந்துவிட்டதா? என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டான் ராகவன்.

எப்படியோ வருஷங்கள் நான்கு ஓடி மறைந்துவிட்டன. எவ்வளவோ மனசஞ்சலத்துக்கிடையே ராகவன் தன் வைத்தியப் படிப்பை ஒரு மாதிரியாக முடித்துக்கொண்டான். அவன் எப்படிப் படித்து பரீக்ஷை தேறினான் என்பது ஆச்சரியம்தான். சமந்தகமணிக்கு தொந்தரவு கொடுக்காமல், தான் பட்டம் பெற்று அவள் இஷ்டப்பட்டால் தனியாகவே பிரிந்துபோய்விடலாம். இப்படி இரண்டு பேரும் ஒன்றாக உலகத்தாரை ஒப்பிக்க வேண்டி இருப்பதில் என்ன பிரயோஜனம். தனக்கும் இன்பமில்லை. அவளுக்கும் துன்பம்தான். இரண்டு பேரும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் இருவர் மனமும் வெகு தூரத்துக்கு வெகுதூரம் போய்விட்டது. போய்க்கொண்டும் இருக்கிறது. இந்த ஒரு எண்ணத்துடனேயே வெகு சிரமப்பட்டு படித்துப் பட்டமும் பெற்றான் ராகவன்.

ராகவனுடைய நண்பனொருவன் ராகவனின் வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருந்தான். போகும்போது ராகவனையும் தன்னுடன் வரும்படி அழைத்தான். ராகவன் மறுக்கவில்லை. அந்த இடத்தைவிட்டுக் கொஞ்ச நாள் வேறெங்காவது போயிருந்தாலாவது சிறிது மனநிம்மதி ஏற்படாதா? என்ற எண்ணத்துடன் உடனேயே புறப்பட்டுவிட்டான். 'சமந்தகா, நான் போய் வருகிறேன்' என்று சொன்ன அவனை ஆச்சரியத்தோடு நிமிர்ந்து நோக்கினாள் அவள். எங்கேபோகிறீர்கள். எப்பொழுது வருவீர்கள். நானும் வருவேன் என்றெல்லாம் கொஞ்சு மொழி பேசவேண்டும் அவள் தன்னிடம் என்ற அடங்காத ஆர்வத்தோடு சிறிது நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தான் ராகவன். ஆனால் சிலைபோல பேசாப் பதுமையாக வீற்றிருந்தாளவள்.

ஒன்று, இரண்டு, மூன்று என்று நாட்கள் நகர்ந்தன. ஒருவாரம் சென்றது. ராகவன் ஊரிலிருந்து திரும்பி வந்துவிட்டான். இன்னும் சிலநாள் அங்கேயே அவன் தங்கியிருக்கலாம். ஆனால் ஏனோ அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. தன்னை அலக்ஷியம் செய்யும், கர்வமே உருவமான சமந்தகமணியைப் பார்க்காமல் அவனால் இருக்கமுடியவில்லையா. இது என்ன மாயம். அவளிடம் ஏதாவது அபூர்வசக்தி இருக்கிறதா? அவனை அங்கே அன்புடன் வரவேற்க யார் இருக்கிறார்கள்.

சமந்தகமணியை அவளுடைய அறையில் காணவில்லை. புஸ்தகங்கள்தான் குவியல் குவியலாக ஏதோ ஒரு ஏக்கத்தை அவனுக்கு எடுத்துக் கூறியது. அவன் குளிக்கச் சென்றபோது தாயார் சொன்னாள், 'சமந்தகாவுக்கு உடம்புக்கு என்னமோ தெரியவில்லை. வெளியேபோய் நான்கு நாட்கள் ஆகிறது. மாடியில் தன்னுடைய அறையில் இருக்கிறாள்' என்றாள். தடதடவென்று மாடிக்கு அவளுடைய அறைக்குச் சென்று கதவைப் பட்டெனத் திறந்தான் ராகவன். சமந்தகமணி மேஜையில் குப்புறப்படுத்து விம்மிக் கொண்டிருந்தாள். அவனுடைய போட்டோவை அவளுடைய கைகள் அணைத்துக் கொண்டிருந்தன. பிரமையினால் ஒருகணம் பேசமுடியாமல் தவித்தான் ராகவன்.

கதவு திறந்த சப்தம் கேட்டு சட்டென எழுந்த சமந்தகமணி, வெட்கத்தினால் முகம் சிவக்க, தன்னை சமாளித்துக்கொள்ள பாடுபட்டாள். ராகவன் அவளருகில் போய், 'என்ன சமந்தகா, உனக்கு என்ன உடம்பு. ஏன் இப்படி இருக்கிறாய்' என்றான் படபடப்போடு. அவள் உடம்பில் எந்தவித ஆபரணமும் இல்லை. தலைமயிர் அவிழ்ந்து சுருள் சுருளாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அவள் அப்படியிருந்து ஒருபொழுதும் அவன் கண்டதில்லை. 'டாக்டரான உங்களுக்கு என் உள்ள நோயைப்பற்றி தெரி

3

தையற் பொறியைக் கண்டுபிடித்த தைமோனியரிடமிருந்து, தையற் பொறியை அதிகமாக உற்பத்தி செய்யும் உரிமையை 1846–ம் ஆண்டில் கேம்பிரிட்சை சேர்ந்த "எலியஸ் ஹொவி" என்பவர் பெற்றுக்கொண்டார். எலியஸ் ஹொவி என்பவர் மேலும் சில மாறுதல்களுடன் கூர்மையான மெல்லியஊசியையும், புதுமாதிரியான 'ஷட்டிலேயும்' கண்டுபிடித்து, அதைப்போல் வேறு யாரும் செய்யக்கூடாது என்ற எண்ணத்துடன் பதிவு(பேட்டன்ட்)செய்துவிட்டார். அதன் பிறகு 1851–ல் சிங்கரும் அவர் பங்குதாரரும் தங்கள் தையற் பொறியை பதிவு செய்ய முயன்றார்கள். அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. எலியஸ் ஹொவி நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நீதி மன்றம் ஏறி இறங்கியதால் 'எலியஸ் ஹொவியின்' 'ஷட்டில்' இல்லாமல் சிங்கர் தையல் மெஷின்களை செய்யக்கூடாது என்று நீதி மன்றம் தீர்ப்பு கூறிவிட்டது. பிறகு இதன் காரணமாக பலவிதமான சர்ச்சைகள் எழுந்தன. இந்த சர்ச்சைகளுக்கு அக்காலத்து பத்திரிகை ஆசிரியர்கள் தையற் பொறி போர் (சூயிங்

தையல் கலை

ஏ. சுகுமார், டி. எம். டி. சி ஏ. லண்டன்

★

சிங்கரும் எலியஸ் ஹோவியும்

மெஷின் வார்) என்று மகுடமிட்டு சிண்டை முடிந்துவிட்டனர்.

நியூயார்க் வழக்கறிஞரான "எட்வார்ட் கிளார்க்" என்பவரின் உதவியை சிங்கர் நாடினர். எட்வார்ட் வேண்டிய உதவி செய்வதாக வாக்களித்தார். சிங்கருக்கு முன்பு 40 டாலர் கடன் உதவியவர் உடல் நலம் குன்றியதன் காரணத்தால் தன்னுடைய பங்கை 6000 டாலருக்கு வழக்கறிஞரான எட்வார்ட் கிளார்க்குக்கும், பங்குதாரரான சிங்கருக்கும் விற்று விட்டார். 1851–ல் இவர்களிருவரும் சரி பாகஸ்தர்கள் ஆனார்கள். பொருளாதாரத்தையும், வியாபாரத்தையும் மற்ற முக்கிய விஷயங்களையும் எட்வார்ட் கிளார்க் கவனிக்க, சிங்கர் தையற் பொறி உற்பத்தி நிர்வாகத்தையும் கவனித்து வந்தார். ஒருவிதமாக முன் குறிப்பிட்ட "தையற் பொறி போர்" வெற்றிகரமாக முடிந்தது.

தொழிற்சாலையை நிர்வகிக்கும் திறமைசாலியான சிங்கர் ஒரு ஏழை ஜெர்மன் தேசத்தவரின் மகன், சிறிதளவு கல்வி பயின்றிருந்தார். பட்டங்கள் பல பெற்றவரல்ல. அவர் தனது 12–ம் வயதிலேயே வீட்டை விட்டு வெளியேறினர். பிறகு வெற்றி காணாத விவசாயியாகவும் இயந்திரங்கள் பழுது பார்க்குமிடத்தில் வேலை செய்தும் இன்றைய உலகம் போற்றும் ஷேக்ஸ்பியர் நாடக மன்றத்தில் ஒரு உப நடிகராகவும் தனது வாழ்நாட்களை எண்ணிக்கொண்டிருந்தவர். அவர் எப்பொழுதுமே வீண் பொழுது போக்குவதில்லை. கற்களை துளைக்கக்கூடிய இயந்திரங்களையும், மரக்கட்டைகளை செப்பனிடக்கூடிய சில பொறிகளையும் கண்டுபிடித்தார். இன்று உலகு எங்கும் பரவியிருக்கும் சிங்கர் தையல் மெஷின்களின் புகழுக்கு உரியவராக இருக்கிறார். ஆனால் அவர் 1875–ம் ஆண்டில் இங்கிலாந்து தேசத்தில் காலமானர். அவருக்குப் பிறகு 7 வருஷ காலம்தான் சிங்கரின் பங்குதாரரான எட்வர்ட் கிளார்க்கு உயிருடன் இருந்தார். இன்றும் அவர்களுடைய புகழ் மறையாமலும் சிங்கர் மெஷின்களின் தரம் குறையாமலும் இருந்து வருகிறது.

"சிங்கர் தையற் பொறியின் மறுமலர்ச்சி"

முதன் முதல் 1851–ம் ஆண்டில்வெளி வந்த சிங்கர் மெஷினின் "ஸ்டான்ட்" இப்பொழுது இருப்பதைப்போல் அல்லாமல் முழுதும் மரத்தாலேயே ஒரு பெட்டியைப்போன்ற உருவத்தில் உண்டாக்கப்பட்டது. நாளுக்கு நாள் நாகரீகம் வளர்ச்சியடைவதுபோலவே அதனுடைய நாகரீகமும் மாறிக்கொண்டே வந்துவிட்டது. இந்த மெஷினில் நிமிஷத்திற்கு 50 தையல்கள் வரை தைக்கலாம்.

அதன் பிறகு நம்பர் 1 என்ற மாடலும், 1854–ல் நம்பர் 2 என்ற மாடலும், 1856–ல் நம்பர் 3 என்ற மாடலும் முதல் மெஷினைப்போலவே சில மாறுதல்களுடன் வெளிவந்தன. முறையே 1859–ம் ஆண்டில் வெளிவந்த எ–என்ற மெஷின் பலவிதமான மாறுதல்களுடன் நிமிஷத்திற்கு 500 தையல்கள் வரை தைக்கக்கூடியதாக இருந்தது. இம்மெஷின் முதல்கொண்டு இரும்பு கால்களை உபயோகிக்கலாயினர். 1866–ம் ஆண்டில் உபயோகத்திற்கான பலவித மாறுதல்களை ஏற்படுத்தினர். அப்பொழுதுதான் ஒரு ஷர்ட்டுக்கு 20620 தையல்கள் வேண்டியிருக்கின்றது என கணக்கெடுத்தனர். 1880–ம் ஆண்டில் 'ஏட்ஜ்–ஸ்டிசிங்', 'டிரிமிங்–ஸ்டிசிங்' முதலிய வேலைகளுக்குத் தகுந்த மெஷினை வெளிப்படுத்தினர். இது நிமிஷத்திற்கு 1200 தையல்களை தைக்கக்கூடியதாக இருந்தது. 1890–91–ம் ஆண்டில் 31–கெ என்ற மாடல் வெளி வந்தது. அன்றுடன் மின்சார சக்தியால் ஓட்டக்கூடிய மெஷின்களும் வெளி வந்தது. 1896–ம் ஆண்டில் வெளிவந்த மெஷின் நிமிஷத்திற்கு 2000 தையல் தைக்கக்கூடியதாகவும், 1911–ம் ஆண்டில் வெளிவந்த மெஷின் நிமிஷத்திற்கு 3600–தையல்களை தைக்கக்கூடியதாகவும், 1951–ம் ஆண்டில் வெளி வந்த மெஷின் நிமிஷத்திற்கு 5000 தையல் தைக்கக்கூடிய அளவிற்கு புதிய மாறுதல்களுடன் தையற் பொறியின் சகாப்தம் முன்னேறியிருக்கிறது. கடந்தநூற்றாண்டுகளாகதையல்மெஷின் சுமார் 3000 விதமான மாறுதல்களுடன் வெளிவந்து விட்டன. 1923–ம் ஆண்டில் "பால்பேரிங்" ஸிஸ்டத்தை புகுத்தினர்கள். இந்தப் புது முறை மிகவும் விரும்பத்தக்கதாகவும் குறுகிய காலத்தில் வேலை முடிக்க பயன்படக்கூடியதாகவும் இருக்கிறது என்பதை நம்மால் சொல்லாமல் இருக்கமுடியாது. 1951–ம்ஆண்டில் சிங்கர் தையல்மெஷின் கம்பெனியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய காலத்தில் இன்னும் 1000 விதமான மாறுதல்களுடன் மெஷின்களை உலகத்திற்கு அளிப்போம் என்று கம்பெனியின் நிர்வாகஸ்தர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள். மேலும் தைமோனியர் உலகத்திற்கு அளித்த தையற் பொறியை பின்பற்றி ஜெர்மன் தேசத்தவர்கள் பப், போனக்ஸ் முதலிய மெஷின்களும், இந்தியாவில் உஷா, மல்லீக் போன்ற மெஷின்களும் இன்று உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

பல இன்னல்களுக்கு உள்ளாகி அதை பொருட்படுத்தாமல் தையற் பொறியை கண்டுபிடித்து உலகத்திற்கு தந்த தைமோனியருக்கு ஒவ்வொரு தொழிலாளிகளும் கடமைப்பட்டவர் ஆவார்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

யாதது ஆச்சரியமில்லை. என் சௌந்தரியத்தைப் பார்த்து மகிழ நீங்களில்லாத போது நான் யாருக்காகவேண்டி அழகு செய்துகொள்ளவேண்டும்' என்று கூறிய அவள் அவன் மார்பில் முகத்தை புதைத்து விம்மினள்.

'என் தகப்பனர் என்னை லக்ஷ்யப் பெண்ணுக வளர்த்தார். என்னை நல்ல ஸ்திதியில் வைக்க அவர் கடனளியானர். அவர் கடனை மீட்பதற்காக வேண்டி நான் ராவு பகல் உழைத்தேன். இப்பொழுது இந்த சொத்துக்களெல்லாம் நமக்குச் சொந்தமாகி விட்டன. இதை முன்னலேயே சொல்லி உங்களை ஏமாற்றத்துக்குள்ளாக்க எனக்கிஷ்டமில்லை. நீங்கள் படித்து முன்னேறவும், நான் தொழிலில் வெற்றி காணவும், நம்முடைய இன்ப வாழ்வு இடையூறுக இருக்குமென்று என் மனதைக் கல்லாக்கிக் கொண்டு அப்படி நடந்துவந்தேன். இப்பொழுது உங்களுடைய இந்தப் பிரிவின்மூலம்...

ராகவன் அவளுடைய வாயைப் பொத்தி இந்தப் பிரிவின்மூலம் உன்னைப் புரிந்து கொண்டேன் என்று அவளை அணைத்துக் கொண்டான்.

கலா மண்டபம்



பம்பாய்க் கடிதம்

★

பம்பாயில் அநேகமாக எல்லா நடிக நடிகைகளும் சொந்தமாகப் படங்களைத் தயாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். பட முதலாளிகளாக ஆகாத நடிக நடிகைகளை ஒரு கையிலுள்ள விரல்களுக்குள் இப்பொழுது எண்ணிவிடலாம்.

நடிக நடிகைகளுக்கு மற்ற பட முதலாளிகளிடம் சரியாக வேலை கிடைக்காமலிருப்பதால்தான், தங்களே புதுப் புது கம்பெனிகளை ஆரம்பித்து படங்களைத் தயாரிக்கிறார்கள். ஸ்ரீமதிகள் நர்கீஸ், மதுபாலா, சுரையா, காமினி கௌஷல், ஷியாமா, லீலா சிட்னிஸ், நிம்மி, ஸ்ரீமான்கள்ராஜ்கபூர், டிலீப் குமார், நாஸிர் கான், குமார், ஜெய்க்முக்தார், அசோக் குமார், இன்னும் அநேகர் சொந்தமாகப் படங்களைத் தயாரிக்க தங்கள் சொந்த கம்பெனிகளை வைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீமதி நர்கீஸும், அவருடைய தமையன்மார்களும் சேர்ந்து ஆரம்பித்த "நர்கீஸ் ஆர்ட் கன்ஸர்ன்" என்னும் கம்பெனி இப்பொழுது திவாலாகி விட்டது. தற்சமயம் அவர் ஸ்ரீ ராஜ் கபூருடன், ஆர். கே. ஸ்டுடியோவில் ஒரு கூட்டாளியாகவும், டைரக்டராகவும் இருக்கிறார்.

ஸ்ரீமதி மதுபாலா அவருடைய சொந்த கம்பெனியான டெல்லி தியேட்டரின் ஆதரவின் கீழ் அநேக மாதங்களுக்கு முன்னமேயே "செய்யாது" என்று ஒரு படத்தை தயாரிக்க ஆரம்பித்தார். அது இன்னும் முடியவில்லை.

ஸ்ரீமதி சுரையா, டைரக்டர் ஸ்ரீ சந்தோஷியுடன் கூட்டாளியாக "பாகல் கானு" வென்று ஒரு படத்தை தயாரித்து வருகிறார். ஸ்ரீமதி காமினி கௌஷல் தற்சமயம் அவருடைய கம்பெனி "கே ஆர்ட்ஸி"ன் ஆதரவில் "சாலீஸ் பாபா ஏக் சோர்" என்று ஒரு படத்தை தயாரித்து வருகிறார். இதை ஸ்ரீ சந்தோஷி டைரக்ட் செய்து வருகிறார். இதில் 40 சிறுவர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

ஸ்ரீமதி நிம்மியின் சொந்தப் படம் "டங்கா". இது முடியும் தறுவாயிலிருக்கிறது. ஸ்ரீமதி நிம்மி சமீபத்தில் "கஸ்தூரி" என்னும் படத்தின் ஷூட்டிங்கின்போது 15 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து படுகாயத்துக்குள்

ஜூபிலி பிக்சர்ஸ் 'டாக் பாபு'வில் நதீரா.

னாளுர் என்பது நேயர்களுக்கு தெரிந்ததே. அவர் இப்பொழுது சவுக்கியமாக இருக்கிறார். அவர் தற்சமயம் 'அமர்' 'உரன் கடோலா' 'கஸ்தூரி' என்ற படங்களில் நடித்து வருகிறார்.

ஸ்ரீமதி ஷியாமாவின் படம் "ராஜ் காட்" இப்படம் வெகுநாட்களாகவே முடியாமல் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீமதி லீலா சிட்னிஸ் தற்சமயம் "ஆஜ் கி பாத்" என்று ஒரு படத்தை டைரக்ட் செய்து வருகிறார். இதில் அவருடைய மகளே கதாநாயகளுக நடிக்கிறார்.

ஸ்ரீ ராஜ்கபூர் இப்பொழுது "ஸ்ரீ 420" என்று ஒரு படத்தை தயாரித்து வருகிறார். இதில் அவரும் ஸ்ரீமதி நர்கீஸும் நடிக்கிறார்கள். ஸ்ரீ டிலிப் குமாரின் "காலா ஆத்மி" இன்னும் ஆரம்பமாகவில்லை. ஸ்ரீ நாஸிர் கான் "மஹாரத்" என்று ஒரு படத்தை எடுத்து வருகிறார். அதில் அவரும் ஸ்ரீமதி நூதனும் நடிக்கிறார்கள்.

ஸ்ரீ அசோக் குமார் தற்சமயம் "சமாஜ்" என்று ஒரு படத்தை தயாரித்து வருகிறார். அவர் ஜூப்பிட்டர் ஸ்டூடியோவை குத்தகைக்கு எடுத்திருக்கிறார். இப்படத்தில் அவரும், ஸ்ரீமதி உஷாகிரணும் நடிக்கிறார்கள். இதை ஸ்ரீ வசந்து ஜோகிலேகர் டைரக்ட் செய்கிறார்.

—தி. மா. ராமச்சந்திரன்.

எலிஸபெத்ராணி விருந்தில் லலிதா பத்மினி நடனத்திற்கு ஏற்பாடு

பிரிட்டிஷ் ராணி எலிஸபெத் விஜயத்தை யொட்டி அமைக்கப்படும் கலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்ள சுமார் 20 தென்னிந்திய நடிக நடிகைகளை வரவழைக்க இந்திய ஹை கமிஷனர் ஸ்ரீ ஸி. ஸி. தேசாய் ஏற்பாடு செய்திருக்கிறார்.

பிரதமர் கொத்தலாவாலா ஏப்ரல் 11-ந்தேதி அளிக்கும் விருந்தில் லலிதா, பத்மினி, ராகினி நடனம் ஆட வருகின்றனர்.

புராதன வழக்கத்திற்கு புத்துயிர்

சிங்கள அரசர்கள் சிம்மாசனத்தில் அமரு முன் அவர்களை நடன மணிகள் வரவேற்றபடியே நடனமாடி அழைத்துச் செல்லும் புராதன வழக்கம் மீண்டும் கையாளப்பட விருக்கிறது. ராணி வரும்போது கண்டி நடன நிபுணர்கள் சுமார் 200 பேர் ராணியை வரவேற்றபடியே நடனமாடி அழைத்துச் செல்வர்.—நேபன்.

இந்திய நடனத்தில் பிரிட்டிஷ் யுவதி மோகம்

"லண்டனில் நான் சந்தித்த இந்திய ஸ்திரீகளில் அநேகம் பேர் "பால் ரூம்" நடனத்தில் கைதேர்ந்த நிபுணர்களாக இருக்கிறார்கள் என்று நிருபர் ஏஞ்ஜெலா வெர்னுன் எழுதுகிறார்."

ஆங்கில நடனங்களிலேயே சிரத்தையில்லாத பிரிட்டிஷ் யுவதி மொயரா வியாட் என்பவர் இந்திய நடனங்களை கற்பதில் அபாரமாக ஆவல் காட்டி வருகிறார்.

இவர் இந்தியாவுக்கு சென்றதேயில்லை. நான்கு வருஷங்களுக்கு முன்பு ஒருநாள் இவர் ஸ்ரீராம் கோபாலின் நடனத்தைக் காணச் சென்றிருந்தார். இவருக்கு அன்றே இந்திய நடனங்களை கற்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டுவிட்டது. அந்த ஸீஸன் முழுவதும் ஒருநாள் விடாமல் ராமகோபால் நடனங்களைப் பார்த்துவிட்டு தன் வீடு சென்று ஆடிப் பார்க்க ஆரம்பித்துவிட்டாராம்.

இந்திய நடனங்களில் உபயோகிக்கப்படும் உடைகள் ஆபரணங்கள் எல்லாவற்றையும் இவர் சேகரித்து வைத்துக்கொண்டிருக்கிறார்.

இவருக்கு நடனம் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை இல்லை. இவர் நர்ஸ் வேலை பார்த்து வருகிறார்.

இவர் நடனத்தைப் பார்த்த இரு இந்தியர்கள் நீங்கள் இந்தியாவின் எந்த பாகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டார்களாம். இவர் இந்திய ட்யூன்கள் உள்ள கிராம்போன் ரிக்கார்டுகளை வாங்கி சேகரித்து வருகிறார்.—நேபன்.

சினிமாப் படங்களில் உணர்ச்சி பொருந்திய நடிப்பு பூஜ்யம்

காதல் கட்டங்களில் அதிக மோகவெறி காணப்படுகிறதாம்.

பேசாத படங்கள் காலத்தில் உணர்ச்சியை கொட்டி நடித்து படம் பார்ப்பவர்களை உணர்ச்சி வசமாக்கிவிடும்படி செய்து வந்தோம். ஆனால் இன்று வெளியிடப்படும் படங்களில் உணர்ச்சி பொருந்திய நடிப்பு வெறும் பூஜ்யமாக இருக்கிறது என்று பழங்கால பிரபல நடிகர் ஸ்ரீ ரோமன்னவேரோ ஸ்ரீ நார்மன் மாரிஸ்ஸுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:—

அந்தக் காலத்து நடிப்பு 1954-ம் வருஷ நடிகர்களுக்கு ஒருநாளும் வராது. இப்போதுள்ள படங்களில் உண்மை மனித உணர்ச்சி பிரதிபலிக்கவில்லையே. காத்திரா உணர்ச்சிகளை கிளப்பி விடுவதாக இருக்கிறது. காதல் கட்டங்களில் அதிக மோக வெறியே காணப்படுகிறது. ஸ்திரீகளை அவர்கள் கையாள்வதே முரட்டுத்தனமாக இருக்கிறது."

"ரோமன்னவேரோ விவாகமே செய்து கொண்டதில்லை. விவாகத்தைக் கண்டால் எனக்கு மிகவும் பயம். விவாகம் செய்துகொண்டால்தானே விவாகரத்துக்கு இடம் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.



தியாகராஜ பாகவதர 'புது வாழ்வில்' பங்குபெற்றுள்ள குமாரி துளசி

ஹோலி பண்டிகை—பிரதம மந்திரியின் மாளிகையில் ஒரு காட்சி. பிரதம மந்திரியையும் பார்லிமெண்ட் மெம்பர்களையும் லேடி மவுண்ட்பேட்டனையும் படத்தில் காணலாம்



இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை பார்லிமெண்ட் தூதுகோஷ்டி

144244
சென்னை-600 008.
144244.

Regd. No. 2514

ஸ்ரீ K. S. ராமமூர்த்தி சர்மா
கணித்தது.

★

தனிப் பிரதி விலை அணு 4.
தபால் மூலமாக ... அணு 5.

மொத்த வியாபாரிகளுக்கு பஞ்சாங்க காபபகள் கீழ்க்கண்ட விற்பனை விகிதங்களில் சப்ளை செய்யப் படும். 100 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது அனுப்பும் ஆர்டர்களும் நூற்றுக்கணக்கில்தான் இருக்கவேண்டும்.

1954 மார்ச் மாதம் இரண்டாம் வாரத்தில் பிரதிகள் வெளிவரும்.

சப்ளை விகித விலை விவரம்:

100 காப்பிகளுக்கு	...	ரு. 24.
200 ,,	100-க்கு	ரு. 23.
300 ,,	,,	ரு. 22.
500 ,,	,,	ரு. 21.
1000 அல்லது மேற்பட்ட காப்பிகளுக்கு	,,	ரு. 20.

ஆர்டர்களை முன் பணத்துடன் சுதேசமித்திரன் ஏஜண்டுக்கோ அல்லது நேரில் ஆபீஸுக்கோ அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம். வி. பி. பி. கிடையாது.

Printed and Published by N. RAJAGOPALAN at the "Swadesamitran" Press, "Victory House" Mount Road, Madras, Editor: C. R. SRINIVASAN, B. A.